ரு கி. 167
கக - எ - 127 G.BA 320

அவர்கள் மூன்று பேர்கள்

பத்திமா

மறைந்த பரித்தியாக
காட்சிக்காரரின்
சீவியம்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. ... 57 ஆம் ஒழுங்கை
கொழும்பு

FATIMA-GIRI — PANDATERUPPU Ceylon.

இயாசிந்தா, பிரான்சீஸ், லூசியா

அவர்கள்

மூன்று சிறுவர்கள்

பத்திமாநகரத்தில்
தேவதாயார் அளித்த காட்சிகளின்

சுருக்கமான வரலாறுகள்.

அதி. வண. C. Barthas சுவாமியார் அவர்கள்
பிராஞ்சிய பாஷையில் எழுதிய நூலிலிருந்து

வண. சூ. ஆசீர்வாதம் O.M.I. சுவாமியார் அவர்களால்
தமிழில் இசைத்து எழுதப்பட்டது.

2980

அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.
1949.



DEDICATION

Dedicated in grateful memory

to the

SERVICE RENDERED

by

His Lordship The Rt. Rev. Dr. Guyomar,

Bishop of Jaffna

During the Twenty Five years of his Episcopate

1924 — 1949.

To help Fatima Giri at its start, the late Father Asirvatham, whose memory will ever remain dear to us, undertook at our request the translation of this book.

This Marian Year is privileged to see the first publication of it. May Our Lady appear in a special way through this book to her Tamil children too, during this year full of her blessings.

We are especially happy that this year is also another great year for us. In Jaffna and in the sanctuary of Our Lady of Madhu special services are held to thank God and the Blessed Virgin for the great blessings bestowed on us during the last twenty five years of our Bishop's Espiscopate. We, at Fatima Giri, owe much to His Lordship. Without Bishop Guyomar's approval and encouragement Fatima Giri would not have been what it is to-day. We will never forget what interest he has always shown in the growing of this humble sanctuary. Now too we receive from him the greatest encouragement for the publication of this book. Then it is to this

Kind Father,
In this Marian Year,
In this twenty fifth year of
HIS EPISCOPAL CONSECRATION,
as a token of GRATITUDE,
like a SPIRITUAL BOUQUET,
with a promise of doing our best in our lives
for the BLESSED VIRGIN
he has served so well as a Bishop,
that we offer this book.

And we ask God

to make this little book travel
to all the corners of this diocese of Jaffna,
of this Island of Ceylon,
of all the countries
where the Tamil language is spoken,
for the greatest spiritual happiness
of all our Tamil brethren.

H. G.
The Parish Priest.
Fatima Giri.

(111) .11. Philosophy & Religion
Avarkal moonru Siruvarkal (

பத்திமாகிரி வேலையின் ஆரம்பத்திலே அதற்கு மிக உதவியாயிருந்தவரும் என்றும் எங்கள் ஞாபகத்தைவிட்டு அகலாதவருமான காலஞ்சென்ற வண. ஆசீர்வாதம் சுவாமி அவர்கள், எமது வேண்டுகோளுக்கிணங்கி "அவர்கள் மூன்று சிறுவர்கள்" என்ற இச்சிறு புத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து உதவினர்.

அமலோற்பவநாயகி பரித்தியாகிகள் சபைக் குருக்களின் யூபிலி வருடத்தில் இப்புத்தகம் பிரசுரிக்கப்பட்டமையானது, இதன்மட்டில் அவர்களுக்குள்ள விசேஷ உரிமையைக் குறித்துக்காட்டுகிறதெனலாம. இப்புத்தக வாயிலாக, அமலோற்பவநாயகி தமது பூரண ஆசீர்வாதங்களைத் தமிழ்மக்கள்மேல் பொழிந்தருளுவாவாக.

நாம் ஆனந்தங்கொள்வதற்கு மற்றுமோர் காரணமுண்டு. யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய வந். J. A. கியோமார் ஆண்டவர் அவர்கள் மேற்றிராணித்துவ அபிஷேகம் பெற்ற வெண்பொன் யூபிலி வருடமும் இதுவன்றோ? கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக அவரது அரும்பணி ஆர்வத்துடன் நடந்ததன்றோ. இக்காலங்களில் தேவதாய் அவர்மேல் சொரிந்த ஆசீர்வாதங்களுக்காகச் சர்வேசுரனுக்கு நன்றிசெலுத்துமுகமாகவே, யாழ்ப்பாணத்திலும் மருதமடுவிலும் கொண்டாட்டங்கள் நிகழ்ந்தேறின.

பத்திமாகிரி, வந். J. A. கியோமார் ஆண்டவர் அவர்கட்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது. அவருடைய உற்சாகமான தூண்டுதலும், அங்கீகாரமும் இல்லாவிடின் பத்திமா இன்றைய நிலையில் இராது. எளிமையான இந்த ஆலயம் வளர்ச்சி அடைவதற்கு எப்பொழுதும் அவர் காட்டிவந்துள்ள கரிசனையை நாம் ஒருபோதும் மறக்கமுடியாது. இந்நூற் பதிப்புக்கும் அவர் மகத்தான ஊக்கங் காட்டியுள்ளார். ஆகையால் இச்சிறுநூல் அவருக்கே உரியதாகுக.

அன்பான பிதாவே!
அமலோற்பவ மரியநாயகி பரித்தியாகிகள் சபையின்
யூபிலி வருடத்தினதும்,
தங்கள் மேற்றிராணித்துவ ஊழியத்தின்
இருபத்தைந்தாம் ஆண்டின் ஞாபகமாகவும்,

எங்கள் நன்றியின் அடையாளமாகவும்
ஓர் ஞானப் பூச்செண்டுபோல,

திவ்விய கன்னிகைக்கு நாங்கள் வாக்குக்கொடுத்தபடியே
உண்மையானஊழியஞ் செய்வோம்என்ற வாக்குறுதியுடன்
இப்புத்தகத்தைத் தங்களுக்கு அர்ப்பணம் செய்கிறோம்.

அமலனருளை வேண்டுகிறோம்

இப்புத்தகமானது யாழ்ப்பாண் மேற்றிராசனத்திலும்
லங்காவின் சகல மூலை முடுக்குகளிலும்
தமிழ்ப்பாஷை பேசப்படும் நாடுகள் எங்கணும் பரந்து
தமிழ்ச் சகோதரர்களின் ஆன்மவளர்ச்சிக்கு
உதவவேண்டுமென்று தேவாதி தேவனைப்
பணிந்து நிற்கிறோம்.

....

....

FOREWORD

At last we offer to the Tamil public the translation of the interesting book on Fatima written in French by canon Barthas : **"There were three little children."** It is due to the pen of the regretted Father Asirvatham who put his heart into the work just as he did for everything that concerned the Blessed Virgin. The story described in these pages is the story of 3 little shepherds who were favoured with apparitions of the Blessed Virgin who made use of them to publish a message to the world; it is also an account of the reactions in the souls of these children to the wonderful events that had come into their lives.

Our Lady of Fatima, like Our Lady of Lourdes, is known all over the world to-day but her message under the name of Our Lady of the Rosary, appealing to the world for prayer and penance is not yet sufficiently realized. In reading the book, the circumstances in which the message is proclaimed appear to us in their special significance, the atmosphere which surrounds the events of Fatima helps us to understand fully the meaning of the apparitions, we feel that we know something more about the dealings of the Blessed Virgin with the world, and our devotion to the Mother of God grows more intense as a result.

The three little shepherds offer us, but especially to children, splendid lessons in the virtues, how we should recite the Rosary and pray for the conversion of sinners, how we should practise penance and do sacrifices, how we should obey God's Will in everything. What a mine of fine illustrations for teachers to be used in their teaching! What an impressive reading for adults and grown ups, what an interesting book for parents!

We hope to see it in every Catholic household where Our Lady of Fatima is held in honour and we pray that many blessings may follow in its circulation.

✠ **J. A. Guyomar O. M. I.**
Bishop of Jaffna.

முன்னுரை

கனன் பாத்தாஸ் (Canon Barthas) என்பவரால் பிரான்சிய பாஷையில், பத்திமாவைப்பற்றி எழுதப்பட்ட கவர்ச்சிக்குரிய புத்தகத்தைத் தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்த்துத் தருகிறோம். இதன் நாமம் **"அவர்கள் மூன்று சிறுவர்கள்."** எம்மை விட்டுப்பிரிந்த வண. ஆசீர்வாதம் சுவாமி அவர்கள் தேவதாயின் மகிமையைப் பரப்பக்கூடிய சகல காரியங்களிலும் ஊக்கமுடையவராய் இருந்தது போலவே இவ்விஷயத்திலும் மிகக் கரிசனைகொண்டு இதை மொழிபெயர்த்துத் தரலாயினர். உலகத்துக்கு ஒரு சம்பவத்தைப் பிரசித்தம் பண்ணும்படியாகத் திவ்விய கன்னிகையால் தரிசனங்கள் அளிக்கப்பட்ட மூன்று சிறு இடைப்பிள்ளைகளின் சரிதையையே இப்புத்தகம் அடக்கியுள்ளது. இச்சிறுவர்களுடைய சீவியத்தில் அவர்களின் ஆத்துமங்களில் நிகழ்ந்த அதிசயிக்கத்தக்க மாறுதல்களையும் இது தன்னுட் கொண்டுள்ளது.

லூர்துபதியிற் போலவே பத்திமா பதியிலும் தேவதாய் செபமாலைநாயகி எனும் நாமத்துடன் உலகம் முழுவதும் அறியப்பட்டாலும், செபம், தபம் எனுமிரண்டும் போதியளவாக அனுஷ்டிக்கப்படவில்லை. இப்புத்தகத்தை வாசிப்பதினால் இதிலடங்கியுள்ள சம்பவங்கள் எங்களுக்குத் தெள்ளிதிற் புலனாகும். பத்திமா சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட விஷயங்களையும், காட்சிகளின் முழு அர்த்தங்களையும் விளங்கிக்கொள்ள இது நமக்கு உதவி செய்யும். உலகத்துடன் திவ்விய கன்னிகைக்குள்ள தொடர்பைப் பற்றிச் சற்றே அதிகம் எங்களுக்குத் தெரியுமென்று நாம் உணருவது மாத்திரமல்ல. அதன் பயனாகத் திவ்விய கன்னிகையின் பத்தியானது அதிகமதிகமாக வளர்ந்தும் வருகிறது என்பதில் ஐயமில்லை.

இந்தமூன்று இடையர்கள் எங்கள்சகலருக்கும் விசேஷமாகச் சிறுவர்களுக்கும் முன்மாதிரிகைக்காரராய் இருக்கிறார்கள். எவ்வாறெனில் செபமாலையைச் செபித்துப் பாவிகள் மனந்திரும்ப மன்றாடல், தபமும் பரித்தியாகக் கிரிகைகளும் புரிவதிற் பயிற்சி பெறல், தேவசித்தத்திற்கு அமைதல் ஆகிய புண்ணியங்களில் விசேஷ முன்மாதிரிகைகளாய் இருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு வேண்டிய உதாரணங்களோ, வாலிபர்களுக்கும் வளர்ந்தவர்களுக்கும் ஏற்ற வாசகங்களோ, பெற்றோருக்கு அவசியமான சிறந்த நற்புத்திமதிகளோ, அவரவர் அந்தஸ்திற்கு ஏற்றதான படிப்பினைகள் யாவும் இதில் அடங்கியுள்ளன.

ஒவ்வொரு கத்தோலிக்க இல்லங்களிலும் பத்திமா நாயகிக்கு வணக்கம் நடக்குமென நாம் நம்புவதுடன் இப்பத்திமா பரம்புவதினால் அதிக ஆசீர்வாதங்களும் கிடைக்கும்படி நாம் மன்றாடுகிறோம்.

✠ J. A. Guyomar, O. M. I.
மேற்றிராணியார்
யாழ்ப்பாணம்.

பொருளடக்கம்

1-ம் அதிகாரம்

மூன்று சின்னச் சிநேகிதர்கள்

	பக்கம்
ஆரம்ப குறிப்புகள்	1
பிரயாசையுடன் வேலைசெய்யும் இரண்டு கிறீஸ்தவ குடும்பங்கள்	2
வீட்டுக் கல்விப் பயிற்சி ...	5
யேசுவின் சின்னச் சிநேகிதர்கள் ...	10
மந்தை மேய்ப்போர்	17
மூன்று வெவ்வேறு முகம், அவ்வாறே மூன்று வெவ்வேறு குணம்	22
லூசியா	23
பிரான்சீஸ்	25
இயாசிந்தா	28
குறுணித் தூசிபடிந்த லீலிமலர் ...	31

2-ம் அதிகாரம்

அலங்காரமான அதிசயம்

அழகிய ஆரம்பம்	37
பசுமையான "ஷேன்" மர நிழலில் சம்பவித்தவை	44
அதி அலங்கார நாயகி	47
விநோதமான சல்லாபம் ...	50
பரவசத்தின் பின்பு நிகழ்ந்தவை ...	55
ஆழ்ந்த மௌனம்	58
எப்படியோ காரியம் வெளியாகித்தான்விட்டது	59
கிராமத்தின் மகா சம்பவம் ...	63
முரட்டுத்தனமாய்ச் சருவுதல் ...	68
காட்சிநாயகி மீண்டும் வருகிறார். இரகசியம் ஒன்றைப் பிள்ளைகளுக்கு ஒப்புவிக்கிறார் ...	72

3-ம் அதிகாரம்

உபத்திரவங்களும் சந்தோஷங்களும்

குருவானவரின் தத்தளிப்பு ... 78
கொடிய சந்தேகம் 83
முற்றும் அவதைரியத்துக் குள்ளாக்குதல் ... 86
உலக யுத்தம் முடியும்படி மன்ருடுங்கள் ... 87
மகா இரகசியத்தின் ஒரு பகுதி வெளியாகின்றது 90
"தகர வேலைக்காரன்" களரியில் தோற்றுகின்ருன் 96
ஆவணி மாசம் 13-ந் திகதி நிகழ்ந்த படுபயங்கரங்கள் 102
கோவாடி இறியாவில் கூடின சனக்கும்பல் ... 106
சிறைவாசம் 107
கொதிக்கிற எண்ணெய்க் கிடாரம் ... 113
எப்படியோ காட்சிநாயகி பிள்ளைகளுக்குக் காட்சி அளிக்கவே அளித்தார் ... 117
புரட்டாசி மாசத்துக் காட்சி ... 121
கோவாடி இறியாவில் வந்துகூடிய சனத்திரள் 126
காட்சிநாயகியின் பெயரும் அவர் பரலோகத்திலிருந்து கொண்டுவந்த செய்தியும் ... 130
தேவன் வானத்திற் காண்பித்த அற்புத அடையாளம் 132
பன்மடிக் காட்சிகள் 137
கண்ணைப்பறிக்கும் காட்சிகளின்பின் நடந்தவைகள் 138

4-ம் அதிகாரம்

பாடுபடுவதொன்றுமே எஞ்சியிருப்பது

அன்புமிக்க வழிகாட்டிகள் ... 142
விசாரணையோடு கூடிய வேதனைகள் ... 149
மனச்சாட்சியைப் பாதித்த சந்தேகம் ... 156
கட்டளைச்சுவாமியாரின் அன்பில்லாப் போக்கு 160
குடும்பத்தின் நயசுகங்கள் ... 165
வேத விரோதிகளின் வலோற்காரங்கள் ... 170
பச்சைக் காய்ப் போசனம் ... 174
எப்பொழுதும் புதிய பரித்தியாக முயற்சிகள் 178

நீ வாசிக்கப் படிக்கவேண்டும் ... 181
காட்சி நடந்த ஒரு வருஷத்துள் நிகழ்ந்தவை 184

5-ம் அதிகாரம்

பூலோக சம்மனசுகள் இருவர் பரலோகம் செல்லுகிருர்கள்

எப்போதும் ஆயத்தம் 190
உபத்திரவங்களாகிய உலையிற் புடமிடப்படல் 199
நித்திய மோட்சத்துக்கு நியமனம் செய்யப்பட்டவனின் பாக்கியமான மரணம் ... 201
ஞானச்சீவியத்தில் ஒரு ஆத்துமம் உயர்ச்சி அடைவது எப்படி ? 207
அபூர்வமான வரப்பிரசாதங்கள் ... 210
பாடுபடுதலும் பற்றுவைத்தலும் ... 215
அவர்கள் விரும்பிய பாடுகள் எல்லாம் அனுபவிப்பேன் 221
மறைந்த யேசுவுடன் ஐக்கியமான பலி ... 224
வில்லா நோவாடி ஊறெம் நகரின் வைத்தியசாலை 228
தன்னந்தனியச் சாவை எதிர்நோக்கல் ... 232
கடைசி நாட்கள் 236
பிரேத சேமச் சின்ன நிலவறை ... 243

6-ம் அதிகாரம்

தேவனுக்கே சொந்தம்

கடைசியாய்ப் புதிய மேற்றிராணியாரும் நியமிக்கப் பட்டார் 248
முற்றும் தனிமையாகச் சீவித்தல் ... 254
தகனப்பலி 259
வியாகுலமேரி 267
இருமடியான திரைமறைவு ... 273
உள்ளரங்க சீவியம் 279
தேவனுக்குத் தன்னைத் தானம் செய்ய ஆரம்பம் 287
திரை திறபடுகின்றது 290
சகலமும் சர்வேசுரனுக்கே ... 296

என்றென்றைக்கும் 301
கோவிலும் சன்னியாசக் குச்சறையும் ... 307

சரித்திரபாகம் முற்றிற்று.

அனுபந்தம் I. பத்திமாவின் காட்சி பெற்றவர்கள் சொல்லிவந்த செபங்கள் ... 318
அனுபந்தம் II. இயாசிந்தா மரிக்கச் சிலநாட்களின் முன் கூறியவைகள் ... 319

பத்திமாமாதாவின் கீர்த்தனம்

பத்திமாமாதா கீர்த்தனை ... 323
Salve Regina (கிருபைதயாப மந்திரம்) ... 324
பத்திமாமாதா பேரில் 327
அர்ச். சூசையப்பர் வாழ்த்து ... 328
மரியாயின் மாசற்ற இருதயத்தின் பேரில் ... 328
பத்திமாநாயகி அடைக்கலம் ... 329
தந்தோம் தாயே 329
பத்திமாநாயகி கிருபை இரத்தல் ... 330
பத்திமாகிரி வாழ்த்து 330
பத்திமாமாதா அருள் வேண்டல் ... 331
பத்திமாநாயகியின் பேரில் வேண்டுதல்கள் ... 332

1-ம் அதிகாரம்

மூன்று சின்னச் சிநேகிதர்கள் பத்திமாபதியில் காட்சி அளிக்கப்பெற்றவர்களின் அந்தரங்கமான தவச்சீவியம்

ஆரம்ப குறிப்புகள்

பத்திமா நகரம் போர்த்துக்கால் தேசத்தில் உள்ளது. இந்த நகருக்கு வெகு சமீபத்தில் ஒரு சிறு கிராமம் உண்டு. அக்கிராமத்தில் சிறுசிறு குடிசைகளின் கூட்டங்காணப்படும். அக்குடிசைகள் சற்றுவது எடுபாடில்லாதவை. அக்குடிசைகளை, ஒடுக்கமான பாதைகளும், சிறு தோட்டங்களும், ஒன்றில் இருந்து ஒன்றைப்பிரிக்கும். அந்தக் கிராமத்தை "அல்யுஸ்திறெஸ்" என அழைப்பர்.

அக்கிராமத்தார் எல்லாரும் மலைநாட்டுவாசிகள். வேலை செய்வதில் மகா பிரயாசை உள்ளவர்கள். வேத அநுசாரத்தில் அதிலும் கூடுதலான பிரமாணிக்கம் உள்ளவர்கள். கிராமத்தில் உள்ள வீடுகள் ஒன்றுவது பல அடுக்குகள் உள்ளவைகளல்ல. குடிசைகள் எல்லாம் பதிவானவைகள். வீட்டுக்கூரை ஓட்டினால் வேயப்பட்டிருக்கும். சுவர்கள் வெள்ளை அடிக்கப்பட்டிருக்கும். வீட்டுயன்னல்கள் ஒடுக்கமும் பதிவுமானவைகள். ஆனால் அவைகள் மலைமீது கட்டப்பட்டிருப்பதால் சூரிய வெளிச்சம் உட்செல்லவும் நல்ல காற்றோட்டத்தைத் தாராளமாய்ப் பெற்றுக்கொள்ளவுந் தக்கவை. அந்தக் குடிசைகளுக்குள் போய்ப்பார்த்தால் அங்கு ஓரளவில் கரடுமுரடான எடுபாடில்லாத தட்டுமுட்டுகள் தளபாடங்களைக் காண்போம். போர்த்துக்கால்தேசத்து மலைநாட்டுக்குடிசைகளில் இவைபோன்ற தளபாடங்களே பொதுவில் காணப்படும்.

வீட்டின் வாயிற்பக்கமாக ஒரு தலைவாசற்சாலையும், அதிக சாதாரணமான ஒரு மேசையும் சுவரில் ஒரு பாடுபட்ட சுரூபமும் பெருந்தொகையான திருப்படங்களும் தொங்க

விடப்பட்டிருக்கும். இவைகளைவிட சப்பின் பலகைகளால் செய்யப்பட்டு மேற்றளம் வளைவுள்ள இரண்டு பெரும் பெட்டிகளும் இரண்டு மூன்று நாற்காலிகளும் காணப்படும். இன்னும் பல அடுக்குள்ள பறண்க்கள் அல்லது தவிசுகளும் மட்பாத்திரங்கள் பானைகள் குடங்கள் சட்டிகளும் அசனவேளையில் மடியில் விரிக்கும் துப்பட்டிகள் சிலவும் அடுக்களையில் காணப்படும். திருநாட் பெருநாட்களில் மாத்திரம் இக்கிராமவாசிகள் அசனத்துக்கு மேசைகள் உபயோகிப்பர். ஆதலால் குறித்த துப்பட்டிகள் சாதாரணநாட்களில் உபயோகிக்கப்படுவதில்லை. குடிசையோடு இணைக்கப்பட்டதாய்ச் சற்றுத்தூரத்தில் மலகூடங்கள் முதலியன உண்டு. வீட்டுக்கு ஒரு புறத்தில் கனிவிருட்சங்கள் உள்ள சிறு தோட்டமிருக்கும். அவ்விருட்சங்களுள் அத்திமரங்களே மிகவும் பிரதானமானவை.

குடிசையிருக்கும் அடைப்புக்குள்ளேதான் கிணறு ஒன்றிருக்கும். இது ஊற்றுக்கிணறு அல்ல. மலையில் தோண்டப்பட்ட ஆழமான குழி. மழைத்தண்ணீர்தான் இக்கிணறுகளை அடிக்கடி நன்னீரால் நிரம்பும். இந்நீர் பருகுவதற்கு மிகவும் திறமானதும் சுகத்துக்கு ஏற்றதுமாம்.

பிரயாசையுடன் வேலைசெய்யும் இரண்டு கிறீஸ்த குடும்பங்கள்

முற்குறித்த கிராமத்திலே சகலத்திலும் ஒன்றுக்கொன்று இணையான இரண்டு சிற்றில்லங்கள் இருந்தன. இவைகள் இரண்டு சகலன்மாருக்குச் சேர்ந்தவை. ஒருவர் அந்தோனிசாந்துஸ். இவர் மரியறோஸ்பறுணாந்துவின் கணவன். மற்றவர் மனுவேல் பேதுருமார்த்து இவர் யோசைபறுணாந்துகுரூஸ் என்பவரின் விதவையான ஒலிம்பியா என்பவளின் இரண்டாம் தாரத்துக் கணவன். இந்த இரண்டு வீடுகளும் வழியோரத்தில் இருந்தன. வீடுகளின் இருபக்கத்திலும் இரண்டு சின்ன யன்னல்கள் உண்டு. வீட்டிற்குள் புகுவதற்குரிய வாசல் மிகவும் ஒடுக்கமானது. இரண்டு மூன்று படிகளால் ஏறித்தான் வாசலை அடையலாம். அந்தோனி

சாந்துஸ் என்பவனுக்கு வயது ஐம்பதுவரையில் இருக்கும். இவருடன் இவர் மனைவியும் ஐந்துபிள்ளைகளும் சீவித்துவந்தார்கள். இப்பிள்ளைகளில் ஒருவர் ஆண்பிள்ளை. மற்ற நால்வரும் பெண்பிள்ளைகள்.

இந்த நாலு பெண்பிள்ளைகளில் ஆக இளையபிள்ளை 1907-ம் வருடம் பங்குனி மாசம் 22-ந் தேதி பிறந்தா. இப்பிள்ளைக்கு யேசுவின் லூசியா (பிரகாசி அம்மா) என்ற அலங்காரமானபெயர் ஞானஸ்நானத்தில் கொடுக்கப்பட்டது. மனுவேல் பேதுருவின்வீடு ஏறக்குறைய ஒரு புதிய வீடு. அது ஒலிம்பியா முதல்தாரமாக விவாகம் செய்தபொழுது கட்டப்பட்டது. அவ்வீட்டில் ஒலிம்பியாவின் முதற்தாரத்துப் பிள்ளைகளாகிய அப்பிள்ளைகள் இருவரும், இரண்டாந் தாரத்துப்பிள்ளைகள் ஐவரும் இருந்தார்கள். இவர்களில் ஒரு பிள்ளை பிரான்சீஸ. இவன் 1908-ம் வருடம் ஆனி மாசம் 11-ந் தேதி பிறந்தான். மற்றது இயாசிந்தா. இவள் 1910-ம் வருடம் பங்குனிமாசம் 10-ந் தேதி பிறந்தா. இவர்கள் இருவரும் கடைக்குட்டிகள். மனவஞ்சகமில்லாதவர்களும் மகா உதாரகுணமுள்ளவர்களுமான இந்த நாட்டுப்புறத்துக் கிறீஸ்தவர்கள்குடும்பங்களிற் சந்தானம் பெருகுவதைப் பற்றி அச்சம்கொள்ளும் போக்குச் சிறிதாவது இல்லாதவர்கள். பிள்ளைப்பாக்கியம் தேவன் அளிக்கும் மகா ஆசீர்வாதம் என்பதை இவர்கள் நன்றாக உணர்ந்திருந்தார்கள். பேதுரு மார்த்துவின் குடும்பத்தில் பத்தாம் பதினோராம் பிள்ளைகளாகப் பிறந்தவர்கள் இவ்வுலக இன்பங்களை நெடு



மனுவேல் பேதுருவின் வீடு ஏறக்குறையப் புதியது.

நாளாக அனுபவிக்கவில்லை. உள்ளபடி அவர்கள் உலகத்தில் நடமாடவில்லையெனலாம்.

ஆனால் இவர்கள் இப்போது போர்த்துக்கால் தேசத்துக்கும் திருச்சபை முழுவதுக்கும் மகிமைப்பிரதாபம் உண்டு பண்ணுகிறவர்களாக விளங்குகிறார்கள். போர்த்துக்காலும் திருச்சபையும் இப்பிள்ளைகளைப்பற்றி நியாயமான பெருமை கொள்வதற்கு இடமுண்டு. இப்பிள்ளைகளின் பெற்றார் இன்னும் சீவித்துவருகிறார்கள். ஒருநாள் அவர்களைப் பரலோகத்தில்காணும் நிச்சயத்துடன் இருக்கிறார்கள். அவர்களை பரலோகத்துக்கு அழைத்துக்கொண்டு போகவந்த தேவ தாயார் அருகே, எமது இரட்சகர் திருச்சமுகத்திலே அப் பிள்ளைகள் அளவுபிரமாணம் அற்ற பேரின்பத்தை அனுபவித்துக்கொண்டிருப்பதை தாங்கள் ஒரு நாளைக்குக் கண்டுகளி கூரும் நிச்சயத்துடன் அப்பெற்றார் ஆறுதலான சீவியம் நடத்திவருகிறார்கள்.

இந்த இரண்டு குடும்பங்களிலும் எல்லாப்பிள்ளைகளும் கல்விகற்கப் பள்ளிக்கூடத்துக்குப்போகவில்லை. போர்த்துக்கால் தேசத்தின் மலைநாடுகளில் இது ஒரு வழக்கம் எல்லாப்பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பார்கள். சிலரை மாத்திரம் அனுப்புவார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் வாசிக்கவும் கடிதப்போக்குவரவு செய்யவும் இரண்டொரு பிள்ளைகள் போதியகல்வி கற்றுவிட்டால் பெற்றார் அத்துடன் திருப்திப்பட்டுவிடுவார்கள். சிறுவயதுதொடக்கம் அவர்கள் தங்கள் ஒசீவனம்தேடப் பயிற்றப்படுவார்கள். பதின்மூன்று பதினாறு வயதுப்பிள்ளைகள் எல்லாரும் பராயப்பட்டவர்களுடன் கமத்தில் வேலைசெய்வார்கள். அவர்களுக்கு இளையவர்கள் மந்தைகளைமேய்த்து அவைகளைப் பாதுகாத்துப் பராமரித்துவருவார்கள். இதுபற்றித்தான் லூசியாவும் அவளுடைய மைத்துனராகிய பிரான்சீசும் இயாசிந்தாவும் ஏழு, எட்டு வயதில் ஆடு, மாடு மேய்க்கும் தொழில் செய்துவந்தார்கள்.

இவர்கள் இப்படி வேலை செய்துவந்தாலும், இவர்களுடைய வேதகல்விப்பயிற்சி அலட்சியம் செய்யப்பட்டதென

எண்ணப்படாது. அவர்களுடைய குடும்பமே அவர்களின் பாடசாலை ஆயிற்று. விசேஷமாக மரியதேரேசாவைப்போலும்; ஒலிம்பியாவைப்போலும் பயபக்தியுள்ள தாய்மார் இக்கடமை புரிவதில் எப்போதும் வெகு சாக்கிரதையாக இருந்தார்கள்.

வீட்டுக்கல்விப்பயிற்சி

மரியைதேரேசை, ஒலிம்பியா எனும் இரண்டுபேரும் வழக்கமாகக் கமத்துக்கு வேலைசெய்யப் போவதில்லை. அவர்கள் வீட்டில் இருந்து சமையல் அலுவலில் வேலைபார்த்து வருவார்கள். தருணங்கிடைக்கும்போது நூல்நூற்பதிலும் நெசவுசெய்வதிலும் அலுவலாயிருப்பார்கள். விசேஷமாய்த் தங்கள் பிள்ளைகளைக் கவனித்துப் பராமரித்துவருவார்கள்.

பல பிள்ளைகள் இருக்கும் குடும்பங்களில் அன்பு ஒரு வகையில் பெருக்கெடுக்கின்றது என்று சொல்லலாம். பெருந்தொகையானவர்கள்மட்டில் அன்பு செலுத்தவேண்டுமாயின் அப்படித்தானே சம்பவிக்கும். மார்த்து என்பவர் குடும்பத்தில் கடைக்குட்டியாயிருந்த இயாசிந்தாவில் எல்லாரும் விசேஷ அன்பு செலுத்திவந்தார்கள். பின்னேரத்தில் பொழுதுபட்டபிற்பாடு அல்லது ஞாயிற்றுக்கிழமை பின்னேரங்களில் இயாசிந்தாவைத்தான் எல்லாரும் கட்டி அரவணைத்து முத்தமிட்டு அவளை விளையாடப்பண்ணி அவளுடைய முகத்தில் மகா சந்தோஷத்துக்குரிய புன்னகை ததும்பும்படி செய்யப் பிரயாசப்படுவார்கள். சிலதருணங்களில் ஒலிம்பியா தனது வளர்ந்தபிள்ளைகள் இயாசிந்தாவுக்கு அளவுக்குமிஞ்சிய செல்லங்காட்டினால் அவளைப் பழுதாக்கிப்போடுவார்கள் என்று அஞ்சி அவர்களைக் கடிந்துகொள்ளவும் வேண்டி இருந்தது.

ஆனால் ஒலிம்பியா இப்படிக் கடிந்துகொண்டது ஒரு வகையில் பாசாங்கான கண்டனை என்று சொல்லலாம். ஏனெனில் தனது கடைக்குட்டிக்கு இவ்வளவு அன்புகாட்டிவருவதையிட்டு அவள் தனது தாய்க்குரிய அன்பின் நிமித்தம், அந்தரங்கத்தில் மிகவும் ஆனந்தங்கொண்டாள். மிகவும் ஆழ்ந்த பயபத்தியுள்ள கிறீஸ்தவளாகிய ஒலிம்பியா தனது

பிள்ளைகள் செபங்களையும் ஞானோபதேசத்தின் ஆரம்ப அறிவுகளையும் கற்றுக்கொள்வதற்குச் சீக்கிரம் வளருகிறார்களில்லையே என்று ஒருவகையில் கஸ்திப்பட்டுக்கொண்டேயிருந்தாள். தனது பிள்ளைகளுக்கு வேத அறிவை ஊட்டும் கடமையை இந்த நல்லதாய் வேறு எவர் வசத்திலும் விடவில்லை. பிரான்சீசும், இயாசிந்தாவும் தங்கள் தாயின் வாயிலிருந்துதானே எங்கள் ஆண்டவரையும், அவர் திருத்தாயாரையும் அறியவும், நேசிக்கவும் படித்துக்கொண்டார்கள்.

சிலசமயங்களில் ஒலிம்பியா தனது பிள்ளைகள் எல்லாரையும் சூழவர இருத்திக்கொண்டு அவர்களுக்கு ஒருவகையில் ஞானோபதேசம் படிப்பிப்பாள். இது உள்ளபடி ஒரு பாடம் படிப்பிக்கும் வகுப்பல்ல. ஆனால் எல்லாரும் கூடியிருந்து நடத்தும் ஒரு சம்பாஷணையாகும். அவ்வேளைகளில் வயதில் மூத்தவர்கள் தங்கள் இளைய சகோதரர், சகோதரிகளுக்கு வேத போதகங்களைச் சொல்லிக்கொடுப்பார்கள். ஆனால் இந்தச் சிறுவர்கள் வீட்டிலிருந்துவந்தபடியினால் தாயிடமிருந்து தங்கள் வயதுக்கும் அறிவுக்கும் ஏற்றபடி ஞானோபதேசத்தைப்பற்றி மேலதிகமான விளக்கங்களைப் பெற்றுக்கொள்வார்கள். காரியம் இவ்வாறாக இருந்தபடியால் பிரான்சீசும், இயாசிந்தாவும் தங்கள் கட்டளைச் சுவாமியாரிடம்போய் முதல்நன்மை பெறுவதற்கு ஆயத்தமாய் ஞானோபதேசம்படிக்கும் நாள் எப்போது வருமோ என்று ஆவலுடன் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருப்பார்கள்.

இவர்களுடைய மைத்துனி லூசியாவின் கல்விப்பயிற்சி அவ்வளவு உருசிகரமானதன்மையாக நடைபெறவில்லை. ஆனால் அவளும் உள்ளபடி ஒரு உத்தம கிறீஸ்தவபிள்ளையாக இருக்கும்படி பயிற்றப்பட்டு வந்தாள். மரியரோசா தனது சகலியைப்போல அவ்வளவு பதமையான குணமுள்ளவளல்ல. அவளுடைய போக்கும் அவ்வளவு புனிதமானதல்ல. ஆனால் அவள் உண்மையான விசுவாச சிந்தையுள்ளவள். ஞானஸ்நானத்தின் மூலமாகத் தனது குழந்தைகளின் ஆன்மாவில் புதைக்கப்பட்ட விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் ஆகிய

புண்ணியவிதைகள் முளைகொண்டு செழிப்பாய் வளரச்செய்வது தனது மகா முக்கியமான கடமை என்பதை உணர்ந்து தனது பிள்ளைகள் மகா நுணுக்கமான நேர்மையுள்ளவர்களாக இருக்கும்படி அவர்களைப்பயிற்றிவந்தாள். அந்த நேர்மைக்குத் தான்தானே உத்தமமாதிரிகையாகவும் இருந்தாள். சகலத்திலும் பிரமாணிக்கமாயிருக்கும் புண்ணியத்தை மரியரோசா முதன்மையான ஒரு புண்ணியமாக மதித்துவந்தாள். அந்தப்புண்ணியத்தில் தனது பிள்ளைகளையும் கரிசனையுடன் பயிற்றிவந்தாள். தனது பிள்ளைகளுக்கு ஞானோபதேசமும் படிப்பித்துவருவாள். ஆனால் தபசுகாலத்தில் மற்றக்காலங்களிலும்பார்க்க அதிககவனத்துடன் படிப்பித்துவருவாள். பாஸ்குக் கடமைக்காகத் தனது பிள்ளைகள் பாவசங்கீர்த்தனத்துக்குப் போகும்போது அவர்களைக் குருவானவர் ஞானோபதேசங் கேட்குமிடத்து அவர்கள் மறுமொழி சொல்லத் தெரியாதிருந்தால் அது தனது குடும்பத்துக்குப் பெரும் அவமானம் என்று எண்ணினாள். பிற்பட்டகாலங்களில், புத்தியற்றவளெனச்சிலர் லூசியாவைப்பற்றி எண்ணிக்கொண்டாலும் அவள் உள்ளபடி புத்தியோசனையில் குறைந்தவளல்ல. தனக்குப் படிப்பிக்கப்பட்ட ஞானோபதேசங்களை அவள் நன்குகற்று ஏழு வயதுமுடியமுன்னர் தானும் முதல்நன்மை பெறுவதற்குத் தக்கவள் என்று குருவானவர் அவளை ஏற்றுக்கொண்டார். வயசில்குறைந்தவளாயும் தோற்றத்தில் சிறியவளாயும் காணப்பட்டாலும் லூசியா அக்காலத்திற்தானும் (1913) தனக்குமாத்திரம் சொந்தமான சிலகுணவிசேஷங்கள் உடையவளாகக் காணப்பட்டாள். அக்காலத்தில் கட்டளைக்குருவானவர் முதல்நன்மைக்கு ஆயத்தப்படுத்திய ஒரு கூட்டம்பிள்ளைகளுடன் இவளும் சேர்க்கப்பட்டாள். லூசியாவும் ஞானோபதேச வகுப்புகளுக்கு வெகு பிரமாணிக்கத்துடன் போய்வருவாள். குருவானவர் அவளைத் தமக்குக்கிட்ட அழைத்துவைத்துக்கொள்வார். அவள் ஒன்றில் நிலத்தில் உட்கார்ந்திருப்பாள். அல்லது குருவானவர் நின்ற கிறாதிக்கு அருகில் இருந்த மேற்படியில் இருப்பாள். தாம் கேட்கும்கேள்விகளுக்கு மற்றப்பிள்ளைகள் சரியானவிடை கொடுக்கமுடியாது திகைக்கும்பொழுது, குரு

வானவர் லூசியாவைத்தான் கேட்பார். அதிகப்பற்றான பிள்ளைகளிலுல்பார்க்க லூசியா தனது ஞான உபதேச பாடங்களை நன்றாய் அறிந்திருந்தாள். ஆனபடியாற்றான் முதல் நன்மை பெறுவதற்குக் கட்டாயம் உத்தரவுபெறுவாளென அவள் நம்பியிருந்தாள். ஆனாலும் குருவானவர் அவளுக்கு வயது போதாதென அவளுடைய முதல்நன்மையைப் பின்போடயோசித்தார். “உனக்கு வயதுபோதாது. நீ இன்னும் சின்னஞ்சிறிய பிள்ளை” என்றார் குருவானவர்.

இதைக்கேட்டதும் லூசியா விம்மி, விம்மி அழத்தொடங்கினாள். லூசியா அழுதுகொண்டிருக்கையில் போர்த்துக்கால் தேசத்தில் மகா பிரபலியம் பெற்றவராகிய வண. குரூஸ் சுவாமியார் கோவிலுக்குள்வந்தார். இவர் முதல் நன்மை பெறுபவர்களுக்காகச் சமீபத்தில் மூன்றுநாள் ஞானஒடுக்கம் போதித்தவர். அந்தச்சிறுமி அழுதுகொண்டிருப்பதைக்கண்ட குரூஸ் சுவாமியார் அவள் ஏன் அழுகிறாளென்று கேட்டவிடத்து அவள்:

“நான் முதல்நன்மைபெற ஆசையாயிருக்கிறேன். குருவானவர் எனக்கு உத்தரவு தருகிறார் இல்லை” என்றாள். குரூஸ்சுவாமியார் கட்டளைச்சுவாமியாரிடம்போய் “அருமையான கட்டளைச் சுவாமியாரே, யேசுவின் லூசியா முதல் நன்மை பெறுவதற்கு ஆசையாய் இருக்கிறாள் என்றார். (உதவிக் கட்டளைச்சுவாமியார்தான் உத்தரவு கொடுக்க மறுத்தவர்.)

“அவளுக்கு ஞானஉபதேசம் போதிய அளவுதெரியுமா? அவள் தக்க ஆயத்தத்துடன் இருக்கிறாளா? முந்தி அதை அறியவேண்டும்” என்றார் கட்டளைச்சுவாமியார். இதைக்கேட்டதும் “குரூஸ்” சுவாமியார் லூசியாவை அழைத்து ஞானோபதேசத்தில் அவளைச் சோதித்துப்பார்க்கும்படிவிட்டார். லூசியா ஞானோபதேசக் குறிப்பிடத்தில் சொல்லப்பட்ட விடைகளைச் சொல்லுக்குச் சொல்லாக நல்லாய் அறிந்திருந்தாள். அதுமட்டுமா? அவள் கிளிப்பிள்ளை போலச் சொல்லாது சொன்ன எல்லாவற்றையும் நன்றாக விளங்கிக்கொண்டாள் என்பதும் தெளிவானது. லூசியாவின்

விடைகளினால் ஆச்சரியங்கொண்ட கட்டளைக்குருவானவர் மேலும்மேலும் அவளைப் பரீட்சித்துப்பார்த்தார். முடிவில் குருவானவருக்கு உண்டான ஆச்சரியம் சொல்லுந்தரமல்ல. அவளுடைய ஆத்துமம் அதி உத்தமமான பயபக்தியினால் நிறைந்திருப்பதைக் குருவானவர் அவதானித்தார். அவதானித்து, வருங்காலத்தில் அவள் சீவியம் மிகவும் விசேஷம் பெற்றுத்துலங்குமென்பதை அறிந்துகொண்டார்.

அவளை அரவணைத்து முத்தமிட்டு, “மகளே எப்போதும் தேவனுக்குப் பிரமாணிக்கமாக இருந்து அவருக்கு அமைந்துநட. உன் ஆத்துமத்தைச் சருவேசுரன் மிகவும் விசேஷவிதமாகப் பாதுகாக்கப்போகிறார்” என்று தீர்க்கதரிசனம் சொல்வதுபோலச் சொன்னார். பிற்பட்ட நாட்களிலே லூசியா பிரமாணிக்கமாக இருப்பதற்காக, எவ்வளவோ உபத்திரவங்களை அனுபவிக்கவேண்டியிருந்தது. ஆனால் கட்டளைக்குருவானவருடைய அந்தவாக்கு அவளுக்கு மகா தைரியத்தைக்கொடுக்கலாயிற்று. மேற்குறித்த சம்பவம் லூசியா மிகவும் புத்திசாதுரியமுள்ளபிள்ளை என்பதைக் காட்டுகின்றது. அதுபோலவே வாசிக்க அறியாத ஒருபிள்ளைக்கு அவ்வளவு திறமையாக ஞானோபதேசம் படிப்பித்த அவளுடைய தாயின் மகா பொறுமையையும் இச்சம்பவம் தெளிவாய்க் காண்பிக்கின்றது. மரியரோசாவுடைய வீடு போலவே ஒலிம்பியாவின்வீடும். அங்கு வளர்ந்துவந்த பிள்ளைகளுக்கு அவ்வீடு உள்ளபடி ஒரு பாடசாலையாயிற்று. ஞான உபதேசம் மாத்திரமல்ல தங்கள் தேசத்தில் வழங்கும் பாரம்பரியங்கள், உத்தமகிறிஸ்தவ சீவிய நடபடிகள், பிரமாணங்கள், தேசத்தில் வழங்கும் பாக்கள், சங்கீதங்கள், தேசசரித்திரத்துடன் சேர்ந்த சம்பவங்கள் முதலியவற்றையும் அந்தப் பெற்றார்வீட்டிலே தங்கள் பிள்ளைகளுக்குப் படிப்பித்து வந்தார்கள்.

விசேஷமாகப் பொழுதுபட்டதின்பின் சூட்டு அடுப்புக்கு அருகில் இருந்துகொண்டுதான் பாரம்பரை பாரம்பரையாக நாட்டில் வழங்கிவரும் சம்பவங்களைப் பெற்றார் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுப்பார்கள்.

சிஞ்ஞோர் அந்தோனியும் அவரது பராயப்பட்ட பிள்ளைகளும் மன அருட்சிக்குரிய நல்லகதைகளைச் சொல்லுவார்கள். அக்கதைகளில் மனசைக்கவரும் மாயவித்தைகளைப் பற்றியும் சொர்ணமயமான இராசகுமாரிகளைப்பற்றியும் பேசுவார்கள். விசேஷமாக மாயவித்தையினால் மயங்கிய சோனகர் சோனகத்திகளைப்பற்றி அவர்கள் பேசிவருவது வழக்கம். லூசியாவுக்கும் மகாசந்தோஷங் கொடுத்தது. அவளுடைய தாய் பழைய ஏற்பாட்டிலிருந்தும், பரிசுத்த சுவிசேஷங்களிலிருந்தும். அர்ச்சியசிஷ்டவர்களுடைய சீவியத்திலிருந்தும் சொல்லிய சம்பவங்களேயாம். எல்லாத்துக்குமேலாக ஆண்டவருடைய திருப்பாடுகளைப்பற்றி அவளுடையதாய் சொல்வதைக்கேட்பது, லூசியாவுக்கு எப்போதும் மகாமன அருட்சியை உண்டுபண்ணலாயிற்று.

யேசுவின் சின்னச் சிநேகிதர்கள்

நாம் குறிப்பிட்ட பிள்ளைகள், வீட்டிலே ஞானஉபதேசம் படிப்பிக்கப்பட்டனர் என்றோம். இந்த ஞானோபதேசப் பாடவேளைகளிற்தான் பிரான்சீசும், இயாசிந்தாவும், தங்களுடைய மைத்துனி லூசியாவில் வரவர அன்பு கொள்ளத் தொடங்கினார்கள். அயல்வீட்டுப்பிள்ளைகளும் முன்குறித்த ஞானோபதேச வகுப்புகளுக்குவர உத்தரவு பெற்றிருந்தார்கள். இப்படிவந்த பிள்ளைகளுள் ஒருவன் தூஷணையான சில வார்த்தைகளைப் பேசினான் என்று ஒரு சிறுவன் மரியரோசாவுக்கு முறைப்பாடு சொன்னான். அதைக்கேட்ட மரியரோசா குற்றவாளியைத் தக்கவாறு கடிந்துகொண்டாள். அதுமட்டுமா ? "இப்படிப்பட்ட அழுகற்பேச்சுகள் இங்கு ஒருவரும் பேசப்படாது" அது பாவம். பாவஞ் செய்கிறவர்களை யேசுநாதர் நேசியார். இப்படிப்பட்ட பாவங்கள் செய்துபோட்டு நல்லபாவசங்கீர்த்தனஞ் செய்யாதவர்களை யேசுநாதர் நரகத்தில் தள்ளிவிடுவார்" என்றும் மரியரோசா கடிந்துகொண்டாள். இப்படியான நற்புத்திமதிகள் ஞான உபதேசங்கற்ற சிறுவர், சிறுமிகளின் மனதில் நன்றாக ஊன்றிப்பதியலாயின. அல்லாமலும் இயாசிந்தாவும் அவள் சகோதரன் பிரான்சீசும் இனிமேல் முன்சொன்ன கூடாத

பிள்ளையைப்போன்றவர்களுடன் ஒருபோதும் விளையாடப் படாதெனவும், மரியரோசா கட்டளையிட்டாள். இந்தநாட் தொடக்கம் மூன்று மைத்துனர் மைத்துனிகளும் மற்றவர்களுடன் சேராமல் தாங்களே விளையாடிவருவார்கள். அப்படிச் செய்தபடியினால் அவர்களிடையில் அன்பும் வரவர அதிகரித்து வலிமை அடையலாயிற்று.

பின்வரும் சிறுசம்பவம் இந்த மூன்று சிறுபிள்ளைகளும் ஒருவர் ஒருவரை எப்படி நேசித்தார்கள் என்பதையும், எங்கள் ஆண்டவரில் எவ்வளவு அன்பு வைத்திருந்தார்கள் என்பதையும் தெளிவாய்க் காண்பிக்கின்றது.

ஒருநாள் மூன்றுபிள்ளைகளும் ஒருமிக்க இருந்து ஒரு வகையான பந்தயவிளையாட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள். இயாசிந்தாவுக்கு இவ்வித விளையாட்டில் அதிகபிரியம் என்றபடியினாற்தான் அப்படிச் செய்தார்கள். இந்த விளையாட்டில் பந்தயத்தில் ஆருக்கு வெற்றிவருகிறதோ அவர் மற்றவர்களுக்குச் சொன்ன சொன்னபடி செய்யவேண்டும். ஒருநாள் இயாசிந்தாவிற்கு வெற்றிவந்தது. அந்த வண்ணாத்திப்பூச்சியைப் பிடித்துக்கொண்டுவா. இன்ன இன்ன பூக்களைப் பறித்துக்கொண்டுவா என்று இயாசிந்தா சொல்லுவாள். ஒருநாள் லூசியா பந்தயத்தில் வெற்றி பெற்றாள். அப்போது அவர்களுக்குமுன் அவர்களுடைய மைத்துனன் ஒருவன் மேசையில் எழுதிக்கொண்டிருந்தான். லூசியா இயாசிந்தாவை நோக்கி: "ஓடிப்போய் மைத்துனனைக் கொஞ்சிப்போட்டுவா" என்றாள். "இல்லை இல்லை அது முடியாது. வேறு என்ன சொன்னாலும் செய்வேன். இதுமாத்திரஞ் செய்யமாட்டேன். அங்கே பார்; சுவரில் பாடுபட்ட சுரூபம் இருக்கிறது. ஆண்டவரை முத்தமிடும்படி நீ சொன்னால் என்ன ?" என்றாள் இயாசிந்தா. "தங்கச்சி! நீ சொல்வதுதான்சரி. ஓடிப்போய் ஒரு கதிரை எடுத்துக்கொண்டுவந்து அதில் ஏறிப் பாடுபட்ட சுரூபத்தை கீழே இறக்கிவை. வைத்துவிட்டு முழந்தாளிலிருந்து மூன்றுவிசை பாடுபட்ட சுரூபத்தை முத்திசெய்" என்றாள் லூசியா. இயாசிந்தா கதிரைமேல் ஏறிப் பாடுபட்ட சுரூபத்தை எடுத்து

வைத்து எனது அன்பான யேசுநாதருக்காக நான் எவ்வளவுஞ் செய்வேன் என்றாள்.

அப்படிச் சொல்லிவிட்டுப் பாடுபட்ட சுரூபத்தின்முன் முழந்தாளிட்டு விடாய்கொண்டவன் தண்ணீர்பருகுவதில் எவ்வளவு ஆத்திரமும், ஆவலும் காண்பிப்பானோ அப்படியான ஆவலுடன் பாடுபட்ட சுரூபத்தை முத்தமிட்டாள். முத்தமிட்டபின்பு சற்றுநேரம் அத்திருச்சுரூபத்தைக் கவனமாக உற்றுநோக்கியபின்: "ஏன் யேசுநாதர் சிலுவையில் ஆணிகளால் அறையுண்டார்?" என்று கேட்டாள்.

"எங்களை மகா அன்புடன் நேசித்தபடியாற்தான் அப்படி அறையுண்டார்."

மைத்துனி அந்தக்கதை முழுவதையும் சொல்லுங்கள். லூசியா ஒரு சரித்திரத்தை அல்லது ஒரு சம்பவத்தை ஒருக்காற் கேட்டுவிட்டாற்போதும், அது முழுவதையும் திரும்பச் சொல்லக்கூடியவள். அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில் அவளுடைய மூத்ததமக்கை மேரி அங்குவந்தாள். ஆண்டவருடைய பாடுகளைப்பற்றிச் சொல்லுகையில் லூசியா பாடுபட்ட சுரூபத்தைக் கையில்பிடித்தபடியே இருந்தாள். மேரி பாடுபட்ட சுரூபத்தை அவளிடமிருந்துபறித்து ஆசீர்வதிக்கப்பட்ட பொருட்களையும், பரிசுத்த சுரூபங்களையும் அநாசாரமாய்ப் பாவிக்கப்படாது என்றுசொல்லி லூசியாவைக் கண்டித்தாள்.

இயாசிந்தா ஓடிவந்து லூசியாவுக்காகப் பரிந்துபேசினாள். மைத்துனி லூசியாவைக் கோபித்துப் பேசவேண்டாம். நான்தான் சுரூபத்தை எடுத்தேன். இனிமேல் அப்படிச் செய்யமாட்டேன்.

மேரி இயாசிந்தாவை அரவணைத்து முத்தமிட்டு, மூன்றுபேரையும் அறைக்குவெளியேபோய் விளையாடும்படி அனுப்பிவிட்டாள். ஏனென்றால் அவர்கள் அறைக்குள் விளையாடினால் எல்லாப்பொருட்களும் இருந்தபடி இராதென்பதை நன்கு அவள் கவனித்திருந்தாள். அதன்பின்பு அவர்கள் தோட்டத்தின் ஒரு கோணத்தில் கிணற்றுக்குப் பின்புற

மாக விளையாடப்போனார்கள். ஆனால் அங்கே லூசியா தான் சொன்ன சரித்திரம் முழுவதையும் சொல்லிமுடித்தாள்.

அந்தத் தோட்டத்தில் ஒரு கனிமரத்தோப்பும் கல்திட்டியும் அடர்த்தியான வேலியுமிருந்தன. தனிமையாக மறைவாயிருந்து தாங்கள் காட்சியில்கண்ட அம்மாவைப்பற்றி ஒருவர் ஒருவருடன் கலந்துபேசவும் வேகரமான பயபக்தியுடன் செபஞ் செய்யவும், சிலசமயங்களில் தன்னாவாரம் அழுது கண்ணீர்சொரியவும் இந்த இடத்தைத்தான் இம்மூன்று சிநேகிதர்களும் சிலவருஷங்களின்பின்பு தெரிந்துகொள்வார்கள்.

தோட்டத்தின் தூர கோணத்தில் கிணற்றின் பின்னாற் சம்பாஷிக்கிறார்கள்.

லூசியா ஆண்டவருடைய திருப்பாடுகளைப்பற்றிச் சொல்லியதைக் கேட்டுக்கொண்டிருந்த இயாசிந்தா, இயல்பில் மிகவும் உருக்கமான மனதுள்ள ஒரு பிள்ளையானபடியால், மனங்கசிந்து கண்ணீர்சிந்தினாள். திருப்பாடுகளின் சரித்திரத்தை லூசியா ஒருமுறை சொல்லக்கேட்ட பிள்ளைகள் மீண்டும்மீண்டும் அதைக் கேட்கவிரும்பி, லூசியா அதைத் திரும்பவும் சொல்லும்படி செய்வார்கள். பிரான்சீசுக்கும் அவள் சகோதரிக்கும் உண்டாகக்கூடிய சந்தோஷம் லூசியா ஆண்டவருடைய பாடுகளைப்பற்றி விபரிப்பதுதான். இயாசிந்தா, அச்சம்பவத்தைக் கேட்கும்போதெல்லாம் அன்பால் உருகி அழுதுகொண்டேயிருப்பாள்.

எவ்வளவு இரக்கத்துக்குரியவர் எங்கள் ஆண்டவர். நான் இனிமேல் ஒருபோதும் பாவம் செய்யேன். ஆண்டவர் இன்னும் பாடுபடவேண்டுமென நான் ஒருபோதும் விரும்பேன் என்று இயாசிந்தா சொல்லிவருவாள்.

லூசியாவின் மூத்த சகோதரி மேரியைப்பற்றி நாம் முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். இவள் திருஇருதயச் சபையைச் சேர்ந்திருந்தவள். சபைக்காரியகாரருள் ஒருத்தி. கூட்டத்துச் சொந்தப்பிள்ளைகளுக்கெனப் பொதுப்பூசை நடைபெற்று, அதிலே சபையார் எல்லாரும் சற்பிரசாதம் பெறும் தினங்களில், மேரி தன் சகோதரியையும் தன்னுடன் கூட்டிச்சென்று அவளும் சற்பிரசாதம் பெறச் செய்வாள். பிரான்சீஸ், இயாசிந்தா ஆகிய இருவருக்கும் இந்தப் பாக்கியம் கிட்டவில்லை. அவர்கள் இன்னும் முதற்சற்பிரசாதம் பெறவில்லை. ஆனால் மறைந்திருக்கும் யேசுநாதரை அவர்கள் இருவரும் மறந்துவிடவில்லை. சற்பிரசாதக் கூட்டிலிருக்கும் யேசுநாதரை "**மறைந்திருக்கும் யேசு**" என்றே இயாசிந்தா அழைத்துவருவாள்.

ஒருமுறை மார்த்துவின் மனைவி தன் பிள்ளைகள் இருவரையும், தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரத்துக்குத் தன்னுடன் கூட்டிச்சென்றாள். ஆண்டவர் எழுந்தருளிய வழி நீளம் மலர்தூவிக்கொண்டு சென்ற "**சம்மனசுகள்**" போன்ற சிறுமிகளை இயாசிந்தா பார்த்தகண் சிமிட்டாது, ஒரே பார்வையாகப் பார்த்தபடியே இருந்தாள். அந்த நாட்தொடக்கம் மூன்றுபிள்ளைகளும் ஒருமிக்க இருந்து விளையாடும் வேளைகளில் இயாசிந்தா கைநிறையப் பூக்களைக் கொய்து அவற்றை ஆகாசத்தில் எறிந்து விளையாடுவாள்.

ஏன் இயாசிந்தா இப்படிச் செய்கிறாய்?

"நான் சம்மனசுகள் செய்தபடி செய்கிறேன். யேசுநாதருக்குப் பூத்தெளிக்கிறேன்" என்பாள்.

சம்மனசுகள்போல் ஆடை அணிவித்து, சுற்றுப்பிரகாரத்துக்குப்போகும் சிறுமிகளுக்கு உடுப்பு உடுத்தி ஆயத்தம் செய்துவிடுவது மேரியின் வழக்கம். இப்படிப்பட்ட

பிள்ளைகளுள் லூசியாவும் ஒருத்தி. ஒருநாள் லூசியா சம்மனசுகளின் உடையணிவதால் தனக்கிருந்த சந்தோஷத்தை இயாசிந்தாவுக்குச் சொன்னாள். தனக்கும் சம்மனசுகளின் உடைவேண்டுமென இயாசிந்தா பிடிவாதமாயிருந்தாள்.

இயாசிந்தாவுடைய ஆசையைத் திருப்திசெய்யும்படி லூசியா அவளைக் கூட்டிக்கொண்டு மேரியிடம்போக மேரியும் அதற்குச் சம்மதித்து, இயாசிந்தாவுக்குச் சம்மனசுகளின் உடை ஒன்றை உடுத்திப்பார்த்து அதற்குச் சிறகுகளும் பொருத்தி, அவள் அந்த உடையுடன் எப்படிநடந்துகொள்ளவேணும் எவ்விதம் பூத்தெளிக்கவேணும் எனப் பழக்கினாள்.

பூத்தெளிக்கும்போது நாங்கள் யேசுநாதரைக் காண்போமா? ஆம், கட்டளைச்சுவாமியார் அவரை ஏந்திக்கொண்டுவருவார்; இதைக்கேட்ட இரண்டு சிறுமிகளும் ஆனந்தக்கூத்தாடி, தேவநற்கருணைத் திருநாள் சுறுக்கு வாராதோ என்று சொல்லிச் சொல்லி வாயூறினார்கள்.

சிறுமிகள் ஆவலுடன் காத்திருந்த திருநாளும் வரலாயிற்று. இருவரும் கோவிலுக்குப் போய்ப் பீடத்தண்டையில் ஆயத்தமாய் இருந்தார்கள். சுற்றுப்பிரகார வேளையில் இருவருடைய கழுத்திலிருந்தும் தொங்கிக்கொண்டிருந்த பூத்தட்டத்தில் பலவிதமான நறுவாசனையுள்ள பூக்கள் நிறைந்திருந்தன. குறித்த குறித்த இடத்திலே மேரி அடையாளங்கொடுத்தவுடன், லூசியாவும் அவளுடன் கூடிச்சென்ற மற்றச் சம்மனசுகளும் சொல்லரிய புனித ஆசாரத்துடன் கதிர்ப்பாத்திரத்தைநோக்கிப் பூத்தெளித்துக்கொண்டு போனார்கள். ஆனால் இயாசிந்தா ஒரு இதழ்தானும் எடுத்துத் தெளிக்கவில்லை. லூசியா அவளுக்குச் சொல்லி அலுத்துப்போனாள். ஆனால் அவள் தெளிக்கவேயில்லை. அதற்குப்பதிலாக இயாசிந்தா கதிர்ப்பாத்திரத்தை ஏந்திச்சென்ற குருவானவரைக் கூறுகுறிப்பாக ஒரே பார்வையாக ஆவலுடன் பார்த்தவண்ணம் இருந்தாள். சுற்றுப்பிரகாரம் முடிந்தபின்பு: "நீ ஏன் பூத்தெளிக்கவில்லையென்று மேரி இயாசிந்தாவைக் கேட்டாள்.

நான் யேசுநாதரைக் காணவில்லையே! என்ன லூசியா நீ சின்ன யேசுவைக் கண்டாயா?

தேவநற்கருணையிலிருக்கும் சின்னயேசு தம்மை வெளியாகக் காண்பிப்பதில்லை என்று உனக்குத் தெரியாதா? இயாசிந்தா அவர் தம்மை மறைத்துக் கொண்டுதான் இருக்கிறார். அப்படி மறைத்துக்கொண்டு இருக்கிறபடியாற்தான் நாங்கள் சற்பிரசாதத்தின் வழியாக அவரை உட்கொள்ளக் கூடும். நீ சற்பிரசாதம் பெறும்பொழுது அவருடன் பேசிக் கொள்ளுகிறாயா? என்று கேட்டாள் இயாசிந்தா.

ஆம் அவருடன் சம்பாஷிக்கிறேன்.

நீ ஏன் அவரைக் காண்பதில்லை.

ஏனென்றால் அவர் தம்மை மறைத்துக் கொண்டிருக்கிறார். "என்னையும் சற்பிரசாதம் பெறவிடும்படி நான் அம்மாவைக் கேட்கப்போகிறேன்"

உனக்குப் பத்து வயசுவரமுன் கட்டளைச்சுவாமியார் உன்னைச் சற்பிரசாதம் பெறவிடமாட்டார். "உனக்கு இன்னும் பத்துவயசில்லை."

"அப்படியா? நீ சற்பிரசாதம் பெறலாம், நான் ஏன் பெறக்கூடாது?"

"எனக்கு ஞானஉபதேசம் முழுவதும் தெரியும்."

"உனக்குப் போதியளவுதெரியாது" என்றாள் லூசியா.

அதன்பின் இயாசிந்தாவும், அவளைப்போலவே ஆசைப்பட்டுக்கொண்டிருந்த பிரான்சீசும் தங்களுக்கும் குருவானவர் ஞானஉபதேசம் படிப்பிக்கும்படி அவருக்குச் சொல்லும்படி லூசியாவைக் கேட்டார்கள்.

தேவநற்கருணையைப்பற்றியே முற்றும் மனஞ் செலுத்திக்கொண்டிருந்த சின்னஞானஉபதேச மாணவர்கள் இருவரும் லூசியாவை இடைவிடாமற் பல கேள்விகளும் கேட்டுக்கொண்டு இருந்தார்கள். அவளும் தன்னால் இயன்றளவு மறுமொழி சொல்லிக்கொண்டிருந்தாள். இப்படிப் படிப்பித்து வருகையில் லூசியாவுக்கு மனவருத்தம் உண்டாகும்

ஒரு காரியத்தை அவளே கண்டுபிடித்தாள். அது என்னவென்றால் தன்னைப் பிறர் கேள்விகேட்கும்போது எப்போதும் மறுமொழிசொல்ல ஆயத்தமாக இருந்த இவள் பிறருக்குப் படிப்பிக்கவென்றால் தான் அறிந்தது மிகவும் சொற்பம் என்பதைக் கண்டுபிடித்தாள்.

இப்படியிருக்கையில் இயாசிந்தா எங்களுக்கு வேறு புதுக்காரியங்கள் சொல்லிக்கொடு. இவை எல்லாம் எங்களுக்குத் தெரியுந்தானே என்றாள். லூசியாவும் தனது ஞானஉபதேச அறிவு அவ்வளவுந்தான். அதற்குமேற் தான் ஒன்றும் சொல்லிக்கொடுக்கமுடியாது என்று விட்டாள். பிள்ளைகள்தான் லூசியாவின் கலக்கத்தை நீக்கவழி சொல்லிக்கொடுத்தார்கள். கோவிலுக்குப்போய் அங்கு ஞான உபதேச வகுப்பிற்சேர்ந்து வேறுகாரியங்களைப் படிக்க உத்தரவு தரும்படி உனது அம்மாவிடங்கேள் என்று சொல்லித் தாங்களும் தங்கள் தாயாரிடம் அந்த உத்தரவைக் கேட்கப் போனார்கள். ஏனென்றால் மறைந்திருக்கிற யேசுநாதரைப் பெற்றுக்கொள்ள இனிமேல் தாமதஞ்செய்ய அவர்கள் மனங் கேட்கவில்லை. ஒலிம்பியா தனது பிள்ளைகளுக்கு உத்தரவு கொடுத்தாள். ஆனால் ஞானோபதேச வகுப்பு நடைபெறும் ஒவ்வொருமுறையும் அவர்கள்போக உத்தரவுபெறவில்லை. கோவில் இருப்பது வெகுதூரத்தில். நீங்கள் சின்னஞ் சிறியவர்கள். அல்லாமலும் உங்களுக்கு 10 வயதுவருமுன் சுவாமியார் நீங்கள் சற்பிரசாதம்பெற உத்தரவு தரவேமாட்டார் என்று ஒலிம்பியா சொல்லிவிட்டாள்.

மந்தை மேய்ப்போர்

லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா என்ற மூன்று சிறுவர்களும் இவ்வுலக செல்வங்களின் சௌகரியங்கள் நிறைந்தவர்களல்ல. ஆனால் அவர்கள் உத்தம கிறீஸ்தவர்களாகப் பயிற்சியடைவதில் விசேஷ சுதந்தரம் உள்ளவர்களாகும் பாக்கியசாலிகளானார்கள். இவர்கள் மூவரும் மந்தை மேய்க்கும் தொழிலில் கையிட்டு இருந்துவந்த காலத்தில் இவர்களுடைய தாய்மார் மாத்திரமல்ல சருவேசுரனுடைய சகல சிருட்டிகளும், இவர்களுக்கு உபாத்திமாராக இருந்துவந்

தன. சிருட்டிக்கப்பட்ட பொருட்களெல்லாம் தேவனுடைய இலட்சணத்தையும் அவருடைய மகிமைப்பிரதாபத்தையும் உரத்துக் கூறுகின்றன அல்லவா? இந்தச் சிருட்டிகளின் காட்சியால் இம்மூன்று பாலியர்களும் சருவேசுரனை மேலும் மேலும் அறியவும் அவர்மட்டாய் உயர்த்தப்படவும் பாக்கியம் பெற்றார்கள். மந்தை மேய்த்துவரும் காலத்தில் இச் சிறுவர் அமைதியாயும், மன அடக்கமாயும், மௌனமாயும் சீவித்துவந்தபடியால், இவர்களுடைய நல்ல அறிவும் தேவ பத்தி உணர்ச்சியும் வரவர அதிகரிக்கலாயின. எமது மூன்று சிறுவர்களுள் முதன்முதல் மந்தை மேய்க்கத்தொடங்கியது லூசியாதான். இவளுடைய சகோதரி கறோலையின் பதின்மூன்று வயசானதும் கமத்தில் வேலைசெய்யும்படி அழைக்கப்பட்டமையால் அவளிடமாக லூசியா மந்தைகளை மேய்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள். லூசியா, தான் இனிமேல் மற்றும் இருவர்களுடனும் விளையாட வரமுடியாது எனச் சொல்லிப்போட்டாள். இதனால் இவர்கள் இருவரும் துக்கித்து லூசியாவைவிட்டுப்பிரிய மனமில்லாது அவளுடன் கூடிப்போய் மந்தைமேய்த்துவரத் தாயிடம் உத்தரவு கேட்டார்கள். தாய் முழுதும் மறுத்துவிட்டாள்.

ஆனால் ஒவ்வொருநாளும் பலார்பற்றி விடியும்போது லூசியா தனது மந்தையைச் சாய்த்துக்கொண்டு வரும்பொழுது மற்ற இரண்டு சிறுவர்களும் வழியில் காத்துக்கொண்டு நிற்பதைக்காண்பாள். அவர்கள் இவளுடன் தங்கள் வளவின் கடைசி எல்லைமட்டும் சென்று, அங்கு என்ன செய்தார்கள் என்று லூசியாதான் கபடின்றிச் சொல்லியிருக்கிறாள். "தேவமாதாவும் சம்மனசுக்களும் தங்கள் விளக்குகளைக்கொளுத்தி எங்களுக்கு வெளிச்சம் தரும்படியாக, அந்த விளக்குகளை மோட்சத்தின் ஜன்னலில் வைக்குமட்டும் நாங்கள் மூன்றுபேரும் ஓடியாடி விளையாடிக்கொண்டிருப்போம்" என்பதுவே லூசியாவின் அறிக்கை.

சிறுபிள்ளைகள் இருவரும் தங்களையும் லூசியாவுடன் மந்தை மேய்க்கப்போகவிடும்படியாகத் தாயை அடிக்கடி அலட்டிக் கேட்டுக்கொண்டுவந்தார்கள். கேட்டும் தங்கள்

எடுப்புகள் வாய்க்கவில்லை என்பதை உணர்ந்த சிறுவர்கள், தாங்களும் தங்கள் தமக்கைமாருக்குப்பதிலாக ஆடுமாடு மேய்க்கக்கூடுமெனவும் அப்படி மேய்த்துவரத் தங்களுக்கு உத்தரவு தரவேண்டுமெனவும் ஒலிம்பியாவை அரிகண்டப்படுத்தினார்கள். ஈற்றில் ஒலிம்பியாவும் அலுத்துப்போய் அவர்களுடைய கேள்விக்கு இணங்கினாள். இருவரும் லூசியாவிடம் ஓடிப்போய்த் தங்கள் சந்தோஷத்தை அவளுக்கறிவித்து எப்படி இரண்டு மந்தைகளையும் ஒருமிக்க ஓரிடத்தில்விட்டு மேய்க்கலாம் என்பதைப்பற்றித் தங்களுக்குள் ஒழுங்குபண்ணிக்கொண்டார்கள்.

ஒவ்வொரு மந்தையும் பிள்ளைகளின் தாய்மார் குறித்த நேரத்தில் புறப்படவேண்டும். முந்திப்புறப்பட்டவர்கள் மற்ற மந்தைகள்வருமட்டும் காத்திருக்கவேண்டும் எனவும் ஒழுங்கு பண்ணிக்கொண்டார்கள். முந்திவந்த மந்தை ஊருக்கு வெளியேயிருந்த ஒரு சிறு தடாகத்துக்கு அருகில் காத்து நின்று, மற்றமந்தை வந்துசேர்ந்தவுடன் லூசியா சொன்ன வயல்வெளிக்கு அவைகள் மேயச்சாய்த்துக்கொண்டு செல்ல வேண்டுமெனப் பிள்ளைகள் தீர்மானித்தார்கள். லூசியாவுக்கு புற்றரை நிலங்களும் மற்றும் மலைப்பாதைகளும் நன்றாகத் தெரிந்தபடியால் எல்லாரும் அவள்சொல்லுக்கு அமையக்கடமைப்பட்டார்கள். இந்தநாள் தொடக்கம் இவர்கள் மூவருக்கும் ஒவ்வொருநாளும் ஒரு திருநாள்போலவே இருந்தது. இருபகுதியாருடைய மந்தைகளும் ஒருமிக்கச் சேர்ந்தாலும் அவ்வளவு தொகையானவை அல்ல. ஆனால் எல்லாவேலைகளையும் இருபகுதியாரும் பொதுவில் செய்துவந்தமையால் வயதிற்குறைந்தவர்களும் அநுபவம் இல்லாதவர்களுமான இரு சிறுவர்களுக்கு, கருமங்கள் எல்லாம் இலேசாய் நடைபெறலாயின. ஒவ்வொருநாளும் காலைப்போசனம் அருந்தியபின் ஒரு பர. பிரி. சொல்லித் தங்கள் காவற்சம்மனசை மன்றாடியபின் மலைமேட்டு நிலத்தைத் நோக்கிச் செல்வார்கள். இந்த நிலங்களின் பச்சை கருவாலி, சப்பிள் முதலியமரங்களும் பண்படுத்தப்படாத நிலங்களில் பற்றைபறுகுகளும், நறுமணம் வீசும் பூண்டுகளும் உண்டு. ஆடுகள் எல்லாம்

அவைகளுடையகழுத்தில் கட்டியிருக்கும் மணிகளின் கறகற என்ற ஓசைகளுக்கு இணங்க பையமெல்ல மலையைநோக்கி நடந்துசெல்லும். போகும்வழியில் ஆடுகள் அங்கு ஒருகடி, இங்கு ஒருகடியாக மேயப்பார்க்கும். சிலசமயங்களில் அவைகளுக்கு விலக்கப்பட்ட செழிப்பான வேளாண்மை நிலத்துப்பயிரிலும் சடுதியில் ஓடிப்போய் வாய்வைக்கப்பார்க்கும். ஆனால் மந்தைமேய்க்கும் இந்தச் சிறுவர்களின் கவனத்தினால், அவைகள் மீண்டும் போகவேண்டிய பாதையில் வந்துசேரும். இப்படியாக ஒரு மணித்தியாலம் இரண்டு மணித்தியாலம் நடந்துசென்றபின், இன்ன இடத்தில் ஆடுகளை மேயவிடலாம் என்று லூசியா முடிவுசெய்ய, அவளுடைய விருப்பப்படி கருமம் நடைபெறும். அதன்பின்பு தரித்துநின்று தங்கள் மத்தியானப்போசனம் அடங்கியிருக்கும் சிறு கூடையை ஒரு மரக்கொம்பில் தூக்கிவிடுவார்கள். அப்படிச் செய்யாவிட்டால் பசிகொண்டு உணவுதேடித்திரியும் நாய்களுக்கு வாய்ப்பாகிவிடும். பின்பு மூவரும் ஒன்று சேர்ந்து ஆடுகளிற் கண்ணாயிருக்கத் தடைசெய்யாத ஒரு விளையாட்டை ஒழுங்குபண்ணி விளையாடிக்கொண்டிருப்பார்கள். மத்தியானம் ஆயிற்றென்பதை ஒன்றில் பத்திமாவின் கோவிலின் திருந்தாதி மணிச்சத்தத்தால் அல்லது பொழுது நிற்கும் நிலையால் அல்லது மரநிழல்களின் தன்மையால் அறிந்து கொள்வார்கள். அப்போது சாப்பாட்டுச் சிறு கூடையை மரத்திலிருந்து இறக்கிச் சாப்பிட ஆயத்தம்செய்வர். அதனுள் அப்பமும், பாற்கட்டியும், ஒலிவம் பழங்களும் தான் பொதுவாக இருக்கும். சில சமயங்களிற் பன்றி இறைச்சியும் இருப்பதுண்டு.

மத்தியானப் போசனத்தின்பின்பு லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா எனும் மூவரும் தங்கள் தாய்மார் சொல்லிய நற்புத்திக்கு அமைந்து எப்போதும் செபமாலை சொல்வார்கள்.

முற்காலத்தில் போர்த்துக்கால் தேசத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் சகலரும் ஒன்றுசேர்ந்து செபமாலை சொல்லும் பத்தியான வழக்கம் அனுசரிக்கப்பட்டு வந்தது. ஆனால் இக்காலத்தில் அந்த நற்பழக்கம் எத்தனையோ இடங்களில்

அருகி அருகிக்கொண்டு போய்விட்டது. ஆனாலும் பத்திமா பதி இருக்கும் இடமாகிய இலேயிறியா மேற்றிராசனத்தில் அப்பழக்கம் இன்னும் மதிக்கப்பட்டு வருகின்றது. மரிய ரோசாவும் ஒலிம்பியாவும் தங்கள் பிள்ளைகள் இந்த நல்ல அனுசாரத்தைக் கைக்கொள்ள வேண்டும் எனப் பெரிதும் கவலையுடையவர்களாய் இருந்துவந்தார்கள். ஆனால் லூசியா தானே சொல்லியிருக்கிறபடி சில சமயங்களிலே விளையாட வேண்டுமென அவதிப்பட்டுக்கொண்டு அல்லது காட்டுப் பழங்களை ஆயவேண்டுமென்ற ஆத்திரத்தினால் பரபரவென்று விரைவாய்ச் செபமாலையைச் சொல்லிமுடிப்பார்கள். சில வேளைகளில் “ **மங்களம் மரியாயே** ” (Ave Maria) என்ற இரண்டு வார்த்தைகளை மாத்திரம் ஒவ்வொரு செபமாலை மணிக்கும் சொல்லி இம்மென்னமுன் செபமாலை சொல்லிப் போடுவார்கள். இந்தவிதமான சூட்சத்தைக் கண்டுபிடித்தவள் இயாசிந்தாதான். இப்படிச் செய்வதால் தனது தாயுடைய சொல்லுக்கு அமைவதுமாயிற்று. செபமாலை விரைவில் முடிப்பதுமாயிற்று என்பதுதான் அவள் எண்ணம்.

மத்தியானத்துக்குப்பின் ஆடுகள் நன்றாக மேய்ந்துவிட்டபடியால், அமைதியாகப்படுத்து அசைமீட்டுக்கொண்டிருக்கும். ஆதலால் பிள்ளைகளுடைய விளையாட்டு வெகு அமளியாக இருக்கும். பொதுவாகக் கோட்டைகட்டி விளையாடுதல், பந்தய ஓட்டம் அல்லது மலையில் கல்லுகள் பொறுக்கி வீடுகட்டுதல் முதலியவற்றில் பொழுதுபோக்குவார்கள். இன்னும் இவர்கள் ஏலவே பலசங்கீதங்கள் அறிந்திருந்தபடியால் அவைகளைப்படித்தும் ஆடிப்பாடி விளையாடுவார்கள். தேவமாதாவுக்குரிய தோத்திரப் பாக்களைத் தானே பாடவேண்டுமென்று இயாசிந்தா விருப்பங்காட்டுவாள். விசேஷமாக “**எங்கள் மகிமையுள்ள பாதுகாவலிக்கும் மங்களம், பரிசுத்த கன்னிகைக்கும் மங்களம்**” “**சம்மனசுகளே நீங்களும் எங்களுடனே பாடுங்கள்**” என்று தொடங்கும் சங்கீதங்கள்தான் இயாசிந்தாவுக்கு அதிக விருப்பம். ஆனால் தங்களிலும் பெரிய ஒரு இடைப் பையனை இவர்கள் சந்தித்து அவனிடம் ஒரு ஊதுகுழல்

அல்லது கைவீணை இருப்பதைக்கண்டால் அவன் அதை வாசிக்கும்படி கேட்டுத் தாங்கள் சிறு நடனஞ்செய்து ஆனந்தங் கொள்வார்கள்.

சில நாட்களில் பல மேய்ச்சல் நிலங்களில் மாறிமாறி ஆடுகளை மேயவிட்டபின்னர் பொழுதுசாய அவைகளைச் சாய்த்துக்கொண்டு இராப்போசனத்துக்கு நேரகாலத்துக்கு வீட்டுக்கு வந்துவிடுவார்கள். இராப்போசனம் எல்லாரும் எப்போதும் ஒருமிக்க இருந்து அருந்துவது வழக்கம். இவர்களுடைய அசனமேசையில் ஒரு சிறு எண்ணெய் விளக்குத்தான் வெளிச்சம் கொடுத்துக்கொண்டிருக்கும். இராப்போசனத்தின்பின் சிறிதுவேளை இளைப்பாறியபின் பிள்ளைகளெல்லாரும் தங்கள் பெற்றோருடன் ஒருமிக்க இருந்து இராச்செபஞ் சொல்வார்கள். இது போர்த்துக்கால் தேசத்தில் பண்டுதொட்டுப் பரவணியான ஒரு உத்தம வழக்கம். நாள் முழுதும் கடினவேலை செய்தபிற்பாடு இளைப்பாறப் போகுமுன் தங்கள் இருதயங்களைப் பரலோகமட்டாக உயர்த்துவது இந்த எழைத் தொழிலாளிகளின் சிறந்த ஒரு வழக்கம். இவர்களுடைய நித்திரை மிகவும் அமரிக்கையும் சமாதானமும் நிறைந்தது என்பதற்கு ஒரு சிறிதும் ஐயமே இல்லை.

மூன்று வெவ்வேறு முகம், அவ்வாறே மூன்று வெவ்வேறு குணம்

இதுவரையும் நாம் குறிப்பிட்ட இந்த மூன்று சிறுவர்களும், சகலத்திலும் திறமையான நன்மைத்தனம் உள்ளவர்கள் என்று எண்ணப்படாது. செபமாலையை விரைவாய்ச் சுருக்கமாய்ச் சொல்லி முடித்துப்போடவேண்டும் என அவர்களுக்கிருந்த ஆத்திரமும், அதற்காகச் செய்துகொண்ட தந்திரமும் நாம் சொல்வதை வெளியாக்கும்.

அர்ச்சியசிஷ்டவர்கள் பரலோகத்திலே அந்தபபடியே உருவாக்கப்பட்டுப் பூலோகத்திலே விழவிடப்படுபவர்களல்ல. அவர்கள் பிரயாசையுடன் படிப்படியாகப் பையமெல்லத்தான் பரலோகம் மட்டாய் உயர்ந்து எழுவார்கள். இதுவே எல்லாருக்கும் பொதுவான அழைத்தல். பத்திமாவின்

மூன்று இடையப் பிள்ளைகளும் பூமியிலுள்ள மற்றச் சாதாரண பிள்ளைகளைப்போலவே இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு மாத்திரம் பொருந்தும் குணங்குறிகளை உடையவர்கள். அவர்களிடமும் சிலச்சில குறைகள் இருந்தன. அவர்களும் சிலச்சில சின்னச்சின்ன ஆசாபாசங்களினால் பீடிக்கப்பட்டுத்தான் இருந்தார்கள்.

1917-ம் வருடம் தேவமாதா இந்த மூன்று சிறுவர்களுக்கும் காட்சி கொடுத்தபொழுது அவர்கள் எப்படிப்பட்ட பிள்ளைகளாக இருந்தார்கள் என்பதைச் சிறுக விபரிப்போம். இந்த மூன்றுபேரும் போர்த்துக்கால் தேசத்து எஸ்திரெமாதூர் என்ற மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். இந்த மாகாணத்து மலைநாட்டுச் சிறுவர்களில் இருந்த குணம் குறிகள் இவர்களிலும் காணப்பட்டன. நகரிகளில் வசித்துவந்த பிள்ளைகளுக்கிருந்த சீர்திருந்திய போக்கும், புனிதமான நடபடியும் இவர்களில் இருக்கவில்லை. இவர்களுடைய முகங்கள், வெய்யிலிலும் காற்றிலும் அடிபட்டு நிறத்திலும் மங்குளம் உடையன. ஆனால் அவர்கள் நல்லசுக தேகிகளாய்க் காணப்பட்டார்கள். அன்னியர்களைக் கண்டால் அவர்கள் சிறிது வெருட்சியும் அச்சகூச்சமும் காண்பிப்பார்கள். இவர்களுடைய இவ்வித போக்கானது இவர்களுடைய நற்பெயருக்கும் நேர்மைக்கும் நற்சான்றாயிற்று. விவேகமற்ற தன்மையாயும் விடாப்பிடியாக அலட்டி அலட்டியும் இவர்களை விசாரணை செய்தவர்களுக்கு இவர்கள் ஒருபோதும் பிடிகொடுக்கவில்லை. எல்லாக் கேள்விகட்கும் ஒளிப்புமறைப்பு இல்லாமலும் நேர்மையாயும் கபடின்றியும் வெள்ளை மனசுடனும் விடை அளித்துவந்தார்கள். மூன்றுசிறுவர்களில் லூசியாதான் வயசிற்கூடியவள். அக்காலத்தில் அவளுக்குப் பத்து வயசு. ஆனால் அப்படியிருந்தும் அவளிலும் வயசிற்கிளையவளாகிய அவள் மைத்துனன் பிரான்சீசிலும் உயரத்தில் கூடியவளல்ல.

லூசியா

“லூசியாவின் தோற்றம் அவள் ஒரு மலைநாட்டுப் பெண்” என்பதைக்காட்டும். அவளுடையநிறம் சற்றுக்

கருமை பெயர்ந்தது. அவள் மற்றவர்களை நேரில் கூறுகுறிப்பாகப் பார்ப்பாள். நெறித்த கண்புருவங்களும் சுளித்த முகத்தோற்றமுமுடையவள். தடித்த உதடுகளும் பெருத்த வாயும் உள்ளவள். வாய் பெரும்பாலும் திறந்தபடியே இருக்கும். இந்தத் தோற்றங்களெல்லாம் அவள் நற்குணமுள்ளவள் அல்ல என்ற எண்ணத்தைப் பிறர் மனசில் உண்டுபண்ணும். ஆனால் உள்ளபடி இவைகளினால் அவளை அப்படித் தீர்மானிப்பது முற்றும்தவறு. அவளுடைய தோற்றம் அவளுடைய உண்மையான மனப்பக்குவத்தைக் காட்டுவதல்ல. லூசியாவுடைய தலைமயிர் உச்சியில் வகிர்ந்து இருக்கும். தன் தலையை ஒரு கைலேஞ்சியால் மூடிக்கொள்வாள். அல்லது சில சமயங்களில் பிறினிஸ் மலைச்சாரலில் உள்ள பெண்கள் அணியும் சிறு முக்காடு ஒன்றை அவள் அர்ச். பெர்னடெற் அம்மாள் போலும் அணிந்துகொள்வாள். அந்த முக்காடு இடுப்புமட்டாய்த் தொங்கிக்கொண்டிருக்கும். ஞாயிற்றுக்கிழமைகளில் சதுரங்களாகப் பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்ட பளபளப்பான ஒரு மேற்சட்டையும் அணிவாள். பெண்கள் அணியும் பின்னற்பாவாடையும் அவள் அணிந்துகொள்வாள். அந்தப் பாவாடை அவளுடைய சப்பாத்துமட்டும் நீண்டிருக்கும்.

பரிசுத்த தேவதாயார் தமது காட்சியை அளிக்கும்படி, குலைத்துச் சீராக்கமுடியாத சுருக்குகள் உள்ளனவும் அளவு பிரமாணமில்லாது கூழையானவையுமான மரியாதையற்ற உடைகளை அணியும் தற்காலத்துப் பெண்களைப்போன்ற ஒரு பெண்பிள்ளையைத் தெரிந்துகொள்ளவில்லை. அடக்கவொடுக்கமும் எடுபாடற்றதுமான உடையே தேவமாதாவுக்கு மிகவும் உவப்பானது. லூசியா நயவசனம் சொல்வதிலாவது, மன உருக்கம் காண்பித்ததிலாவது எவ்வகையாயும் விசேஷம் பெற்றவளென்று சொல்ல முடியாது. உள்ளபடி அவள் தனது மைத்துனி மிதமிஞ்சிய புனிதசீலி என்று அவளிற்குறைகூறி வருவாள். ஆனாலும் லூசியா பொதுவில் இரக்கமுள்ள நெஞ்சம் உள்ளவள். உள்ளபடி தனது மைத்துனன் மைத்துனிமார் தன்னை நேசிக்கும்படி செய்யக்கூடிய

வள். அவர்களும் லூசியாவின் கூட்டுறவில்லாது காலம் கழிக்க முடியாதவர்களாக இருந்துவந்தார்கள். லூசியா தானே சொல்லியிருக்கிறபடி 1917-ம் ஆண்டின் சம்பவங்களுக்குமுன் அவள் பிரான்சீஸ் இயாசிந்தா என்பவர்களில் வைத்த பட்சமும்பற்றுதலும் மற்றப்பிள்ளைகளில் வைத்திருந்த பட்சபற்றுதல்களிலும் வேறானதாக இருக்கவில்லை. ஆனால் 1917-ம் ஆண்டின் காட்சியின்பிற்பாடு தங்கள் பட்சமும்பற்றுதலும் மிகவும் நெருங்கிய ஒற்றுமை உடையதென்றும் எவராலும் பிரிக்கமுடியாத ஐக்கியம் உள்ளதென்றும், அவள்தானே மீண்டும் அறிக்கையிட்டிருக்கிறாள். இவர்கள் வசித்த கிராமத்திலிருந்த வேறு எந்தப்பிள்ளைகளிலாவது லூசியா விசேஷபட்சம் வைக்கவும் இல்லை. பிரான்சீஸ், இயாசிந்தா என்பவர்களிலும் பார்க்க வேறு எவரையும் லூசியா கூடுதலாக நேசிக்கவுமில்லை. உள்ளபடி வேறுபிள்ளைகள்மட்டில் லூசியாவிற்கு இயல்பான கவர்ச்சிதானும் இருக்கவில்லை. ஏனென்றால் இவள் ஒருவிதமான தொட்டாற்சிணுங்கிக்குணமும், நொய்மையான போக்கும் உடையவள். லூசியாவில் சில விசேஷித்த நற்குணங்களும் இருந்தன. அவள் அமைச்சலும் தாழ்மையும் புத்தியோசனையுடன் நடக்கும் தன்மையும், அதிகம் சளாப்பும்தன்மையற்ற மவுனசாதனையுமுள்ளவள். லூசியாவுடைய தாய் சாகமுந்திச் சொல்லியிருக்கிறபடி லூசியா ஒருபோதும் பேச்சில்முந்திக்கொள்ளும் குணமில்லாதவள். அவள் பேசும்படி அவளைக் கட்டாயப்படுத்தவேண்டியிருக்கும். ஆனால் பேசும்படி கட்டளையிட்டால் எப்போதும் மறுமொழி சொல்லத் தயாராகவேயிருப்பாள். அவளுடைய குணவிசேஷங்களிற் பிரதானமானது அது. அவள் எப்போதும் ஒளிப்பு மறைப்பில்லாது களங்கமற்றமனசுடன் உள்ளதை உள்ளபடி சொல்லும் வழக்கமுடையவள்.

பிரான்சீஸ்

பிரான்சீசுக்கு ஒன்பது வயசு. குறித்த மூன்று பிள்ளைகளிலும் அவன் பெலனான தேகக்கட்டும் தெளிந்து பருத்த உருவமும் உள்ளவன். வட்டவடிவமான முகச்சாயல் உடைய

வன். தனது மைத்துனியிலும் அவனுடைய முகமானது கூடின ஒப்ப செப்பமுடையது. மன அமரிக்கை அவன் முகத்திற் தோன்றும். மனம் பல விஷயங்களிற் சென்று யோசனை செய்யும் பாவனையை அவன் தோற்றம் காண்பிக்கும். அவன் தலைமயிர் செந்நிறமுடையது. கண்கள் கனிவான பார்வையுடையன. இவன் பாடசாலைக்குப்போய்ப் போதியளவு காலம் படித்திருந்தால் அதிலே உள்ளபடி பெரும் முன்னேற்றம் அடைந்திருப்பான்.

இவன் சிறு குருவிகளில் வெகு பட்சமுள்ளவன் என்று சொல்லுவார்கள். ஆதலால் தனது சாப்பாட்டுச் சாமான்களில் அவைகளுக்கும் ஒருசிறிது சந்தோஷம் கொடுப்பான். மரங்களில் ஏறி இருந்துகொண்டு பட்சிகள் பாடின இராகத்தைத் தொடர்ந்து பாடுவான். பாடுவதிலும் சீக்காய் விடுவதிலும் அச்சிறு குருவிகளுடன் போட்டிபோடுகிறவன் போல் நடந்துகொள்வான். பட்சிகளுடைய கூட்டை எவரும் தொடவிடான். ஒருநாள் ஒரு பையன் ஒருசிறு குருவியைப்பிடித்து வைத்திருப்பதைக்கண்டு பிரான்சீஸ் தன்னிடம் பெரும் செல்வம்போல இருந்த நாலு சல்லியை அப்பையனிடம் கொடுத்துக் குருவியைவாங்கி அது தன்பாட்டில் போய்ப் பிழைக்கும்படி பறக்கவிட்டுவிட்டான். விடும்பொழுது "கவனமாயிரு, இனிமேல் பிடிபடாதே" என்று அக்குருவிக்குப் புத்தியும் புகட்டினான். இந்த அறிவில்லாப் பிராணிகளுக்குப் பிரான்சீஸ் காண்பித்த அன்பிலும்பார்க்க மனுஷருக்கு அதிகமாகக்காண்பித்து வந்தான். மேய்ச்சல் நிலங்களில் பிரான்சீஸ் அடிக்கடி ஒரு கிழவியைச்சந்திப்பான். இந்தக் கிழவியின் குடும்பத்தினர் அவள் மேய்த்துவரும்படி அவளிடம் ஒரு சிறுதொகை ஆடுகளை ஒப்பித்திருந்தார்கள். சில சமயங்களில் இந்த ஆடுகள் அங்குமிங்கும் ஓடித்திரிந்தால், கிழவி வாதத்தினால் குறண்டின தன்கால்களோடு அவைகளைத் துரத்தி மீண்டும் ஒருங்கு சேர்க்க மிகவும் கஷ்டப்படுவாள். இப்படிப்பட்ட சமயங்களில் பிரான்சீஸ் ஓடிப்போய் ஆடுகளைச் சேர்த்துக் கிழவியிடம் ஒப்பித்துவிட்டு அவள் சொல்லும் நன்றித்துதியையும் வேண்டாமென்று

விட்டு ஓடிவிடுவான். அந்தக் கிழவி பிரான்சீஸ் தனது காவற் சம்மனசு என்று சொல்லிவருவாள்.

பிரான்சீஸ் வயதிற் குறைந்தவனாயினும் அவனுடைய கல்விப்பயிற்சி அற்பனில் அற்பனேயானாலும் மகாபுனிதமான மனச்சாட்சி உள்ளவன். ஒருநாள் மற்றப்பிள்ளைகள் எல்லாரும் பிரான்சீசுவுடைய ஞானத்தாய் (தலைதொட்ட தாய்)க்குரிய புல்வெளி ஒன்றில் தங்கள் ஆடுகளை மேய்க்க யோசித்தார்கள். அந்த அம்மாளும் அதற்குத் தடை செய்திராள். ஆனாலும் அவளுடைய நிச்சயமான உத்தரவு இல்லாது அப்படிச் செய்தல் களவாகுமென அஞ்சிப் பிரான்சீஸ் அதற்குச் சம்மதிக்கவில்லை. பிரான்சீஸ் தனது சின்னச் சகோதரி இயாசிந்தாவில் வெகு அன்புள்ளவன். அவளுடைய பயபத்தியான நல்லுணர்ச்சிகளைத் தானும் கொண்டிருக்க வேண்டும் என்று பிரயாசப்படுவான். அவன் பூரணமான அமைச்சலும் உள்ளவன். இயாசிந்தாவைப் போலஇவனும் தேவபத்தி உள்ளவன். அவளைப்போல வேகரமான பயபத்தியுடன் செபஞ் செய்வான். இவன் இயல்பிலே சூட்சபுத்தி உள்ளவன். தங்களுக்குக் காட்சி அளித்த அம்மாவின் கேள்விப்படி பிற்பட்ட நாட்களில் பிள்ளைகள் மூவரும் பாவிகளுக்காகத் தபமுயற்சிகள் அனுசரித்த பொழுது பிரான்சீஸ் புதுப்புதுவிதமான தபமுயற்சிகளைக் கண்டுபிடித்தான்.

சிலவேளைகளில் ஆடுகளுக்கு இரையாகும்படி "ஷேண்" மரத்தில் ஏறிக் கனிகளை வெட்டிக்கீழே போடவேண்டிவரும். அவ்வேளைகளில் பிரான்சீஸ் அணில் ஏறுமாப்போல் மரத்தில் ஏறும் கெட்டித்தனம் உள்ளவனாயிருந்தது அவன் கூட்டாளிகளுக்குப் பெரிதும் வாய்ப்பாயிற்று. ஞாயிற்றுக் கிழமையில் எப்போதும் இவன் நீண்ட காற்சட்டையும், கையுள்ள உட்சட்டையும் அணிவான். ஒரு வில்லூர்திப்பட்டுக் கழுத்துக்குட்டையும் தரித்திருப்பான். இக்கழுத்துக் குட்டை அவனுடைய உட்சட்டையையும் தெரியப்பண்ணும். தலையில் நீண்ட ஒரு தொப்பி அணிந்திருப்பான். அதின் ஒருபகுதி மடிந்து வலதுதோளில் விழும். தேவதாயா

ருடைய இந்தச் சின்ன வீரியப் "பரிமேலன்" இவ்வுலகிற் சிறிது நாட்களுக்கு மாத்திரம் காணப்பட்டான். அவன் எறக்குறைய எவராலும் அறியப்படவில்லை என்று சொல்லலாம். இவன் நறுமணம் வீசும் சிறிய மலருக்கு ஒப்பானவன். தேவன் அவனை மோட்ச நந்தாவனத்துக்கெனக் கொய்துகொண்டு போய்விட்டார்.

இயாசிந்தா

பிரான்சீசுடைய சின்னஞ்சிறியசகோதரி இயாசிந்தாவைப்பற்றி நாங்கள் கூடுதலாக அறியத்தக்கதாயிருக்கின்றது. ஏனென்றால் பத்திமாவிற் காட்சி பெற்ற மூவருள் இன்னும் உயிருடன் இருப்பவரும் "**சிஸ்ரர் மேரி வியாகுலம்**" என்ற நாமத்துடன் கன்னியாஸ்திரிமார்சபை ஒன்றிற் சேர்ந்திருப்பவருமாகிய லூசியா, இலேயிறியா மேற்றிராசனத்து விசுப்பாண்டவர் அவர்களுக்கு, இயாசிந்தாவைப்பற்றியே மிகவும் இன்பகரமான சம்பவங்களை எழுதிய ஒருகையெழுத்துப் பிரதியை ஒப்படைத்திருக்கிறார்.

போர்த்துக்கால் தேசத்து மலைநாட்டின் இச்சிறிய புஷ்பமானது தன்னைப்பற்றிக்கூறும் நூல்களாகிய பல இதழ்களை ஏலவே மலர்ந்திருக்கின்றது. இந்தச் சிறிய புஷ்பத்தின் நாட்டிலுள்ள சின்னஞ்சிறிய சிறுவர்கள் சிறுமிகள் எல்லாரும் இயாசிந்தாவின் சரித்திர வரலாறுகளை வாய்ப்பாடமாகச் சொல்லக்கூடியவர்கள். இவர்கள் இயாசிந்தாவைத் தங்கள் சொந்தச் சகோதரிபோல நேசிக்கிறார்கள்.

இயாசிந்தா 1917-ம் ஆண்டில் ஏழு வயசுமாத்திரம் உள்ளவள். நடுத்தரமான உயரமுள்ளவள். ஆனால் பெலனான தேகக்கட்டுள்ளவள். காத்திரமான நோய் பிணியோ வருத்தமோ என்பதை அவள் **அக்காலத்தில்** இன்னும் அறிந்ததில்லை. அவளுடைய முகரேகைகள் பூரணமான ஒப்பசெப்பமுடையவை. வெய்யிலிலடிபட்டவள் போன்ற நிறமுடையவள். ஆழ்ந்த ஊக்கமான கண்ணேக்குள்ளவள். லூசியாவைப்போலவே இவளுடைய தலைமயிரும் தேவகன்னித்தாயாரின் சுரூபங்களிற்போல ஒழுங்குபண்ணப்பட்டிருந்

தது. அவளுடைய தாய் சீவிக்கட்டிவிட்டதினால் தலைமயிருக்குண்டான அலங்காரம் அல்லாது, வேறு எவ்வித அலங்காரமும் அதற்குச் செய்யப்படவில்லை. லூசியாவின் உட்சட்டையிலும் பார்க்கக் கூடின சுருக்குகள் அவளுடைய சட்டைக்கிருக்கவில்லை. புத்திக்கூர்மையும் சுறுசுறுப்பும் உள்ள இப்பிள்ளை தனது வயசுக்கு மேற்பட்ட மதியூகம் உள்ளவளாகத் தோன்றினாள். நல்ல இருதயம் உள்ளவள். சருவேசுரனும் இப்பிள்ளைக்கு மதுரகுணத்தையும், உருக்கமுள்ள நெஞ்சத்தையும் அருள்வாரானார். அதனாற்தான் பிறரின் அன்புக்கு உரியவள் ஆனதுடன், பிறரிலும் மிகவும் பட்சமும் பற்றுமுள்ளவளாக இருந்துவந்தாள். தான் மேய்த்துவந்த ஆடுகளில் இவள் மிகவும் பட்சமுள்ளவளாயிருந்தாள். அவைகளுக்குச் செவிக்கு இனிமையான பெயர்களும் இட்டு அவைகளை அழைத்து வருவாள். சின்ன வெள்ளை ஆட்டுக்குட்டிகளை அவள் தன் பக்கமாகக் கவர்ந்திழுத்து, அவைகளை எடுக்கி அரவணைத்து. அவற்றை முத்தமிட்டும் வருவாள். பின்னேரத்தில் ஆகச்சிறிய ஆட்டுக்குட்டியைத் தானேஎடுக்கிக்கொண்டு போவாள். ஒருநாள் இவள் ஆட்டுமந்தையின் மத்தியில் இருப்பதைக் கண்ட பிரான்சீஸ் ஏன் இவள் அப்படி அவைகளின் நடுவே போவது? என்று கேட்டதற்கு "ஆண்டவர் செய்ததுபோல் நானும் செய்வதற்குத்தான் அப்படிப் போகிறேன்.



இயாசிந்தா சின்னஞ்சிறிய குட்டியை எடுத்துக் கொண்டு போகிறாள்.

எனக்குக் கொடுத்தபடம் ஒன்றில் யேசுநாதர் ஆட்டுமந்தையின் நடுவில் நிற்பதையும், அவர் ஒரு சிறுகுட்டியை

எடுக்கி மார்போடரவணைத்துக் கொண்டிருப்பதையும் பார்த்திருக்கிறேன்" என்று மறுமொழி சொன்னாள். இவர்கள் மந்தைகளை மேய்த்துவந்த மலைச்சாரல்களின் பள்ளத்தாக்குகளில் எதிரொலி உண்டாவதைக் கேட்பது இயாசிந்தாவுக்கு வெகு விருப்பம். தனது கூட்டாளிகளைத் தக்க ஒரு இடத்தில் இருக்கும்படி செய்துவிட்டு தான் ஒரு கற்பாறைமீது இருந்துகொண்டு சில பெயர்களை உரத்த சத்தமாய் உச்சரித்து எதிரொலி கேட்கும்படி செய்வாள். "**மரியாயே**" என்ற பெயர்தான் அதிகம் தெளிவாக எதிரொலியிற் கேட்கப்பட்டதை இயாசிந்தா அவதானித்தபடியால் அப்பெயரை அடிக்கடி உச்சரிப்பாள். சிலவேளைகளில் "**மங்களம் மரியாயே**" என்று தொடங்கிய பிரியதத்த மந்திரம் முழுவதையும் சொல்லுவாள். ஆனால் சொன்ன இரண்டொரு சொற்கள் எதிரொலியில் நன்றாகச் சப்தித்த பிற்பாடுதான், மற்றச் சொற்களைச் சொல்லுவாள். இப்படி மலைகள் தானே தேவமாதாவைப் புகழும்படி செய்வாள்.

இந்தச் சின்னஞ்சிறிய ஆத்துமா பூக்களில் வெகு பிரீதியாக இருந்ததைப்பற்றி ஆச்சரியப்படலாமா? இயாசிந்தா வசித்த வளவிலும் தோட்டத்திலும் சில பூக்கள் இருந்தன மெய். ஆனால் தேவன்தாமே தோட்டக்காரனாக இருந்த மலைநாடுகளில் மலர்ந்திருந்த பூக்களின் தொகைக்குக் கங்குகரையில்லை.

இயாசிந்தா அப்பூக்களைப் பார்த்துப் பார்த்து எள்ளளவு அலுப்பும் இல்லாது ஆச்சரியப்பட்டுக் கொண்டிருப்பாள். விசேஷமாக லீலிமலர்கள் பிவாயினி மலர்களிற்தான் அவளுக்கு அதிகம் பிரீதி.

லூசியா ஆடுமேய்க்கத் தனிமையாகப்போன நாட்களில் பொழுதுசாய அவள்வீடுதிரும்பும் பொழுது இயாசிந்தா வழியிற் காத்திருந்து; தான் சேர்த்துவைத்திருந்த பூ இதழ்களை லூசியாவுக்குமேற் சொரிவாள். இவ்விதமாகத்தான் இயாசிந்தா லூசியாவுக்கு நல்வரவு கூறுவாள்.

இயாசிந்தா நட்சத்திரங்களில் வெகுபிரீதி உள்ளவளாக இருந்ததிலும் ஆச்சரியமில்லை. பின்னேரத்தில் சூரியன்

அஸ்தமிப்பதை இவள் வெகுநேரம் பார்த்துக்கொண்டிருந்து ஆனந்தங்கொள்வாள். நட்சத்திரங்கள் பிரகாசிக்கத் தொடங்கினவுடன் அவள் அவைகளை ஒன்றுடனொன்று ஒப்பிட்டுத் தனது கூட்டாளிகளுக்கு மனமகிழ்ச்சி கொடுப்பாள். சந்திரனுக்குத் "தேவமாதாவின் விளக்கு" என்றும், நட்சத்திரங்களுக்கு "சம்மனசுகளின் விளக்கு" என்றும், சூரியனுக்கு "யேசுநாதருடைய விளக்கு" என்றும் பெயரிட்டது இயாசிந்தாதான். யேசுநாதருடைய விளக்கிலும் பார்க்கத் தேவமாதாவுடைய விளக்குத்தான் எனக்கு அதிகம் பிரியம். ஏனென்றால் ஆண்டவருடைய விளக்கு எங்களைப் பொசுக்கிப் போடுகிறது. அதைக் கண்ணால் ஏறெடுத்துப் பார்க்க முடியாது என்பாள் இயாசிந்தா.

"இல்லை இயாசிந்தா, ஆண்டவருடைய விளக்கிலும் பார்க்க் மேலான அழகுள்ள விளக்கு ஒன்றுமே இல்லை" என்று விடையிறுப்பான் பிரான்சீஸ்.

குறுணித்தூசி படிந்த லீலிமலர்

ஓரளவில் மந்தமான உணர்ச்சியுள்ள லூசியாவுக்கு இயாசிந்தாவின் சுவர்ணைக்குணம் அளவுக்கு மிஞ்சியதாகத் தோன்றியது. இயாசிந்தா ஒரு அற்பசந்தோஷத்தின் நிமித்தம் ஆனந்தக் கூச்சலிடுவதும் அல்லது அற்ப குறைபாட்டின் நிமித்தம் கண்ணீர் சிந்துவதும் லூசியாவுக்குப் பிடிக்கவில்லை.

விளையாட்டு வேளைகளில் இயாசிந்தா பிணக்குப்படுவதைப் பார்ப்பது ஒருவருக்கும் மனரம்மியம் உண்டுபண்ணாது. எவராவது சற்று எதிர் பேசிப்போட்டால் இவள் வெடுவெடுத்துச் சினம்கொள்வாள். அவளைப்பற்றி மற்றவர்கள் சொல்லியபடி "மயிரையும் சிலிர்த்துப் பிடித்துக்கொண்டு ஒரு மூலையிற்போய்க் குந்திவிடுவாள். வளர்ந்தவர்கள் எப்படித்தான் அரவணைத்து அன்பு காட்டினாலும் தான் நினைத்த விளையாட்டை, தான் தெரிந்து எடுத்த கூட்டாளிகளுடன் விளையாட மற்றவர்கள் சம்மதித்தாற்தான் விளையாடச் சம்மதிப்பாள்."

சிறு கற்கள் பொறுக்கி ஒருவித கோட்டைகட்டி விளையாடுவதுதான் அவளுக்கு அதிகம் பிரியம். விளையாட்டில் வெற்றி பெறுகிறவர்களுக்குச் சட்டைத்தெறிகள் இனாமாகக் கொடுக்கப்படும். இயாசிந்தாவே விளையாட்டில் அடிக்கடி வெற்றி பெறுவாள். லூசியா எத்தனையோ சமயங்களிற் தான் அணிந்திருந்த உடையிலுள்ள தெறிகளைக் கழற்றி இவளுக்குக் கொடுக்கவேண்டிவரும். மரியரோசா இராச் சாப்பாட்டுக்குத் தன் மகளை அழைக்கும்பொழுது அவளுடைய உடையில் பலதடவைகளில் ஒரு தெறியும் இராது. வெற்றிபெற்றவளான இயாசிந்தாவை அவ்வேளைகளிற் கெஞ்சி மன்றாடித் தெறிகளைக் கொடுக்கும்படி கேட்பார்கள். அவள் தன் எண்ணத்தைக் கைவிடாதவளும், பிடிவாதமும் உள்ளவளாதலால் தெறிகளை மீண்டும் கொடுக்க எளிதிற் சம்மதிக்க மாட்டாள். தான் தோற்றுப்போன வேளைகளிற் தனது சட்டைத்தெறிகளைக் கழற்றிக் கொடுக்கவேண்டிவருமே என்று அஞ்சி அவள் வெற்றியாகப்பெற்ற தெறிகளைத் தானே வைத்துக்கொள்ளவேண்டும் என்று பிடிவாதம் சாதிப்பாள். ஆனால் இயாசிந்தா இயல்பில் நல்ல இதயமுள்ளவள். ஆனபடியால் லூசியா "இனிமேல் ஒருபோதும் நான் உன்னுடன் விளையாட வரமாட்டேன்" என்று வெருட்டினால், தெறிகளை மீண்டும் கொடுத்துவிடுவாள்.

நாம் இதுவரையும் குறிப்பிட்ட மூன்று சின்னச் சிநேகிதர்களும் சங்கீதத்திலும், நடனத்திலும் பிரியமுள்ளவர்கள் என்பதை அறிவோம். இப்படிப்பட்ட பொழுதுபோக்கில் மிகவும் ஆசை கொண்டவள் இயாசிந்தாதான். ஒரு குழலில் அல்லது கைவீணையில் யாராவது ஒரு இராகம் பாடுவதைக் கேட்டவுடன் இயாசிந்தா வேகமாகச் சுற்றிச்சுற்றித் தாளத்துக்கு மிதித்து நடனஞ் செய்யத் தொடங்கிவிடுவாள். இப்படி ஆடுவதில் இயாசிந்தாவுக்கு விசேஷித்த கெட்டித்தனம் உண்டு. அதைக் காண்பிப்பதும் அவளுக்குப் பெரும் ஆசை.

முதலாம் உலக யுத்தத்துக்குப்போயிருந்த தனது தமயன் ஒருவரைப்பற்றி ஒரு சம்பவமும் கிடைக்கவில்லையே

என்று இயாசிந்தாவின் குடும்பத்தார் கவலைப்பட்டதினால், இவள் அழுது கண்ணீர் சொரிந்தாள். அந்தச் சகோதரன் யுத்தத்தில் மாண்டுபோனான் என்று சகலரும் ஐயுறவு கொண்டார்கள். இயாசிந்தாவுக்கு ஆறுதல் உண்டுபண்ண விரும்பி லூசியா அவளுக்கு முன்பு ஒரு உருண்டையை எறிந்துவிட்டாள். அதை உருட்டி உருட்டி விளையாடுவதினால் அவளுடைய அழுகையும் கண்ணீரும் இருந்த இடமும் தெரியாது மறைந்து விட்டன.

சில வேளைகளில் இயாசிந்தா தன்பாட்டிலே தனிமையாகவும் நடனஞ் செய்வாள். நடனஞ் செய்வதில் இவளுக்கிருந்த தணியாத அவாவின் நிமித்தந்தான் செபமாலையையும் சுருக்கமாகச் சொல்லிமுடிக்க வழி கண்டுபிடித்தாள்.

நாம் பின்னால் சொல்லுகிறபடி "வில்லாநோவாடிஊறெம்" என்றவிடத்து அரசியல் அதிகாரிகள் இவளைச் சிறையில் இட்டபொழுதுகூட இவளிடம் நடனக் கவர்ச்சி இருந்தது. சிறைச்சாலையில் இருந்தவர்களுள் ஒருவன் ஒரு கைவீணை வைத்திருந்தான். தங்களுடன் இந்தச் சிறு பிள்ளைகளையும் கொண்டுவந்து அடைத்துவிட்டார்களே என அவன் இவர்களில் இரங்கி, இவர்களுக்குப் பொழுது போக்காக இருக்கும்படி தனது கைவீணையை வாசிப்பான். ஒருநாள் இவனுடைய சிறைச்சாலைக் கூட்டாளிமார் ஒரு நடனம் நடைபெறுவதற்கும் ஒழுங்கு பண்ணிக்கொண்டார்கள். சிறையிலிருந்த பெரியவர்களும், சிறியவர்களும் ஒருமிக்கச் சேர்ந்து வீணையின் இராகத்துக்கு இசையத் தாளம் மிதித்து நடனம் செய்தார்கள். சிறையாளருள் ஒருவன் இயாசிந்தாவைத் தனது நடனச்சோடு ஆகத் தெரிந்துகொண்டான். அவன் அவளைக் கையால்வாரி எடுக்கி ஒரு இலேசான பாவைப்பிள்ளையைப் போலச் சுழற்றிச் சுழற்றி ஆச்சிப்பூச்சி ஆட்டினான். இதைப் பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு இது மகா மனமகிழ்ச்சி ஆயிற்று. இந்தச் சம்பவத்தை எழுதியிருக்கும் லூசியா (சிஸ்ரர் வியாகுலம்) "ஆண்டவருக்குத் தோத்திரம்; இயாசிந்தாவைத் தூக்கி

விளையாடினவனில் தேவமாதா இரக்கங்கொண்டு, அவனை மனந்திருப்பிப் போட்டார்" என்று சொல்லியிருக்கிறாள்.

இந்த மலைநாட்டுப்பிள்ளைகள் பிறப்பிற்றானே நடனக் கவர்ச்சி உள்ளவர்களாக இருத்தலில் வினோதம் ஒன்றும் இல்லை. போர்த்துக்கேய இடையருக்குள் இது ஒரு குற்றமற்ற பொழுதுபோக்காகவே எப்போதும் இருந்துவருகின்றது.

இந்தக் காலத்திலே, ஆண்களும் பெண்களும் ஒருங்கு கூடி ஆடிப்பாடி விளையாடின ஒரு நவீனநடனம் பத்திமாவில் நிர்ப்பாக்கியமாய் அதிகம் பரம்பிக்கொண்டு வரலாயிற்று. விசேஷமாக ஞாயிற்றுக்கிழமைகளில் கிராமவாசிகள் இவ்வித நடனங்களில் அதிகமாகப் பங்குபற்றி வரலானார்கள். இந்தப் பெரிய நடனங்கள் ஆடுபவர்களுக்கு அருகாமையிற் சிறுவர் சிறுமிகளும் தங்களுள் நடனப்பயிற்சி செய்துவருவார்கள். இதனாற்றான் லூசியாவும் இயாசிந்தாவும் சில விசேஷ நடனங்களில் பயின்று இருந்தார்கள்.

மனுவல் மார்க்கேஸ் பெறேயிரா என்ற நாமமுள்ள குருவானவர் நாலு வருஷங்களுக்குமுன் மாத்திரம் பத்திமாபதியின் கட்டளைக்குருவாக நியமிக்கப்பட்டார். இவர் இவ்வித நடனங்களைக்கண்டு மிகவும் சஞ்சலங்கொண்டு அருவருப்பான அனுசாரங்கள் மீண்டும் தமது விசாரணைப்பங்கிற் தலைகாட்டுவதைத் தமது சண்டவேகம் எல்லாங்கொண்டு அழித்து ஒழித்துவிடப் பிரயாசப்பட்டு வந்தார். பிரசித்தமாயும் தனிமையாயும், இந்த நடனவிடாய் ஆகிய சபிக்கப்பட்டவழக்கத்தை இந்தக்கட்டளைக் குருவானவர் எதிர்த்துப் போராடினார். மரியறோசா கட்டளைச் சுவாமியாரின் முதல் தாக்கிற்றானே அவருடைய ஒழுங்குத் திட்டத்தை ஏற்று, தனது பிள்ளைகளும் அதனை அனுசரிக்கும்படி கட்டளையிட்டாள். அல்புஸ்திறேல் பிரிவிலிருந்த ஏனைய ஆட்களும் மரியறோசாவின் நன்முன் மாதிரிகையைக் கண்டுபாவித்தார்கள். ஆதலால் குறித்த கலப்பு நடனங்கள் படிப்படியாக அரங்கத்தில் வெளிகொள்ளாது நின்றுவிட்டன.

ஆனாலும் மரியறோசா தனது வளர்ந்த பெண்பிள்ளைகள் தங்கள் மைத்துனிமாருடன் சேர்ந்து வீட்டுவாசலின்முன் நடனமாடும்படி உத்தரவு கொடுத்திருந்தாள். ஒருநாள் ஒரு அயல்வீட்டுப் பெண் லூசியாவின் தாயை நோக்கி: "இதுவரைக்கும் கலப்பு நடனங்களுக்குப்போனால் பாவம் அல்லவென்று சொல்லப்பட்டது. இப்போது எங்களுக்கு ஒரு புதிய கட்டளைக்குருவானவர் வந்தவுடன் அது பாவமாய்ப் போய்விட்டது. இதென்ன நூதனம்!" என்றாள்.

"அதுக்கு நியாயஞ் சொல்ல எனக்குத் தெரியாது. ஆனால் நான் அறிந்தது இவ்வளவுதான். அதாவது எங்கள் கட்டளைச்சுவாமி பிரசித்த கலப்பு நடனங்களைத் தடைசெய்திருக்கிறார். ஆனால் எங்கள் குடும்பத்தில் எங்கள் பிள்ளைகள் ஒருவர் ஒருவருடன் சேர்ந்து நடனஞ் செய்வதில் பாவம் இல்லை என்று அவர்தாமே சொல்லியிருக்கிறார்" என்றாள். ஆதலால் மரியறோசாவின் வீட்டில் எல்லாரும் கூடிக்குலாவி நடனஞ் செய்தார்கள். இயாசிந்தா சகலருக்கும் மனமகிழ்ச்சி உண்டுபண்ணிக்கொண்டு வந்தாள்.

ஏழு வயசுள்ள இந்தச் சிறுமிக்கு நடனத்தின் கவர்ச்சியிருந்தாலும் அது ஒரு குற்றமற்ற கவர்ச்சியே ஆகும். அருங்கலை இலட்சணம் இயல்பாக அமையப்பெற்ற ஆன்மாவுள்ள இந்தச் சிறுமிக்குப் பிரீதியை உண்டுபண்ணியது சங்கீதமும், இராகதாளங்களின் பொருத்தமான அமைப்புகளும்தான். சிருட்டிப்பிலுள்ள அலங்காரங்களைக் காண்பதினால் இவளிடத்திலும் இவள் கூட்டாளிகளிடத்திலும் உண்டான நவ உணர்ச்சிகளை நாம் முன்னரும் குறிப்பிட்டிருக்கிறோம்.

இந்த மூன்று சிறுவர்களிலும் நாம் அவதானித்த இவ்வித புனிதமான உணர்ச்சிகள் அர்ச்சியசிஷ்டர்கள் பலரிலும் காணப்பட்டன. விசேஷமாக அர்ச் ஐந்துகாயப் பிரான்சீஸ்கு இவ்வித உணர்ச்சிகளை உடையவர். இவ்வித உணர்ச்சிகளினால் இந்தச் சிறுவர்கள் உலகம் முழுவதிலும் அலங்காரத்தைப் பரப்பியிருக்கும் சர்வேசுரன் மட்டாய்த் தங்கள் மனசுகளை உயர்த்தி எழுப்பக்கூடியவர்கள் ஆனார்கள்.

லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா ஆகிய மூவரும் வேத பத்திச்சிந்தை நிறைந்தவர்கள். கவிவாணர் போலும், அருங்கலைச்சிந்தை உடையவர்கள்போலும், இயல்பில் ஆன்ம இலட்சணம் பொருந்தியவர்கள். இவர்களுடன் புழங்கின வர்கள் மனசிலும், இவர்களுடைய சீவியவரலாறுகளை நன்கு ஆராய்ச்சி செய்தவர்கள் மனசிலும் நாம் மேலே கூறிய இரண்டு உண்மைகளும் ஆழமாய்ப் பதியலாயின. இப்பிள்ளைகளுடைய போக்குவாக்கும், பழக்கவழக்கங்களும் போலிப்புனிதராகிய சில அன்னியர்முன் அவர்கள் திருத்த மற்றவர்களும் ஓரளவில் காட்டுமிராண்டிகளும் என்ற மனப்பதிவை உண்டுபண்ணி இருக்கலாம். ஆனால் இந்த வெளித்தோற்றம் எவ்வளவு ஏமாற்றந்தருவது என்றும் அதன் நிமித்தம் அவர்களைப்பற்றிச் செய்யப்பட்ட தீர்மானங்கள் முற்றும் தப்பிதம் என்றும் இப்போது அறிவோம். இனிமேல் வருவனவற்றால் நாம் சொல்வதன் உண்மை வரவரத் துலக்கம் பெறும்.

இணைபிரியாத அன்புள்ள இடையப்பிள்ளைகளாகிய லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா என்ற மூவரையும் பரலோக இராக்கினி தமது திருக்கண்ணோக்கால் தம்மிடம் கவர்ந்து இழுத்துக்கொண்டார். அத்திருத்தாயாரின் ஊழியர்களாகிய சம்மனசுகளும் இப்பிள்ளைகளில் கவர்ச்சி உள்ளவர்கள் ஆனார்கள்.

2-ம் அதிகாரம்

அலங்காரமான அதிசயம்

அழகிய ஆரம்பம்

பத்திமாபதியில் தேவதாயார் மூன்று சிறுவர்களுக்கு 1917-ம் வருஷம் அளித்த காட்சியின் வெள்ளி யூபிலிக் கொண்டாட்டம் போர்த்துக்கால் தேசத்திலே 1942-ம் வருஷம் மகா ஆனந்த அக்களிப்புடன் கொண்டாடப்பட்டது. அப்போது லிஸ்பொன் நகரத்து **பத்திரியாக்குவாகிய** கருதினால் செறெஜெயிரா ஆண்டவர் அவர்கள் சிறந்த பிரசங்கம் ஒன்று செய்தார். அப்பிரசங்கத்தில் எமது மூன்று காட்சிச் சிறுவர்களையும்பற்றி முன்னே எவரும் அறிந்திராத அதிசயமான சம்பவம் ஒன்றை நூறாயிரம் கிறீஸ்தவர்கள் முன் அக்கருதினால் ஆண்டவர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

மகா உன்னத பதவியை வகித்திருப்பவரான அந்தப் பிரசங்கியார் மாசில்லாத இருதயமாதாவின் வல்லமையுள்ள பாதுகாப்பினால் தமது தாய்நாடு அடையவிருக்கும் மகிமைப் பிரதாபத்திற் தமக்குரிய தளராத நம்பிக்கையை முதன் முதல் எடுத்துக் கூறினார். அதன்பின்பு அவர் சொல்லுவார்: "இந்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் உங்களில் உறுதிப்படுத்தும்படி இந்தப் பாதுகாப்பானது தேவதாயாரால் இருபத்தைந்து வருடங்களின்முன் வாக்குப்பண்ணப் பட்டதென்பதை உங்களுக்கு வெளியிடுகிறேன். உங்கள் மேற்றிராணிமார் எல்லாரும் இப்போது நன்கு அறிந்திருக்கிறபடி தாழ்மை உள்ளவர்களும் கல்வி அறிவில் மிகவும் குறைந்தவர்களுமான மூன்று சிறுவர்களுக்குத் தேவதாயாரின் நாமத்தினால் ஒரு சம்மனசினால்—**போர்த்துக்கால் தேசத்துக் காவற்சம்மனசு என்று தம்மை அழைத்த ஒரு சம்மன**சினால்—இந்த விசேஷித்த பாதுகாப்பு 25 வருடங்களின்முன் அறிவிக்கப்பட்டது.

இந்த வாக்கு எவ்விதம் அறிவிக்கப்பட்டது என்பதன் வரலாறுகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள். எங்கள் மூன்று சிறு இடையப் பிள்ளைகளும் சம்மனசுகளை ஒவ்வொரு நாளும் கிரமமாக மன்றாடிவந்தார்கள். அவர்களும் மறைவாக இருந்துகொண்டு இப்பிள்ளைகளுக்குத் துணைபுரிந்து அவர்களில் மகா பிரியம் உள்ளவர்கள் ஆனார்கள்.

முன்னொருவிசை ஆர்க்கின் அர்ச். அருளாயி அம்மாளுக்கு அதிதூதரான அர்ச். மிக்கேல் தம்மை வெளியாகக் காண்பித்து அவளுடன் சம்பாஷித்ததுபோல, அந்தச் சம்மனசுகளில் ஒருவர் தம்மைத் தங்களுக்கு வெளிவெளியாகக் காண்பித்துத் தங்களுடன் சம்பாஷித்தாரென்று லூசியா எங்களுக்கு உறுதிமொழி கூறியிருக்கிறாள்.

தேவமாதா இவர்களுக்குக் காட்சிகொடுக்க ஒரு வருஷத்துக்கு முன்னே அதாவது 1916-ம் வருஷத்து வசந்த காலக் கடைசியிலே ஒருநாள் எங்கள் மூன்று சிறுவர்களும் பெரும்புசல் ஒன்றில் அகப்பட்டுக் கொண்டார்கள். ஆதலால் புசற்காற்றோடு பொழியத்தொடங்கின மழைக்குத் தப்பிக்கொள்ளும்படியாக இம்மூன்று சின்ன இடைப்பிள்ளைகளும் ஒரு ஒதுக்கிடம் தேடவேண்டியிருந்தது. கபேக்கோ மலைச்சாரலின் ஒரு இறக்கமான பாகத்தில் அந்த ஒதுக்கிடம் இவர்களுக்குக் கிடைக்கலாயிற்று. அந்த மலையின் ஒரு சிறு பிளவிலே மரங்களின் மறைவிலே அவர்கள் ஒதுங்கி நின்றார்கள். காற்றும் மழையும் முடியும்மட்டும் அவர்கள் அந்த ஒதுக்கிலிருந்து தங்கள் மத்தியானப் போசனத்தை அருந்தி, செபமாலையும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். செபமாலை முடிவில் ஏதோ ஒரு சிறு விளையாட்டு விளையாடினார்கள்.

இருந்தாப்போல ஒரு சூறைக்காற்றுவீச அவர்கள் தலையைத் திருப்பிப்பார்த்தார்கள். அப்போது மலையின் இறக்கத்தில் அடர்ந்திருந்த ஒலிவமரங்களுக்கு மேலே தூயவெண்ணிற மனுஷச்சாயல் ஒன்று உருவாகித் தங்களைநோக்கி வந்துகொண்டிருப்பதைக் கண்டார்கள். அந்த உருவம் பனிக்கட்டிகளினால் அமைக்கப்பட்டு, சூரிய கிரணங்களினால் பளிங்குபோல உள்ளும் புறமும் காணக்கூடிய தன்மையாக

இலங்கிக்கொண்டிருந்தது. அந்த உருவம் தங்களை அணுக அணுக, மனுஷர் எவருக்கும் ஒருபோதும் இல்லாத அலங்காரமுள்ள பதினாறு அல்லது பதினைந்து வயசுடைய ஒரு வாலனுடைய சாயல் குணங்குறிகளை, அவர்கள் நன்றாய் மட்டிட்டறிந்து கொள்ளக்கூடியதாயிருந்தது.

பிள்ளைகளுக்குக் கிட்டவந்து அந்த வாலன் அவர்களை நோக்கி: "பிள்ளைகளே அஞ்சவேண்டாம். நான் சமாதானத்தின் சம்மனசு, என்னுடன் செபஞ்செய்யுங்கள்" என்றார். என்று சொல்லிவிட்டு முழந்தாளிலிருந்து நெற்றி நிலத்திற்படச் சாட்டாங்க தெண்டனிட்டுப் பின்வருமாறு மூன்றுமுறை செபித்தார்.

"என் சருவேசுரா உம்மை விசுவசிக்கிறேன். உம்மை ஆராதிக்கிறேன். உம்மில் நம்பிக்கை வைக்கிறேன், உம்மை நேசிக்கிறேன், உம்மை விசுவசியாமலும் உம்மை ஆராதியாமலும் உம்மில் நம்பிக்கை வையாமலும், உம்மை நேசியாமலும் இருக்கிறவர்களுக்காக உமது மன்னிப்பை இரந்து வேண்டுகிறேன்."

இதன்பின் அவர் எழுந்துநின்று: "இந்த மேரையாக மன்றாடுங்கள், யேசுநாதருடையவும் மரியாயினுடையவும் பரிசுத்த இருதயங்கள் உங்கள் மன்றாட்டக் குரல் ஒலியால் அருண்டு இரங்குகின்றன" என்று பிள்ளைகளுக்குச் சொன்னார்.

முன்குறித்த வார்த்தைகளைச் சொன்னபிற்பாடு சம்மனசானவர் மறைந்துவிட்டார். ஆனால் சம்மனசானவரின் வார்த்தைகள் பிள்ளைகளுடைய மனசுகளில் அவ்வளவு ஆழமாக ஊன்றிப் பதிந்தபடியினால் அவர்கள் அவற்றை மறக்கவேயில்லை. அவர்களும் சம்மனசானவரைப்போற் சாட்டாங்க தெண்டனிட்டு அதே செபத்தை மீண்டும் மீண்டும் செபித்தார்கள். சில சமையங்களில் அறிவு சோர்ந்துபோகுமட்டும் திரும்பத்திரும்ப அச்செபத்தைச் சொல்லுவார்கள்.

வேறு ஒருநாள் ஆடி, ஆவணிமாச காலமாகையினால் மற்றவர்கள் மத்தியானவேளையிற் சிறு துயில்கொள்ளுகையில் எங்கள் மூன்று சிறுவரும் லூசியாவின் வீட்டுத்தோட்டத்தில் கிணற்றுக்குப் பின்பக்கமாக விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவ்வேளை சடுதியில் முன்னொருமுறை தம்மைக் காண்பித்த சம்மனசானவர் மீண்டும் பிள்ளைகளுக்குத் தமது காட்சி அளித்தனர். அளித்து: “என்ன செய்கிறீர்கள்? மன்றாடுங்கள்; மன்றாடுங்கள். அதிகம் அதிகம் மன்றாடுங்கள். யேசுநாதருடையவும் கன்னிமரியாயினுடையவும் இருதயங்கள் உங்களில் இரக்கமான நோக்கம்கொண்டிருக்கின்றன. தேவனுக்குத் துரோகமாகக் கட்டிக்கொள்ளப்படும் பாவங்களுக்குப் பரிகாரமாகச் செபங்களையும் பரித்தியாகங்களையும் ஒப்புக்கொடுங்கள். பாவிகள் மனந்திரும்பும்படியாக இரந்து மன்றாடுங்கள். நான் சொன்னபடி செய்யுங்கள். உங்கள் தாய்நாட்டுக்குச் சமாதானம் இறங்கிவரும்படி செய்யப் பிரயாசப்படுங்கள். **‘நான்தான் உங்கள் தேசக் காவற்சம்மனசு.’** எல்லாத்திற்கும் மேலாகச் சருவேசுரன் உங்களுக்கு அனுப்ப இருக்கும் துன்பதுரிதங்களை மனப்பணிவுடன் ஏற்று அவைகளைத் தாங்கிக்கொள்ளுங்கள்” என்று சம்மனசானவர் பிள்ளைகளுக்குச் சொன்னார்.

சம்மனசானவரின் இவ்வார்த்தைகள் பிள்ளைகளின் மனசில் அவ்வளவு ஆழமாய்ப்பதிந்து அவற்றில் எவ்வளவோ மகா அறிவுவெளிச்சத்தை உண்டுபண்ணியது. அதனால் அவர்கள் தேவன் தங்களை எவ்வளவாக நேசிக்கிறாரென்றும், மனிதர் தம்மை நேசிக்கவேண்டுமென்று எவ்வளவாக அவர் ஆசிக்கிறார் என்றும், பரித்தியாகக் கிரிகைகளின் பெறுமதி எப்படிப்பட்டதென்றும், பாவிகளை மனந்திருப்புவதில் பரித்தியாகக் கிருத்தியங்கள் ஆண்டவரிற் செலுத்தும் வல்லமை எத்தன்மையென்றும் நன்கு விளங்கிக்கொண்டனர்.

இந்நாட்தொடக்கம் லூசியா, இயாசிந்தா, பிரான்சீஸ் ஆகிய மூவரும் தங்களால் அனுசரிக்கக்கூடிய ஒறுத்தல்

முயற்சிகள் எல்லாவற்றையும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தார்கள். ஆனால் மணித்தியாலக்கணக்காகச் சாட்டாங்கதெண்டனிட்டுச் சம்மனசு தங்களுக்குப் படிப்பித்த செபத்தை மீண்டும் மீண்டும் சொல்வதே அவர்கள் விரும்பிய தபக்கிருத்தியமாயிருந்தது. இச்சம்பவங்களின் பின்பு இரண்டு மூன்று மாசங்கள் கழிந்தன. தங்கள் மந்தையைக் “கபேக்கோ” மலை இறக்கத்தில் மேய்த்துக்கொண்டிருந்த எமது மூன்று சிறுவரும், மத்தியானப்போசனம் சாப்பிட்ட பின் முதல்விசை சம்மனசு தமக்குக்காட்சிகொடுத்த சிறு குடிசைக்குள் நுழைந்தார்கள். அங்கு செபமாலையும் சொல்லிச் சம்மனசு தங்களுக்குப்படிப்பித்த செபத்தையும் சொன்னார்கள். அந்தச் செபத்தை அவர்கள் பலவிசை சொல்லிய பின்பு சடுதியில் முன்னொருபோதுமில்லாத பிரகாசத்தினால் தாங்கள் சூழப்பட்டிருப்பதை அவதானித்தார்கள்.

எழும்பிப்பார்த்தபோது மீண்டும் சம்மனசானவரின் காட்சி அவர்களுக்குக்கிடைத்தது. இந்தவிசை சம்மனசானவர் ஒரு பாத்திரத்தைக் கையில் ஏந்திக்கொண்டு நிற்பதையும் பாத்திரத்திற்குமேலே ஒரு ஒஸ்தியையும் கண்டார்கள். அந்த ஒஸ்தியிலிருந்து இரத்தத்துளிகள் பாத்திரத்தில் விழுந்துகொண்டிருப்பதையும் அவதானித்தார்கள். பாத்திரத்தையும் ஒஸ்தியையும் அந்தரத்தில் விட்டுவிட்டுச் சம்மனசானவர் பிள்ளைகளின் அருகில் முழுந்தாளிட்டுப் பின்வரும் செபத்தைப் பிள்ளைகளுடன் தாமும்சேர்ந்து செபித்தார்.

“பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்துவாகிய மகாபரிசுத்த திரித்துவமே! நான் மகா தாழ்ச்சிவிநயமாக உம்மை ஆராதிக்கிறேன். உலகத்திலே உள்ள சகல நற்கருணைப்பேழைகளிலும் எழுந்தருளியிருக்கிற எங்களாண்டவராகிய யேசுக்கிறீஸ்துவின் திருச்சரீரம், இரத்தம், ஆத்துமம், தெய்வீகம் ஆகியவைகளை அவருக்கே விரோதமாகச் செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். அவருடைய திரு இருதயத்தின் அளவில்

லாத பேறுபேறுகளையும் மரியாயின் மாசில்லாத இருதயத்தின் மன்றாட்டுகளையும் முன்னிட்டு ஏழைப்பாவிகளை மனந்திருப்பியருளும்படியாகத் தேவரீரை இரந்து மன்றாடுகிறேன்."

இந்தச்செபத்தைப் பிள்ளைகளைக்கொண்டு சொல்லுவித்தபின்பு சம்மனசானவர் எழுந்து ஒஸ்தியை லூசியாவுக்கும் பாத்திரத்திலிருந்த திரு உதிரத்தைப் பிரான்சீசுக்கும் இயாசிந்தாவுக்கும் உட்கொள்ளும்படி கொடுத்து "**நன்றி கெட்ட மனுஷராற் படுபாதகமாக நிந்தித்து அவமதிக்கப்படும் யேசுநாதருடைய திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். அவர்களுடைய பாவங்களுக்காக நிந்தைப்பரிகாரஞ்செய்து உங்கள் தேவனுக்கு ஆறுதல் உண்டுபண்ணுங்கள்**" என்று சொன்னார். அதன் பின்பு அவர் மீண்டும் சாட்டாங்க தெண்டனிட்டு, "பிதாச் சுதன் இஸ்பிரீத்துசாந்துவாகிய மகாபரிசுத்த திரித்துவமே" என்ற செபத்தை மீண்டும் மூன்றுவிசை சொல்லிவிட்டு அந்தச் சம்மனசானவர் மறைந்துவிட்டார். அவர் மறைந்த பின்பு பிள்ளைகள் மூவரும் அதேநிலையிலிருந்து முன் சொன்ன செபத்தை மீண்டும் மீண்டும் ஓயாது சொன்னார்கள். கடைசியாய்ப் பிரான்சீஸ்தான் தங்களின் அப்போதைய நிலையை உணர்ந்து தாங்கள் வீடுபோய்ச் சேரவேண்டிய நேரம் வந்துவிட்டதெனக் கண்டுபிடித்தான்.

சம்மனசு காட்சிகொடுத்த வேளையிலே பிள்ளைகள் மூவரும் பரலோகபிரபைக் கதிர்களினால் அடக்கி ஆளப்பட்டவர்களானார்கள். தாங்கள் முற்றும் சுத்தசூனியம் ஆனவர்கள் போல இருந்தார்கள். உள்ளபடி இவ்வுலகிலிருக்கிறவர்கள் தானோ என்பதைப்பற்றித் தானும் ஒன்றும் சொல்லமுடியாதவர்கள் ஆனார்கள். சம்மனசானவரின்காட்சி ஒழிந்த பிற்பாடுதானும் அவர்களுடைய புத்திதத்துவங்கள் ஒரு வகையில் விறைத்து மரத்துப்போய் உணர்ச்சியற்றவர்களானார்கள்.

"எனக்கு என்னசெய்கிறது என்று என்னாற் சொல்ல முடியவில்லை. ஆனாற் பேசவோ பாடவோ விளையாடவோ இப்போது என்னால் இயலாது. ஒன்றுமே செய்ய எனக்கு இப்போது பெலன் இல்லை" என்று இயாசிந்தா சொன்னாள்.

எனக்கும் அப்படித்தானே இருக்கிறது. ஆனால் காரியமில்லை. சம்மனசுகளின் காட்சியின் அலங்காரம் இந்த வருத்தங்கள் எல்லாவற்றிலும் மேலானதல்லவா? என்றான் பிரான்சீஸ். இவர்களுடைய ஆன்மதத்துவங்களின் பெலவீனம் இன்னும் சிலநாட்களுக்கு நிலைத்தது. ஆன்மதத்துவங்கள் படிப்படியாகத்தான் தங்கள் இயல்பான நிலையை அடைந்தன. தேவமாதா தங்களுக்குக் காட்சிகொடுத்த பொழுது தங்களில் உண்டான மாற்றத்திற்கும் இப்போது நிகழ்ந்த மாற்றத்திற்கும் பெரும் வித்தியாசம் என்பதைப் பிள்ளைகள் தாமே சொல்லுவார்கள். சம்மனசுகளின் காட்சியின்போதும், தேவமாதாவின் காட்சியின்போதும் ஒரேவிதமான இருதய சமாதானம் உண்டானதென்றும் ஒரேவிதமாய்த் தங்கள் ஆத்துமங்கள் தேவனிற் சென்றுகொண்டிருந்தனவென்றும் பிள்ளைகள் ஒப்புக்கொண்டார்கள். ஆனாற் தேவமாதா காட்சி அளித்தபொழுது தங்களிடம் பெரும் சுறுசுறுப்பும் பிறரிற்தானும் தாவக்கூடிய ஆர்வமும் இருந்ததென்று இவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இப்போ சொல்லப்பட்ட சம்பவங்கள் எல்லாம் உண்மை என்பதற்கு லிஸ்பொன் நகரத்து **பத்திரியாக்குவான** கருதினால் செறெஜெயிரா ஆண்டவர் அவர்கள் சாட்சியிடுகிறார்கள். போர்த்துக்கால் தேசத்து மேற்றிராணிமார் எல்லாரும் ஒருமித்துச் சாட்சியிடுகிறார்கள் அல்லாமலும் இச்சம்பவங்கள் முதன்முதல் அச்சில் வெளிவந்தபோது வத்திக்கான் நகரத்துக்குப் பாப்பாண்டவரின் விக்கார்ஜெனறலாயிருக்கும் குருப்பிரசாதி, அதற்கு அதிகாரமுறையில் உத்தரவு அளித்திருக்கிறார். இப்படி அவர் உத்தரவு அளித்தது, அச்சமயம் அவர்களுக்குப் பரிசுத்தஸ்தானம், தனது அங்கீகாரத்தை வெளிப்படையாக அல்லாவிட்டாலும், குறிப்பாகவென்கிலும் கொடுத்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

பத்திமாநகரில் நிகழ்ந்த இந்தத் "தெய்வீக இரகசியம்" நிறைந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் திரட்டி யோசித்துப்பார்க்குமிடத்து இச்சம்பவங்களின் நோக்கம் அல்யுஸ்திறேல் பிரிவின் சின்ன இடையப்பிள்ளைகள் மூவரைச் சருவேசுரன் மரியாயின் தூதுவர்களாகவும் தங்கள் நாட்டின் "மீட்பர்களாகவும்" இருக்கும்படி ஆயத்தஞ்செய்வதுதான் என்று சொல்லவேண்டியிருக்கிறது. ஏனென்றால் சருவேசுரன் அப்பிள்ளைகளின் எண்ணங்கள் திருச்சபையின் மகா அவசியங்கள்மட்டில் சென்றுகொண்டிருக்கும்படி செய்தார். மகா இரக்கம் நிறைந்த கன்னிமரியநாயகி மனுக்குலத்தவர்மட்டிற் தாம் கொண்டிருந்த மனக்கவலைகளில் இச்சிறுவர்களும் பங்குபற்றும்படி செய்தார்.

பசுமையான "ஷேன்"மர நிழலில் சம்பவித்தவை

வைகாசி மாசம். மலர்களின் மாசம். இருள் செய்யும் புகார்கள் எல்லாம் ஓடிமறைந்து தெளிவான காலைப்பொழுதின் மாசம். 1917-ம் வருஷம் வைகாசி மாசம் 13-ந் திகதி பத்திமாபதியின் மலைநாடெங்கும் மகா அலங்காரத்தினுற் பிரகாசித்துக்கொண்டிருந்தது. குறித்த திகதி அவ்வருடம் ஞாயிற்றுக்கிழமையாக இருந்தது. ஆனபடியால் லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா என்ற மூவரும் பூசையால் வந்தபிற்பாடு தங்கள் மந்தைகளை ஒன்றுகூட்டினர்கள்.

களிமண் எடுக்கும் இடத்தைச் சேர்ந்தபிற்பாடு தாங்கள் எந்தப்பாதையால் ஆடுகளை மேய்ச்சல்நிலத்துக்குச் சாய்த்துக்கொண்டுபோக வேண்டுமென்று அவர்கள் தங்களுக்குள் கலந்து ஆலோசித்தார்கள். "கபேக்கோ" மலை வட்டவடிவமான சாரல் உள்ளது. அதன் உச்சியிலிருந்து பார்த்தால் மனதைக்கவரும் இயற்கைவனப்பின் அலங்காரம் காணப்படும். அந்தமலையை நோக்கித்தான் மூவரும் ஆடுகளைச் சாய்த்துக்கொண்டு போவதா? அல்லது தனது உச்சியில் காற்றினுல் அசைந்தாடும் மாத்திரிக்கும் இயந்திரம் உள்ள "மூவான்சாஸ்" குன்றைநோக்கிச் செல்வதா? அல்லது இயாசிந்தா பெரிதும் உவக்கும் வடிவானமலர்களையுடைய "வலின்ஹோஸ்" பள்ளத்தாக்கை நோக்கிச் செல்வதா? அல்லது "சந்த கத்தரினு" என்றகிராமத்தை அருகில் உடைய "இலம்படேகஸ்" என்னும் இடத்தை நாடுவதா? அல்லது "லாமொயித்ரு" கிராமத்தை நாடுவதா? இவைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு "கோவாடிஇறியா" என்ற குகையைநோக்கிச் செல்வதா? என்று பலயோசனையுள்ளவர்களாய்ப் பிள்ளைகள் தங்களுக்குட்கலந்து ஆலோசித்தார்கள். இந்த இடத்திலுள்ள பள்ளநிலம் பசுமையான "ஷேன்" மர நிழல் உள்ளது. இங்கு லூசியாவின் குடும்பத்தினருக்குச் சொந்தமான ஒரு புலமும் உண்டு. மந்தைகள் மேய்வதற்கும் பிள்ளைகள் விளையாடுவதற்கும் மிகவும் வாய்ப்பான இடம். தற்செயலாய் அல்ல, நல்ல தேவ பராமரிப்பினுல் ஏவப்பட்டு இந்தக் "கோவாடி இறியா" என்ற இடத்துக்குத்தான் போகக் கடைசியாகத் தீர்மானித்தார்கள். ஆனல், இந்த இடத்தைச் சேருவதற்குத் தாங்கள் வந்தவழியே திரும்பி அதன் ஒருபாகத்தை மீண்டும் தாண்டவேண்டியிருந்தது. எமது மூன்று சிறுவரும் நடந்துசென்ற வழி இப்பொழுது இல்லை. அவ்விடத்தில் பூமிதிருத்துவதற்காகப் பெரும்வேலைகள் நடைபெற்றபடியால் அந்தவழி இப்போது அழிந்துபோயிற்று. ஆனல் அக்காலத்தில் அது ஒரு வெறும் கட்டாந்தரைநிலம். அதில் மண்ணும் குறுணிக்கற்களும் மாத்திரம் அப்போது இருந்தன.

ஒன்றுடன் ஒன்று உரஞ்சப்படும் குறுணிக்கற்களின் மேல் ஆடுகள் தங்கள் சிற்றடிகளைவைத்து நடப்பதினுல் ஒரு வகையான மந்த ஓசை உண்டாகும். ஆனல் இந்த ஓசையானது, ஆடுகளின் கழுத்திற்தொங்கும் சிறுமணிகளால் அடிக்கடி உண்டாகும் மெல்லிய ஓசையை அமுக்கிவிடாது. ஆனல் காட்டுநிலத்தில் அங்குமிங்கும் அருமையாகக் காணப்படும் நாணற்கும்பல்களை அல்லது பற்றைகளை ஆடுகள் உழக்கிக்கொண்டு போகும்போது எல்லாம் அமைதியாக இருக்கும் காலைவேளையில் அவ்வாடுகளின் கழுத்திலிருக்கும் மணி ஓசைமாத்திரம் கேட்கும்.

எமது மூன்று சிறுவரும் ஆடுகள்போகும் வழியிலும் மேய்ந்துகொண்டு போகட்டுமென்று கருதி அவைகளை

மெல்லமெல்ல நடத்திச்செல்வார்கள். ஆனல் ஆடுகளோ வழியில் தங்களுக்குப்போதிய மேய்ச்சல் இல்லாதபடியால் வழிநீளம் சிணுங்கிக் கதறிக்கதறியே செல்லும்.

கடைசியாக "கோவாடி இறியா" என்ற இடத்தில் மத்தியானம்போல வந்துசேர்ந்தார்கள். இந்த இடம் வட்ட வடிவமான ஒரு பள்ளநிலம். அதன் குறுக்களவு 500 அடியிருக்கும். மத்தியானப்போசனம் உண்ணும்நேரமும் கிட்டிவிட்டது. பசும்புல் பூண்டுகளினல் ஆடுகளுக்கு நல்ல மேய்ச்சல் இருக்குமென்று மன அமரிக்கைகொண்ட எமது சின்னச் சிநேகிதர் மூவரும் தங்கள் போசனத்தையும் புசிக்க ஆயத்தஞ்செய்கிருர்கள். சாப்பாட்டு உமல் கெதியில் வெறுமையாயிற்று. அதன்பின்பு செபமாலை ஓதவேண்டியதைப்பற்றி லூசியா சிந்திக்கிருள். தேவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இந்த வைகாசிமாசத்திலும் செபமாலை சொல்லாதிருப்பது தகுதியா? அவ்வேளை பத்திமாவின் ஆலயமணியிலும் திருந்தாதி ஓசைகேட்கத்தொடங்கியது.

திருந்தாதி மணிச்சத்தம் கேட்டதும் ஒரு ஒலிவமரத் தருகில் புற்றரைமேல் மூவரும் முழந்தாளிட்டார்கள். இந்த ஒலிவமரம் தூரத்துக்கொன்ருக, நாட்டப்பட்டிருந்த கருவாலிமரங்களுக்கு இடையில் அந்தோனியு என்பவரால் நாட்டப்பட்டது. செபமாலைசொன்னபிற்பாடு ஆடுகளைக் குன்றின் உச்சியிலிருக்கும் புலத்துக்கு ஓட்டிவிட்டுத் தாங்கள் வீடுகள்கட்டி விளையாட அமர்ந்தார்கள். கட்டுவேலைக்கு வேண்டியபொருட்களுக்குக் குறைவில்லை. களிமண், மணுங்கட்டி, நிலத்தில்விழுந்துகிடக்கும் பட்டகொப்புகள் முதலியன ஏராளம். இவைகளைக்கொண்டு சின்னப்பிரான்சீஸ் மகா சிற்பசாஸ்திரிபோல நடித்து, வீடுகளும் பாலங்களும் மேற்றிராசன ஆயயங்களும் அமைக்கக்கூடியவனுனன். இன்றைக்கு ஒரு வீடுதான் கட்டத்தொடங்கினர்கள். லூசியாவும் இயாசிந்தாவும் கட்டுவேலைக்குரிய சாமான்களைக் கொண்டுவந்தார்கள். பிரான்சீஸ் அவைகள் எல்லாவற்றையும் ஒன்றுகூட்டினன்.

சடுதியில் "பைன்" மாத்துப் பட்டகொப்புகளின் குவியல் ஒன்றைச் சூழவா ஒருசாண் உயரத்துக்குக் காய்ந்தகல்லினல் கட்டப்பட்ட ஒரு அமைப்புச்சுவர் உயர்ந்து எழுகின்றது. இந்தச்சிறு விளையாட்டுக்கட்டிடம் இனிமேல் வாவிருக்கும் மகாசம்பவம் ஒன்றுக்குத் தீர்க்கதரிசனமேரையாகக் குறிப்பாக இருந்தது என்பதை இந்தச்சிறுவர்கள் ஊகிக்கவேயில்லை. போர்த்துக்கால்தேசம் முழுவதிலும் பத்திமா நாயகிக்குத் தங்கள் சாதீய நன்றியறிதலாக அமைக்கப்பட்ட "பசிலிக்கா" என்ற பிரமாண்டமான ஆலயம் பிரான்சீஸ் விளையாட்டு வீடுகட்டின இடத்தில்தானே கட்டப்பட்டிருக்கிறது.

அதி அலங்கார நாயகி

உச்சி மத்தியானவேளை சூரியனும் வானத்தின் மையத்தில் பிரகாசிக்கின்றது.

இருந்தாற்போலப் பெரிய ஒருமின்னல் வெளிச்சம் இடைப்பிள்ளைகளின் கண்களைப் பளீர் பளீர் என்னத் தாக்குகின்றது. பிள்ளைகள் திடுக்கிட்டுப் பயப்பிராந்திகொண்டு வானத்தின் சகல பாகங்களையும் நோக்குகிருர்கள். எங்கும் மகா தெளிவான நீலநிறம் படர்ந்திருக்கிறது. ஒருசிறு புகார் தானுமில்லை.

இதென்னதானே? என்ருன் பிரான்சீஸ்.

வைகாசி மாசத்தில் தங்கள் நாட்டிற் சிலவேளை இருந்தாற்போலச் சண்டமாருதம் வீசும் என்பதை லூசியா கேள்விப்பட்டிருக்கிருள். குன்றுகளின்பின்புறமாகச் சண்டமாருதம்வீச ஆயத்தமாகிறதுபோலும் என்று அவள் நினைத்துத் தனது சின்னக்குரலில் அதிகாரத்துடன் "நாங்கள் போவோம் வாருங்கள்." ஒருவேளை பெரும்புசல் வீசப் போகிறதாக்கும்" என்ருள். இவர்களுள், ஆகப்பயம்மிஞ்சியவளும் ஆகச்சிறியவளுமான இயாசிந்தாவும் "ஆம் புறப்படுவோம்" என்ருள். பரபரவென்று ஆடுகளை ஒருங்குசேர்த்து மலைஇறக்கத்தின் வலதுபுறமாகச்சென்ருர்கள்.

ஏறக்குறைய நடுப்பாகத்தில் ஒரு பசுமையான "ஷேன்" மரத்தின் முன்பாக அவர்கள் போகும்பொழுது இன்னும் ஒரு புதியமின்னல் முந்தியதிலும் பார்க்கக் கூடுதலாய்க் கண்களைக் கூசச்செய்யும் தன்மையாய் ஆகாசத்தை ஊடறுத்துச்சென்றது. முன்னிலும் அதிகம் திடுக்காட்டத்துடன் அவர்கள் விரைவாக நடந்துசெல்லுகிறார்கள்.

பள்ளத்தின்நடுவிற் பிள்ளைகள்வந்ததும் திகைத்து ஆச்சரியப்பட்டு முன்செல்லாது நின்றுவிட்டார்கள். அவர்களுக்குமுன்னே இருகவடுதூரத்தில் ஏறக்குறைய மூன்றடி மூன்றங்குல உயரமுள்ளதும் நன்றாய் மதாளித்ததுமான ஒருசிறு "ஷேன்" மரத்தின்மேல் சூரியப்பிரகாசத்தினும் மேலான பிரகாசமுள்ளவளும், பிரகாசத்தினால் முற்றாய்ச் சூழப்பட்டவளுமான, அதி அலங்கார நாயகி ஒருத்தியைப் பிள்ளைகள் கண்டார்கள். லூசியா சொல்லியிருக்கிறபடி அந்த "நாயகி" மகா ம்துரிதம்புனைந்த சயிக்கினைகாண்பித்து பிள்ளைகளைத் தம்மிடம் அழைத்து அணைகடந்த உருக்கம் நிறைந்த குரலொலியில் "பிள்ளைகளே, நீங்கள் பயப்பட வேண்டாம். நான் உங்களுக்கு ஒரு தீங்கும் செய்யேன்" என்றார். சிறிது அச்சகூச்சத்துடன், அந்த அம்மாள் பாதம் ஊன்றிநிற்கும் மரத்தண்டைசென்று அவளைக் கூறுகுறிப்பாக உற்றுநோக்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்தக்காட்சியின் மகத்தான அலங்காரத்தை விபரிக்க வேண்டுமென்றால் சம்மனசுகளின்பாஷை பேசவேண்டுமென்று அச்சிறுபிள்ளைகள் சொன்னார்கள். எமது மூன்று இடையச்சிறுவர்களும் அக்காட்சியைத் தங்களால் இயன்ற அளவு விபரிக்கிறார்கள். அவர்கள் சொன்னவற்றைக்கேட்ட சித்திரவிற்பன்னர் அக்காட்சியைச் சித்திரத்தில் அமைக்கவும் பிரயாசப்பட்டிருக்கிறார்கள். ஆனாற் காட்சியிற்கண்ட நாயகியின், வருணனைக்கெட்டாத அலங்காரத்தை, அவர்கள் சித்திரிப்பதற்குச் சூரியப்பிரபைகளை அன்றோ சித்திரக் கோலாக உபயோகிக்கவேண்டுப். அந்த நாயகி ஏறக்குறையப் பதினெட்டு வயசுள்ளவர்போலத் தோன்றினார். அந்த நாயகியின் சாயல் பிள்ளைகள் இதுவரையில் பார்த்திருந்த

நாயகியின் சாயல் பிள்ளைகள் இதுவரையிற் பார்த்திருந்த தேவமாதாவின் சுரூபங்களுக்கோ அர்ச்சியசிஷ்டவர்களின் சுரூபங்களுக்கோ ஒத்தசாயலாக இருக்கவில்லை.

காட்சியிற்காணப்பட்ட நாயகியின் முகமானது மகா தூய்மையுள்ளதாய் அணைகடந்த புனிதம் உள்ளதாய் இருந்தது. சூரியப்பிரபைபோன்ற பிரகாசத்தின்மத்தியில் அவள் வதனம் இலங்கிக்கொண்டிருந்தது. அந்த நாயகியின் உதடுகளில் மிகவும் அன்புததும்பும் புன்னகைபூத்தது. ஆனால் அந்தப் புன்னகையானது வியாகுலநிழலினால் சிறிது மங்குளமடைந்திருந்தது. அவளுடைய கைகளிரண்டும் மார்புமட்டாய் உயர்த்தப்பட்டுக் கும்பிட்டபாவனைகாட்டியது. அவளுடைய வலதுகரத்தில் மகா இலட்சணமுள்ள செபமாலை ஒன்று தொங்கியது. செபமாலைமணிகள் விலைமதிக்கரிய மாணிக்கங்கள்போலப் பிரபைவீசிக்கொண்டிருந்தன. பனிக்கட்டிபோலும் தூயவெண்ணிறமுடைய அவவுடைய அங்கியானது பாதம்வரையும் நீண்டிருந்தது. அந்த அங்கி பொன்னிறநாடாவாற் கழுத்திற்கோத்துக் கட்டியிருந்தது. அந்தநாடாவின் தலைப்பு இடைமட்டும் நீண்டிருந்தது. பாதங்கள் பாதரட்சையில்லாது வெறுமையாயிருந்தன. அவற்றை அவர் பச்சைக்கிளைகளில் மலரும் புஷ்பமெத்தையில் வில்லூர்த்திப்பட்டு நிகர்த்த வெண்முகில்மீது மென்மையாக ஊன்றிநின்றார்.

பின்னையகாலங்களில் தேவமாதாவின் திருமுகம் காட்சிவேளையில் எவ்வாறு இருந்ததென்று எவராவது லூசியாவைக் கேட்டால் "**வெளிச்சம் வெளிச்சம்**" என்ற ஒரே சொல்லையல்லாது வேறொன்றும் சொல்லமுடியாதவளானாள். பத்திமாநாயகி காட்சியளித்த உருவத்தைக்காண்பிக்கும்படி செய்துவைக்கப்பட்ட சுரூபம் ஒருவருக்கும் திருப்தியாயில்லை. இருபத்தைந்து வருடங்களின்பின்பு இவ்விஷயமாக இலெயிறா மேற்றிராணியாண்டவரவர்கள் லூசியாவுடன் சம்பாஷித்தபொழுது அவள் அவருக்குச்சொன்னதாவது: "காட்சியிற்கண்ட நாயகியின் உருவத்தைச் சித்திரித்துக்

காட்டுதல் முடியவேமுடியாத காரியம். மானிட வாக்கினாலும் அதை விபரித்தல் இயலாக்கருமம். ஆனால் நான் சித்திரம்வரைய அறிவேன்என்றால் தேவதாயாருக்கு எவ்வகையான எடுபாடுமில்லாத சாதாவான ஒரு அங்கியை அதுவும் இனிமேல் இல்லையென்ற தூய வெண்ணிற அங்கியை அவர் அணிந்திருந்த மேரையாகத்தான் சித்திரிப்பேன். அவ அணிந்திருந்த முட்டாக்கு உச்சந்தலையிலிருந்து அவருடைய அங்கியின் கீழ்ப்பாகம்மட்டாக நீண்டிருக்கச் செய்வேன். அத்திருத்தாயாரைச் சிறப்பித்துக்கொண்டிருந்த வெளிச்சத்தையும், அழகு சவுந்தரியத்தையும் நான் சித்திரிக்க அறியேன். ஆதலால் வேறு எவ்வகையான வீண் பகட்டான வெளிச்சோடிப்புகள் எல்லாவற்றையும் முற்றாக நீக்கிவிடுவேன். அவருடைய முட்டாக்கின் அருகுநீளம் சின்னஞ்சிறிய பொற்சருகை ரேகையொன்று மாத்திரம் அமைத்துவிடுவேன். மாதாவிடம் விளங்கிய இந்த அலங்காரம் மற்றவைகள் எல்லாவற்றிலும் பார்க்க அவரைச் சூழவிருந்த வெளிச்சத்தில் சூரியனின் ஒரு பிரபைக்கதிர் போலத் துலங்கிக்கொண்டிருந்தது. என்னுடைய இந்த ஒப்பனை உள்ளபடி காரியத்தை விளக்கவேயில்லை. ஆனால் நான் வேறு எப்படி விளக்கிக்காட்டக்கூடும் என அறியேன்."

விநோதமான சல்லாபம்

காட்சியிற்தோன்றின நாயகி பிள்ளைகளை உற்றுநோக்குகிறார். அந்த நாயகி தேவமாதாவாய்த்தான் இருக்க வேண்டுமென்று பயபத்தியிற்சிறந்த லூசியா ஏதோ மங்குளமான விதமாய் ஆவது ஊகித்துக்கொள்ளுகிறாள். ஊகித்தாலும் அப்படி அவள் விசுவசிக்கத் துணியவில்லை.

தேவதாயார் எனக்குக் காட்சிகொடுக்க நானார்? என்பதுதான் அவளுக்குச் சந்தேகத்தை உண்டுபண்ணியது. அதன்பின்பு லூசியா தனது வழக்கத்துக்கு மாறான தைரியம் கொண்டவளாய்க் காட்சிகொடுத்த நாயகியை நோக்கி:



"அம்மா! நீங்கள் எந்த ஊர்?" என்றாள். அக்கேள்வியுடன் காட்சிநாயகிக்கும் லூசியாவுக்குமிடையில் சம்பாஷணை தொடங்கியது.

"நான் மோட்சத்தில் இருக்கிறவள்."

இங்கே என்னசெய்ய வந்திருக்கிறீர்கள்?

"நீங்கள் தொடர்பாய் ஆறுமாசத்துக்கு ஒவ்வொரு மாசத்தின் 13-ந் திகதியில் இந்தநேரத்தில் இந்த இடத்துக்கு வரும்படி உங்களைக் கேட்கவந்திருக்கிறேன். ஐப்பசி மாதம் 13-ந் திகதி நான் யாரென்றும், உங்களிடமிருந்து நான் விரும்புவது என்னவென்றும் உங்களுக்கு அறிவிப்பேன்."

நீங்கள் மோட்சத்திலிருந்து வருகிறீர்களா? நானும் அங்கே போவேனோ?

"ஆம், நீ அங்கு வந்து சேருவாய்"

இயாசிந்தாவும் அங்கு வருவாளோ?

"ஆம், அவளும் வருவாள்"

பிரான்சீஸ்? காட்சிகொடுத்த பிரகாசநாயகி பிரான்சீசை மகா அன்பும் தாய்க்குரிய உருக்கமுமுள்ள கருணையான நோக்குடன் பார்த்துவிட்டு: "ஆம் அவனும் மோட்சத்துக்கு வருவான். ஆனால் அதற்குமுந்தி அவன் பெருந்தொகையான செபமாலைகள் சொல்லிமுடிக்கவேணும்" என்று காட்சிநாயகி விடை அளித்தார். ஆ! பாக்கியசாலிகளான பிள்ளைகளே! "மோட்சம்" என்ற ஒரு சொல்லுத்தானே, நித்திய சீவியத்துக்கென்று தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் வாசஸ்தானத்தை, உங்கள் எண்ணங்களும் ஆசைகளும் நாடும்படி செய்துவிட்டதே.

பரவசத்தவர்களான மூன்று இடைப்பிள்ளைகளுக்கும், பரம இரகசியத்துக்கு இலக்கான அந்தக் காட்சிநாயகிக்கும் இடையில், சம்பாஷணை தொடர்ந்து நடைபெறுகின்றது. இந்தச் சம்பாஷணையில் பேசப்பட்டவைகளில் பிள்ளைகள் ஒரு சொல்லைத்தானும் மறக்கவில்லை. ஆனால் பேசப்பட்டவைகள் எல்லாவற்றையும் ஒருவரும் அறியமாட்டார்கள். ஏனென்றால் மூன்று பிள்ளைகளும் ஒருவருடன் ஒருவர் பொருத்தனை செய்துகொண்டபடி சிலவிஷயங்களை வெளிப்-

படுத்தல் வீண்புகழ்ச்சியாகும் அல்லது விவேகத்துக்கு மாறாயும் இருக்கும் என்றபடியால் அவற்றை அவர்கள் வெளியிடவில்லை.

தங்களுடைய விசாரணைப்பங்கிலிருந்து இறந்துபோன இரண்டு சிறுமிகளுடைய ஆன்ம இரட்சணியத்தைப்பற்றித் தேவமாதா தங்கள் மனசுக்கு அமரிக்கை உண்டுபண்ணி இருக்கிறா என்று இந்த மூன்று பிள்ளைகளும் சொல்லியிருக்கிறார்கள். ஒருபிள்ளை ஏலவே மோட்சம் போய்விட்டதென்றும், மற்றப்பிள்ளை உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கிறதென்றும் தேவமாதா இவர்களுக்கு அறிவிக்கலானார்.

இந்தநாளுக்குப்பிறகு பிள்ளைகளுடைய போக்குவாக்கு மனோநிலையில் பெற்றாருக்கும் அவர்களிடம் பலகேள்விகளைக் கேட்ட நூதனப்பிரியருக்கும் பலவிஷயங்கள் விளங்கிக்கொள்ளமுடியாதவையாய் இருந்திருக்கலாம். இதற்கு நியாயம் பிள்ளைகளுக்கு விரைவில் தேவமாதா ஒப்படைப்பதாக வாக்குப்பண்ணியிருந்ததும் மகா பிரமாணிக்கமாக அவர்கள் பாதுகாக்கவேண்டியிருந்ததுமான ஒரு காத்திரம்மிக்க இரகசியமாகும். முதலாம் காட்சியின்போதுதானே தாங்கள் அந்த இரகசியத்தைப் பாதுகாப்பதாகக் காட்சிநாயகிக்குப் பிள்ளைகள் வாக்குப்பண்ணியிருந்தார்கள்.

சம்மனசுகளின் காட்சியை லூசியா வெளியிட உத்தரவு பெற்றிருந்ததுபோல் இந்த இரகசியத்தையும் வெளியிட அவள் உத்தரவுபெற்றிருந்தாள். ஆனாற் புத்தியோசனையாயும் விவேகமாயும் நடந்துகொள்ளும்படியாக அவள் இன்னும் மௌனம் காப்பாற்றத்தீர்மானித்திருந்தாள்.

இலெயிறா மேற்றிராசனத்து விசுப்பாண்டவர் அவர்கள் லூசியா தனது ஞாபகங்களை எழுதிக்கொடுக்கும்படி கேட்டபடியினால் அவருடைய கட்டளைக்கு அமைந்து அவள் மூன்றுவருஷங்களின்முன் சில இரகசியங்களை வெளியிட்டிருக்கிறாள். லூசியா அவற்றைவெளியிட ஏலவே உத்தரவு பெற்றிருந்தும் சுயாதீனமாக இரகசியத்தைக் காப்பாற்றியிருந்தாள். இப்போது வெளியிட்டிருக்கிறாள். இந்த

வெளிப்படுத்தலில், காட்சிகண்ட மூவரினதும் சீவியவரலாற்றில், மனசைக்கவரக்கூடிய பற்பல விபரங்கள் காணக்கிடக்கின்றன. அவைகள் அப்பிள்ளைகளைப்பற்றி எவராவது எதிர்பாராத மனப்பதிவுகளை உண்டாக்கக்கூடியவை. லூசியா வெளியிட்டவைகளுடன் பின்வரும்சம்பவங்கள் காணப்படுகின்றன.

தேவமாதா பிள்ளைகளைநோக்கி: “**சருவேசுரனுடைய மகத்துவத்துக்குத் துரோகமாகக் கட்டிக்கொள்ளப்படும் பாவங்களுக்குப் பரிகாரமாக நீங்கள் பரித்தியாகக் கிரிகைகளைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க விரும்புகிறீர்களா? அவர் உங்களுக்கு அனுப்பவிரும்புகிற துன்பதுரிதங்கள் பீடைவருத்தங்களைப் பூரண மனச்சம்மதத்துடன் ஏற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா? பாவிகள் மனந்திரும்பும்படியாகவும், தேவதூஷணங்களுக்கு நிந்தைப்பரிகாரமாகவும், மரியாயின் மாசில்லாத இருதயத்துக்குச் செய்யப்படும் அவமானங்களுக்குப் பரிகாரமாகவும் நீங்கள் பாடுபட விரும்புகிறீர்களா?**” என்று கேட்டார்.

தேவமாதா அந்தப்பிள்ளைகளை இப்படிக்கேட்டபடியினால் இவர்கள் இந்த மகாவீரத்துவம் பொருந்திய கிரிகைகளைச் செய்வதற்குத் தக்கவர்கள் என்பதை நன்கு அறிந்திருந்தார் அல்லவா? இல்லாவிட்டால், ஞானத்துக்கு இருப்பிடமாகிய அந்தப் பரமநாயகி அப்படிப்பட்டகேள்வியை ஒருபோதுமே கேட்டிருக்கமாட்டார். உள்ளபடி லூசியாவும் தங்கள் மூவருடையவும் நாமத்தினால் ஆச்சரியமுள்ள ஆர்வத்துடன் “ஆம். நாங்கள் விரும்புகிறோம்” என்றாள்.

ஒரு தாய்க்குரிய மனப்பிரீதியுடன் கூடிய சயிக்கினையும் புன்னகையுங்காட்டி, காட்சி அருளிய அலங்காரநாயகி: “இனிமேல் நீங்கள் மகா துன்பவருத்தங்களை அனுபவிக்கப் போகிறீர்கள். ஆனால் தைரியமாயிருங்கள். தேவவரப்பிரசாதம் உங்களுக்குத் துணைசெய்யும். நீங்களும் பாடுகளைத் தாங்கிக்கொள்ளுவீர்கள்” என்றார்.

2980.

காட்சிநாயகி இப்படிச்சொல்லுகையில் இதுவரையும் கும்பிட்டபடியிருந்த தமதுகரங்களை விரித்தார். விரிக்கவும் அவருடைய கரங்களிலிருந்து ஒரு மகாவினோதமான பிரகாசக்கதிர்த்திரட்சி காட்சிபெற்றவர்கள்மீது பாய்ந்தது. அது மிகவும் வேகமும் உள்ளத்தைநெருங்கிய தன்மையாகத் தாக்குவதுமாயிருந்தது. லூசியா சொல்லியிருக்கிறபடி அந்தக்கதிர்த்திரட்சி அவர்களுடைய ஆத்துமத்தின் அடித்தளம்மட்டாய்ச் சென்றது. அதனால் ஒருகண்ணாடியிற் தங்கள் உருவத்தை எவ்வளவு தெளிவாகக் காணக்கூடுமோ அவ்வளவு தெளிவாக அப்பிள்ளைகள் தேவனிற் தங்களைக் கண்டார்கள்.

அதன்பின்பு அவர்கள் அறியாத ஒருவல்லமையினால் தூண்டப்பட்டு மூன்றுபேரும் குப்புறவீழ்ந்து: “மகாபரிசுத்த திரித்துவமே, நான் உம்மை ஆராதிக்கிறேன்” என்ற செபத்தைத் தங்களால் இயன்ற வல்லமையுடன் சொன்னார்கள். சிலநிமிஷங்கள் சென்றபின் காட்சிநாயகி: “ஒவ்வொரு நாளும் உலகசமாதானத்திற்காகப் பயபக்தியாகச் செபமாலை சொல்லும்படியாக அவர்களுக்கு நன்மதிகூறினார்.” அதன்பின்பு காட்சிநாயகி மறையத்தொடங்கினார். அவர் தமது பாதங்களை அசைத்து நடக்கவில்லை. ஆனால் கிழக்குத் திசையைநோக்கி வழுக்கிக்கொண்டுபோனதுபோற் சென்றார். அத்துடன் ஒருபோதும் மறக்கமுடியாத அந்தக்காட்சி மறைந்தது. சாதாரண பகற்காலத்து வெளிச்சமும் அதன்பின் உண்டானது.

பரவசத்தின்பின்பு நிகழ்ந்தவை

காட்சிமுடிந்து பரவசம்நீங்கி மூன்றுபிள்ளைகளும் தம்வசத்தவர்களானபின்பு ஆச்சரியம் மேலிட்டவர்களாய் ஒருவகையிற் துக்கம் உள்ளவர்களாய் என்னசொல்லுவமென்று தெரியாது ஒருவர் ஒருவரைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்களைச்சூழ இருந்தமரங்களும் குன்றுகளும் அந்தப்படியே இருந்தன. சூரியன் நெருப்புப்போல் எரிந்துகொண்டிருந்தது. தனிமையான அந்தமலைநாட்டில் எல்லாம் அமைதியாக இருந்தது. ஆடுகளும் கருவாலிமரங்களின் நிழலில்வளரும் சுகந்தபூண்டுகளை விட்டுவிட்டு அங்கும் இங்கும் கலைந்துபோய்விட்டன. நல்ல இரைதேடிக்கொண்டிருந்த ஆடுகள் அடுத்தகாணியில் வளர்ந்திருந்த உழுந்துப்பயிருக்குள் புகுந்துவிட்டன.

இதைக்கண்ட பிள்ளைகள் அவைகளை வெளியேகலைத்துவிட ஓடிப்போனார்கள். ஐயையோ! எவ்வளவு சங்கடத்துக்குட்படப்போகிறோம். ஆடுகள் மேய்ந்தபயிர் அன்னிய குடும்பம் ஒன்றிற்குச் சொந்தமாயிற்றே. அவர்களுக்கு நஷ்டப்பரிகாரம் கொடுக்கவேண்டுமே என்று பிள்ளைகள் மிகவும் கவலைப்பட்டார்கள். இந்தச்சம்பவத்தைச் சொல்லியிருக்கும் லூசியா: "நல்லதிஷ்டமாய், ஆடுகள் பயிரை மேய்ந்த அடையாளம் ஒன்றுமே காணப்படவில்லை" என்று சொல்லியிருக்கிறாள். இதில் ஒரு அற்புதம் உண்டு என்பதைப்பற்றி அவள் சந்தேகப்படவேயில்லை.

காட்சியின்போது அவ்வளவாகப் பரவசத்துக்குள்ளாகாத பிரான்சீஸ் ஆடுகள் கலைந்துபோனதைக் கவனித்தான். ஓடிப்போய் அவைகளைத் தூரவிட விரும்பினான். ஆனாற் காட்சிநாயகி லூசியாவைநோக்கி: "பிரான்சீஸ் சும்மா இருக்கும்படி அவனுக்குச்சொல்லு. ஆடுகள் ஒரு கெடுதியும் செய்யமாட்டா" என்றார். ஆடுகள் எல்லாவற்றையும் ஒன்றுகூட்டியபின் பிள்ளைகள் மூவரும் தங்கள் மனப்பதிவுகளைப்பற்றி ஒருவர் ஒருவருடைய அபிப்பிராயங்களை உசாவக்கூடியவர்களாயினர். காட்சிநாயகி லூசியாவுடன் மாத்திரம் பேசினார். கேள்விகளும் மறுமொழிகளும் இயாசிந்தாவுக்கு விளங்கின. பிரான்சீஸ் லூசியாவின் குரல் ஒலியைத் தெளிவாகக்கேட்டான். காட்சிநாயகியும் பேசினார் என்பதை அவன் அறிந்தான். காட்சிநாயகிக்கும் லூசியாவுக்கும் இடையில் நடந்தசம்பாஷணை பத்துநிமிஷத்துக்கு,

அதாவது ஒரு செபமாலைசொல்லும் நேரத்திற்குமாத்திரம் நீடித்தது.

இவைகளைப்பற்றி முடிவுகட்டியபின் மூன்றுபேரும் மீண்டும் மௌனமானார்கள். அதன்மேல் ஒருவரும் விளையாட நினைக்கவில்லை. பிரான்சீஸ் கட்டுவதற்குக் கனவுகண்டுகொண்டிருந்த வீடுகள் எல்லாம் வெறும் கற்குவியலாயின. அவர்களுடைய ஆத்துமத்தின் மகா ஆழ்ந்த சமாதானமும் மனப்பாக்கியமும் அவர்களுக்குப் போதியன ஆயின.

காட்சியில் நிகழ்ந்தவற்றினால் பிரமிப்பு அடைந்து ஊமைகள்போலாகி, ஒருவரோடொருவர் பேசுவதற்குத்தானும் அவர்கள் நினைக்கவில்லை. தாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் உருசிகரித்து இன்பசாகரத்தில் மூழ்கிப்போயிருந்தார்கள். ஆனால் **"ஆ! எவ்வளவு அலங்காரமான நாயகி; எவ்வளவு ரூபலாவர்ணியமுள்ள அம்மணி"** என்று மாத்திரம் இடையிடையே இயாசிந்தா கூச்சலிடுவதைமாத்திரம் கேட்டார்கள். அவள் தனதுகைகளை உயர்த்திக் கும்பிட்டுக் காட்சிநாயகியை மன்றாடுவது போலவும் பாவனை காட்டுவாள்.

தாங்கள் கண்ட மகாவியப்புக்குரிய காரியங்களைப் பற்றிப் பேசுவதற்கு லூசியாவும் பிரான்சீசும் விரும்பினார்கள். ஆனாற் சின்னஞ்சிறிய இயாசிந்தா காட்சியினாற் தன் இருதயமும் மனோகற்பனையும் நிரம்பித் தேங்கியவளாய்: "ஆ! என்ன அலங்காரமான நாயகி; எவ்வளவு ரூபலாவர்ணிய நாயகி" என்று சொல்லிச் சொல்லி அவர்களைக் குழப்பிவிடுவாள்.

நெடுநாளாக மூவரும் சூரியன் காலிக்கும் பக்கத்தை நோக்கிக் காட்சிநாயகி மறைந்து போனபாதை நீலமேகத்திற் பதிந்திருக்கிறதோ என்று தேடிப்பார்ப்பார்கள். ஆனால் இயாசிந்தா: "என்ன அலங்காரமான நாயகி" என்று மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டேயிருப்பாள்.

ஆழ்ந்தமௌனம்

ஒருநாட் பின்னேரம் லூசியா ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கையில் தாங்கள் கண்டகாட்சியைத் தொடர்ந்து என்ன சம்பவிக்கப்போகிறதோ என்று யோசித்துக் கொண்டிருந்தாள். தேவமாதா அருளியகாட்சியிலே முற்றும் மூழ்கிப்போயிருந்தபடியால் தான்தனது பெற்றோருக்கு என்ன சொல்லவேண்டும் என்று தேவமாதாவைக் கேட்க அவ்வேளை முற்றாய் மறந்துபோனாள். காட்சிநாயகியும் அதைப்பற்றி ஒன்றும் பேசவில்லை.

இயல்பிலே புத்தியோசனையும் சமயோசித நல்லறிவும் உள்ளவளாகிய லூசியா மௌனசாதனை செய்வதே நல்லது என்று தீர்மானித்தாள். காட்சிநாயகி வேறும் காட்சி அருளுவதாக வாக்குப்பண்ணியிருப்பதால், அதுவரைக்கும் ஆகிலும் ஒன்றும்பேசாதிருக்கத் தீர்மானித்தாள். தனது மைத்துனனுக்கும் அவன் சகோதரிக்கும் அதேவித கட்டளை கொடுத்தாள். "உங்களுக்கு விளங்குதா? ஒருவருக்கும் ஒன்றும்பேசப்படாது." பிரான்சீஸ் யாதொரு தடையுமில்லாமற் சம்மதித்துக்கொண்டான்.

அறிந்துகொள்ளுங்கள். ஒருவருக்கும், ஒருவருக்குமே, பேசப்படாது. ஆடுகளைச்சாய்த்துக்கொண்டு வீடுசெல்லும் நேரமும் வந்துவிட்டது. அவைகளை ஒன்றுகூட்டிப் பத்திமாவுக்குப் போகும்வழிக்குக் கொண்டுவந்தார்கள். ஆனாற் கிராமத்தைச்சேருமுன் அவர்கள் "அல்யுஸ்திறெஸ்" என்னும் இடம்செல்லும் தப்பானபாதையாற் போனார்கள்.

எங்கும் மைமலாகின்றது. பத்திமா ஆலயத்து மணி திருந்தாதி அடிக்கின்றது. இரண்டு மந்தைகளினதும் மெல்லிய அடிச்சத்தமும் அவைகள் கழுத்திற்தொங்கிய மணிகளின் கம்மலான ஓசையும் இரண்டுபட்டிகளையும் சேர்ந்தவுடன் தணியப்போகின்றன. தனது மைத்துனியின் வீட்டுக்கருகால் போகும்போழுது லூசியா தனது மாமனும் மாமியாரும் தன்னைக் காணவில்லை என்று நிச்சயப்படுத்திக்

உங்களுக்கு விளங்குதா?
ஒருவருக்குமே ஒன்றும்சொல்லப்படாது

கொண்டு, பிள்ளைகளை நோக்கிக் காத்திரம்மிக்க குரலுடனும் அக்குரலுக்கு இசைந்த சயிக்கினையுடனும் "**மௌனம். விளங்குதா? மௌனம்**" என்றாள். அன்று இரவு மீண்டும் பிள்ளைகள் ஒருவர் ஒருவரைச் சந்தித்தார்கள். இயாசிந்தா தனது அக்களிப்பைச் சகிக்க இயலாது "அந்தக் காட்சிநாயகி ஆ! எவ்வளவு அலங்கார நாயகி" என்றாள்.

"பார்த்தாயா! பார்த்தாயா! நீ ஆரோ ஒருவருக்கு எல்லாவற்றையும் சொல்லியே தீருவாய்" என்றாள் லூசியா.

இல்லை, இல்லை. "நீ பதகளியாதே. நான் ஒன்றுஞ் சொல்லமாட்டேன்" என்றாள் இயாசிந்தா.

எப்படியோ காரியம் வெளியாகித்தான்விட்டது

லூசியாவின் வீட்டில் எல்லாரும் ஒருமிக்க இராப் போசனம் அருந்தி அதன்பின் இராச்செபம் சொன்னார்கள். லூசியாவின் தகப்பன் சமீபத்திலுள்ள மதுக்கடைக்குச் சென்று தன்னுடைய சிநேகிதனுடன் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தார். மரியறோசா தன்பிள்ளைகளுக்குப் பழைய ஏற்பாட்டிலிருந்து இரண்டொருபக்கம் வாசித்தபின்பு எல்லாரும் நித்திரைக்குப்போனார்கள்.

இயாசிந்தாவின் தகப்பனும் தாயும் நாள்முழுவதும் வீட்டில் இருக்கவில்லை. அவர்கள் வருமட்டும் இயாசிந்தா

சுடுசாம்பலில் நின்றவள்போல விறுவிறுத்துக்கொண்டே இருந்தாள். தனது மன அருட்சியையும் மனப்பாக்கியத்தையும் இயாசிந்தா தன்தாய்க்கு எப்படி மறைப்பாள்.

தான் வழக்கமாக என்னதான் செய்தாலும் எப்போதும் ஒழிப்புமறைப்பில்லாது எல்லாவற்றையும் ஆச்சிக்குச் சொல்லிவிடும் இயாசிந்தா அல்லவா? அன்று பின்னேரம் ஒலிம்பியா எப்போவருவாளென்று வழிபார்த்துக்கொண்டிருந்த இயாசிந்தா தாய் வருவதைக்கண்டதும் அவளை எதிர்கொண்டு ஓடிப்போனாள். ஓடிப்போய்த் தாயின் முகத்தைக் கட்டித்தழுவி:

"ஆச்சி, எனது சின்னஞ்சிறிய ஆச்சி, கோவாடி இறியாவில் இன்று நான் தேவமாதாவைக் கண்டேனணை ஆச்சி."

என் யேசுவே! நீ என்ன சொல்லுகிறாய்? உனக்கு விசரா?

"நான் சொல்வது உண்மையெணை ஆச்சி."

"அதைமாத்திரம் ஒருபோதும் நம்பமாட்டேன்." தேவமாதா தம்மை உனக்குக்காண்பிக்க நீ என்ன ஒரு அர்ச்சியசிஷ்டவளா?

ஆம் ஆம், நான் அவவைக்கண்டேன். லூசியாவும் பிரான்சீசும்கூடக் கண்டார்கள்.

"அடிசிறுக்கி, சின்னஞ்சிறிய சிறுக்கி, நீ ஒரு மடைச்சி." இயாசிந்தா இதைக்கேட்டு வெகுவாய் விசனப்பட்டு: "ஆச்சி நான் சொல்வதை நம்பெணை ஆச்சி" என்றாள். வீட்டுக்குவந்தபின் அவள் மீண்டும் தாய் அருகிற்போய்: "ஆச்சி, நாங்கள் ஒவ்வொருநாளும் செபமாலை சொல்லவேண்டும். அந்தக் காட்சிநாயகி அப்படித்தான் கட்டளையிட்டார். கடைசியாக இயாசிந்தாவின் தகப்பனும் வீடுவந்துசேர்ந்தார். எல்லாரும் சாப்பாட்டுமேசையில் உட்கார்ந்தார்கள். இவர்களுடன் மனுவல் பேதுரு (இயாசிந்தாவின் தகப்பன்) வுடைய மச்சான் ஒருவனும் அவனுடைய மக்களில் ஒருவனும் வந்தார்கள்.

இவர்கள் சகலருக்கும்முன்பாக இயாசிந்தா தாங்கள் காட்சியிற்கண்ட சகலத்தையும் ஒன்றும்விடாமல் சகல விபரங்களுடன் சொன்னாள். இயாசிந்தா சொன்னவை எல்லாம் உண்மை என்று பிரான்சீஸ் சாட்சியிட்டான். ஆனால் தான்கொடுத்த வார்த்தையை மீறப்படாதென்று, தானாகவொன்றும் சொல்லவில்லை.

அடுத்தநாட்காலை ஒலிம்பியா மரியறோசாவிடம்போய்ச் சம்பவங்கள் எல்லாவற்றையும் சொன்னாள். விரைவில் இதன் சத்தம் அண்டை அயலிற்பரவிக் கிராமம்முழுவதிலுமே சம்பவம் தெரியவரலாயிற்று. இதற்கிடையிற் பிரான்சீஸ் ஓடிப்போய் இயாசிந்தாவின் மதியீனமானசெயலை லூசியாவிற்குச் சொல்லிப்போட்டான். லூசியாவும் பிரான்சீசும் இயாசிந்தாவைச் சந்தித்தபொழுது லூசியா அவளை மிகவும் கடிந்து நீ ஒன்றும் பேசாதிருக்கும்படி நான் உன்னைக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டேனே. இதனால் நாங்கள் எவ்வளவு அரிகண்டத்திற்கு உள்ளாகப்போகிறோம் என்பதை இருந்து பார். அவை எல்லாவற்றிற்கும் நீயே குற்றவாளி.

அப்போது அந்தச்சிறுமி மாராளவு கண்ணீர்சொரிந்து தனது நெஞ்சைத் தொட்டுக்காட்டி: "இங்கே ஏதோ இருந்துகொண்டு நான் மௌனமாக இருக்கவிடாது என்னை அரிகண்டப் படுத்திக்கொண்டிருந்தது" என்றாள்.

"நீ அழாதே. விசேஷமாகக் காட்சிநாயகி எங்களுக்குச் சொன்னதை ஒருவருக்கும் சொல்லாதே. "நான் எல்லாவற்றையும் சொல்லிப்போட்டேனே." "நீ என்ன சொன்னாய்." "இந்தக் காட்சிநாயகி எங்கள் மூவரையும் மோட்சத்துக்குக் கூட்டிப்போக வாக்குப்பண்ணியிருக்கிறார்" என்று சொன்னேன்.

அப்பப்பா உனக்கு அவ்வளவு அவதியா?

என்பிழையைப் பொறுத்துக்கொள். நான் இனிமேல் ஒருவருக்கும் ஒன்றும் சொல்லமாட்டேன்.

லூசியா தன்வீட்டில் பூரணமௌனமாயிருந்தாள். அவளும் காட்சியைப்பற்றி ஒன்றுமே பேசவில்லை. வேறு பேரும் அவளை அதைப்பற்றி ஒன்றும் கேட்கவுமில்லை. இரு

பக்கத்திலும் ஒருவர் ஒருவருடைய போக்குவாக்குகளை அந்தரங்கமாக அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

சிலநாட்களின்பின் மரியரேசா ஆடுகளின் கம்பளி மயிரைக் கத்தரிக்கும் வேலையில் லூசியா தனக்கு உதவி செய்யும்படி கேட்டாள். இந்தவேலை வீட்டின் பதிவான சார் ஒன்றில் நடந்தது.

வெள்ளைக் கம்பளிமயிர்களும் கபிலநிறக் கம்பளிமயிர்களும் கத்தரிக்கோல்களின் வெட்டினால் நறுநறு என்று கீழே விழுந்துகொண்டிருந்தன. அன்றைக்கு வெப்பமும் தாங்கரிது. அதுபோலவே தாயும் மகளும் ஒன்றும்பேசாமலிருந்ததும் தாங்கரிதாயிற்று.

லூசியா, நீ கோவாடி இறியாவில் தேவமாதாவைக் காட்சிகண்டாயாம்? அப்படித்தான் நான் கேள்விப்படுகிறேன்.

உங்களுக்கு இதைச் சொன்னது ஆர்?

உனது மாமியார் ஒலிம்பியாதான் எனக்குச் சொன்னாள். இயாசிந்தா தனக்குச் சொன்னாளாம். இது மெய்தானா?

தேவமாதாவை நான்கண்டேன் என்று ஒருபோதும் சொல்லவில்லை. ஆனால் ஓர் அலங்காரமான நாயகியைத்தான் கண்டேன். பிரான்சீசும் இயாசிந்தாவும் இதைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் பேசப்படாதென்றும் அவர்களைக் கேட்டேன்.

ஒரு அலங்கார நாயகியா?

ஆம் ஆச்சி.

நல்லதும் அந்த அலங்காரநாயகி உனக்கு என்ன சொன்னார்?

ஆறுமாசத்திற்கு ஒவ்வொரு மாசத்தின் 13-ந் திகதியில் நாங்கள் அவர் காட்சிகொடுத்த இடத்திற்கு வரவேண்டுமென்றும் கடைசிமாசத்திற் தாம் ஆர் என்றும் தாம் எம்மிடம் கேட்கவிருப்பது என்னவென்றும் அறிவிப்பேன் என்றும் சொல்லியிருக்கிறார்.

நீ அந்தமாதுடன் எப்படிப் பேசத்தொடங்கினாய்?

லூசியா சகலத்தையும் ஆதியோடந்தமாய்ச் சொன்னாள்.

அவள்சொல்லி முடித்தபின்பு "வருகிறமாசம் நீ அங்கு போகப்படாது" என்று தாய் சொன்னாள்.

ஆச்சி என்னை மன்னியுங்கள். நாங்கள் அங்குபோகத்தான் எண்ணியிருக்கிறோம்.

அந்நாள் அர்ச். அந்தோனியார் திருநாள். எங்கள் தேசம் முழுவதற்கும் அது ஒரு பெரிய திருநாள்.

அதைப்பற்றிக் காரியமில்லை.

தாயும் மகளும் அதன்பின் ஒன்றும் பேசாதிருந்தார்கள்.

அந்தோனியோவின் மனைவி நன்றாகச் சிறிதுவேளை யோசித்தபின் ஒருசிறிது கசப்பானகுரலில் "இப்படிப்பட்ட பொய்களைச் சொல்வதற்கு நீ சீக்கிரம் முடிவுகட்டவேண்டும்" என்றாள். ஆனால், லூசியா அமரிக்கையாய், ஆனால் திடாரிக்கத்துடன் "ஆச்சி நாங்கள் பொய்சொல்லவேயில்லை" என்று விடையிறுத்தாள்.

நாய்களும் குரைக்கத்தொடங்கின. சனங்களும் அங்கு வந்தார்கள். தாயும் மகளும் ஒன்றும்பேசாது இருந்தார்கள். அந்தச் சிறுசாரில் கம்பளிமயிரை அரியும் கத்தரிக்கோலின் நறுநறு என்ற சத்தமல்லாது வேறு ஒரு சத்தமும் கேட்கப்படவில்லை.

கிராமத்தின் மகாசம்பவம்

அடுத்தநாள் மந்தைகள் மேய்ச்சல்நிலத்தைச் சேர்ந்ததும், இயாசிந்தா வழமைபோல விளையாடப்போகாமல் ஒரு கல்லின்மேலிருந்து யோசனையில் மூழ்கிப்போயிருந்தாள்.

"வந்துவிளையாடு இயாசிந்தா."

"இன்றைக்கு நான் விளையாடுவதில்லை."

ஏன் தங்கைச்சி?

அந்தக் காட்சிநாயகி சொன்னதை யோசித்துக்கொண்டிருக்கிறேன். பாவிகள் மனந்திரும்பும்படியாகச் செபமாலை சொல்லவும் வேணும். பரித்தியாகக்கிரிகைகள் செய்யவும் வேணும். இனிமேல் "**மங்களம் மரியாயே**" என்ற இரண்டு சொல்லுகளையும் மாத்திரமல்ல. முழுச்செபத்தையுஞ் சொல்லவேண்டும். ஆனாற் பரித்தியாகக் கிருத்தியமும் செய்யவேண்டுமே. அவைகளை எப்படிச் செய்வோம்.

ஆனால் ஐயையோ! இந்த மூன்றுசிறுவர்களும் முதல் முதல் செய்யவேண்டிய மகாகடினமான பரித்தியாகக் கிரிகை, காட்சிக்காரர் என்றபெயரைத் தாங்கிக்கொண்டு திரிவதுதான். இது இந்த மூன்றுசிறுவர்களுக்கும் ஒரு புதுமாதிரியான **அழைத்தல்**. இந்த அழைத்தலின் நிமித்தம் இவர்கள் மகாபாரச்சிலுவை ஒன்றைச் சுமக்கவேண்டியிருந்தது. அல்யுஸ்திறெஸ் பிரிவிலுள்ளவர்கள் இந்தச் சிறுவர்களைப் பழிப்பாக உற்றுநோக்கினார்கள். ஏளனம்பண்ணி அவமதித்தார்கள். ஒருவரும் அவர்களை நம்பவேயில்லை. அலப்பிச் சளாப்பிக்கொண்டிருக்கும் ஆண்கள் அல்லது பெண்கள் கூடிய இடங்களில் அவர்களின் நாக்குகள் கட்டுமட்டில்லாது முழக்கணக்காய் நீளத்தொடங்கின.

பரித்தியாகங்களை எப்படி அவற்றைச் செய்வது.

இவையெல்லாம் உண்மையாகுமா?

"சீச்சீ! அவர்கள் படுபொய் சொல்பவர்கள். என்னப்பா இந்தக்குழந்தைகளும் இப்படியா? இதெல்லாம் பிள்ளைகளின் குடும்பத்தாரில் உள்ளபழுது. அவர்கள் தங்கள் வீட்-

டுக்கருமங்களை நேர்சீராக்கினாலோ! இவர்களுடைய வீட்டில் ஒருபிரம்பும் இல்லையா?

"அவள் என்மகள் என்றால் எனது உத்தண்டவேகத்துக்கு நல்லவிலை ஏற்றிவைப்பேன். கொடுக்கும் உதைகளால் அவள் முதுகில் உதைவாங்க வேறு இடம் இல்லை என்று காட்டிவிடுவேன்" என்று கிராமவாசிகள் அப்பிள்ளைகளை ஏசிப்பேசி வைதுகொண்டிருந்தார்கள். லூசியா தெருவால், வழியாற் போவதைக்கண்டால் "அதோபோகிறாள் படுநீலி, அதோ அவதந்திரி" என்று இகழுவார்கள். "கள்ளப் பேர்னடேற், போலிப் பேர்னடேற்" இதோ போகிறாள் என்பர் வேறுசிலர். ஒலிம்பியா யாதொருதீர்மானமில்லாது தத்தளித்துக்கொண்டிருந்தாள். சிலவேளைகளில் தனது பிள்ளைகளுக்குச் சார்பாக நியாயம்பேசுவாள். சிலசமயங்களில் தாங்கள் சொன்னதுபொய் என்று அந்தப்பிள்ளைகளை ஒத்துக்கொள்ளும்படிசெய்யப் பிரயாசப்படுவாள்.

ஆனால் கூடிய திடாரிக்கமுடைய மரியறோசா லூசியாவை இடைவிடாது ஏசிப்பேசிக்கொண்டு வருவாள். அவளுக்கு அடியுங்கொடுப்பாள். ஆனால் லூசியாவிடமிருந்து அவள் முதன்முறை சொன்னதை அல்லாது வேறெவ்வித மறுமொழியையும் பெற்றுக்கொள்ள அவளால் முடியவில்லை. அந்த நிர்ப்பாக்கியவதியான பிள்ளையோ எவ்வித ஆறுதலுமில்லாது தனிமையாக அழுதுகொண்டிருப்பாள். அவள் சகோதரர் சகோதரிகளில் ஒருவராவது அவளுக்குச் சார்பாக ஒருசொல்லாவது சொல்லவில்லை. தனிமையாக இருந்து அழுது மேசைச்சீலையாற் தன் கண்ணீரைத் துடைப்பதல்லாது அவளுக்குவேறு ஒரு ஆறுதலும் இல்லாது போயிற்று.

இந்தக்காட்சி அலுவல்களிற் பிள்ளைகளுடைய தகப்பன்மார் மாத்திரம் நேரிற்றலையிடவில்லை. மனுவல் பேதுரு (ஒலிம்பியாவின் கணவன்) வெளித்தோற்றத்தில் முரட்டுக்குணமுள்ளவன்போலக் காணப்பட்டாலும் தன்பிள்ளைகளில் மிகவும் அன்பும் பற்றுதலும் உள்ளவன். பரலோகத்தினால் ஒருகாட்சி அருளப்படுவதை அவன் எளிதில் ஒப்புக்

கொள்ளக்கூடிய மனப்போக்குள்ளவன். தனது மகன் பிரான்சீசுவைப்போலத் தியானித்து யோசித்துக்கொண்டிருக்கும் போக்குள்ளவன். சற்றுஎடுப்பான சிலவசனங்களிற் சில சுலோகங்களைச் சொல்லும் வழக்கமுடையவன். பின்னேரத்திலேதான் வீட்டார் ஒன்றுசேர்ந்து இப்படிப்பட்ட விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுதுதான், மேற்குறித்த எடுப்பான சுலோகங்களைப் பெரும் ஞானிபோலச் சொல்லிவருவான்.

"சருவேசுரன் மகத்தானவர். அவரின் செயல்களைப் பற்றி நாங்கள் ஆழ்ந்து யோசிக்கப்புகுந்தால் முடிவில்லாதுதான் யோசித்துக்கொண்டிருக்க வேண்டிவரும். இதுகாத்திரம்மிக்க ஒருவிஷயம். இந்தச்சம்பவத்தைப்பற்றி மனவெறுப்புக்கொண்டு எதிர்பேசுவானேன்? எப்போதும் நல்லமனசுள்ளவர்களாக இருப்போமாக. எல்லாம் கடைசியில் நன்மையாகவே முடியும்" என்றபடிதான் மனுவல் பேதுரு பரமஞானம் பேசுவான்.

இப்படிப் பேசியபிற்பாடு இவன் வேலைசெய்து காய்த்துப்போன தனது கையால் சிலுவைமுத்திரை இட்டுக்கொண்டு சூட்டடுப்பின் அருகிலே தனிமையான ஒரு கோணத்தில் தியானத்தில் மூழ்கி இருப்பான். இவனுக்கோ தனது சின்னஞ்சிறிய பிரான்சீசும் இன்னும் அதிகமாகத் தனது மதுரிதபுத்திரி இயாசிந்தாவும் சொல்வது பொய் அல்லவென்று தீர்மானம் ஆயிற்று. அந்தோனி சாந்துஸ் (லூசியாவின் தகப்பன்) பிள்ளைகளுடைய காட்சியைப்பற்றி எவ்வித அக்கறையும் கொண்டவனல்ல. அவன் அவளுடைய கதை பொய் என்றும் சொல்லான்; மெய் என்றும் சொல்லான். காட்சிச்சம்பவங்களைப்பற்றிக் கேட்டுக்கேட்டு அலுத்துப்போய்த் தனக்கு இப்படிப்பட்ட கதைகளில் எவ்வித கவர்ச்சியுமில்லை எனக்காட்டும்படியாக "எல்லாம் கிழவிமாருடைய உவகதைகள்" என்று சொல்லிவிட்டுத் தன் பாட்டில் போய்விடுவான். காட்சிசம்பந்தமான சம்பவங்கள் பத்திமாவின் கட்டளைக் குருவானவரின் செவிகளுக்கு எட்டலாயின. ஒருநாட்காலமே மரியறோசா கட்டளைச்சுவாமியா

ரிடம் ஆலோசனைசேட்க வந்தாள். விசேஷமாக அவள் தனதுமகளுக்கு நல்லபேச்சுக்கொடுத்து அவளைக் கண்டிக்க வேணடுமென்றும், அந்தப்பரம இரகசியம் நிறைந்ததாக நடிக்கப்படும் இடத்துக்குத் தன்மகளைப் போகவிடாது அவர் தடுத்துவிடவேண்டும் என்றும் கேட்கவந்தாள்.

பத்திமாவின் கட்டளைக்குருவானவர் மகா ஆன்ம இரட்சணிய வாஞ்சையுள்ளவர். விசேஷித்த பயபக்தி உள்ளவர். ஆனால் மனச்சாட்சிக்கு மிகவும் பயந்தவர். ஆதலால் ஒருமுடிவு சொல்லுவதில் எப்போதும் தத்தளித்துக்கொண்டிருக்கும் போக்குள்ளவர். மரியறோசாவின் கேள்வியினால் பெரிதும் மனக்கலக்கம் அடைந்தார். இந்தச் சிக்கலான விஷயத்தில் என்னவிடைகொடுப்பது என அங்கலாய்ப்புக்கொண்டார்.

காட்சி உண்மையாக இருந்தால் தாம் அதை எதிர்ப்பது எத்துணைபெருந் துரோகம். என்தேவனே! இந்தப் பிள்ளைகள் இப்படியான ஒருசம்பவத்தை வேணுமென்று எடுத்துவைத்துக் கட்டிவிட்டார்களா? அப்படியானால் தாம் குறுக்கிட்டு அதைத் தடுக்காதுவிட்டால் அவர்களுடைய படுபொய்களில் தாமும் பங்காளியாவாரே. ஆனாற் பிள்ளைகள் புரளிக்காரர் என்ற எண்ணத்தை அவர் அறவே நீக்கிவிட்டார். இந்த மூன்றுபிள்ளைகளையும் ஞான உபதேசவகுப்பில் அவர் நல்லாய் அறிவார். அவர்கள் இப்படிப்பட்டபொய் சொல்லமாட்டார்கள் என நிச்சயித்துக்கொண்டார். ஆனால் இதிற்சில துட்டருடைய அவதந்திரங்கள் கலந்திருக்கமுடியாதா? அல்லது பிசாசின்மாய்கைதானோ? அப்படியாயின் பேயின் மாய்கைகளிலிருந்து தமது கிறீஸ்தவர்களை முற்றாய்ப்பாதுகாப்பது தமது மனச்சாட்சியைப் பொறுத்த கடமை அல்லவா? என்று இவ்வாறாகக் குருவானவர் யோசித்து அங்கலாய்ப்புக்கொண்டார். மரியறோசா சொல்வதைக் குருவானவர் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்தார். ஆனாற் பைத்தியம் பிடித்தவள்போல வலோற்காரம் செய்யும் நாட்டங்களுள்ளவளாகக் காணப்பட்ட இவ

ளுடைய கோபத்தைச் சாந்திசெய்வது தமது முதற்கடமை எனக் குருவானவர் நினைத்தார்.

“இந்தச்சிறுக்கி ஊர்முழுவதற்கும் எங்களை நகைப்புக்கும் நளினத்திற்கும் இலக்காக்குகிறாள். இவ்வித நிர்ப்பாக்கியங்கள் எப்போதும் எனக்குத்தானே வந்துகொண்டிருக்கின்றன” என்றாள் மரியறோசா.

“பிள்ளாய்! ஒருபோதும் இப்படிப்பேசாதே. இவைகள் எல்லாம் உங்கள் பிள்ளைகளின் மனசில் எழுந்த எண்ணங்கள் ஆகலாம். ஆனால் அவைகள் உண்மையான சம்பவங்களும் ஆகலாமே. உண்மை என்றால் உங்கள் குடும்பத்திற்கும் பெரும் ஆசீர்வாதமல்லவா? சகலரும் உங்கள் குடும்பத்திற்குக் கிடைத்த சிலாக்கியத்தையிட்டு வாயூறுவார்களல்லவா?

“ஆம் ஆம். உண்மையானால், உண்மையானால்...... சுவாமி. இந்தக்கதை ஒன்றும் உண்மை அல்ல. எனது மகள்தான் படுபொய் சொல்லுகிறாள். அவள் பொய்சொல்லத்தொடங்கியது இதுதான் முதல்முறையும் கடைசிமுறையும் என்று அவளுக்குப்படிப்பிக்கப்போகிறேன்”.

குருவானவருக்கும் மரியறோசாவுக்கும் இடையில் நிகழ்ந்த இந்த முதற்சம்பாஷணையினால் ஒரு நல்லமுடிபும் உண்டாகவில்லை. கடைசிக்குருவானவர் முன்னிலும் கூடிய தத்தளிப்புக்கு உள்ளானார். மரியறோசாவும் முன்னிலும் கூடிய கோபாவேஷம்கொண்டாள். கொண்டு அந்தப் பொய் பேசும் சிறுக்கிக்கு நல்லபாடம்படிப்பிக்கத் தீர்மானித்தாள். அன்றைக்கு லூசியாவை விசேஷவிதமாய்த் தண்டித்தும் விட்டாள்.

முரட்டுத்தனமாய்ச் சருவுதல்

ஆனிமாசம் 13-ந் திகதி கிட்டிவிட்டதும் மனுவல் பேதுரு தனது பிள்ளைகள் அதாவது பிரான்சீஸ், இயாசிந்தா என்பவர்களைக் காட்சிநாயகி குறித்த இடத்துக்குப்போகத் தடைசெய்யவில்லை. ஆனால் அந்தோனி சாந்துஸ் குடும்பத்

தார் லூசியாவை அங்கு போகாது தடுப்பதற்கு மிகவும் விரும்பினார்கள். ஆனாலும் அவளுடைய விருப்பத்தை எதிர்க்க அவர்கள் துணியவில்லை. அல்யுஸ்திறெஸ் பிரிவுக்கு அடுத்த கிராமங்களில் வசிக்கும் அநேகபிள்ளைகள் உள்ளபடி காட்சிகண்டார்கள்தானோ என்பதை மீண்டும் பரீட்சித்து அறியவிரும்பினார்கள். அதுவுமல்லாமற் தேவகிருபையினால் உள்ளபடி காட்சிநிகழ்ந்ததுதான் என்று ஒப்புக்கொண்ட ஒருசாராரும் சனங்களுக்குள் இருந்தார்கள். இவ்வித காட்சிகளின் அபிப்பிராயங்களை அலட்சியஞ்செய்வது புத்தியாகாது என லூசியாவின் பெற்றார் உணர்ந்தார்கள். காட்சியைப்பற்றிய கேள்விகளுக்கு ஒருமுடிபு செய்வதற்குத் “**தடியடி நியாயம்**” மாத்திரம போதாதென்பதை மரியறோசா நன்கு உணர்ந்துகொண்டாள். தன் மகள் பொய்சொல்லுகிறாள் என்று அவளை ஒத்துக்கொள்ளச் செய்யும்படி இவள் பலவிசை அவளுக்குப் பலத்த அடி கொடுத்துத்தான் பார்த்தாள். பொய் சொல்லுவதென்றால் மரியறோசாவுக்குத் தாங்கமுடியாத திடுக்காட்டம். புத்திமதியினாலும் நன்முன்மாதிரிகையினாலும் தனதுபிள்ளைகள் உண்மைபேசும் விஷயத்தில் மகா பிரமாணிக்கம் உள்ளவர்களாக இருக்கும்படி இத்தாயானவள் அவர்களை இதுவரைக்கும் பிரயாசத்துடன் பயிற்றிவந்தாள். இப்படி எல்லாம் இருக்கவும் தன்மகள் பொய்சொல்லத் துணிந்துவிட்டாளே என்ற எண்ணத்தால் மரியறோசாவின் மனம் அக்கினிச்சூளை போல் எரிந்துகொண்டிருந்தது. பொய் சொல்லுகிறவளென்று முற்றும்தவறாக எண்ணப்பட்ட லூசியாவின் மூத்த சகோதரங்களும் தாயுடன்சேர்ந்து அவளை உபத்திரவப்படுத்தினார்கள்.

ஆனிமாசம் 13-ந் திகதி போர்த்துக்கால்தேசம் முழுவதற்கும் பாதுகாவலரான அர்ச். அந்தோனியார் திருநாள். பத்திமா விசாரணைப்பங்குக்கும் அவரே பாதுகாவலரான அர்ச்சியசிஷ்டர். லூசியாவின் உள்ளத்தை அருட்டிக்கொண்டிருக்கும் எண்ணங்கள் எப்படிப்பட்டவை என்பதைக் கண்டுபிடியாத அவள்தாயும் சகோதரிகளும் அவளைநோக்கி

எப்படியாயினும் அர்ச். அந்தோனியாருடைய திருநாளை அலட்சியம் செய்துபோட்டு நீ அந்தப் போலிமாதைத் தரிசிக்கவா போகிறாய்? என்றார்கள். இவைகளைக்கேட்டுத் தன்வீட்டார் தான்சொல்வதை நம்புகிறார்களில்லையே என்று லூசியா சொல்லரிய மனவருத்தப்பட்டாள். ஆயினும் குறித்தநாளில் கோவாடி இறியாவுக்குப் போகவேபோவதாக அவள் தீர்மானித்துக்கொண்டாள்.

மரியறோசா தன்மகளின் பிடிவாதத்தை அவதானித்து, அவள் ஆடுகளைச் சாய்த்துக்கொண்டுபோகமுன் அவளைக் கையிற்பிடித்துத் தனிமையாகக் கூட்டிக்கொண்டுபோய் அவள் பொய்தான் சொல்லுகிறாள் என ஒத்துக்கொள்ளச் செய்யப் பிரயாசப்பட்டாள். முதலில் அவளை அன்பினால் வசியப்படுத்தப் பார்த்தாள். அது வாய்க்காததைக்கண்டு அவள் வெருட்டினாலும் மிரட்டினாலும் கருமம் கைகூடும் என்று எண்ணி அப்படிச்செய்தாள். அதுவும்பலிக்கவில்லை என்றுகண்டு விளக்குமாற்றுப்பிடியால் தன் சவியெல்லாம் கூட்டி அடித்தாள். லூசியா தாயின் சண்டமாருதம் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு ஒன்றுக்கும் அசையவேயில்லை. கடைசியாக மரியறோசா தன்மகள் ஆடுகளுடன் புறப்பட்டுப் போக விட்டாள். ஆனால் தான் தனது பிள்ளைகளின் வாயிலிருந்து ஒருபோதும் ஒரு பொய்யையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் இப்படிப்பட்ட பொய்யான எத்துக்கதைகளை இன்னும்கூடிய நியாயத்துடன் தான் ஒத்துக்கொள்ளப் போவதில்லை என்றும்சொல்லி அந்த நிர்ப்பாக்கியவதியான சிறுமியை அனுப்பிவிட்டாள். அதுமாத்திரமா? "இன்று பின்னேரம் நீ வீட்டுக்குத் திரும்பிவரும்போது உன்னை இந்தக் கிராமத்து வீடுவீடாகக் கூட்டிக்கொண்டுபோவேன். நீ சொன்னதெல்லாம் படுபொய் என்று ஒவ்வொரு வீட்டாருக்கும் சொல்லுவாய். சொல்லி நீ அவர்களை ஏமாற்றினதற்காகப் பொறுதிகேட்பாய்" என்று மரியறோசா அவளை எச்சரித்து அனுப்பிவிட்டாள். லூசியாவும் புறப்பட்டுப் போனாள். பிரான்சீஸ், இயாசிந்தா ஆகிய இருவரும் அவள் ஏன் தாமதம்செய்கிறாள் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்

டிருந்தார்கள். அவள் கண்ணீர்சிந்துவதைக்கண்டு, ஏன் இப்படி அழுகிறாய்? என்று இவர்கள் கேட்டார்கள். கேட்டதற்கு அவள் நடந்த எல்லாவற்றையும் சொல்லிவிட்டு "நான் சொன்னதெல்லாம் பொய் என்று சொல்லிவிடும்படி ஆச்சி என்னை ஆக்கினைப்படுத்துகிறா. நான் செய்வது என்னவென்று சொல்லுங்கள்" என்றாள். பிரான்சீஸ், இயாசிந்தாவைப்பார்த்து கண்டாயா? இதுவெல்லாம் உன்னாலே தானே வந்தது. ஏன் நீ காரியத்தை வெளிவிட்டாய்?

இயாசிந்தா லூசியாவின்முன் முழந்தாளிட்டு அழுது கொண்டு வானத்திற்கு இருகைகளையும் உயர்த்தி: "நான் பிழைதான் செய்துபோட்டேன். இனிமேற்பட்டு ஒருவருக்கும் ஒன்றும் சொல்லேன்" என்றாள்.

ஏழுவயதுச்சிறுமி இப்படிப்பட்ட தாழ்ச்சிமுயற்சி செய்ய எப்படிப்பழகினாள். இவளுடைய சகோதரர் சகோதரிகள் முதல்நன்மை பெறமுன், பெற்றார் பெரியோர்முன் முழந்தாளிட்டுத் தாங்கள்செய்த குற்றத்தை மன்னிக்கும்படி கேட்டதை இவள் கண்டிருப்பாள் என்பது மெய். ஆனால், தேவமாதா பரலோகத்திலிருந்துகொண்டு இவளுடைய ஆத்துமத்திற் பொழிந்தருளிய வரப்பிரசாதம் ஏலவே வேலை செய்யத் தொடங்கிவிட்டதென்றே சொல்லவேண்டியிருக்கிறது. பின்னேரம் ஆனதும் லூசியா ஆடுகளுடன் வீடு வந்து சேர்ந்தாள். மரியறோசா ஈனயிரக்கமில்லாது உள்ளதை உள்ளபடி சொல்வதைப்பற்றி ஒரு பிரசங்கம் சொல்லத்தொடங்கினாள். தொடங்கிப் பின்வருமாறு தனது பிரசங்கத்தைமுடித்தாள்.

"நான் எப்போதும் எனது பிள்ளைகளிடமிருந்து உண்மையைப் பெற்றுக்கொண்டேன். பொய்பேசும் துர்க்குணத்தை எனது கடைக்குட்டியிடத்திலா நிலைக்க இடம் கொடுப்பது? அதுவும் ஒரு அற்பனில் அற்பனான புளியல்ல. இவ்வகையான படுபொய்யை எத்தனையோபேரை ஏலவே ஏமாற்றிய படுபொய்யை, நிலைக்கவிடுவேனா? நான் சொல்வதைக்கேள். இரண்டில் ஒன்றைத்தெரிந்துகொள். ஒன்றில் அயல் அண்டையில் இருப்பவர்களுக்கு நீ சொன்ன

தெல்லாம் பொய்யென்றுசொல்லி அவர்கள் அனுப்புண்டதை மாற்றிவிடு. அல்லது நான் உன்னை ஒரு இருட்டறைக்குட் பூட்டிவைக்கப்போகிறேன். அங்கே சூரிய வெளிச்சத்தை நீ மருந்துக்கும் காணமாட்டாய்.''

லூசியாவுடைய சகோதரிகளும் தாயோடு ஒத்துக்கொண்டு அவளுடைய நியாயங்களுக்கும் வெருட்டுகளுக்கும் மிண்டுகொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஐயையோ! தனது சொந்தக்குடும்பத்திற் சகலராலும் வெறுத்து நிந்திக்கப்படுவதைக் காணும்போது இந்தச்சிறுமியுடைய நிர்ப்பாக்கியமும் மனஊறலும் எப்படிப்பட்டதாயிருக்கும்! இவ்வளவுகாலமும் இவளுக்குச் சகலரும் காட்டிவந்த பற்றுதலும் மன உருக்கமும் எங்கே? தனது தாய்க்கு மனத்திருப்தி உண்டாக்க அவள் எவ்வளவோ ஆசித்தாள். ஆனால் அதற்கு ஒருவழியும் இல்லையே என்று மனம்நொந்து வருந்தினாள்.

எல்லாரும் அவளை ஓர்மூலையிற் தனியேயிருக்கும்படி விட்டுவிட்டார்கள். அவள் அங்கு தனது கண்ணீரின் கடைசித்துளிகளையும் சிந்திக்கொண்டிருந்தாள். காட்சிநாயகி கேட்டுக்கொண்டபடி இவைகள் எல்லாவற்றையும் பரித்தியாகக் கிரிகைகளாகத் தேவனுக்கு லூசியா ஒப்புக்கொடுத்தாள்.

காட்சிநாயகி மீண்டும் வருகிறார்
இரகசியம் ஒன்றைப் பிள்ளைகளுக்கு ஒப்புவிக்கிறார்

காட்சிநாயகியை மீண்டும் சந்திக்கும்நாளும் வந்துவிட்டது. மனுவல் பேதுரு மார்த்துவும் மனைவியும் ஒரு பக்கத்தாருடனும் சேராதிருக்கவேண்டும் என்ற நியாயத்தினாற்போலும், வெள்ளென எழும்பி "போர்த்தோடேமோஸ்" என்ற இடத்தின் சந்தைக்கு ஓரிணைமாடு வாங்கும்படி போய்விட்டார்கள். பொழுதுபடமுன் அவர்கள் திரும்பி வரமாட்டார்கள். அந்தோனி சாந்துஸ் குடும்பத்தார் வீட்டிலிருந்துவிடத் தீர்மானித்தார்கள். ஆயினும் மரிய

ரோசா கோவாடி இறியாவுக்கு மறைவாகப்போகத்தீர்மானித்து விட்டதாக எண்ணவேண்டியிருந்தது. ஏனென்றால், சில நூதனப்பிரியரால் தனது மகளுக்கு எவ்வகையான சங்கடமும் வரப்படாதென அவள் தீர்மானித்துக்கொண்டாள்போலும். அன்றியும் காட்சித்தலத்தில் நடப்பவைகளை ஒளித்துநின்று பார்க்கவும்விரும்பினாள் போலும். ஆனாலும் வழியில் அவள் தனது மனசைமாற்றி மகளைக் கவனித்துக் கொள்ளும்படி சில நண்பர்களுக்குச் சொல்லிவிட்டுப் பாடற்பூசைக்குப் போய்விட்டாள்.

லூசியாவும் இயாசிந்தாவும் பிரான்சீசும் தாங்கள் காட்சிநாயகிக்குக் கொடுத்தவாக்கில் தவறவில்லை. வழமைப்பிரகாரம் பெரிய திருநாட்களிற் செய்வதுபோல இவர்கள் வெள்ளென ஆடுகளை மேய்ச்சல் நிலத்திற்குச் சாய்த்துக் கொண்டுபோய் ஒன்பதுமணிமட்டும் மேய்த்தபின், வீடு திரும்பிவிட்டார்கள். அப்படிச்செய்தது திருநாட்பூசைக்குப் போவதற்கல்ல. கோவாடி இறியா என்ற இடத்துக்குப் போய்ப் பிரகாசத்தின்மத்தியிற் காட்சிநாயகியைச் சந்திக்கும்படியேயாம்.

சரிபன்னிரண்டுமணி அடிக்கும்பொழுது பிள்ளைகள் கோவாடி இறியாவில் ஏலவே அதிக நேரத்துக்குமுன் வந்திருந்தார்கள். இன்றைக்கு அவர்கள் கூடுதலான பயபக்தியுடன் செபமாலை சொன்னார்கள். இத்தினம் பத்திமாவிலும் ஒரு பெரிய திருநாள். **போர்த்தோடேமோஸ்** என்னுமிடத்தில் மகா சந்தைக்கூட்டம். பேர்போன பிரசங்கியார் ஒருவருடனும் இன்ப நாதகீதங்களுடனும் "ஊனெம்" என்னுமிடத்திலும் மகா திருநாட்கொண்டாட்டம். இப்படி எல்லாம் இருந்தும், ஏறக்குறைய அறுபதுபேர் வரையில் ஷேன் மரங்களுக்கிடையில் வந்துகூடியிருந்தார்கள். இவர்கள் காட்சியில் விசுவாசம் வைத்தபடியால் வந்தார்களோ? அல்லது விநோதப்பிரியத்தினாற்தான் வந்தார்களோ? அறியோம். போனமாசம் தாங்கள் செபமாலை சொன்ன மரநிழலில் இன்றைக்கும் பிள்ளைகள் முழந்தாளிட்டுச் செபமாலை சொல்லிக்கொண்டு இருந்தார்கள். செபமாலை

சொல்லிமுடிந்ததும் லூசியா எழுந்து கோவிலுக்குட் பிரவேசிக்கும்பொழுது செய்வதுபோல் தனது மேற்போர்வையையும் தலைச்சீராவையும் ஒழுங்குபண்ணினாள். ஒழுங்குபண்ணிக்கொண்டு கிழக்குமுகமாகச் சென்றாள். அவளுடன் கிட்டநின்ற ஒரு சாட்சிதான் இப்படிச் சொல்லியிருக்கிறது. காட்சிநாயகி வருமட்டும் இன்னும் ஒரு செபமாலை சொல்லும்படி மற்றப்பிள்ளைகள் லூசியாவைக் கேட்டார்கள். அதேசமையத்தில் "**இதோ மின்னலைக்கண்டோம், காட்சி நாயகி வருகிறார்**" என்று லூசியா ஆர்ப்பரித்தாள். சொல்லிவிட்டு ஷேன் மரத்தடிக்கு, மற்றப்பிள்ளைகளுடன் ஓடிப்போனாள். முதற்காட்சி கொடுக்கும்பொழுது அந்த மரத்தின்மேல் நின்றுகொண்டுதான் தேவதாய் காட்சியளித்தார். அங்கு நின்றவர்களுட் சிலர் தாங்கள் லூசியா பேசினதைக் கேட்டதாகவும் காட்சிநாயகியைத் தாங்கள் காணவில்லையென்றும், அவர் சொன்னதைக் கேட்கவில்லை என்றும் சாட்சியிட்டிருக்கிறார்கள். "**நீங்கள் என்னிடம் கேட்பதென்ன?**" என்று லூசியா காட்சிநாயகியைக் கேட்டாள்.

கோவாடி இறியாவில்

மத்தியான வேளை.



"**வருகிறமாசம் 13-ந் திகதி நீங்கள் இங்கே வரவேண்டும். ஒவ்வொருநாளும் செபமாலைசொல்ல மறக்கவேண்டாம்**" என்று அவர் லூசியாவுக்குச் சொன்னார். "**நீ வாசிக்கப் படிக்கவேண்டும். அதன்பின்பு நீ என்ன செய்ய வேண்டுமென, நான் விரும்புவதை உனக்குச் சொல்வேன்.**" தனக்காக மன்றாடிச் சுகம்பெற்றுத் தரும்படியாகத் தன்னைக் கேட்டிருந்த ஒரு ஆளுக்காக லூசியா காட்சிநாயகியைக் கேட்டாள். "**அவன் மனந்திரும்பட்டும். வருஷம்முடியமுன் சுகம் பெறுவான்**" என்று தேவதாயார் லூசியாவுக்கு விடைகொடுத்தார். இந்தக் காட்சியின்போதுதான் தேவமாதா அந்த மூன்று பிள்ளைகளுக்கு "ஒரு இரகசியத்தை" அதாவது முதலாம் 'இரகசியத்தை' ஒப்புவித்தார்.

முதலாம் காட்சியிற்போலவே இப்போதும் பிரான்சீஸ் காட்சிநாயகி சொன்னதைக் கேட்கவில்லை. ஆனால் தன்னைப்பற்றி அவர் அறிவித்ததை லூசியாமூலமாய் அவன் அறிந்துகொண்டான். இவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட இரகசியம் என்ன? கட்டளைச்சுவாமியாரின் மனநிலையா? அல்லது தங்களுடைய பெற்றாரின் நடபடிகளினால் தங்களுக்கு உண்டான மனக்கவலைகளைப் பிள்ளைகள் காட்சிநாயகிக்குச் சொல்ல, அதற்கு அந்த அன்புக்குரிய நாயகி கொடுத்த விடையா?

இதுவரைக்கும் சில சில குறிப்புகளை அவதானித்துவந்தவர்கள் ஊகித்துக்கொண்டபடி அந்த இரகசியம் பிள்ளைகளுடைய பிற்காலச் சம்பவங்களைச் சார்ந்தது என்றுதான் எணணப்பட்டது. லூசியா உலகைத்துறந்து கன்னியாஸ்திரிமார் சபையொன்றில் சேரும்படி காட்சிநாயகியினால் கேட்கப்பட்டாள் என்றும் பிரான்சீசும் இயாசிந்தாவும் விரைவில் மோட்ச இராச்சியம் சேருவதாக அறிவிக்கப்பட்டார்கள் என்றும் எண்ணப்பட்டது. இயாசிந்தாவும் பிரான்சீசும் இதைப்பற்றி நிச்சயமாக இருந்தார்கள். ஊகித்தல் முறையாக மாத்திரம் சிலர் இப்படிச் சொல்லிவந்தது உண்மையென இப்போது அறிவோம். இந்த இரகசியங்களைவிட, லூசியா இப்போது வெளியிட்டவற்றால், காட்சி

நாயகி பிள்ளைகளுக்கு இன்னும் காத்திரம்மிக்க ஓர் இரகசியம் அறிவித்திருந்தார் என்பது நிச்சயம்.

தேவன் தனக்கருளிய சில விசேஷவரப்பிரசாதங்களைப் பற்றி லூசியா தனது ஆத்துமகுருவானவரின் கேள்விக்கு இசைந்து சில குறிப்புகளை 1927-ம் ஆண்டு எழுதி வெளியிட்டு இருக்கிறாள். தான் தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் யேசுநாதரிடம் ஆலோசனைகேட்டதாகவும், அவர் மிகவும தெளிவான குரலொலியில் தனக்கு உத்தரவு கொடுத்தபடியால் தான், சில இரகசியங்களை வெளியிடுவதாகவும் சொல்லியிருக்கிறாள். 1917-ம் ஆண்டு ஆனிமாசம் 13-ந் திகதி காட்சிநாயகியுடன் தான் செய்துகொண்ட சம்பாஷணையைப்பற்றி லூசியா பின்வருமாறு எழுதியிருக்கிறாள்: "எங்களைத் தம்மோடு கூட்டிக்கொண்டு மோட்சத்துக்குப் போகும்படி நான் காட்சிநாயகியிடம் கேட்டேன். அதற்கு அவர் ஆம். இயாசிந்தாவையும் பிரான்சீசையும் நான் விரைவில்வந்து கூட்டிக்கொண்டு போவேன். ஆனால் நீ இன்னும் இவ்வுலகில் நெடுங்காலம் இருக்கவேண்டும். என்னைப் பிறர் அறியவும் நேசிக்கவும் செய்வதற்கு உன்னை யேசுநாதர் துணைகொள்ள விரும்புகிறார். எனது மாசில்லாத இருதயத்தின்மீது பத்தியை இவ்வுலகில் அவர் ஸ்தாபிக்கவிரும்புகிறார்.

"அப்போது நான் இங்கு தனிமையாகத்தானிருக்க வேண்டுமா?" "இல்லை மகளே! நான் உன்னைக்கைவிட மாட்டேன். எனது மாசற்ற இருதயம் உனக்கு அடைக்கலமாகும். அதுவே நீ தேவனிடம்போய்ச் சேர்வதற்கு வழியுமாகும்."

ஆகப்பிந்திய நாட்களில் லூசியா பத்திமாகாட்சிகளைப் பற்றி எழுதிய குறிப்புகளிற் சொல்லியிருப்பதாவது: "தேவமாதா தமது கடைசிவார்த்தைகளைச் சொல்லும்போது தமது கைகளைவிரித்து இரண்டாம் விசையாகவும் மிகவும் நெருங்கியடர்ந்த பிரபைக்கதிர்களை எங்களில் விழவிட்டார். அந்தப் பிரபைக்கதிர்களிலே நாங்கள் சருவேசுரனில் முற்றாய் மூழ்கியவர்களைப்போலானோம். இயாசிந்தாவும் பிரான்சீசும்

பரலோகத்தைநோக்கி எழுந்த பிரகாசக்கதிர்களுள் இருந்ததாகத் தோன்றியது. நானோவென்றால் பூமியில் அடர்ந்து பரந்த கதிர்களுள் இருப்பதாக எனக்குத்தெரிந்தது. காட்சிநாயகியின் வலதுகையில் ஒரு இருதயம் இருந்தது. அதைச் சூழவரவிருந்த முள்ளுகள் அந்த இருதயத்தை எல்லாப் பக்கத்திலும் குத்திக்கொண்டிருந்தன. உலகத்தாருடைய எண்ணிறந்த பாவாக்கிரமங்களினால் வியாகுலத்துக்குள்ளான மரியாயின் மாசற்ற இருதயம் இதுவேயென்று விளங்கிக்கொண்டோம். பாவங்களுக்காகத் தபம் செய்யும்படியும் நிந்தைப்பரிகாரம் செய்யும்படியும் கேட்பது இந்த இருதயம்தான்.

மேற்சொன்ன காட்சியில் ஏறக்குறையக் கால்மணித்தியாலம் வரையிற் சம்பாஷணை நடந்தது. அவ்வேளை அங்கிருந்த சில சாட்சிகள் சொல்லியிருக்கிறபடி தேவமாதா நின்றுகொண்டு காட்சியருளிய மரக்கிளைகள் நாலாபக்கமும் வட்டவடிவமாக வளைந்து உள்ளபடி அந்தக் கிளைகளின்மீது தேவதாயார் தமது திருப்பாதத்தை ஊன்றி நின்றாரெனச் சுட்டுவனவாயின.

இன்னும் ஒரு சாட்சி கூறியிருக்கிறதாவது: இந்தக் காட்சி நிகழ்ந்தது ஆனிமாசத்தில். ஆனபடியால் கொப்புகளெல்லாம் நீண்டபுதிய துளிர்களால் கிளைத்துப்போயிருந்தன. காட்சிநாயகி கிழக்குத் திசையைநோக்கிச் செல்லுகிறாள் என்று லூசியா சொன்னபொழுது எல்லாக்கிளைகளும் ஒன்றுசேர்ந்து மாதாபோன திசையைநோக்கிக் கீழே பதிந்தன. அப்படிப்பதிந்ததால் காட்சிநாயகி மீளும்பொழுது அவருடைய மேலங்கி அக்கிளைகளிற்பட்டு அவற்றை உராஞ்சிக்கொண்டு போனதெனச் சொல்லவேண்டி இருக்கிறது.

இந்தக் காட்சியின்பின்பு லூசியா பிரான்சீஸ் இயாசிந்தா எனும் மூவருக்கும் ஒரு சிறுதொகைச் சிநேகிதர் வாய்க்கலாயினர். இவர்கள் அப்பிள்ளைகளைப் பொய்யர் என்று இகழாது அவர்களுடன் சேர்ந்து செபஞ்சொல்லியும் வந்தார்கள். ஆயினும் இனிமேற்தான் அவர்களுடைய உபத்திரவங்கள் சரியாகத் தொடங்கப்போகின்றன. அவற்

றைச் சகிப்பதற்கு அவர்களுக்கு மகா வீரியமான ஆன்ம சக்திவேண்டியது. ஆனால் இந்தச்சக்தியை அவர்கள் தேவ தாயார் மூலமாக அடைவார்கள். அவர் இன்னும் நாலு விசை பரலோகத்தை விட்டிறங்கிப் பூலோகத்திற்குவந்து அவர்களுக்குத் தாபரமாக இருந்து அவர்களைத் தைரியப் படுத்துவார்.

3-ம் அதிகாரம்

உபத்திரவங்களும் சந்தோஷங்களும்

இரண்டாம் காட்சியின்பிற்பாடு அந்த மூன்றுபிள்ளைகளும் சகலவித மிரட்டல் உபத்திரவங்களிலுமிருந்து முற்றாய் விடுதலை அடைந்திருப்பார்கள் என்றுதான் எண்ண வேண்டியது. விசேஷமாக அவர்களுடைய பெற்றோர் இனசனர் அவர்களுக்கு எவ்வகையான சங்கடங்களும் செய் திருக்கமாட்டார்கள் என்றுதான் எண்ணவேண்டியது நியாயம். உள்ளபடி ஒலிம்பியாவும் அவளுடைய கணவனும் தங்கள் பிள்ளைகள் பொய்யர்கள் என்று ஒருபோதுமே எண்ணவில்லை. ஒருவேளை அச்சின்னஞ்சிறியவர்கள் சில மனமயக்குகளுக்குள் அகப்பட்டார்களோ என்று இவர்கள் சந்தேகப்பட்டார்கள். ஆனால் மரியறோசாவின் வீட்டில் இப்படியான நிலைமை இருக்கவேயில்லை. இந்தக்கடின மனசுள்ள ஸ்திரீ தனதுமகளுக்கு எதிராகக் கங்கணங்கட்டிக் கொண்டே வந்தாள். அந்தப்பிள்ளை சொல்வதைப் பொய் என்று ஒப்பித்துப்போட மரியறோசா பிடிவாதத்துடன் சலஞ்சாதித்துவந்தாள்.

இப்படிப்பட்ட மனப்போக்கு உள்ளவளாய் இருந்தபடியாற்றான் கட்டளைச்சுவாமியார் காட்சிபெற்ற மூன்றுபிள்ளைகளையும் விசாரணைசெய்யும்படி இந்த மரியறோசாவையும் ஒலிம்பியாவையும் தங்கள் பிள்ளைகளுடன் தம்மிடம் வரும்படி அழைத்தபொழுது அவள் மகா பரபரப்புடன் அதற்குச் சம்மதித்தாள்.

குருவானவரைச் சந்திப்பதற்கு முந்தியநாட் பின்னேரம் மரியறோசா தன்மகளை அழைத்து அடுத்தநாள் தாங்கள் பூசைகாணப் போகவேண்டுமென்றும், பூசைக்குப் பின் கட்டளைக்குருவானவரைக் காணவேண்டுமென்றும், லூசியா தான்சொன்ன பொய்கள் எல்லாவற்றையும் அவருக்கு முன் ஒப்புக்கொண்டுவிட வேண்டுமென்றும் கடினமாய் எச்சரித்தாள்.

லூசியா இவற்றை எல்லாம் மற்ற இருபிள்ளைகளுக்கும் அறிவித்து, தங்களுக்கு ஆக்கினைகள்தான் தயாராகின்றன என்றும் சொன்னாள்.

“நாங்களும் கட்டளைச்சுவாமியாரைக் காணப்போகிறோம். எங்களைக் கூட்டிக்கொண்டு வரும்படி அவர் ஆச்சிக்கு அறிவித்திருக்கிறார். எங்களுக்கு ஆக்கினைகிடைக்கும் என்பதைப்பற்றி ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை. அப்படித்தான் அவர்கள் எங்களை அடித்தாலும் அடிக்கட்டும். அந்த அடிகளை ஆண்டவருடைய நேசத்திற்காகவும் பாவிகளுடைய மனந்திரும்புதலுக்காகவும் நாங்கள் ஏற்றுக் கொள்ளுவோம்” என்று இயாசிந்தா சொன்னாள்.

அடுத்தநாள் இரண்டுதாய்மாரும் தங்கள் பிள்ளைகளுடன் குருவானவரைக்காணப் புறப்பட்டார்கள். அதற்கு முன் மரியறோசா மீண்டும் லூசியாவை அச்சுறுத்தி அவள் சொல்லிவந்த பொய்யைக் குருவானவருக்கு அறிக்கையிடும் படியாக எச்சரித்தாள். “நீ குருவானவர் பாதத்தில் முழந்தாளிட்டு நீ பொய்பேசுகிறவள் என்று அவருக்குச் சொல்லு. அவரிடம் மன்னிப்புக்கேள். அவர் உனக்கு ஒரு அபராதம் விதிப்பார். அதை நீ செய்துமுடிப்பாய்” என்று மரியறோசா மகளுக்குப் பிரசங்கித்தாள்.

வழிநீளம் இந்த ஸ்திரி பொய்க்கும் பொய்பேசுபவர்களுக்கும் எதிராகச் சொல்லவேண்டிய கண்டனங்கள் எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டே போனாள்.

“ஆனால் ஆச்சி! நான் உள்ளபடி கண்டதைக் காணவில்லை என்று எப்படிப் பொய்சொல்லுவேன்” என்று

தாய்க்கு நடுநடுக்கத்துடன் லூசியா சொன்னாள். மரியறோசா ஒன்றும்பேசவில்லை. மகளின் கன்னத்தில் ஒரு அறை கொடுக்கவும் மறந்துபோனாள்.

கட்டளைச்சுவாமியார் பூசைசொல்லிக் கொண்டிருந்தார். எல்லாரும் பூசைகண்டார்கள். பிள்ளைகள் தாங்கள் அனுபவிக்கும் உபத்திரவங்கள் எல்லாவற்றையும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தார்கள்.

பூசைமுடிந்ததும் கோவில்வளவுக் கூடாகச்சென்று, குருமனை வாசற்படிகளின் முன்னாலுள்ள வெளிமேடையில் எல்லாரும் தங்கிநின்றார்கள். மரியறோசா மகளைநோக்கி: "நீ எனக்கு வீணாக எரிச்சல் உண்டுபண்ணாதே. நான் சொல்வது உனக்கு விளங்குகிறதா? நீ சொன்னதெல்லாம் பொய் என்று சொல்லு. அப்போது வருகிறஞாயிற்றுக் கிழமை கட்டளைச்சுவாமி சகலருக்கும் உன்கதைகளெல்லாம் பொய்யென்று கோவிலில் அறிவிப்பார். அத்தோடு எல்லாம் முடிவாய்ப்போய்விடும்." கோவாடி இறியாவுக்குச் சனங்கள் செல்லும்படி அவர்களை அனுப்பி, அவர்கள் அங்கு ஓர்மரத்தின்கீழ் கும்பிட்டு மன்றாடிக்கொண்டிருக்கச் செய்வது இக்காலத்துப் புதுமோடியான வேதமா?

தாமதமில்லாது வாசற்கதவில் தட்டினார்கள். கட்டளைச் சுவாமியாருடைய சகோதரிவந்து அவர்களுக்கு நல்வரவு கூறி அவர்கள் இருக்கும்படி ஆசனங்கள்கொடுத்துத் தயவு செய்து சற்றுநேரம் பொறுத்துக்கொள்ளும்படி கேட்டார். கட்டளைச்சுவாமியாரும் கொஞ்சநேரம் பொறுத்துவந்து அவர்களைத் தமது கருமசாலைக்குள் கூட்டிச்சென்றார்.

சுவாமியார் சிறிதேனும் கடுகடுப்பும் வெடுவெடுப்பும் இல்லாது மகா அன்புடன் அமைதியாகத் தங்களைக் கேள்விகள் கேட்டு விசாரணைசெய்வதை லூசியா அவதானித்துப் பெரிதும் வியப்புக்கொண்டாள்.

குருவானவர் வெகுநுணுக்கமாய்த் திட்பநுட்பமாய் விசாரணைசெய்தார். ஆனால் அவர் பிள்ளைகளை வெருட்டவு

மில்லை, அவர்களிற் குறைகூறவுமில்லை. ஆனாலும் பிள்ளைகள் சொல்லும் மறுமொழியில், ஒருக்கால் சொன்னதுக்கு மாறாக இன்னொருமுறை சொல்லுகிறார்களோ அல்லது அவர்களில் ஏதாவது திகைப்பும் மனக்கலக்கமும் உண்டோ என்பதை அறிவதற்குக் குருவானவர் சில தந்திர உபாயங்களைக் கைக்கொண்டார். பிரான்சீஸ் தன்னிடம் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பூரண வெண்மனசுடன் கபடின்றி ஒளிப்பு மறைப்பின்றி நேரே மறுமொழி சொன்னான்.

ஆனால் இயாசிந்தா தலையைக் கவிழ்ந்துகொண்டு ஒன்றும்பேசாது நின்றுவிட்டாள். வெகு கஷ்டப்பட்டு அவளிடமிருந்து இரண்டொரு வார்த்தைகளை மாத்திரம் பிடுங்கி எடுத்தபான்மையாய்ப் பெற்றுக்கொள்ளக் கூடியவரானார்.

வெளியில்வந்த பிற்பாடு, ஏன்? அப்படி மௌனமாய் இருந்தாய் என்று லூசியா இயாசிந்தாவைக் கேட்டவிடத்து அவள்: "நான் ஒருவருக்கும் ஒன்றும் சொல்வதில்லை என்று வாக்குக்கொடுத்ததை நீ அறிவாயே" என்றாள். விசாரணையின்முடிவு என்னவென்று ஒலிம்பியாவும் மரியறோசாவும் குருவானவரைக் கேட்டவிடத்து அவர் ஒன்றும் சொல்லாது தமது தோள்களைக் குலுக்கியதே அல்லாது, ஒரு முடிவையும் இந்த ஸ்திரீகள் பெற்றுக்கொள்ளவேயில்லை. "இவ்விஷயத்தில் நான் சொல்வது என்ன, செய்வது என்ன என்று அறியேன்" என்று மாத்திரம் குருவானவர் கடைசியாகச் சொன்னார்.

இந்த மூவரிலும் லூசியா ஒருத்தி மாத்திரம் நற்கருணை பெற்றவள் ஆனபடியால் குருவானவர் அவளுக்கு ஒரு தொகையான நன்மதிகள் கூறி அநேக வேத சாஸ்திர விஷயங்களையும் விளக்கிக் காட்டினார். குருவானவரின் விசாரணையைப்பற்றி எவ்வளவோ திடுக்காட்டம் கொண்டிருந்த லூசியா விசாரணையின் முடிவு அவ்வளவு மோசமில்லை என்று திருப்திகொண்டாள். உள்ளபடி காரியத்தை யோசித்துப் பார்க்குமிடத்து விசாரணை அவளுக்கு அனுகூலமாகவே முடிந்தது என்னலாம்.

ஆனாலும் வீட்டில் அநுபவிக்கவேண்டிய போராட்டத்துக்கு முடிவுவரவில்லை. காட்சிச் சம்பவங்களைப்பற்றி அக்கறையற்ற அந்தோனிசாந்துஸ் அதாவது லூசியாவின் தகப்பன் இந்தக் "கிழவிகள் கதைகளை"ப்பற்றி இனிமேல் கவனம் செலுத்த மனங்கொள்ளவேயில்லை. தாய் குருமனைக்குப் போனதைப்பற்றி, விசேஷமாய் விசாரணை முடிவைப்பற்றி ஒன்றுமே புருஷனுக்குச் சொல்லவில்லை. ஆனால் லூசியாவின் தமக்கைமார் குருவானவரின் விசாரணையின் முடிவாக அவளுக்கு வரக்கூடிய தண்டனைகளைப்பற்றி அவளைப் பயமுறுத்திக்கொண்டே வந்தார்கள். கட்டளைச் சுவாமியின் முடிவைக் காத்திருந்த சகலரும் அதாவது லூசியாவுக்குச் சார்பானவர்களும் எதிரானவர்களும் ஏமாந்து போனார்கள். கட்டளைக் குருவானவரும் இந்த விசாரணையினால் சந்தேகம் நீங்கினவரல்ல. தமது கிறீஸ்துவர்கள் மட்டில் தாம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்ற விஷயத்தில் அவர் மிகவும் தத்தளித்துக்கொண்டே இருந்தார். பிள்ளைகளின் நேர்மையான நடையைப்பற்றி அவர் சந்தேகத்துக்கு இடங்கொடுக்கவில்லை. ஆனால் தேவமாதாதான் அந்தப் பிள்ளைகளுக்குக் காட்சி கொடுத்தார் என்று முடிவு செய்வதில் அவர் மனம் கூடுதலான சந்தேகத்துக்கு இடங் கொடுத்துக்கொண்டே இருந்தது. "அப்படிச் சொல்ல முடியாது", "அப்படிச் சொல்ல முடியாது" என்றுதான் அடிக்கடி முணுமுணுத்துக்கொண்டிருந்தார். எப்படியானாலும் பிள்ளைகள் கோவாடி இறியாவுக்குப் போகப்படாதெனக் கட்டளை பண்ணவில்லை. பெற்றார் அவர்களுடன் பேசாது இருப்பதுதான் நலம் என்று அவர் எண்ணினார். ஏனென்றால் அங்கு பெருந்தொகையான சனங்கள் வருவது நிச்சயமானபடியால், பிள்ளைகளின் குடும்பத்தாருக்கும் அந்தச் சனங்களுக்குமிடையில் சில பேச்சுவார்த்தைகளும் வாக்குவாதங்களும் உண்டாதல் கூடும். அதை எப்படியோ தடைசெய்ய வேண்டுமென்பதே அவருடைய கருத்து. இன்னும் வினோதப்பிரியரான சனங்களுக்கிடையிற்றானும் காட்சி சம்பந்தமாய் நடந்த விஷயங்களைச் சரியாய் விசாரித்து அவற்றைப்பற்றி நியாயமான முடிவு செய்யக்கூடிய அறிவாளிகள் சிலர் இருந்தார்கள். ஆனபடி

யால் ஆடி மாசம் 13-ந் திகதியின் பின்னர் மரியரோசா தன் மகளுடன் வந்து தம்மை மீண்டும் காணும்படியாகக் கட்டளைச் சுவாமியார் கேட்டுக்கொண்டார்.

கொடிய சந்தேகம்

குருவானவருக்கும் லூசியாவுக்கும் நடந்த சம்பாஷணையில் அவர் சொல்லிய பலவித நன்மதிகளுள் சில அவளுடைய மனசில் மிகவும் ஆழமாய்ப் பதியல் ஆயின. லூசியா சில இரகசியங்களை வெளியிடப்படாதெனக் காட்சி நாயகியினால் எச்சரிக்கப்பட்டிருந்தாள். ஆதலால் சில சமயங்களில் மௌனமாயிருந்தபடியினால், பெறேயிரு என்ற அந்தக் குருவானவர் மனசில் சில தவறான பதிவுகள் உண்டாயின.

"இந்தப் பிள்ளை சொல்பவைகள் பரலோகத்திலிருந்து இவளுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளாக இருத்தல்கூடாது. எங்கள் ஆண்டவர் சில ஆத்துமாக்களுக்குச் சில வெளிப்படுத்தல்களைக் கொடுக்கும்பொழுது அவ்வாத்துமாக்கள் அவற்றைத் தங்கள் ஆத்தும குருக்களுக்கு அல்லது கட்டளைக் குருவானவருக்கு அறிவிக்கவேண்டுமென்பதுதான் பொதுவான நடப்டி. ஆனால் இந்தப் பிள்ளை அதற்கு மாறாக மௌன சாதனைக்குள் தன்னை அடைத்து வைக்கிறாள்." இவையெல்லாம் சாத்தானின் அவ தந்திரங்கள் ஆகலாம். இருந்து பார்ப்போம். நாங்கள் செய்யவேண்டியது என்ன? எண்ணவேண்டியது என்ன? என்பதைக் காலங்காட்டும்.

பின் வரப்போகிறவைகளை விவேகத்துடன் எதிர்பார்த்திருக்கும் மனநிலையைக் குருவானவர் கைக்கொண்டது உள்ளபடி நியாயமாகும். இவ்விஷயங்களில் திருச்சபையும் எவ்வித ஆத்திரமும் இல்லாது ஆ அமர யோசித்து ஆராய்ச்சி செய்தபின் மாத்திரம் ஒரு முடிவு சொல்லுவது வழக்கம்.

ஆனால் லூசியாவுக்கு ஒரு காரியம் வலிமையாக மனசில் படலாயினது. கட்டளைச் சுவாமியார் காட்சி விஷயங்கள் பசாசின் மாய்கையாகுதல் கூடும் என்று எண்ணுகிறாரே. குருமாரை மிகவும் சங்கித்து அவர்களுக்கு மகா அமைச்சல்

காண்பித்துவந்த லூசியா இந்த எண்ணத்தினால் முற்றும் மனச் சஞ்சலத்துக்குள்ளானாள்.

"இந்த எண்ணத்தினால் நான் எவ்வளவு மனவேதனைப் பட்டுக் கொண்டிருந்தேன் என்பதை மனுஷ இருதயங்களின் அந்தரங்கங்களை ஊடறுத்துச் செல்பவரான எங்கள் ஆண்டவர் தாமே அறிவார்."

"என்னை நித்திய கேட்டுக்குள்ளாக்கும்படியாகச் சாத்தான் செய்யும் அவதந்திரம் இதுவாகலாமா?" என்று லூசியா அடிக்கடி சொல்லுவாள்.

கனவுகளையும் மனமயக்குகளையும் உண்டுபண்ணுவனவும் பசாசைத்தானும் அழைக்கிறவைகளுமான பில்லி சூனியங்களைப்பற்றி லூசியா ஏலவே கேள்விப்பட்டிருக்கிறாள். சாத்தான் எப்போதும் தாறுமாறான ஒழுங்கீனங்களையும் சண்டை சச்சரவுகளையும் கொண்டுவந்து புகுத்திவிடும் எனவும் அவள் கேட்டிருக்கிறாள். உள்ளபடி இந்தக் காட்சி நாயகியின் தரிசனையின் பின் தனது வீட்டில் சந்தோஷமும் இல்லை. சமாதானமும் இல்லை என்பதையும் லூசியா அவதானித்தாள். இவைகள் எல்லாவற்றையும் யோசிக்கும் பொழுது லூசியாவின் மனசில் உண்டான கொடிய சந்தேகங்கள் மேலும் மேலும் வலிமை பெறலாயின.

படிப்படியாகத் தனது மைத்துனி மைத்துனன் ஆகிய இருவரிலும் அவளுக்குக் கவர்ச்சி அற்றுப்போயிற்று. ஆனால் இவர்களோ அவளை எப்போதும் தேடித் தேடிப் போனார்கள். லூசியா கூடியமட்டும் அவர்களை விலக்கித்தான் நடந்தாள். சில சமயங்களில் அவர்கள் அவளைத் தேடிவந்த பொழுது இவள் ஒளித்துவிடுவாள். ஒருநாள் லூசியா தனது மனத் திடுக்காட்டங்களை அவர்களுக்கு வெளியிட்டாள்.

"அது பிசாசின் வேலையல்ல. பிசாசு மகா அருவருப்பான அவலட்சணமுள்ளது. அது பூமியின்கீழ் வாசஞ்செய்கிறது. ஆனால் இந்தக் காட்சிநாயகி ஆ! எவ்வளவு பூரண அலங்காரி. அவர் மோட்சத்தை நோக்கி எழுந்தருளிப் போனதை நாங்கள் கண்டோம் என்று இயாசிந்தா சொல்லி

லூசியாவைத் தேற்றினாள். இந்த நல்ல பொருத்தமான நியாயம் இவளுடைய சந்தேகத்தை ஓரளவில் நீக்கிவிட்டது மெய். ஆனால் இந்த மாசம் முழுவதும் பரித்தியாகக் கிரிகைகளைச் செய்யவோ ஒறுத்தல் முயற்சிகளை அநுசரிக்கவோ தனக்குச் சிறிதாவது உண்மையான உற்சாகமும் ஆர்வமும் இருக்கவில்லை என்று லூசியா சொல்லியிருக்கிறாள்.

தனது பெற்றோர் சகோதரர்களும் பிடிவாதமாகத் தன்னை எதிர்த்து வருகிறபடியால் தான் சொன்னவைகள் எல்லாம் பொய் என்று சொல்லிவிட்டு எல்லாச் சச்சரவுகள் தாறுமாறுகளுக்கும் ஒரு முடிவு செய்துவிட்டால் என்ன என்றும் லூசியா சிந்தித்தாள்.

"ஒருக்காலும் அப்படிச் செய்யாதே. அப்படிச் செய்வதினால்தான் நீ படுபொய் சொல்லுகிறவள் ஆவாய் என்பது உனக்கு விளங்கவில்லையா? பொய் சொல்லுவது பாவம் அல்லவா? என்று பிரான்சீசும் இயாசிந்தாவும் அவளுக்குச் சொன்னார்கள்.

தனது சிநேகிதருடைய நிச்சய உணர்ச்சி அவளுக்குத் தைரியம் உண்டுபண்ணினது. ஆனால் இந்த மனநிலை சில காலத்துக்கு மாத்திரம் நிலைக்கலாயிற்று.

கடைசியாக ஒருநாள் லூசியா திடுக்காட்டம் உண்டுபண்ணும் கனவு கண்டாள். தான் இப்படியான அனுப்புதலுக்கு இலேசாக இடங்கொடுத்ததைப் பிசாசு அவளுக்கு நினைப்பூட்டி அவளை நகைத்துப் பரிகாசம்பண்ணித் தன்னை வலோற்காரமாக அந்தப் பிசாசு நரகத்துக்கு இழுத்துக் கொண்டு போவதாகக் கண்டாள். அந்த நரக அலகை தன்னை இறுக்கிப் பிடித்துத் திருகுவதனால் திக்குமுக்காடி நித்திரையிலே ஓலமிட்டாள். அந்தச் சத்தம் அவள் தாயையும் நித்திரையால் எழுப்பிவிட்டது.

இந்தப் பயங்கரமான கனவு அவள் மனோரூபிகரத்தில் ஆழமாக ஊன்றிப் பதிந்து அவளுடைய மன இருளை மேலும் அதிகரிக்கும்படி செய்தது.

முற்றும் அவதைரியத்துக்குள்ளாக்குதல்

இந்த அவதைரியத்தைப்பற்றி லூசியாதானே சொல்லியிருப்பதை இங்கு தருகிறோம். ஆடி மாசம் 13-ந் திகதியுங் கிட்டிவருகிறது. நான் கோவாடி இறியாவுக்குப் போவதைப்பற்றிக் கிலேசப்பட்டுக்கொண்டே இருந்தேன். ஆதலால் பின்வருமாறு யோசிக்கலானேன்.

இந்தக்காட்சி எல்லாம் பிசாசுடைய வேலையென்றால் நான் ஏன் அங்கு போவான்? ஏன் நீ போகவில்லை என்று யாராவது கேட்டால், இந்தக் காட்சி எல்லாம் பிசாசுடைய திருவிளையாடல் என்று அஞ்சுகிறேன் என்பேன். இயாசிந்தாவும் பிரான்சீசும் தங்கள் பிரியப்படி செய்யட்டும். நான் கோவாடி இறியாவுக்குப் போகேன். இந்தத் தீர்மானத்தைச் செய்து அப்படி நடக்க முடிவு செய்துகொண்டேன். அடுத்த நாள் நடக்க இருக்கும் சம்பவங்களுக்குச் சமுகமாயிருக்கும்படி ஆடி மாசம் 12-ந் திகதி பின்னேரம் பெருந்தொகையான சனங்கள் வந்திருந்தார்கள். ஆதலால் நான் பிரான்சீசையும் இயாசிந்தாவையும் அழைத்து எனது தீர்மானத்தை அவர்களுக்கு வெளியிட்டேன்.

"நாங்கள் அங்கே போகிறோம். அப்படிச் செய்யும்படி காட்சிநாயகி கட்டளை பண்ணியிருக்கிறாரே" என்று சொன்னார்கள். எனக்குப் பதிலாகக் காட்சி நாயகியுடன் தான் பேசுவதாக இயாசிந்தா ஒரு யோசனை தந்தாள். ஆனால் அவளுடன் நான் போகவில்லை என்று அவள் மனம் நொந்து அழத்தொடங்கினாள். "ஏன் அழுகிறாய்" என்று கேட்க, அவள் "நீ வரமாட்டேன்" என்கிறாய். "இல்லை, நான் வரத்தான் மாட்டேன். காட்சிநாயகி என்னைப்பற்றிக் கேட்டால் இவை எல்லாம் பிசாசின் மாயதந்திரங்கள் என்று நான் பயப்படுகிறபடியால் வரவில்லை என்று நீ சொல்லிவிடு." அதன் பின்பு நான் போய் ஒளித்துக்கொண்டேன். ஏனென்றால் என்னிடம் பல கேள்விகள் கேட்கப் பலர் வருவார்கள் என்றஞ்சி அவர்களுக்குத் தப்பிக்கொள்ளும்படியாக அப்படிச் செய்தேன். இங்கும் அங்கும் விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகள் மத்தியில்தான் இருப்பேன் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால் நானோ எங்கள் காணிக்கு அடுத்த

காணியில் அதாவது கிணற்றுக்குக் கிழக்குப் பக்கமாய் வேறொரு காணியின் வேலிக்குப் பின்னால் ஒளித்துக்கொண்டேன். பொழுதுசரிய நான் வீட்டுக்கு வரவும் ஆச்சி எனக்கு நல்ல பேச்சுக்கொடுத்தார்.

இங்கே பாருங்கள், எனது மகளைப் பாருங்கள். கவ்வைக்குதவாத எனது அர்ச்சியசிஷ்ட மகளைப் பாருங்கள் என்று பரிகாசம் பண்ணினார்.

ஆடுகளை மேய்த்துக்கொண்டு வந்த பிற்பாடு நான் அவளுக்கு விட்டநேரம் முழுவதையும் விளையாட்டில் செலவிடுகிறாள். அவள் எங்கே இருக்கிறாள் என்று தானும் அறிய முடியாதே என்று சொல்லி எனது தாய் முறுமுறுத்தார். அடுத்தநாள் கோவாடி இறியாவுக்குப் போகவேண்டிய நேரம் வந்தபொழுது என்னை அறியாமலே ஏதே ஒரு சக்தி என்னைத் தள்ளிக்கொண்டிருப்பதை உணர்ந்தேன். அந்த வலிமையான சக்தியை எதிர்க்க என்னால் முடியவில்லை. ஆகவே நான் புறப்பட்டு எனது மாமனார் வீட்டுக்கு அருகில் சென்று இயாசிந்தா இன்னும் அங்கு இருக்கிறாளோ எனப் பார்த்தேன். அவர்கள் இருவரும் கட்டில் அருகில் முழந்தாளில் இருந்து கண்ணீர் சொரிந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அப்போ என்ன? நீங்கள் அங்கு போகவில்லையா? நேரமாய்விட்டதே.

"நீ வராமல் நாங்கள் போகத் துணியவில்லை. வா வா அங்கே போவோம் வா"

"நல்லதும் நான் வருகிறேன்"

அப்போது அவர்களுடைய முகங்கள் ஆனந்த மலர்ச்சி கொண்டன. என்னுடன் அவர்கள் வந்தார்கள்.

உலக யுத்தம் முடியும்படி மன்றாடுங்கள்

தேவமாதா இரண்டாம் விசை காட்சி கொடுத்த பொழுது நாற்பது ஐம்பதுபேர் சமுகமாயிருந்தார்கள். இவர்கள் மூலமாகச் சம்பவங்கள் பத்திமா விசாரணைப் பங்குக்கு அப்பாலும் மாத்திரமல்ல அதைச் சூழஇருந்த பெருந் தேசப் பரப்பு முழுவதும் பரம்பலாயின. 13-ந் திகதி எப்போ

வருமென்று காட்சியை நம்பினவர்களும் நம்பாதவர்களும் மத்தியானம்வரையில் பெருந் தொகையானோர் கூடியிருந்தனர். மனுவல் பேதுருவும் அவன் மனைவியும் தங்கள் பிள்ளைகளுடன் அங்கு வந்திருந்தார்கள். வந்து கூடிய சனத்திரளுக்கூடாகப் பெருங் கஷ்டத்துடன்தான் ஆட்களை விலக்கி விலக்கி, முன் செல்ல வழி கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. இந்த விசைதான் பெரும் சனக்கூட்டம், பத்திமாவில் முதல் விசை வந்து கூடியது. அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரம் ஆறாயிரம் வரையில் இருக்கும் என மதிக்கப்பட்டது. இடிமுழக்கத்தோடு கூடிய மின்னலுடன் அடர்ந்த பிரகாசத்தின் மத்தியில் காட்சிநாயகி தோற்றினார்.

லூசியாவின் கேள்விப்படி எல்லாரும் முழந்தாளிட்டார்கள். லூசியா தனது சந்தேகங்களின் நிமித்தம் வெட்கப்பட்டவள்போல் ஒன்றும் பேசாதிருந்தாள். சின்ன இயாசிந்தா பேசும்படி லூசியாவுக்குத் தைரிய வார்த்தைகள் சொன்னாள். ஆதலால் லூசியா காட்சிநாயகியை நோக்கி: முன்போலவே அவர் எங்கிருந்து வருகிறார் எனவும் அவர் தங்களிடம் கேட்பது என்ன எனவும் வினவினாள். அவரும் முன்னர்போலவே மகா அன்புடன் விடை அளித்தார். அதன் பின்பு பிள்ளைகள் அவ்விடத்தில் தம்மைச் சந்திக்க அடுத்த மாசம் 13-ந் திகதி வரவேண்டும் என்றும் ஒவ்வொரு நாளும் செபமாலை சொல்லவேண்டும் என்றும் “ **விசேஷமாக உலக யுத்தம் முடிவாகும்படி மன்றாடவேண்டும்** ” என்றும் கற்பித்தார். தேவமாதாவின் மூலமாகத்தான் இவ் அனுக்கிரகத்தை மனுஷர் அடையலாமென்றும் சொன்னாள். பாவிகள் மனந்திரும்பும்படியாகப் பிள்ளைகள் மூவரும் பரித்தியாகக் கிரித்தியங்களைப் புரிந்துவர வேண்டும் எனவும் மீண்டும் காட்சிநாயகி கேட்டுக்கொண்டார். காட்சிவேளை அங்கு சமுகமாயிருந்தவர்களின் கேள்விப்படிக்கு லூசியா பரலோகத்திலிருந்து இறங்கி வந்திருக்கும் காட்சிநாயகி ஆர்என்று சொல்லும்படி மீண்டும் கேட்டாள். பரலோகவாசிதானோ என்பதை அறியும்படி ஒரு அடையாளம் தரும்படி கேட்டாள். அதற்குக் காட்சிநாயகி : **ஒவ்வொரு மாசமும் இங்கு வாருங்கள், ஐப்பசி மாசம் நான் ஆர் என்றும் உங்களிட**

மிருந்து நான் விரும்புவது என்னவென்றும் உங்களுக்கு அறிவிப்பேன். முதற் காட்சியில் பிள்ளைகளுக்குக் கொடுத்த வாக்கை மீண்டும் சொல்லிவிட்டு : “நீங்கள் சொல்வதை உண்மை என்று சகலரும் ஒத்துக்கொள்ளும்படியாக நான் அத்தினத்திற்றான் பெரிய ஒரு அற்புதம் செய்வேன் என்றும் சொன்னார்.”

இதன் பிற்பாடு லூசியா தன்னிடம் சிலர் கேட்டுக்கொண்ட மன்றாட்டங்களை அறிவித்தாள். அவை ஒவ்வொன்றுக்கும் காட்சிநாயகி தாய்க்குரிய அன்புடன் விடை கொடுத்து: “ அனுக்கிரகங்களைக் கேட்டவர்கள் எல்லாரும் வருஷம் முடியமுன் அவைகளை அடைவார்கள். ஆனால் அவர்கள் செபமாலை சொல்வதில் பிரமாணிக்கமாக இருக்க வேண்டுமென்று பதிலளித்தார்.”

இதன் பின்னர் லூசியாதானே சொல்லியிருக்கிறபடி பிள்ளைகளுடைய தளர்ந்துபோன பத்திவேகத்தை மீண்டும் புத்துயிர்பெறச் செய்யும்படியாக : “பாவிகளுக்காகப் பரித்தியாகக் கிரிகைகளைச் செய்யுங்கள். பின்வரும் செபத்தை விசேஷமாய்ப் பரித்தியாகம் செய்யும் வேளைகளில் சொல்லுங்கள்.” அதாவது: “ **யேசுவே ! உமது நேசத்துக்காகவும் பாவிகள் மனந்திரும்பும்படியாகவும் மரியாயின் மாசில்லாத இருதயத்துக்குச் செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாகவும் இந்தப் பரித்தியாகத்தை ஒப்புக் கொடுக்கிறேன்** ” என்று சொல்லும்படி காட்சிநாயகி பிள்ளைகளுக்குக் கற்பித்தார். ஈற்றில் சில பிரியாவிடை வார்த்தைகள் சொன்ன பின்பு காட்சிநாயகி முந்திய முறைகளிற் போலவே மறைந்தார்.

காட்சி வேளையில் அங்கு நின்றவர்கள் எல்லாரும், பார்வைக்கு மிகவும் பிரீதி உண்டுபண்ணும் ஒருவகை முகில் பிள்ளைகளைச் சூழவும் காட்சி நிகழ்ந்த இடத்தைச் சூழவும் கவிந்து மூடிக்கொண்டிருப்பதை அவதானித்தார்கள். அல்லாமலும் காட்சிவேளை முழுவதும் சூரியப்பிரகாசம் அதிகமாய் மங்கிப்போயிருந்ததையும் ஆகாய வெப்பமும் எவ்வளவோ தணிந்துபோயிருப்பதையும் அவதானித்தார்கள். இந்த

மாற்றம் எல்லாம் காட்சிநாயகி மறையவும் இல்லாதொழிந்தன. மூன்று பிள்ளைகளைவிட வேறு ஒருவரும் காட்சிநாயகியைக் காணும் பாக்கியம் பெறவில்லை.

லூசியாவுக்கு அதிகம் சமீபத்தில் இருந்தவர்கள் அவள் பெருமூச்சுவிடுவதையும் முறையிடு செய்வதையும் கவனித்தார்கள். அவளுடைய முகத்தில் துக்கக்குறிகளையும் கண்டார்கள். காட்சியின்போது ஏன் அவ்வளவு துக்கமாயிருந்தாய் எனச் சிலர் கேட்டார்கள். அது இரகசியம்.

நல்ல இரகசியமா? தீயதா? அது எங்கள் மூவருடையதும் நன்மையைச் சார்ந்தது. மற்றவர்களைப்பற்றி என்ன? அந்த இரகசியம் சிலருக்கு நன்மையானது. வேறு சிலருக்குத் தின்மையானது.

மகா இரகசியத்தின் ஒருபகுதி வெளியாகின்றது

இந்த மூன்றுங் காட்சியிற்தான் தேவமாதா இந்த இடையப் பிள்ளைகளுக்கு ஒரு இரகசியத்தை ஒப்படைத்து அதை ஒருவருக்கும் வெளியிடப்படாதென்று கற்பித்தார்.

இன்றைக்கு இருபத்தைந்து வருடங்களின் பிற்பாடு அந்த இரகசியத்தில் ஒரு பகுதியையாவது ஆத்துமாக்களின் நன்மைக்காக வெளிவிடத் தருணம் ஆயிற்று என்று திருச்சபை அதிகாரிகள் தீர்மானித்தார்கள்.

முற்றும் அமைச்சலின் போரூம் பரலோகத்திலிருந்து பெற்றுக்கொண்ட உத்தரவின்படியும் சிஸ்ரர் லூசியா அல்லது வியாகுல மேரி (அவர் இப்போது ஒரு கன்னியாஸ்திரி) அந்த இரகசியத்தைப்பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறுள்.

மூன்றும் காட்சியின்போது பரித்தியாகக் கிரிகைகள் செய்யுங்கள் என்று தேவமாதா சொன்னபோது அவர் முந்தின காட்சியின்போது கைகளை விரித்தமாதிரியாகத் தோற்றினார். அப்போது அந்தத் திருக்கரங்களிலிருந்து பரந்த பிரகாசக் கதிர்கள் பூமியை ஊடறுத்துச் சென்றதுபோல் தோற்றின. அப்போது நாங்கள் பிரமாண்டமான நெருப்

புக்கடல் ஒன்றைக் கண்டோம். இந்த நெருப்புக் கடலிலே கருநிறப் பிசாசுகளும் மானிட சாயலான ஆன்மாக்களும் முக்குளித்து எரிந்துகொண்டிருந்தார்கள்.

இவர்கள் எல்லாரும் உள்ளும் புறமும் காணக்கூடிய அக்கினித் தணல்போலத் தோன்றினூர்கள். நெருப்புச் சுவாலையினுல் இவர்கள் கிளப்பி உயர்த்தப்பட்டு எரிகிற சூளையில் நின்று பொறிகள் விழுவதுபோலக் கீழே விழுந்தார்கள். பெருங் கூக்குரலின் மத்தியிலே, அவநம்பிக்கையினூலும் வேதனையினூலும் உண்டான ஊளையிடுதல்களின் மத்தியிலே இவர்கள் வெந்து எரிந்துகொண்டிருந்தார்கள். இந்தக் காட்சியானது மகா திடுக்காட்டத்தையும் நடுநடுக்கத்தையும் உண்டுபண்ணுவதாயிற்று. காட்சியின்போது நான் திடுக்கிட்டுச் சத்தம் இட்டதாகச் சிலர் சொல்வதற்கு நியாயம் இதுவேயாதல்வேண்டும். பிசாசுகள் மானிட ஆன்மாக்களிலும் வித்தியாசமுடையவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் மகா அருவருப்பும், கிடுநடுக்கம் உண்டுபண்ணும் தோற்றமும், மிருகங்கள்போல், முன் ஒருபோதும் நாங்கள் காணுத மிருகங்கள்போலத் தோற்றினூர்கள். ஆனுல் பள்பளத்து எரிந்துகொண்டிருக்கும் அக்கினித் தணலிற்போல் எங்கள் பார்வை அவர்களை ஊடறுத்துச் செல்லக்கூடியதாயிருந்தது. இந்தக் காட்சி ஒரு நொடிப்பொழுது நேரத்திற்கு மாத்திரம் நிலைத்திருந்தது. எங்களை மோட்சம் கூட்டிக்கொண்டுபோவதாக ஏலவே வாக்குப்பண்ணியிருந்த எங்கள் பரலோக அன்னைக்கு நாங்கள் நன்றி செலுத்தவேண்டியவர்கள். அப்படி அவர் வாக்குப்பண்ணியிராவிட்டால் நாங்கள் அப்படி பயங்கரமான காட்சியினுல் உண்டான நடுக்கத்தினூலும் திடுக்காட்டத்தினூலும் ஏங்கி உயிர் துறந்திருப்போம். எங்களுக்கு இரங்கும்படி எங்கள் கைகளை உயர்த்தினேம். அப்போது தேவதாயார் மகா அன்புடனும் துக்கத்துடனும் சொன்னதாவது:

"இந்த நிர்ப்பாக்கிய பாவிகள் எத்தனையோபேர் புதைக்கப்படும் நரகத்தைக் கண்டீர்கள். இவர்களைக் காத்து இரட்சிக்கும்படியாக ஆண்டவர் இவ்வுலகத்தில், எனது

மாசற்ற திரு இருதயப் பத்தியை ஸ்தாபிக்க விரும்புகிறார். நான் உங்களுக்குச் சொல்லப்போகிறதைச் செய்தால் அவர்களில் அநேகர் இரட்சிக்கப்படுவார்கள். உலகத்திலும் சமாதானம் உண்டாகும்.''

(சொல்லப்போகின்றவைகளை என்றது இனிமேல் அளிக்கும் காட்சிகளில் தேவதாயார் சொல்ல இருந்ததையே சந்தேகமின்றிக் கருதுகின்றது.) உலக யுத்தமும் முடிவுக்கு வருகின்றது. ஆனால் ஆண்டவருக்குத் துரோகம் செய்வதை அறவே ஒழித்தால் அல்லாது இன்மேல் வரவிருக்கும் பாப்பாண்டவர் காலத்தில் (11-ம் பத்திநாதர்) இன்னும் மகா கொடிய யுத்தம் ஒன்று உண்டாகும்.

ஒருநாள் இரவு முன்னொருபோதும் அறியப்படாத வெளிச்சம் ஒன்று ஆகாசத்தில் பிரபை வீசும்பொழுது, அது சருவேசுரன் உங்களுக்குக் கொடுக்கும் அடையாளம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதாவது படை பஞ்சத்தினாலும், திருச்சபைக்கு எதிராகவும் பாப்பாண்டவருக்கு எதிராகவும் நடக்கும் கலாபனைகளினாலும் உலகத்துக்குத் தேவன் தமது தண்டனையை அனுப்பும் காலம் வந்துவிட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இந்தக் கேடுகள் ஒன்றும் வராது தடைசெய்யும்படி உலகம் முழுவதையும் எனது மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கும்படியாகவும் ஒவ்வொரு மாசத்தின் முதற் சனிக்கிழமையும் பரிகார நன்மை வாங்கும்படி ஏவிவிடவும் நான் வருவேன். நான் சொல்பவைகளை அநுசரித்தால் ருஷியா மனந்திரும்பும். சமாதானமும் உண்டாகும். அப்படிச் செய்யாவிட்டால் ருஷியா தனது அபத்தங்களை உலகம் முழுதும் பரப்பும். யுத்தங்களையும் திருச்சபைக்கு எதிரான கலகங்களையும் கிளப்பிவிடும். அநேகர் பிராண பரித்தியாகிகள் ஆவார்கள். பரிசுத்த பிதா மகா வேதனைப்பட வேண்டிவரும். அநேக சாதி சனங்கள் அழிந்தொழிந்து போவார்கள்.''

(இதன்பின் சொல்லப்பட்ட குறிப்புகளைத் திருச்சபை அதிகாரிகள் இன்னும் இரகசியமாக இருக்கவேண்டுமெனத் தீர்மானித்து அவற்றை வெளியிட உத்தரவு கொடுக்கவில்லை.)
'' ஈற்றில் எனது மாசற்ற இருதயம் வெற்றிகொள்ளும் ''
(இந்த வெற்றி என்ன மாதிரியாக உண்டாகும்? அது கால கதியில் மாத்திரம் அறியத்தக்கது.)

'' உலகம் முழுவதும் தேவமாதாவின் மாசற்ற இருதயத்துக்கு உள்ளபடி ஒப்புக்கொடுக்கப்படும். ஆகையால் உள்ளபடி ருஷியா மனந்திரும்பும். உலக சமாதானமும் உண்டாகும்'' என்று சிலர் மேற்சொன்னவைகளை வியாக்கியானம் செய்கிறார்கள்.

'' நான் சொன்னவைகளை ஒருவருக்கும் அறிவிக்க வேண்டாம். பிரான்சீசுக்கு அறிவிக்கலாம்'' என்று காட்சி நாயகி கடைசியாகச் சொன்னார்.

சற்று நேரத்திற்குப் பிற்பாடு நீங்கள் செபமாலை சொல்லும்பொழுது ஒவ்வொரு தசபாகத்துக்கும் பிற்பாடு '' யேசுவே எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். நரகத்தில் நாங்கள் விழாதபடி எங்களைப் பாதுகாரும். எல்லா ஆத்துமாக்களையும் விசேஷமாக உமது இரக்கம் அவசியமான சகலரையும் மோட்சத்துக்கு எடுத்துக்கொள்ளும் என்று சொல்லுங்கள் '' என்று தேவமாதா பிள்ளைகளை ஏவினார்.

தன் சொந்த நாட்டில் ஒருவனும் தீர்க்கதரிசியல்ல. கடைசியாகக் கண்ட காட்சியின் அலங்காரத்தினால் லூசியா தனது சந்தேகம் எல்லாந் தீர்ந்து நம்பிக்கையும் மனச்சமாதானமும் உடையவளானாள். தங்களுக்குச் சார்பாக ஒரு மகா அற்புதம் நிகழும் என இப்போது அவள் அறிவாள். அதனால் சகல எதிரிடைகளும் நீங்கிவிடும் என அவள் நம்பினாள். ஆனால் இதன் பின்னர்தான் மகா நிர்ப்பந்தமான உபத்திரவங்கள், காட்சி பெற்ற பிள்ளைகளுக்கு வாலாயின. மகா அற்புதம் ஒன்றைச் செய்வதாகக் காட்சிநாயகி கொடுத்த வாக்குப் போர்த்துக்கால் தேசம் எங்கும் பரவியது. அதனால் விநோதப் பிரியர் பலருக்கு அருட்சியுண்டானது மாத்திர

மல்ல, காட்சி பெற்ற பிள்ளைகள் மட்டில் அநுதாப சிந்தை உள்ளவர்கள் தொகையும் பெருகலாயிற்று. அப்படியே அவர்களில் வியப்புக் கொண்டாரும் பலர். ஆனால் அல்யுஸ்திறேல் பிரிவிலும் பத்திமாவிலும் காட்சி விஷயமாக எதிரிடையான முற்தீர்மானங்கள் ஒழியவேயில்லை. "**எவனாவது தன் சொந்த நாட்டில் தீர்க்கதரிசி அல்ல**" என்று எங்கள் ஆண்டவர்தாமே சொல்லியிருக்கிறாரே.

இயாசிந்தாவின் வீட்டார் தங்கள் பிள்ளைகள் உண்மையே பேசுகிறார்கள் என்று எப்போதும் நிச்சயமாயிருந்தார்கள் கடைசியான காட்சியின் பின்பு அவர்கள் அக்காட்சிகள் உண்மை என்பதை ஒத்துக்கொண்டார்கள். ஆனால் தங்களுடைய மனநிலையை அவர்கள் பிள்ளைகளுக்கு வெளியிடவில்லை. காட்சியின்போது நிகழ்ந்த ஆச்சரியமான சில சம்பவங்களினால் உள்ளபடி காட்சிநாயகி தாம் பரலோகத்திலிருந்து எழுந்தருளி வந்திருப்பதைக் காட்டியிருப்பதை மனுவல் பேதுருவும் அவன் மனைவி ஒலிம்பியாவும் நன்கு உணர்ந்து கொண்டார்கள்.

லூசியாவின் வீட்டில் அவள் குடும்பத்தார் முன்போல அவ்வளவு கடுமையாக அவளை நடத்தவில்லை என்பது மெய். ஆனால் அவளுடைய கதைகளினால் அநேகம் பேர் ஏய்க்கப்படுகிறார்களே என்று எண்ணி மரியறோசா ஓயாது மனம் வருந்திக் கொண்டிருந்தாள். தேவமாதா காட்சி கொடுக்கும்பொழுது பாதம் ஊன்றி நின்ற மரத்தடியில் லூசியா நாள்தோறும் வந்து செபித்து வருவாள். ஆனால் திருப்பண்டங்களைச் சேர்க்கவேண்டும் என்ற வாஞ்சையுள்ள பலர் அம்மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாய் ஒடித்துக் கொண்டு போனது மாத்திரமல்ல, கொப்புகளைத்தானும் முரித்துக்கொண்டு போய்விட்டார்கள். அன்றியும் ஒவ்வொரு நாளும் எல்லா வேளைகளிலும் அல்யுஸ்திறேல் பிரிவில் இருந்து, பிள்ளைகளிடம் பல கேள்விகளைக் கேட்க அநேகர் வந்துகொண்டிருந்தார்கள். இதனால் அவர்கள் தங்கள் மந்தைகளைக் கவனிக்கும் வேலைக்கும் இடையூறு உண்டானது.

" இந்த ஏழைச் சனங்கள் எல்லாரும் உனது கட்டுக் கதைகளினால் ஏவப்பட்டு உன்னிடம் நம்பிக்கையுடன் வரு

கிறார்கள். இவர்கள் அணுப்புண்டு போகாதிருக்கும்படி என்ன செய்வது என்று உள்ளபடி எனக்குத் தெரியவில்லையே என்று மரியறோசா லூசியாவுக்குச் சொல்லுவாள். பத்திமாவின் கட்டளைக் குருவானவர் இந்தக் காட்சி விஷயங்கள் சம்பந்தமாக வேணும்என்று எட்டத்திலே நின்றுகொண்டார். ஏனென்றால் லிஸ்போன் நகரத்துத் திருச்சபை மேலதிகாரிகள், குருமார் சகலரும் பத்திமா காட்சியளவில் மகா விவேகத்துடன் நடந்துகொள்ளவேண்டும் என எச்சரித்திருந்தார்கள்.

கத்தோலிக்க அச்சுப் பிரசுரங்கள் அக்காலத்தில் அவ்வளவு திருத்த விருத்தி பெற்றிருக்கவில்லை. ஆனபடியால் அச்சுப் பிரசுர அதிகாரிகளும் பொதுவில் இவ்விஷயத்தில் அடக்கம் உடையோராகவே இருந்தார்கள்.

ஆனால் கத்தோலிக்கர் பத்திமா காட்சி விஷயத்தில் எச்சரிப்பாயிருக்கவேண்டும். இதிலே நரக அலகையின் தந்திர உபாயங்கள் கலந்து இருக்கலாம். அல்லது திருச்சபை விரோதிகள் சிலர் கெட்ட கருத்துடன் ஆக்கிவைத்த கபட நாடகங்கள் அவற்றில் காணப்படலாம் என்ற கருத்துப்படக் கத்தோலிக்க அச்சுப்பிரசுரங்கள் சுட்டிப்பாக இடைக்கிடை சில குறிப்புகள் கூறிவரும்.

சமய விரோதிகளால் பிரசுரஞ் செய்யப்பட்டு "**சுயாதீனப் பிரசுரங்கள்**" என்ற நாமத்துடன் வெளிவரும் பத்திரிகைகள் பத்திமா விஷயத்தில் அளவுகடந்த அபிமானம் காட்டி வரலாயின. நன்றாக ருசுப்படுத்தாத பல விஷயங்களை நுணுக்கமான விபரங்களுடன் அவை வெளியிட்டன. சில உண்மையான சம்பவங்களைப் பொய்யாக்கி விட்டன. உபாயமாக எடுத்துவைத்துக் கட்டின வாலாறுகளையும் சேர்த்துவிட்டன. பொதுச் சனங்களுடைய மனசுகளைக் குழப்பி விடுவதற்கு இந்த அவதந்திரங்கள் நடைபெற்றன. வேதவிரோதிகளின் பத்திரிகைகள் சில சமயங்களில் முற்றும் நகைப்புக்கு உரியதும், நம்பமுடியாததுமான எடுத்துக் காட்டுகளையும் உபயோகித்தன. கத்தோலிக்க வேதம் மரண அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு உயிர்

கொடுப்பதற்காகக் குருமார் சனங்களின் மனசுகளிலே சில நற்பதிவுகளை உண்டுபண்ணப் பிரயாசப்படுகிறார்கள். பத்தியுள்ள சில கட்டுக்கதைகளையும் கேட்டுப், பகற் கனவுகண்ட சிறுவர் சிறுமிகளை இந்தக் குருமார் ஆகாசமட்டாய் உயர்த்திப்பிடிக்கிறார்கள். சுயலப் பிரியரான சிலர் பத்திமாவின் நிலப்பரப்பிலே அற்புத ஸ்தலம் ஒன்றை ஸ்தாபிக்கப் பிரயாசப்படுகிறார்கள். லூர்துநகரிலேபோலப் பயபத்தியும் வியாபாரப் பொருளாகிவிட்டது என்று வேத விரோதிகளின் பத்திரிகைகள் அபாண்டஞ் சொல்லத் தலைப்பட்டன. ஆனால் இந்த உலகத்தில் சருவேசுரன் தாமே இப்படிப்பட்ட சம்பவங்களை நிகழ்த்துவதற்கு முற்படக்கூடுமே என்பதைப்பற்றி ஒரு அசுகைதானும் இந்தப் பத்திரிகைகளில் காணப்படவேயில்லை.

"தகரவேலைக்காரன்" களரியில் தோற்றுகின்றான்

பத்திமா காட்சிகள் சம்பந்தமாய் திருச்சபை விரோதிகளும் குருமாரின் எதிரிகளும் அதிர்ச்சி உண்டுபண்ணத் தொடங்கினார்கள். சத்தியவேதக்காரருடைய இந்தப் புதிய பரம இரகசிய இயக்கங்களை எல்லாம் மூளையிலே களைந்து எறிந்துவிடுவது எங்ஙனம் என்று வேத விரோதிகள், பிரிமேசன் சபையார் என அழைக்கப்படும் இரகசிய கூட்டக்காரரின் சபைகளில் விவாதஞ் செய்தார்கள். சுயாதீன எண்ணங்களுக்கு மிண்டு கொடுப்பவர்களுடைய நோக்கங்களைச் சித்திகரமாக நிறைவேற்றக்கூடிய அதிகாரிகளை அரசினர் மத்தியில் தெரிவு செய்யவேண்டும். அல்லது போதிய கெட்டித்தனமுள்ள ஒரு உத்தியோகஸ்தனையாவது கண்டுபிடிக்கவேண்டும் என்று இந்த வேதவிரோதிகள் தீர்மானித்தார்கள்.

"வில்லா நோவாடி உறெம்" என்ற வட்டாரத்து அரசியல் சங்கத்தின் அதிகாரத்தின் கீழ்த்தான் பத்திமா உள்ளது. இந்த வட்டாரத்துக்குச் சேர்ந்தவர்கள் எப்போதும்போலவே இப்போதும் ஆழ்ந்த விசுவாசமும் வேத அபிமானமும் உள்ளவர்கள். ஆனால் இப்பிரிவின் அரசியற் பரிபாலனம் 1910-ம் வருடத் தேசப்புரட்சிக்காலத்தின் பிற்பாடு, அநியாயம் புரிவதில் சிறிதேனும் நாணம் அற்றவனும், ஓரவாரம் செய்வதில் அறமோசமானவனும் ஆகிய ஒருவன் வசத்திலிருந்தது. இவன் அந்த வட்டாரம் முழுவதிலும் தனி அதிகாரம் செலுத்தி, சனங்கள் எல்லாருக்கும் கிடுநடுக்கம் உண்டு பண்ணிக்கொண்டுவந்தான். இவனைத் "தகர வேலைக்காரன்" என்ற பட்டப் பெயரால் அழைப்பார்கள். இவனுடைய உண்மையான பெயர் ஆதர் ஒலிவேயிறு சாந்துஸ். பிரிமேசன் சபையாருக்காக இவன் சில காலம் ஒரு பத்திரிகை வெளியிட்டுவந்தவன். வேத விரோதிகளுக்குச் சார்பாக மகா முயற்சியுடன் வேலைசெய்து வந்தவன். 1917-ம் வருஷம் மார்கழி மாசம் சிதொனியோபாயிஸ் என்னும் அதிகாரியால் இவன் உத்தியோகத்திலிருந்தும் நீக்கப்பட்டவன். அரசாட்சியாருடன் திருப்தியீனங்கொண்டு அவர்களுக்குப் பரிநாசம் விளைக்கவேண்டி இவன் வெடிக் குண்டுகள் இரகசியமாய் ஆயத்தம் செய்கையில் குண்டுகள் வெடித்து அவலமாய்ச் செத்தான். இந்தத் துஷ்டன் பத்திமாவின் காட்சிகளைப்பற்றிக் கேள்விப்பட்டதும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களைப்பற்றியும் அறிந்துகொள்ளும்படி இடைவிடாத கண்ணும் கருத்துமாயிருந்தான். புதிய அரசினரை எதிர்க்கிறவர்கள் என்று இவன் எண்ணிய கத்தோலிக்கருடைய பிரசித்த செயல்கள் எல்லாவற்றையும் அடியோடு அழித்து ஒழித்து விடவேண்டும் என்று தீர்மானித்தான். வட்டாரத்து அதிகாரியாகிய இவனால் எவரெவர் அழைக்கப்பட்டார்களோ அவர்கள் எல்லாரும் இவன்முன் கிடுகிடுத்து நடுங்குவார்கள். இவன் மூன்று பிள்ளைகளையும் விசாரணைக்கு அழைத்தான். இப்படிப்பட்டவன் விசாரணைக்கு அழைத்தபோது அந்தச் சின்னஞ்சிறிய பிள்ளைகளுக்கும் அவர்கள் பெற்றோருக்கும் எவ்வித சஞ்சலம் உண்டானது என ஊகித்துக்கொள்ளலாம். குறித்த ஒரு நேரத்தில் பிள்ளைகளும் பெற்றோரும் அரசினர் பரிபாலனன்முன் வெளிப்படவேண்டும் என்று கட்டளையாயிற்று. அல்யுஸ்திறேல் பிரிவில் இருந்து ஊறெம் என்ற இடத்துக்கு ஏறக்குறைய மூன்று

கட்டை தூரமிருக்கும். அக்காலத்தில் ஒன்றில் நடந்து போகவேண்டும் அல்லது குதிரையிலோ கழுதையிலோ ஏறிப் பயணம் செய்யவேண்டும். காட்சி கண்டவர்களைப் போன்ற சிறுவர். சிறுமிகளால் இது செய்துகொள்ள முடியவே முடியாது.

மனுவேல் மார்த்தோ தான்போவதல்லாது ஒருபோதும் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போகமுடியாது என்றுவிட்டான். கால் நடையாய்ப்போக அவர்களால் முடியாது; குதிரைகளில் ஏறி இருக்கத் தெரியாத இந்தக் குழந்தைகள் எப்படிச் சவாரிபோவார்கள். இந்தச் சின்னவயதுப் பிள்ளைகளைப் பரிபாலனருடைய நீதாசனத்தின்முன் அழைப்பதற்கு ஒரு நியாயமும் இல்லை என்று விட்டான் மனுவேல் மார்த்தோ. "எனது மகள் போகட்டும் அவள்தானே மறுமொழி சொல்லட்டும். எனக்கு இந்த விஷயங்களைப்பற்றி ஒன்றுமே விளங்காது. அவள் பொய் சொன்னால் அதற்குத் தண்டனை பெறுவது மெத்த நல்லகாரியம்" என்று விட்டாள் மரியறோசா. அடுத்தநாள் வெள்ளென அந்தோனி சாந்துஸ் தனது மகள் லூசியாவை ஒரு கழுதையில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டான். வீட்டார் எல்லாரும் லூசியாவை நன்றாக வெருட்டிப் பயப்படுத்தி அவள் சொன்னவைகள் எல்லாம் பொய்யான அளப்புக் கதைகள் என அந்தப் பொல்லாத மனிதனுக்குமுன் ஒத்துக்கொள்ளும்படி, அவள் தீர்மானஞ் செய்யச் சொல்லி ஏவினார்கள்.

லூசியாவின் மாமன், அந்தோனி சாந்துஸ் வீட்டிக்கருகில்போய் அவனைக் கூப்பிட்டபொழுது அவன் ஆயத்தமாக இருக்கவில்லை. ஆனபடியால் சிறிது வேளை தாமதிக்க வேண்டி இருந்தது. அதினால் லூசியா ஓடிப்போய் இயாசிந்தாவைக்கண்டு அவளுக்குப் பிரியாவிடை சொல்லப் பிரயாசப்பட்டாள். இயாசிந்தா இன்னும் நித்திரையால் எழும்பவில்லை. லூசியாவைச் சகலரும் அவ்வளவாக வெருட்டிப் பயப்படுத்தினபடியால், தான் இனிமேல் இயாசிந்தாவைக் காணமுடியாது என்றுதான் அவள் எண்ணினாள்.

"நான் இதோ எழும்பிவிட்டேன். பிரான்சீசையும் எழுப்பப்போகிறேன். நாங்கள் இருவரும் கிணற்றுப்பக்கமாக இருந்து உனக்காக மன்றாடுவோம். நீ திரும்பி வரும்போது எங்களை அங்கேதான் காணுவாய் என்றாள்.

இயாசிந்தா, அவர்கள் என்னைக் கொன்றால்?

கொன்றாலா? கொன்றால் நானும் பிரான்சீசும் உன்னைப்போல்தான் என்று அவர்களுக்குச் சொல்லு. நாங்களும் சாக ஆயத்தம் என்று சொல்லு.

ஐயையோ! இந்த இரண்டு சிறுவரும் எவ்வளவாகத்தான் மனவேதனைப்பட்டார்கள். ஏனென்றால் தங்கள் அருமைச் சிநேகிதியை அதிகாரிகள் கொன்றுதான் போடுவார்கள் என்று அவர்கள் முற்றாய் நம்பிக்கொண்டார்கள்.

தனது தகப்பனும் தாயும் தன்னைப்பற்றிச் சிறிதேனும் அக்கறையற்றவர்களாயிருக்கிறார்களே என்பதை அவதானித்த லூசியா சொல்லரிய மனவேதனைப்பட்டாள். கிராமவாசிகளுடைய நூதனப்பிரியத்துக்கு இடங்கொடாது இருக்கும்படி அவர்கள் ஆகக்கூடாத ஒரு வழியாற் போனார்கள். குன்றுகளின் புறக்கோணத்தினால் நேரே செல்லும்பாதை வழியாகப் பயணம் பண்ணினார்கள். லூசியா ஏறிப்போன கழுதை வழுக்கலான கல்லுகளில் தடக்குப்பட்டதினால் கழுதையிலிருந்து மூன்றுவிசையாக அவள் கீழே விழுந்தாள்.

குறித்த நேரத்திலே அந்தோனி சாந்துஸ் பரிபாலனர் முன் வெளிப்பட்டான். அவன் நேரில் லூசியாவிடம்தானே கேள்விகள் கேட்டான். அந்நேரம் இவளுடைய தகப்பனும் மாமனும் இவளுக்கு அறிமுகமில்லாத வேறு சில உத்தியோகஸ்தர்களும் சமுகமாக இருந்தார்கள்.

காட்சி சம்பந்தமாய் லூசியா வெளிவிடாதிருந்த இரகசியத்தை அறிந்துவிட இத்துஷ்டன் தலையைக்குத்திப் புரளி ஆடினான். இந்தப் பரம இரகசியங்களுக்கெல்லாம் திறவு

கோல் இவள் மறைத்துவைத்திருக்கும் இரகசியம்தான் என்று அந்தத் தகரவேலைக்காரன் நம்பிக்கொண்டான். குருமாருடைய தந்திர உபாய வழிகளைப்பற்றியே அவன் இரவும் பகலும் இடைவிடாது கனவு கண்டுகொண்டிருந்தபடியால், இந்தக் காட்சி விஷயமான படுமுடிச்சுகளை அவிழ்ப்பதற்கு லூசியாவின் இரகசியம் வெளிவரவேண்டும் என்று அவன் ஆத்திரப்பட்டான். அல்லாமலும் கோவாடி இரியாவுக்கு இனிமேல் ஒருபோதும் போவதில்லை என்று லூசியாவைக்கொண்டு வாக்குப்பண்ணுவிக்கவும் தெண்டித்தான் அந்தத் "தகர வேலைக்கார"னாகிய பரிபாலனன்.

அவன் கைக்கொண்ட உபாயங்களும் வெருட்டுகளும் மிரட்டல்களும் ஒன்றுமே லூசியாவில் பலிக்கவில்லை. அவன் ஒன்றுக்கும் ஆற்றாமல் விசாரணையை நிறுத்த வேண்டியதாயிற்று. ஆனால் லூசியாவை வெருட்டி அச்சுறுத்தும்படியாக, எப்படியோ தனது நோக்கங்களைத் தான் நிறைவேற்றுவதாகவும், வேணுமானால் இப்படி அடங்காமல் இருக்கும் உன்னைக் கொல்லவேண்டிவந்தாலும் கொல்லுவேன் என்றும் அவன் எச்சரித்தான்.

இதன் பின்னர் மனுவேல் பேதுரு தனது பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு வாராததைப்பற்றி அவனுக்கு நீண்ட ஒரு பிரசங்கம் செய்தான். ஆனால் மனுவல் பேதுரு தகர வேலைக்காரனுடைய வெள்வெருட்டுகளுக்கு அஞ்சினவனல்ல.

தன் பிள்ளைகளுக்குச் சார்பாக அவன் வலிமையான நியாயங்களைச் சொல்லி அவர்கள் கண்ட காட்சியில் தனக்குப் பூரண விசுவாசம் உண்டெனப் பிரசித்தமாக அறிக்கையிட்டான். அதுமட்டோ தகரவேலைக்காரனுடைய நளினங்களுக்குத்தக்க மறுத்தானும் கொடுத்து அவனுடைய வாய்க்கொழுப்பை அடக்க மனுவல் பேதுரு பின்வாங்கவேயில்லை. அதன் பின்பு மூவரும் போகலாம்என உத்தரவு பெற்றார்கள்.

அல்புஸ்திறேலில் வந்து சேர்ந்தவுடன் கிணற்றுக்குப் பிற்கேயிருக்கும் தனது சிநேகிதர்களைக் காணும்படி லூசியா ஓடிப்போனாள். முன் சொல்லிவைத்தபடி அவர்கள் அங்குதான் இருந்தார்கள். ஆனால் இருவரும் முழந்தாளிலிருந்து

அழுகையோடும் கண்ணீரோடும் செபம் செய்துகொண்டிருந்தனர். முகத்தை இரண்டு கையாலும் மூடிக்கொண்டு கிணற்றுக்கட்டில் நெற்றியை வைத்துக்கொண்டுதான் செபம் செய்தார்கள். நாள் முழுதும் இவ்விதமே அவர்கள் லூசியாவுக்காகச் செபம் செய்தார்கள். லூசியாவைக் கண்டதும் அவர்கள் சொல்லரிய ஆச்சரியப்பட்டார்கள். "என்ன லூசியா நீதானா? உனது தமக்கை இங்கு தண்ணீர் மொள்ள வந்தாள். உன்னை ஏலவே கொன்றுபோட்டார்கள் என்று அவள் சொன்னாள். நாங்கள் உன்னை நினைத்து அழுது உனக்காகச் செபம் செய்தோம்."

லூசியா, இயாசிந்தாவை அரவணைத்து முத்தமிட்டு "நாங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை. இந்தக் காட்சிநாயகி எங்களை எப்போதும் பாதுகாக்கிறார். அவர் எங்களுடைய பெரிய சிநேகிதி."

சில நாட்களின் பின்பு மூன்று பொலிசுமார் பிள்ளைகளை விசாரணை செய்யும்படி அல்புஸ்திறேல் பிரிவுக்கு வந்தார்கள். இவர்கள் தங்கள் விசாரணையை மிகவும் வெறுப்புக்குரிய தன்மையாகத்தான் நடத்தினார்கள். விசாரணை முடிந்து அவர்கள் புறப்படும்பொழுது,

"நீங்கள் உங்களுடைய இரகசியத்தை வெளியிடத் தீர்மானம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் அரசியற் பரிபாலனத்துக்குரியவர்கள், உங்களைக் கொன்றுபோட்டுச் சகலத்துக்கும் முடிவுகட்டிப்போடுவார்கள்" என வெருட்டினார்கள்.

பொலிசுமார் சொன்னதைக் கேட்டதும் இயாசிந்தா மகா சந்தோஷங்கொண்டு: "வாய்ச்சுப்போச்சுது, **எனக்கு யேசுநாதரிலும் தேவமாதாவிலும் மெத்த மெத்த அன்பு. எவ்வளவோ கூடின சீக்கிரத்தில் நாங்கள் அவர்களைக் காண்போம்**" என்று ஆனந்தக் கூச்சலிட்டாள்.

அந்த மலைநாட்டு வீடுகளில் எல்லாம் **தகரவேலைக்காரன்** பிள்ளைகளைக் கொல்லத் தேடுகிறான் என்ற கதை காட்டுத் தீபோலப் பரம்பியது. லூசியாவுக்கு மாமி முறை

யான ஒரு மனுஷி, அல்யுஸ்திறேல் பிரிவுக்குச் சேராத ஒரு இடத்தில் வசித்து வந்தபடியாலும், அவ்விடத்தில் அந்தத் துஷ்டனுக்கு அதிகாரம் இல்லாதபடியாலும் பிள்ளைகளைச் சில நாளைக்குத் தன்னுடன் அனுப்பிவிடும்படி அவர்களின் பெற்றோரைக் கேட்டாள். இந்தக் கேள்விக்குக் கடைசியாகப் பிள்ளைகள்தான் மறுமொழி சொன்னார்கள். எப்போதும்போலத் தங்களுக்குள் கலந்து ஆலோசித்த பின்பு.

“எங்களைக் கொன்றால் காரியமில்லை. நாங்கள் மோட்சத்துக்குப் போவோம்” என்று கிறுங்காத மனசுடன் விடை இறுத்தார்கள்.

ஆவணி மாசம் 13-ந் திகதி நிகழ்ந்த படுபயங்கரங்கள்

கோவாடி இறியாவில் நிகழ்ந்த சம்பவங்களைப்பற்றி வேத விரோதிகள் பெரும் அமளியும் கூக்குரலும் உண்டாக்கினார்கள். இவர்களுடைய ஆரவாரங்களினால் இவர்கள் எண்ணியதுக்கு முற்றும் மாறான நன்மைகளே உண்டாயின. அவவிசுவாசிகள் பிரிமேசன் சபையாரின் ஆதரவில் வெளிப்பட்ட பத்திரிகைகள் எல்லாம் காட்சிச் சம்பவங்களைப் போர்த்துக்கால் தேசம் எங்கும் பரப்புவனவாயின. இந்த அவவிசுவாசிகளுட் சிலர் உள்ளபடி துட்டர். சிலர் ஒன்றையும் நம்ப மனமில்லாதவர்கள். சகலத்தையும்பற்றிச் சந்தேகப்படுபவர்கள். ஆனால் இவர்கள் தங்கள் பத்திரிகைகளிற் காட்சிச் சம்பவங்களை வெளியிட்டது மாத்திரமல்ல, காட்சி கண்ட பிள்ளைகளின் பிரதிமைகளையும் ஏதோ மகா குற்றவாளிகளின் பிரதிமைப்படங்கள் எனப் பிரசுரம் செய்தார்கள். அல்லாமலும் தகரவேலைக்காரனுடைய திருவிளையாடல்களை அங்கீகரியாத அனேகரும் இருந்தார்கள்.

இவர்கள் இப்படிச் சகலத்தையும் பிரசித்தம்செய்துவிட்டபடியாற்றான், ஆவணி மாசம் 13-ந் தேதி நடக்கும் என வாக்குப்பண்ணப்பட்ட காட்சிக்குப் பெருந்திரளான சனங்கள் கோவாடி இறியாவில் அந்தோனி சாந்துஸ் என்பவனுடைய காணியில் வந்து கூடினார்கள்.

லூசியாதானே சொல்லியிருக்கிறபடி பதின்மூன்றாந் திகதிக்கு முந்தின நாள் பின்னேரம் நாலுபக்கத்திலுமிருந்து அனேக சனங்கள் வந்தார்கள். அவர்கள் எல்லாரும் எங்களைக் காணவும், எங்களிடம் பல கேள்விகளைக் கேட்கவும், அவர்களுக்காக நாங்கள் தேவமாதாவிடம் இரந்துகொள்ள விரும்பிய மன்றாட்டங்களை எங்களுக்கு அறிவிக்கவும் ஆசித்தார்கள். விளையாட்டுப்பிள்ளைகளின் கூட்டத்தில் இருந்த பம்பரம்போல நாங்கள் சனங்கள் மத்தியிலிருந்தோம். தங்கள் மனக்கவலைகளை எங்களுக்குச் சொல்லிப்போடவேண்டுமென்று ஒவ்வொருவரும் எங்களைத் தங்கள் தங்கள் பக்கத்துக்கு இழுத்தார்கள். நாங்கள் ஒருவருக்குமே மறுமொழி சொல்ல முடியாதிருந்தது.

இவ்வித சங்கடங்களின் மத்தியில் பிள்ளைகள் கஷ்டப்பட்டிருக்கும்போது, அரசியற் பரிபாலனன், தான் மனுவேல் மார்த்தோவின் வீட்டிலே இருப்பதாகவும் அங்கு பிள்ளைகள் மூவரும் வரவேண்டும் என்றும் கட்டளை அனுப்பியிருந்தான்.

அந்தோனி சாந்துஸ் பரிபாலனனுடைய மிரட்டல்களின் நிமித்தம் தன்மகள் லூசியாவை அவ்விடம் கூட்டிச்சென்றான். அவன் போகும்பொழுது பிரான்சீஸ், இயாசிந்தா ஆகிய இருவரையும் அவன் விசாரணை செய்துகொண்டிருந்தான். தன்னுடைய கந்தோரில் லூசியாவிடமிருந்து அறிந்துவிடப் பிரயாசப்பட்ட இரகசியங்களை இப்போது இந்த இரண்டு சிறுவரிடம் இருந்தாவது அறிந்துவிடலாம் என்று அவன் மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். பிள்ளைகள் இரகசியத்தைச் சொல்லவோ, கோவாடி இறியாவுக்குப் போவதில்லை என்று வாக்குப்பண்ணவோ, சம்மதிக்கவேயில்லை. பரிபாலனன் பிள்ளைகளுக்கு அன்புகாட்டி அவர்களை வசியப்படுத்தப்பார்த்தான். ஏரோதன், தானும் திவ்விய பாலனை வணங்க விரும்புவதாக நடித்தமாதிரியாக இந்த **தகரவேலைக்காரனும்** நடித்து, தானும் காட்சி நடக்கும் இடத்திற் சமுகமாக இருக்க விரும்புவதாகப் பொய்சொல்லி “நான் தொம்மை அப்பரைப்போன்றவன்; நான் கண்டுதான்

விசுவசிப்பேன்" என்றான். தன்னுடைய வண்டியிலே ஏற்றி அவர்களைக் கோவாடி இறியாவுக்குக் கொண்டுபோய்ச்சேர்த்து விடுவதாக வஞ்சகமாக அவன் சொன்னான். ஆனால் அவனுடைய உபசாரத்தைப் பிள்ளைகள் வேண்டாம் என்றுவிட்டனர். பெற்றாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்போது அவன் பிள்ளைகளைப்பார்த்து: "நீங்கள் கட்டளைச் சுவாமியிடம் போங்கள். அவர் சமுகத்தில் நான் உங்களுடன் சம்பாஷிக்கவேண்டும். அவ்விடமிருந்து நீங்கள் கோவாடி இறியாவுக்குப் போகலாம் என்றான். கடைசியில் மனுவல் பேதுருவுடன் பிள்ளைகள் கட்டளைச் சுவாமியாரிடம்போனார்கள். அவர்களுக்குமுன் அவன் தனது வண்டியில் அங்கு போயிருந்தான். அங்கே இந்த அதிகாரி பிள்ளைகளை குருமனை விருந்தையிற் சந்தித்தான். பெருந்தொகையான சனம் அங்கு வந்து நின்றபடியால் அத்துஷ்டன் பிள்ளைகளுடனும் மனுவல் பேதுருவுடனும் வெகு சிநேக பான்மையாகச் சம்பாஷிப்பவன்போற் பாசாங்கு பண்ணினான்.

கோவாடி இறியாவுக்குக் காட்சிநாயகியைப் பிள்ளைகள் சந்திக்கப் போகவேண்டிய நேரமும் கிட்டியது. ஆதலால், அந்தப் பரிபாலனனாகிய துஷ்டனும், அவன் கூட்டாளிமாரும் வெகு திட்பநுட்பமாய் ஏலவே யோசித்து ஆயத்தப்படுத்தி வைத்த திட்டம் ஒன்றை நிறைவேற்றத் தீர்மானித்தார்கள். அவன் தனது திட்டத்தை மிகவும் இரகசியமாகத்தான் வைத்துக்கொண்டான். வெளிவிட்டால் சனக்கும்பல் அவனிடமிருந்து பிள்ளைகளைப் பறித்துப்போடுவர் என்று அஞ்சினான்.

ஆதலால் தானும் காட்சிபார்க்கப் போகவேண்டுமென்று மாசாலம்பண்ணி, கோவாடி இறியாவுக்கு விரைவில்போய்ச் சேரும்படியாகப் பிள்ளைகளையும் தனது வண்டியில் வரும்படி கேட்டான். மனுவல் பேதுரு அதற்கு மறுத்துப் பிள்ளைகள் நடந்துபோகலாம் என்றான். ஆனால் பரிபாலனன் பிடிவாதமாய்நின்று வண்டியில் போவதுதான் சனக்கும்பலை எளிதிற் கடந்து போவதற்கு வசதி என்று சொல்லிச் சகலரையும் வசியப்படுத்தியபடியினால், மனுவல் பேதுருவின் கட்-

டளைப்படி லூசியா, முதல் வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். இவளுடைய சிநேகிதர்களாகிய மற்ற இருவரும் இவள்பின் இரதத்தில் ஏறினார்கள். ஆனால் போகும் வழியில் இரதம் வலதுபக்கமாகத் திரும்பி "வில்லா நோவாடி உறெம்" என்ற இடத்தை நோக்கிச் சென்றது. "போகவேண்டியது இந்தப்பக்கமாக அல்லவே" என்றாள் லூசியா. நாங்கள் உறெம் ஊருக்குப் போகிறோம். 'அப்பகுதிக் கட்டளைச் சுவாமியும் உங்களை விசாரணைசெய்ய விரும்புகிறார்" என்றான் அந்த அவகடம் நிறைந்த துஷ்டன். அங்கிருந்து நாங்கள் மோட்டார் இரதத்தில் திரும்பி நேரகாலத்துக்கு கோவாடி இறியாவுக்கு வந்துவிடுவோம் என்றான். இந்த மறுமொழியினால் பிள்ளைகள் சிறிது மனந்தேறினாலும், விரைவில் தாங்கள் முற்றும் அறைப்புண்டுபோனதைக் கண்டுகொண்டனர். உறெம் ஊரைச் சேர்ந்ததும் தங்களைச் சீக்கிரம் கட்டளைச் சுவாமியிடம் கூட்டிக்கொண்டு போகும்படி பிள்ளைகள் ஆத்திரப்பட்டார்கள். ஆனால் அதற்குமுன் பசியாறவேணும் என்று இவர்களுக்குச் சொன்னான் பரிபாலனன்.

காட்சிக்குக் குறிக்கப்பட்ட நேரமும் கடந்து, அதன்பின், பிள்ளைகள் தங்களுடைய உண்மையான நிலைமை என்னவென்பதைக் கண்டுபிடித்து தங்கள் பரலோகக் காட்சிநாயகியைத் தரிசிக்கும் பாக்கியத்தை இழந்துவிட்டதை எண்ணி எண்ணி மனம் புண்ணாகி வருந்தினார்கள்.

தங்கள் குடும்பத்தாரும் தங்களைக் கைவிட்டு விட்டார்களே என்பதை எண்ணித்தான் பிள்ளைகள் தங்கள் தனிமையினால் கொடிய மனவேதனை அனுபவித்தார்கள். இதுதான் அந்தநாளில் இம்மூன்று பிள்ளைகளும் அனுபவித்த ஆகக் குரூரமான வேதனையாகும். எவ்வித உதவியுமின்றி பரலோக நாயகியின் சத்துருவின் வசத்தில் அகப்பட்டுக்கொண்டோமே என்று எண்ணினார்கள். ஆனால் இந்த நிர்ப்பந்தத்தில் இருப்பது தாங்கள் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கக் கூடிய சிறந்த பரித்தியாகக் கிரிகை ஆயிற்றே என்பதுதான் இவர்களுக்கிருந்த ஒரேஒரு ஆறுதலாகும்.

கோவாடி இறியாவில் கூடின சனக்கும்பல்

தகர வேலைக்காரனின் திருவிளையாடல்களெல்லாம் இவ்வாறிருக்க, கோவாடி இறியாவில் 18,000 பேருக்கு மேற்பட்ட சனக்கும்பல்கள் வந்துகூடிப் பிள்ளைகள் எப்போ வருவார்கள், எப்போ வருவார்கள் என்று வழிநீளம் பார்த்துப் பார்த்து, விறுவிறுப்புடன் காத்துக்கொண்டிருந்தார்கள். போகிற வருகிற வழிகளிலும், சுற்றுடலில் உள்ள நில புலங்களிலும் நூற்றுக்கணக்கான, அல்ல அல்ல, ஆயிரக்கணக்கான, பலவகையான இரதங்கள் வந்து நின்றன. குதிரைகளிலும் கழுதைகளிலும் கோவேறுகழுதைகளிலும் துவிசக்கர வண்டிகளிலும், சனங்கள் வந்து அந்த வாகனங்கள் எல்லாவற்றையும் எவ்வித ஒழுங்குமின்றிக் குறுக்கும் மறுக்கும் நிரைத்துவிட்டுப் பிள்ளைகளின் வருகையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். இந்தத் தனிமையான மலைநாட்டுக் கோணத்துக்கு ஒவ்வொருவரும் தனக்குத் தனக்கு இயன்ற உபாயங்களின்படி ஒருவகையில் வந்து சேர்ந்துவிட்டார்கள்.

இப்படி வந்து கூடினவர்களுள், பெருந்தொகையானோர் பயபத்தியுள்ள நல்ல கிறீஸ்தவர்கள். வினோதப்பிரியர் அல்ல. தேவதாயார் பாதம் ஊன்றிநின்ற மேற்படி மரத்தில் மருந்துக்குத்தானும் ஒரு இலையும் இல்லை. அவைகளைச் சனங்கள் கொய்துபோட்டார்கள். கொப்புகளைத் தானும் முறித்து எடுத்துப்போய்விட்டார்கள். இந்த மரத்தைச் சூழவர இருந்து செபமாலை சொல்லிக்கொண்டு அல்லது பயபத்திக்குரிய சங்கீதங்கள் பாடிக்கொண்டு யாத்திரிகள் பிள்ளைகளின் வருகையைக் காத்திருந்தார்கள்.

மத்தியானமும் ஆயிற்று, இன்னும் பிள்ளைகள் வரவில்லை. சிறிதுநேரம் பொறுமையுடன் சனங்கள் காத்திருந்தார்கள். அப்போதும் பிள்ளைகளின் தலைக்கறுப்புத்தானுமில்லை. விரைவில் உண்மைச் சம்பவம் வெளிப்பட்டது. அரசியற் பரிபாலனன் இவர்களை நீதிவிசாரணைச் சங்கத்துக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டான் என்ற சங்கதி பரவியது. வெடிக்குண்டில் நெருப்புத் தாவியதுபோலச்

சனங்களுக்குட் பெரும் ஆர்ப்பரிப்பும் கோபாவேசமும் உண்டாயிற்று. உடனுக்குடனே எல்லாரும் திரண்டுபோய் தகர வேலைக்காரனின் எளிய தொழிலுக்கு நியாயம் என்னவென்று கேட்கவேண்டுமென்று பரபரத்தார்கள். ஆனால் அவனுடைய நல்ல அதிஷ்டம். அதே நேரத்திற் கோவாடி இறியாவில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தினாற் சனங்களுடைய கவனம் முழுவதும் அச்சம்பவத்திற் செல்லலாயிற்று. கோவாடி இறியாவிற் காத்துக்கொண்டிருந்த சனங்கள் எல்லாரும் இருந்தாற்போல, அண்டகோளங்கள் எல்லாவற்றையும் திடுக்கிடச் செய்யும் இடி-முழக்கம் ஒன்று புகாரின் நிறந்தானும் இல்லாத சுத்தவான் மண்டலத்தில் அதிருவதைக் கேட்டார்கள். அதே சமயத்தில் ஆகாசத்தை ஊடறுத்துச் செல்லும் மகா பிரகாசமுள்ள மின்னலையும் கண்டார்கள். அதன் பின்பு முற்காட்சிகளிற்போல, காட்சிநாயகியும் பிள்ளைகளும் அங்கிருந்ததுபோலவே சகலமும் நடைபெற்றன. முற்காட்சிகளிலும் காட்சிநாயகியின் வருகைக்கு முன்னோடியாக இருந்தது பிரபைவீசும் மின்னலேயாம். மின்னலின் பின்பு "ஷேண்" மரத்தருகிற் பார்வைக்கு மிகவும் பிரீதியான வெண் முகிற்கூட்டம் ஒன்று சேர்ந்தது. அந்த முகில், சில நிமிஷங்களுக்கு மரத்தருகில் உலாவியபின், மேலுக்கு எழுந்து கலைந்துபோயிற்று. காட்சிநாயகி உள்ளபடியே காட்சி கொடுத்ததுபோல, அங்குநின்ற சனங்களில் மனப்பதிவு உண்டாகி எல்லாரும் திருப்தியானார்கள்.

வானமண்டலத்தில் உண்டான இந்த நவமான மாற்றங்களைப்பற்றிச் சனங்கள் கலந்து சம்பாஷித்ததால், அவர்களிடம் முன்னிருந்த மன ஆத்திரம் படிப்படியாகக் குறைந்துபோனது. ஆதலால் அவர்கள் எல்லாரும், காட்சித் தலத்தை விட்டு நீங்கிக் கிராமத்துட் புகுந்து, பிள்ளைகளுக்கு நிகழ்ந்ததென்ன என்பதைப்பற்றி விசாரித்தார்கள்.

சிறைவாசம்

போர்த்துக்காலிற் குடியரசு ஆரம்பமான காலத்திற் திருச்சபைக்கும், அரசாங்கத்துக்கும், எவ்வித தொடர்புமிருக்கப்படாதென்பதைப்பற்றிக் கட்டளைச் சட்டம் விதிக்

கப்பட்டது. அந்தச் சட்டத்தின்படி சமயாசாரச் சடங்குகள், கோவிலினுள்ளேயல்லாது, வெளியிடங்களில் நடைபெறப்படாது. அந்தோனி சாந்துஸ் என்பவனுடைய நிலபுலங்கள் தேவ ஆராதனைக்குரிய இடமல்ல, ஆனபடியால் அவற்றில் நடக்கும் சமயாசாரங்களும் அவ்வாசாரங்களுக்குச் சனங்கள் கூடுவதும் சட்டவிரோதம். அரசினர் பரிபாலனன், தேசசட்டத்திற் தனக்கு மகா அபிமானம் உண்டென நடித்தான். விசேஷமாக இந்தக் காட்சி விஷயமாக, நடைபெறும் சமயாசாரங்களை அழித்து ஒழித்துவிடவேண்டும் என்று அபிமானம் பூண்டவன் ஆனான். ஆதலால் ஆயிரக்கணக்கான கிறீஸ்தவர்களைக் கைது செய்வதிலும் பார்க்க இந்த மூன்று பிள்ளைகளையும் பிடித்துச் சிறையில் அடைப்பது எளிது என்பதை உணர்ந்தான். அல்லாமலும் பிள்ளைகளைச் சிறையில் அடைத்துவிட்டால் பரலோகத்துக்கும் பூலோகத்துக்குமிடையில் உள்ள இந்தப் பரம இரகசியம் நிறைந்த சம்பாஷணைகளைத் தடுத்துவிடலாம் என்றும் காட்சியின் நிமித்தம் வந்துகூடிய சனத்திரளைக் கலைத்துவிடலாம் என்றும் அவன் வெறும் பேய்த்தனமாக எண்ணினான். ஆனால் வேதவிசுவாசத்தைத் துணிகரமாய் அறிக்கையிட்டு நின்ற இந்த மூன்று சிறுவர்களின் மனதை அவன் ஒரு அணுவளவேனும் அசைக்க முடியாதவனானான்.

பிள்ளைகள் சிறிது உணவு உண்டபின் தங்கள் வீட்டுக்குத் திரும்பிப்போகவேண்டும் என விரும்பினர். ஆனால் அந்தத் துஷ்டன், காட்சிநாயகியிடமிருந்து பிள்ளைகள் அறிந்த இரகசியத்தை வெளியிடும்படி பிடிவாதமாயிருந்தான். ஆனாற் பிள்ளைகள் அவனிலும் கூடின பிடிவாதத்துடன் இரகசியத்தை வெளிவிட மறுத்தபடியால் இவர்களைத் தனது வீட்டின் ஒரு அறையில் அடைத்துவைத்து இவர்கள் இரகசியத்தை வெளிவிட்டாலன்றி ஒருபோதும் வெளியேபோக விடப்படமாட்டார்கள் எனப் பயமுறுத்தினான். அந்தத் துஷ்டனுடைய மனைவி நல்லவளாக இருந்தபடியால் இவர்களை அவள் நன்றாகப் பராமரித்து இவர்கள்

கொடிய உபத்திரவங்களுக்குள்ளான மூன்று நாளும் போதியளவு தக்கமாதிரியாக இவர்களைக் கவனித்துவந்தாள்.

அடுத்தநாள் பிள்ளைகள் மூவரையும் பரிபாலனின் ஆலோசனைச் சங்கத்துக்கு அழைத்தார்கள். அழைத்து இவர்களை மீண்டும் விசாரணை செய்தார்கள். இவர்கள் தங்கள் இரகசியங்களை வெளியிட மனங்கொள்ளும்படியாக, இவர்களுக்குச் சில பொற்காசுகளையும் கொடுத்தார்கள். பிள்ளைகளோ தங்களுக்குச் சம்பவித்தவைகள் எல்லாவற்றையும் திட்பநுட்பமாகச் சொன்னார்கள். ஆனால் இரகசியத்தை வெளியிட முற்றாக மறுத்தார்கள். காட்சிநாயகிக்குத் தாங்கள் கொடுத்த வாக்கில், இவர்கள் அணுவளவேனும், பிரமாணிக்கவீனம் காண்பிக்கவேயில்லை. மீண்டும் இவர்களைப் பரிபாலனின் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுவந்து, நூறாயிரம் விதமாக இவர்களைத் தொந்தரவு செய்து, இவர்களிடமிருந்து இரகசியத்தை அறிந்துவிடப்பார்த்தான். ஆனாற் கல்லிலே நார் உரிக்கலாம். பட்டகட்டையிற் பூப்பறிக்கலாம். பிள்ளைகளுடைய நாவிலிருந்து இவர்களின் இரகசியத்தை வெளியிடும் ஒரு அசுகையைத்தானும் பெற்றுக்கொள்ள எவராலும் இயலாதுபோயிற்று.

தங்கள் பரலோகத்துக் காட்சிநாயகியின் மட்டில் வீரத்துவம் வாய்ந்த பிரமாணிக்கமுள்ள, இந்த மூன்று சிறுவர்களையும், சிறைச்சாலையிற் சாதாரணமான குற்றவாளிகளுடன் அடைத்துவைத்தார்கள். இவர்கள் தங்கள் இரகசியங்களை வெளியிடுமட்டும் விடுதலை பெறுவதுமில்லை என்று இவர்களை மிரட்டி அச்சுறுத்தினார்கள்.

“ **நீங்கள் இரகசியத்தை வெளிவிடத் தாமசம் செய்தால், உங்களைக் கோதிக்கிற எண்ணெயிலிட்டுப் பொரித்துப் போடுவோம்** ” என்று இந்த நவீன நாகரீகம் உள்ளார் இக்குழந்தைகளை வெருட்டினார்கள்.

இவர்களுடன் ஒரே சிறைச்சாலையில் அடைபட்டிருந்த சாதாரண குற்றவாளிகள் இப்பிள்ளைகளுடன் சேர்ந்து செபமாலை சொல்லிய மனோகரமான சம்பவத்தை, இவ்விடத்திற்றான்சொல்லவேண்டும்.

சிறைவாசம்

லூசியாவும் இவளுடைய சிநேகிதர்களும் சகலராலும் கைவிடப்பட்டிருந்தாலும், தங்கள்பெற்றார்தானும் தங்களைக்கைவிட்டுவிட்டாலும் பரலோகக் காட்சி நாயகிக்குத் தாங்கள் கொடுத்தவாக்கை அதாவது செபம் செய்து, பாவிகளின் மனந்திரும்புதலுக்காகப் பரித்தியாகம் புரியும் வாக்கை, மறக்கவில்லை. சிறைச்சாலையிலே, இவர்களுடைய மனசில் எத்தனையோ பயங்கரங்களும், திடுக்காட்டங்களும் உண்டாகியிருக்கும். அவைகள் எப்படிப்பட்டவைகள் என்பதை நாங்கள் ஒருவகையில், ஊகித்துக்கொள்ளலாம். அல்லாமலும், என்னதான் சம்பவித்தாலும் தங்கள் இரகசியங்களை வெளிவிடுவதில்லையென இவர்கள் தீர்மானித்துக்கொண்டபடியால், தங்களைக் கொன்றுதான் போடுவார்களென்று, பிள்ளைகள் நிச்சயம்பண்ணிக்கொண்டார்கள்.

இயாசிந்தா, தான் அனுபவித்த வேதனைகளின் நிமித்தமும், சங்கடங்களின் நிமித்தமும் அழத் தொடங்கினாள். லூசியா இவளுக்கு ஆறுதல் சொன்னாள்.

“உங்கள் இரகசியங்களைச் சொல்லிவிட்டுத் தப்பிஓடுங்கள் தங்கச்சிமாரே. அந்த அம்மாவுக்குப் பிரியமில்லாவிட்டால் உங்களுக்கு என்ன?” என்றார்கள் இவர்களுடன் கூட இருந்த மற்ற மறியற்காரர்.

“ஒருக்காலுமில்லை, அதுமாத்திரம் முடியாது. நான் சாக ஆயத்தம்” என்றாள் இயாசிந்தா.

அதன் பின்பு பிள்ளைகள் மூவரும் தங்களுக்காக மாத்திரமல்லப் பாவிகள் மனந்திரும்பும்படியாகவும் மன்றாடினார்கள். இயாசிந்தாவிடம் ஒரு வரவணிக்கமிருந்தது. அதை ஒரு மறியற்காரன் வாங்கிச் சுவரில் ஒருஆணியை அறைந்து, அதில் ஆசாரத்துடன் அதனைத் தொங்கவைத்தான். அந்த வரவணிக்கத்துக்கு முன் மூவரும் முழந்தாளிட்டு மகாபத்தி ஆசாரத்துடன் செபமாலை சொன்னார்கள். அதைக்கண்ட மறியற்காரரும், இவர்களுடன் முழந்தாளிட்டுத் தாங்கள் அறிந்தளவு மறுமொழி சொல்லிச் செபித்தார்கள்.

ஆ! நன்முன்மாதிரிகையாகிய அப்போஸ்தலத்துவமே! பரித்தியாகக் கிரிகைகளின் வல்லமையே! கோவாடி இறியாவில் எங்கள் மூன்று சிறுவரும் அடைந்துகொண்ட தேவவரப்பிரசாதத்தின் சக்தியானது வில்லா நோவாடி உறெம் ஊரின் சிறையாளர் மட்டிலும் செல்வது ஆயிற்றே.

செபமாலை முடிந்ததும் இயாசிந்தா ஒரு மூலையிற்போய் அழுதுகொண்டிருந்தாள். அப்போது லூசியா இவளை அணுகிப் பாவிகள் மனந்திரும்பும்படியாக, இவள் அனுபவிக்கும் வேதனைகளை ஒப்புக்கொடுக்க இவளுக்குப் பிரியமில்லையா? எனக் கேட்டான்.

ஆம்! ஆம்! அதுவே எனது முழுவிருப்பம். ஆனால் நான் ஆச்சியை நினைத்து என்னை அறியாமலே அழுகிறேன் என்றாள் இயாசிந்தா. தனது வீட்டார் தன்னை மறந்துவிட்டதும், தன்தாய் அங்கு இல்லாதிருப்பதும் தான், விசேஷமாக இவளுடைய மனவருத்தத்துக்குக் காரணங்கள். ஆத

லாற் கண்ணீர்தோய்ந்த முகத்துடன், “என் தாய் தகப்பன், சகோதரங்களோ, இனசனரோ, எவராவது என்னைத்தேடி வரவில்லையே. அவர்கள் இப்போது என்னைப்பற்றிக் கவலை இல்லாதவர்களாகிவிட்டார்கள். ஆச்சியை என்றாலும் நான் கண்டாலோ” என்றாள்.

பிரான்சீஸ், தன் சகோதரிக்கு ஆறுதல் சொல்லித் தங்கச்சி அழாதே; எங்களுடைய மனவருத்தங்கள் எல்லாவற்றையும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போமாக. ஆச்சியைக் காணாவிட்டாற் சற்றுப் பொறுமையாயிரு. அந்தத் துக்கத்தையும் பாவிகள் மனந்திரும்பும்படி ஒப்புக்கொடு. தேவமாதா எங்களைக்காண வராவிட்டால், அதுதான் பெருங்கெடுதி, அதுதான் எனக்குப் பெரும்வேதனை உண்டாக்கும். ஆனால் அந்த மனவேதனையையும் பாவிகள் மனந்திரும்பும்படியாக, நான் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். பிரான்சீஸ் இப்படிச் சொல்லிவிட்டு, இரண்டு கைகளையும் எடுத்துக் கும்பிட்டுப் பரலோகத்தை அண்ணார்ந்துபார்த்து: “**என் யேசுவே எல்லாம் உமது நேசத்துக்காக, பாவிகள் மனம் திரும்புவதற்காக**” என்று பத்தி உருக்கத்துடன் சொன்னான். இயாசிந்தா **பாப்பாண்டவருக்காகவும், மரியாயின் மாசில்லாத இருதயத்துக்கு எதிராகச் செய்யப்படும் அவமானங்களுக்குப் பரிகாரமாகவும்** என்று தமையனுடைய செபத்துடன் சேர்த்துச்சொன்னாள். இவ்வித நிர்ப்பந்தங்களின் மத்தியிலேதானும், தாங்கள் காட்சிக்காரர், பலிப்பொருட்கள் என்றளவில், மற்றவர்களுடன் கலந்து பேசுவதற்குப் போதிய மனவலிமையுடையவளாயிருந்தாள் சின்ன இயாசிந்தா.

பாவிகள் மனந்திரும்பவும், பாப்பாண்டவருக்காகவும், மரியாயின் மாசில்லாத இருதயத்துக்கு எதிராகச் செய்யப்படும் அவமானங்களுக்குப் பரிகாரமாகவும், இம் மூவரும் தங்கள் பரித்தியாகங்களை ஒப்புக்கொடுத்துவந்தார்கள். இந்த மூன்று கருத்துகளிலும் ஒவ்வொருவரும், விசேஷமாக ஒரு கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இவர்கள் தீர்மானித்தார்கள். தீர்மானித்துச் சகலத்தையும் நிரைப்பிடித்துக்கொண்டு, இயாசிந்தா தான் முதன்முதல் தனது கருத்

தைத் தெரிவுசெய்ய வேண்டுமென லூசியா கேட்டாள். “**எனக்கு எல்லாம் வேண்டும்; எல்லாக் கருத்திலும் எனக்கு மெத்தப்பிரியம்**” என்றாள் இயாசிந்தா. ஆதலால் அந்தத் தீர்மானம் பலிதப்படவில்லை.

கோதிக்கிற எண்ணெய்க் கிடாரம்

பிள்ளைகள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட அன்று பின்னேரமே மீண்டும் இவர்களை விசாரணைக்கு அழைத்தார்கள். இவர்களை எட்பிரமாணமேனும் அசைக்க முடியாது என்பதைக் கண்ட அதிகாரிகள், கடைசியாக வினோதமான உபாய தந்திரம் ஒன்றைக் கைக்கொண்டார்கள். கொதிக்கிற எண்ணெய்க் கிடாரம் ஒன்றை ஒரு கீழ்உத்தியோகஸ்தனைக்கொண்டு உயரத்தில் கட்டித் தூக்கிவிட்டார்கள். தூக்கிப்போட்டுப் பிள்ளைகளை வேறு ஒரு அறைக்குள் விட்டு “நீங்கள் சொல்லவேண்டியதை நல்லமனசுடன் சுயாதீனமாகச் சொல்லாவிட்டால், வலோற்காரத்துக்கென்றாலும் அமைவீர்கள். நீங்கள் உங்கள் இரகசியத்தை வெளிவிடாவிட்டால், துட்டப்பிள்ளைகளே! உங்களை உயிரோடு பொரிக்கப்போகிறோம் என்று அண்டகோளங்கள் எல்லாம் கிடுகிடுக்கும்படி அதிகாரி ஆர்ப்பரித்தான்.

இயாசிந்தா ஒரு பக்கத்திற்போய் ஒரு ஜன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டு நின்றாள்.

வெளியிலே நடப்பதென்னவென்று பொழுதுபோக்காய்ப் பார்ப்பதுக்காகத்தான் இயாசிந்த அப்படிச் செய்தாள் என்று லூசியா எண்ணினாள். ஆனால் அவள் புறம்பாய்நின்று அழும்படிதான் அப்படிச் செய்தாள் என்று லூசியா விரைவிற் கண்டுபிடித்தாள்.

என் ? இப்படி அழுகிறாய்.

அப்பு ஆச்சியை நாங்கள் காணவிடாமல் எங்களைக் கொல்லப்போகிறார்கள். அப்போ இந்தப் பரித்தியாகத்தை, இந்தப்பலியை, பாவிகள் மனந்திரும்பும்படியாக நீ ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்க விருப்பமில்லையா ?

ஆம் ஆம் அதுதான் எனது ஆசை என்று சொல்லிவிட்டு, அழுது அழுது இரண்டு கைகளையும் எடுத்துக் கும்

பிட்டுத் தனது வழமையான காணிக்கையை ஒப்புக் கொடுத்தாள்.

இதற்கிடையில் அந்தக் கொடுங்கோலனான அதிகாரி பிள்ளைகள் இருந்த அறைக்குள் வந்து, ஒன்றில் உண்மையைச் சொல்லுங்கள் அல்லது கொதிக்கிற எண்ணெயிற் பொசுங்கிப் பொரிக்கப்பட ஆயத்தமாய் இருங்கள். சமையலறையில் இப்போதும் எண்ணெய் கொதித்துக்கொண்டேயிருக்கிறது என்று, கேட்பவர் காதுகள் செவிடுபடக்கூடிய தொனியுடன் கெர்ச்சித்தான்.

ஆனால் அந்த அந்தரித்த குழந்தைகள் நாங்கள் ஒருபோதும் பொய் பேசுவதில்லை ஐயா என்றார்கள். அப்போது அந்தக் கொடியதுஷ்டன் பிரான்சீசைப்பார்த்து: “நீ ஏதோ இரகசியம் வைத்திருக்கிறாய் என்று மாய்மாலம் பண்ணுகிறாய், அது என்ன சொல்லு” என்றான்.

“நான் சொல்லமுடியாது”

சொல்ல முடியாதா? நல்லது நீ சொல்ல முடியும் எனக் காட்டப்போகிறேன் என்று சொல்லிவிட்டு, அவன் அப்பிள்ளையை வேறு ஒரு அறைக்குள் இழுத்துக்கொண்டு போனான். சிறிதுவேளையின் பின்பு அவன் மற்றப் பிள்ளைகள் இருந்த சாலைக்கு வந்தான்.

இங்கே பார் ஒருவனைப் பொரித்து முடிந்தது. இனி உன்னுடைய முறை என்று சொல்லி இயாசிந்தாவைத் திருகத் திருகவிழித்து: உனது இரகசியத்தைச் சொல்லு என்று கத்தினான்.

“நான் அதை ஒருவருக்கும் சொல்லமாட்டேன்.”

சொல்லமாட்டாயா? நல்லது சொல்லத்தான் மாட்டாயோ பார்ப்போம்.

அந்தக் கொடியவன் இயாசிந்தாவைக் கையில் வலோற்காரமாகப் பிடித்து இழுத்து, அவள் அழ, அழ வேறு ஒரு அறைக்குட் கொண்டுபோனான். அதன் பின்பு இந்தவிதமான நாடகம் லூசியாமட்டிலும் நடந்தது.

இவைகளைப்பற்றி எல்லாம் அவள் என்ன நினைத்தாள் என்று சிலர் அந்தப் பைத்தியக் கூட்டங்களின் முடிவில்

இவளிடம் கேட்டபொழுது: “நான் செத்தால் அது என்னுடைய நன்மைக்குத்தான் என்று நம்பிக்கையுடன் இருந்தேன். ஆனால் நான் பயப்படவே இல்லை. என்னைத் தேவமாதாவின் கரங்களில் ஒப்பித்துவிட்டு, மனச்சமாதானத்துடன் இருந்தேன் என்றாள்.

தகரவேலைக்காரன் இப்படியாய் நாடகம் நடித்ததெல்லாம் பிள்ளைகளை வெருட்டிப் பயமுறுத்துதற்கே. ஆனால் லூசியா மற்ற இரண்டு பிள்ளைகளையும் அறையிற் கண்டபொழுது அவர்கள் இன்னும் சிறிது பயப்பட்டுக்கொண்டிருந்தாலும் நல்ல சுகசேமமாயிருந்தார்கள். இப்படியான நிலையில் அங்குநின்ற காவற்காரரில் ஒருவன் இவர்கள் மூன்று பேரும் ஒருமிக்க எண்ணெய்க் கிடாரத்திற் போட்டுப் பொரிக்கப்படுவார்கள் என்று சொல்லி மேலும் இவர்களை வெருட்டப்பார்த்தான். பிள்ளைகளை வெருட்டியதெல்லாம் விழலாய் முடிந்தாலும், அந்தத்துஷ்டர் மனம் இன்னும் முற்றாக மாறவில்லை. முந்தின நாள் இரவைப் பரிபாலனின் வீட்டிற் செலவிட்டார்கள் அல்லவா? எமது மூன்று சிறுவரும். ஆதலால் அங்குதான் மீண்டும் அவன் இவர்களைக் கூட்டிக் கொண்டு வரும்படி கட்டளையிட்டான்.

அடுத்தநாள் ஆவணி மாசம் 15-ந் திகதி தேவமாதாவின் ஆரோபணத் திருநாள். அன்றைக்குப் பூசைகாணக் கிடைக்கவில்லையே என்று அந்தப் பிள்ளைகளுக்கிருந்த துக்கம் சொல்லுந்தரமன்று. மிகவும் வெள்ளென இவர்கள் மீண்டும் விசாரணைச் சங்கத்தின்முன் நிறுத்தப்பட்டார்கள். விசாரணையின்போது நயமும் பயமும் காட்டி அவர்களை வசியப்படுத்தப்பார்த்தார்கள். ஆனால் இச்சிறுவர்களுடைய ஒளிப்பு மறைப்பற்ற தன்மையும், நிஷ்கபடமும் இவர்களுடைய வயசுக்குமேற்பட்ட தைரியமும், தேவசத்துராதிகளின் எண்ணங்கள், நோக்கங்கள் எல்லாவற்றையும் அறம்புறமாக்கிவிட்டன. இதன்பின்னர் இவர்களிடமிருந்து இரகசியத்தைப் பறித்தெடுக்க முயற்சிப்படுதல், விழலிலும் விழல் என்பதைக்கண்ட அந்தப் பரிபாலன துஷ்டன் இவர்களை மீண்டும் பத்திமாவுக்கு அனுப்பிவிடத் தீர்மானித்தான்.

அவன் திருநாட்பாடற்பூசை நேரம் கோவிலில் வந்து சேர்ந்து இரண்டு நாட்களின் முன் இவர்களைத் தந்திரமாகப் பிடித்த குருமனையின் விருந்தையில் இவர்களை இறக்கிவிட்டுக் குருவானவர் வருமட்டும், இவர்களுடன் அவ்விருந்தையிற்றானே காத்திருந்தான். சனங்கள் எல்லாரும் கோவிலுக்குள் இருந்தார்கள். மனுவல் மார்த்து வெளியே வந்ததும் குருமனையின் விருந்தையைப் பார்க்கும்படி, சிலர் அவனுக்குச் சொன்னார்கள். கட்டளைச் சுவாமியாரின் வீட்டு விருந்தைப்படியில் உனது பிள்ளைகள் நிற்கிறார்களே என்று சனங்கள் சொன்னதும் மனுவல் மார்த்து அவர்களிடம் ஓடிப் போனான். தகரவேலைக்காரன் மாசற்ற செம்மறிப்புருவை என நடித்துப் பாசாங்குபண்ணினான். "எல்லாம் நல்ல முடிவுக்குவந்தது. உன் பிள்ளைகள் கோவாடி இறியாவுக்குத் தடையின்றிப்போகலாம். (அவன் எவ்வளவு படுபொய்யன். இவர்கள் அங்கு போகப்படாதென்றும் போனால் மீண்டும் சிறைப்படுத்தப் படுவார்களென்றும் இவர்களை ஏலவே அச்சுறுத்தியிருக்கிறான். என்ன வெட்கங்கெட்ட மாய்மாலம்.) ஆனால் இவர்களை நீங்களும் கவனித்துக் கொள்ளவேணும். இவர்கள் உள்ளபடி நோயாளிகள், இவர்களின் நோயால் இவர்கள் பகற்கனாக்களைக் காணுகிறார்கள்."

அவன் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில், வளை தண்டங்கள் கையிற்கொண்டிருந்த ஒரு கூட்டம் வாலிபர்கள் குருமனையைநோக்கி வந்துகொண்டிருந்தார்கள். அவர்களுடைய வருகையின்போக்கு **தகரவேலைக்காரனுக்கு** அவ்வளவு திடாரிக்கம் உண்டுபண்ணுவதாக இருக்கவில்லை. அவர்களுடைய இயக்கத்தைக் கண்டவுடன் அந்தத் துஷ்டன் மனுவல் பேதுரு மார்த்துவை, அடுத்த தவறணையில் தாக சாந்தி செய்ய வரும்படி தந்திரமாக அழைத்தான். வாலிபர் கலகம் செய்வார்கள் என அஞ்சி அதைத்தடுத்து விடும்படியாக, மனுவல் பேதுரு மார்த்துவும் அதற்குச்சம்மதித்தான்.

இந்தப் பிள்ளைகளை உபத்திரவப்படுத்தினவனும் இவர்களுடைய தகப்பனும் அவ்வளவு சிநேகபான்மை உடையவர்களாக இருப்பதை வாலிபர்கண்டு ஒன்றும்செய்யாது போய் விட்டார்கள். இதற்கிடையில் லூசியா, பிரான்சிஸ், இயா

சிந்தா ஆகிய மூவரும் ஓடிப்போய்த் தங்கள் பெற்றாரைக் கட்டி அரவணைத்து முத்தமிட்ட பின்பு, தங்களைச் சிறை மீட்ட தேவதாயாருக்கு நன்றிசெலுத்தக் கோவாடி இறியாவுக்கு விரைந்து சென்றார்கள்.

சிறையிலிருந்த மூன்று நாட்களும், லூசியா தனது குடும்பத்தைப்பற்றி, ஒன்றுமே அறியாதிருந்தாள். தனது மகளைச் சிறைப்படுத்தப் பரிபாலனன் கைக்கொண்ட உபாயங்கள் தந்திரங்களைப்பற்றி மரியறோசாவுக்குச் சிலர் சொன்னபொழுது:

"அது மெத்தத் திறம் என்றாள்."

"என்ன திறம் என்கிறாய் அது எப்படி?"

எப்படியென்று சொல்லுகிறேன் கேள். எனது மகள் பொய் சொன்னால், அவள் தனக்குரிய தண்டனையைத்தானே பெறுவாள். அவள் சொல்வது மெய்என்றால், அவளை விடுதலையாக்கத் தேவமாதாவுக்குத் தெரியும்.

ஆனால் அவளுடைய மைத்துனி ஒலிம்பியா தனது பிள்ளைகளைப்பற்றி, உள்ளபடி வெகு அங்கலாய்ப்புக் கொண்டாள். தன்னுடைய மூத்த ஆண்பிள்ளைகளில், ஒருவனை வில்லாடி நோவா என்ற இடத்துக்கு அனுப்பிப் பிள்ளைகளுடைய சுகசேமத்தைப்பற்றி விசாரித்து அறிந்தாள். பிரான்சிஸ், இயாசிந்தா ஆகிய இவர்களுடைய இருதயங்களிலிருந்து, பெரும் பாரச்சுமை இறக்கப்பட்டது போலாயிற்று.

எப்படியோ காட்சிநாயகி பிள்ளைகளுக்குக் காட்சி அளிக்கவே அளித்தார்

வில்லாடி நோவாவிலிருந்து திரும்பிவந்து, நாலுநாட் சென்றபின்பு லூசியா பிரான்சிசுடனும், தனது மூத்த தமையன்மாருள் ஒருவனாகிய ஜோனுடனும் "**வலின்ஹோஸ்**" என்னும் இடத்தில் மந்தைகளை மேய்த்துக்கொண்டிருந்தாள். இந்த வலின்ஹோஸ் என்பது அல்யுஸ்திறேல் பிரிவுக்கும் கபேக்கோ குன்றுகளுக்குமிடையில் உள்ள ஒரு இடம். அங்கு நிற்கும்பொழுது கோவாடி இறியாவில் காட்சி நிகழ்ந்தவேளை காணப்பட்ட அதேமாதிரியான மாற்றங்கள் இங்கும் ஆகாயத்திற் காணப்படுவதைப் பிள்ளைகள் அவதானித்தார்கள்.

இந்த மாற்றத்தைக் கண்டதும் பிள்ளைகளுக்கு உண்டான ஆனந்தத்தை என்னென்று சொல்வோம். ஆவணி மாசம் 13-ந் திகதி அவர்களுக்கு நேர்ந்த சகலவிதமான நிர்ப்பந்தங்களுள் எல்லாம் ஆகப்பெரியது, இவர்கள் தேவதாயாரின் காட்சியை இழந்துவிட்டதேயாகும். இனிமேல் அடுத்த மாசம் பதின்மூன்றும் திகதிக்குமுன் தாங்கள் அத்திருத்தாயாரின் காட்சி பெறமாட்டார்கள் என்றே எண்ணிக் கொண்டிருந்தார்கள். கோவாடி இறியாவிற்போலவே, இந்த இடத்திலும், ஷேன் என்ற கருவாலி மரங்கள் இருந்தன. இம்மரங்களில் ஒன்றிற் பாதம்ஊன்றி அந்த அலங்காரநாயகி காட்சியளித்தனர்.

ஆறு நாட்களுக்குமுன் தமது சின்னச் சிநேகிதர்கள் தம்மைக்காணுது தடை செய்யப்பட்டதைப் பற்றி அவர் மனம் வருந்தினர். வேத விரோதிகளான துஷ்டரின் ஓரவாரமான நடபடிகள் நிமித்தம் ஐப்பசி மாசம் நடக்கவிருக்கும் மகா அற்புதம் பிரதாபமகிமையிற் சிறிது குறைவுடையதாகவே இருக்கும் என்று, காட்சிநாயகி பிள்ளைகளுக்கு அறிவித்தார். இந்த வேதவிரோதிகள் மனந்திரும்பும்படியாக, பிள்ளைகள் மன்றாட வேண்டும் என்று, காட்சி

நாயகி பிள்ளைகளுக்கு நன்மதிகூறிப் பின்வருமாறு தமது சம்பாஷணையை முடித்தனர்.

"சேபம் செய்யுங்கள். அதிகம் அதிகம் சேபம்செய்யுங்கள். பாவிகளுக்காகப் பரித்தியாகக் கிரிகைகள் புரியுங்கள். எத்தனையோபேர் நரகத்துக்குப் போகிறுர்கள். ஏனென்றுல் அவர்களுக்காகப் பரித்தியாகக் கிரிகை செய்வாரில்லை."

என்ன விஷயத்திலும் புத்தி யோசனையுடன் நடக்கும் குணமுடைய லூசியா, காட்சிநாயகியை நோக்கி: கோவாடி இறியாவில் விசுவாசிகள் ஒப்புக்கொடுக்கும் காணிக்கைப் பணத்தை என்னசெய்வது என்று கேட்டாள்.

செபமாலைநாயகியின் அடுத்துவரும் திருநாளை ஆடம்பரமாகக்கொண்டாட அப்பணத்தைச் செலவிடவேண்டுமெனத் தேவமாதா சொன்னுர். அந்தத் திருநாளுக்குச் சுரூப எழுந்தேற்றச் சிவிகைகள் இரண்டு வேண்டும். ஒன்று பொன்மயமானதாயும் மற்றது வெள்ளிமயமானதாயும் இருத்தல் வேண்டும். பொற்சிவிகையை லூசியாவும் இயாசிந்தாவும் வெண்ணிற அங்கிஅணிந்த வேறிரு பெண்பிள்ளைகளும் காவிச் செல்லவேண்டும். வெள்ளிச் சிவிகையைப் பிரான்சீசும், வெண்ணிற உடையணிந்த அவனுடைய கூட்டாளிகள் மூவரும் காவிச்செல்லவேண்டும். மிச்சமாக இருக்கும் பணம் கோவாடி இறியாவில் ஒரு சின்னக் கோவில்கட்ட உபயோகிக்கப்படவேண்டும் என்று தேவமாதா பிள்ளைகளுக்குக் கற்பித்தார். இந்தக்காட்சியும் முற்காட்சிகளைப்போலவே ஒரு கால் மணித்தியாலம் நிலைத்தது. அதன்பின்பு புரட்டாசி மாசம் 13-ந் திகதி மீண்டும் காட்சிநாயகியைச் சந்திக்குமட்டும், பிள்ளைகள் அவருக்குப் பிரியாவிடை கூறினுர்கள்.

லூசியாவுடைய தமையன் ஜோண அங்கு இருந்திருந்தாலும் அவன் காட்சியைக் காணவில்லை. ஆகாயத்திற் சூரிய வெளிச்சம் மங்கியிருப்பதை மாத்திரம் அவதானித்தான். காட்சிமுடிந்து தேவமாதா திரும்பிப்போகும்பொழுதும், ஏதோ ஒரு பெரிய குண்டு வெடித்ததுபோன்ற சத்தம் அவனுக்குக் கேட்டது.

கோவாடி இறியாவில் தேவமாதா பாதம்ஊன்றிய மரக்கொப்புகளை யாத்திரிகள் வெட்டிக்கொண்டு போவதைப்பற்றிப் பிள்ளைகள் முறையீடு செய்தார்கள். ஆனால் “வலின் ஹோஸ்” காட்சியின்போது தேவமாதா பாதம்ஊன்றிய மரக்கொப்புகளைப் பிள்ளைகள்தானே வெட்டி வீட்டுக்குக் கொண்டுபோனார்கள்.

அந்தோனி சாந்துஸ் வீட்டுக்கருகாற் போகையில் இவர்கள் சற்றே தரித்துப் புதிய காட்சியைப்பற்றி அறிவித்தார்கள். “மாமி ! இன்றைக்கும் நாங்கள் தேவமாதாவின் காட்சியைக் கண்டோம்” என்று மரியறோசாவுக்குச் சொன்னார்கள். உங்களுக்குத் தேவமாதாவின் காட்சி காண்பதல்லாது வேறு அலுவல் இல்லைப்போலும் ; நீங்கள் எல்லாரும் படு பொய்யர்.

ஆம் ஆம், நாங்கள் கண்டோம். இந்தக் கொப்புகளைப் பார், ஒன்றில் மாதா ஒரு பாதத்தையும் மற்றதில் மற்றப் பாதத்தையும் ஊன்றி நின்றார், இங்கே பார் மாமி.

மரியறோசா கொப்புகளைக் கையில் வாங்கினாள். உடனுக்குடனே அங்கிருந்தவர்கள் எல்லாரும் முன்னொருபோதும் நுகர்ந்துஇராத, எவாலும் அறியப்படாத, ஒரு வாசனைத்திரவியத்திலிருந்து புறப்பட்டாற்போல, அக்கொப்புகளிலிருந்து நாசிக்கு மகா மதுரமான நறுமணம் வீசிக்கொண்டிருந்தது. இந்த விநோதமான சம்பவம் மரியறோசாவின் மனதில் ஆழமாக ஊன்றிப்பதிந்தது. ஏலவே 13-ந் திகதி நடந்த ஆச்சரியங்களைக் கேள்விப்பட்டபின், அவள் மகா அருட்சிகொண்டவளாக இருந்தாள். இதன்பின் தன்மகள் லூசியா பொய்பேசுகிறவள் அல்லவென்பது அவள் மனசில் வெளிகொள்ளலாயிற்று. லூசியாவுக்கெதிராகத் தனது மூத்த பெண்பிள்ளைகள் பிடிவாதஞ்சாதித்தால் அந்தோனியோ தானும் இன்றுதொட்டு அவர்களைக் கண்டனம்செய்யத் தொடங்கிவிட்டான்.

“இவளைச் சும்மாவிட்டுவிடுங்கள் இவள் சொல்வதெல்லாம் உண்மையோ அறியோம். ஆனால அவைகள் பொய்யென்று அத்தாட்சிப்படுத்தவும் ஒரு நியாயமுமில்லை”என்று

அந்தோனியோ லூசியாவுக்குச் சார்பாக நியாயம் சொல்வான்.

புரட்டாசி மாசத்துக் காட்சி

காட்சிநாயகியை ஒரு மாசத்துக்கு ஒருவிசை மாத்திரம் தரிசிப்பதென்றால் அது பற்றாது. லூசியா, பிரான்சீஸ். இயாசிந்தா என்ற மூவரும், இடைவிடாது அந்தக் காட்சிநாயகியின் தரிசனையை அனுபவிக்க ஆசித்தார்கள். அவருக்குச் சொல்லவேண்டிய எத்தனையோ விஷயங்கள் பிள்ளைகளிடம் உண்டே.

வேத விரோதிகளுடைய வீண்தர்க்கவாதங்கள் முடிந்தபாடில்லை. பிள்ளைகளைக் காணும்பொழுதெல்லாம் அவர்கள் நளினமான குறிப்புரைகள் கூறிவந்தார்கள். சில சமயங்களில் பகை. வர்மத்துடன் கூடியவார்த்தைகளும் பிள்ளைகளுடைய காதில் விழுந்தன. அப்படிப்பட்ட நிந்தை அவமானங்கள் எல்லாவற்றையும் பிள்ளைகள் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தார்கள்.

இவை எப்படியானாலும் போர்த்துக்கீஸ் சனங்கள், பொதுவாகக் கோவாடி இறியாவில் நடந்த காட்சிகளில் வரவரக் கூடுதலான கவர்ச்சிகொண்டார்கள். அரசியற் பரிபாலனனுடையவும், அவன் சங்கத்தாருடையவும் அவதந்திர உபாயங்களினால்வந்த ஒரேயொரு தெளிவான முடிவு, காட்சிகண்ட பிள்ளைகள் உண்மை பேசுகிறவர்கள் என்பதேயாகும். பரிபாலனனுடைய முறைகேடான மனோநிலையைக் கண்டனம் செய்து, அநேகர் காரசாரமாக எதிர் பேசினார்கள். அவனுடைய பேதமையான செயல், ஏலவே “பத்திமாநாயகி” என்று அழைக்கப்பட்டுவந்த தேவதாயார்மட்டில், விசுவாசத்தையும் பயபத்தியையும் அதிகரிக்கச் செய்வதற்கே வழியானது. ஆகவே புரட்டாசி மாசம் 13-ந் திகதி நடக்கவிருக்கும் காட்சி எப்போது வருமென்று, போர்த்துக்காற் பொதுச்சனர் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். அந்தநாள் முழுதும் பத்திமாவுக்குச் செல்லும் பாதை எல்லாம், பலவகையான வாகனங்கள், வண்டிகள், இரதங்களினாலும் பாதசாரிகளாலும் நெருங்கி நிறைந்துபோயிருந்தது. வந்துகூடியவர்களில் ஆகக்கூடிய தொகை

யினர் உண்மையான திருயாத்திரிகளே; ஏனையோர் அருமையில் அருமையாகும். இந்த யாத்திரிகள் எல்லாரும் செபம் செய்வதையும், அவர்களுடைய உருக்கமான பயபத்தியையும் கண்டவர்கள் வேண்டாவெறுப்புள்ளவர்கள்தானும், மனம் உருகிக் கண்ணீர் சொரிந்தார்கள்.

பரிசுத்த பூமியென்று அழைக்கப்பட்டுவந்த பள்ளத்தாக்கு முழுவதும் காலமே பத்து மணியளவில், சனத்திரளால் நிரம்பிப்போயிருந்தது. ஆடவர் எல்லாரும் வெறும் தலையுடன் நின்றார்கள். ஏறக்குறைய எல்லாரும் முழந்தாளில் இருந்தார்கள். இருந்து வேகமான பயபத்தியுடன் செபமாலை சொன்னார்கள். அன்றுதினம், தானும் தனது இருசிநேகிதர்களும், கோவாடி இறியாவுக்கு எப்படிவந்து சேர்ந்தார்கள் என்பதை லூசியா பின்வருமாறு சொல்லியிருக்கிறாள்.

“வழிமுழுவதும் யாத்திரிகளால் நிறைந்துபோயிருந்தது. ஒவ்வொருவரும் எங்களுடன் பேசவேண்டுமென ஆத்திரப்பட்டார்கள். முகத்தாட்சணியம் என்பது ஒருவரிடமும் இருக்கவில்லை. உயர்ந்த பதவியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்பட்டவர்களும், எங்களைச் சூழவர நெருக்கிக் கொண்டிருந்தவர்களை, வெகு கஷ்டத்துடன் விலக்கி விலக்கிக்கொண்டுவந்து, எங்கள் காலடியில் முழந்தாளில் வீழ்ந்து தங்கள் மன்றாட்டங்களைத் தேவதாயாரிடம் ஒப்புவிக்கும்படியாகக் கெஞ்சிக் கேட்டார்கள்.

எங்களை அணுகமுடியாத வேறுபலர் தூரத்திலே ஒரு சுவர்மேலே அல்லது ஒரு மாத்திலே ஏறிக் குந்தியிருந்துகொண்டு, தங்கள் மன்றாட்டங்களைப் பெருஞ் சத்தமாய் எங்களுக்குச் சொன்னார்கள். ‘என்னுடைய சப்பாணிப்பிள்ளைக்குச் சுகங்கொடுக்கும்படி தேவநேசத்துக்காக, தேவதாயாருக்குச் சொல்லுங்கள்.’ ‘எனது குருட்டுப்பிள்ளைக்குக் கண்வெளிக்கும்படியாக மன்றாடுங்கள்.’ ‘யுத்தமுனையிலிருந்து எனது கணவன் திரும்பி வரும்படியாக மன்றாடுங்கள்.’ ‘எனக்கு மிகவும் அருமையான ஒரு பாவி மனந்திரும்பும்படியாக மன்றாடுங்கள்’ என்று இவ்வகையாக ஓலமிட்டார்கள். மனுக்குலத்தவரைப் பீடித்திருக்கும் சகல

விதமான நோய்பிணிகள், துன்பதுரிதங்கள் எல்லாம் நீங்கும்படியாக மன்றாடும்படி இரந்திரந்து கேட்டார்கள். நாங்களும் சிலருக்கு ஆமென்று சொல்லி; வேறு சிலருக்கு அவர்களைக் கையிற்பிடித்து எழுப்பிப் பையமெல்லச் சனங்களுக்கூடாகப் போய்க்கொண்டிருந்தோம். சனத்திரளை ஊடறுத்துச் செல்லுவதற்குச் சில ஆட்கள் எங்களுக்குத் துணைபுரிந்தார்கள்.”

மத்தியானவேளை பிள்ளைகள் காட்சி நடந்துவந்த இடத்து வாசலில்வந்து சேர்ந்தபோது அங்கு 30,000 பேர் வரையில் கூடியிருந்தனர் என மதிப்பிடப்பட்டது. எல்லாரும் செபமாலை சொல்லும்படியாக லூசியா கேட்டுக்கொண்டாள். அவர்கள் சொல்லிய செபமாலை பிரமாண்டமான செபவேண்டுதலாயிற்று. எத்தனையோபேர் கண்ணீர்சிந்திச் சிந்தியே தங்கள் வேண்டுதலைப் பரலோக இராக்கினியின் சிம்மாசனமட்டும் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

சரி மத்தியானம் வழமையாக மகாபிரகாசத்துடன் எறித்துக்கொண்டிருக்கும் சூரியன் பிரபை குன்றியது. முன்காட்சிகளிற்போலவே இன்றைக்கும், ஆகாயம் மஞ்சள் நிறப் பொன்மயமாய் மாற்றம் அடைந்தது. தான்சொல்லிக்கொண்டிருந்த செபமாலையை நிறுத்திவிட்டு, ஆனந்த பரவசத்துடன் லூசியா: “**இதோவருகிறார்; நான் அவரைக் காண்கிறேன்**” என்றாள். அதே சமயத்தில் சமுத்திரம் போன்ற அச்சனத்திரள் மத்தியில் சொல்லிலடங்காத தன்மையான ஆனந்தக்கூச்சல் உண்டானது. ஆயிரம் ஆயிரம் கரங்கள் வானத்தைநோக்கி உயர்ந்தன. கன்னிமரி நாயகிதாமே எழுந்தருளி வந்திருப்பதைச் சகலரும் உணர்ந்துகொள்ளக்கூடிய தன்மையாக அக்காட்சியை அளிக்கச் சித்தமானார்.

“பார் பார்” “அங்கே பார்” “அங்கே அங்கே” என்ன நீ காணவில்லையா என்று சிலர் ஆர்ப்பரித்தார்கள். நீலமயமான வானமண்டலத்தில் ஒரு சிறு புகாரின் அடையாளந்தானுமில்லை. சனத்திரளின் மத்தியில் உண்டான இந்த ஆர்ப்பரிப்பின் காரணம் என்னவென்று ஏறக்குறையச் சகலரும் அறிந்துகொண்டார்கள். ஆயிரம் ஆயிரம் சாட்சி

கள் கண்ணுற் கண்டுகொண்டிருக்க, ஒரு முட்டைவடிவமான பிரகாசம், கிழக்கிலிருந்து மேற்குத்திசைக்குப் படர்ந்தது. கண்ணுக்கு மகா அக்களிப்பைத்தரும், சோதிமயமான ஒளி வீசிக்கொண்டிருந்தது. இந்த முட்டைவடிவமான பிரகாச இரதம் காட்சி வழக்கமாக நடக்கும் இடத்தைச் சேர்ந்ததும் அது மறைந்துவிட்டது.

ஆனல் ஒரு கால்மணித்தியாலத்துக்குப் பின்பு, "காட்சிநாயகி பரலோகத்துக்கு மீளுகின்ருர்" என்று பிள்ளைகள் சொன்னதும், அதே பிரகாச இரதம் மீண்டும் காணப்பட்டது. அது கோவாடி இரியாவின் கோணத்திலிருந்து உயர்ந்தெழுந்து மோட்சத்தை நோக்கி முன்வந்தவழியே மீண்டும் திரும்பிச்சென்றது.

காட்சியின்போது அங்கு சமுகமாக இருந்தவர்களின் எண்ணப்படி, இந்த முட்டைவடிவமான பிரகாச இரதம் தான், தேவமாதா பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கும், பூலோகத்திலிருந்து பரலோகத்துக்கும் செல்லும் விமானம் என்று சொல்லதகத்கது. இந்தப் பிரகாசத்தைப் போர்த்துக்கீசர் எல்லாரும், **தேவமாதாவின் பிரகாச விமானம்** என்று இப்போது அழைக்கின்ருர்கள்.

ஆகாய விரிவில் உண்டான நிறமாற்றங்களையும், பிரகாச விமானத்தையும்விட, காட்சி நிலைத்த நேரம் முழுவதிலும் வேறு அதிசயங்களும் அங்கு கூடின சனங்களின் மனதுகளில் ஊன்றிப் பதியலாயின. காட்சி நிகழ்ந்த பள்ளத்தாக்கின் அதிக தூரத்திலே நின்றுதானும் காணக்கூடிய ஒரு தூயவெண்முகில் மாதா பாதம்ஊன்றிய மரத்தையும் காட்சி கண்ட பிள்ளைகளையும் சூழ்ந்து கவிந்துகொண்டிருந்தது. அதுமட்டுமல்ல, ஆகாயத்திலிருந்து வெண்ணிறப் புஷ்பங்கள் சொரிந்துகொண்டிருந்தன. வெண்பனித் துளிகளும் சொரிந்தன. இந்தப் புஷ்பங்கள் பூமியைச் சேரமுன் வாடிப்போயின. துளிகள் உருகிப்போயின. இதனைச் சகலரும் கண்டார்கள். இந்த அதிசயம் பிள்ளைகளின் காட்சியின்போது மாத்திரமல்ல, வேறு சமயங்களிலும் பத்திமாவில் நடைபெறலாயின. 1924-ம் வருஷம் வைகாசி மாசம் 13-ந் திகதி அங்குகூடிய ஆயிரக்கணக்கான திருயாத்திரிகளின்

சமுகத்தில், இந்த அதிசயம் மீண்டும் நடக்கலாயிற்று. இந்தக் காட்சியைப் புகைப்படமெடுத்துமிருக்கிருர்கள். பத்திமாபதியின் மேற்றிராணியார் தாம் இதனைக் கண்டதாகச் சாட்சி கொடுத்திருக்கிருர்.

இந்த அதிசயங்கள் எல்லாம் யாத்திரிகள் கண்முன்பாக நிகழ்ந்துகொண்டிருக்க லூசியாவும் அவள் சிநேகிதர்களும், காட்சிநாயகியை மாத்திரம் தரிசித்துக்கொண்டிருந்தார்கள். இந்த ஐந்தாம் காட்சியில் உலக யுத்தம் முடிவாகும்படி **திருச்செபமாலையை இடைவிடாது ஓதிவரும்படி** தேவமாதா மீண்டும் பிள்ளைகளுக்கு அறிவித்தார். அதுமாத்திரமல்ல, ஐப்பசி மாசம் அர்ச். சூசையப்பருடனும் திவ்விய பாலகயேசுவுடனும் தாம் தரிசிக்கவருவதாக அவர்களுக்கு வாக்குப்பண்ணியருளினர். ஐப்பசி மாசம் 13-ந் திகதி அவர்கள் தவருது காட்சித்தலத்தில் இருக்கவேண்டும் என்று கற்பித்தார். தங்களுக்காக மன்றுடும்படிகேட்ட சில நோயாளர்களை அவர் சுகமாக்கச் சித்தங்கொள்ளுவாரோ என்று லூசியா தேவமாதாவைக் கேட்டாள்.

"அவர்களிற் சிலர் சுகம்பெறச் செய்வேன், எல்லாரையும் அல்ல; ஏனென்ருல் எங்கள் ஆண்டவருக்கு அவர்களில் சிலரிலே நம்பிக்கை இல்லை." இவ்விடத்தில் ஒரு சிற்றுலயம் கட்டவேண்டும் எனச் சனங்கள் விரும்புகிருர்கள் எனவும் லூசியா தேவதாயாருக்குச் சொன்னுள். காட்சிநாயகி இக்கேள்வியை அங்கிகரித்து, காணிக்கைப் பணத்தில் அரைவாசியை இச்சிற்றுலயத்து ஆரம்பவேலைக்குச் செலவிடலாம் எனவும் சொன்னர்.

காட்சித் தலத்திற் கூடியிருந்த சனங்கள் தங்களுக்குத் தோற்றுத ஒருவருடன் லூசியா சம்பாஷிப்பதை நன்ருக விளங்கிக்கொண்டார்கள். மறைவாக நின்று பேசிக்கொண்டிருந்தவரின் குரல் ஒலியை அவர்கள் கேட்கவில்லை.

கடைசியாகக் காட்சிநாயகி திரும்பிப்போகிருர் என்று லூசியா சொன்னுள். சொன்னவுடன் பிள்ளைகளைச் சூழ்ந்து கவிந்துகொண்டிருந்த வெள்ளை முகிலும் கலையத்தொடங்கியது. வானத்திலிருந்து சொரிந்துகொண்டிருந்த மலர்களும், பனித்துளிகளும் சொரியாது ஒழிந்தன. முட்டை

வடிவமான பிரகர்ச இரதமும் நீலவானத்தைநோக்கி மேலெழுந்தது. சூரியனும் தனது வழமையான பிரகாசத்தையும் நிறத்தையும் மீண்டும் பெற்றுக்கொண்டது. பிள்ளைகளும் தங்களுடைய இல்லங்களுக்கு மீண்டார்கள். யாத்திரிகள் எல்லாரும் தாங்கள் அன்று கண்டவைகளைப்பற்றிக் கலந்து பேசிக்கொண்டு அவ்விடத்தைவிட்டுக் கலைந்தார்கள்.

கோவாடி இறியாவில் வந்துகூடிய சனத்திரள்

எண்ணிறந்த நூதனப்பிரியர் லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா என்ற மூவரிடத்திலும் வெவ்வேறு கேள்விகளைக் கேட்டார்கள். அவர்களுடைய நெருக்கடியினால் இந்தப்பிள்ளைகளுக்குண்டான அரிகண்டம் சொல்லுந்தரமல்ல. போர்த்துக்கால் தேசத்தின் பல பாகங்களிலுமிருந்து, பலவகையான ஆட்கள் தங்களுக்கும் விசாரணை செய்ய அதிகாரம் உண்டென நடித்து, இந்தச் சிறு இடையப்பிள்ளைகள் மூவரையும் கேள்விகள் கேட்டார்கள். பல தடவைகளில் அவர்களுடைய கேள்விகள் விவேகம் அற்றவைகளும், சமயோசிதம் அல்லாதவைகளுமானவைகள். இவர்களுக்கு அரிகண்டம் உண்டுபண்ணுபவர்களிலிருந்து இவர்களைப் பாதுகாக்கவும் தேவமாதாவின் சின்னச் சிநேகிதர்களுடன் கூடவிருந்து சம்பாஷிக்கும் பாக்கியத்தை அனுபவிக்கவும், அல்யுஸ்திறேல் பிரிவுக்கு அருகாமையில் உள்ள றெக்சிடா கிராமவாசியாகிய ஒரு புண்ணியவதி இப்பிள்ளைகளைத் தன்னுடன் கூட்டிக்கொண்டுபோய்ச் சில நாட்களாக வைத்திருந்தாள். சனங்கள் அந்த இடத்துக்குத் தானும் துரந்து துரந்து போய்ப் பிள்ளைகளை அரிகண்டம்பண்ணினார்கள்.

இந்தப் புண்ணியவதி கல்வி அறிவிலும், நாகரீகம், நற்பழக்க வழக்கங்களிலும் மேம்பட்டவர். இவர் போர்த்துக்கால் தேசத்துக் கலைஞர் சங்கத்தினருள் ஒருவரான, டா குரூஸ் பிரபுவின் சகோதரி. இந்தச் சீமாட்டி தன்னில்லத்துக்கு வரும் சிலருடைய நவீனபோக்குகளையும், விநோதமான பேச்சுகளையும் நன்றாக அவதானித்தாள். அவதானித்து:

“பிள்ளைகளே, நீங்கள் சொல்லிய மகா அற்புதம், வருகிற மாசம் நடைபெறாவிட்டால், அவர்கள் எல்லாரும் உங்

களை உயிரோடு பொரித்துப்போடுவார்கள்” என்றார். ஆனால் எப்போதும் அன்புக்குரிய போக்கும், அகமகிழ்ச்சியுமுள்ள இந்தப் பிள்ளைகள்: “அம்மா, அதைப்பற்றி எங்களுக்குப் பயமில்லை. அந்த அலங்காரநாயகி எங்களை ஒருபோதும் அனுப்பமாட்டார். மகா அற்புதம் நடக்குமென்று அவர் எங்களுக்குச் சொல்லியிருக்கிறார். வேணும் வேண்டாம் எல்லாரும எங்கள் காட்சியின் உண்மையை நம்பவேண்டி வரும்” என்றார்.

புரட்டாசி மாசம் 13-ந் திகதி நடந்த அதிசயங்களைப் பற்றி ஆயிரம் ஆயிரம்பேர் சொன்னவைகளும், புதினப் பத்திரிகைகள் கூறியவைகளும், ஐப்பசி மாசம் 13-ந் திகதி நடக்கவிருந்த அற்புதத்தைப்பற்றி எங்கும் பிரசித்தம் செய்துவிட்டன. ஆதலால் அன்றைக்கு அற்புதம் நடவாதுபோனால் எத்தனையோபேர் ஏமாந்து போவார்கள். அநேகருக்கு இனிமேல் இல்லையென்ற கோபமும் வந்துவிடுவதற்கு வழியாயிருக்கும். குறித்த நாளுக்கு முந்தினநாட் பின்னேரம், பத்திமாவுக்குச் செல்லும்பாதைகள் எல்லாம், பலவகையான வண்டிகள், வாகனங்களினால் நிறைந்திருந்தன. கால்நடையாகவந்தவர்களின் தொகை புறம்பு. இவர்களில் அநேகர் தபம்செய்யும் நோக்கத்துடன், வெறுங்காலால் நடந்துவந்தார்கள். யாத்திரிகள் கூட்டங் கூட்டமாய்ப்பிரிந்து, ஒவ்வொரு கூட்டத்தாரும், செபமாலை சொல்லிக்கொண்டு, அல்லது பத்திக்கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டிருந்தார்கள். குளிர்காலம் என்றதையும் கவனியாமல், அடுத்தநாட் தங்களுக்கு நல்ல இடங்கிடைக்கும்படியாக, இராமுழுவதையும் வெறும் வெளிநிலத்தில் ஆகாயத்தின்கீழ்க் கழிக்கத் தீர்மானித்துக் கொண்டார்கள்.

அந்தோனி சாந்துஸ் வீட்டில் எல்லாம் அமரிக்கையாக இருக்கவில்லை. மரியரோசா, அவர்கள் அப்படிச் சொல்லுகிறார்கள்; இவர்கள் இப்படிச் சொல்லுகிறார்கள் என்ற கதைகளைக் கேட்டபடியினால் மனச்சஞ்சலப்பட்டு, வெள்ளென எழும்பிவிட்டாள். தன் மகளையும் நித்திரையால் எழுப்பினாள். “தங்கச்சி, நாங்கள்போய்ப் பாவசங்கீர்த்தனம் செய்வோம் வா. தேவமாதா வாக்குப்பண்ணிய மகா அற்புதத்

தை அவர் செய்யாவிட்டால், நாங்கள் கோவாடி இறியாவில் தான் சாகவேண்டும். யாத்திரிகள் எங்களைச் சித்திரவதை செய்து கொன்றுபோடுவார்கள். சாவுக்கு ஆயத்தமாக இருக்கும்படியாக, நாங்கள்போய்ப் பாவசங்கீர்த்தனம் செய்வோம் வா" என்று அழைத்தாள். ஆனால், லூசியா மகா அமரிக்கையுடன் இருந்தாள். "ஆச்சி, உங்களுக்குப் பிரியமானால் நீங்கள் பாவசங்கீர்த்தனம் செய்யப் போங்கள். நானும் உங்களுடன் கூடவந்து பாவசங்கீர்த்தனம் செய்வேன். ஆனால் நான் அப்படிச்செய்வது சாவுக்குப் பயந்தல்ல. காட்சிநாயகி வாக்குப்பண்ணிய அற்புதம் கட்டாயம் நடக்கும்." இன்னும் மரியறோசா மனந்தேறவிட்டாலும், பாவசங்கீர்த்தனத்தைப்பற்றி அவள் மீண்டும் ஒன்றும் பேசவில்லை.

அடுத்தநாள், குளிருடனும், மந்தாரத்துடனும், துந்துமி மழையுடனும் ஆரம்பமானது. இவைகளைப் பறுவாய்பண்ணியது ஆர்? சனத்திரள் பெருக்கெடுக்கின்றது. அடுத்த கிராமங்களிலிருந்து மாத்திரமல்ல, தூரமானபட்டணங்களிலிருந்தும் யாத்திரிகள் வந்துகொண்டிருந்தார்கள். லிஸ்பொன் நகரத்துப் பத்திரிகர்கள் எல்லாம் தங்கள் திறமையான பத்திர நிருபர்களை அனுப்பியிருந்தார்கள்.

காலமே முழுவதும் மழை விடாமற் பெய்துகொண்டிருந்தது. கோவாடி இறியா இந்த மானிட சமுத்திரப் பெருக்கத்தினால், பெரும் சேற்றுக்கடலாக மாறிவிட்டது. திரு யாத்திரிகள் என்ன! காட்சி பார்க்கவந்த விநோதப்பிரியர் என்ன! எல்லாரும் நனைந்து, எலும்புத் துவாரங்கள் மட்டாய் ஈரம் சுவறிப்போய் இருந்தார்கள். காட்சி தொடங்கமுன், யாத்திரிகளுடைய விசுவாசத்தைத் தேவதாயார் சோதிக்க விரும்பினாரோ என்று எண்ணவேண்டியிருந்தது. நனைந்தாற் காரியமில்லை என்று யாத்திரிகள் சொல்லியதுபோலிருந்தது. ஏனென்றால் ஒருவராவது இடம்விட்டு விலகவில்லை.

பதினொரு மணிக்கு ஐம்பதினாயிரம்பேருக்குமேல் வந்து கூடிவிட்டார்கள். சிலர் எடுத்த மதிப்பின்படி அன்றுகூடிய சனத்தொகை எழுபதினாயிரம் என்று சொல்லப்படுகிறது.

லூசியாவுக்கு இன்றைக்கு மகா சந்தோஷமான நாள். ஏனென்றால் இன்று இவளுடைய தகப்பனும் தாயும் கோவாடி இறியாவுக்கு இவளுடன் கூடவந்தார்கள். காட்சி தொடங்கும்பொழுது, பிள்ளைகளுக்கு அருகில் வெடிக்கும்படி, வெடிக்குண்டு ஒன்றை அரசினர் அதிகாரிகள், இரகசியமாகவைக்க ஆயத்தப்படுத்துகிறார்கள் என்றகதை எங்கும் பரவியது. ஆனால் அக்கதையினாற் பிள்ளைகள் சிறிதேனும் அஞ்சவேயில்லை. "**அப்படியானால் அது எங்களுக்கு மெத்தச் சந்தோஷம். இந்த இடத்திலிருந்தே நாங்கள் தேவமாதாவுடன் பரலோகத்துக்கு எழுந்தருளிப்போவோம்**" என்றார்கள்.

ஆனாற் பிள்ளைகளுடைய பெற்றோர் அவ்வளவு மன அமரிக்கையாக இருக்கவில்லை. ஆனபடியாற்றான் அந்தோனி சாந்துஸ் என்பவனும் மரியறோசாவும் லூசியாவுடன் கூட வந்தார்கள்.

"லூசியா சாகிறதென்றால் நாங்களும் அவளுடன் சாவோம்" என்றார்கள் அவளுடைய பெற்றார். காட்சி நாயகி வாக்குப்பண்ணிய அடையாளம் காணப்படாவிட்டால் என்னதான் நடக்குமோவென்றும் அவர்கள் யோசித்துக்கொண்டிருந்தார்கள் என்பதற்கு ஐயமில்லை. சனத்திரள் அவ்வளவு நெருக்கமாயும், பிள்ளைகளைக் கண்டுவிடவேண்டுமென்று அவ்வளவு ஆத்திரப்பட்டுக்கொண்டிருந்தபடியாலும், சில பெலசாலிகள் இவர்களுக்கு மெய்க் காப்பாளராக இருந்து, இவர்களுக்கு வழிவிலக்கிக் கொடுத்திராவிட்டால், உள்ளபடி இவர்கள் நசுக்குண்டு போயிருந்திருப்பார்கள். அந்தோனியோவும் தன் மகள்கையிற் பிடித்தபிடியை சணப்பொழுதாயினும் நெகிழவிட்டவனல்ல.

சனங்கள் தன்னைச் சுற்றிச் சுற்றி நெருக்குவதினால், பயப்பிராந்திகொண்டு இயாசிந்தா அழத்தொடங்கினாள்.

"ஒன்றுக்கும் பயப்படாதே எங்களுக்கு ஒரு தீங்கும் வராது" என்று சொல்லி லூசியா இயாசிந்தாவுக்கு ஆறுதல் அளித்தாள். ஆனாற் சனக்கூட்டம் பிள்ளைகள் வருவதைக்

கண்டதும், வெகு உபசாரத்துடன் இவர்களுக்கு வழிவிட்டுக் கொடுத்தார்கள்.

கடைசியாகக் காட்சிக்காரப்பிள்ளைகள் தங்கள் இடத்தைச்சேர்ந்து, அந்த ஷேன் மரத்தின் அருகிற்போய் நின்றார்கள். இப்போது இம்மரம், இலை குழைகள் இல்லாததும், கொப்புகள்தானும் துண்டிக்கப்பட்டதுமாயிருந்தது. பிள்ளைகளின் தாய்மார் இன்றுதினம் ஞாயிற்றுக்கிழமைகளிற்போலத் தங்கள் அலங்காரமான உடைகளை அணிந்திருந்தார்கள். பிள்ளைகளும் நீலவர்ணப் பாவாடையும் தூய வெண்ணிற முக்காடும் அணிந்திருந்தார்கள். சனங்கள் இவர்கள் கைகள் நிறையப் பூச்சொரிந்தார்கள். இவர்கள் தலையிலும் பூமுடிகளைச் சூட்டிவிட்டார்கள் மழையும் விடாமற் பெய்துகொண்டிருந்தது. சகலருடைய கண்களும் காட்சித் தலத்தை நோக்கியபடியே இருந்தன. ஒப்பசெப்பமாக்கிப் பொருத்தப்பட்ட மூன்று மரங்களினால் அமைக்கப்பட்ட ஒரு வாசல் அந்த இடத்தைக் குறித்துக்காட்டியது. அதன் இரு பக்கங்களிலும் இரண்டு வெளிச்சக்கூண்டுகள் தொங்கின. அடுத்த கிராமத்தில் வசித்த ஒரு குடும்பத்தார் அந்த வெளிச்சக் கூண்டுக்கு எண்ணெய் வார்த்து, வெளிச்சம் நூராது கவனித்துவந்தார்கள். எல்லாரும் சேர்ந்து செபமாலை சொன்னார்கள். ஒவ்வொரு தசபாகத்தின் பின்னரும் பத்திக் கீர்த்தனைகள் பாடினார்கள். சங்கீதம் குன்றுகளிற்பட்டு எதிரொலித்து, தேவஇரக்கத்தைவேண்டிப் பாடுபவர்களின் கீத ஒலியானது, இன்னும் அதிக'மதிகமாகச் சப்தித்து, கோவாடி இறியாவிலிருந்து பரலோகமட்டாய் எழுந்து செல்லலாயிற்று.

காட்சிநாயகியின் பெயரும் அவர் பரலோகத்திலிருந்து கொண்டுவந்த செய்தியும்

சனக்கும்பலில் இருந்தவர்கள் எல்லாரும் தங்கள் குடைகளைச் சுருக்கும்படி லூசியா கேட்டாள். ஒருவரும் மூச்சும்விடாது சுருக்கினார்கள். சரிமத்தியானம் லூசியா ஆனந்தபுளகிர்தம்கொண்டு **“இதோ ஒரு மின்னல்”** என்

றாள். என்றுவிட்டு **“அங்கே! அங்கே! நான் அவரைக் காண்கிறேன்”** என்று ஆனந்தித்தாள். “மகளே கவனமாய்ப் பார். ஒன்றையும் தப்பவிடாதே” என்று மரிய றோசா மகளை எச்சரித்தாள். இவைகள் எல்லாம் என்ன வகையான முடிவுக்குத்தானவருமோ என்று அவள் மிகவும் பதகளித்துக்கொண்டிருந்தாள். ஆனால் லூசியாவுக்கு தாய் சொன்னதொன்றும் கேட்கவில்லை. இவள் முற்றும் பரவசமானாள். காட்சியின்போது சமுகமாயிருந்த ஒருவர் 1917-ம் வருஷம் கார்த்திகை மாசம் 13-ந் தேதி சொல்லியபடி அவ்வேளை லூசியாவின் முகம் வரவர மகா அலங்காரமாகச் சொலித்தது. சொலித்து றோஸ்மயமாக மாற்றமடைந்தது. இவளுடைய உதடுகள் மென்மையாயின.

இயாசிந்தாவும் பிரான்சீசும் காட்சிநாயகியை வழமையான இடத்திற் கண்டார்கள். பிள்ளைகள் தேவதாயாரை நோக்கிப் பரவசத்தாய் தியானத்தில் மூழ்கிப்போய் இருக்கையில் இவர்களைச் சூழவர தூபப்புகைக்குச் சமானமான ஒரு சிறு வெண்நிற முகில் நாலு ஐந்து அடி உயரத்துக்கு எழுந்தது. அது கண்ணுக்குத்தெரியாது மறைந்து நின்ற ஒரு குருவானவர் காட்சிநாயகிக்குத் தூபம்காட்டுவதுபோல் இருந்தது.

“அம்மா நீங்கள் ஆர்? நீங்கள் என்னிடத்திற் கேட்பதென்ன” என்று லூசியா இப்போதும் கேட்டாள். **“செபமாலைநாயகி நாமே. விசுவாசிகள் தங்கள் சீவிய நடபடியில் உள்ள குறைகளை மாற்றும்படி அவர்களைக்கேட்க வந்திருக்கிறோம். எங்கள் ஆண்டவருக்கு அவர்கள் எவ்வளவோ துரோகம் செய்கிறார்கள். அப்படிச் செய்வதால், அவருக்கு மனோபீடை உண்டுபண்ண வேண்டாமென்று கேட்கவந்திருக்கிறோம். செபமாலை சொல்லும்படியும், தங்கள் சீவியநடபடிகளைத் திருத்திப் பாவத்துக்காகத் தபம செய்யும்படியும் விசுவாசிகளைக் கேட்கவந்திருக்கிறோம்”** என்று தேவதாய் சொல்லி, **“என் நாமத்தினால் இவ்விடத்தில் ஒரு சிற்றாலயம் கட்டவேண்டும் என்றும் விரும்புகிறோம்”** என்றார். **“மனு**

ஷர் தங்களைத் திருத்திக்கொண்டால் யுத்தம் சீக்கிரம் முடியும்" எனவும்; **தாம் அவர்கள் மன்றாட்டத்தைக் கேட்டருளுவார்** என்றும் மேலும் தேவதாய் அறிவித்தார்.

அதன்பின்பு தேவதாய் பிள்ளைகளுக்குப் பிரியாவிடை சொல்லிவிட்டு வானத்தில் நிற்கும் சூரியனுக்கு அருகாமையிற்சென்று அதனைத் தமது கைச்சயிக்கினையாற் காட்டினார். அதாவது தமது கைகளை விரிக்க, அப்போது பிரகாசித்துக் கொண்டிருந்த சூரியனில் அவருடைய கைகள் பிரதிபிம்பிக்கலாயின.

தேவன் வானத்திற் காண்பித்த அற்புத அடையாளம்.

தேவதாயார் சூரியனை நோக்கிச் சயிக்கினைகாட்டிய அதே சமயத்தில் லூசியா "**சூரியனை எல்லாரும் பாருங்கள்**" என்று உரத்துக் கூறினாள்.

அச்சமயத்தில் அங்கு கூடிநின்றவர்கள் எல்லாருக்கும் மகா பிரமிப்பு உண்டுபண்ணுவதும் திடுக்காட்டமுள்ளதும் தனக்குத்தானே இணையானதும், முன்னொருபோதும் கண்டிராததுமான, ஒரு நவமான அற்புதக் காட்சியை வான மண்டலத்திற் கண்டார்கள். "வானமண்டலத்தின் வல்லமைகள் எல்லாம் அடிதலை தடுமாறின" என்று உலகமுடிவைப்பற்றிக் கூறிய தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியன போலாயிற்று. வானசாஸ்திரம் கூறும் விதிகள் எல்லாம் அறம்புறமாயின போலாயிற்று.

அவ்வளவு நேரமும் பெய்துகொண்டிருந்த மழை சடுதியில் சிறிதுவேளை விட்டுவிட்டது. இருள் மண்டிய முகில்கள் எல்லாம் கலைந்தன. சூரியன் வான உச்சியிற் தோற்றியது. அதன் தோற்றம் வட்டவடிவமான வெள்ளி விம்பத்துக்கு இணையாயிருந்தது. சற்றாவது கண்ணுக்குக் கூச்சமில்லாது, அதை நன்றாகக் கூறுகுறிப்பாய் உற்றுநோக்கக் கூடியதாயிருந்தது. அது ஒரு அக்கினிச் சக்கரம்போலத் தன்னைத்தானே சுற்றிச் சுற்றிச் சுழன்று "ஆச்சிப்பூச்சி"

ஆடி எல்லாப் பக்கத்திலும் பிரபைக் கதிர்களை வீசிக்கொண்டிருந்தது. இப்பிரபைக் கதிர்கள் மாறி மாறிப் பல வர்ணங்கள் உடையனவாகத் தோன்றின. ஆகாயவிரிவும், பூமியும், மரங்களும், குன்றுகள் கற்பாறைகளும், காட்சிகண்ட பிள்ளைகளும், சமுத்திரப்பெருக்கென அங்கு கூடியிருந்த சனத்திரளும் ஆகிய இவைகளெல்லாம் மாறி மாறி, மஞ்சள் சிவப்பு நீலம் தூமிரம் ஆதியாம் பல வர்ணங்கள் உடையனவாகக் காணப்பட்டன.

பகலவன் தனது சுழற்சிகளைச் சிறிது நேரம் நிறுத்தினான். ஆனால், இன்னும் கூடுதலாகக் கண்களைப் பறிக்கும் தன்மையாகத் தனது பிரகாசக் கதிர்களின் நடனத்தை மீண்டும் தொடங்கினான்.

சிறிது நேரம் தாமதித்து மீண்டும் மூன்றாம் முறையாக அப்பகலவன் தனது நடனத்தைத் தொடங்கினான். சூரியனின் இந்த விநோதமான வான விளையாட்டானது அத்துணை விபரீதமுள்ளதாயிருந்தபடியால், அதற்கு இணையான தொன்றை, வானவிளையாட்டில் மகா நிபுணத்துவமுடையவர்கள் என்று சொல்லப்படும் எவர்தானும் இயற்றவும் நினைக்கவும் முடியாது. மனதில் ரூபிகரிக்கவும் இயலாது. அந்த நேரம் அங்கு கூடிநின்ற சனங்களின் மனப்பதிவை என்னென்று சொல்வோம், எப்படி விபரிப்போம். சகலரும் பரவசம் ஆனவர்களாய், அசைவற்று ஸ்தம்பித்து மூச்சடங்கியவர்களாய், அந்த எழுபதினாயிரம் சனங்களும் அந்தக் காட்சியை ஒரே நோக்காய் உற்றுநோக்கியபடியே இருந்தார்கள்.

சடுதியில் அச்சனக் கூட்டத்தில் நின்ற எல்லாரும், ஒருவருமே தள்ளுபடியில்லாமல், **சூரியன் வானவிரிவைவிட்டு விலகித் துள்ளிக் குதித்து, பாம்புபோல நெளிந்து வளைந்து பூமியில் விழுந்துவிடப்போகிற தன்மையான காட்சியைக் கண்டார்கள்.**

எல்லாருடைய நெஞ்சங்களிலுமிருந்து பிரமாண்டமான பேரொலி உண்டாயிற்று. அதாவது அங்கு சமுகமா

யிருந்த ஒவ்வொருவரினுடையவும் மனநிலைக்கடுத்தவாறு அவர்கள் பெருவாய் பெரும் சத்தமாய் ஓலமிட்டார்கள்.

அவர்கள் இப்படி இட்ட கூக்குரல் எல்லாம் அவர்களின் படுபயங்கரத்தையும், கிடுநடுக்கத்தையும் வெட்ட வெளியாகக் காண்பித்து, **புதுமை ! புதுமை !!** என்றார் சிலர். **என் தேவனே ! உம்மை விசுவசிக்கிறேன்** என்றான் ஒருவன். **மரியாயே ! உமக்கு மங்களம்** என்றான் மற்றொருவன். **என் தேவனே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்** என்றார்கள் இன்னும் சிலர். இந்தக் கடைசி மன்றாட்டமே ஈற்றில் எல்லாருக்கும் பொதுவான மன்றாட்டமாயிற்று.

எல்லாரும் அந்தச் சேற்று நிலத்தில் முழந்தாளில் வீழ்ந்து, உத்தம மனஸ்தாப முயற்சிச் செபத்தை ஓதினார்கள். அதன்பின்பு எல்லாரும் ஒருமித்து **விசுவாசமந்திரத்தைப்** பாடினார்கள். அருட்பொலிவு தேங்கிய அந்த நேரத்திலே அங்கு கூடியிருந்தவர்களின் மன அருட்சியையும், உள்ளக் கிளர்ச்சியையும் என்னென்றுதான் சொல்வோம்.

அன்றுமட்டும் அவவிசுவாசியாயிருந்துவந்த ஒரு வயோதிபன் **பரிசுத்த கன்னிகையே ! ஆசீர்வதிக்கப்பட்ட கன்னிகையே** என்று ஆர்ப்பரித்தான். ஆர்ப்பரித்துக் கண்ணீர் தோய்ந்த முகத்துடன், பழைய காலத்து ஒரு தீர்க்கதரிசியைப்போலும் வானத்தை நோக்கிக் கைகளை உயர்த்தித் தனது உயிரும் உடலும் ஆனந்த புளகிர்தங்கொண்டு, மகிழ்ச்சி தேங்கத் தனது சக்தியெல்லாவற்றையும் ஒன்றுகூட்டி : **“செபமாலை நாயகியே ! போர்த்துக்கால் தேசத்தைப் பாதுகாத்து இரட்சியும்”** என்று ஓலமிட்டான்.

சூரியன் இடையிடையே பம்பரம்போலச் சுழன்றுகொண்டிருந்த காட்சி ஏறக்குறையப் பத்து நிமிஷம் வரையில் நிலைத்தது. இந்தக் காட்சியை அங்கு சமுகமாயிருந்தவர்கள் ஒருவரும் தப்பாது கண்டார்கள் என்பதை மீண்டும் வற்புறுத்துகின்றோம். விசுவாசிகளும், அவவிசுவாசிகளும், நாட்டுப்புறத்தாரும், நகரவாசிகளும், கலைஞரும், பத்திராதிருபர்களும் இந்தக் காட்சிக்குச் சாட்சியாக இருந்தார்கள். **சுயாதீன எண்ணமுடையவர்கள்** என்று சொல்லப்படும் வேத விரோதிகள் தொகையும் அவ்வளவு சிறிதல்ல.

இவர்கள் எல்லாரும் ஏற்கனவே செய்யப்பட்ட எவ்வித மன ஆயத்தங்களுமில்லாது, சூரியனைப் பாருங்கள் என்று இந்தப் பிள்ளை கேட்டுக்கொண்டதைவிட வேறு எவ்வித முற் தீர்மானங்களுக்கும் இடங்கோலி வைக்கப்படாது மகா அற்புதமொன்று குறித்த ஒரு நாளில், குறித்த ஒரு நேரத்தில் நடக்கும் என்று சொல்லப்பட்டதற்கு இணங்க வான மண்டலத்தில் ஒரேவிதமான மாற்றத்தை எல்லாரும் ஒரே விதமாகக் கண்டார்கள். கண்டதுக்குச் சாட்சியிட்டார்கள்.

சில காலத்தின் பின்பு, இந்த அற்புதத்தைப்பற்றித் திருச்சபைச் சட்டப்படி விசாரணை நடத்தப்பட்டபொழுது, சூரியனில் நிகழ்ந்த மாற்றங்களை கோவாடி இறியாவுக்கு ஐந்து கட்டைக்கு அப்பால் இருந்தவர்களும் கண்டார்கள் என ருசுப்படுத்தப்பட்டது இவர்கள் காட்சித்தலத்தில் நிகழ்ந்த மறு விஷயங்கள் ஒன்றையும் அறியவில்லை. காட்சித்தலத்தில் நிகழ்ந்த வேறு விஷயங்கள் ஒன்றையும் இக்கிராமவாசிகள் அறியார். முற்தீர்மானங்கள் கொள்ளக்கூடிய எண்ணங்களை இவர்கள் மனதில் எவராவது புகுத்திவிடவில்லை. எல்லாரும் ஒருமிக்கக் கூட்டமாய் மனமயக்கத்துக்குள்ளானார்கள் என்று சொல்வதும் பொருந்தாது. அப்படி

யிருந்தும் எத்தனையோ மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டும் அவர்கள் இந்த அற்புதத்தைக் கண்டார்கள்.

இந்த அற்புதத்தைப்பற்றி நடத்தப்பட்ட விசாரணையிற் கண்டிருக்கிறபடி, அங்கு சமுகமாக இருந்த சகலரும், மகா விநோதமும் அதிசயமுமான ஒரு சம்பவத்தைப் பற்றிச் சாட்சியிட்டிருக்கிறார்கள். சனத்திரள் முழுவதும் பரவசம் நீங்கி, நடந்த சம்பவம் என்னவென்பதைப்பற்றி ஒவ்வொருவரும் கலந்து தெளிவாய்ப் பேசக்கூடிய நிலைமையை அடைந்தபின்பு எல்லாரும் ஒரு விநோதத்தை அவதானித்தார்கள். காட்சிநேரம் முழுவதும் சிலநிமிஷங்கள்போக மற்ற நேரம் எல்லாம் மழை விடாது பெய்துகொண்டிருந்தது. எல்லாருடைய உடைகளும் நன்றாக நனைந்துபோயிருந்தன. அம்மட்டா! சேறுபடிந்து அழுக்காயிருந்தன. ஆனால் வான மண்டலத்தில் நடந்த அதிசயம் முடிந்து மழை விட்டதும் எல்லாரும் தங்கள் உடைகள் நன்றாய்க் காய்ந்து துப்புரவாக இருப்பதைச் சொல்லரிய பிரமிப்புடன் நோக்கினர். எலும்புக்குள் ஈரம் சுவறுமட்டாக நனைந்தாலும், எவரும் எவ்வித வசதியீனமும் அனுபவிக்கவில்லை. காசநோயினால் வருந்திய ஒரு மனுஷிக்கு அவளுடைய நோய் இன்னும் அதிகரிக்கும் என்று எண்ணியிருக்க, அவள் அற்புதமாகப் பூரண சுகம் பெற்றாள். இவ்விஷயமாய் இங்கு குறிப்பிடவேண்டிய இன்னும் ஒன்று உளது. ஆகாயமண்டலத்தில் காணப்பட்ட சில மாற்றங்கள் முந்தின காட்சிகளின்போது அக்காட்சிகள் நடைபெறும்பொழுது நிகழ்ந்தன. இந்தக் காட்சியில் காட்சிநாயகி காட்சித்தலத்தைவிட்டு விலகியபின்னர் மாத்திரம் நிகழத் தொடங்கின. இது தேவமாதா பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல, கோவாடி இறியாவுக்கும் அங்கு வந்துகூடிய சனத்திரள் முழுவதுக்கும் குறிப்பாகக் கூறியுள்ள பிரியாவிடையாகும். இவ்வகைத்தான காட்சியின்போது சமுகமாயிருந்த சகல விசுவாசிகளுடையவும் எண்ணங்களாகும் இந்த எண்ணங்களெல்லாம், **"நாங்கள் வானமண்டலத்தில் தேவனின் அடையாளத்தைக் கண்டோம்"** என்பதில் அவ்வெண்ணங்கள் அடங்குவனவாகும்.

சர்வேசுரன் இந்தநாளில் இவ்வளவு அதிசயமான அற்புதங்களைப் பெருகச் செய்ததற்கு நியாயமென்ன? திருச்சபைக்கும், காட்சித்தலத்திற் கூடிய சகலருக்கும், பிள்ளைகள் கண்டகாட்சிகள் மெய்யானகாட்சிகள் என்றும் இவர்கள் சொல்பவைகள் நம்பத்தக்கவை என்றும் பிள்ளைகளுடைய பெற்றாரும் வேதவிரோதிகளும் காட்சி விஷயத்தைப்பற்றி எவ்வித வாக்குவாதமும் செய்ய இடமில்லை என்றும் வற்புறுத்துவதற்கேயாகும். இன்னும் இரக்கம் நிறைந்த தேவதாயார், மூன்று இடைப்பிள்ளைகள் மூலமாக உலகத்துக்கு அளித்த செய்தியானது எவ்வளவு ஒப்புவமையற்ற, காத்திரம் மிக்கது என்பதைக் காட்டுவதும் இந்த அற்புதத்தின் நோக்கமாகும்.

பன்மடிக் காட்சிகள்

தமது கடைசிக் காட்சியில் சஞ்சூசையப்பரையும் திவ்வியபாலக யேசுவையும் தம்முடன்கூட்டி வருவதாகத் தேவதாயார் பிள்ளைகளுக்கு வாக்குப்பண்ணியிருந்தார். இந்த வாக்கு உள்ளபடி நிறைவேறியதா என்று பிள்ளைகளைக் கேட்டுத்தான் அறியலாம். ஏனென்றால் காட்சி முடிந்து தேவதாயார் காட்சித்தலத்தைவிட்டுப் பரலோகத்தை நோக்கிச் செல்லும்பொழுதுதான் வானமண்டலத்தில் சூரியனில் அற்புத மாற்றங்கள் உண்டாயின. இந்த மாற்றங்களினால் சனங்களுக்குள் எவ்வளவோ அருட்சிகளும் நிகழ்ந்தன. இவைகளின் மத்தியில் பிள்ளைகள் பன்மடிக் காட்சியைப் பெற்றார்களோ அல்லவோ என்பதைப்பற்றி எவருமே யோசிக்கவில்லை. ஆனபடியாற்றான் பன்மடிக் காட்சிகளின் விவரங்களைப் பிள்ளைகளைக் கேட்டுத்தான் அறியலாம் என்கிறோம். இந்தப் பன்மடிக் காட்சியைப்பற்றிப் பின்வருமாறு லூசியா அறிவித்திருக்கிறாள். இந்தக் காட்சி வழமைபோல ஷேன் மாத்துக்கு அருகாமையில் நடைபெறவில்லை. ஆனால் வான மண்டலத்திலே சூரியனுக்கு அருகிலே முன்சொன்ன அற்புதத்தின்போதுதானே நடைபெறலாயிற்று. லூசியா சொல்வது :

தேவமாதாவுக்குப் பக்கத்திலே சஞ்சூசையப்பரையும், பாலகயேசுவையும் கண்டேன். திவ்விய பாலன் சூசையப்

பரின் கரங்களில் இருந்தார். அவர் ஏறக்குறைய ஒரு வயசுக் குழந்தைபோல மிகவும் சின்னஞ் சிறியவராகத் தோன்றினார். திவ்விய பாலகனும் சூசையப்பரும் மெல்லிய சிவப்பு ஆடை அணிந்திருந்தார்கள். அதன் பின்பு எங்கள் ஆண்டவர் சனக்கூட்டத்தை ஆசீர்வதிப்பதைக் கண்டேன். தேவமாதா வியாகுலமாதாவின் சாயலாக உடை அணிந்திருப்பதையுங் கண்டேன். ஆனால் அவருடைய மார்பில் வாள் ஊடுருவி இருக்கவில்லை. அதன் பின்பு அவர் வேறுமாதிரியாக உடை அணிந்திருப்பதைக் கண்டேன். அது எப்படிப் பட்டது என்று என்னால் சரியாக விபரிக்கமுடியாது. கார்மேல்மாதாவின் சாயலாகத்தான் உடை அணிந்திருந்தா என்று எண்ணுகிறேன். ஏனென்றால் அவ வெள்ளை அங்கி அணிந்து, நீலநிற மேலங்கியினால் போர்வையிட்டிருந்தா. லூசியாவைப்போல மற்றப் பிள்ளைகளும் திருக்குடும்பத் தரிசனை பெற்றார்கள். ஆனால் லூசியா அவ்வேளை கண்ட மற்றக் காட்சிகளை பிரான்சீஸ் ஆவது இயாசிந்தாவாவது காணவில்லை.

கண்ணைப்பறிக்கும் காட்சிகளின்பின் நடந்தவைகள்

இவைகளின் பின்பு வினோதப்பிரியரான ஆயிரக்கணக்கான யாத்திரிகளுடைய அவதானத்துக்குத் தப்பிக்கொள்ள லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா ஆகிய மூவரும் பிரயாசப்பட்டார்கள். அந்தப் பிரயாசம் எல்லாம் வீணாயிற்று. பிள்ளைகளை எல்லாரும் காணவும், அவர்களுடன் பேசவும் ஆவலாயினர்.

இந்தச் சந்தடியான சனக்கூட்டத்தின் மத்தியிலே அந்தோனி சாந்துஸ் தனது மகளைப்பற்றியிருந்த கைபிடியையும் விட்டுவிட்டார். அதன் பின்பு அன்றிரவு போசனவேளையிற்றான் அவர் இவர்களைக் கண்டார்.

இவ்வளவு எண்ணிறந்த தொகைச் சனம் ஒருபோதும் இந்த மலைநாட்டிற் கூடியதேயில்லை. தாங்கள் அனுபவித்த மகா வலிமையான மன அருட்சிகளை இந்தச் சனங்கள் வேறு எங்காவது அனுபவித்ததில்லை. ஆதலால் இந்தப்

பரிசுத்த பூமியை விட்டுவிட்டுப்போக அவர்களுக்கு மனம் வரவேயில்லை.

காட்சி சம்பந்தமாய் வாசாலமாய்ச் சொற்பொழிவுகள் செய்துகொண்டிருந்த பேச்சாளர் சிலரைச் சூழவரக் கூட்டங் கூட்டமாய் யாத்திரிகள் நின்றார்கள். ஆனால் எல்லாக் கூட்டங்களும் காட்சிக்காரரை, விசேஷமாக லூசியாவைத் தங்களுடன் சிறிதுவேளையாவது வைத்துக்கொள்ளவேண்டுமென்று பெரிதும் வாஞ்சித்தார்கள். வலது பக்கத்தில் நின்றவர்களும் இடதுபக்கத்தில் நிற்பவர்களும், அங்கே நிற்பவர்களும இங்கே நிற்பவர்களும், மரச்சோலைகளுள் நிற்பவர்களும், மேய்ச்சல் நிலத்தில் நிற்பவர்களும், தூரத்தில் நிற்பவர்களும், கிட்டநிற்பவர்களும், தெருச்சந்திகளில் நிற்பவர்களும், பத்திமாகோவில் வளவுக்குள் நிற்பவர்களும் எல்லாரும் பிள்ளைகளைத் தங்களுக்கு வேணும் வேணும் என்று வாதாடிக்கொண்டேயிருந்தார்கள். கோவாடி இறியாவில் இவர்களைத் தேடுவோர் ஒருசிலர். அல்யுஸ்திறேல் பிரிவில் தேடுவோர் ஒருசிலர். வீட்டில் தேடுவோர் ஒரு சிலர். தோட்டத்தில் தேடுவோர் ஒருசிலராகச் சகல மூலைமுடுக்குகளிலும் சனங்கள் லூசியாவைத் தேடியவண்ணமாகவே இருந்தார்கள். ஏதோ ஒரு வகையாய் இவளைக் கண்டுபிடித்தவர்கள் இவளை மறித்துவைத்து, இவள் நூறாயிரம் விசை மீண்டும் மீண்டும் சொன்ன அதே சம்பவங்களைத் திரும்பவும் சொல்லும்படி செய்வார்கள். இவளும் அதே சம்பவங்களை மீண்டும் மீண்டும் சொல்லி, அவைகளைத் திரும்பவும் திரும்பவும் விளங்கப்படுத்துவாள். இவள் சொல்வதைக் கேட்டுக்கொண்டுநின்ற சிலர் மனம் உருகிக் கண்ணீர் சொரிவார்கள். "எத்துணை மகா அற்புதம்", "தேவனுக்கு மங்களம்" என்று பிரமித்துக் கூறுவார்கள்.

ஆனால் சிலர் இன்னுமே ஒரு நியாயமுமில்லாது, காட்சிச் சம்பவங்களைப்பற்றிச் சந்தேகம் கொள்வார்கள். ஆயிரம் பதினாயிரம்பேர் வானமண்டலத்திற்கண்ட அந்த மகா அற்பு

தத்தைப்பற்றியும், சில பேதை மாந்தர் நம்பாது விவாதமிடுவார்கள்.

எப்படியோ யாத்திரிகள் எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்கும் இல்லங்களுக்கும் போகவேண்டுமே. தங்கள் அலுவல்களை மீண்டும் பார்க்கவேண்டுமே. ஐப்பசி மாசம் 13-ந் தேதி பின்னேரம், தேவதாயார் வானமண்டலத்திற் காண்பித்த அற்புத அடையாளத்தைக்கண்ட அறுபதினாயிரம் சனங்களும், தங்கள் தங்கள் கிராமங்களுக்குச் சென்று தாங்கள் கண்ணுற்ற அற்புதங்களை, நாடுகள் நகரங்கள் கிராமங்கள் எங்கும் பரப்பினார்கள். இந்த மகா சம்பவங்கள் எல்லாம் காட்டுத்தீபோலப் போர்த்துக்கால்தேசம் முழுவதும் பரம்பினமை பலருடைய வினோதப்பிரியத்தைத் தட்டி அருட்டிவிட்டன. ஆனால் அதிலும்பார்க்க அவைகள் எத்தனையோபேருடைய விசுவாசத்துக்கும் பயபத்திக்கும் புத்துயிர் கொடுக்கலாயின.

அடுத்தநாள் வெளிவந்த பத்திரிகைகள் நடந்தசம்பவங்கள் எல்லாம் உண்மையென்பதை உறுதிப்படுத்தலாயின. ஆனால் சில பத்திரிகிருபர்கள் தங்களுடைய மாய்மாலமான சந்தேகத்தைக் குறிப்பிட எப்படித்தான் பிரயாசப்பட்டும், அச்சம்பவங்களினால் அவர்களில் உண்டான உள்ளக்கிளர்ச்சியையும், மன அருட்சியையும் மறைக்கமுடியாதுபோயினர். சிலநாட்களாகச் சாய்ப்புகளிலோ, தவறணைகளிலோ, சவரச்சாலைகளிலோ, சந்தைகளிலோ அவர்கள் பத்திமாச்சம்பவங்களைப்பற்றியல்லாது வேறு விஷயங்களைப்பற்றிப் பேசாதொழிந்தனர்.

போர்த்துக்கீசர் தங்களுடைய இயல்பான கத்தோலிக்க சமயச் சார்புக்கிணங்கத் தேவதாயாரில் மகா உருக்கமான அன்புள்ளவர்கள். ஆதலால் அவர்கள் பத்திமாச்சம்பவங்களைப்பற்றி அதிகாரமுறையில் நடைபெற்ற விசாரணையின் முடிவுகளுக்காவது, திருச்சபை அதிகாரிகளின் தீர்மானம் அறிக்கையிடப்படுமட்டுமாவது காத்துக்கொண்டிருக்கவில்லை. பிரான்சீஸ், இயாசிந்தா, லூசியா ஆகிய மூவரும் தேவ

மாதாவின் தரிசனை பெற்றார்கள் என்பதைப் போர்த்துக்கீசர் முற்றும் விசுவசித்தார்கள். தேவதாயாரும் தாம் வாக்குப் பண்ணியபடி, மகா அற்புதம் ஒன்றை நடத்தி, தமது தரிசனை மெய்யான தரிசனையென அத்தாட்சிப்படுத்திப்போட்டார் எனவும் விசுவசித்தார்கள்.

“நீ என்ன சொல்லுகிறாய்? சாதாரண சனங்களின் சிறு பிள்ளைகள் மூவருக்கு, எங்களைப்போன்றவர்களுடைய பிள்ளைகளுக்குத் தேவமாதா தமது தரிசனையைக் கொடுத்தார் என்பதைப்பற்றி என்ன சொல்லுகிறாய் நீ” என்று அவர்களைக்கேட்டால் அவர்கள் சொல்வது என்ன? நான் சொல்வது என்னவா? நான் சொல்வது என்னவென்றால்: “**எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதருக்குப் புகழ்ச்சி உண்டாவதாக. எங்கள் வல்லபம்மிக்க நல்ல தாயாருக்கும் புகழ்ச்சி உண்டாவதாக**” என்பதுதான்.

இந்தச் சம்பவங்களின் பின்னர் போர்த்துக்கீசரின் தேவமாதா பத்தியானது அதிக ஆழமும், வளர்ச்சியும், வலிமையும் உள்ளதாயிற்று. பரலோக இராக்கினி தங்கள் பூமியிலே தங்களைச் சூழ்ந்திருக்கும் ஆகாயத்திலே சமுகமாயிருக்கிறார் என்பதைச் சகல போர்த்துக்கீசரும் தங்கள் இருதயத்தில் பூரணமாய் உணருகின்றார்கள். பரலோக விஷயங்களைத் தங்கள் கையினால் தொட்டுப்பார்ப்பதுபோன்ற மனப்பான்மை உடையவர்களாக விளங்குகின்றார்கள். என்ன சொல்லுகிறேன். பரலோகத்திலிருந்து தங்களுக்குக்கிடைத்த இந்த இனிமேல் இல்லையென்ற மகா பிரகாசத்தினால் தாங்கள் நசுக்குண்டவர்கள்போல அவர்கள் உணருகின்றார்கள்.

லூர்துபதியின் பிரபைக் கதிர்கள்போலும், பத்திமாபதியின் பிரபைக் கதிர்களும் பிரசாதியினர் மத்தியிலும் உலகம் முழுவதிலும் பரவுவதாகும். ஞானக்குருடராயிருந்த எண்ணிறந்த மனிதர்கள் அளவற்ற தேவனைநோக்கித் தங்கள் கண்களைத் திறப்பார்கள். எண்ணிறந்த இருதயங்கள் மெய்யன்பராகிய சர்வேசுரனை நேசிக்கத் தொடங்குவனவாகும். கிறீஸ்தவர்களுக்குரிய நம்பிக்கையையும், மெய்யான விசுவாசத்தையும் அவைகள் பெறுவனவாகும். ஏனென்றால்,

அந்த "ஷேன்" மரத்து நிழலிலிருந்து பாவிகள் மனந்திரும்பும்படி செபமாலை ஓதிய மூன்று சிறு இடைப்பிள்ளைகளின் மன்றாட்டங்களுக்குப் பரலோக இராக்கினி மகா கருணையுடன் செவிசாய்த்திருக்கிறார்.

4-ம் அதிகாரம்

பாடுபடுவதொன்றுமே எஞ்சியிருப்பது.

அன்புமிக்க வழிகாட்டிகள்

கோவாடி இறியாவில் தேவமாதா எமது மூன்று பிள்ளைகளுடன் நடத்திய சம்பாஷணைகளில் எல்லாவற்றையும் அறியோம். மோட்சத்தில்தான் அச்சம்பாஷணை முழுவதையும் அறியலாகும். ஆனால் லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா என்ற மூவருக்கும், **ஆன்ம ஞான சீவியத்தில்** தேவதாயார் ஒப்பு உவமை இல்லாத ஆசிரியையாக விளங்கினார் என்பது நிச்சயம். சகல கிறீஸ்தவர்களுக்கும் இன்றியமையாத இரண்டு வகையான ஞானசாஸ்திரத்தை அவர்களுக்கு அத்திருத்தாயார் படிப்பித்திருக்கிறார். **செபஞ் செய்வதும், தேவனுக்காகப் பாடுபடுவதுமே** அந்த இரண்டு ஞானசாஸ்திரங்களாகும். இந்த மூன்று இடைப்பிள்ளைகளும் தேவமாதாவிடமிருந்து கற்பதில் ஆவலும், நிறைவான அன்பும் உள்ள மாணாக்கராயிருந்தனர். தேவதாயார் அவர்களுடைய இருதயங்களை முற்றும் தம்வசப்படுத்திக்கொண்டபடியினால், அவ்வளவு சின்ன வயதுள்ள அப்பிள்ளைகளிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சகலத்தையும் அவர் பெற்றுக்கொண்டார். மரியாயி இவர்களைத் தமது நம்பிக்கைக்கு உரியவர்கள் ஆக்கிய பிற்பாடு எவ்வளவோ தூய்மையும் அலங்காரமும் உள்ள இவர்களுடைய ஆன்மாக்கள் எவ்வளவாகத் தேவ

ஞானத்தில் உயர்வடைந்து, எவ்விதம் ஞானசீவியத்தில் புத்துயிர்பெற்று இருந்தன என்பதை மேலே நாம் கூறிய சம்பவங்கள் எல்லாம் தெள்ளத் தெளிவாய்க் காட்டுவனவாகும்.

ஆனால் இவர்கள் இனிமேல் செல்லவேண்டிய மகா கஷ்டமான பாதையில் இவர்களுக்குத் தேவதாயார் வேறும் அன்புமிக்க வழிகாட்டிகளைக் கொடுக்கலாயினர். இந்த வழிகாட்டிகள், இரக்கமும் அனுதாபமும் நிறைந்த உத்தம தேவ தொண்டர்களாகிய சில குருமாரே ஆவர். பத்திமாபதியின் கட்டளைக்குருவானவர், பிள்ளைகளுடைய காட்சிகள் உள்ளபடி பரலோகத்திலிருந்துதான் வந்தவைகளோ என்று இன்னுமே இடைவிடாது சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தாலும் அச்சிறுவர்கள்மட்டில் எப்போதும் மகா பட்சபற்றுதல் உள்ளவராயிருந்தார். இவர்களுக்கு மகா ஞானமுள்ள பல நன்மதிகளும் கூறி வருவார். வேறு சில குருமார் அவரிலும் கூடுதலான பிதாவுக்குரிய அன்புடன் இப்பிள்ளைகளை நடத்திவந்தார்கள்.

வண. குரூஸ் சுவாமியாரைப்பற்றி நாம் ஏலவே சில கூறியிருக்கிறோம். அவர்தான் கட்டளைச் சுவாமியாருடன் பேசி, மூன்று வருடங்களின்முன் லூசியா முதற்சற்பிரசாதம் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளும்படி செய்தவர். பத்திமாவில் நடைபெற்ற சம்பவங்களை அவர் லிஸ்போன் நகரத்திற் கேள்விப்பட்டதும், அவைகளைப்பற்றிக் காட்சிக்காரப் பிள்ளைகளிடத்திலிருந்தே நேரில் அறிந்துகொள்ளும்படியாக அவர் பத்திமாவுக்கு வந்தார்.

மூன்று பிள்ளைகளுடனும் நெடுநேரம் சம்பாஷித்த பிற்பாடு, தேவமாதா காட்சி அருளிய இடத்தைப் பார்க்கும்படியாக இவர்களுடன் கோவாடி இறியாவுக்குப்போனார். லூசியாவும் இயாசிந்தாவும் குரூஸ் சுவாமியாருடன் போனார்கள். அவர் ஒரு சின்னக் கழுதையில் ஏறிச்செல்ல, அவருக்கு வலது பக்கத்தில் ஒருவரும், இடது பக்கத்தில் ஒரு

வருமாக இவர்கள் இருவரும் போனார்கள். கழுதை அவ்வளவு பதிவாக இருந்தபடியினால் அதில் ஏறிச் சென்ற குருவானவருடைய பாதங்கள் இரண்டும் நிலத்தில் ஊன்றி இழுபட்டன. இப்படிச் சவாரிபோகும் பொழுதுதான் பிள்ளைகள் ஒருபோதும் மறக்காத சில மனவல்லயச் செபங்களைக் குரூஸ் சுவாமியார் பிள்ளைகளுக்குப் படிப்பித்தார்.



பரிசுத்த குரூஸ் சுவாமியார் பிள்ளைகளுடன் கோவாடிஇறியாவுக்குப் போகிறார்.

“என் யேசுவே! நான் உம்மை நேசிக்கிறேன்.” “மரியாயின் மதுரமான இருதயமே! எனது இரட்சணியமாயிரும்” என்ற இரண்டு மனவல்லயச் செபங்களும் அவர் சொல்லிக்கொடுத்தவைகளுள் பிரதானமானவை.

மூந்திய மனவல்லயச் செபம் இயாசிந்தாவுக்கு மகா சந்தோஷத்தை உண்டுபண்ணியது. இவள் அதைத் தனது முழு இருதய அன்புடனும் வேகரமான பயபக்தியுடனும் அடிக்கடி சொல்லி வருவாள்.

இன்னும் ஒரு குருவானவர் பிள்ளைகளுடன் நெடுநேரம் சல்லாபித்த பின்பு, இவர்களுக்கு அதி உத்தமமான ஒரு ஆலோசனை சொன்னார்.

“பிள்ளைகளே! ஆண்டவர் உங்களுக்கு அருளிய மகா வரப்பிரசாதங்களுக்காகவும், ஆசீர்வாத நன்மை வரங்களுக்காகவும், நீங்கள் அவரை அதிகம்அதிகம் நேசிக்கவேண்டும்.” லூசியா இந்த நல்லாலோசனையை மனதில் இருத்தி **“என் தேவனே! நீர் எனக்கு அருளிய வரப்பிரசாதங்களுக்கு நன்றியறிதலாக நான் உம்மை நேசிக்கிறேன்”** என்று அடிக்கடி சொல்லிவரப் பழகிக்கொண்டாள். இந்த மனவல்லயச் செபத்தைத் தனது சிநேகிதர் இருவருக்கும் சொல்லிக் கொடுத்தாள். இம்மூவரும் ஒருமிக்க விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது இடையிடை விளையாட்டை நிறுத்திப் போட்டு, இச்செபத்தைச் சொல்லவும் தீர்மானித்துக்கொண்டார்கள். சில சமயங்களில் மற்றவர்கள் மறந்துவிட்டால், இயாசிந்தா அதனை அவர்களுக்கு நினைப்பூட்டுவாள். “ஆண்டவர் எங்களுக்குத் தந்த வரப்பிரசாதங்களுக்காக நாங்கள் அவரை அதிகமதிகம் நேசிக்கிறோம் என்று சொல்லும்படி நினைத்தீர்களா?” என்பதே இயாசிந்தாவின் கேள்வியாகும்.

மூன்றாங் காட்சியின் பின்பு பிள்ளைகளை விசாரணை செய்யவந்த ஒரு குருவானவர், பாப்பாண்டவரைப்பற்றியும் அவர் சுமந்திருக்கும் பாரமான பொறுப்பைப்பற்றியும் இவர்களுக்கு வேகரமான ஆர்வத்துடன் சொல்லியிருந்தார். சொல்லிப பிள்ளைகள் அவருக்காக மன்றாடிவரவேண்டும் எனவும் இவர்களைத் தூண்டிவிட்டார்.

இந்நாட் தொடக்கம் பரிசுத்த பாப்பாண்டவர் இந்தப் பிள்ளைகளுடைய நினைவிலேயும், அன்பிலேயும் முதல் இடம் பெற்றிருக்கிறார். அப்படி முதல் இடம் பெற்றதற்கு நியாயம் என்னவென்றால், அந்தக் குருவானவர் பாப்பாண்டவரைப்பற்றிச் சொன்னது பிள்ளைகளுக்குத் தேவமாதா சொல்லிய சில இரகசியத்துடனும் இயாசிந்தாவுக்குத் தனிமையாக வெளிப்படுத்தப்பட்ட சிலவற்றுடனும் பொருத்தமுடைத்தாயிருப்பதுதான்.

ஒவ்வொருநாளும் காலமே இவர்கள் ஒப்புக்கொடுக்கும் காணிக்கைச் செபத்தில் **“பரிசுத்த பிதாவுக்காகவும்”** என்ற சொற்களையும் சேர்த்துவந்தார்கள். “உறேம்” சிறைச்

சாலையில் இருந்தபொழுது இந்த மன்றாட்டை மறந்துவிடப்படாது எனப் பிரான்சீஸ் நினைப்பூட்டியதை முன்னர் குறிப்பிட்டிருக்கிறோம். செபமாலை முடிவில் அவர்கள் பாப்பாண்டவருக்காக மூன்று பிரியதத்தமந்திரம் சொல்லியும் வந்தார்கள். "பாப்பாண்டவர் மட்டில் அவர்களுக்கு அவ்வளவு அன்பு இருந்தபடியினால் ஆ! நான் பாப்பாண்டவரைக் காணக்கூடும் என்றாலோ! எத்தனையோபேர் இங்கு வருகிறார்கள். பாப்பாண்டவர் மாத்திரம் இங்கு வருகிறதில்லையே?" என்று இயாசிந்தா பெருமூச்சுவிடுவாள். கிறீஸ்தவர்கள் வசிக்கும் நாடுகளிலே, பாப்பாண்டவர் பயணம் செய்தல் எளிதென்றுதான் இவர்கள் எண்ணினார்கள். கருதினால்மார், அல்லது பாப்பாண்டவர்தானே நேரில் விசாரணை செய்வதற்கு லூசியாவை றோமாபுரிக்குப் பாப்பாண்டவர் அழைத்தல் கூடும் என்று பத்திமாவின் கட்டளைக்குருவானவர் உத்தேசத்திற் சொன்னார். இதைக்கேட்டதும் லூசியா கைகொட்டி அகமகிழ்ந்து "என்ன பாக்கியம்! நான் பாப்பாண்டவரைக் காண்பேன்" என்று ஆர்ப்பரித்தாள். இதைக்கண்ட மற்ற இருவரும் துக்கப்பட்டு "நாங்கள் உன்னுடன் வரமாட்டோம். ஆனால் இந்தப் பரித்தியாகத்தை நாங்கள் பாப்பாண்டவருக்காக எங்கள் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போம்" என்றார்கள்.

பிள்ளைகள் அனுபவித்த பலவித உபத்திரவங்கள் மத்தியிலே, அவர்களுக்கு மகா ஆறுதல் சொல்லி இவர்களுக்குத் தாபரமாக இருந்துவந்த குருவானவர் வண. பவுஸ்தினோ யோசே இயாசிந்தோ பேறெயிரா (Faustino Jose Jacento) சுவாமியார் ஆவர். அவர் ஒலிவால் எனும் விசாரணைப்பங்கின் கட்டளைக்குருவும் உறெம் வட்டாரம் முழுவதுக்கும் தலைமைக் குருவாகவும் இருந்தவர். அவர் இப்போது சீவந்தராக இருக்கவில்லை. ஆனால் அவர் திருத்தொண்டு ஆற்றிவந்த இடங்களிலெல்லாம், அவரை ஒரு அர்ச்சியசிஷ்டர் எனவே இன்றும் மதித்துவருகிறார்கள்.

மகா தேவதோத்திர வாஞ்சையுள்ள அவர், தேவமாதாவிலும் உருக்கமான பத்தி உள்ளவர். உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களிலும் மிகுதியும் இரக்கமுள்ளவர். அந்தக் குரு

வானவர் தமது விசாரணைக்குட்பட்ட ஏழாயிரம் கிறீஸ்தவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே அறிந்திருந்தார். ஒவ்வொருவருடையவும் விசேஷ அன்பாராகவுமிருந்தார். எந்தப்பெரிய பிரபுவின் மாளிகையென்றால் என்ன, தமது மந்தையைச்சேர்ந்த ஆகத்தாழ்ந்த கரிச்சுரங்க வேலைகாரன் ஒருவனின் குடிசை என்றால் என்ன, எல்லா இடங்களிலும் ஒரேவகையான நிஷ்கபடப்போக்குடன் சென்று புழங்கி வருவார். சகலரும் அவருடைய நன்மதிகளுக்கு அன்போடும் ஆசாரத்தோடும் செவிகொடுத்து வந்தார்கள்.

தமது வட்டாரத்திலிருந்த குருக்கள் எல்லாருக்கும் அவர் ஒரு மேல்வரிச்சட்டமாய், சங்கைபோந்த தலைவராய் விளங்கிவந்தார். அவர்களுள் அநேகர் ஒருகாலம் அவருடைய மாணாக்கராயிருந்தவர்கள். ஒலிவால் விசாரணைப் பங்குக்கு, கட்டளைக் குருவாக இருந்த காலத்தில், தமது ஞானமந்தையிலிருந்து இருபத்தெட்டுப்பேர் குருப்பட்டம் பெறச் செய்தவர். அவர் ஒருவரே தனிய அவ்வளவுபேர் குருவாகும்படி வழிதிறந்துவிட்டதே, அவருடைய மங்காப் புகழுக்கு மறுக்கொணாச் சான்றாகும்.

1910-ம் ஆண்டில் நடந்த தேசப்புரட்டற்கலகத்தின் பின்பு, போர்த்துக்கீச யக்கோப்பித்தர் எனப்படும் குடியரசுக் கட்சியார் அவருடைய கீர்த்திப்பிரதாபத்தை மங்கச்செய்யும்படியாக அவரைப் பிடித்துச் சிறையிலும் அடைத்தார்கள். அங்கிருந்தும் அவர் இன்னும் கூடுதலான கீர்த்திப்பிரதாபத்துடன்தான் புறப்பட்டார்.

விரைவில் இந்த அருமைக் குருப்பிரசாதிக்கும், தேவதாயாரின் காட்சிபெற்ற மூன்று சிறுவர்களுக்குமிடையில் மிகவும் வலிமையான சிநேக பாந்தவம் உண்டாகலாயிற்று. இவர்களுக்கு ஞானச்சீவியத்தைப் பயிற்றுவது தமது கடமை என அவர் உணர்ந்தார். உணர்ந்து பலப்பல சின்னஞ்சிறிய பரித்தியாகக் கிரிகைகளினால் எப்படி எங்கள் ஆண்டவருக்குத் தங்கள் அன்பைக் காட்டலாமெனப் பிள்ளைகளுக்குப் படிப்பித்தார்.

" ஒருவகையான உணவில் உங்களுக்கு அதிகம் ஆசை வந்தால், அதைவிட்டுப்போட்டு உங்களுக்கு அவ்வளவு விருப்பமில்லாத உணவைப் புசியுங்கள். விளையாடவேண்டுமென்ற ஆசையினால் நீங்கள் ஆத்திரப்படும்பொழுது விளையாடாதிருங்கள். இது ஆண்டவருக்குப் பிரியமான திறமான ஒரு ஒறுத்தல். வினோதப்பிரியமுள்ள சிலர் உங்களைக் கேள்வி கேட்கும்பொழுது மறுமொழிசொல்ல மனமில்லாது நீங்கள் ஓடிஒளிக்க எண்ணினால், அப்படிச் செய்யாது அந்தப் பரித்தியாகத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள் என்று இவ்வகையான நன்மதிகளைப் பிள்ளைகளுக்குச் சொல்லி, இவர்களைப் பரித்தியாக முயற்சி செய்யப் பயிற்றி வந்தார்.

வண. இயாசிந்தோ பெறேயிறா சுவாமியார் பத்திமாபதிக்கு வரும்பொழுதெல்லாம் லூசியாவைக்கண்டு இவளைத் தைரியப்படுத்திவருவார். காலத்துக்குக்காலம் தமது ஒலிவால் என்ற விசாரணைப்பங்குக்கு அணித்தாக உள்ள "சுத்தாறியா" என்னும் இடத்தில் வசித்த எமிலிஅம்மா என்ற ஒரு பத்தியுள்ள விதவையை அவர் அல்புஸ்திறேல் பிரிவுக்கு அனுப்பிவருவார். இந்தப் புண்ணியவதி லூசியாவைத் தன்னுடன் ஒலிவால் கட்டளைச் சுவாமியாரின் குருமனைக்கு அழைத்துச் செல்வாள். அங்கு இவள் இயாசிந்தோ பெறேயிறா சுவாமியாரின் மருமகளுடன் இரண்டு மூன்று நாட்களுக்குத் தங்கியிருப்பாள். இப்படி இவள் அங்கு தங்கியிருந்த நாட்களில் பெறேயிறா சுவாமியார் பல மணித்தியாலங்கள் இவளுடன் செலவிட்டு இவளுக்குப் பலவித புண்ணிய அனுசாரங்களைப் பயிற்றிக் காத்திரம்மிக்க நன்மதிகளை அபரிமிதமாக இவளுக்குச் சொல்லிக்கொடுத்து வருவார். தனது ஞானச்சீவியத்துக்கு வழிகாட்டியாக இருந்த அந்தக் குருவானவரைப்பற்றி இன்றைக்கும் சிஸ்ரர் வியாகுலமரி (லூசியா) நன்றியறிந்த ஞாபகம் உள்ளவளாகவே இருந்துவருகின்றாள்.

அந்தத் தலைமைக் குருவானவர், இயாசிந்தாவிலும், பிரான்சீசிலும் கவனம் செலுத்திவந்தார். இவர்களைப்பற்றியும் தாம் பிதாவுக்குரிய அன்புடன் நினைத்து வருகிறார் என்

பதை லூசியா மூலமாக இவர்களுக்கு அறிவித்து, இவள் வழியாகத்தானே பல நற்புத்திமதிகளையும் சொல்லி அனுப்புவார். விசேஷமாக, இவர்கள் இருவரும் நோய்வாய்ப்பட்டிருக்கும்பொழுது அவர் இவ்வித நன்மதிகளை இவர்களுக்குக் கூறிவருவார். பத்திமாவில் நிகழ்ந்த அற்புதங்கள், காட்சிகளைப்பற்றித் திருச்சபைச் சட்டப்பிரகாரம் விசாரணை நடந்தபொழுது அவ்விசாரணைச் சங்கத்து அங்கத்தவர்களில் ஒருவராக இலேயிறாவின் மேற்றிராணியார் அவரையும் நியமனம் செய்தார். விசாரணையின் ஆரம்பந்தொட்டே பெறேயிறா சுவாமியார் பத்திமா காட்சிகள் எல்லாம் உண்மை என்பது தாம் கொண்டிருக்கும் நிச்சயமான முடிபெனப் பிரசித்தமாக அறிக்கையிட்டிருக்கிறார்.

விசாரணையோடு கூடிய வேதனைகள்

கோவாடி இறியாவுக்குத் திருயாத்திரை செய்பவர்கள் இடைவிடாது வந்துபோய்க்கொண்டேயிருந்தார்கள். பல கிறீஸ்தவர்கள் ஒன்றுகூடி, எவ்வகையான அணிவகுப்புமில்லாது தலைமைவகித்து அவர்களை நடப்பிப்பவர்களில்லாது, தங்கள் இஷ்டப்படி பலபாகங்களிலுமிருந்து வந்துபோய்க்கொண்டிருந்தார்கள். அந்தோனி சாந்துஸ் என்பவருக்குச் சேர்ந்த அந்த நிலபுலங்கள் எல்லாம் குருவானவரில்லாத கோவிற்தலமாகிவிட்டது. அந்தக் கோவிலுக்குச் சுவர்களுமில்லை. அதிற் பீடமுமில்லை. ஆனால் சில யாத்திரிகள் அமைத்த வாயில் ஒன்றுக்கு முன் இடைவிடாமல் செபவேண்டுதல்கள் நடைபெற்றுக்கொண்டே வந்தன.

சனங்கள் தங்களைக் காணாமல், அவர்களுடைய அவதானத்துக்குத் தப்பி, காட்சித்தலத்தைத் தரிசிப்பதென்றால் லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா என்பவர்களுக்குப் பெரும் சிக்கல் எடுக்கும் அலுவலாயிற்று. நிஷ்கபடமும், விவேகமும் உள்ள இந்தப்பிள்ளைகள் சிமுக்கிடாதுபோயிருந்து அவ்விடத்திற் செபமாலை சொல்லுவார்கள். சனக்கூட்டம் வந்தால் அவர்களும் பிள்ளைகளுடன் சேர்ந்து செபமாலை சொல்லுவார்கள்.

இந்த யாத்திரிகளின் அரிகண்டங்களைத் தாங்குவதற்குப் பிள்ளைகள் சொல்லரிய பொறுமையுடையவர்களாக இருக்கவேண்டியதாயிற்று. தங்களுடைய நூறாயிரம் அவசியங்களுக்காக மன்றாடும்படி பிள்ளைகளை அலட்டுவார்கள். நூறாயிரம் கேள்விகளைக் கேட்பார்கள். சில சமயங்களில் அவதந்திரமான அல்லது விவேகமற்ற கேள்விகளையுங் கேட்பார்கள். கோவாடி இறியாவில் இவர்களைக் காணாவிட்டால் வீட்டிலோ மேய்ச்சல் நிலத்திலோ இவர்களைத் தேடுவார்கள். மணித்தியாலங்களாக இந்தச் சிறுவர்களை அவர்கள் மறித்துவைத்துக்கொண்டிருப்பார்கள். சிறு பிள்ளைகளுக்கு இது எவ்வளவு அலுப்பு, எவ்வளவு களைப்பு. மகா அற்புதம் நடந்த அன்று இந்தச் சிறு பிள்ளைகள் சனக்கூட்டத்தில் பட்ட நெருக்கிடைகளை அறிவோமே. இவர்களுடைய பெற்றார் இவர்களுக்கு ஏதாவது உணவு கொடுக்கும்படியாக யாத்திரிகள் மத்தியிலிருந்து இவர்களை வலோற்காரமாய்ப் பறித்து இழுத்துக்கொண்டு போகவேண்டியிருந்தது. கடைசியாக லூசியா ஏதோ ஒருவகையாய் யாத்திரிகளின் கையிலிருந்து மீட்கப்பட்டு வீடுவந்து சேர்ந்தபொழுது தாங்கரிய ஆயாசத்தினால் சோர்ந்து விழுந்து நித்திரையாய்விட்டாள்.

சிலர் இராமுழுதும் காவலிருந்து அடுத்தநாளாவது பிள்ளைகளைக் கண்டு இவர்களுடன் சம்பாஷிக்கப் பிரயாசப்பட்டார்கள். இப்படியாகப் பிள்ளைகளுடன் சம்பாஷிக்க விரும்பியவர்களால் இவர்களுக்கு உண்டான சங்கடத்துக்கு முடிவேயில்லை.

பத்திரிகை நிருபர்களும், வைத்திய நிபுணர்களும், குருமாரும், விசுவாசிகளும், அவவிசுவாசிகளும், காட்சிகளில் பூரண நம்பிக்கை வைத்தவர்களும், சந்தேகம் உள்ளவர்களும் தாங்கள் எல்லாவற்றையும் துருவி ஆராய்ந்து ஒரு முடிவு செய்யத் தங்களுக்கு உரிமை உண்டென நடித்து இந்தச் சிறுவர்களைக் கேள்விகளுக்குமேல் கேள்விகள் கேட்டு ஒருவகையில் இவர்களை வதைத்துக்கொண்டு வந்தார்கள் என்று சொல்லலாம். சிலர் இப்பிள்ளைகளின் கண்களில் தங்கள் கூறுகுறிப்பான பார்வையை நிறுத்தி, இவர்களுடைய ஆத்துமத்தின் அடித்தளம்மட்டாய்ப் பரிசோதிக்கவும், இவர்

களுடைய இரகசியத்தை எதுவிதத்திலும் கண்டுபிடித்துவிடவும் தலையைக்குத்திப் புரவி ஆடினார்கள்.

தங்கள் கேள்விகளினால் இவ்விதம் பிள்ளைகளை வாதித்துவந்தவர்கள், இவர்கள் காட்சிகளைப்பற்றிச் சொல்லிவந்த வழமையான சம்பவங்களை அல்லாது எவ்வகையான புதுச் சம்பவங்களையும் அறியவேயில்லை. இவர்களுடைய மறுமொழிகளுக்கிடையில் எவ்வகையான பொருத்தமில்லாத தன்மையையும் அவர்கள் சிறிதேனுங் கண்டுபிடிக்கவில்லை. ஒரு பிள்ளை சொன்னதுக்கு நேர்விரோதமானதொன்றை மற்றப் பிள்ளைகள் சொல்லவுமில்லை. இவை எல்லாம் எப்படி இருந்தாலும் கேள்விகள் கேட்டுவந்தவர்கள் மனங்களையாது மீண்டும் மீண்டும் கேள்விகளைக்கேட்டு இவர்களை நெருக்கடிபண்ணிக்கொண்டு வருவார்கள். இந்தக் கேள்விகள் எல்லாம் இந்தப் பிள்ளைகளுக்குச் சித்திரவதையைப்போன்ற உபத்திரவமாகவே இருந்துவந்தன. சாதாரணமாய் அக்கேள்விகளை இவர்கள் பொறுமையுடன் ஏற்று அவற்றால் உண்டான வேதனைகளை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தார்கள். இவ்வளவு சிறுவயதுள்ள இந்தப் பிள்ளைகளை அளவு பிரமாணமில்லாது கேள்விகளினால் நெருக்கடிக்கு உட்படுத்தும்பொழுது, இவர்கள் தாங்கள் தப்பிக்கொள்வதற்குச் சில சாக்குப்போக்குகளைக் கண்டுகொள்ளத் தெண்டிப்பதில் ஆச்சரியப்பட இடமுண்டா?

அந்நியர்கள் சிலர் “அல்யுஸ்திறேல்” பிரிவுக்கு வந்திருக்கிறார்களாம் எனக் கேள்விப்பட்டால் பிள்ளைகள் சில சமயங்களில் ஓடிஒளித்துவிடுவார்கள். “ஒரேசம்பவத்தை மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லி அலுத்துப்போனபடியால் இப்படிச் செய்தார்கள் என்பது ஒரு நியாயம். ஆனால் தேவமாதா இவர்களிடம் ஒப்புவித்த இரகசியத்தை வெளிவிட்டுவிடக்கூடுமோ என்றும் பயந்தார்கள். அல்லாமலும் தாங்கள் செய்துவரும் ஒறுத்தல் முயற்சிகளையும், அவை போன்ற வேறுசில விஷயங்களையும் எவருக்கும் சொல்லாது மறைத்துவைத்திருக்கவேண்டும் என்றும் இவர்கள் தங்களுக்குள் பொருத்தனை செய்துகொண்டார்கள். இந்த நியாயங்களின் நிமித்தமும், விவேகமற்ற நூதனப்பிரியமுள்ளவர்க

ளுடைய கேள்விகளுக்குத் தப்பிக்கொள்ளவும் இவர்கள் உபாயங் தேடினர். இன்னும் பல சமயங்களிலே இப்பிள்ளைகளைச் சிலர் இவர்கள் சமுகத்துக்குமுன்னே புகழ்ந்து பாராட்டினபடியால் தாழ்ச்சிக்குப்பங்கம்வரக்கூடுமோ என்றும் இவர்கள் அஞ்சினார்கள். பிடிவாதமாகக் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தவர்களுடைய கூட்டங்களை, இரகசியமாக விட்டுவிலகுதல் தனது கடமை என்று விசேஷமாக இயாசிந்தா தீர்மானித்துக்கொண்டாள். தான் இனிமேல் ஒருவருக்கும் ஒன்றும் சொல்வதில்லை என்று லூசியாவுக்குக் கொடுத்த வாக்கை இவள் மறந்துவிடவில்லை. தனது பெலவீனத்தின் நிமித்தம் இவள் தன்னை நம்பவேயில்லை.

தப்பிக்கொள்ள முடியாவிட்டால், இவள் தலையைக் கவிழ்ந்து, நிலத்தைப் பார்த்துக்கொண்டு ஏறக்குறைய ஒரு சொல்லுத்தானும் சொல்லாதிருப்பாள். தங்களைக் கேள்விகள்கேட்டு உபத்திரவப்படுத்துபவர்களிடமிருந்து தப்பிக்கொள்ள ஒருநாள் இயாசிந்தா நல்ல ஒரு உபாயங் கண்டுபிடித்தாள். இவர்கள் மூவரும் பட்டணத்தை நோக்கிச் செல்லும் பாதையால் போய், பெருந்தெருவைச் சேர்ந்த பொழுது முற்றவெளியில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு மோட்டார் இரதத்திலிருந்து சில துரைமக்களும் அம்மாமாரும் இறங்குவதைக் கண்டார்கள். அவர்களுடைய நோக்கம் என்னவென்பதைப்பற்றிப் பிள்ளைகள் நன்றாக நிச்சயமாயிருந்தார்கள். "நாங்கள் ஓடி ஒளித்தால் காரியம் வெளித்துப்போம்" என்றாள் இயாசிந்தா. இரு பகுதியாரும் சந்தித்தபொழுது சில அம்மாமார் பிள்ளைகளை நோக்கித் தங்கச்சிமாரே! தேவமாதாவின் காட்சிபெற்ற அந்த இடைப்பிள்ளைகளை உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். ஆம், ஆம் நாங்கள் எல்லாம் நன்றாக அறிவோம். "அவர்களுடைய வீடு எங்கே என்றும் அறிவீர்களா?" "ஆம் அம்மாமாரே! என்று லூசியா சொல்லிவிட்டு, தனது வீட்டையும் தனது சிநேகிதர் வீட்டையும் அவர்கள் கண்டுபிடிப்பதற்குவேண்டிய சகல விபரங்களையும் திட்பநுட்பமாய் அறிவித்தாள்."

அந்தக் கூட்டத்தார் அல்யுஸ்திறேல் பிரிவை நோக்கிச் சென்றதும், இவர்கள் மூவரும் தப்பிவிட்டோம் எனச் சொல்லிக்கொண்டு வயலில்போய் ஒளித்துக்கொண்டார்கள். பொய் சொல்லாது தப்பிக்கொள்வதற்குத் தான்கண்டுபிடித்த உபாயத்தின் நிமித்தம் இயாசிந்தா பெரும் ஆனந்தங்கொண்டாள். பிற்பட்டகாலங்களில் லூசியா தனது மடத்தில் இதுபோன்ற உபாயத்தைப் பல தடவைகளில் உபயோகித்து வந்தாள். பிரான்சீஸ் மனோகற்பனையில் அல்லது மனரூபிகரிப்பில் மற்றவர்களுக்குக் குறைந்தவனல்ல. ஒருநாள் மூவரும் தங்களுடைய வீட்டுக்குச் சிலயார் தூரத்திலே ஒரு பெரிய அத்திமரத்தின் நிழலின்கீழ் இருந்து சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். அந்த மரத்தின் கொப்புகள் பாதைக்குமேலே பரவிக்கொண்டிருந்தன. அவ்வேளை தனது சிநேகிதர்களை விட்டுச் சற்றுத் தூரத்திற்குப் போயிருந்த பிரான்சீஸ் ஓடிவந்து, சில அலங்காரமான மாதர்கள் தங்களைத்தான் தேடி வருவதாகச் சொன்னான்.

"அவர்கள் தலையில் பெரிய தொப்பிகள் அணிந்திருக்கிறார்கள். அரிபெட்டியின் அகன்ற விளிம்புகள்போல் அந்தத் தொப்பிகளுக்கும் விளிம்புகள் உண்டு. வாருங்கள் நாங்கள் அத்திமரத்தில் ஏறியிருப்போம். இந்தப் பெரிய தொப்பிகளைத் தரித்துக்கொண்டு அவர்கள் எங்களைக் காண முடியாது." பிரான்சீஸ் சொன்னபடியே காரியம் நடைபெற்றது. அந்த அம்மாமார் போனதும், இவர்கள் இறங்கி ஓடிப்போய்த் தானியம் வளர்ந்திருந்த ஒருவயலுக்குள் ஒளித்துக்கொண்டார்கள்.

அந்தோனி சாந்துஸ் என்பவரின் வளவு அடைப்புக்குள்ளே பிள்ளைகள் ஒளித்திருக்கிறதற்கு ஒரு வாய்ப்பான இடம் இருந்தது. கிணற்றுக்குப் பிற்பக்கமாக இருந்த அவ்விடத்தில், பிள்ளைகள் முன்னொருகாலம் விளையாடிவந்தார்கள். இங்குதான் இவர்கள் ஆண்டவருடைய திருப்பாடுகளின் சரித்திரத்தைக்கேட்டு அதைத் தியானித்துவந்தார்கள். கற்குவியல்களுக்கும் அடர்ந்த வெளிகளுக்கும் மறைவிலே, கனிமரத்தோப்பில் மரங்களின் நிழலிலே மறைந்திருந்துகொண்டு, தங்களிடம் பலவித கேள்விகளை

விடாப்பிடியாகக் கேட்டு அரிகண்டம் செய்துவருபவர்களுக்குத் தப்பிக்கொண்டார்கள்.

அந்த மறைவிடத்திலே இவர்கள் செபஞ் செய்வதிலும், பரலோகநாயகி தங்களிடம் ஒப்புவித்த விஷயங்களைப் பற்றிக் கலந்து ஆலோசிப்பதிலும் நேரத்தைச் செலவிட்டார்கள். தாங்கள் வசித்து வந்த கிராமத்துக்குச் சற்றுத் தூரத்திலுள்ள இன்னுமொரு மறைவிடத்திலும் இவர்கள் சில சமயங்களில் அடைக்கலம் புகுவதுண்டு. அந்த இடம் நாம் ஏலவே குறிப்பிட்டபடி "சபேக்சோ" மலைச்சாரலின் கற்பாறை ஒன்றில் உள்ள குகை. இந்தக் குகை ஷேன் மரங்கள், ஒலிவமரங்களின் கூடலினால் நன்கு மறைந்த ஒரு இடம். அந்த இடத்தில் ஒளித்திருந்து பிள்ளைகள் தேவமாதாவின் கருத்துகளுக்காக மன்றாடுவார்கள்.

சம்மனசு படிப்பித்த செபத்தை அவர்கள் அங்கு மனச்சமாதானத்துடன் சொன்னார்கள்.

எவ்வளவு வேகரமான பயபக்தியுடன் இவர்கள் செபித்தார்கள் என்பதற்குத் தேவனே சாட்சி. இவர்கள் அங்கு செபமாலை சொல்லவும் **சம்மனசானவர்** படிப்பித்த செபத்தைச் சமாதானமாய் ஓதவுங்கூடியதாயிருந்தது. இவர்கள் மணித்தியாலக்கணக்காய் அவ்விடத்தில் மறைவாகவிருந்து, களைப்பினாற் சோர்ந்துவிடுமட்டும் செபஞ் சொல்லுவார்கள். "கபொக்கோ" குகையில் இவர்கள் தேவமாதா தங்களுக்குச் சொன்னவைகளைப்பற்றியும், அடிக்கடி சிந்தித்து அந்தவார்த்தைகளின் மூலமாகத் தங்களுக்குப் பணிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்ற ஒருவர் ஒருவருக்குத் தைரியம் உண்டுபண்ணி வருவார்கள்.

ஆனால் தங்களை விசாரணை செய்பவர்களுக்கு ஒருக்காலும் ஒரு மறுமொழியும் சொல்லாதிருக்க வேண்டுமென இப்பிள்ளைகள் முற்றாய்ப் பிடிவாதமாய்த் தீர்மானம் செய்துவிட்டார்கள் என்று எண்ணப்படாது. அப்படி எண்ணுதல் முற்றும் தவறு. தங்களைக் கேள்வி கேட்டவர்களுக்கு இவர்கள் நூறாயிரம் விசை விடை இறுத்திருக்கிறார்கள். தீவிரலிகிதம்மூலமாக இவர்களுடைய விடைகளை எழுதினவர்களுமிருக்கிறார்கள். இவர்களுடைய பிரதிமைப்படங்களும் எடுத்திருக்கிறார்கள். ஆனால் நூற்றுக்கணக்கான விசைகளில் சொன்னவைகளை மீண்டும் மீண்டும் சொல்வதில் ஒரு பிரயோசனமுமில்லையென இவர்கள் அலுப்புக்கொண்டார்கள்.

ஆனால் சில விசாரணைக்காரர், விசேஷமாய்ச் சில குருமார் லூசியாவின் வீட்டிலும், வயல்வெளிகள், வழிதெருவிலும் இவளை அலட்டி அலட்டிக் கேள்வி கேட்பதுடன் அமையாது பத்திமாவின் கட்டளைக்குருவானவரின் அறைவீட்டுக்கும் இவளை அழைப்பித்து ஆறுதலாய் ஈவுசோய்வாய் இவளிடம் கேள்விகள் கேட்டு இவள் விடைகளை எழுதியும் வைத்துக்கொண்டார்கள். அவர்கள் கேட்ட சில கேள்விகள் எவ்வளவோ நுணுக்கமானவைகளாய் ஒருசிறு பிள்ளை எளிதில் பிடிகொடுக்கக்கூடியதாய், சற்றாவது எதிர்பாராதனவாய் இருந்தபடியால் பதினொருவயதுள்ள சின்னலூசியா அக்கேள்விகளுக்கெல்லாம் விடையிறுக்கத் தனக்குக் கடமை உண்டென உணரவேயில்லை.

இதன் நிமித்தம் கேட்ட கேள்விகளுக்கு மறுமொழி சொல்லாத லூசியா தப்பி ஓடிவிடப்பார்க்கிறாள் என்று சிலர் முறையீடு செய்தனர். அந்த முறையீடு நீதியானதல்ல. அதுபோலவே, இப்பிள்ளைகள் முரட்டுக்குணம் உள்ளவர்களும் மரியாதை அற்றவர்களும் எனச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளும் நியாயமானவையல்ல. இயன்றபொழுதெல்லாம் நல்மனதுடனும் மரியாதையுடனும் இவள் தன்னைக் கேள்வி கேட்டவர்களுக்கு மறுமொழி சொல்லியிருக்கிறாள்.

"மொண்ரேயா" கவுன்ட்பிரபு என்ற லேகினி நாமத்துடன் விஷயங்கள் எழுதிவந்த ஒரு கல்விமான் லூசியாவைப்பற்றி நாம் கூறியது உண்மையெனச் சாட்சியிட்டிருக்கிறார். அவர் இவளை மகா திட்பநுட்பமாகப் பல தடவைகளில் விசாரணை செய்தவர். அவர் சொல்வது :-

" நான் சயிக்கினை காட்டியவுடன் இவள் ஒரு கதிரையில் எனது பக்கத்தில் உட்காருவாள். இவள்தானே பிரதான சாட்சியாகவிருந்த சம்பவங்களைப்பற்றி நான் கேட்ட கேள்விகளுக்கு மிகவும் நன்மனசுடன் விடையளிப்பாள். ஆனால் இடைவிடாமல் ஆட்கள் இவளைச் சந்திக்க வந்தபடியினாலும் மீண்டும் மீண்டும் ஒரேவித கேள்விகளுக்கு நெடுநேரம் ஒரேவித மறுமொழிகளை இவள் திரும்பவும் திரும்பவும் சொல்லவேண்டியிருந்தபடியினாலும் அறவே அலுத்துப்போய் முற்றாய்க் களைத்துப்போயிருப்பதை நான் நன்கு அவதானித்தேன்."

அந்தக் கவுன்ட் பிரபுதானே தாம் எழுதி வெளியிட்ட வேறு விஷயங்களிலும் லூசியாவுடைய புனிதமான மரியாதையையும் இவள் காட்டிய நன்மனசையும் வற்புறுத்தியிருக்கிறார்.

இப்படிப்பட்ட விசாரணைகளினால் உண்டாகும் மனவேதனைகள் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கக்கூடிய சிறந்த பரித்தியாகம் என மூன்று பிள்ளைகளும் நன்றாக உணர்ந்தார்கள். ஆனால் லூசியா மற்றவர்களிலும் கூடுதலாக உணர்ந்தாள். இவள் அனுபவிக்கவேண்டுமெனத் தேவமாதா அறிவித்த பாடுகளில் இதுவும் ஒன்றெனவும், இதை இவள் திடாரிக்கமாயும் தைரியமாயும் பாவிகள் மனந்திரும்புதலுக்காக ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவும் நன்கு உணர்ந்துகொண்டாள்.

மனச்சாட்சியைப் பாதித்த சந்தேகம்

விசாரணைக்காரரின் கேள்விகளினால் லூசியா அனுபவித்த உபத்திரவங்களிலும்பார்க்க, மகா கொடிய உபத்திரவம் ஒன்றை, இவள் தனது மனச்சாட்சியை வலிமையாகப் பாதித்துவந்த சந்தேகத்தினால் அனுபவிக்கலானாள்.

பாவிகளுக்காகப் பரித்தியாகக் கிரிகைகள் செய்யவும், ஆண்டவர் அனுப்பச் சித்தமான சகலவித துன்பதுரிதங்களையும், அதே கருத்துக்காக ஏற்றுக்கொள்ளவும் தேவமாதாவுக்குத் தான்கொடுத்த வாக்கை மறுப்பதற்குத் தனக்கு உரிமை உண்டா? என்பதுதான் லூசியாவுக்கு இருந்த சந்தேகம். மேலே குறித்த இந்த வாக்கு ஆகமுதற் காட்சியில் கொடுக்கப்பட்டது. மற்றக் காட்சிகளின்போதும் புதுப்பிக்கப்பட்ட வாக்கு.

இந்த வாக்கைப்பற்றி லூசியாவும் இவள் சிநேகிதர் இருவரும் ஒவ்வொருநாளும் சிந்தித்தார்கள். தங்களுக்குட் கலந்து பேசிக்கொண்டார்கள். ஆனால் இதைப் பிரசித்தமாக அறிக்கையிட, தங்கள் பெற்றோருக்குத்தானும் சொல்ல மகா மனவெறுப்புள்ளவர்களாயிருந்தார்கள். தங்களைப் பலிப்பொருட்கள் ஆகவும் பிராண பரித்தியாகிகள் ஆகவும் பிறருக்குக் காண்பிக்கப் பிள்ளைகள் இயல்பாகக் கூச்சப்பட்டார்கள். அல்லாமலும் தங்களுடைய தபமுயற்சிகளை மறைத்துவையாது, பிரசித்தமாக்கிவிட்டால் தங்கள் தபச் சீவியத்தின் பலன் எல்லாவற்றையும் இழந்துவிட மாட்டார்களா? இன்னும் இவர்களின் பெற்றார் இதை அறியவந்தால் மனம் வருந்தமாட்டார்களா? வருந்துவார்கள் என்று போதிய நிச்சயத்துடன் சொல்லலாம்.

கன்னிமரியாயி தனக்கு வெளிப்படுத்திய சில காரியங்களை விசாரணைக்காரருக்கு மறைப்பதினால் தான்பொய்க்காரி ஆகமாட்டேனோ? என்றும் லூசியா சந்தேகப்பட்டாள். இந்த வகையான மனச்சாட்சி அரிப்பினால் லூசியா சொல்லரிய மனவேதனைப்பட்டாள். **தோரெஸ்நோவாஸ்** என்ற இடத்துக் குருவானவர் ஒருவர் தன்னிடம் கேட்ட கேள்விகளுக்குத் தான்மறுமொழி சொல்லாததைப்பற்றி விசேஷமாக ஒருவிசை வெகுவாய் மனக்குத்துக்குள்ளானாள். உள்ளாகி அதைப்பற்றித் தனது இரு சிநேகிதரிடம் ஆலோசனை கேட்டாள்.

" நாங்கள் எல்லாவற்றையும் வெளிப்படுத்தாதுவிடுதல் தவறோ அல்லவோ என்பது எனக்குச் சரிவரப்பிடிபடவில்லை.

தேவமாதா உங்களுக்கு வேறு ஒன்றும் சொல்லவில்லையா? எனச் சிலர் கேட்டார்கள். அவர் எங்களுக்குச் சில இரகசியங்கள் சொன்னார் என்று விடை இறுத்துவிட்டு, வேறு ஒன்றும் சொல்லாது விட்டுவிட்டேன். நான் இப்படிச் செய்தபடியால் பொய் சொல்லவில்லையா?" என்று தனது இரு சிநேகிதரையும் லூசியா கேட்டாள்.

"எனக்குத் தெரியாது. ஒன்றும் சொல்லவேண்டாம் என்று நீதானே சொன்னாயே" என்றாள் இயாசிந்தா. அது மெய். சொல்ல எனக்கு விருப்பமில்லைத்தான். உள்ளபடி விருப்பம் இல்லைத்தான். நாங்கள் என்னவகையான ஒறுத்தல் செய்கிறோம் என்று கேட்பார்கள். அதுமட்டுமா? இன்னும் வேறு அநேக கேள்விகளும் கேட்பார்கள். இங்கே பார். நீ தொடக்கத்தில் ஒன்றும் சொல்லாதிருந்தால், நாங்கள் தேவமாதாவைக் கண்டோம், அவருடன் சம்பாஷித்தோம் என்று ஒருவரும் இப்போதுகூட அறியமாட்டார்களே. நாங்கள் சம்மனசு ஒருவரின் காட்சி பெற்றதை இப்போதுதானும் ஒருவரும் அறியார்களே. அவர்கள் அறியவேண்டிய அவசியம் ஒன்றுமில்லையே.

இதன்பின்பு தனது மனவேதனையின் மத்தியில் லூசியா பரலோகத்தை நோக்கி உதவி இரந்தாள்.

"என் தேவனே! எனது மதுரமான பரலோக மாதாவே! நாஃ பொய்சொல்லி உங்களுக்குத் துரோகம் செய்யச் சற்றும் மனமில்லாதவள் எனத் தேவரீர் அறிவீர். ஆனால் எனக்குப் பரலோக இராக்கினி அறிவித்த காரியங்கள் எல்லாவற்றையும் வெளியிடப்படாது என்பதையும் அறிவீர்தானே" என்று மன்றாடினாள்.

இதன்பின்பு ஒருநாள் "சந்தாரெம்" என்ற இடத்துக் குருவானவர் ஒருவர் லூசியாவைச் சந்தித்து அவளிடம் விவேகமற்ற சில கேள்விகளைக் கேட்டார். அதுமட்டுமா? இவள் கொடுத்த மறுமொழிகள் சிலவற்றைப்பற்றி இவளை ஏளனம் செய்யவும் தொடங்கினார்.

அந்தக் குருவானவருடைய ஏளனங்கள் நளினங்களினால் லூசியா பெரிதும் அவதைரியம் கொண்டாள். குருமாரை இவள் வெகு ஆழ்ந்த கண்ணியத்துடன் சங்கித்து மதித்துவருவாள். "இவ்வளவு அறிவாளிகளான குருமார் தனது காட்சிகளைப்பற்றிச் சந்தேகப்பட்டபொழுது ஏழை அறிவிலியாகிய ஒரு நாட்டுப்புறத்துப் பிள்ளையாகிய தான் தனது காட்சிகளின் உற்பத்தியைப்பற்றி எப்படிச் சந்தேகங் கொள்ளாதிருத்தல்கூடும்" என்று லூசியா சொல்லரிய மனவருத்தப்பட்டாள்.

ஆனால் நல்லதிஷ்டமாய்த் தனது மனக்கலக்கங்களை ஒலிவால் விசாரணைப்பங்கின் கட்டளைக் குருவானவருக்கு அறிவித்தாள். அந்த நல்ல குருவானவர் இவளுக்கு மனச்சமாதானம் உண்டுபண்ணிவிட்டார். அதுமாத்திரமல்ல, இவள் தனது இரகசியத்தை எவ்வித மனக்கிலேசமும் இல்லாது வெளிவிடாது காப்பாற்றலாமென்றும், எப்படிக் காப்பாற்றலாமென உபாயமும் சொல்லிக்கொடுத்தார். அந்த உபாயத்தை அவர் இயாசிந்தாவுக்கும் பிரான்சீசுக்கும் படிப்பித்தார். ஆனால் அவிவேகப் பூரணர்களான விசாரணைக்காரருடன் நடத்திவந்த போராட்டம் இன்னும் ஒழிந்தபாடில்லை. ஒரு குருவானவர் இவர்களைக் காணவரப்போகிறார் என்றும் அவர் மகா பரிசுத்தவானென்றும் அவர் மனுஷருடைய உள்ளரங்க இரகசியங்கள் எல்லாவற்றையும் அறியக்கூடியவரென்றும் சிலர் இப்பிள்ளைகளுக்குச் சொன்னார்கள். இப்படி இவர்களுக்குச் சொன்னது இவர்களை வெருட்டி இவர்களுடைய இரகசியங்களை அறியும்படியாகத்தான். அந்தக் குருவானவர் இவர்கள் சொல்லும் பொய்கள் எல்லாவற்றையும் கண்டுபிடித்து இவர்களுடைய பிடிவாதமான மவுனத்தை அழித்துவிடுவாரென்றும்கூறி இவர்களைப் பயமுறுத்தினார்கள். ஆனால் இப்படிப்பட்ட வெருட்டுகள் மருட்டுகள் பிள்ளைகளைப் பயப்படுத்துவதற்குப்பதிலாக இவர்களுக்குத் தைரியத்தை உண்டுபண்ணிவிட்டன. "இருதய அந்தரங்கங்களை வாசிக்க அறிந்த அந்தக் குருவானவர் எப்பொழுது வருவார்? அவர் உள்ளபடி இருதய அந்தரங்கங்களை வாசிக்கிறவரென்றால், நாங்கள் பொய்சொல்லவில்லை என்பதை அவர் நிச்சயமாய்க் கண்டுபிடிப்பார்" என்றாள் சின்ன இயாசிந்தா.

கட்டளைச் சுவாமியாரின் அன்பில்லாப்போக்கு

காட்சிக்காரப் பிள்ளைகளைக் கேள்விகேட்டு விசாரணை செய்ய விரும்பிய சிலர் இந்தப் பிள்ளைகள் நற்குணமில்லாதவர்களென்று கட்டளைச் சுவாமியாருக்கு முறைப்பாடு செய்திருந்தார்கள். இந்த முறைப்பாடுகளினால் அவர் பிள்ளைகளைப்பற்றி நல்ல மனப்பதிவு அற்றவரானார். தங்களைக் கேள்விகேட்க விரும்பினவர்களுக்குத் தப்பிக்கொள்ளும்படி இந்தப் பிள்ளைகள் சில வேளைகளில் கட்டிலுக்குக் கீழே போய் ஒளித்திருக்கவில்லையா ?

பெறேயிறா சுவாமியார், இந்தப் பிள்ளைகள் சாதாரணமான கிறீஸ்தவர்களுக்கென்ன வேதசாஸ்திரப் பண்டிதர்களுக்கென்ன எல்லாருக்கும் எவ்வகையான வித்தியாசமுமில்லாது அலுப்பைப்பாராது பொறுமையுடன் மறுமொழி சொல்ல விரும்பினார். விசேஷமாகக் குருமார் கேள்வி கேட்க விரும்பினால் எவ்வித தடையுமில்லாது பிள்ளைகள் அவர்களுடைய பிரியத்துக்கு இணங்கவேண்டுமெனக் கட்டளைக் குருவானவர் சலஞ்சாதித்து நின்றார். இவர்களைக் கேள்வி கேட்கவேண்டுமென்று வந்த குருமார் தொகையும் சொற்பமல்ல.

காட்சியின் உண்மையைப்பற்றி வேகரமான பற்றுதல் உள்ளவர்கள், கட்டளைச் சுவாமியாருடைய ஓரவாரமற்ற தன்மையை ஒப்புக்கொள்ளாது அவர் வேத விரோதிகளுக்குச் சார்பானவர் என்று அவரில் குற்றம் சாட்டினார்கள். ஆவணி மாதம் 13-ந்தேதி பிள்ளைகள் பிடிபட்டுச் சிறைச்சாலையில் அடைபட்ட பிற்பாடு இந்தக்குற்றச்சாட்டுகள் கூடுதலான வலிமைபெறலாயின. அரசினர் அதிகாரிகள் பிள்ளைகளைச் சிறைப்படுத்தமுன் கட்டளைச் சுவாமி அவர்களை விசாரணை செய்யும்படி குருமனைக்கு அனுப்பவில்லையா ? உள்ளபடி பிள்ளைகள் குருமனையிற்தான் தந்திரமாக அகப்படுத்தப்பட்டபடியால் அரசியல் அதிகாரிகளுடன் குருவானவர் ஒத்து விளையாடியிருந்தார் எனச் சனத்திரள் தீர்மானித்துக்கொண்டது. மனுவேல் மார்க்கேஸ் பெறேயிறா என்ற இந்தக் கட்டளைக் குருவானவர் 1917-ம் வருஷம் ஆவணி மாதம் 15-ந்

தேதி லிஸ்போன் நகரில் வெளிவந்த “ ஓர்டேம் ” என்ற பத்திரிகையில் ஒரு கடிதம் எழுதினார். அதிகாரிகள் காட்சி கண்ட பிள்ளைகளைத் தமது குருமனையிலிருந்து அகப்படுத்திக்கொண்டுபோனபடியினாலும் தம்மைப்பற்றி அபாண்டங்கள் சொல்லப்பட்டபடியினாலும் ஆவணி மாதம் 13-ந் திகதி தமது உயிருக்கு வினையம்வரக்கூடிய ஆபத்துத் தமக்கு உண்டானதென்றும் அக்கடிதத்திற் கட்டளைக்குருவானவர் அறிக்கையிட்டு இருக்கிறார். அல்லாமலும் ஒவ்வொரு மாசமும் 13-ந் திகதியில் தாம் கோவாடி இறியாவுக்கு ஏன் போகவில்லை என்பதற்கும் அக்கடிதத்தில் நியாயம் சொல்லுகிறார். உள்ளபடி காட்சிகள் பரலோகத்திலிருந்து வந்தவையானால் தமது சமுகம் அங்கு அவசியமில்லை. அவை பேயின் வெறும்மாயைகளானால் தாம் அங்கு சமுகங்கொடுப்பது வேதவிரோதிகளுக்குப் பிடிகொடுப்பதற்கு வழியாகும் என்பவைகளே கட்டளைக்குருவானவரின் நியாயங்களாகும். ஆயினும் ஐப்பசி மாசம் 13-ந் திகதி நடந்த மகா அற்புதக் காட்சிக்குச்சமுகமாயிருக்கும்படி அவருடைய மகா அருமை நண்பர்கள்தானும் வெகு பிரயாசையுடன்தான் அவரைச் சம்மதிக்கச்செய்தார்கள். ஆனால் அந்தக் காட்சியின் பின்னர்தானும், அவருடைய சந்தேகங்கள் நீங்கியனவாகத் தோற்றவில்லை. ஒருவேளை அவர் தமது உள்ளத்தில் சந்தேகமற்றவராக இருந்தார்போலும். ஆனால் வெளித்தோற்றத்தளவில் இன்னும் சந்தேகம் உள்ளவராகவே தம்மைக் காண்பித்துவந்திருக்கிறார்.

பத்திமாவில் நடக்கும் வேதசம்பந்தமான இயக்கங்கள் எவற்றிலும், குருமார் ஒருவரும் பங்குபற்றப்படாதென லிஸ்பொன் நகரத்துப் பத்திறியாக்குக் கருதினால் தமது பதிலாளிமூலமாகச் சகல குருமாருக்கும் கட்டளை அனுப்பியிருந்தார். இந்தக் கட்டளையைக் கட்டளைக்குருவானவர் திட்பநுட்பமாய் அனுசரித்தார்போலும்.

எப்படியாயினும் ஆகுக. ஆனாற் கடைசிக்காட்சி நடந்து, இரண்டு நாட்களின்பின்பு அவ்வேளை நடந்த சம்பவங்களைப்பற்றி லிஸ்பொன் நகரத்துப்பத்திறியாக்குவுக்குத் தமது அறிக்கைப்பத்திரத்தைச் சமர்ப்பித்தார். அக்காலத்தில்

இலெயிறு மேற்றிராசனம் சொந்த மேற்றிராணியார் இல்லாது இருந்தது. ஒருபாகம் லிஸ்பொன் நகருடனும், ஒரு பாகம் கோயிம்பிறு நகருடனும் சேர்க்கப்பட்டிருந்தன. ஆனபடியாற்றான் மனுவேல் மார்க்கேஸ் பெறெயிறு சுவாமியார் தமது திருச்சபை அதிகாரிகளாகிய லிஸ்பொன் நகரத்து மேற்றிராணியாருக்கு எழுதினார். அவருடைய அறிக்கைப் பத்திரத்திற் தமது சொந்த மனச்சார்புகளை மேற்கொள்ளவிடாது, நடந்த சம்பவங்களை உள்ளதை உள்ளபடி விபரித்திருந்தார்

அக்காலத்தில் லிஸ்பொன் நகரத்திற் திருச்சபை அதிகாரியாக இருந்த கருதினால் மென்டிஸ் பெல்லோ ஆண்டவர் அவர்களை அவருடைய மேற்றிராசனத்திலிருந்து, வேத விரோதிகளான அரசினர் கலைத்துப்போட்டார்கள். ஆதலால் அவருக்குப் பதிலாக மேற்றிராசனப் பரிபாலனராக றோமாபுரியினால், ஜோண் டெ லீமா விதால் ஆண்டவர் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் கட்டளைச் சுவாமியாருக்குக் கார்த்திகை மாசம் 3-ந் திகதி மறுமொழி அனுப்பிப் பத்திமாவில் நடந்த காட்சிகளைப்பற்றியும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட அற்புதங்கள் முதலிய வேறு விஷயங்களைப்பற்றியும் மனச்சாட்சியின்படி நன்கு விசாரித்துச் சம்பவங்களுடன் சேர்ந்த சகல விபரங்களையும் சேர்த்துத் தமக்கு ஒரு அறிக்கைப்பத்திரம் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

பெறெயிறு சுவாமியார் மூன்று பிள்ளைகளையும், இவர்களுடைய பெற்றாரையும் பிரதானமான சாட்சிகளையும் அழைத்து, அவர்கள் கூறின அறிக்கைகள் எல்லாவற்றையும் ஒருங்குசேர்த்தார். இந்தக் குருவானவர் அவ்வளவு நுணுக்கமாய்த் தமது விசாரணையை நடத்தி அறிக்கைப் பத்திரத்தை நிரைப்பிடித்து எழுதியபடியால் அதனைப் பதினெட்டு மாசங்களின் பின்பு 1919-ம் வருஷம் சித்திரை மாசம் 28-ந் திகதி மாத்திரம் சமர்ப்பித்தார். இதற்கிடையில், இலெயிறு மேற்றிராசனம் மீண்டும் திருச்சபைச் சட்டப்படி அமைக்கப்படலாயிற்று (17-1-18). ஆனால் 1920-ம் ஆண்டில் மாத்திரம் புதிய மேற்றிராணியார் நியமிக்கப்பட்டார். இந்தச் சம்பவங்களெல்லாம் காட்சி விஷயமாய்த்

திருச்சபை அதிகாரிகள் முடிவு செய்வதற்கும் நீண்ட தாமசமாயிற்று. பெறெயிறு சுவாமியாரின் கவலைகளும், மனக்கலக்கங்களும் நீடித்தன. காட்சிகண்ட பிள்ளைகளும் விரைவில் ஆறுதல் அடையமுடியாமற்போயிற்று, தமது விசாரணைப்பங்கு முழுவதைப்பற்றியும், தமது ஆலயத்தைப்பற்றியும், எவ்வளவோ வேகமான அபிமானம்பூண்ட கட்டளைக் குருவானவர் கோவாடி இறியாவில் பிரிவினைக்காரரின் ஆராதனைபோன்ற ஆராதனைகள் நடந்து வருவதையும் கண்டு பெரும் மனக்கிலேசமும் அமரிக்கையினமும் அடையலானார்.

ஞாயிற்றுக்கிழமையிலே தமது விசாரணைப் பங்குக்குச் சேர்ந்த கிறீஸ்தவர்களுள் ஆயிரக்கணக்கானோர் அந்த ஓவென்று அகன்ற வெளியிற் போயிருந்து செபமாலை சொல்லுவதையும் பத்திக்குரிய சங்கீதங்கள் பாடுவதையும் அவர் காணும்பொழுது ஐயையோ! இந்தக் கிறீஸ்தவர்கள் எல்லாரும் கோவிலுக்குள் வந்திருந்து செபித்தாலோ என்று பெருமூச்சுவிடுவார். விசாரணைப்பங்குக் கோவில் விரைவில் அழிந்து பாழாய்ப்போய்விடும் நிலையில் இருந்தது. ஆனால் கிறீஸ்தவர்கள் அந்தக் கட்டாந்தரையில் இருந்த ஒரு மாத்தடியில் போதியளவு பெருந்தொகைப் பணம் காணிக்கையாகப் போட்டுவருகிறார்களே. பங்குக் கோவிலில் எவ்வளவோ திருத்தங்கள் செய்யவேண்டி இருக்கின்றதே. அதற்குப் பெரும் செலவு பிடிக்குமே. அப்படியாயிருக்கவும் அந்தப் பெருவெளியில் ஒரு கோவிலும் கட்டிப்போடவேண்டும் என்று கிறீஸ்தவர்கள் ஆத்திரப்படுகிறார்களே என்று எண்ணிக் குருவானவர் மனம் வருந்தினார். இந்த மனநிலை உள்ளவராக இருந்தபடியாற்றான், லூசியாவை விசாரணை செய்தபோது குருவானவர் பின்வரும் கேள்விகளை இவளிடம் கேட்டார். சுயஞ்சீவியாகிய தேவன், எங்கள் பீடங்களில் வசிக்கும் தேவன், தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் யேசுநாதரைத் தினந் தனியே விட்டுவிட்டு, இந்தச் சனங்கள் எல்லாரும் ஏன் அந்தக் காட்டு நிலத்தில் சாஷ்டாங்க தெண்டனிட்டுச் செபஞ் செய்கிறார்கள்?

ஒரு நியாயமும் இல்லாமல் அந்த மரத்தினடியிலே அவர்கள் ஏன் இவ்வளவு பணம் எல்லாத்தையும் காணிக்கையாகச் செலுத்துகிறார்கள்? எங்கள் விசாரணைக் கோவில் அழியப்போகின்றது. அதைப் பழுதுபார்க்கவேண்டுமே. பணமில்லாமற்தானே அப்படிச் செய்ய முடியாதிருக்கின்றது.

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் லூசியா குருவானவருக்கு என்ன விடை சொன்னாளோ அறியோம். ஆனால் அவைகளைப்பற்றிப் பிற்காலத்தில் இவள் எழுதிய ஞாபகக் குறிப்புகளில் மகா புத்தித்தீட்சணியத்துடன் இவள் சொல்வது என்னவானால்: "எல்லாருடைய இருதயங்களுக்கும் நான் எசமாட்டியாக இருந்திருப்பேனானால் அவர்கள் எல்லாரையும் பங்குவிசாரணை ஆலயத்துக்குத்தான் போகும்படி செய்திருப்பேன். ஆனால் எனக்கு அப்படிப்பட்ட அதிகாரம் இல்லையே. ஆதலால் நான் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பதற்கு இன்னும் ஒரு பரித்தியாகம் ஆனது" என்பதுவே.

கடைசியாக அந்த நல்ல பரிசுத்தவானாகிய குருவானவர் ஒரு முடிவும் செய்ய இயலாதவராய் நோய்வாய்ப்பட்டவரானார். காட்சிகளுக்குச் சார்பானவர்கள் அவரைத் தங்கள் பக்கத்துக்கும், விரோதிகள் தங்கள் பக்கத்துக்கும் திருப்பப்பார்த்தார்கள். ஆனால் அவர் ஒருவருக்கும் பிடிகொடாமல் இருந்துவந்தார். கடைசியாக அவர் மகா அவதைரியங்கொண்டு, தமக்கு எவ்வளவோ மனச்சஞ்சலத்துக்குக் காரணமான இந்த விசாரணைப் பங்கைவிட்டு விலகிவிடத் தீர்மானித்தார். (உள்ளபடி அவர் 1919-ம் ஆண்டில் பத்திமா விசாரணைப் பங்கிலிருந்து மாற்றப்பட அவரிடமாக அவர் மைத்துனன் முறையினரான அகுஸ்தீன் மார்க்கேஸ் பெறெயிரு சுவாமியார் கட்டளைக் குருவானார்.)

மனுவேல் மார்க்கேஸ் பெறெயிரு சுவாமியார் உள்ளபடி பரிசுத்தவான். அவர் விசாரணைப்பங்கிலுள்ள சகல பத்தியுள்ள கிறீஸ்தவர்களும் அவரில் பெரும் அன்புள்ளவர்கள். அவர் தங்கள் விசாரணைப்பங்கைவிட்டு நீங்கப்போகிறார் என்பதை அவர்கள் அறிந்ததும் அதனால் மகா விசனம்கொண்டார்கள். மனக்குருட்டாட்டம் உள்ளவர்கள் இப்படிச் சம்பவிப்பதற்குக் காரணம்: காட்சிகண்ட பிள்ளைகள் என்றும்

விசேஷமாக லூசியா தானென்றும், அவர்களிற் குற்றம் சாட்டினார்கள். ஒருநாட் சில பத்தியுள்ள ஸ்திரீகள் லூசியாவை வழியிற் சந்தித்தபொழுது, அவளை வெகுவாய் அவமதித்து இவளுக்கு அடியும் கொடுத்தார்கள். ஆனால் இவள் அவற்றையெல்லாம் கிறுங்காத மனசுடன் தேவநேசத்துக்காக ஏற்றுக்கொண்டாள். லூசியாவை இப்படி உபத்திரவப்படுத்துவதைக்கண்ட பிரான்சீசும் இயாசிந்தாவும் சகிக்கமுடியாது குளறி அழுதார்கள். அல்லாமலும் லூசியாவில் ஒரு வகையில் ஞானவிதக் காய்மகாரம் கொண்டவர்கள் போலானார்கள். அந்தப் பத்தியுள்ள ஸ்திரீகள் இயாசிந்தாவுக்கும் பிரான்சீசுக்கும் ஒன்றும் சொல்லவுமில்லைச் செய்யவுமில்லை. ஏனென்றால் மனுவல் பேதுருவும் அவன் மனைவி ஒலிம்பியாவும் தங்கள் பிள்ளைகளை எப்போதும் பாதுகாக்க ஆயத்தமாக இருந்தார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இக்காரணம் பற்றித்தான் லூசியா உனது பெற்றார் உன்னைப்பற்றி அக்கறையில்லாது இருப்பதுபோல, எங்கள் தாய் தகப்பனும் எங்களைப்பற்றிக் கவலையற்றவர்களாய் இருந்தாலோ என்று ஆவலாய் இருக்கிறேன். அப்படியானால் இந்த ஸ்திரீகள் என்னையும் அடிக்கலாமே நானும் ஆண்டவருக்கு இன்னும் ஒரு பரித்தியாகம் ஒப்புக்கொடுப்பேன் என்று இயாசிந்தா வாயூறினாள்.

குடும்பத்தின் நயசுகங்கள்

ஐப்பசி மாசம் 13-ந் திகதி காட்சிகண்ட பிள்ளைகளின் உண்மைக்கு மறுக்கமுடியாத சாட்சியாகப் பரலோக இராக்கினி ஒரு மகா அற்புதம் செய்தாரே. அதற்கு முந்தி அந்தோனி சாந்துஸ் இந்தக் "கிழவிகள் கதைகளை"ப்பற்றி முற்றும் வேண்டாவெறுப்புள்ளவனாக இருந்தான். மரிய றோசாவும் மகளில் முற்றுமே நம்பிக்கை அற்றவளாக இருந்தாள். அவர்களுடைய இந்த மனநிலையை மேலும்மேலும் வீறுகொள்ளச்செய்த இன்னும் ஒரு காரணம் உண்டு. அக்காரணம் மனுஷனுடைய உள் உணர்ச்சிகளுடன் சேர்ந்தது. பிரயாசப்பட்டு வேலைசெய்வதினாற்தான் பூமியின் பலனைப் பெறும் கமத்தொழிலாளராகிய நாட்டுப் புறத்துச் சனங்க

ளுக்கு மிகவும் காத்திரமான ஒரு காரணம். அந்தக் காரணம் என்னவென்பது பின்னாற் சொல்வனவற்றால் விளங்கும்.

கோவாடி இறியாவில் அந்தோனி சாங்துஸ் என்பவனுக்குள்ள நிலபுலங்கள் மிகவும் விஸ்தாரமானவை. ஆனாற் காட்சிகளின் பின்பு அங்குவந்து போய்க்கொண்டிருந்த சனங்களின் நிமித்தம் அந்தப் பெருங் காணியிலிருந்து ஒரு வகையான பிரயோசனமும் பெற்றுக்கொள்ளமுடியாதுபோயிற்று.

காணியால் ஒரு பிரயோசனமும் பெற்றுக்கொள்ள முடியாததைப்பற்றி லூசியா எழுதியிருப்பது.

“எனது குடும்பத்தில் இன்னும் ஒரு பிணக்கு உண்டாயிருந்தது அதற்கு நானே உத்தரவாதி என்று என்மேற் பழி சுமத்தினார்கள். கோவாடி இறியாவிலுள்ள நிலபுலங்கள், எனது பெற்றாருக்குச் சொந்தமானவை. அதன் அடியந்தத்திலே, போதியளவு செழிப்பான ஒரு விளைநிலம் உண்டு. அதில் வருஷாவருஷம் சோளம், மரக்கறிவகை, உருளைக்கிழங்கு முதலிய பிரயோசனங்கள் எனது குடும்பத்திலுள்ளவர்களுக்குப் போதியளவு கிடைத்துவரலாயின. உருளைக்கிழங்குகள் மாத்திரம் ஒவ்வொருவிசையும் 50 சாக்குகள் கொள்ளக்கூடியவை கிண்டி எடுக்கப்பட்டன. மலைச்சாரலில் ஒலிவமரங்களும், பசியஷேன், கருவாலி மரங்களுமிருந்தன. ஆடுகளை மேய்ப்பதற்கு வாய்ப்பான மேய்ச்சல் நிலங்களுமிருந்தன. ஆனால் யாத்திரிகள் அங்குவரத் தொடங்கியதும், அந்த நிலத்தைப் பண்படுத்த முடியாது போயிற்று. முடியாததாகவே, அந்த நிலத்திலிருந்து ஒரு வகையான பிரயோசனமும் இல்லாது ஒழிந்தது. அநேகம் பேர் அங்கு தங்கள் கழுதைகள் குதிரைகளுடன் வந்தார்கள். மனுஷருடைய கால் மிதிப்புகளுக்குத் தப்பினவைகள் மிருகங்களுக்கு இரையாயின. இந்தவிதமான நஷ்டத்தைக் கண்டு எனது தாய் மிகவும் பிரலாபித்தார். “உனக்கு **வயிறு கடிக்கும்பொழுது நீ அந்த அம்மாவிடம்தான் போய்ப் பிச்சைகேள்**” என்று ஆச்சி என்னைக் கடிந்துகொண்டார். கோவாடி இறியாவிலிருந்துவரும் வரம்படியைத்தான் நீ இப்போது சாப்பிடுகிறாயே! என்று எனது சகோதரிகளும்

எனக்குச் சொல்வார்கள். இந்த நியாயங்கள் எனது மனசில் ஊன்றிப் பதிந்தபடியால், நான் ஒரு துண்டு றொட்டிதானும் சாப்பிட மனம்அற்றவள் ஆனேன்.”

வருமானக் குறைவினால் வந்த நஷ்டம்மாத்திரமா? எவ்வளவோ நேரத்தை வீணாக்குவதினால் வந்த நஷ்டம் சொற்பமா? யாத்திரிகள்வந்து லூசியாவைத் தேடினால் இவளுடைய சகோதரி ஒருத்தி இவளைத் தேடி ஓடிப்போய் இவளை அனுப்பிவிட்டு, தான் மந்தைகளை மேய்த்துக்கொண்டிருக்கவேண்டிவந்தது. மந்தைகளை மேய்ப்பதற்கு ஆட்களில்லாதபடியினால், புரட்டாசி நடுக்கூற்றில் அவற்றை விலைக்கு விற்கவேண்டியிருந்தது அதனாலும் குடும்பத்திக்கு நஷ்டம் உண்டாயிற்று. இதுமட்டுமல்ல அடுத்த காணிக்காரரும் முறைப்பாடு சொல்லத் தொடங்கினார்கள். யாத்திரிகள் மிதித்து உழக்காதனவும், அவர்கள் பலவித நஷ்டங்கள் புரியாதனவுமான அயற்காணிகள் ஒன்றுமேயில்லை என்று சொல்லலாம். ஆதலால அந்தக் காணிக்காரர் லூசியாவின் பெற்றாரை நஷ்டப்பரிகாரம் செய்யும்படி கேட்கத்தொடங்கினார்கள். இவ்வித நஷ்டங்களினால் சஞ்சலம் மேலிட்ட மரியறோசா “நீ செய்துவிட்டிருக்கும் அவதந்திரத்தினால் எல்லாரோடும்தான் எங்களைக் கொளுவிவிட்டிருக்கிறாய்” என்றாள்.

எவ்வித கஷ்டங்கள், கவலைகள் குடும்பத்துக்கு வந்தாலும் அவற்றுக்கெல்லாம் குற்றவாளி லூசியாவென்று இவள் குடும்பத்தினர் சொல்லிவிடுவார்கள். காத்திரம்மிக்க சமயங்கள்பார்த்து இவள் சொல்லியவைகள் எல்லாம் வெறும் கற்பனைக்கதைகள் என்றும், அவை சிறுமியாகிய இவளுடைய மனசில் உண்டுபட்ட வீண் மாய்கையான தோற்றங்கள் என்றும் சொல்லுவதற்கு இவளுடைய குடும்பத்தார் பின்நிற்கவில்லை. இப்படிப்பட்ட சமயங்களில் எல்லாம் பாவிகளுடைய மனம் திரும்புதலுக்காகத் தான்பலிப்பொருளாக இருக்கும்படி தேவதாயாரால் அழைக்கப்பட்டதை நினைவுகூருவது ஒன்றுமே லூசியாவுக்கு ஆறுதலாக இருந்தது.

தேவனின் அடையாளம் வானத்திற் காணப்பட்ட பிற்பாடு, கோவாடி இறியாவில் முன் உண்டான அழிவுகள் இன்னும் அதிகமாய்ப் பெருகலாயின

இந்த அடையாளத்தின்பின் எவராவது லூசியா பொய் சொல்லுகிறவளென்று இவளைக் கண்டனம் செய்யவில்லை. ஆனால் தனது பெற்றாருக்கு இவ்வளவு பெரும் நஷ்டம் வந்திருப்பதைக்கண்டு இவள் பெரிதும் மனம்வருந்தினாள். தங்கள் லௌகீக நயசுகங்களில் தங்களுக்குப் பெரும நஷ்டம் வந்துவிட்டதே என்பதினால் மாத்திரம் லூசியாவின் பெற்றார் இவள் மட்டில் அவ்வளவு கடுமையாகநடந்துகொள்ளவில்லை. அப்படிச் சொல்வது நீதியல்ல, உள்ளபடி அவர்கள் தங்கள் நயசுகங்கள் இல்லாது போனமையினால் அல்லது நஷ்டத்தால் தூண்டப்பட்டார்களோ என்பதும் சந்தேகம். அந்தோனி சாந்துஸ் வேத அனுசாரத்தில் குறைந்தவன் என்பது மெய். ஆனால் மரியறோசாவும், அவளுடைய பெண்பிள்ளைகளும் வேத அனுசாரத்தில் மிகவும் பிரமாணிக்கம் உள்ளவர்கள். அவர்கள் லூசியா உள்ளபடி தேவதாயாரின் காட்சியைப் பெறத்தக்க ஒரு பரிசுத்தபிள்ளைதானா என்பதைப் பரீட்சித்துப்பார்க்க எண்ணினார்கள்போலும். சருவேசுரன் சிலருக்கு விசேஷித்த வரப்பிரசாதங்களை அருளும்பொழுது, அவற்றைப் பெறுபவர்கள் தங்களைப் பாத்திரவாளிகள் ஆக்கிக்கொண்டால் அல்லது அப்படிச் செய்யார் என அவர்கள் தவறாக விளங்கிக்கொண்டார்கள்போலும். அல்லாமலும் நாட்டுப்புறத்தில் எவ்வளவோ அமரிக்கையாயும் சமாதானமாயும் சீவித்துவந்த இந்த நிஷ்கபடம் உள்ள கிறீஸ்தவர்கள் லூசியாவின் காட்சிகளின்பின் நடந்த சம்பவங்களினால் ஒருவாறு நசுங்குண்டு நொருங்குண்டவர்கள் போலானார்கள். இக்காரணத்தினால்தான் லூசியா அதிகம் உத்தரிக்கவேண்டியவளானாள். பின்னால் நிகழ்ந்த சம்பவங்களைக் கவனிக்குமிடத்து லூசியாவின் பெற்றார் பணவாஞ்சை, பொருள்வாஞ்சை சற்றும் இல்லாதவர்கள் என்பதும், முற்றுமே சுயநலங் கருதாதவர்கள் என்பதும் நன்கு வெளியாயின.

அவர்களுடைய சொந்தக் காணியில் நின்ற பசியவேஷன் மரத்தண்டை யாத்திரிகள், காணிக்கையாகச் செலுத்திவிட்டுப்போன பெருந்தொகையான பணத்தில் அவர்கள் ஒரு செம்புச் சல்லிதானும் அபகரிக்கவேயில்லை. மனுவல் மார்த்தோவிலும்பார்க்க அவர்கள் கூடுதலான வறுமை அனுபவித்தவர்களாயினும், காணிக்கையாகச் செலுத்தப்பட்ட பணத்தில் தங்களுக்கு வந்த நஷ்டங்களைப் பரிகரிக்கும்படியாக ஒரு சிறுதொகை என்றாலும் உபயோகிக்க நினைக்கத்தானுமில்லை.

கள்வர் கையில், காணிக்கைப் பணம் அகப்படாதிருக்கும்படி **முவர்த்தர்** என்னும் இடத்திலிருந்த வேறு ஒரு குடும்பத்தார் அதைச் சேர்த்துவைத்து, இலெயிறா மேற்றிராசனத்துக்கு ஒரு புதிய மேற்றிராணியார் நியமிக்கப்பட்டபொழுது, அத்தொகை முழுவதையும் அவரிடம் ஒப்புவித்தார்கள். லூசியாவுடன் பேசிக்கொண்டிருந்த சிலரிடமிருந்து இவள் காசு வாங்கியதாக அயலார்சிலர் மரியறோசாவிடம் அநியாயமாக முறைப்பட்டார்கள். அவர்களின் முறைப்பாட்டைக்கேட்டதும் மரியறோசா : லூசியாவுக்குக் கடுமையான தண்டனைகொடுக்கத் தாமதிக்கவில்லை. ஆனால் லூசியாவின் சகோதரி கறோலினாவும், வேறுசிலரும் லூசியா அந்த அந்நியருடன் பேசிக்கொண்டிருக்கையிற் கூடநின்றபடியால், அவர்களுடைய குற்றச்சாட்டுப் பொய்யென வெளிப்பட்டது. ஆனால் லூசியாதானே சொல்லியிருக்கிறபடி அதற்கிடையில் அவள் உடுப்பிற் பதிந்திருந்த தூசி எல்லாம் நன்றாக உதறிக்கொண்டுபோயின.

1921-ம் வருஷம் இலெயிறா மேற்றிராசனத்து விசுப்பாண்டவர் கோவாடி இறியாவின் நிலபுலங்கள் எல்லாவற்றையும் விலைக்கு வாங்கினார். ஆனால் காணிவிற்றவர்கள் சகலருள்ளேயும் லூசியாவின் குடும்பத்தார்தான் நியாயமான கட்டுமட்டான விலையுடன் விற்கச் சம்மதித்தார்கள்.

கோவாடி இறியாவுக்குத் திரு யாத்திரை செய்வதையும், பத்திமா மரியநாயகியின் வணக்கத்தையும் அங்கீகரித்து இலெயிறாவின் புதிய மேற்றிராணியாரான யோசே கொறேயாடி சில்வா ஆண்டவர் அவர்கள் விடுத்த நிருபத்தில் 1930-ல் லூசியாவின் குடும்பத்தினருடைய உதார குணத்

தையும், அவர்களின் சுயநலங் கருதாத் தன்மையையும் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்.

காட்சி நடந்து 25 வருஷங்கள் சென்றபின், இன்றைக்கும் அந்தோனி சாங்துஸ் என்பவனின் மக்களும், மனுவல் மார்த்தோவின் சந்ததியாரும் எப்போதும் போலவே தாழ்மையும் அடக்க ஒடுக்கமும் நிரம்பிய சாதாரண கமக்காரராகவே இருந்துவருகிறார்கள்.

வேத விரோதிகளின் வலோற்காரங்கள்

தேவதாயார் தங்களுக்குக் காட்சிகொடுத்துத் தங்களுடன் சம்பாஷித்தஇடத்தில் இவ்வளவு தொகையான யாத்திரிகள் வருவதைப்பற்றி, எல்லாருக்கும் முதல் ஆச்சரியப்பட்டவர்கள், இந்த மூன்று சிறுவர்களுமேயாம். யாத்திரிகள் வருவதைப்பற்றிப் பிள்ளைகள் மகா சந்தோஷங் கொண்டார்கள். ஆங்காரத்தினால் இவர்கள் சந்தோஷப்படவில்லை. ஆங்காரமான உணர்ச்சிகள் இச்சிறுவர்களை எட்டித்தானும் பார்க்கவில்லை. ஆனாற் பரலோகத்திலிருந்து தங்களைத் தேடிவந்த அன்புக்குரிய நாயகியின்மேல் தங்களுக்குள்ள நேசத்தினாற்தான் இப்படிச் சந்தோஷங்கொண்டார்கள். காட்சிகளைப்பற்றிச் சிலர் குறைபிடித்து, அவற்றைப்பற்றி நளினம் பண்ணுவதையும், விசேஷமாகத் தேவதூஷணங்கள் கக்குவதையும் கண்டு பிள்ளைகள் தங்களால் விபரிக்கமுடியாத மனவேதனைகளை அனுபவித்தார்கள்.

குருமாருடைய அவதந்திரமான சூட்சங்களை எதிர்க்கவும், காட்சிகளுக்கு எதிரான போலி நியாயங்களைப் பரப்பவும், வேத விரோதிகள் பத்திமாவிற்தானே மகாநாடு ஒன்று, ஆவணி மாசம் 19-ந் திகதி நடத்தப்போகிறார்களாம் என்பதைக் கேள்விப்பட்டும் எமது சிறுவர்கள் வியாகுலம் அடைந்தார்கள். பிரிமேஷன் சபையார் அரசாங்கத்தாருடைய உதவியினால் நன்றாக அணிவகுக்கப்பட்டிருந்தனர். ஆனாற் கட்டளைச்சுவாமியாருடைய முன்னோக்குள்ள செயல்களினாலும், அவருடைய கிறீஸ்தவர்களின் உத்தம கிறீஸ்த சிந்தையினாலும், மகா நாட்டாருடைய எடுபாடுகளெல்லாம்

அவர்களுடைய அவமானத்துக்கே காரணமாயின. ஆவணி மாசம் 19-ந் திகதி அன்றுதானே தேவமாதா பிள்ளைகளுக்கு வலின்ஹோஸ் என்னுமிடத்திற் காட்சி அளித்து, இவர்களுக்கு ஆறுதலும் தைரியமும் உண்டுபண்ணினார்.

அடுத்த மாசம் நடந்த வேறொரு சம்பவத்தினாலும், காட்சிக்காரப் பிள்ளைகள் மனவருத்தமடைந்தார்கள். தேவதாயார் காட்சிகொடுத்த இடத்தில் பத்தியுள்ள சில கிறீஸ்தவர்கள் அமைத்துவைத்த, ''வாயில்'' ஒன்றைப்பற்றி ஏலவே குறிப்பிட்டிருக்கிறோம். அந்த இடத்தில் யாத்திரிகள் தங்களுக்குத் தேவதாயார் அருளிய சகாயங்களுக்கு அறிகுறியாகப் பல காணிக்கைப் பொருட்களையும் வேறு பொருட்களையும் விட்டுவிட்டுப்போய் இருந்தார்கள். **சந்தாரேம்** என்ற இடத்தைச்சேர்ந்த துடுக்குத்தனமான சில போக்கிரிகள் அரசினர் தம் கண்களை மூடிக்கொண்டிருப்பார்கள் என்ற துணிவினாலும், அரசினராற் தூண்டப்பட்டுப்போலும் மேற்குறித்த வாயிற்படிக்கு ஒருநாள்வந்து அங்கு தேவதாயார் மட்டில் விசுவாசிகள் காண்பித்த பயபத்திக்கு அடையாளமாக இருந்த சகல பொருட்களையும் எடுத்துக்கொண்டுபோகும் கருத்தாயிருந்தார்கள். உள்ளபடி அவர்கள் அந்த வாயிலைத் தள்ளிவிழுத்திப்போட்டு, அங்கிருந்த பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் அது மட்டுமா? தேவமாதா பாதமூன்றிநின்று காட்சிகொடுத்த மரத்தையும் வெட்டி அதனைத் தங்கள் காரின் பின்னாற்கட்டி இழுத்துக்கொண்டு போகவிரும்பி அங்கிருந்த ஒரு மரத்தை உள்ளபடி வெட்டிக் காரின் பின்னாற்கட்டி இழுத்துக்கொண்டு போனார்கள். இது ஐப்பசி 22 அல்லது 23 ல் நடந்தது.

அடுத்தநாள் இத்துஷ்டரின், அட்டாதுட்டித்தனம் ஊரெங்கும் பரவியது. லூசியா இதைக்கேள்விப்பட்டுக் காரியம் எவ்வாறு இருக்கிறது என்பதையறிய அங்குவந்தபோது இவளுக்கிருந்த ஆனந்தத்துக்கு அளவுகணக்கில்லை. ஏனென்றால், **தேவமாதா பாதமூன்றி நின்ற மரத்தையல்ல, வேறொரு மரத்தையே அந்தத் துஷ்டர் வெறும் பேய்த்தனமாய் வெட்டி**

எடுத்துக்கொண்டு போயிருந்தார்கள். யாத்திரிகள் தங்கள் யாத்திரை காரணமாகக் கொப்புகளை ஏலவே ஒடித்துக் கொண்டுபோயிருந்தபடியினால், உண்மையான மரத்தில் மிஞ்சியிருப்பது நிலததுடன் மொட்டையாக இருந்த அடிமரமேயாம்.

அந்தத் துஷ்டரைத் தேவன் மனந்திருப்பி அவர்களுடைய பாவங்களை மன்னிக்கும்படி லூசியா கோவாடி இறியாவில் மன்றாடிக்கொண்டிருக்கையில், அவர்கள் **'சந்தாரேம்'** வீதிகளில் தேவதுரோகமான ஒரு ஊர்வலம் செய்வதற்கு அடுக்குப்பண்ணிக்கொண்டிருந்தார்கள். மகா அமளியான வெளி ஆரவாரங்களுடன் இத்துஷ்டர் தாங்கள் கோவாடி இறியாவில் அபகரித்த பொருட்களைக்கொண்டு தெரு உலாத்தினார்கள். கீழ்மக்களுக்குரிய இந்த இழிதொழிலைக் கண்ட பத்தியுள்ள கிறீஸ்தவர்கள் பெரிதும் மனவெறுப்பும் அரோசிகமும்கொண்டாலும் தங்கள் உக்கிரமமான கோபத்தையும் மனத்தாங்கலையும் வெளியாகக்காட்டி எதிர்பேசத்துணியவில்லை. ஏனென்றால் அந்த அவபத்தி நிறைந்த துட்ட குழாத்தினருக்கு அரசியல் அதிகாரிகள் மிண்டுகொடுத்திருப்பதை அவர்கள் அறிவார்கள். அரசினர் அத்துஷ்டருக்கு மிண்டுகொடுத்து அவர்களை உபசாரப்படுத்திவிட்டதுமாத்திரமல்ல, வேத விசுவாசத்துக்குப் புத்துயிர் கொடுப்பதுக்குக் குருமார் தந்திரமாகக் கைக்கொண்ட உபாயங்களை ஆரம்பத்திலேயே நசுக்கிவிடவேண்டும் என்று அந்தத் துஷ்டர் செய்துவந்த இயக்கங்களில் அவ்வரசினர் பேரானந்தம் கொண்டார்கள். அதாவது அத்துஷ்டரின் அபாண்டங்களை அரசியற் துஷ்டரும் அங்கீகரித்தார்கள்.

வேத விரோதிகளால் வெளிவந்த பத்திரிகைகளிலும் பத்திமா காட்சிகளுக்கு எதிராகச் செய்யப்பட்ட போராட்டங்கள் முன்னிலும் அதிகம் விசாலிப்பும் விருத்தியும் பெறுவதாயிற்று.

“காட்சிகளும் அற்புதங்களும் அரசினருக்கு மாறான புதிய இயக்கம் அல்லாது உண்மைச் சம்பவங்கள் அல்ல”

என்று இந்தச் சத்தியவேத சத்துருக்கள், தங்கள் பத்திரிகைகள் மூலமாக அபாண்டங்களைப் பரப்பிவந்தார்கள். குருமாருடைய அதிகாரம் எல்லாம் அழிந்து ஒழிந்து போகும் தன்மையில், கடைசிப் பெருமூச்சுவிடும் பக்குவத்தில் இருக்கின்றது. இந்த அதிகாரத்துக்குப் புத்துயிர் கொடுக்கும்படியாகத்தான் குருமார், லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா என்ற சிறுவர்களை வைத்துப் பாவைக்கூத்தாட்டுகின்றார்கள். இந்த அதிகாரத்தை அறவே நசுக்கிப்போடவேண்டும் என்று இத்தன்மையாக வேதவிரோதிகளின் பத்திரிகைகள் பத்திமா காட்சிகளுக்கு எதிராகப் போராடிவந்தன. அரசினரும் இப்பத்திரிகைகளின் போலி **முற்போக்கான எண்ணங்களை** ஆதரித்தனர். ஆதலாற் சமய சம்பந்தமான ஆரவாரங்கள் எல்லாம் நிறுத்தப்படாவிடின் தாங்கள் கடுமையான நடபடிகளை எடுக்கவேண்டிவருமெனவும் அதிகாரிகள் எச்சரிப்புக் கூறினார்கள். இவ்வித அல்லோல கல்லோலங்களினால் அல்யுஸ்திறேல் பிரிவிலுள்ள ஏழைக்கிராமவாசிகள் எல்லாரும் மூளைக்கலக்கங்கொண்டவர்களாய் இதுவரையும் எவ்வளவோ அமரிக்கையாக இருந்துவந்த தங்கள் மலைநாட்டின் சமாதான வாழ்க்கையைத் தங்கள் பிள்ளைகளுட் சிலர் குழப்பிவிட்டார்களே என்று சொல்லத்தான் மனம் ஏவப்பட்டனர். இவ்வித எண்ணமுடைய சனங்கள், லூசியா அக்கிராமத்துக் கூடாகச் சென்றால், இவளுக்குக் கேட்கத்தக்கதாகக் கேலியானபோக்கில்: அதுமட்டுமா, ஏறக்குறையப் பகை வன்மை நிறைந்தபோக்கில், “பாருங்கள் பாருங்கள் இதோபோகிறாள் புதிய பெர்னதேத்” என்று நளினம் பண்ணுவார்கள். ஆனால் லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா ஆகிய மூவரும் துஷ்டருடைய பகையையும் வன்மத்தையும் அறிந்தபொழுது முன்னிலும்பார்க்க எவ்வளவோ வேகமான ஆர்வத்துடன் தங்கள் தபமுயற்சிகளை நிறைவேற்றப் பிரயாசப்பட்டுக்கொண்டு வந்தார்கள். தங்கள் பரலோகக் காட்சிநாயகி, தங்களிடம் எதிர்பார்த்திருப்பதற்கு அளவாகத் தாங்கள் உதாரத்துவம் காண்பிக்கவில்லையே என்ற அங்கலாய்ப்புத்தான் இவர்களுடைய சின்ன இருதயங்களை உபத்திரவப்படுத்திக்கொண்

டிருந்தது. காட்சி பெற்றவர்கள் என்பதின் நிமித்தம் துஷ்டரால் தாங்கள் அனுபவிக்கவேண்டிய பரித்தியாகங்களுடன் இவர்கள் திருப்திப்படவில்லை. பூரண மனச்சம்மதமாயும் பிறருடைய அவதானத்துக்கு உள்ளாகாமலும் தாங்கள் எப்படிப் புதுப்புதுப் பரித்தியாகங்களைப் புரியலாமென்று தங்கள் உள்ளத்தில் கடுமையாக யோசித்தார்கள். அர்ச்சியசிஷ்டரின் சீவிய நடபடிகளைக் கண்டுபிடிக்கவும் பிரயாசப்பட்டார்கள்.

பச்சைக்காய்ப் போசனம்

முதலாம்விசை தேவதாயார் காட்சிகொடுத்த பிற்பாடு பரித்தியாகக்கிரிகை செய்வதைப்பற்றிப் பிரான்சீஸ் சொல்லிக்கொடுத்த உபாயந்தான் அதிகம் பெறுபேறுள்ளது எனப் பிள்ளைகளுக்குத் தோன்றியது. பரித்தியாகம் செய்யவேண்டும். அது எப்படிச்செய்வது என்று இயாசிந்தா கேட்டிருந்தாள். பாவிகள் மனந்திரும்பும்படியாகப் பரித்தியாகக் கிரிகைகள் செய்யவேண்டும். அதைப் பெற்றோர் காணவும் படாது. அப்போதுதான் பிரான்சீஸ் இவர்களுக்கு ஒரு உபாயம் சொல்லிக்கொடுத்தான். "உங்களுடைய உணவை ஆடுகளுக்குக் கொடுங்கள். உணவு உண்ணாமல் இருப்பது, அதுவல்லவா திறமான பரித்தியாகம்" என்றான் பிரான்சீஸ்.

இவன் சொல்லியபடி செய்யத்தீர்மானமாயிற்று. ஒரு நொடிப்பொழுது இவர்கள் சாப்பாட்டுக்கூடையில் இருந்த உணவெல்லாம் ஒன்றும் தவறாமல் ஆடுகளுக்குக்கொடுக்கப்பட்டது. அதன்பின் நாள்முழுவதும் இந்தச் சிறுவர் மூவரும் கடுமையான உபவாசம் அனுசரித்தார்கள். இந்த உபவாசம் மீண்டும் மீண்டும் சம்பவித்தது. ஆனால் இப்படிச் செய்வதால் பிள்ளைகளுக்கு ஒருகாரியம் வாய்ப்பாயிற்று. ஆடுகளை மேற்பார்வைபார்க்கிறது எளிதாயிற்று. பிள்ளைகளுடைய போசனத்தைப் புசித்து உருசிகண்ட ஆடுகள் அதிகம் தூரத்துக்குப்போகாமல் எப்பொழுதும் இவர்களுக்கு எட்டிய தூரத்தில்மாத்திரம் மேய்ந்துகொண்டு நின்றன.

ஆனால் "லாமுவர்த்தா" என்ற ஊரிலிருந்துவந்து வீடு வீடாய்ப்போய்ப் பிச்சைகேட்கும் ஒரு கூட்டம் பிள்ளைகளை இவர்கள் கண்டார்கள்.

சாப்படாமல்இருப்பது்இதுவல்லவோதபம்

"எங்களுடைய சாப்பாட்டை இந்த ஏழைச் சிறுவர்களுக்குக் கொடுப்போம் வாருங்கள்" என்று இயாசிந்தா சொல்லிவிட்டு உடனே தனது உணவைக்கொண்டு ஓடிப்போய் அவர்களிடம் கொடுத்தாள். ஆனால் பின்னேரம் பொழுது சற்றுச் சரிந்தபின் இவர்களுக்குப் பசியால் வயிறு கடிக்கத் தொடங்கியது. இவர்கள் இருந்த இடத்தில் பசிய "ஷேன்" மரங்களும் சாதாரண ஷேன் மரங்களும் இருந்தன. கனிகள் இன்னும் சரியாய் முற்றவில்லை. ஆனாலும் அவைகளைச் சாப்பிடலாமென்று லூசியா சொன்னாள். பிரான்சீஸ் ஒரு பெரிய ஷேன் மரத்தில் ஏறிக் கைநிறையக் கனிகளை ஆய்ந்தான். சாதாரண ஷேன் மரத்தின் கனிகள் அதிக கசப்புள்ளவை என இயாசிந்தா கேள்விப்பட்டிருந்தாள். பிரான்சீஸ் இந்த மரங்கள் ஒவ்வொன்றிலும் ஏறவேண்டியிருந்தது. ஏறி

இவன் அந்தப் பச்சைக்காய்களை ஆய்ந்து கீழே போடப் பிள்ளைகள் இருவரும் பொச்சடித்துப் பொச்சடித்துச் சாப்பிட்டார்கள். இந்தப் பொச்சடிப்புப் பரித்தியாகக் கிரிகையால் வந்ததன்றிப் பச்சைக்காய்களால் உண்டாகவில்லை. இன்றுதொடக்கம் ஷேன் மாக்கனிகளைச்சாப்பிடுவதைத் தனது வழமையான பரித்தியாகக் கிரிகையாக்கிக்கொண்டாள் இயாசிந்தா. சில சமயங்களில் இவள் பச்சை ஒலிவங்காய்களையும் சாப்பிடுவாள். இவைகள் நாவுக்குச் சிறிதேனும் இதமானவையல்ல. ஒருநாள் லூசியா இயாசிந்தாவைப் பார்த்து: "அவற்றைப் புசியாதே அவை வெறும் கசப்பு" என்றாள். "கசப்பு என்றபடியால்தான் சாப்பிடுகிறேன். அது பாவிகள் மனந்திரும்புவதற்காக"வென்று இயாசிந்தா மறுமொழி சொன்னாள். "**லாமுவர்த்தியா**"விலிருந்து வந்து பிச்சைஎடுத்துக்கொண்டிருந்த பிள்ளைகள் இவர்களைத் தேடிவந்து இவர்களிடம் தருமம் பெறப் பழகிக்கொண்டார்கள். படிப்படியாய் அந்த ஏழைப்பிள்ளைகள் ஒரு குறித்த இடத்தில் நிற்கவேண்டுமென்ற வழக்கம் ஏற்பட்டுவிட்டது. அவர்களைக் கண்டதும் இயாசிந்தா ஓடிப்போய்த் தனது உணவு முழுவதையும் அவர்களுக்குக் கொடுத்துவிடுவாள். அப்படிச் செய்வதில் இவளுக்கு வெகு ஆனந்தம் உண்டாயிற்று. முன்னேரத்தில் சில மணித்தியாலங்களாக மூன்று பேரும் தங்களுடைய பரித்தியாகத்தின் நிமித்தம் மகிழ்ச்சிகொண்டனர். ஆனால் மதியம் திரும்பியதும் மூவருடைய சின்ன இரைக்குடல்களும் பசியால்வாடி வருந்தத்தொடங்கியன. இப்படிப்பட்டவேளைகளில் தாய்மார் தங்களுக்குக் கொடுத்த உணவுகளுக்குப் பதிலாகக் காட்டிலும் வயல்வெளிகளிலும் கிடைக்கும் பருப்புகள், கம்பளிப்பழங்கள், கிழங்குகள், பிளிஞ்சில்கள், காளான்கள், கருமுள்ளுக்கிழங்குகளை உண்டு பசிதீர்க்கப்பார்ப்பார்கள். மேய்ச்சல் நிலத்துக்கருகில் இவர்களுடைய குடும்பத்துக்குச் சேர்ந்த ஒரு காணியில் இருந்த மரங்கள் கனிகளால் நிறைந்திருந்ததால், இவர்களுக்கு அது பெரிய இராசவிருந்துபோலிருக்கும். போசனத்தில் ஒறுத்தல் செய்வதென்றால் எங்களுடைய சிறுவர் சிறுமிகளுக்கு மகா கஷ்டமான காரியம் என்பதில் ஐய

மில்லை. ஆனால் லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா ஆகிய மூவரும் இந்த ஒறுத்தலைச் சந்தோஷமாய் அனுசரித்தார்கள்.

இயாசிந்தாவுடைய தாய்க்கு, அவளுடைய சகலியின் கிணற்றருகில் ஒரு கொடிமுந்திரிகைப்பந்தல இருந்தது. ஒரு நாள் பிள்ளைகள் கிணற்றருகில் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது ஒலிம்பியா முந்திரிகைப்பழங்களில் கொஞ்சம் ஆய்ந்துவந்து பிள்ளைகளுக்குக் கொடுத்தாள். ஆனால் இயாசிந்தா தனது பாவிகளை மறந்துவிடவில்லை. "அதைச் சாப்பிடாதேயுங்கள். இந்தப் பரித்தியாகக் கிருத்தியத்தைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கலாம்" என்று இயாசிந்தா சொல்லிவிட்டு உடனே அவைகளைக்கொண்டு ஓடிப்போய்த் தெருவில் விளையாடிக்கொண்டிருந்த வேறு பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டுச் சந்தோஷத்தாற் பிரகாசித்துக்கொண்டிருக்கும் முகத்துடன் திரும்பிவந்தாள். வழியிலே சந்தித்த பிள்ளைகள் "முவர்த்தியா"விலிருந்துவந்த ஏழைப்பிள்ளைகள் தான். அவர்களுக்குத்தான் இவள் அந்தப் பொன்நிறமான அலங்காரமுள்ள முந்திரிகைப்பழங்களைக் கொடுத்தாள். இன்னொருமுறை ஒலிம்பியா மிகவும் விசேஷித்த உருசிகரமான அத்திப்பழங்களை எங்கேயோவிருந்து வீட்டுக்குக்கொண்டு வந்திருந்தாள். அவைகளைவந்து சாப்பிடும்படி அவள் இந்தச் சிறுவர்களை அழைத்தாள். இயாசிந்தா பழக்கூடைக்குக் கிட்டப்போயிருந்து, அவ்வளவு உருசிகரமான பழங்களைத் தான் சாப்பிடப்போவதை எண்ணி எவ்வளவோ வாயூறிக் கொண்டிருந்தாள். ஒன்றை எடுத்துவைத்துக்கொண்டு இவள் பரவசமானவள்போல் யோசித்துவிட்டு:

"நாங்கள் இன்றைக்கு இன்னும் ஒரு பரித்தியாகமும் செய்யவில்லை. இதைச் சாப்பிடாமல்விட்டு அந்தப்பரித்தியாகத்தைச் செய்வோமாக" என்றாள். என்றுவிட்டு, எடுத்த பழங்களையும் திருப்பிக் கூடைக்குள் போட்டுவிட்டாள். மற்றவர்களும் உடனே அப்படியே செய்துவிட்டுத் தங்கள் வழக்கமான காணிக்கைச் செபத்தை ஒப்புக்கொடுத்து, இவர்களுக்குப் போசனப்பிரியம் உண்டுபண்ணிய பழக்கூடையை தன்பாட்டில் விட்டு விட்டார்கள்.

எப்பொழுதும் புதிய பரித்தியாக முயற்சிகள்

அயலாருள் ஒருத்தி ஒருநாள் ஆடுகளுக்கு நல்ல மேய்ச்சல் நிலமொன்றை மரியரேசாவுக்கு உபகரித்தாள். அங்கு ஆடுகள் தண்ணீர் குடிப்பதற்கு ஒரு குண்டு இருந்தது. அல்லாமலும் பிள்ளைகள் மத்தியானவேளையில் இளைப்பாறுவதற்கு நல்ல சின்னச் சோலைகளும் அங்கு இருந்தன. அது சற்றுத் தூரமான இடம். ஆனால் கடுங்கோடைகாலமானபடியாலும் சமீபத்தில் நல்லமேய்ச்சல் நிலம் இல்லாதபடியாலும் மரியரேசா அந்த நல்ல அயலாள் செய்த உபகாரத்தை நன்றியுடன் ஏற்றுக்கொண்டாள். வழியிலே எமது இடையப்பிள்ளைகள் தங்கள் பழைய பிச்சைக்காரச் சிநேகிதர்களைக் கண்டார்கள். கண்டதும் இயாசிந்தா தனது சாப்பாட்டை அவர்களுக்குக் கொடுத்துவிட்டாள். வானம் நீலநிறமாக இருந்தது. வெய்யிலும் நெருப்பாக எறித்துக்கொண்டிருந்தது. இந்தக் கட்டாந்தரையான இடத்திலே வெய்யில் எல்லாரையும் பொசுக்கிப்போடுவது போலிருந்தது. தண்ணீர்விடாயும் பிள்ளைகளைத் தவிக்கச்செய்தது. ஆனால் அந்த இடத்தைச் சூழ்ந்த வட்டாரம் முழுவதிலும் ஒருதுளி நல்ல தண்ணீராவது அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆரம்பத்திற் பிள்ளைகள் இந்தப் பரித்தியாகத்தைப் பாவிகள் மனந்திரும்பும்படியாக ஒப்புக்கொடுத்தார்கள். ஆனால் மதியம் திரும்பினதும், பிள்ளைகளுக்கு இருந்த தண்ணீர்விடாயை இவர்களாற் தாங்கமுடியவில்லை. அடுக்க இருந்த ஒரு கிராமத்தில் லூசியா தான்போய் தண்ணீர்கொண்டுவருவதாகச் சொல்லிவிட்டு, சிறு தூரம் சென்று ஒரு வீட்டுப்படலையிற் தட்டினாள். அங்கு ஒரு நல்ல சின்னக் கிழவி மிகவும் அன்புடன் இவளுக்குக் கொஞ்சம் தண்ணீரும் ஒரு துண்டு உரொட்டியும் கொடுத்தாள். அப்பத்தைப் பசியால் வாடிய மூவரும் பங்கிட்டுச் சாப்பிட்டார்கள். அதன்பின் லூசியா, பிரான்சீசுக்குத் தண்ணீரை நீட்டினாள். "நான் தண்ணீர் குடிக்கவில்லை." "ஏன் அப்பா?" "பாவிகள் மனந்திரும்பும்படியாக நான் பாடுபட விரும்புகிறேன்." "இயாசிந்தா இந்தா நீ குடி." நானும் குடிக்கவில்லை. பாவிகளுக்காகத்

தவஞ்செய்யப்போகிறேன். அப்போது லூசியா தண்ணீரை ஒரு குண்டுக்குள் ஊற்றி ஆடுகளைக் குடிக்கச்செய்து தண்ணீர்க் கலசத்தை கிழவியிடம் கொண்டுபோனாள்.

மூச்சடங்கச்செய்யும் வெய்யில் அகோரம் சற்றாவது குறையவில்லை வெட்டுக்கிளிகளும் அருகாமையில் இருந்த ஒரு தண்ணீர்க் குண்டில்வசித்த தவளைகளும் ஒன்று சேர்ந்து காது சன்னங்களெல்லாம் செவிடுபடக்கூடியவிதம் கீச்சிட்டுச் சத்தமிட்டன. இயாசிந்தா பசியாலும் தாகத்தாலும் மிகவும் பெலவீனப்பட்டு வருத்தமடைந்தாள். அப்போது இந்த நிஷ்கபடமுள்ள குழந்தை தன் மைத்துனியைப் பார்த்து, மச்சாள் அந்தத் தவளைகளும் சில்வண்டுகளும் ஒன்றும்பேசாதிருக்கும்படி அவைகளுக்குச் சொல்லு என்று சின்னச்சிறிய பாலரைப்போலும் வஞ்சகமில்லாது சொல்லி "இனி என்னாற் தாங்கமுடியாது" என்றாள். "பாவிகளுக்காகப் பாடுபட விருப்பமில்லையா?" என்றான் பிரான்சீஸ். ஆம் ஆம் நான் விரும்புகிறேன். நல்லதும் அந்த வண்டுகள் பாடிக்கொண்டிருக்கட்டும். தவஞ்செய்ய வேண்டும் என்ற வாஞ்சை நிறைந்த இப்பிள்ளைகள் ஒன்பது நாளைக்கு அல்லது ஒரு மாசத்துக்கு போசனவேளையில் அன்றி மற்றப்படி ஒன்றும் குடிப்பதில்லை என்று வாக்குப்பண்ணிவருவார்கள். தாங்க அரிய வெய்யில் எறித்த ஒருநாள், ஒரு ஆவணி மாசத்தில் இவர்கள் இந்த வாக்கைச் செய்திருந்தார்கள். இந்த நாட்களிற்தான் மூவரும் கோவாடி இறியாவுக்குச் செபமாலை சொல்லவந்தார்கள். வழியில் இருந்த ஒரு குண்டுக்கு அருகாலே போகும்பொழுது, எனக்குத் தாங்கமுடியாத தலைஇடியாக இருக்கின்றது. இந்தக் குண்டுக்கு முன்னிருக்கும் தண்ணீரில் குடிக்கப்போகின்றேன் என்றாள் இயாசிந்தா. இல்லை இல்லை அதைக் குடியாதே. அது குடிக்கக்கூடாத தண்ணீர். அதை ஒருபோதும் குடிக்கப்படாது என்று ஆச்சி சொல்லியிருக்கிறா. எங்கள் மாமி மரியஆஞ்சேர்ஸ் பக்கத்தில் வசிக்கிறாவே. அவவிடம் தண்ணீர் வாங்கிக்குடிக்கலாமே என்றாள் லூசியா. இந்த மரியஆஞ்சேர்ஸ் என்பவள் சமீபத்தில் விவாகம் செய்தவள். இவர்களுக்கும் இனத்தவள்.

நான் இதைத்தான் குடிக்கவேண்டும். தாகத்தை அனுபவிக்கும் பரித்தியாகம் இல்லாமல்போகுதே. இந்த

அழுகல் தண்ணீரைக் குடிக்கும் ஒறுத்தலையாவது அனுசரிப்பேன். இயாசிந்தாவுக்கு எப்போதும் புதுப்புது ஒறுத்தல்கள்வேண்டும். ஒறுத்தல் செய்யவேண்டுமென்று இவள் எப்போதும் ஓயாது விடாய்கொண்டவள்போல் இருந்து வந்தாள். ஒருநாள் இயாசிந்தா சுவர் ஒன்றின் கல்லுக்களிடையில் வளரும் ஒரு பூண்டிலுள்ள பூக்களை ஆய்ந்து விளையாடிக்கொண்டிருந்தாள். இப்பூவை விரலால் நசுக்கினால் படாரென்று வெடிக்கும். ஆனால் இயாசிந்தா சுவரில் வளர்ந்த ஒரு காஞ்சோன்றிப் பூண்டிற் தெரியாமற் கையைவைத்துவிட்டாள். வைத்தவுடன் கைவிரல்கள் சுணைக்கத்தொடங்கிவிட்டன. இது இவளுக்கு ஓர் புதிய அறிவு வெளிச்சம் கொடுத்தது. கைநிறையக் காஞ்சோன்றிகளைப் பிடுங்கி இங்கே பாருங்கள் இங்கே பாருங்கள் நாங்கள் ஒறுத்தல் அனுசரிக்க இன்னுமோர் காரியம் வாய்த்திருக்கிறது என்று மற்றவர்களை அழைத்தாள். அதன்பின்பு இவள் எப்போது காஞ்சோன்றிப் பூண்டுகளைக் கண்டாலும் அவற்றைப் பிடுங்கித் தனது கெண்டைக்கால்களில் அவற்றால் அடிப்பாள்.

நாலாம் ஐந்தாம் காட்சிகளுக்கிடையில் ஒருநாள் இப்பிள்ளைகள் தங்கள் ஆடுகளைச் சாய்த்துக்கொண்டு போகும்பொழுது வழியில் ஒரு பெரிய துண்டுக்கயிறு விழுந்து கிடப்பதைக் கண்டார்கள். அது ஒரு வண்டியிலிருந்து விழுந்திருக்கவேண்டும். லூசியா அதை எடுத்து விளையாட்டுக்காகத் தனது கையை இறுக்கிக் கட்டிக்கொண்டாள். சிறிது வேளையின் பிற்பாடு இவள் கையிற் தாங்கரிய வேதனையுண்டாயிற்று. இங்கே பாருங்கள் இந்தக் கயிறு வலு வேதனை கொடுக்கிறது. நாங்கள் இதை அரையிற் கட்டினால் ஆண்டவருக்கு இன்னும் ஒரு பரித்தியாகம் ஒப்புக்கொடுக்கலாமே என்றாள். எல்லாருக்கும் அது சம்மதமாயிற்று. ஆனால் கயிற்றை வெட்டி மூன்றாய்ப் பிரிக்கக் கத்தியில்லை. ஆனபடியால் ஒரு பெரிய கல்லின் கூரான நுனியில்வைத்து, வேறு ஒரு கூரான கல்லினாற் குத்திக் குத்திப் பிரித்தார்கள். விரைவில் மூவருக்கும் கயிறு கிடைத்தது. கயிறு கரடுமுரடானது. அதன் கட்டும் இறுக்கமானது, இந்தத் தபக்கருவியினால் எங்கள் சின்னப்பிள்ளைகள் மூவரும் கொடிய வேதனை

அனுபவித்தார்கள். வேதனை தாங்கமுடியாது இயாசிந்தா சிலவேளை அழுவாள். அப்படிப்பட்ட சமயங்களில் லூசியா அவளைத்தேற்றிக் கயிற்றை அவிழ்த்துவிடச் சொல்வாள். இல்லை இல்லை பாவிகளுக்காகப் பரிகரிப்புச் செய்யவும், அவர்கள் மனந்திரும்பும்படியாகவும் பாடுபடவேண்டும். புரட்டாசி மாசம் 13-ந் திகதி இவர்களுக்கு அளிக்கப்பட்ட காட்சியில், தேவதாயார்: உங்களுடைய தபமுயற்சிகளைப் பற்றி, ஆண்டவர் சந்தோஷமாய் இருக்கிறார். ஆனால் இரவில் நித்திரை செய்யும்பொழுது நீங்கள் அதை அவிழ்த்துப் போடும்படியும், பகற்காலத்தில் மாத்திரம் தரித்திருக்கும்படியும் ஆண்டவர் உங்களுக்கு அறிவிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொன்னார். பிள்ளைகள் மூவரும் ஆண்டவர் சொல்லியதுக்கு அமைந்து, ஆண்டவருக்கும் தேவமாதாவுக்கும் உவப்பான இந்தத் தபக்கிரிகையைப் பகற்காலத்திற் தொடர்ந்து அனுசரித்து வந்தார்கள்.

நீ வாசிக்கப் படிக்கவேண்டும்

1917-ம் வருஷத்து வசந்தகாலத்திற் காட்சிக்காரப் பிள்ளைகள் மூவருடைய சீவியத்திலும் ஒரு பிரதானமான மாற்றம் உண்டானது. இரண்டாம் காட்சியின்போது தேவதாயார் தாங்கள் வாசிக்கப்படிக்க வேண்டும் என்று கற்பித்திருந்ததாக, லூசியா சொல்லியிருக்கிறாள். வாசிக்கப்படிப்பது என்றால் "பள்ளிக்கூடத்துக்குப்போவது" என்பதுதான் பிள்ளைகளுடைய நாடோடிப் பாஷையின் கருத்து. இந்தச் சம்பவத்தை லூசியா சொல்லும்பொழுது, சிலர் இவளைத் தடுத்து நீ இன்னும் பள்ளிக்கூடத்துக்குப் போகவில்லையே, தேவமாதாவுக்கு நீ அமைகிறது இப்படித்தானா? என்பார்கள். இதைக்கேட்டுப் பிள்ளைகள் ஒன்றும் பேசாதிருப்பார்கள். பள்ளிக்குப்போகாது விட்டதில் ஏதாவது குற்றம் இருந்தால் அக்குற்றத்தைப் பிள்ளைகள் பெற்றாரிற் சுமத்திவிடுவார்கள். மறுபக்கத்தில் இவர்கள் மூவரும் தங்கள் ஆடுகளிலும் வெகு பற்றுள்ளவர்கள். மலைநாட்டின் வெளிநிலங்களில் வீசும் காற்றும் இவர்களுக்குப் பெரிதும் உவப்பு. மேலும் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மற்றப் பிள்ளைகளுடைய கேலி பரிகாசங்களுக்கு இலக்காக இருக்கவேண்டுமே என்

பதை எண்ணியும் இவர்கள் அஞ்சினார்கள். கடைசியாகச்
சருவேசுரன் இவ்விஷயத்தைப் பின்வருமாறு ஒழுங்கு பண்
ணச் சித்தமானார். காட்சிக்காரப் பிள்ளைகளைக் காண
வேண்டுமென்ற ஆசையுடன் வந்த சனங்களைத் திருப்திப்
படுத்தும்படியாக ஒலிம்பியா ஆரோ ஒருவரை மேய்ச்சல்
நிலத்துக்கு அடிக்கடி அனுப்பி அவர்களைக் கூப்பிடவேண்டி
யிருந்தது. இப்படிச் செய்துவரவேண்டியிருப்பதினால் ஒலிம்
பியா அலுத்துப்போய் மந்தைகளை மேய்க்கும் அலுவலைத்
தனது மகன் யோணிடம் ஒப்பித்துவிட்டு, சிறுவர் இரண்டு
பேரையும் வீட்டில் மறித்துக்கொண்டாள். இந்த மாற்றம்
இயாசிந்தாவுக்குப் பிடிக்கவில்லை. எத்தனையோபேருடன்
சம்பாஷிக்கவேண்டிய அவசியத்தை அவள் விரும்பவில்லை.

லூசியாவின் விஷயமாய் மரியறோசா வேறொரு உபா
யம் கண்டுபிடித்தாள். ஒவ்வொருநாளும் லூசியா தனது
ஆடுகளை எந்த மேய்ச்சல் நிலத்தில் மேய்க்கவேண்டுமென்று
மரியறோசா நியமித்திருந்தாள். அதன்பின்பு, எவராவது
லூசியாவுடன் சம்பாஷிக்கவிரும்பினால், உடனே குறித்த
இடத்துக்கு ஆளை அனுப்பி அவள் லூசியாவைக் கூப்பிட்
டுக்கொள்வாள். ஆனால் விரைவில் இந்த உபாயத்தினாலும்
மரியறோசாவுக்குச் சங்கடம் குறையவில்லை. எத்தனையோ
விசைகளில் லூசியாவின் சகோதரிகள் இவளைத்தேடிப்போக
வேண்டியிருந்தது. ஆரோ ஒரு சகோதரி இவளுக்குப் பதி
லாக ஆடுகளை மேய்க்கவேண்டி இருந்தது. ஆனபடியாற்
தான் கடைசியாக மரியறோசா தனது ஆட்டுமந்தையைத்
தொலைத்துவிடத் தீர்மானித்தாள். அதன்பின்பு தனது
மைத்துனியுடன் கலந்துபேசிப் பிள்ளைகளைக் கிராமப் பாட
சாலைக்கு அனுப்பத் தீர்மானித்தார்கள்.

காலந்தப்பிப் பாடசாலைக்குப் படிக்கப்போன இந்த
மூவர்களையும், மாணாக்கரும் உபாத்திமாரும் எவ்வளவோ
விநோதப்பிரியத்துடனும், விவேகமற்றதன்மையாயும் இப்
பிள்ளைகளுக்கு வெகு அலுப்பு உண்டுபண்ணும்விதமாயும்
இவர்களை ஓயாது ஏறெடுத்துப் பார்த்தவண்ணமாய் இருந்
தார்கள் என்றும் நாம் ஊகிக்கலாம். ஆனாலும் இம்மூவரும்
புத்திக்கூர்மை உள்ளவர்கள் என்றபடியாலும் வெகு கவன

மாகப்படித்துவந்தபடியினாலும், விரைவில் வகுப்பில் முன்
னேறிக்கொண்டுவந்தார்கள். ஆனால் பிரான்சீஸ் இயாசிந்தா
என்ற இருவரும் தங்களுடைய கெட்டித்தனத்தை எல்லா
ருக்கும் காண்பிக்க இவர்களுக்குப்போதிய காலநேரம்
கிடைக்கவில்லை.

விளையாட்டு நேரங்களிலே இவர்கள் மற்றப்பிள்ளைகளை
விளையாடவிட்டுக் கோவிலுக்குப்போய்ச் சற்பிரசாதம் சந்திப்
பார்கள். நாங்கள் கோவிலுக்குப்போவதைச் சிலர் ஒரு
வகையாக ஊகித்து அறிந்து கொள்ளுகிறார்கள். நான்
கோவிலுக்குப்போனவுடன் ஆட்கள் அங்குவந்துவிடுகிறார்கள்.
மறைந்திருக்கிற யேசுநாதருடன் கதை பேசிக்கொண்டிருக்க
எனக்கு எவ்வளவோ ஆசை. ஆனால் அவர்கள் என்னைத்
தனிய ஆண்டவருடன் விடுகிறார்களில்லை. இவர்களைத் தேடி
வருகிறவர்கள் பொதுவாக அடுத்த கிராமத்திலுள்ள நிஷ்
கபடிகளான சனங்கள்தான். அவர்கள் தங்கள் மனக்கவலை
களை இவர்களுக்குச்சொல்லித் தங்களுக்காக மன்றாடிக்கொள்
ளும்படி இவர்களைக்கேட்கத்தான் வருவார்கள். சில சமயங்
களில் ஒரு பாவிக்காக அல்லது ஒரு துன்மாதிரிகை நீங்கும்
படியாக அல்லது தங்கள் குடும்பத்தில் நிர்ப்பந்தம் அற்றுப்
போகும்படியாக மன்றாடும்படி இவர்களைக் கேட்டால், நாங்
கள் உங்கள் கருத்துகளுக்காக மன்றாடுவோம். பரித்தியாகங்
களும் ஒப்புக்கொடுப்போம். ஆனால் இன்னாருக்குக் கேட்ட
நன்மை கிடைக்கவேண்டுமானால் அவனை மனந்திரும்பச்
சொல்லுங்கள். விசேஷமாகத் தவறணைக்குப்போகும் பழக்
கத்தை விட்டுவிடும்படி சொல்லுங்கள் என்பார்கள்.

இந்த மூன்றுபேரும் **எவ்வளவோ ஆர்வத்துடனும்
ஆனந்தத்துடனும் தங்கள் ஞானஉபதேசத்தைப்படித்து வந்
தார்கள்.** தாங்கள் முதல் நன்மை பெறுவதற்கு ஆயத்த
மாக இருக்கும்படி பிரான்சீசும் இயாசிந்தாவும் பெருங்
கவனத்துடன் ஞானஉபதேசங்கற்றுவந்தார்கள். இவர்க
ளுடைய ஆகப்பெரிய ஆசை இதுவே. ஒரேஒரு ஆசையும்
இதுவே. தனது படிப்பினால் அவ்வளவு நன்மை வரமாட்
டாது என்பதைப் பிரான்சீஸ் சில காரணத்தினால் நிச்சயமாய்

அறிந்திருந்தான். ஆனபடியாற்றான் வகுப்பு நேரத்தையும் அவன் பல தடவைகளிற் கோவிலிற் செலவழிப்பான்.

பள்ளிக்கூடக் கிராமத்துக்குப் பிரான்சீஸ் வந்தவுடன் கோவிலுக்குப்போய்விடுவான். தேவநற்கருணையில் மறைந்திருக்கும் யேசுநாதரை ஆராதிப்பான்: "நீ தப்பாமல் வகுப்புக்குப் போகவேணும். நான் இங்கேதான் இருப்பேன். விரைவில் நான் மோட்சத்துக்குப் போவேன். என் படிப்பாளியாகிவிடப் பிரயாசப்படுவான்? வகுப்பு முடிந்தபின் நீ வந்து என்னையுங் கூட்டிக்கொண்டு போ" என்று அவன் இயாசிந்தாவுக்குச் சொல்வான்.

கோவிலிலே நற்கருணை வைக்கப்பட்ட இடத்தில் ஒரு மூலையிலே இவன் இருந்து செபிப்பதைப் பின்னேரத்திற் காணுவார்கள். அடுத்த மாரிகாலம் இவன் நோய்வாய்ப்பட்டு வீட்டிலே தங்கவேண்டிவந்தபோது சற்பிரசாதம் சந்திக்கத் தனக்கு வாய்க்கவில்லை என்று இவன் பெரிதும் வருத்தப்பட்டான். மறைந்த யேசுநாதரை ஒரு நொடிப்பொழுதுதானும் விட்டுப்பிரிந்திருப்பதுதான் என்னால் ஆகத் தாங்க முடியாத வருத்தம். கோவிலுக்குப்போய் என் பேராலும் கனக்க கனக்க நல்ல காரியங்களை மறைந்த யேசுநாதருக்குச் சொல்லு என லூசியாவுக்குச் சொல்வான்.

காட்சிநடந்த ஒரு வருஷத்துள் நிகழ்ந்தவை

இப்போது போர்த்துக்கீசர் சகலரும் பத்திமாவையே உருக்கத்துடன் கண்ணோக்குகிறார்கள். சூரியன் நடனஞ்செய்த பத்திமாவை, மூன்று இடையப்பிள்ளைகளுக்குச் செபமாலைநாயகி காட்சி அளிக்கக் கிருபைகூர்ந்த பத்திமாவை நோக்குகிறார்கள். அவர்களுள் ஆகப்பெருந்தொகையினர் பத்திமாநாயகியில் ஆழ்ந்த விசுவாசமும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள். வேத விசுவாசத்தில் வேண்டாவெறுப்பாயிருந்தவர்களும் அவபத்தி நிறைந்தவர்களும் பெருந்தொகையாக மனந்திரும்புகிறார்கள். அவர்கள் தொகை அவ்வளவாகப் பெருகுகிறபடியால் இப்போது அத்தொகை கணக்கிடப்படுவதில்லை.

பத்திமாநாயகியினால் நடந்துள்ள அற்புதங்களைப்பற்றி எங்கும் பேசிக்கொள்ளுகிறார்கள். போர்த்துக்கீசர் தங்கள்

பழமைவாய்ந்த கத்தோலிக்க பழக்கவழக்கங்கள் யாவற்றையும் பாரம்பரியங்களையும் மீண்டும் கைக்கொள்ளும் பாரிய இயக்கம் இப்போது வலிமைபெற்று வருகின்றது. அரசினர் மத்தியிற்றானும் காத்திரமிக்க பெருமாற்றங்கள் உண்டாகியிருக்கின்றன. வேதவிரோதிகளின் ஆதிக்கம் முன்னிலும் பார்க்க எவ்வளவோ குறைந்துவிட்டது. 1918-ம் வருஷம் மாசி மாதம் போர்த்துக்கேய மேற்றிராணிமாரெல்லாரும் சேர்ந்து நடத்திய சங்கத்தின்பின்பு அவர்கள் 15-ம் ஆசீர்வாதப்பருக்குச் சமர்ப்பித்த அறிக்கைப்பத்திரத்தில் தங்கள் நாட்டுத் திருச்சபையின் நிலைமை நன்மைக்குரிய முன்னேற்றம் அடைந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இவர்களுடைய அறிக்கைப்பத்திரத்துக்குப் பாப்பாண்டவர் அவ்வருஷம் சித்திரை மாதம் விடுத்த திருமுகத்தில் விடை அளித்திருந்தார். அவருடைய விடையிற்கண்ட சில வார்த்தைகளும் அவ்விடையின் போக்கும் பத்திமா சம்பவங்களை ஆராய்ச்சிசெய்துவரும் சரித்திர ஆசிரியர்களின் கவனத்தைப் பெரிதும் கவரல் ஆயிற்று. போர்த்துக்கால் தேசத்தின் முந்திய நிலமை உறுதியற்றதென்றும், நெடுங்காலம் நீடிக்கும் தன்மை அற்றது என்றும் பாப்பாண்டவர் கூறிய பிற்பாடு "எமது நம்பிக்கை உங்கள் கிறீஸ்தவர்கள் மாசில்லாத கன்னிமரியாயில் வைத்திருக்கும் உருக்கமான பயபத்தியின் நிமித்தம் உறுதிபெறுகின்றது. இந்தப் பத்தியினால் கிறீஸ்துநாதரின் இந்த ஞானமந்தையானது மிகவும் மகிமை அடைகின்றது. **இந்தப் பயபத்தியின் நிமித்தம் போர்த்துக்கால் கிறீஸ்தவர்கள் தேவமாதாவிடமிருந்து விசேஷித்த ஒத்தாசை பெறுவதற்குப் பாத்திரவான்களாயினர்'** எனக் கூறியிருக்கிறார். 15-ம் ஆசீர்வாதப்பர் கோவாடி இறியாவின் காட்சிகளைப்பற்றித்தான் சுட்டிப்பாய்ப் பேசினாரா? அப்படி எண்ணுவதற்கு இடமுண்டு. உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்க பத்திரிகைகள் எல்லாம் அதேகருத்துக் காண்பித்தன. போர்த்துக்கால் தேசத்திலிருந்து திருச்சபை விஷயமாக நல்ல புதினங்கள் கிடைக்கப்போவதில்லை என்பது சகலருடையவும் மனப்பதிவு. ஆனபடியால், உள்ளபடி நல்லவர்களாய், சில வேத விரோதிகளின் செயலால்

பெரும் நிர்ப்பாக்கியராய் உபத்திரவப்பட்டுக்கொண்டிருந்த இந்தச் சனங்களுக்குச் சார்பாக, சில ஆச்சரியமான சம்பவங்கள் நிகழ்ந்திருப்பதைப்பற்றிக் கேள்விப்பட்டவர்கள், அவர்களுக்கு வாசியாகப் பரலோகத்திலிருந்து மிகவும் விசேஷித்த அபூர்வமான ஒத்தாசை கிடைத்திருக்கவேண்டும் என நம்பினார்கள்.

மனுக்குலத்தவர் மத்தியில் சமாதானத்தை உண்டுபண்ணிவிட எவ்வளவோ கரிசனையுடன் பிரயாசப்பட்டுவந்த பாப்பாண்டவர் மகாயுத்தம் முடியும்படி செபம் செய்யவேண்டுமென தேவமாதா பத்திமாவிற் கொடுத்த அறிவித்தலிலே, சமாதானத்துக்காகத் தபம் செய்துவரும் பிரயாசங்கள் அனுகூலப்படும்படி தேவன் உதவிசெய்ய முன்வந்திருக்கிறார் என்பதை விளங்கிக்கொள்ளாதிருப்பாரா? கிறீஸ்தவர்கள் எல்லாரும் ஒரு செபச் சேனையாக அணிவகுத்துப் பரலோகத்தை வலுவந்தம் செய்யும்படி வைகாசி மாதம் தாம் கேட்டுக்கொண்டதற்குப் பத்திமா சம்பவங்கள்தான் அவருக்குக்கிடைத்த பதில் என்று சொல்லுதல் தவறாகுமா? அவைகள் எல்லாம் எவ்வாறு இருப்பினும் ஒரு சம்பவம் மிகவும் விசேஷப்பட்டது. அதாவது 1918-ம் வருஷம் ஆடி மாதம் 10-ந் தேதி மீண்டும் வத்திக்கானுக்கும் போர்த்துக்கால் அரசினருக்குமிடையில் சமாதானம் ஏற்பட்டுப் பிரதிநிதிகளும் நியமனம் செய்யப்பட்டனர். ஆதலாற் பாப்பாண்டவருக்காக லூசியா, பிரான்சீஸ், இயாசிந்தா என்னும் மூவரின் செபங்களும் பரித்தியாகங்களும் வீண்போகவில்லை. அல்லாமலும் சத்தியவேதத்துக்கு விரோதமாகச் செய்யப்பட்ட சட்டங்களும் பெரும்பாலும் அழிக்கப்பட்டன. நாலுபக்கத்திலுமிருந்து சனங்கள்வந்து தேவமாதா காட்சிகொடுத்த இடத்துக்கு அடையாளமாக அமைக்கப்பட்ட வாயிலின் முன்னும், கரடுமுரடான வட்டக் கல்லின் முன்னும் செபமாலை சொல்லிவருகிறார்கள். ஆனால் திருச்சபை அதிகாரிகள் நாம் குறிக்கும் காலத்தில் ஒன்றும் பேசாது மௌனசாதனை செய்தனர். குருமார் தனி ஆட்கள் என்ற அளவிலும், விநோதப்பிரியத்தினாலும் அல்லாமல் மற்றப்படி கோவாடி இறியாவுக்கு வருவதுமில்லை. ஆராதனைகளிற் பங்குபற்றுவதுமில்லை.

“**சிறுபிள்ளைகள் கட்டிவைத்த இந்த வேடிக்கையான கதைகள்** என்று பெயரிட்டுப் பத்திமா சம்பவங்களைப்பற்றிச் சிலர் தங்கள் நாவுகளை வளையாதிருக்கத் தெரியாதவர்களாயினர்.” பிறர் அச்சம்பவங்களை நம்புவதும் அவர்களுக்குத் தாங்கரிது ஆயிற்று.

இயாசிந்தா பிரான்சீஸ் லூசிய ஆகிய மூவரும் ஒவ்வொருநாளும் முந்திய நாளிலும்பார்க்க எவராலும் அறியப்படாமலும் அவதானிக்கப்படாமலும் மறைந்த சீவியம் நடத்தப் பிரயாசப்பட்டார்கள். தேவமாதா காட்சிகொடுத்த முதலாம் ஆண்டு நிறைவுத் தினத்தில் எல்லாச் சனங்களும் கோவாடி இறியாவை விட்டுவிலகி, பின்பு தனியேபோய்ச் செபமாலை சொன்னார்கள்.

சில சமயங்களில் அவ்விடத்தைவிட்டு விலகத்தாமதித்தபடியால் பிள்ளைகள் தங்களுக்காகத் தேவமாதாவை மன்றாடும்படியாகவும் தங்கள் மன்றாட்டங்கள் எவைஎனவும் பிள்ளைகளுக்கு அறிவித்து தங்களுடன் செபமாலை சொல்லும்படியாகவும் பரிந்துகேட்பார்கள்.

பொதுவாக லூசியாவிற்தான் எல்லாரும் கவனம் செலுத்தினார்கள். இவளும் ஒவ்வொரு கூட்டத்தையும் புறம்பு புறம்பாய்ச் சந்திப்பாள். சில சமயங்களில் நன்றாய் ஆயத்தப்படுத்தி வெடிதீர்ந்தவாறாய், ஒன்றின்பின் ஒன்றாகச் சினம்பிடிக்கக்கூடிய, நூறாயிரம் கேள்விகளைச் சிலர் கேட்பார்கள். வேறு சமயங்களில் வந்தனங்கள், வாழ்த்துரைகளை மண்மாரி மழைமாரியாகச் சொரிந்து, இவளை அரவணைத்து முத்தமிடுவார்கள். அல்யுஸ்திறேல் பிரிவில் இன்னும் சிலர் தன்னைக் கேலிபண்ணுவதை இவள் அறிவாள். கோவாடி இறியாவில் இவளுக்குப் பெரிய கொண்டாட்டங்களும் வெற்றிவிழாக்களும் நடைபெறுகின்றனவே. இவளுக்கு இன்னும் பன்னிரண்டு வயசுதானும் ஆகஇல்லை. அடே அப்பா, இவளுடைய மனவலிமைதான் என்ன? சற்றாவது உசும்பாமல் மன அமரிக்கையாய் எப்போதும் மட்டுமரியாதையாய் நடக்கிறாளே என்று சிலர் பிரசித்தமாக இவளைப்பற்றிப் பேசுவார்கள். இப்படித் தன்னை அரிகண்டம்பண்ணும் அவர்களையும் அவர்களுடைய அழுகல் நாவு

களையும், தூரத்தில் அகற்றிவிட்டு ஓடிவிட்டாலோ என்று இவள் வாஞ்சைகொள்வாள். எல்லாத்துக்கும் மேலாக அவர்களுடைய முகமனான பேச்சுகள் இவளுக்கு முற்றாகப் பிடிக்கவில்லை.

அவர்களுடைய புகழ்ச்சிகள் எல்லாம் எனக்குப்பெரும் மனக்கூச்சத்தை உண்டுபண்ணின. என்னைப்பற்றி அவர்கள் நன்மையாகச் சொன்னவைகள் எல்லாம் மெய்அல்ல என்பதை நான் நன்குணர்ந்தேன்.

அல்யுஸ்திறேல் பிரிவின் இந்த மூன்று பிள்ளைகளும் நாள்தோறும், செபமாலை சொல்லிவந்தபடியினால், செபமாலைப்பத்தியானது இப்போது போர்த்துக்கால்தேச முழுவதிலும் விரைவாகப் பரந்து விருத்திபெற்றுக்கொண்டு வருகின்றது. இவைகள் எல்லாம் சூரியன் காலிக்கமுந்திப் பலார்பற்றி விடிவதுபோலப் போர்த்துக்கால் தேசத்தின் நற்காலமாகிய சூரியன் காலிக்கமுந்தி உண்டான வெளிச்சம் போலாயிற்று. பத்திமாநாயகியின் கிருபையாற் தங்களுக்கு வந்த ஆசீர்வாத நன்மை வரங்களுக்கெல்லாம் நன்றியறிதலை 1938-ம் ஆண்டு அத்தேசத்து மேற்றிராணிமாரும் கத்தோலிக்கர்களும் அதிகாரமுறையாய் நடத்தின கொண்டாட்டங்களினாற் காண்பிக்கலாயினர்.



தேவமாதா காட்சி கொடுத்த இடத்தை ஒருவாயிலும் கரடுமுரடான வட்டக் கல்லும் குறிக்கின்றன.

ஆனால், தேவதாயாரின் அறிவித்தல்களைத் தங்கள் சனங்கள் அறியும்படி செய்த மூன்று சிறுவர்களுக்கோ, இவர்கள் எப்பக்கத்துக்குத் திரும்பினாலும் இவர்களுக்குப் பீடைகளும், துன்பதுரிதங்களும், ஒன்றின்பின் ஒன்றாக வந்துகொண்டேயிருந்தன. இவர்கள் அவ் வருத்தங்களை எல்லாம் மகா உதாரகுணத்துடன் ஏற்றுக்கொண்டார்கள்.

ஏனென்றால், அவை எல்லாம் தங்களை மகா உருக்கமான அன்புடன் நேசித்த யேசுநாதர் தங்களுக்கு அனுப்பிய ஆசீர்வதிக்கப்பட்ட சிலுவைகள் என்று அவற்றை மதித்தார்கள்.

தாங்கள் அனுபவிக்கவேண்டிய துன்பதுரிதங்களை, ஏலவே அறிவித்த மோட்ச அலங்காரியை இவர்கள் எப்போதும், தங்கள் மனக்கண்முன் வைத்துக்கொண்டதுமல்லாமல், தங்களுக்குத் தப்பாது மோட்சம் கிடைக்குமென்று அத்திருத்தாயார் கொடுத்த வாக்கினால் இவர்கள் இருதயம் பேரானந்தத்தினால் நிரம்பிப்போயிருந்தது. அத்திருத்தாயாருடைய அதிமதுரமான வாக்கியங்கள், இவர்களுடைய செவிகளில் இடைவிடாது தொனித்துக்கொண்டிருந்தன.

பாடசாலையில் வகுப்புகள் முடிந்தபிற்பாடு மூவரும், லூசியா வீட்டிலிருந்த கிணற்றுக்குப் பின்பக்கமாக அல்லது கபெக்சோ என்ற அந்தத் தனிமையான குகைக்குள், ஒருங்குகூடிச் சம்பாஷிப்பார்கள்.

சகலத்தையும், சகலரையும் எட்டத்தில் விட்டுவிட்டு மூன்றுபேரும் ஒருமிக்கக் கூடியிருந்து, செபித்துத் தேவனுக்காகத் துன்பதுரிதங்களை அனுபவிக்க ஒருவர் ஒருவரை ஊக்கப்படுத்திக்கொண்டுவந்தார்கள். இந்த மூன்று சின்ன ஆத்துமங்களும், அந்தக் குகைக்குள்ளிருந்து தாங்கள் கண்ட காட்சியின் மதுரித ஞாபகங்களை மீண்டும் மீண்டும் நினைவுகூருவார்கள். தங்கள் மனக்கண்கள்முன் ஆக்காட்சிகள் மீண்டும் தோன்றும்படி செய்வார்கள். தாங்கள் அனுசரித்து வரும்படியாக, பரலோகநாயகி பணித்த பரித்தியாகங்களைப் பற்றி மூவரும் கலந்து ஆலோசிப்பார்கள். தேவமாதா தங்களுக்குக் கொடுத்த வாக்குகளைப்பற்றி விசேஷமாக அவர் அறிவித்த இரகசியத்தைப்பற்றி இவர்களுக்குமாத்திரமன்றி, வேறு எவருக்கும் தெரியாத அந்த இரகசியத்தைப்பற்றிச் சல்லாபித்துக்கொள்வார்கள்.

5-ம் அதிகாரம்

பூலோக சம்மனசுகள் இருவர் பரலோகம் செல்லுகிறார்கள்-எப்போதும் ஆயத்தம்

1918-ம் வருஷத்தின் நத்தால் திருநாளுக்கு 2 நாளுக்கு முன், பிரான்சீஸ் மிகவும் கடுமையான நோய்வாய்ப்பட்டான். "ஸ்பானிய பெருந்தடிமல்" என்ற பயங்கரத் தொற்றுநோயானது, அத்தேசத்தில் இருந்து, ஐரோப்பிய நாடெங்கும் பரவிச் சில மாசங்களின்முன் முடிவான மகா யுத்தத்தில் மாண்டவர்களின் தொகைக்கு இன்னும் எண்ணிறந்தவர்களைச் சேர்த்து விடலாயிற்று.

போர்த்துக்கேயர் இந்தத் தொற்றுநோயினால், மற்றச் சாதியினரிலும் பார்க்கக் கூடுதலான கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். கோயில் மணிகள் எல்லாம் ஏறக்குறைய இடைவிடாது துக்கநாதம் செய்துகொண்டிருந்தன. சில இடங்களிற் பொதுச் சனருக்கு மிதமிஞ்சிய திடுக்காட்டம் செய்யாதிருக்கும்படியாகக் கோயில் மணிகளை அடியாமலே பிரேத அடக்கஞ் செய்துகொண்டுவந்தார்கள். அந்தக் கொள்ளைநோய், அந்தோனி சாந்துஸ் வீட்டாரையும், இன்னும் கூடுதலான கடுமையாக, மனுவல் பேதுரு மார்த்தோ வீட்டாரையும் தாக்கியது. மனுவல் பேதுரு மார்த்தோவைவிட மற்றவர்கள் எல்லாரும் ஒருவர்பின் ஒருவராய் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் விழுந்ததால் மனுவல் பேதுரு அவர்கள் எல்லாரையும் சில அயலார் உறவினர்களுடைய உதவியுடன் தான் அறிந்தளவும் இயன்றமட்டும் பராமரித்து வந்தான். மனுவல் பேதுரு முதல் முதல் பராமரிக்கவேண்டி வந்தது பிரான்சீஸ் என்பவனையே. காட்சிகண்ட மூவருள்ளும், அதிகம் நன்றாக அறியப்படாதவனும், ஒருவகையில் அதிகம் மறந்துவிடப்பட்டவனும் பிரான்சீஸ் என்றே சொல்லலாம்.

திருச்சபை அதிகாரிகள் பத்திமா காட்சிகளைப்பற்றி அதிகாரமுறையில் விசாரணை நடத்தத் தொடங்கியபொழுது பிரான்சீஸ் ஏலவே மூன்று வருஷத்துக்குமுன் இறந்துவிட்-

டான். மூன்று வருஷம் போதியளவு நீண்டகாலமல்லவா? **"இறந்தவர் ஞாபகம் மறைந்திடும் விரைவில்"** எனப் போர்த்துக்கேய பழமொழி ஒன்று சொல்லும். காலம் மறைய மறைய அவனுடைய சாயலும் மறைந்துவிடலாயிற்று.

காட்சிகண்ட மூன்று பிள்ளைகளுடைய பெறுபேறுகளையும் ஒப்புநோக்குமிடத்துப் பிரான்சீஸ் அவற்றில் ஆகக் குறைந்தவன் எனச் சிலர் எண்ணுதல் கூடும். அப்படி அவர்கள் எண்ணுவதற்கு நியாயம் என்னவென்றால் காட்சியின்போது பிரான்சீஸ் மற்றவர்களுக்குப்பின்னணியில் வைக்கப்பட்டான் என்பதும், தேவதாயார் அவனுக்கு நேரே ஒரு வார்த்தையும் சொல்லவில்லையென்பதும், இயாசிந்தாவைப்போலும் அவன் தேவதாயாரின், அன்பு சொரியும், வார்த்தைகளைக் கேட்கவில்லை என்பதுமேயாகும். ஆனால் சருவேசுரனுடைய வரங்கள் எப்போதும் எங்களுடைய பெறுபேறுகளுக்கு அளவாகத்தான் கொடுக்கப்படுகின்றனவா? எங்களுடைய பெறுபேறுகளைப் பறுவாய்பண்ணாது, சருவேசுரன் தமது அளவிறந்த இரக்கத்தினால் வரங்களை இலவசமாய் அளிப்பதில்லையா? மிகவும் சிறிய பிள்ளையாக இருந்த பிரான்சீஸ் காட்சியைப்பற்றி, எவ்வித சாட்சியமும் கொடுக்க முடியாதவனல்லவா? ஆதலால் அவன் தேவமாதாவின் வார்த்தைகளைக்கேட்கவேண்டும் என்ற அவசியம் ஏற்படவில்லை. இவன் தனக்குக் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்த மோட்ச அலங்காரத்தை, ஒருவாறு மட்டிட்டு அறிந்துகொள்ளும்படி **இவன் தேவதாயாரைக் கண்டதே போதும்.**

மற்றவர்களுக்குப்போலவே தேவதாயார் இவனுக்கும் தம்மைக் காண்பித்திருக்கிறார். மூவருள் அத்திருத்தாயார் முதற்தேடிவந்து பரலோகத்துக்கு அழைத்துப்போனது இவனையேயாகும். சருவேசுரனுடைய அர்ச்சியசிஷ்டர்களின் வரிசையில், இவனும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குக் கூடுதலான தகமை உடையவனாயிருந்தபடியாலும் தேவ திருமுக தரிசனையைக்கண்டு களிகூருவதற்கு இவன் கூடுதலான ஆயத்தமாக இருந்தபடியாலும்தான், முதல்

முதல் அழைக்கப்பட்டான் என்றும் சொல்லுதல் பொருந்தாதா? மேலே கூறப்பட்ட சகல சம்பவங்களினாலும், பிரான்சீசுடைய சகோதரியும், மைத்துனி லூசியாவும், எவ்வளவு பிரமாணிக்கமும் பயபத்தியும், பரித்தியாகம் புரிவதில் உதாரகுணமும் உள்ளவர்களாய் இருந்தார்களோ, அவ்வாறே இவனும் இருந்தான் என்பது வெளிப்படை. தன் சகோதரியைப்போலும் உள்உணர்ச்சிகளை வெளியடையாளங்களால் அதிகமாகக்காட்டும் குணம் இல்லாதவனாயினும், விசேஷமாகக் காட்சிகளின் பிற்பாடு இவன் வேகரமான பயபத்தியிற் குறைந்தவனல்ல. லூசியா, இயாசிந்தா என்பவர்களைப் போலவே இவனும் செபம்செய்து, பாடுபட்டு இவர்கள் குறிப்பிட்ட பரித்தியாகங்களையும் அனுசரித்துவந்தான். பல தடவைகளிற் பரித்தியாக விஷயத்தில் இவனே முற்பட்டு முதல் முதல் காரியத்தைத் தொடக்கிவிடுவான். அது மட்டுமா? சில விசேஷமான பரித்தியாகங்களைப் புதிதாகக் கண்டுபிடித்தவனும் இவனேயாம்.

லூசியாவுடைய தொட்டதாய் இம்மூன்று பிள்ளைகளையும் தனது வீட்டில், “**மதோதகம்**” அதாவது தேனும் நீரும் கலந்த ஒரு பானம் பருகும்படி அழைத்திருந்தாள். அப்பான பாத்திரத்தைப் பிரான்சீசுக்குத்தான் முதற் கொடுத்து அதைப் பருகும்படி சொன்னாள். இவன் அதைத் தனது சகோதரியிடம் கொடுத்து, நீ தான் முதற் பருகு என்று சொல்லிவிட்டு, மெல்ல அவ்விடத்தைவிட்டு நழுவிவிட்டான். இவன் அங்கிருந்தால் தன்னை நெருக்கப் போகிறார்களே என்று எண்ணியே அப்படிச் செய்தான்.

கடைசியாக, இரண்டு மைத்துனிமாரும் தொட்ட தாயிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, கிணற்றுக்குப் பின்புறமாகத்தான் பிரான்சீஸ் இருப்பான் என்று எண்ணி அங்கு ஓடிப்போனார்கள். உள்ளபடி இவன் அங்கிருப்பதைக்கண்டு நீ ஏன் மதோதகம் பருகவில்லை. தொட்டாச்சி உன்னைக் கூப்பிட்டுப் பார்த்தாலும் நீ உனது தலைக்கறுப்புத்தானும் காட்டவில்லை என்றாள் லூசியா.

ஏனென்று சொல்லுகிறேன் கேளுங்கள். அந்தப் பான பாத்திரத்தை நான் கையில் எடுத்தபொழுது, எங்கள்

ஆண்டவருக்கு இந்தப் பரித்தியாகத்தை ஒப்புக்கொடுக்கும் எண்ணம் எனக்கு வந்துவிட்டது ஆனபடியால்தான் நான் இங்கு தப்பி ஓடிவந்தேன் என்றான் பிரான்சீஸ். இந்தப் பாலகன் மற்றவர்களிலும்பார்க்க, நன்றாகச் செபம் செய்யவும், பிறருக்காகக் கஷ்டங்கள் அனுபவிக்கவும் அறிந்திருந்தான். இந்தக் குணத்தைத் தெளிவாகக் காண்பிக்கும் ஒரு சம்பவம் உண்டு.

மனுவல் பேதுரு மார்த்தோவுக்குச் சொந்தமான ஒரு சப்பின் மாத்தோப்பு, “வர்சேயா” என்ற வெளியில் இருந்தது. இந்தத் தோப்புக்கு ஒருநாட் பிள்ளைகள் மூவரும், தங்கள் ஆடுகளை மேய்ச்சலுக்குச் சாய்த்துக்கொண்டு போயிருந்தார்கள். அந்தத் தோப்பின் இரண்டு அந்தங்களிலும் பயிர்ச்செய்கை பண்ணப்பட்ட காணிகள் இருந்தன. ஆதலால் அக்காணிகளில் ஆடுகளுக்கு வெகு கவர்ச்சி உண்டு பண்ணும் இலைகள் நிறைந்து போயிருந்தன. ஆனபடியாற்தான் அந்தத் தோப்பின் ஒரு அந்தத்தில் தனது மைத்துனியும் மச்சானும், மறு அந்தத்திற் தானும்காவல் செய்யும்படி லூசியா சொன்னாள். ஆனால், லூசியாவை விட்டுப் பிரிய இயாசிந்தாவுக்கு மனமில்லாமல். “பிரான்சீஸ், அங்கே போகட்டும்; நான் உன்னோடுதான் நிற்கப்போகிறேன்” என்றாள்.

எப்போதும் மற்றவர்களுக்குத் தொண்டுசெய்வதற்குத் தன்னை ஒப்புக்கொடுக்கப் பிரான்சீஸ் ஆயத்தம் உள்ளவன். தன் சகோதரியிலும்பார்க்க அதிகம் நீதி நியாயத்துடன் நடக்க அறிந்தவன். இவன் லூசியாவை நோக்கி: நானும் உங்களுடன் நிற்கத்தான் விரும்புகிறேன். ஆனால் இந்தப் பரித்தியாகத்தை நான் பாவிகளுக்காக ஒப்புக்கொடுப்பேன் என்று சொல்லிவிட்டு, அவர்களை விட்டுப் பிரிந்து சிறிதும் தாமதியாமல், சப்பின் மாத் தோப்பைக் கடந்து மறுபக்கத்திற்குச் சென்று தான் காவல் செய்ய வேண்டிய இடத்தை அடைந்தான்.

சற்றுவேளைக்குப் பின் லூசியா தனது மைத்துனனில் இரக்கங்கொண்டு, அவன் தனிமையாக இருப்பதினால் அலுப்பு அடைவானே என்று அஞ்சி அவனுடன்போய் நிற்

கும்படி இயாசிந்தாவைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். உடனே இயாசிந்தா அங்கு ஓடிப்போனாள். போய்ப்பார்த்த விடத்தில் பிரான்சீஸ் அங்கு இல்லாததைக்கண்டு தன்னுடைய பெலன் எல்லாங்கூட்டிப் பிரான்சீஸ், பிரான்சீஸ் என்று ஓலமிட்டுக் கூப்பிட்டாள். ஒரு மறுமொழியுமில்லை. இயாசிந்தா எங்கிப்போய்ப் பிரான்சீசை எங்கும் தேடிப் பார்த்தாள். ஒரு இடத்திலும் காணாதபடியால் அவள் மிகவும் பயந்து, லூசியாவிடம் திரும்பிவந்து:

"ஐயோ! பிரான்சீஸ் எங்கேயோ வழிதப்பிக் காணாமற் போய்விட்டானே" என்றாள். "நீ இங்கே நில், நான் அவனைத் தேடிப்பார்க்கப்போகிறேன்" என்று சொல்லிவிட்டு, இவளும் தேடியும் அவனைக் காணவில்லை. இவள் கூப்பிட்ட குரலுக்கும் ஒரு மறுமொழியும் இல்லை. கடைசியாக ஏதோ ஒரு வகையாக அவனை லூசியா கண்டுபிடித்துவிட்டாள், ஒரு சுவர் மறைவிலே தலை நிலத்திற்படத் தெண்டனிட்டு, முழந்தாளில் அவன் இருப்பதை லூசியா கண்டாள். அவன் உள்ளபடி செபத்தில் மூழ்கிப்போயிருந்தான்.

தலை நிலத்திற் படத் தெண்டனிட்டு முழந்தாளிலிருப்பதை அவள் கண்டாள்.

லூசியா கிட்டப்போய் அவன் தோளிற் தொட்டாள். அவன் ஆழ்ந்த நித்திரையில் இருப்பவன்போல விழித்து எழுந்தான்.

நீ தேவனைப்பார்த்து மன்றாடிக்கொண்டா இருந்தாய்?

ஆம், சம்மனசு சொல்லித்தந்த செபத்தைச் சொல்லிவிட்டு, அதன் பின்பு **நான் நினைத்துக்கொண்டிருந்தேன்.** (நான் தியானம் செய்துகொண்டிருந்தேன் என்பதுதான் அவனுடைய கருத்து.)

உன் சகோதரி உன்னைக் கூப்பிட்டது உனக்குக் கேட்கவில்லையா? அவள் வலுசத்தமாய் உன்னைக் கூப்பிட்டாளே?

"இல்லை எனக்கொன்றும் கேட்கவில்லை."

இந்தப் பத்துவயசுள்ள சின்னஞ் சிறிய மனுஷன் **நினைக்க** அறிந்துவிட்டானே. அதாவது தியானயோகத்தில் அமிழ்ந்திவிட்டான். இயல்பிலே பிரான்சீஸ் தியானயோகம் செய்யும் மனச்சார்புடையவன். இவன் இருந்த இடத்துக்கு இரண்டு மூன்று யாருக்கு அப்பால் இருந்து இவனைக் கூப்பிட்டாலும், அதைக் கேளாது தேவனில் மூழ்கிப்போயிருப்பான். இது பிரான்சீஸ் அடைந்த ஒருவகையான பரவச நிலையல்லவா? சில சமயங்களிலே, பிரான்சீஸ் தனது கூட்டாளிகளான இருவரையும் விட்டுப்பிரிந்து, ஒரு மூலையிற் போயிருந்து தனியே செபம் செய்துவருவான். இவர்கள் அவனைக் கூப்பிட்டால் ஒரு கற்குவியலின் பிறகே அல்லது அடர்ந்த செடிகளின் மறைவிலே இருந்துகொண்டு, மறுமொழி சொல்லுவான்.

"உன்னோடுகூடச் செபமாலை சொல்ல நீ எங்களை ஏன் கூப்பிடவில்லை."

தனிய இருந்து செபம் சொல்வதுதான் எனக்குச் சந்தோஷம். அப்படிச் செய்வதால் நான் **நினைக்கலாம்** (தியானம் செய்யலாம்). எவ்வளவோ பாவங்களினால் ஆண்டவர் வியாகுலப்படுகிறார். அவருக்கு ஆறுதல் உண்டுபண்ணலாம்.

நரகத்தின் காட்சி இவனுடைய மனசில் எவ்வளவோ வலிமையாக ஊன்றிப் பதிந்திருந்தபடியினால், இவன் அதைப் பற்றித்தான் தியானித்துக்கொண்டான்போலும். இந்த மூன்று சிறுவர்களும் காட்சிகண்டபொழுது, மூன்றுவிசை இவர்கள் விசேஷித்த பிரகாசம் ஒன்றிலே மூழ்கி, அதிலே

தேவனின் மகிமைப் பிரதாபத்தைக் கண்டார்கள் அல்லவோ? ஆனபடியாற் தேவ சமுகத்தைப்பற்றி, இவன் அடிக்கடி பேசியும் வருவான். **"நாங்கள் கண்ட மகா பிரகாசம் தேவப்பிரகாசந்தான். நாங்கள் அவரில் மூழ்கியபொழுது, நெருப்பில் மூழ்கியதுபோலானேம். ஆனல் நாங்கள் எரியவில்லை."**

"தேவன் இருப்பது எப்படி? அவர் இருக்கும் தன்மையை நாங்கள் சொல்லவே முடியாது. ஆனல் அவர் துக்கமாயிருப்பவர்போலக் காணப்பட்டாரே. அது எனக்குப் பெரும் மனவேதனையை உண்டாக்கினது. நான் அவருக்கு ஆறுதல் உண்டுபண்ணக் கூடியதாயிருந்தாலோ!

உலகத்தவர்களுடைய பாவங்களின் நிமித்தம் தேவனுக்கு ஆறுதல் உண்டுபண்ணவேண்டும் என்பதுவே பிரான்சிசின் இடைவிடாத எண்ணம் ஆயிற்று.

ஒருநாள் மூன்றுபேரும் மேய்ச்சல் நிலத்துக்கு வந்தவுடன், பிரான்சீஸ் ஒரு கற்பாறையின் உச்சத்தில் ஏறி நின்றுகொண்டு நீங்கள் இங்கே வரவேண்டாம். என்னைத் தனியே விட்டுவிடுங்கள் என்ருன்.

லூசியாவும் இயாசிந்தாவும் வண்ணாத்திப்பூச்சிகளைப் பிடித்து விளையாடுவதிலே நேரத்தைக் கழித்துக்கொண்டிருந்தார்கள். ஆனல் அப்பூச்சிகளைப்பிடித்தாலும், உடனுக்குடனே மீண்டும் பறக்கவிட்டு விடுவார்கள். அப்படிச் செய்வதால் அவைகளைத் தங்களுடன் வைத்திராத பரித்தியாகத்தைச் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். மத்தியானப் போசனவேளையில் மாத்திரம் இவர்கள் பிரான்சிசை நினைவுகூர்ந்து அவனைக் கூப்பிட்டார்கள்.

"நீ என் சாப்பிடவரவில்லை."

"எனக்கு வேண்டாம், நீங்கள் சாப்பிடுங்கள்."

"செபமாலை சொல்ல வரவில்லையா"

"செபமாலைக்கு வருவேன், நேரமானவுடன்வந்து என்னைக் கூப்பிடுங்கள்."

இரண்டாம்விசை கூப்பிட்டபொழுது, மற்றவர்களும் தன்னுடன் கற்பாறையில் ஏறியிருந்து, செபமாலை சொல்லும்படி கேட்டான் பிரான்சீஸ் ஆனல் இவன் இருந்த இடம் அவ்வளவு ஒடுக்கமாயிருந்தபடியால், மூன்றுபேரும் ஒருமிக்க முழங்காலில் இருக்க அந்தக் கற்பாறை நுனியில் இடமில்லாதுபோயிற்று.

"இவ்வளவு நெடுநேரமும் நீ அங்கே என்ன செய்கிருய்?

"எவ்வளவோ பாவங்களினல் உள்ளம் நொந்துகொண்டிருக்கும் ஆண்டவரைப்பற்றி நினைக்கிறேன். ஐயையோ! நான் அவருக்கு ஆறுதல் உண்டுபண்ணக்கூடுமானலோ?" இந்த நற்கருத்தோடு இவன் நாள் முழுவதையும் ஒன்றும் சாப்பிடாமலே செலவிட்டான்.

"நான் சம்மனசைக்கண்டு மிகவும் ஆனந்தங் கொண்டேன். தேவமாதாவைக்கண்டு அதிலும் கூடிய ஆனந்தங் கொண்டேன். ஆனல் தேவமாதா காண்பித்த பிரகாசத்திற் தேவனைக் கண்டதினல்தான் நான் எல்லாத்துக்கும் மேலான ஆனந்தங் கொண்டேன்" என்பான் பிரான்சீஸ்.

"ஆ! நான் எவ்வளவாக ஆண்டவரை நேசிக்கிறேன். ஆனல் எங்கள் பாவத்தின் நிமித்தம் அவர் எவ்வளவோ துக்கமுடையவராயிருக்கிருரே! இனிமேல் ஒரு பாவமும் செய்யாது இருப்போமாக" என்றும் இவன் சொல்வான்.

1917-ம் வருஷம் கார்த்திகை மாசத்தில் ஒருநாள், லூசியா, பிரான்சீசை நோக்கி: உனக்கு எது அதிகம் பிரியம். எங்கள் ஆண்டவருக்கு ஆறுதல் உண்டுபண்ணுவதா? அல்லது ஆத்துமாக்கள் நரகத்தில் விழாதபடி பாவிகளை மனம் திருப்புவதா? என்று கேட்டாள். இரண்டிலே ஒன்றைத் தெரியவேண்டும் என்ருல், "நான் ஆண்டவருக்கு ஆறுதல் உண்டுபண்ணுவதைத்தான் அதிகம் விரும்புவேன். சென்ற மாசம் தேவமாதா எங்களுக்குக் காட்சிகொடுத்தபொழுது, எங்கள் ஆண்டவருக்கு எவ்வளவோ துரோகங்கள் புரியப்படுகின்றன. அவருக்கு ஒருவரும் மனேபீடை உண்

டாக்கப்படாது என்று சொன்னாரே. அப்படிச் சொல்லும்பொழுது அத்திருத் தாயாருடைய முகத்தில் தோற்றின துக்கக் குறிகளை நீ அவதானிக்கவில்லையா? நான் ஆண்டவருக்கு ஆறுதல் சொல்லப் பெரிதும் ஆவலுடன் இருக்கிறேன். ஆனால் அதன்பின்பு, பாவிகள் அவருக்குத் துரோகம் செய்யாதிருக்கும்படி, அவர்களை மனந்திருப்பவும் ஆவல் உள்ளவனாய் இருக்கிறேன்” என்றான் பிரான்சீஸ்.

இவன் நோய்வாய்ப்பட்ட பிற்பாடு, இன்னொருவிசை இவன் சொன்னது என்னவானால்: “ஆண்டவர் எப்போதும் இப்படித்தான் துக்கம் உள்ளவராய் இருக்கிறாரோ? அவர் துக்கத்துடன் இருப்பதைக் காணும்பொழுதெல்லாம் நான் தாங்கரிய மனோவேதனைப்படுகின்றேன். என்னால் இயன்ற பரித்தியாகங்களை எல்லாம் நான் அவருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இனிமேல் என்னைக் காணவரும் யாத்திரிகளுக்கு ஒளித்து ஓடமாட்டேன். அவர்களைக் கண்டு பேசுவதால் உண்டாகும் பரித்தியாகத்தை நான் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்பேன்.

முதற் காட்சியின்போது இவன் விரைவில் மரித்து, மோட்சத்துக்குப் போவான் என்று, தேவதாயார் சொன்னது லூசியாவால் இவனுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் அநேக செபமாலைகளை இவன் சொல்லவேண்டுமென்றும், தேவமாதா லூசியாவின் மூலமாகவே, இவனுக்கு அறிவித்திருந்தார். அதைக் கேட்டதும் இவன் ஆனந்தபரவசம் கொண்டவனாய்ப் “பரிசுத்த தேவதாயே, செபமாலை சொல்வதா? ஆம், உமக்குப் பிரியமான அளவுக்கு, நான் அநேகம் விசை செபமாலை சொல்லுவேன்” என்று வாக்குப்பண்ணினான். காட்சிகளின் பின்பு, இவன் இந்த உலகத்திலே இருந்த பதினெட்டு மாசத்திலே, ஒருநாளாவது செபமாலை ஓதாமல் விடவேயில்லை. இந்தச் செபமாலைத் தோத்திரத்தைப் பரலோக இராக்கினிக்கு இவன் ஒவ்வொருநாளுமே செலுத்திவந்தான். ஒவ்வொருநாளும் இரண்டு விசையாவது இவன் நூற்றைம்பத்துமூன்று மணிச் செபமாலை சொல்லிவருவான். சில நாட்களில் இன்னும் கூடச்சொல்லுவான். சிலவேளை தன் சகோதரி அல்லது லூசியா தன்

னோடுகூடச் செபமாலை சொல்லும்படி கேட்பான். ஆனால், போதியளவு இவன் அடிக்கடி தனிமையாகவே செபமாலை சொல்லுவான்.

பல தடவைகளில் மற்றவர்கள் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது, இவன் அவர்கள் கூட்டத்தை விட்டுவிலகித் தனிமையாக, மௌனமாய் உலாத்திக்கொண்டிருப்பான்.

“ஏன் நீ இப்படிச் செய்கிறாய்?”

மறுமொழி சொல்லுவதற்குப் பதிலாக, அவன் தன் கைகளை உயர்த்திச் செபமாலையைக் காட்டுவான். ஒன்றுமே பேசான். இப்போ வந்து விளையாடு, பிறகு நாங்கள் மூன்று பேரும், ஒருமிக்கச் செபம் சொல்லுவோம். **பிறகா?** காட்சி கண்டதின்பின்னும் பிறகா? நான் அநேக செபமாலைகள் சொல்லவேண்டுமென்று, தேவமாதா சொன்னதை நீங்கள் மறந்து போனீர்களா?

உபத்திரவங்களாகிய உலையிற் புடமிடப்படல்

பிரான்சீஸ் ஸ்பானிய தடிமலினாற் பீடிக்கப்பட்டு, அது காரணமாகச் சுவாதத் தெண்டலினால் வருந்தியபொழுது மரணம் தனக்கு வருமென எவ்வளவு நிச்சயமாக இருந்தானோ அவ்வளவாகத் தேவசித்தத்துக்குப் பணிந்த மனசுடனுமிருந்தான். முதற் பதினைந்துநாளும் இவன் தனது படுக்கையைவிட்டு அசைய முடியாதிருந்தான். ஆனால் காய்ச்சல் மகா உக்கிரமமாகக் காய்ந்துகொண்டிருக்கும்பொழுதுதானும் இவன் செபமாலை சொல்லுவதை மறந்துவிடவேயில்லை.

இவனுடைய பெலவீனம் அவ்வளவாக இருந்தபடியால் இவன் சில சமயங்களில் ஐந்து காரணிக்கங்களையும், ஒரேவிசையிற் சொல்லக்கூடாததாக இருந்தது. அதனால் இவன் மிகவும் பொறுமையுடன் அதைப்பற்றித் தனது தாய்க்குச் சொல்லித் துக்கப்படுவான். எல்லாரையும்போல ஐம்பத்துமூன்று மணிச் செபத்தை முழுவதும் தன்னாற் சொல்லிமுடிக்க முடியவில்லையே என்று மனம்நொந்து

வருந்தினான். ஒலிம்பியா தனது அருமைக் குழந்தைக்கு ஆறுதல் சொல்லி, செபமாலை சொல்ல இவனுக்கு உதவி பண்ணியது மாத்திரமல்ல; வாயாற் செபம் சொல்லமுடியாதபடியினால் மனதினாற் செபிப்பதிற் தேவமாதா திருப்திபடுவா என்று சொல்லி இவனைத் தேற்றினாள்.

ஒவ்வொரு காரணிக்கத்தின் முடிவிலேயும், அதாவது ஒவ்வொரு தசபாகத்தின் முடிவிலேயும் சொல்லும்படி தேவமாதா படிப்பித்த செபத்தை, தாய் தனக்காகச் சொல்லும்படியாகப் பிரான்சீஸ் ஒலிம்பியாவைக் கேட்டுக்கொண்டான். படுக்கையைவிட்டு எழும்பக்கூடிய நிலைமை இவன் அடைந்த பின்னும் மிகவும் பெலவீனம் உள்ளவனாய் இருந்தபடியினால் தன் அறைக்குள்ளேயே இருந்துவந்தான்.

போர்த்துக்கால் தேசத்தில். மாரிகாலத்தில் இடையிடையே சம்பவிப்பதுபோலச் சில வசதியான கால நிலையுடன் கூடிய நாட்களில், இவன் கோவாடி இறியாமட்டும் மெல்ல மெல்ல நடந்துபோகவும் பிரயாசப்படுவான்.

இப்பாலியனில் அனுதாபம் கொண்டுள்ளவர்கள் இவனை வழியிற் கண்டால், இவனுக்கு இனிமேற் சீக்கிரம் சுகம்வந்துவிடுமென்று சொல்வார்கள். ஆனால் இவனோ எப்போதும் இல்லை; நான் சுகப்படமாட்டேன் என்றுதான் திடாரிக்கமாகச் சொல்லிவருவான். இவனுடைய சொல்லுறுதியும் இவன் காண்பித்த நிச்சயமான மனப்பான்மையும் பரலோகமாகிய தன் சொந்த நாட்டைப்பற்றி இவனுக்கு இருந்த அந்தரங்க ஆசையும் பிறர் மனசிலும், ஆழமான நற்பதிவை உண்டுபண்ணின. ஒருநாள் பிரான்சீசுடைய தொட்டதாய் இவனுக்குச் சுகம்கிடைக்கும்படியாகத் தேவமாதாவுக்குத் தான் செய்யவிருக்கும் நேர்த்திக்கடன் ஒன்றைப்பற்றி இவன்முன் பேசியவிடத்து :-

" அது ஒன்றாலும் பயனில்லை. தொட்டாச்சி, சுகம் கிடைக்கும் வரப்பிரசாதம் எனக்கு அருளப்படாது " என்று இடையிற் குறுக்கிட்டுச் சொன்னான்.

மாசி மாதம் இவனுக்கு நோய் இரட்டித்தபடியால், மீண்டும் படுக்கையை நாடவேண்டியவனானான். இயா

சிந்தா இவன் பக்கத்தில் நெடுநேரம் செலவிடவும், இவனுக்குத் தைரியம் உண்டுபண்ணி, இவனுக்குத் துணையாக இருக்கவும் விரும்பினாள்.

இவனை அடிக்கடி காணவந்த லூசியா சொல்லியிருக்கிறபடி பிரான்சீஸ் மகாவீரியம் நிறைந்த தைரியத்துடன் தனது வேதனைகளை அனுபவித்தான். வருத்தப்படுவதால் முறுமுறுப்புக்கொள்ளுகிறான் என்பதைக்காட்டும் ஒருசிறு பெருமூச்சுத்தானும் இவனிடத்திலிருந்து புறப்படவேயில்லை. என்னத்தைக் கொடுத்தாலும் மூச்சுவிடாமல் வாங்கிச் சாப்பிடுவான். இன்ன இன்ன போசனம் இவனுக்கு அதிகம் பிரியம், அல்லது இன்ன இன்ன மருந்து அதிகம் வெறுப்பு என்பதை எவராலும் கண்டுபிடிக்க முடியாமல இருந்தது. ஒருநாள் லூசியா இவனை நோக்கி : பிரான்சீஸ், நீ அதிகம் வேதனைப்படுகிறாயா ? என்றாள்.

ஆம், ஆனால் அவைகளையெல்லாம் யேசுநாதருடையவும், கன்னிமரியாயுடையவும் நேசத்துக்காகப் பணிவுடன் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

நோயும் பாயுமாகக்கிடந்த நாட்களிலும், இவன் தனது அரையிற் கட்டியிருந்த தபக்கருவியாகிய கயிற்றை அவிழ்த்துவிடவில்லை. கடைசியாக ஒருநாள், அதை அவிழ்த்து லூசியாவிடம் கொடுத்துவிட்டான். ஆச்சி அதைக்காணமுன் கொண்டுபோய்விடு, இனிமேல் அதைக் கட்டிக்கொண்டிருக்க என்னால் முடியவே முடியாது.

நித்திய மோட்சத்துக்கு நியமனம் செய்யப்பட்டவனின் பாக்கியமான மரணம்

இப்படிப் பிரான்சீஸ் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும் நாட்களில், இயாசிந்தா லூசியாவுக்கு ஆளனுப்பித் தன்னையும் சகோதரனையும் வந்துகாணும்படி கேட்டாள். ஏனென்றால் லூசியாவுக்கு, இவள் ஒரு இரகசியம் சொல்லவேண்டியிருந்தது. லூசியா வந்து, மூன்று பிள்ளைகளும் மாத்திரம் தனியே நோயாளியின் அறையில் இருக்கும்பொழுது, இயாசிந்தா சொல்லுவாள்:

“தேவமாதா எங்களை வந்து கண்டிருக்கிறாள். விரைவிற் தாம் வந்து பிரான்சீசை மோட்சத்துக்குக் கூட்டிக்கொண்டுபோவதாக அவர் எங்களுக்குச் சொல்லியிருக்கிறாள். இன்னும் வேறு பாவிகளை மனந்திருப்ப எனக்கு விருப்பமோ என்று என்னைக் கேட்டார். நான் “ஆம்” என்றேன். நான் ஒரு வைத்தியசாலைக்குப் போவேனென்றும், அங்கு மிகவும் கடுமையான வாதை வேதனைகளை அனுபவிப்பேனென்றும் எனக்கறிவித்தார். ஆனால் நான் அவைகளை எல்லாம் பாவிகள் மனந்திரும்பும்படியாகவும் மரியாயின் மாசற்ற இருதயத்துக்குச் செய்யப்படுகிற, நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாகவும், யேசுநாதருடைய நேசத்துக்காகவும் பொறுமையுடன் தாங்கிக்கொள்ளவேணுமென்று வற்புறுத்தியிருக்கிறாள்.

இதற்கிடையில், எங்கள் பாலிய நோயாளியின் வருத்தம், வரவர அதிகரித்தது. பசியென்பது அறவே அற்றுப் போனது. நாளுக்கு நாள் பெலன் குன்றிக்கொண்டு வரலாயிற்று. ஒருநாட் காலமே மெத்த வெள்ளெனப் பிரான்சீசுடைய சகோதரி, லூசியாவிடம் ஓடிப்போய், “**வா! வா! சுறுக்கு வா!** பிரான்சீசுக்கு வருத்தம் கடுமை, அவன் உனக்கு ஏதோ சொல்லவேண்டுமாம்.”

லூசியா சீக்கிரமாய் உடுத்திக்கொண்டு பிரான்சீசிடம் ஓடிப்போனாள். அப்போது இவன் தாயையும் தன் சகோதரர்களையும் அறைக்கு வெளியே போகும்படியும் தான் லூசியாவுக்கு ஒரு இரகசியம் சொல்லவேண்டுமென்றும் மன்றாடிக் கேட்டான். அவர்கள் போனபிறகு நான் இன்றைக்குப் பாவசங்கீர்த்தனம் செய்து முதற்சற்பிரசாதம் பெறவேண்டும். அதன்பின் இறந்துபோவேன். நான் ஏதாவது பாவம் செய்ததை நீ கண்டிருந்தால் எனக்கு அவற்றைச் சொல்லு. இயாசிந்தாவும் நான் பாவம் செய்ததைக் கண்டிருந்தால் அவற்றை எனக்கு அறிவிக்கும்படி அவளிடம் கேள்.

“வீட்டிலிருக்கும்படி உன் தாய் சொல்லியிருக்கவும் நீ அதை மீறி அமைச்சலீனம் காட்டிப்போட்டாய்.” என்னைக் காணவரும்படி அல்லது நீ ஒளித்திருக்கும்படி வீட்டை விட்டு ஓடினாய். “அதுமெய் நான் அப்படி அமைச்சலீனம் காட்டித்தான்போட்டேன். இப்போது நீ போய் இயாசிந்தாவைக்கண்டு அவளுக்கு ஏதாவது நினைப்பாய் இருக்கிறதோவென்று கேள்.” இயாசிந்தாவைக் கேட்டவிடத்துச் சற்று நேரம் யோசித்துவிட்டுச் சொல்லுவாள் :-

தேவமாதா எங்களுக்குக் காட்சிகொடுக்கமுன் பிரான்சீஸ் ஒரு சின்ன வீணை வாங்குவதற்கு அப்புவிடம் இரண்டு சல்லி களவு எடுத்தான் என்று அவனுக்குச் சொல்லு. “பொலெயிரோஸ்” ஊர்ப் பையன்களின் மீது, அல்புஸ்திறேல் பிரிவின் பிள்ளைகள் கல் எறிந்த பொழுது இவனும் கல் எறிந்தான்.” சகோதரி சொன்னவற்றையெல்லாம் பிரான்சீஸ் கேட்டுக்கொண்டு இருந்துவிட்டு, இந்தப் பாவங்கள் எல்லாவற்றையும் நான் ஏற்கனவே பாவசங்கீர்த்தனத்திற் சொல்லிப்போட்டேன். ஆனால் இன்னும் ஒருவிசை நான் அவற்றைப் பாவசங்கீர்த்தனத்தில் அறிவிப்பேன். இந்தப் பாவங்களினால், ஆண்டவர் துக்கபட்டதுக்கு நான் காரணமாய் இருந்தேனே. நான் இனிமேற் சாகத்தான் வேண்டிவந்தாலும், இந்தப் பாவங்களைச் செய்யேன். நான் இப்போது மெத்த மனஸ்தாபப்பட்டு மனம்நொந்து வருந்துகிறேன்.

அப்படிச் சொன்னபின்பு இவன் கைகளை உயர்த்திக் கும்பிட்டு: “என் யேசுவே எங்கள் பாவங்களைப் பொறும்” என்ற செபத்தைச் சொன்னான். லூசியா, ஆண்டவர் என் பாவங்களைப் பொறுக்கும்படி நீயும் எனக்காக மன்றாடு. “ஆம்” நான் மன்றாடுவேன். ஆனால் ஆண்டவர் உனது பாவங்களை எல்லாம், பொறுத்தபடியினாற்தானே உன்னைச் சீக்கிரம் மோட்சத்துக்குக் கூட்டிக்கொண்டுபோக வருவதாக, தேவமாதா உனக்குச் சொன்னார். இப்போது நான் பூசைக்குப் போகிறேன். மறைந்திருக்கும் யேசுக்கிறீஸ்துநாதரிடம் உனக்காக மன்றாடுவேன். “கட்டளைச் சுவாமி எனக்குச் சற்பிரசாதம் கொடுக்கும்படியும் ஆண்டவருக்குச் சொல்லு.

"ஆம் ஆம் சொல்லுவேன்." லூசியா திரும்பிவந்தபொழுது பிரான்சீஸ் இயாசிந்தாவுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்ததைக் கண்டாள்.

"நான் சொன்னபடி மன்ருடினயா?"

"ஆம் மன்ருடினேன்."

மோட்சத்தில் நான் உனக்காக மன்ருடிக்கொள்வேன். அதன்பிறகு லூசியா தனது அலுவல்களைப் பார்க்கப்போனாள்.

சித்திரை மாசமுமாகிவிட்டது. ஒலிம்பியா தனது குழந்தையின் நிலைமை அவ்வளவு ஆபத்தானது என்று எண்ணவில்லை. ஆனபடியால், அவனுக்குப் பாவசங்கீர்த்தனத்தைமாத்திரம் கொடுக்கக் குருவானவரை அழைத்தாள். பாஸ்குக்கடமை தீர்க்கும் காலம் கிட்டிவிட்டது.

குருவானவர் வநது அவனுக்குப் பாவசங்கீர்த்தனம் கொடுத்தபின், அடுத்தநாட் காலமே யேசுக்கிறீஸ்துநாதரை அவனுக்குக் கொண்டுவருவதாகச் சொல்லிவிட்டுப் போனர். இதுதான் அவனுடைய முதற் சற்பிரசாதமும் கடைசிச் சற்பிரசாதமும் ஆயிற்று. ஆண்டவர் தன்னிடம் வரப்போகிருர் என்றதை நினைத்து நினைத்துப் பிரான்சீஸ் ஆனந்தக்கடலில் அமிழ்ந்திப்போயிருந்தான். கடுமையான நோயாளியாக இருந்தபடியினல் அவன் உபவாசமில்லாது சற்பிரசாதம் பெறலாம். ஆயினும் பாவிகளுக்காகக் கடைசியாக, ஒரு பரித்தியாகம் செய்ய விரும்பி நடுச்சாமந் தொடங்கி, சற்பிரசாதம் உட்கொள்ளும்வரையும் உபவாசமாயிருக்கத் தாயிடம் உத்தரவு பெற்றுக்கொண்டான்.

குருவானவர் சற்பிரசாதம் கொண்டுவந்தவுடன் கட்டிலில் எழும்பி இருந்துகொண்டு தான் சற்பிரசாதம் பெறும்படி கேட்டான். ஏனென்ருல் அப்படிச் செய்வதுதான் ஆண்டவருக்கு மரியாதையாகும் என்பதை இவன் உணர்ந்தாண். ஆனல் அந்த உத்தரவு கிடைக்கவில்லை. சற்பிரசாதம் பெற்றபிற்பாடு பிரான்சீசுடையமுகம் ஆனந்தத்தால் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அவனுக்கிருந்த ஆனந்த மேலீட்டினல் அன்றைக்குத்தானே இன்னுமோர்முறை சற்

பிரசாதம் பெறமுடியாதோ என்று சகோதரியைக் கேட்டான். தனது மரணம் இதோ வந்துவிட்டது என்று இவன் நிச்சயமாயிருந்தாலும் சகோதரிக்கு அதை மறைக்கும்படியாகத்தான் அப்படிக் கேட்டானென்று எண்ண இடமுண்டு. உள்ளபடி மரணம் இதோ வந்துவிட்டது என்பதை இவன் நன்கு உணர்ந்தபடியாற்தான் இயாசிந்தாவுடனும் லூசியாவுடனும் இவன் மரணத்தைப்பற்றிப் பேசினன்.

இயாசிந்தா தனது சகோதரனை விட்டுப்பிரிய வேண்டுமென்று வியாகுலப்பட்டாலும் மோட்சத்திற் தனக்காக இன்னின்ன விஷயங்களைப்பற்றி மன்ருடவேண்டுமென இவனுக்குச் சிபாரிசு செய்தாள்.

"ஆண்டவருக்கும் தேவமாதாவுக்கும் என்பேரினலும் அநேக வந்தனங்களைச் சொல்லு. பாவிகள் மனந்திரும்பும்படி நான் எவ்வகையான பாடுகள்பட வேண்டுமென்றும் மரியாயின் மாசற்ற இருதயத்துக்குச் செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்காக நான் என்னென்ன பரித்தியாகங்கள் புரியவேண்டுமென்றும் அவர்கள் விரும்புகிருர்களோ அவைகளை எல்லாம் செய்ய ஆயத்தமென்று அவர்களுக்குச் சொல்லு."

பிரான்சீசுடைய இரண்டு கூட்டாளிமாரும் ஏறக்குறைய நாள் முழுவதையும் இவனுடனேயே செலவிட்டார்கள். தன்னல் இனிமேல் செபமாலை சொல்ல முடியாதபடியால் தனக்காக அவர்கள் இருவரும் செபமாலை சொல்லும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டான். இரவில் நெடுநேரத்திற்குப் பிற்பாடு இரண்டு சிநேகிதரும் பிரான்சீசுக்கு பிரியாவிடை சொல்லிவிட்டுப் போனர்கள். போகும்பொழுது "பிரான்சீஸ், நாங்கள் போய்வருகிறேம்" இன்றிரவுக்குத்தானே நீ மோட்சம் போனல் எங்களை மறந்துபோகாதே. என்ன? உனக்கு விளங்குகிறதா?" விளங்குகிறது; நான் மறக்கவேமாட்டேன். அதைப்பற்றிக் கிலேசம் வேண்டாம். அப்போது வந்தனம் பிரான்சீஸ் உன்னை மோட்சத்தில் மீண்டும் சந்திப்போம். "ஆம் மோட்சத்தில் மீண்டும் சந்திப்போம்" என்ருன் பிரான்சீஸ். அன்று பகல் இவனுடைய நோய் வர வரக் கடுமையாய் இருந்தது. ஆனல் இவன் சற்

பிரசாதம் பெற்றபிற்பாடு எவ்வித வேதனையும் அநுபவிக்கவில்லை.

அடுத்தநாள் அதாவது 1919-ம் வருஷம் சித்திரை மாதம் 4-ந் திகதி இவன் தன்னைச்சூழ நின்றவர்களெல்லாரிடத்திலும் விசேஷமாகத் தனது ஞானத்தாயிடத்திலும் தான் அவர்களுக்கு உண்டுபண்ணியிருந்த சகல மனவருத்தங்களுக்காகவும் அவர்களுக்கு எதிராய்ச் செய்திருந்த குற்றங்களுக்காகவும் மன்னிப்புக் கேட்டான். காலமே ஆறுமணியளவில் இவன் தனது தாயைக் கூப்பிட்டு **“ஆச்சி! அங்கேபாரேணை ஆச்சி, வாசலுக்குக்கிட்ட எவ்வளவு அலங்காரமான பிரகாசம்.”**

அங்கே பார் அம்மா! எவ்வளவு அலங்காரமான பிரகாசம்.



ஒரு நிமிஷத்தின் பின்பு **“இப்போது நான் அதைக் காணவில்லை”** என்றான். அதன் பின்பு இவனுடைய முகம் ஒரு சம்மனசின் பிரகாசமோ இது என்று சொல்லக் கூடிய தன்மையாகப் பிரகாசக் கதிர் வீசிக்கொண்டிருந்தது. யாதொரு அவஸ்தையோ பெருமூச்சோ ஒன்றுமில்லாது, ஆனந்தம்பயக்கும் புன்னகை இவன் உதடுகளிற் தவழ, அவுஸ்திரேலியா பிரிவின் இந்தச் சின்னஞ்சிறிய பாலியன், இந்த உலகிலும் தான் கண்டுகளிக்கும்படி தமது மோட்ச அலங்காரத்தை இவனுக்குக் காண்பிக்கக் கருணைகூர்ந்த மோட்சஇராக்கினியைப் பரலோகத்திலே சந்தித்து வந்தனம் சொல்லும்படியாகப் பிரயாணமானான்.

தேவதாயாரும் இவனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றினர். கோவாடி இறியாவின் காட்சிகளிலே கடைசி

இடம் வகித்த பிரான்சீஸ் மோட்ச இராச்சியத்துக்கு மற்றவர்களுக்குமுன் செல்லலாயினன்.

ஞானச் சீவியத்தில் ஒரு ஆத்துமம் உயர்ச்சி அடைவது எப்படி ?

பிரான்சீசை, மரணத்துக்குள்ளாக்கின கொள்ளைநோய் இயாசிந்தாவையும் சருவியது. அவனிறந்த சில நாட்களுக்குள் இவளும் பாயும் படுக்கையுமானாள். இவளைச் சருவிய நோய் நெடுநாளாக நிலைத்து ஒரு வேதசாட்சி பட்டபாடுகளை இவளும் அனுபவிக்கச் செய்தது. இந்த நோய்தான் இவளையும் கடைசியாகச் சவக்குழிக்கு, இல்லை இல்லை மோட்ச இராச்சியத்துக்கு நடத்திச் செல்வதாயிற்று. இவைகளைப் பற்றிய விபரங்களைச் சொல்லமுன் ஒரு ஆத்துமம் ஞானச் சீவியத்தில் அன்பினாலும் பரித்தியாகத்தினாலும் எப்படி உயர்ச்சி அடைகிறதென்பதை ஒரு சிறிது ஆராய்வோமாக.

இந்நூலின் முற்பகுதியிலே காட்டியிருக்கிறபடி இயாசிந்தா இயல்பாகப் பிணக்குக் குணமும் மிதமிஞ்சிய புனிதமும் மிகுந்த அக்களிப்பும் உள்ளவள். நடினத்திலும் விளையாட்டிலும் விருப்புடையவள்.

பரலோக இராக்கினியின் காட்சியால் இவளுடைய ஆன்மா மாற்றமடையலாயிற்று. இவள் எவ்வளவோ பொறுமையும், துன்பதுரிதங்கள் மட்டில் மனவலிமையும், அவற்றில் ஒருவகையான பிடிவாதமான துணிகரமும் உடையவளானாள். தனது கூட்டாளிமாருக்குப் பிரியம் உண்டாக்குவதற்கு அன்றி, இவளுக்கு விளையாட்டிற் கவர்ச்சியில்லாது போயிற்று. எங்கள் ஆண்டவரின் திரு இருதயத்துக்கு ஈறல் உண்டுபண்ணும் பாவிகள் இருக்கிறார்கள் என்பதை இப்போது இவள் அறிவாள். அறிந்து இவள் தவம்புரிந்து வந்தாள். அதுவும் இவளுடைய வயசை உற்றுநோக்குமிடத்து, **மகா வீரியம் பொருந்திய தபம்புரிந்து வந்தாள்.**

மூன்றாங் காட்சியில் நரகத்தைக்கண்ட பிற்பாடு இவள் பாவிகளைப்பற்றியும் அவர்கள்படும் நித்திய ஆக்கினையைப் பற்றியுமல்லாது வேறொன்றைப்பற்றியும் பேச அறியாள்.

இந்த எண்ணத்தில் இவள் முற்றாய் மூழ்கிப்போயிருந்தாள். ஒருவகையில் அந்த நரகத்தின் எண்ணத்தினால் ஆட்கொள்ளப்பட்டவளாயிருந்தபடியால்,

“நரகம்! நரகம்! அங்கே விழுகிறவர்கள் எனக்கு எவ்வளவு மனவேதனையை உண்டுபண்ணுகிறார்கள். நெருப்பிலே விறகு கட்டைகள் எரியுமாப்போல, மனுஷர் அங்கே கிடந்து எரிகின்றார்கள்” என்று சொல்லுவாள்.

இவ்வித எண்ணத்தினால் இவள் நடுநடுங்கி மகா பயங்கரமும் மன அருட்சியுங்கொண்டு முழந்தாளிட்டு: “என் யேசுவே! எங்கள் பாவங்களைப் பொறும், நரக நெருப்பிலிருந்து எங்களைக் காத்துக்கொள்ளும்” என்று மன்றாடுவாள். வேறு சில சமயங்களில் தனது கூட்டாளிகளைக் கூப்பிட்டு: “லூசியா, பிரான்சீஸ் நீங்கள் என்னோடு செபஞ் செய்ய வரமாட்டீர்களா? ஆத்துமாக்கள் அங்கே விழாதபடி நாங்கள் அதிகம் அதிகம் மன்றாடவேண்டும். தேவமாதா பாவிகளுக்கு நரகத்தை ஏன் காட்டாது விட்டிருக்கிறார்? அவர்கள் நரகத்தைக் கண்டால் ஒருபோதும் பாவஞ் செய்யமாட்டார்கள். ஆதலால் அங்கு விழவும் மாட்டார்களே.

கோவாடி இறியாவுக்குப் பெருந்தொகையான சனங்கள் ஒருநாள் வந்திருந்தபொழுது இயாசிந்தா லூசியாவைப் பார்த்து, இந்தச் சனங்கள் எல்லாருக்கும் நரகத்தைக் காட்டும்படியாகத் தேவமாதாவுக்கு நீ கட்டாயம் சொல்லவேணும். அதன் பின்பு அவர்கள் மனந்திரும்புகிறார்களோ இல்லையோ என்பதை இருந்துபார். இப்படிச் சொல்லிவிட்டு இவள் பரவசமானவள்போல், ஐயையோ! எத்தனையோபேர் நரகத்தில் விழுகிறார்களே! பெருந்தொகையானோர் நரகத்திலே விழுகிறார்களே! என்று பரிதபிப்பாள்.

“நீ பயப்படாதே, கட்டாயம் நீ மோட்சத்துக்குப் போவாய்.”

“அது எனக்குத் தெரியும், ஆனால் மற்றவர்கள் எல்லாரும் எங்களுடன் அங்கு வந்துவிடவேண்டும் என்பதல்லவா

எனது விருப்பம்.” நித்தியத்தைப்பற்றியும் நரகத்தைப்பற்றியும் இயாசிந்தா அடிக்கடி சிந்தித்து வந்தபடியால், இவள் இவ்வுலகப்பற்றுக்கள் எல்லாவற்றையும் அறவே ஒழித்துவிடவும், மகா வீரத்துவம் வாய்ந்த பரித்தியாகங்களைப் புரியவும் ஏவப்பட்டாள். காட்சிக்கார மற்ற இருவர்களுடனும் கலந்தாலோசித்து, இனிமேற் தாங்கள் ஒருபோதும் நடனஞ் செய்வதில்லையெனத் தீர்மானித்துக்கொண்டாள். சிறைச்சாலையில் அடைபட்டிருந்தபொழுது, அங்கிருந்த ஏனைய மறியற்காரருக்குப் பிரீதி உண்டாக்கும்படிமாத்திரம், ஒருவிசை இந்தப் பிரதிக்கினையை இவள் நிறைவேற்றவில்லை.

நரகத்தின் காட்சிகண்ட சில நாட்களின் பின், அர்ச். ஸ்நாபக அருளப்பர் திருநாள்கொண்டாடப்பட்டது. அந்த நாளிற் பிள்ளைகள் எல்லாரும் சேர்ந்து நெருப்புச் சுவாலை ஒன்றைச் சூழநின்று நடனம் செய்வது வழக்கம். மற்றப் பிள்ளைகள் இவளும் தங்களுடன் சேர்ந்து நடனம் செய்யும்படி கேட்டார்கள். நான் அங்கு போகமாட்டேன் என்று, இவள் லூசியாவுக்குச் சொன்னாள். “ஏன்? என்ன காரியம்.”

“நான் இனிமேற் கூத்தாடுவதில்லை. இந்தப் பரித்தியாகத்தை நான் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கப்போகிறேன்.”

மாதாவின் காட்சி பெறமுன் இயாசிந்தா, செபமாலையை விரைவாகச் சொல்லி முடித்துப்போடவேண்டுமென்று எவ்வளவோ ஆத்திரப்பட்டாள். அளவுபிரமாணமில்லாது அதைச் சுருக்கிப்போடவும் இவள்தானே வழிசொல்லிக் கொடுத்தவள். ஆனால் இப்போது செபமாலை சொல்வதில் எவ்வளவு கவனம். எவ்வளவு பயபக்தி. மூன்றுபேருள்ளேயும், ஆக இளையவள் இவள்தான். ஒவ்வொருநாளும் செபமாலை சொல்லுவதாகத் தேவமாதாவுக்குக் கொடுத்த வாக்கை மற்ற இருவருக்கும் நாள்தோறும் நினைப்பூட்டி வந்தவளும் இவள்தான். செபமாலை சொல்லவேண்டுமே என்ற எண்ணம் வந்தவுடன், இவள் முன்பின் யோசியாமல் சகல சம்பாஷணைகளையும் விளையாட்டுகளையும் விட்டுவிட்டுத் தனது பரலோக ஆச்சிக்குக் காண்பிக்கவேண்டிய நமஸ்காரத்தையும் வந்தனை உபசாரங்களையும் அன்பையும் காண்பிக்கத் தீவிரிப்பாள்.

ஒருவரை உண்மையாகச் சிநேகிக்கும் ஆத்துமா, பிறரும் அவரை நேசிக்கும்படி செய்யப் பிரயாசப்படும். தான் தேவமாதாவை நேசிப்பதுபோல தேவமாதாவை எல்லாரும் நேசிக்கவேண்டும் என்பதே இயாசிந்தாவின் ஆசை. முன் அதிகாரங்களில் நாம் கூறியிருக்கிறபடி, காட்சிபெற்ற பிள்ளைகள் மூவருடையவும், குடும்பத்தார் மெய்யான கிறீஸ்தவர்கள் என்று அழைக்கப்படுவதற்கு உள்ளபடி உரிமை உள்ளவர்கள். ஆனாலும் இரண்டு குடும்பங்களிலும் எல்லாம் பூரணமாக இருக்கவில்லை எல்லாம் பிறருக்கு நன்முன் மாதிரிகைக்கு ஏற்றவைகளாக இருக்கவுமில்லை

இயாசிந்தாவீட்டார் ஒவ்வொருநாளும் செபமாலை சொல்லிவருவதை அடிக்கடி மறந்துவிடுவார்கள். தனது குடும்பத்திலுள்ளவர்களை ஒவ்வொருநாளும் செபமாலை சொலலும்படி செய்விப்பதே இயாசிந்தாவின் முதல் அப்போஸ்தொலிக்க தொண்டு ஆயிற்று. முதலாம் காட்சி நடைபெற்ற நாட்தொடக்கம் இவள் தன் தாயிடம்போய், வீட்டார் எல்லாரையும் ஒருங்குசேர்த்து இந்தச் செபமாலைப்பத்தியை அனுசரிக்கச் செய்யும்படி மிகவும் மனஉருக்கத்துடனும், கனிவாயும் கேட்டுக்கொள்வாள். தான் கேட்டதைப் பெற்றுக்கொள்ளுமட்டும், இவள் ஓய்ந்திருக்கவேயில்லை. வீட்டார் எல்லாரும் இவ்விஷயத்திற் பிரமாணிக்கமாக இருப்பதை இவள் ஒருநாள் கண்டு களிகூரும் பாக்கியம்பெற்றாள்.

திருச்சபைச் சட்டப்படி, நடைபெற்ற விசாரணையின்போது காட்சிநாயகிக்கு அமையும்படியாகத் தனது பிள்ளைகள் ஒவ்வொருநாளும், செபமாலை சொல்லுவது மாத்திரம் அல்ல, செபமாலைப்பத்தியைச் சகலர் மத்தியிலும் பரப்புங் கடமையும் அவர்களுக்குப் பணிக்கப்பட்டது என்று இயாசிந்தாவின் தாய் சாட்சியிட்டிருக்கிறாள்.

அபூர்வமான வரப்பிரசாதங்கள்

பள்ளிக்கூடத்திலேயும் கோவாடி இறியாவுக்குப் போகும்வழியிலேயும், இவள் பிறர் ஆத்துமத்துக்கு நன்மை செய்யவேண்டுமென்ற கவலை நிறைந்தவளாக இருந்தாள்.

தேவதாயாரும் இந்த அப்போஸ்தொலிக்க தொண்டிற்கு மிகவும் விசேஷித்த, மிகவும் அபூர்வமான சம்பாவனைகளை அருளியிருப்பதாகத் தோற்றுகின்றது. நாம் சொல்வது வெறும் உத்தேசமல்ல என்பதற்கு லூசியா எழுதியிருக்கும் "**ஞாபகங்கள்**" நற்சான்றுகள் பகருகின்றன.

காட்சிக்காரப்பிள்ளைகள் இருவரையும் காணும்போதெல்லாம் இவர்களை அவமதித்துத் தூஷித்துவந்த ஒரு மனுஷி, அந்தக் கிராமத்திலிருந்தாள். அந்தக் கோபவெறியுள்ள துஷ்டை, ஒருநாள் ஊர்த்தவறணையிலிருந்து, வெறிமயக்குடன் புறப்படும்பொழுது, அவளை லூசியாவும் இயாசிந்தாவும் சந்தித்தார்கள். சந்தித்தபொழுது: "**அவள் எங்களை அவமதிப்பதுடன்மட்டும் திருப்திகொள்ளவில்லை**" என்று லூசியா எல்லாவற்றையும் வெளியாகச் சொல்லாமல் குறிப்பாய்மாத்திரம் சொலலி, அந்த மனுஷி தங்களை ஏசிப்பேசி, வைது ஏளனம்பண்ணியதை வரைந்திருக்கிறாள்.

அந்த மனுஷி பேசிமுடிந்தபின், இயாசிந்தா லூசியாவை நோக்கி: "இந்தப் பெண மனந்திரும்பும்படியாக, நாங்கள் தேவமாதாவை மன்றாடவேண்டும். பரித்தியாகங்களும் ஒப்புக்கொடுக்கவேண்டும். இவள் எவ்வளவோ தூஷணங்கள் அதுவும் பெரிய பெரிய தூஷணங்கள் பேசுகிறாள். இவள் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யாவிட்டால் நரகத்துக்குத் தானே போகப்போகிறாள்" என்றாள்.

சில நாட்களுக்குப் பின்பு, லூசியாவும் இயாசிந்தாவும் இந்த மனுஷியின் வீட்டுக்கு முன்னால் ஓடிவிளையாடிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இயாசிந்தா ஓடிக்கொண்டு போகையில் சடுதியில் நடு வழியிற்தங்கி, மச்சாள் நாங்கள் இந்த அம்மையாரைச் சந்திக்கப்போகிறோமே என்றாள். ஆம் சந்திக்கத்தான்வேண்டிவரும்.

"அப்படியானால் விளையாட்டை நிறுத்துவோம். இந்தப் பரித்தியாகத்தைப் பாவிகள் மனந்திரும்புவதற்கு ஒப்புக்கொடுப்போம்." அப்படிச் சொல்லிவிட்டுத் தாமதமில்லாது இரு கைகளையும் உயர்த்திக் கும்பிட்டுக்கொண்டு வானத்தை அண்ணாந்துபார்த்துத் தனது பரித்தியாகத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தாள்.

இப்படி இயாசிந்தா காணிக்கை ஒப்புக்கொடுப்பதை, அந்த மனுஷி ஒரு ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டாள். இதைப்பற்றி அவள் லூசியாவுடைய தாய்க்கு அறிவித்தபொழுது: "**இயாசிந்தாவின் இந்தச் செபம், தன் மனசில் அவ்வளவு, ஆழமான நற்பதிவை உண்டுபண்ணினபடியால், இப் பிள்ளைகள் கண்டகாட்சிகள் உண்மை என்பதற்குத் தனக்கு வேறு சாட்சி தேவையில்லை**" என்றாள்.

இதற்குப் பிற்பாடு அவள் அந்தப் பிள்ளைகளை ஒரு போதும் ஏளனம்பண்ணி அவமதிக்கவில்லை. அதற்கு மாறாகச் சருவேசுரன் தனது எண்ணிறந்த பாவங்களை மன்னிக்கும்படி தனக்காக அவரை மன்றாடும்படி கேட்டுக்கொண்டாள்.

இன்னொருவிசை வேறு ஒரு ஏழை மனுஷி, இயாசிந்தாவின் பாதத்தில் வீழ்ந்து, கண்ணீர் சொரிந்து, தனக்கிருக்கும் படுபயங்கரமான வியாதியிலிருந்து தன்னை மீட்டிரட்சிக்கும்படியாகத் தேவதாயாரை மன்றாடும்படி, அவளைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

சின்ன இயாசிந்தா, தனது பாதத்தில் வீழ்ந்து கிடந்து நடுநடுங்கிக்கொண்டிருந்த ஏழைப் பெண்ணுடைய கையைப் பிடித்து, அவளை எழுப்பப் பிரயாசப்பட்டாள். ஆனாற் போதியளவு பெலனில்லாதபடியால், தானும் அவள் பக்கத்தில் முழந்தாள் மடித்து **மூன்று பிரியதத்தமந்திரம்** சொன்னாள். அதன் பின்பு நோயாளியைப்பார்த்து:

"எழும்பு அம்மா! தேவமாதா கட்டாயம் உனக்கு இரக்கம் புரிவார்" என்றாள்.

ஒவ்வொருநாளும் இயாசிந்தா அவளுக்காக மன்றாடி வந்தாள். சிலநாட் சென்றபின் தனக்குத் தேவதாயார் அருளிய நற்சுகத்துக்குத் தோத்திரம் புரியும்படி கோவாடி இறியாவுக்கு அம்மனுஷி வந்தாள்.

கோவாடி இறியாவிலே ஒரு போர்வீரன் ஒரு சிறு குழந்தையைப்போல் விம்மி விம்மி அழுதுகொண்டிருப்பதை

மூவரும் கண்டார்கள். யுத்தமுனைக்குப் போகும்படி அவனுக்குக் கட்டளையாயிற்று. தனது நோயாளியான மனைவியையும் மூன்று சிறு பிள்ளைகளையும் அவன் தனியே விட்டுவிட்டுப் போகவேண்டும். ஆதலால் அவன் தனது மனைவிக்குச் சுகங்கொடுக்கும்படி, அல்லது தனக்கு வந்திருக்கும் கட்டளையை மாற்றிவிடும்படி, தேவதாயாரை அழுகையோடும் கண்ணீரோடும் இரந்து கேட்டான்.

இயாசிந்தா தன்னுடன் செபமாலை சொல்லும்படி அவனைக்கேட்டு, செபமாலை முடிவில்: "ஐயா, நீங்சள் அழவேண்டாம். தேவமாதா அணைகடந்த அன்புள்ளவர். நீங்கள் கேட்ட மன்றாட்டை அவர் தப்பாது உங்களுக்குத் தருவார்" என்றாள். இயாசிந்தா அன்று தொடக்கம் அவனுக்காக மன்றாட மறக்கவில்லை. செபமாலை முடிவில் ஒவ்வொரு விசையும் ஒரு பிரியதத்தம் அவனுக்காகச் சொல்லுவாள். சிலநாட்களின்பின் அந்த வாலிபப் போர்வீரன் தனது மனைவியுடனும் மூன்று பிள்ளைகளுடனும் தேவதாயார் தனக்கு அருளிய இருமடியான சகாயங்களுக்குத் தோத்திரம்புரிய வந்தான். யுத்தமுனைக்குப்போகவேண்டிய நாளுக்கு முந்தியநாள் அவனுக்குக் கடுமையான காய்ச்சல் வந்தபடியால் அந்தக் கட்டளை நீக்கப்பட்டது. தேவமாதாவின் அற்புதத்தினால் மனைவிக்கும் நற்சுகம் கிடைத்தது. தேவமாதாவின் காட்சிகள் பெற்றபிற்பாடு, இயாசிந்தா சிலசமயங்களில் **வருங்காலச் சம்பவங்களின் மனக்காட்சி** பெற்றிருக்கிறாள். இவைகளையும் இந்தச் சின்னப் புண்ணியவதி அடைந்த அபூர்வமான வரப்பிரசாதங்களுடன் சேர்க்கப்படாதா?

ஒருநாள் இவளைக் கிணற்றுக்குப் பின்புறத்தில் இருக்கவிட்டுவிட்டு, மற்ற இருவரும் கிட்ட இருந்த காடொன்றில் காட்டுத்தேன் தேடிப்பார்க்கப் போயிருந்தார்கள். இருந்தாப்போலே "லூசியா லூசியா, நீ பரிசுத்த பாப்பாண்டவரைக் கண்டாயா?" என்ற சத்தம் இவர்கள் இருவருடையவும் காதில் விழுந்தது.

பரிசுத்த பிதாவா? இல்லை. நான் காணவில்லை.

"இது எப்படிச் சம்பவித்ததோ அறியேன்; ஒரு பெரிய வீட்டுக்குள்ளே, ஒரு மேசையின் அருகில் முழந்தாளிட்டுத் தமது முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு, பாப்பாண்டவர் அழுதுகொண்டிருப்பதை நான் கண்டேன். அறைக்கு வெளியே பெருந்தொகையான சனங்கள் நின்றார்கள். சிலர் அவருக்குக் கல்லால் எறிந்தார்கள். வேறுசிலர் அவரைச் சபித்து, அவருக்கு அவமானம் உண்டுபண்ணும் அழுகல் வார்த்தைகளைச் சொன்னார்கள். ஐயையோ! எங்கள் அருமையான பரிசுத்த பிதாவே!

சில நாட்களின் பிற்பாடு, நாம் ஏலவே இந்த நூலின் முற்பகுதியில் குறிப்பிட்டிருக்கிறபடி, இரண்டு குருமார் இப்பிள்ளைகளுக்குப் பாப்பாண்டவருக்காக மன்றாடும்படி புத்திமதி சொன்னார்கள். அப்போது இயாசிந்தா மற்ற இரு கூட்டாளிமாரையும் நோக்கி: உண்மையாகவே இந்தக் குருமார் விவரித்தவரைத்தான் நான் கண்டேன். நான் கண்டவரைப் பற்றித்தான், தேவமாதா எங்களுக்குச் சொன்ன இரகசியத்திற் குறிப்பிட்டிருக்கிறார். இது உண்மையல்லவா? இந்த இரண்டு குருமாருக்கும் தேவதாயார் பாப்பாண்டவரைக் காண்பித்து இருப்பார் என்பதிற் சந்தேகமில்லை. நான் கண்டது பாப்பாண்டவரைத்தான் என்று இனிமேல் நீங்கள் மறுக்கமுடியாது. ஆனபடியால் நாங்கள் பாப்பாண்டவருக்காக அதிகம் அதிகம் மன்றாடவேண்டும் என்றாள்.

ஒருநாள், சமமனசானவர் இவர்களுக்குப் படிப்பித்த செபத்தை "கபேக்கோ" குகையில் இவர்கள் சொல்லிக்கொண்டிருக்கையில், இயாசிந்தா சடுதியில் எழுந்து நின்று தனது மைத்துனியைக் கூப்பிட்டாள். கூப்பிட்டு அங்கே பார்: வழிதெருவெல்லாம், ஒழுங்கைகள் சிறு பாதைகளில் எல்லாம், வயல்வெளிகளில் எல்லாம் கும்பல் கும்பலாய்ச் சனக்கூட்டம் நின்று, சாப்பிட ஒன்றுமில்லையென்று ஓலமிட்டுப் பசியால் வாடுகிறார்களே. அவர்களை நீ காணவில்லையா? பாப்பாண்டவர் மாசில்லாத இருதய நாயகியின் சுரூபத்தின்முன் செபித்துக்கொண்டிருப்பதை நீ காணவில்லையா? அவரைச் சூழவரப் பெருந்தொகையான சனங்கள் செபித்துக்கொண்டிருப்பதையும் நீ காணவில்லையா?

(இயாசிந்தா சொன்ன இன்னும் ஒரு விஷயத்தை வெளியிடத் திருச்சபை அதிகாரிகள் இன்னும் உத்தரவு கொடுக்கவில்லை.)

தான் பாப்பாண்டவரைக் கண்டதாகப் பிறருக்கு அறிவிக்கலாமோ என்று இயாசிந்தா லூசியாவைக் கேட்டாள். அப்படி வெளியிடுதல் புத்தியல்லவென்று லூசியா இவளுக்குப் புத்தி சொன்னாள். ஏனென்றால், அப்படிச் செய்வதால் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட இரகசியம் வெளிவந்துவிடும் என்பதுதான் லூசியாவின் நியாயம்.

பாடுபடுதலும் பற்றுவைத்தலும்

இயாசிந்தா தேவமாதாவிடம் கேட்ட மன்றாட்டுகளை அத்திருத்தாயார் ஒருபோதும் மறுத்திருக்கவே மாட்டார். "**தமது அறிவித்தல்களுக்குச் செவி சாய்ப்பவர்கள் கேட்கும் மன்றாட்டு ஒருபோதும் வீண்போகாது. அவர்கள்மீது தமது இரக்கம் பாலிக்கப்படும்**" என்று தேவதாயார்தாமே தமது கடைசிக் காட்சியில் பிள்ளைகளுக்கு உறுதிமொழி கூறியிருக்கிறார். இயாசிந்தாவும் தனது அன்பினாலும், பொறுமையோடு கூடிய பரித்தியாகத்தினாலும் தனது மன்றாட்டங்களுக்குத் தேவதாயார் செவிசாய்க்கும்படி தன்னைப் பாத்திரவாளி ஆக்கிக்கொண்டாள்.

சிலுவையில் அறையுண்ட தன்மையாக இயாசிந்தா தனது வியாதிப்படுக்கையில், ஆட அசைய முடியாது இருந்த நாட்களில், யேசுநாதரிலும் தேவமாதாவிலும் அவளுக்குள்ள அன்பு வரவர வளர்ச்சி பெறலாயிற்று. தேவசித்தத்துக்கு மனப்பணிவும், தியாகசிந்தையும் அவளில் மேன்மேலும் ஆழமாக வேரூன்றின. ஆயின் தனது உலகசீவிய முடிவு சமீபித்துவிட்டது என்பதை உணர்ந்துகொண்ட இயாசிந்தா, அதி அலங்காரமான மோட்ச கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளும்படி, எவ்வளவு மேலான தன்மையாகப் பிரயாசப்படவேண்டுமோ, அப்படிப் பிரயாசப்பட அதிவீரியத்துடன் முயற்சித்துவந்தாள். பயமும் மனத்தத்தளிப்பும் ஒருகாலம் நிறைந்திருந்த இச்சிறுமி, இப்போது சில விசே

ஷித்த சந்தர்ப்பங்களிலே, வேதசாட்சிகளிடம் விளங்கிய கிறீஸ்த திடாரிக்கத்தையும், மனவலிமையையும் தன்னில் விளங்கும்படி செய்தாள்.

வருத்தவேளையில் இவளுக்கு அதிக நேரமிருக்கிறபடியால், பள்ளிக்கூடத்துக்குப்போன நாட்களிலும்பார்க்க இப்போது அடிக்கடி "என் யேசுவே, நான் உம்மை நேசிக்கிறேன்" என்று சொல்லிவருவாள்.

பள்ளிக்கூடம் விட்டபின், அல்லது பள்ளிக்கூடத்துக்குப்போகுமுன் லூசியா இவளிடம் வந்தால், அந்தமனவல்லயச்செபத்தைத் தன்னுடன் சொல்லும்படி லூசியாவைக் கேட்பாள்.

யேசுநாதரை நேசிக்கிறேன் என்று சொல்ல நான் எவ்வளவோ ஆசிக்கிறேன். நான் அப்படி யேசுநாதருக்குச் சொல்லும்பொழுது பல தடவைகளில் என் உள்ளத்தில் நெருப்புச் சுவாலை ஒன்று இருப்பதுபோல உணருகிறேன். ஆனால் அது என்னை எரிப்பதில்லை.

இவள் இந்தநேச அக்கினியைப் பிறருடைய ஆத்துமத்திலும் செலுத்திவிடவேண்டும் என எவ்வளவோ அபேட்சித்தாள். இயாசிந்தா பின்வரும் உருக்கமும், மனஅருட்சி உள்ளதுமான வார்த்தைகளை லூசியாவுக்குச் சொல்லியிருக்கிறாள்.

"நான் மோட்சத்துக்குப் போகிறதற்கு இன்னும் சொற்ப நாட்கள்மாத்திரம் உண்டு. நீ இந்த உலகில் இன்னும் இருக்கப்போகிறாய். யேசுநாதர், மரியாயின் மாசில்லாத இருதயப்பத்தியை உலகிற் பரப்பி அதை ஸ்தாபிக்க விரும்புகிறார் என்பதை அறிவிக்கவே நீ இங்கேயிருக்கிறாய். நீ பேசவேண்டியவேளைகளிற் கட்டாயம் பேசவேண்டும். அதை விட்டுவிட்டுப் போய் ஒளித்துவிடாதே. சர்வேசுரன் மரியாயின் மாசில்லாத இருதயத்தின் மூலமாகத்தான் எங்களுக்குத் தமது வரப்பிரசாதங்களைக் கொடுக்கிறார் என்று எல்லாருக்கும் சொல்லு. அந்த இருதயத்தின் மூலமாக நாங்கள்

கேட்பதை அவர் தப்பாது தருவார். யேசுநாதருடைய திரு இருதயமானது மரியாயின் மாசில்லாத இருதயத்துடன் ஒருமித்து வந்திக்கப்பட விரும்புகிறது என்பதை எல்லாருக்கும் அறிவி. மரியாயின் மாசில்லாத இருதயத்தின் மூலமாகவே சகல மனுஷரும் சமாதானத்தைக் கேட்கவேண்டும். அந்தச் சமாதானம் அருளும் வரத்தைச் சருவேசுரன் மரியாயின் மாசற்ற இருதயத்துக்குத்தானே ஒப்படைத்திருக்கிறார். யேசுநாதருடைய திரு இருதயத்தையும், மரியாயின் மாசற்ற இருதயத்தையும் நான் நேசிக்கும்படி என்னைத் தூண்டிக்கொண்டிருக்கும் மன அருட்சிகளையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் சகலருடையவும் இருதயங்களிலும் நான் புகுத்திவிடக்கூடியதாயிருந்தாலோ!"

யேசுநாதரையும் தேவமாதாவையும் நான் அவ்வளவாக நேசிக்கிறபடியால் நான் அவர்களை நேசிக்கிறேன் என்று நூறாயிரம் விசை சொன்னாலும் எனக்கு அலுப்பு உண்டாவதேயில்லை என்று இயாசிந்தா சொல்லியிருக்கிறாள்.

ஆண்டவரிலும் தேவமாதாவிலும் இவளுக்குள்ள பற்றுதலினால் எவ்வளவு சொல்லரிய அன்புடனும், பொறுமையுடனும் இவள் தனது நோயினால் உண்டான வேதனைகளைச் சகித்துவந்தாள். பிரான்சீஸ் மரிக்குமுன்னர்தானும், இவளுக்கும் நோய் வந்துவிட்டது. ஆனாலும் தனது படுக்கையைவிட்டு எழும்பக்கூடியபோதெல்லாம், இவளுக்கிருந்த மகா சந்தோஷம் அவனைப்போய்த் தரிசிப்பதாம். தனது நம்பிக்கைக்கு உரியவளும், தன் ஆலோசனைக்காரியுமாகிய லூசியாவின் தரிசிப்பைப் பெறுவதும் இவளுக்கு எப்போதும் பேரானந்தம். பள்ளிக்கூடத்திலிருக்க, அவசியமில்லாத தருணங்களில் லூசியா எப்போதும் அந்த இரண்டு நோயாளருடனும் தனது நேரத்தைச் செலவிடுவாள்.

இயாசிந்தாவுக்குப் பிரீதி உண்டாக்கும்படியாக இவள் முதல் முதல், பிரான்சீசைத்தான் சந்திக்கவேண்டியிருந்தது. "முதல் பிரான்சீசைச் சந்திக்கப்போ, நான் தனிமையாக இருக்கும் பரித்தியாகத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்

பேன்." லூசியா இவளிடம் திரும்பிவந்த பிற்பாடு, இப்போது, திரும்பிப்போகாதே. நீ இல்லாமல் நான் தனியே வாடிவதங்கிப் போயிருந்தேன். நீ என்னை விட்டுவிட்டுப் போனபிற்பாடு, நான் ஒருவருடனும் ஒன்றும் பேசவில்லை. மற்றவர்களுடன் என்ன பேசுவதென்று எனக்குத் தெரிவதில்லை கோவாடி இறியாவின் தனது கூட்டாளிமாருடன் இயாசிந்தா பாடுகளைப்பற்றியாவது தாராளமாய்ப் பேசக்கூடியதாயிருந்தது.

லூசியா இன்றைக்கு நீ அநேகம் பரித்தியாகங்கள் புரிந்தாயா சொல்லு? நான் இன்றைக்கு அதிகம் பரித்தியாகம் புரியக்கூடியதாயிருந்தது. ஆச்சி என்னைத் தனிமையாக விட்டுவிட்டார். ஆனபடியால் நான் பிரான்சிசிடம் அடிக்கடி போகக்கூடியதாய் இருந்தது. அப்படியிருந்தும் பரித்தியாகம் புரிவதற்காக அவனைக் காணப்போகவில்லை.

உனக்கு இப்போது வருத்தம் கொஞ்சம் சுகமாக இருக்கிறதா?

உனக்குத்தானே நல்லாய்த் தெரியுமே; எனது வருத்தம் சிறிதேனும் நயத்துக்கு இல்லை. பழுமுழுவதும் பச்சைப் புண்போல நோகின்றது. ஆனால் அதைப்பற்றி முறுமுறுப்பதில்லை. பாவிகள் மனந்திரும்பும்படியாக, ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

தேவமாதாவின் நம்பிக்கைக்கு உரியவளாக விளங்கிய இச்சிறுமியின் ஆத்துமத்தில், பாவிகளை மனந்திருப்பும்படி பரித்தியாகங்கள் புரியவேண்டும் என்ற ஒரேஒரு ஆசையே முதல் இடம் பெற்று, அவளை முற்றாக ஆட்கொண்ட ஆசையாயிற்று.

பிரான்சீஸ் மரிக்கச் சில நாட்களின்முன்னே, அவனுக்கும் இயாசிந்தாவுக்கும் தேவமாதா காட்சி அளித்தார் என்று முன்னரே சொல்லியிருக்கிறோம். பாவிகளை இரட்சிக்கும் அலுவலுக்காக இயாசிந்தா, பிரான்சீஸ் இறந்தபின்னும், உலகத்தில் இருக்கவேண்டுமென்று தேவமாதா அவளுக்கு அறிவித்திருந்தார். அல்லாமலும் இவள் ஒரு வைத்தியசாலைக்குப் போகவேண்டிவருமென்றும், அங்கே கடின

வேதனைகளை அனுபவிப்பாள் என்றும் அவற்றை எல்லாம் யேசுநாதரின் நேசத்துக்காகவும், தமது மாசில்லாத இருதயத்துக்குச் செய்யப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரமாகவும், பாவிகள் மனந்திரும்பும்படியாகவும் பொறுமையுடன் அனுபவிக்கவேண்டும் என்றும் தேவதாயார்தாமே அறிவித்திருந்தார். ஆதலால் இவள் இன்னும் அனுபவிக்க வேண்டிய வேதனைகள் பல இருந்தன.

இவளுடைய வருத்தம் இருந்ததிலும் சற்று இளக்கமானாலும், பூரண சுகம் இவள் அடையவேயில்லை. பிரான்சீஸ் இறந்துபோனபடியால் இயாசிந்தாவுக்கு இயல்பாக இருந்த துக்கம் இம்மட்டு அம்மட்டு அல்ல.

"என்னுடைய சின்னப் பிரான்சீசை நான் எப்போது காண்பேனோ?" என்று இவள் அடிக்கடி பெருமூச்சுவிடுவாள். கண்கள் இரண்டும் கண்ணீரால் நிறைந்தபடி, இவள் நெடுநேரம் ஒன்றும்பேசாமல், ஆழ்ந்த யோசனையில் இருப்பாள்.

நீ என்னத்தைப்பற்றி யோசிக்கிறாய்" என்று கேட்டால்,

" நான் பிரான்சீசைப்பற்றித்தான் நினைக்கிறேன் " என்பாள்.

பிரான்சீஸ் யேசுநாதருடையவும், தேவமாதாவுடையவும் திருமுக தரிசனையை மோட்சத்தில் அடைந்திருக்கிறானே. இவர்களைப்பற்றித்தானே, இவன் அன்பால் உள்ளம் உருகிக்கொண்டிருந்தான். இவன் அனுபவித்துக்கொண்டிருக்கும் மோட்சபாக்கியத்தைப் பற்றித்தான் இயாசிந்தா சிந்தித்துத் தியானித்துக்கொண்டிருந்தாள்.

பிரான்சீசைப்போலும் இவளும் அரையிற்கட்டியிருந்த தபக்கருவியாகிய மயிரொட்டியாணத்தையும், கயிற்றையும் அவிழ்த்துப்போடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதை இவள் தனது மைத்துனியிடம் கொடுத்து, இதை எனக்காகப் பத்திரமாய் வைத்துக்கொள். எனக்கு வியாதி இளகினால் நான் திரும்ப அதை உன்னிடம் கேட்பேன். அந்தக் கயிற்றில் மூன்று முடிச்சுகள் இருந்தன. அதிற் சிறிது

இரத்தக்கறையும் பிடித்திருந்தது. லூசியா அதைச் சில நாட்களாகப் பவுத்திரமாய் வைத்துக்கொண்டிருந்தாள். ஆனால் அதை என்ன செய்வதென்று அறியாமற் பிரான்சீசுடைய கயிற்றுடன் இதையும் எரித்துப்போட்டாள்.

தனது சின்ன இயாசிந்தா வரவரப் பெலன் குன்றிப் போவதைக்கண்டு, ஒலிம்பியா பிரலாபிக்கத் தொடங்கினாள்.

நீ அழவேண்டாம் ஆச்சி; நான் மோட்சத்துக்குப் போவேன் என்பாள் இயாசிந்தா. அல்லது, நீ ஏன் துக்கப்படுகிறாய் ஆச்சி. எனக்கு இப்போ வருத்தம் இளகியிருக்கிறதே என்பாள்.

ஒலிம்பியா தனது குழந்தை இருகைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு ஆடாமல் அசையாமல், ஒன்றும் பேசாமல் நெடுநேரம் இருப்பதை அவதானித்து: இயாசிந்தா நீ என்னத்தைப்பற்றி யோசிக்கிறாய் என்று இவளைக் கேள் எனத் தனது மருகி லூசியாவுக்குச் சொன்னாள். நான் இவளை ஏற்கனவே கேட்டேன். இவள் சிறு புன்னகை காட்டுவதேயல்லாது ஒன்றும் பேசுகிறாளில்லை. ஆனாலும் ஒலிம்பியா இல்லாதவேளைபார்த்து, மீண்டும் லூசியா இவளைக் கேட்டாள்.

நான் ஆண்டவரைப்பற்றியும், அவருடைய திருத்தாயாரைப்பற்றியும் நினைக்கிறேன். பாவிகளைப்பற்றியும், வரப்போகிற யுத்தத்தைப்பற்றியும் நினைக்கிறேன். பெருந்தொகையான ஆட்கள் சாகப்போகிறார்கள். பெருந்தொகையான ஆட்கள் நரகத்துக்குப் போகப்போகிறார்கள். எத்தனையோ வீடுகள் அழிந்து பரிநாசமாய்ப்போய்விடும். எத்தனையோ குருமார் இறப்பார்கள். ஆ! என்ன பரிதாபம். மனுஷர் தேவனுக்குத் துரோகம் செய்யாவிட்டால், யுத்தம் வராது. லூசியா, நான் சொல்வதைக் கேள். நான் மோட்சம் போகிறேன். **தேவமாதா எங்களுக்குச்சொன்ன அந்த விசேஷித்த வெளிச்சத்தை, நீ இரவில் வானத்திற் காணும்பொழுது ஓடி ஓடி, நீ மேல்உலகத்துக்கு வந்துவிடு.**

ஒருஆள் தான் நினைத்தவுடன் மோட்சத்துக்குப்பறந்து போக முடியாதே என்றாள் லூசியா.

அது மெய்தான்; அப்படிச் செய்யமுடியாது. ஆனால் நீ பயப்படாதே. மோட்சத்திலிருந்து நான் உனக்காக அதிகம் அதிகம் மன்றாடுவேன். பாப்பாண்டவருக்காகவும் மன்றாடுவேன். **போர்த்துக்கால் தேசத்துக்குள் யுத்தம வராமல் நான் மன்றாடுவேன். குருமாருக்காகவும் மன்றாடுவேன்.**

இயாசிந்தா சொன்னதை ஒலிம்பியா அறியவிரும்பிய பொழுது, லூசியா புன்னகை காட்டினாளன்றி ஒன்றுமே சொல்லவில்லை. இந்த நூதனத்தை ஒலிம்பியா விளங்க முடியாது மரியறோசாவிடம்போய் நடந்த சம்பவத்தைச் சொல்லி:

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இந்தப் பிள்ளைகள் இருவருடைய சீவியமும் அவிழ்க்கமுடியாத நொடிபோல் இருக்கிறதே. மரியறோசாவும் அதே அபிப்பிராயம் கொண்டாள்.

இந்தப் பிள்ளைகள் தனிமையாக இருக்கும்பொழுது, இடைவிடாமற் கதைக்கிறார்கள். யாராவது அவர்களைப் பார்த்தால், அவர்கள் கதையை நிறுத்துவதில்லை. ஆனால் அவர்கள் என்னத்தைப்பற்றிக் கதைத்துக்கொண்டிருக்கிறார்களென்று மற்றவர்கள் விளங்கமுடியாதவிதம் பேசிக்கொள்ளுகிறார்கள். யாராவது கிட்டப்போனாற் தலையைக் கவிழ்ந்துகொண்டு ஒன்றும் பேசாமல் இருந்துவிடுகிறார்கள். இந்தப் பரம இரகசியம் எனது புத்திக்கு எட்டவே எட்டாது என்றாள் மரியறோசா.

அவர்கள் விரும்பிய பாடுகள் எல்லாம் அனுபவிப்பேன்

பிரான்சீஸ் மரிக்குமுந்தி இயாசிந்தா அவன் மூலமாகப் பரலோகத்துக்குச் சில செய்திகள் அனுப்பியிருந்தாள். விசேஷமாக, **“ யேசுநாதரும் தேவமாதாவும், தான் எவ்வித பாடுகள்படவேண்டுமென அவர்கள் விரும்புகிறார்களோ, அவையெல்லாவற்றையும் அனுபவிக்க ஆயத்தம் ”** என்று அவர்களுக்குச் சொல்லும்படியாகத் தன் சகோதரனைக் கேட்டுக்கொண்டாள். தான் கொடுத்த வாக்கை இவள் நிறைவேற்றவேண்டுமல்லவா? தேவமாதா தங்களுக்குச்

சொல்லியிருந்த இரகசியங்களைப்பற்றியும், வேறு நம்பிக்கைக்குரிய விஷயங்களைப்பற்றியும் இயாசிந்தா இனிமேல் லூசியாவுடன் மாத்திரம் சம்பாஷிக்கக்கூடும். இவளும் ஏறக்குறைய நாள்முழுவதும் பள்ளிக்கூடத்திலிருந்தாள். இதுவே இயாசிந்தாவின முதற் தபம். லூசியாவுடனிருந்து சம்பாஷிக்க முடியாதே என்பது இவளுக்கு ஒரு மகா கஷ்டமான பாரச்சிலுவை ஆயிற்று. இயாசிந்தாவின் இந்த மனவருத்தத்தை லூசியா ஒருவாறு சாந்திபண்ணப் பிரயாசப்பட்டாள். இவள் அதிகமாக விரும்பும் புஷ்பங்களைக் கொய்துவந்து லூசியா இவளுக்குக் கொடுப்பாள்.

இடைக்கிடையாவது: "கபேக்கோ" குகைக்குப் போய்வர லூசியா நேரங் கண்டுகொண்டாள். இங்குதானே எத்தனையோ விசை ஒருமிக்கச் செபஞ் செய்தார்கள். ஒருமிக்கக் கண்ணீர் சொரிந்தார்கள். இந்தக் குகைக்குள்ளிருந்து லூசியா நெடுநேரம் தியானம் செய்து தனது அருமைச் சிநேகிதிக்காக மன்றாடிய பின்பு, இயாசிந்தாவுக்கு மிகவும் பிரியமான லீலிமலர் முதலிய மலர்களை மலைச்சாரலிற் கொய்துகொண்டுவந்து இந்தா பிடி இயாசிந்தா. இவைகளை நான் கபேக்கோ குகையிற் கொய்துகொண்டு வருகின்றேன் என்பாள். இயாசிந்தா கண்ணீர் ததும்பிய கண்களுடன் அவற்றை உற்றுநோக்கி, இனிமேல் நான் அங்கு வரமாட்டேன். வலின்ஹோஸ் என்னுமிடத்துக்கோ கோவாடி இறியாவுக்கோ நான் போகமாட்டேன். அது எனக்கு மிகவும் மனவருத்தம்.

அதைப்பற்றிப் பறுவாய்பண்ணாதே இயாசிந்தா. நீ மோட்சம் போகிறாய்; அங்கு ஆண்டவரையும் தேவமாதாவையும் காண்பாயே. "அது மெய்தான்" என்றுவிட்டு இவள் பெரும் மனமகிழ்வுடன் லூசியாவின் பூச்செண்டை ஒவ்வொரு பூவாக இதழ் இதழாகக் கவனத்துடன் பரிசோதித்துப் பார்ப்பாள். ஐயையோ! வாடிக்கொண்டுபோகும் இந்தப் பூச்செண்டு, இயாசிந்தாவின் சுகமும் பெலமும் குன்றிக் குன்றிப் போவதற்குக் குறிப்பாக இருக்கின்றதே நாளுக்கு நாள், இனிமேல் மாற்றமுடியாது என்ற தன்மையாக இவளுடைய நோய் அதிகரிக்க இவள் பெலனும் குன்றிக் குன்

றிப்போனது. இயாசிந்தாவின் இடதுபக்கத்துச் சுவாசப்பையிற் சிதழ் கூட்டத்தொடங்கியது. அது "**அரிபுண் சுவாதம்**" என்று வைத்தியர் முடிவு செய்தனர்.

இந்த நாட்களிற்தான் அதாவது 1919-ம் ஆண்டின் வசந்தகாலத்தில் காட்சிகளில் விசுவாசங்கொண்ட கிறீஸ்தவர்கள், குருமாரின் வேண்டாவெறுப்பினால் மனம் வருத்தப்பட்டுக்கொண்டு, தேவதாயாரின் கடைசிக் காட்சியின்போது அவர் கேட்டுக்கொண்டதுக்கு இணங்கக் கோவாடி இறியாவில் ஒரு சிற்றாலயம் கட்டினார்கள்.

ஆனாற் காட்சிகண்ட மூவரில் லூசியாமாத்திரம், அச்சிற்றாலயத்திற்போய்ச் செபிக்கக்கூடியவளானாள். லூசியா வீட்டிலும் கொள்ளைநோய் மும்முரமாக நடந்தது. அவளுடைய தகப்பனுக்கும் நோய் உண்டுபட்டு அவன் 1919-ம் வருடம் ஆடி மாசம் இறக்கவேண்டிவந்தது.

மரியறோசாவுக்கும் நோய் உண்டுபட்டு அவள் தப்பமாட்டாள் என்று எண்ணி அவளுக்குக் கடைசித் தேவதிரவிய அனுமானங்களும் கொடுக்கப்பட்டன. அவளும் தன் பிள்ளைகள் எல்லாரையும் அழைத்துப் பிரியாவிடை கூறினாள். லூசியாவை நோக்கி: "நீ சொல்வது எல்லாம் மெய்யென்றால், கோவாடி இறியாவுக்குப்போய் எனக்காக மன்றாடு" என்று கேட்டாள். லூசியா தாயின் கேள்விக்கு அமைந்து அங்குபோனாள். போகும் வழியில் இவள் செபமாலை சொல்லிக்கொண்டே போனாள். சிற்றாலயத்துக்கு முன்னே இவள் செபித்துத் தாய்க்குச் சுகம் கிடைத்தால் கோவாடி இறியாவுக்கு முழந்தாளால் நடந்துவருவதாகவும் ஒன்பது நாளைக்குத் தனது காலைப்போசனத்தைப் பிச்சைக்காரருக்குக் கொடுத்துவிடுவதாகவும் நேர்த்திக்கடன் செய்தாள்.

நான் வீட்டிற்குத் திரும்பியபொழுது என்தாய் எவ்வளவோ சுகம் அடைந்திருப்பதைக் கண்டேன். **மூன்று நாளில் அவருக்கு நல்ல சுகம் கிடைத்துவிட்டது.** இது ஒரு அற்புதமல்லவா? என்றாலும் என்தாய் இன்னுமே என்னை நம்பவில்லை. ஆ! எனது தாயின் அவவிசுவாசத்தைக்கண்டு நான் எவ்வளவாகத்தான் மனம் நொந்து வருந்தினேன்.

மறைந்த யேசுவுடன் ஐக்கியமான பலி

ஒருநாள் இயாசிந்தா மூச்சுவிடமுடியாது திக்குமுக்காடிக்கொண்டு லூசியாவுக்குச் சொல்லுவாள்: "நான் இரண்டு வைத்தியசாலைக்குப் போகவேண்டுமென்று தேவமாதா விரும்புகிறார். ஆனால் சுகமடையவல்ல; இன்னும் கூடுதலான வேதனைப்பட்டுப் பாவிகளை மனந்திருப்பவும் யேசுநாதருக்கு எனது அன்பைக் காண்பிக்கவுமே அப்படிச் செய்யவேண்டுமென்பது அவருடைய சித்தம். இயாசிந்தா இப்படிச் சொன்னபடியினால் தனக்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கும் வேதனை என்னவென்பதை இவள் அறிவாள். அறிந்து அந்த வேதனைகளையும் நேசித்தாள்.

இயாசிந்தா இன்னும் முதற்சற்பிரசாதம் பெறாதபடியால் இவளுடைய ஆகப்பெரிய ஆசை, தேவநற்கருணை பெற்றுவிடவேண்டும் என்பதுவேயாம். இவளுடைய பரலோக ஆச்சி இவள் சீக்கிரம் மரிப்பாளென்றும் அதற்குமுன் வைத்தியசாலைக்குப் போகவேண்டுமென்றும் அறிவித்தபொழுது: "நான் மறைந்த யேசுநாதரைப் பெற்றுக்கொள்ளாமல் மரிக்கப்போகிறேனே. தேவமாதா என்னை மோட்சத்துக்குக் கூட்டிக்கொண்டுபோக வரும்பொழுது அவரை எனக்குக் கொண்டுவந்து கொடுத்தாலோ" என்று இவள் பெருமூச்சுவிடுவாள். வைகாசி மாசத்தில், சரியான திகதியை அறியோம். கட்டளைக் குருவானவர் இயாசிந்தா போதிய ஆயத்தம் உடையவளெனத் தீர்மானித்து இவளுக்குச் சற்பிரசாசம் கொடுக்க முடிவுசெய்தார். இயாசிந்தா மரித்தபிற்பாடு இவளுடைய சீவிய வரலாறுகளைப்பற்றி அதிகாரமுறையுடன் விசாரணை செய்தவர்கள்முன் அந்தக் கட்டளைக் குருவானவர், இயாசிந்தா அவளையொத்த வயசுடையவர்களிலும்பார்க்கக் கூடுதலான நல்லறிவும் புத்தி யோசனையும் உள்ளவளென்றும் அவர்களிலும் கூடிய பயபக்தி உடையவளென்றும் சாட்சியிட்டிருக்கிறார். இந்த நல்ல இலட்சணங்கள் இவள் சற்பிரசாதம் பெற்றுக்கொண்டதன்மையிலும் விளங்கின என்றும் அறிக்கையிட்டிருக்கிறார்.

இயாசிந்தா முதற்சற்பிரசாதம் பெற்றபொழுது இவளுடைய உள்ளுணர்ச்சிகள் எவ்வகையானவை என்பதைக்

காட்டுதற்கு இந்தக் குருவானவர் சொல்லியிருக்கும் இந்தச் சாட்சியைவிட வேறுஒன்றும் அறியோம். ஆனால் ஒரு காரியம் நிச்சயமாகச் சொல்லலாம். யேசுவே நான் உம்மை நேசிக்கிறேன் என்று இவள் சொல்லும்பொழுது, அவர் தனது இருதயத்துடன் நெருங்கி ஐக்கியப்பட்டிருப்பதை இவள் நன்கு உணர்ந்தாள். இவளுடைய பூலோக ஆசை பூரணமாய்விட்டது. இவள் அவரை மோட்ச இராச்சியத்திலும் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்வது ஒன்றுமே இனிமேல் மீதியாக இருக்கிறது. அவர் இயாசிந்தாவுக்குத் தம்மை அங்கே மறைக்கமாட்டார். தமது மகிமைப்பிரதாபம் முற்றாய் விளங்கத் தம்மை இவளுக்கு வெளிப்படுத்துவார்.

இயாசிந்தாவின் தேகபெலன் அற்றழிந்துகொண்டு போகின்றது. ஆனால் தனக்களவாக, இவளுடைய ஆன்மா தேவபரம இரகசியங்களை ஊடறுத்துச் செல்கின்றது. இவள் மனநோக்கும், இவளைக் கிட்டிக்கிட்டிவருகிற நித்தியத்தில் மூழ்கிப்போகின்றது. தேவ திருச்சித்தத்தின்படி தனக்கு வரும் வாதை வேதனைகளை அனுபவிப்பதற்கு இவள் பரலோக காட்சியினால் வலிமையடைகின்றாள். தான் மனச்சம்மதமாய்ப் புரிந்துவரும் தபமுயற்சிகளாகிய சிலுவையையும் சுமக்க இவள் பெலனடைகின்றாள்.

சிலவேளைகளில் பொழுது சாய்ந்தபிற்பாடு, "எனக்குப் பெரும் தாகமாக இருக்கிறது. ஆனால் ஒன்றும் குடியேன். பாவிகள் மனந்திரும்பும்படியாகப் பரித்தியாகம் புரிய விரும்புகிறேன்" என்று லூசியாவுக்குச் சொல்லுவாள். உனக்கு ஒன்றும் வேண்டாமோ எனச் சிலர் கேட்டால், மெத்தப்பெரிய உபகாரம், ஒன்றும் வேண்டாம் என்றுவிடுவாள். கேட்டவர்கள் போனபின்பு, எனக்குப் பெரும் தாகம். ஆனால் ஒரு பரித்தியாகம் செய்வதற்காக நான் தண்ணீர் குடிக்கமாட்டேனென்று லூசியாவுக்குமாத்திரமே இரகசியமாகச் சொல்லுவாள். ஒருநாள் இவளுடைய தாய், ஒரு கோப்பை பால் கொண்டுவந்தாள். மெத்தப்பெரிய உபகாரம் ஆச்சி என்று சொல்லிவிட்டு, இவள் அந்தக் கோப்பையைக் கையாற் தள்ளிவிட்டாள். ஒலிம்பியா எப்படித்தான் பிரயாசப்பட்டும் அனுகூலம்

அடையவில்லை. ஒன்றையுமே இவளைச் சாப்பிடச் செய்ய முடியாது. ஒன்றுமே இந்தப் பிள்ளைக்கு விருப்பமில்லை என்று ஒலிம்பியா முறையீடு செய்தாள்.

ஒலிம்பியா போனபிற்பாடு லூசியா இயாசிந்தாவைக் கடிந்து நீ ஏன் உன் தாய்க்கு அமைச்சலீனம் காட்டினாய்; அந்தப் பாலைக் குடிப்பதினாலும் நீ பரித்தியாகம் புரியலாமே என்றாள். இயாசிந்தா மனம்வருந்தி, நான் அதைப் பற்றி நினைக்கவில்லை என்று சொல்லிவிட்டு, உடனே தாயைக் கூப்பிட்டு அவளிடம் பொறுதிகேட்டு, இனிமேல் தனக்கு என்ன கொடுத்தாலும் அருந்துவதாக வாக்குப் பண்ணினாள். பால் திரும்பக் கொண்டுவரப்பட்டபோது இவள் எவ்விதமான வெறுப்புங் காட்டாமல் முற்றாய் அதைக் குடித்துவிட்டாள். பின்பு இவள் லூசியாவை நோக்கி: நான் அதைக். குடிப்பதற்கு என்னை எவ்வளவாகத்தான் வலோற்காரம் செய்யவேண்டியிருந்ததென்பதை நீ அறிந்தாலோ என்றாள். அன்று தொடக்கம் பாலோ, எவ்வித பானங்களோ இவளுக்குக் கொடுத்தால் அவற்றை எப்போதும் பருகிவந்தாள். இவைகளைப் பருகும்பொழுது, ஒவ்வொரு முறையும் முந்தினவிசையிலும் எனது வெறுப்பு அதிகரிக்கின்றது. ஆனால் அவற்றை ஆண்டவருடைய நேசத்துக்காகவும், எங்கள் பரலோக ஆச்சியாகிய பரிசுத்த தேவதாயாரின் நேசத்துக்காகவும் பருகிவருகின்றேன் என்பாள்.

தனது மகளுக்குப் பாலில் வெறுப்பென்று தாய்க்குத் தெரிந்தாலும், ஒருநாள் ஒரு கோப்பை பால் கொடுத்துவிட்டு, பக்கத்தில் ஒரு பாத்திரத்தில் கண்ணைக் கவருவதும், வாயூறச் செய்வதுமான அழகிய சில முந்திரிகைப்பழங்களையும் வைத்தாள். வைத்துவிட்டு இயாசிந்தா உனக்குப் பால் பிரியமில்லாவிட்டால், முந்திரிகைப்பழங்களையாவது சாப்பிடு என்றாள். மெத்தப்பெரிய உபகாரம் ஆச்சி. எனக்கு முந்திரிகைப்பழம் வேண்டாம். அதைக் கொண்டுபோய்விடு. அப்படிச் சொல்லிவிட்டுத் தனக்குள்ளபடி பிரியமில்லாத பாலைத்தான் குடித்தாள். ஒலிம்பியா தனது மகள் படிப்படியாகப் பாலில் விருப்பங்

கொள்ளுகிறாள் என்று எண்ணிச் சந்தோஷப்பட்டாள். ஆனால் தனது இரகசியங்களை எல்லாம் வெளிவிடுவதற்கு நம்பிக்கையான ஓராள் பக்கத்திலிருக்கிறாளல்லவா? அந்த முந்திரிகைப்பழங்கள் எனக்கு மகா பிரீதியை உண்டுபண்ணின. ஆனாலும் ஆண்டவருக்கு நான் ஒரு பரித்தியாகம ஒப்புக்கொடுக்கும்படியாக அதைச் சாப்பிடவில்லை என்று லூசியாவுக்குச் சொன்னாள்.

ஒருநாட் காலமே பள்ளிக்கூடத்துக்குப் போகமுந்தி லூசியா இயாசிந்தாவைக் கண்டுவிட்டுப் போகவந்தாள். இவள் கோலம் முழுதும் மாறிப் போயிருப்பதைக் கண்டு உனக்கு இன்றைக்குக் கூடினவருத்தமா? என்றாள்.

இராத்திரி நான் மெத்த வேதனைப்பட்டேன். கட்டிலில் நான் சரிந்து படுக்காமல் இருக்கும் பரித்தியாகத்தைச் செய்ய விரும்பினேன். இராமுழுவதும் ஒரு நிமிஷமாவது கண்ணோடுகண் மூடவில்லை. தன்னந்தனிய இருக்கும் பொழுது கட்டிலால் இறங்கி, சம்மனசு தங்களுக்குச் சொல்லிக்கொடுத்த செபத்தைச் சொன்னதாகவும் இவள் லூசியாவுக்கு அறிவித்தாள். தான் தலையைக் குனிந்து அந்தச் செபத்தைச் சொல்லமுடியாதென்றும் அப்படிக் குனிந்தால் நிலத்தில் விழுந்துபோகக்கூடுமென்றும் பயந்து, முழந்தாள் மாத்திரம் மடித்து அச்செபத்தைச் சொன்னதாகவும் லூசியாவுக்குத் தெரிவித்தாள். லூசியா தங்கள் பிரிவின் தலைமைக் குருவானவரைச் சந்திக்க நேரிட்டபடியால், அவருக்கு இயாசிந்தாவின் செயல்களைப்பற்றித் தெரிவித்தாள். ஒலிவால் என்ற அந்தக் குருவானவர், இனிமேல் இயாசிந்தா எழும்பியிருந்து செபம் செய்யப்படாதென்றும், கட்டிலிலே படுத்திருந்துகொண்டே அவசியமற்ற இளைப்புக்கு இடம்கொடாது இயன்றமட்டும் சொன்னாற்போதும் என்றும் இவளுக்கு அறிவிக்கும்படி சொல்லியனுப்பினார். குருவானவரின் கட்டளை உடனுக்குடனே அறிவிக்கப்பட்டது.

“அப்படியானால் ஆண்டவர் சந்தோஷப்படுவார் தானே” என்றாள் இயாசிந்தா.

ஆம், ஆண்டவர் சந்தோஷமாயிருப்பார். ஏனென்றால், தலைமைக் குருவானவரின் சொல்லுக்கேட்டு நடப்பதுதான் ஆண்டவருடைய சித்தம்.

“மெத்தச் சரி, நான் இனிமேற் படுக்கையைவிட்டு எழும்பமாட்டேன்.” அமைச்சலும், மற்றமற்றப் பரித்தியாகங்களிலும் எவ்வகையாலும் குறைவில்லாத பரித்தியாகமல்லவா ?

வில்லா நோவாடி உறேம் நகரின் வைத்தியசாலை

1919-ம்வருஷம் கோடை காலத்தில் எமது நோயாளியுடைய நிலையில் எவ்வித மாற்றமும் இல்லாது போயிற்று. ஆனபடியால் இவளை வைத்தியசாலையில்வைத்துப் பராமரிக்கவேண்டும்என வைத்தியர் தீர்மானித்தனர். வைத்தியருடைய முடிபை இயாசிந்தாவுக்கு அறிவித்தபொழுது இனிமேற் தனக்குச் சொந்தமானவர்கள் எல்லாரிடத்திலுமிருந்து மீட்சியில்லாது பிரிந்துபோகவேண்டுமே என்பதைப்பற்றி இவள் சிந்தித்தாள். தனது அன்புக்குரிய லூசியாவைவிட்டுப் பிரியவேண்டும் என்பதே இவளுக்கிருந்த பெரிய மனவருத்தமாகும். தனது சிநேகிதி தன்னைக் காணவரும்பொழுதெல்லாம் தான் அவ்வளவு வருத்தப்படவில்லையென்றுதான் இவள் உணர்ந்தாள். இனிமேல் தன்னந்தனியே இருந்து பாடுபடவேண்டுமே. இயல்பில் அன்பால் உருகும் உள்ளம் அமைந்த இந்தச சிறுமிக்குத் தனது அருமைச் சிநேகிதியை விட்டுப்பிரிவதென்றால் தாங்கற்கரிய வேதனையாயிற்று.

பத்திமாநாயகி பிரான்சீசைத் தரிசிக்கவந்தபொழுது இயாசிந்தா லூசியாவை மறந்துவிடவில்லை. “நீரும் என்னுடன் வைத்தியசாலைக்கு வருவீரோ” என்று தேவமாதாவைக் கேட்டேன். அவர் இல்லையென்றுவிட்டார். அதுதான் எனக்குச் சொல்லரிய மனவேதனையை உண்டுபண்ணியது. ஆச்சி என்னை வைத்தியசாலைக்குக் கூட்டிக்கொண்டுபோவார் என்றும், அதன்பின் நான் தனியேதான் அங்கிருப்பேன் என்றும் அத்திருத்தாயார் எனக்கறிவித்

தார். இவைகளைச் சொன்ன பின்பு, இயாசிந்தா சிறிது நேரம் யோசனையில் அமிழ்ந்திப் போயிருந்தாள். அதன் பின்பு, ஆ! நீ என்னுடன் வந்தாலோ? நீ என்னுடன் வராததுதான் என்னாற் தாங்கமுடியவில்லை. வைத்தியசாலை என்றால் அவ்வளவு வெளிச்சமில்லாத ஒரு மங்குளமான அறைதானே. அங்கு ஒன்றையும் காணமுடியாது. நான் அங்கே தனிய இருந்துதான் பாடுபடப்போகிறேன். ஆனாலும் காரியமில்லை தேவனுக்காகவும், பாவிகள் மனந்திரும்பும்படியும், பாப்பாண்டவரின் கருத்துகள் நிறைவேறும்படியும் நான் பாடுபடுவேன். வில்லா நோவாடி உறேமில் அர்ச். அகுஸ்தீனார் வைத்தியசாலையில் இயாசிந்தா ஏற்றுக்கொள்ளப்பட்டாள். இவளுடைய பெற்றார் அதற்குவேண்டிய செலவைக் கட்டினார்கள். அங்கு 1919-ம் வருஷம் ஆடி, ஆவணி மாசங்களை இவள் கழித்தாள். தாய் இவளை முதன்முதல் சந்திக்கவந்தபொழுது இவளுக்கு ஏதாவது வேண்டுமோ? என்று கேட்டாள்.

லூசியாவைக் காணக்கூடுமானால் நான் பெரும் சந்தோஷம் அடைவேன்.

ஒலிம்பியா வில்லா நோவாடி உறேம் வைத்தியசாலைக்குத் திரும்பிவருவதற்குத் தருணம் கிடைத்தவுடன் எவ்வளவோ சங்கடப்பட்டுத்தான் தனது மருகி லூசியாவை அங்கு கூட்டிக்கொண்டுவந்தாள். இயாசிந்தா தனது மைத்துனியைக் கண்டதும், மகா அன்புடன் அவளைக் கட்டி அரவணைத்து, தாய் பட்டணத்துக்கு அலுவலாய்ப் போகும்பொழுது தங்கள் இருவரையும் தனிமையாய் விட்டு விடும்படி அவளைக்கேட்டு உத்தரவு பெற்றுக்கொண்டாள்.

ஒலிம்பியா வீட்டுக்கு மீளும்பொழுது மகளே, உனக்கு ஏதாவது தேவையா? என்று இயாசிந்தாவை வினவினாள். நீ திரும்பி வரும்பொழுது லூசியாவையும் கூட்டிக்கொண்டுவா என்றாள்.

லூசியாவே இவளுடைய சகல இரகசியங்களுக்கும், நம்பிக்கையான பாதுகாப்பு. லூசியாவே, பரலோகத்தி

விருந்து தங்களேச் சந்திக்கவரும் இராக்கினியைப் பூமியில் நினைப்பூட்டும் உயிர்போல இருப்பாள்.

ஒலிம்பியா இரண்டாம் விசையும் தனது சின்னக் கடைக்குட்டிக்கு அமைகின்ருள். அமைந்து லூசியாவை யும் கூட்டிக்கொண்டு இயாசிந்தாவைச் சந்திக்கவந்தாள். லூசியாவுடைய தகப்பன், சில நாட்களின் முன்தான் இறந்துபோனன். இயாசிந்தா தேவநேசத்துக்காகவும், பாவிகள் மனந்திரும்பும்படியாகவும், பாப்பாண்டவருக்காக வும் மகா தைரியத்துடனும், மனப்பாக்கியத்துடனும் பாடு படுவதைக் கண்டு லூசியா அகமகிழ்ந்தாள்.

இச் சிறுமி வேறு விஷயங்கள் ஒன்றையும்பற்றிப் பேச அறியாள். இந்த எண்ணங்களே இவள் ஆன்மாவிற் பூரண அதிகாரம் செலுத்தும் எண்ணங்கள். தேவனே, இவளே ஆண்டுகொண்டு, இவள் ஆத்துமத்தின் அடித்தளம் மட்டாய்ச் சென்று சுவறிவிடும்படி செய்த எண்ணங்கள். எமது நோயாளியின் நிலேமையில் எவ்வித மாற்றமும் இல் லாதபடியினல், இவள் மீண்டும் அல்யுஸ்திரேல் பிரிவிற் குக் கொண்டுவரப்பட்டாள்.

இயாசிந்தாவின் இடப்பக்கத்தில் ஒரு புண் அலே வைத்து, வெளிகொள்ளத் தொடங்கியது. அதிலிருந்து இடைவிடாது ஏராளமாகச் சிதல் வடிந்து அந்தப்பரிதாபம் நிறைந்த சிறுமிக்கு எவ்வித இளேப்பாற்றிக்கும் இடமில் லாது செய்துவிட்டது. புண்ணேக்கழுவி மருந்துவைத் துக் கட்டும்வேளேயில், இவளுக்கு உண்டாகும் தாங்கமுடி யாத வேதனே எவ்வளவு என்று சொல்லமுடியாது. ஒரு சிறிதென்ருலும் இவள் முறைப்பாடு சொல்லவேயில்லே. அதற்குப் பதிலாக ஆகக் கடும்வேதனே உண்டானவேளே யில், இவள் ஒருசிறு புன்னகைமாத்திரம் தன் உதடுகளில் அரும்பச் செய்வாள். இயாசிந்தாவின் இந்த வேதனே களின் மத்தியில் இவளுக்கு இன்னும் ஒரு மகா கஷ்டமும் அரிகண்டமும் நிறைந்ததான ஒரு சம்பவம் நிகழலாயிற்று. அது, விஞேதப்பிரியரான சில ஈனஇரக்கமற்ற பேதை மாந்தர் இவளிடம் வந்து இவளே நூருயிரம் கேள்விகள்

கேட்டு அலட்டிக்கொண்டிருந்ததுவேயாகும். ஒருநாள் இவளிடம் கேட்ட கேள்விகளுக்கு இவள் மறுமொழி சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு சிறு விபரத்தைப்பற் றிச் சிறிது தவறிப்போனுள். லூசியா இதைப்பற்றி நினைப்பூட்டினதற்கு இயாசிந்தா கொடுத்த மறுமொழி இவளுடைய கண்ணீர்கள் அன்றிப் பிறிதொன்றல்ல.

முதற் காட்சியின் இரகசியத்தைக் காப்பாற்ருது தாய்க்கு அறிவித்தபடியால், லூசியாமுன் முழந்தாளிட்டுப் பொறுதிகேட்டதுபோலவே இப்போதும அந்தவித மாகவே பொறுதிகேட்டாள்.

"கபேக்கோ" வில் எங்களுடைய மறைவிடத்தைக் காண நான் எவ்வளவாகத்தான் ஆசிக்கிறேன். நீ கோவாடி இறியாவுக்குப் போகும்பொழுது அங்கு எனக்காக மன் ருடிக்கொள். நான் அங்கு இனிமேல் வரமாட்டேன் என் பது நிச்சயம். இயாசிந்தா குனியும்பொழுது அவளுடைய பழுவிலுள்ள புண்ணிலிருந்து பெருந்தொகையாகச் சீழ் வடிந்தபடியிருந்தது. அதனுல் சாதாரண கலயம் ஒன்றை நிரப்பலாம்.

இவைகளினுல் இயாசிந்தா அனுபவித்த வேதனேகள் எவ்வளவு என்பதை இலேசாக அறியலாம். ஆனுல் இவ ளோ அவற்றையெல்லாம் வெளியிடாமல் மிகச் சாவ தானத்துடன் மறைத்து வைத்துக்கொண்டாள். தனது வேதனேகளேச் சருவேசுரன்மாத்திரமே அறிவதினுல் தனக்கு அதிகமான புண்ணிய பேறுபலன்கள் உண்டாகும் என்பதை இவள் நன்கு உணர்ந்தாள்.

"எனது விலாக் காயத்தினுல் நான் பெரிதும் வேத னேப்படுகிறேனென்று ஒருவருக்கும் சொல்லாதே. ஆச் சிக்குத்தானும் சொல்லாதே. அதனுல் அவளுக்கும் பெரும் துயரம் உண்டாகும்."

தேவனுக்கும் தேவமாதாவுக்கும் மாத்திரம் தனது வேதனேகளேப்பற்றிச் சொல்லலாமென இயாசிந்தா லூசி யாவுக்குக் கட்டளேயிட்டிருந்தாள். அதுவும் ஒரு சின்ன

வேதசாட்சியின் நன்றியறிதலை அறிவித்தற் பொருட்டு மாத்திரம் அப்படிச் செய்யலாம்.

லூசியா ஒருநாட் காலமே பள்ளிக்கூடத்துக்குப் போகும்பொழுது நோயாளியைச் சந்திக்கவந்தவிடத்து, பள்ளிக்கூடத்துட் பிரவேசிக்கமுன் கோயிலுக்குப்போய்த் தனது ஆசைமுழுவதும் யேசுநாதரிற்றானே சென்றுகொண்டிருக்கிறதென்றும், தான் அவரை எவ்வளவோ நேசிக்கிறதாகவும், யேசுக்கிறீஸ்துநாதருக்கு அறிவிக்கும்படி இயாசிந்தா கேட்டுக்கொண்டாள்.

இன்னும் நான் அவருக்கு அநேகாநேக வந்தனங்கள் சொல்லுவதாகவும் யேசுநாதருக்கு அறிவி.

தன்னந்தனியச் சாவை எதிர்நோக்கல்

மனுவல் பேதுருவுடைய வீடு இன்னுமொருமுறை பரலோக இராக்கினியின் தரிசனையைப் பெறும்பாக்கியம் அடைந்தது. (முதல்முறை பிரான்சீசுக்கும் இயாசிந்தாவுக்கும் ஒருமிக்கத் தேவதாயார் அவ்வீட்டிற்றானே காட்சியளித்தது.) தமது விசேஷ அன்புக்கு இலக்காக இருக்கும் தமது அருமையான குமாரத்திக்குத் தேற்றரவு உண்டுபண்ணும்படியாகவும், புதிய பரித்தியாகங்களைப் புரியும்படி கேட்கவுந்தான் தேவதாயார் இந்தக்காட்சியை அளிக்கலாயினர். இக்காட்சியிற் தேவதாயார் தனக்குச் சொன்னவைகளை இயாசிந்தா லூசியாவுக்கு அறிவித்திருக்கிறாள்.

நான் லிஸ்பொன் நகரத்து வேறொரு வைத்தியசாலைக்குப்போவேன் என்று எனக்கு அறிவித்திருக்கிறார். உன்னையாவது என் பெற்றோரையாவது நான் இனிமேற் காணமாட்டேன். அந்த வைத்தியசாலையில் மிகவும் கடுமையான வேதனைகளை அனுபவித்த பிறகு நான் தன்னந்தனிய உயிர்துறப்பேன். நான் ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லையென்றும், என்னை மோட்சத்துக்குக் கூட்டிக்கொண்டு போகத் தாமே வருவாரென்றும் அறிவித்திருக்கிறார். இவற்றைச் சொல்லியபின் அழுதழுது, லூசியாவைக் கட்டியரவணைத்து முத்தமிட்டு நான் இனிமேல் உன்னைக்காணமாட்-

டேன். நீயும் என்னைக் காணவரமாட்டாய். எனக்காக அதிகம் மன்றாடிக்கொள். நான் முற்றும் தனிமையாகவே மரணிப்பேன்.

தான் தனிமையாகச் சாகவேண்டுமென்ற எண்ணம் இவளுடைய மனதை இடைவிடாது அருட்டிக்கொண்டிருந்தது. லூசியா இவளுக்கு ஆறுக்கதை சொல்லி ஊக்கப்படுத்தினாள். ஒருநாள் தேவமாதாவின் படமொன்றைக் கையிற்பிடித்து அதை முத்தமிட்டுக்கொண்டு: "என் பரலோக ஆச்சி, என் நல்ல தாயே நான் முற்றும் தனிமையாகத்தான் சாகவேண்டுமோ" என்று சொல்லிக்கொண்டிருந்ததை லூசியா கண்டாள்.

தேவமாதா உனக்கு உதவி செய்யப்போகிறாவே. அப்போது தனிமையாகச் சாகப்போவதைப்பற்றி ஏன் கவலைகொள்வான் என்றாள் லூசியா.

அது மெய்தான்; கவலைப்பட நியாயம் ஒன்றுமே இல்லை. ஆனால், ஏதோ என்னை அறியாமல் தேவமாதா என்னை மோட்சத்திற்குக் கூட்டிக்கொண்டுபோக வருவா என்பதைச் சிலவேளைகளில் மறந்துவிடுகிறேன்.

நீ மோட்சம் போவதற்கு இன்னும் அநேக நாளில்லை. ஆனால் நானோ.........

"என் அருமைச் சிநேகிதியே கலங்காதே. நீ இன்னும் இவ்வுலகில் இருக்கவேண்டுமென்பது தேவதாயாரின் விருப்பம் அல்லவா?

லிஸ்பொன் நகரத்துப் பிரசித்திபெற்ற ஒரு கண்வைத்தியர் ஹெண்டிறி சூசே லிஸ்போவா என்பவர் பத்திமாவுக்கு வந்து காட்சிகண்ட இரு பிள்ளைகளையும் சந்தித்தார். இயாசிந்தாவின் மகாபரிதாபத்துக்குரிய நிலைமையைக் கண்டிரங்கி இந்தப் பிள்ளையை லிஸ்பொன் நகர வைத்தியசாலைக்குக் கொண்டுபோய் அங்கு சத்திரவைத்தியம் செய்வித்தால் இவள் கட்டாயம் சுகம்பெறுவாள் என்றார். நோயாளிக்குச் சுகம் வருமென்ற நம்பிக்கைக்கு இடமில்லாதிருந்தாலும், தனக்குச் சுகம்வரவே வராதென்று இயாசிந்தா பிடிவாதமாகச் சொல்லியிருந்தாலும், இவளுடைய பெற்றோர் அந்த

நல்ல வைத்தியரின் கேள்விக்கிணங்கிக் குழந்தையை லிஸ்பொன் நகர வைத்தியசாலைக்குக் கொண்டுபோகச் சம்மதித்தார்கள்.

"மொன்ரேலா" பிரபுவும் அதே அபிப்பிராயங் கொண்டிருந்தார். "அல்வாபோசோம்" பிரபுவும் லிஸ்பொன் நகரத்துக்கு இயாசிந்தாவைக் கட்டாயம் கொண்டுபோக வேண்டுமென்றும், செலவில் ஒரு பங்கைத் தாம் ஏற்றுக்கொள்வதாகவும் வாக்குப்பண்ணினார். லிஸ்பொன் நகரிலிருந்த போதிய செல்வர்களான ஒரு குடும்பத்தார் நோயாளியைத் தங்கள் வீட்டிலேற்று, இவளுடைய சிகிச்சை முடியுமட்டும் தாங்கள் வைத்துக்கொள்ளுவதாகவும் வாக்குப் பண்ணியிருந்தார்கள்.

கடைசியாக எல்லாரையும் விட்டுப்பிரிந்து போகவேண்டிய நேரமும் வந்துவிட்டது. இயாசிந்தா தனது பெற்றார் இனபந்துக்கள் எல்லாரையும் சொல்லரிய அன்புடன் அரவணைத்து முத்தமிட்டாள். விசேஷமாக லூசியா தான் அதிகமாக அவளுடைய அன்பைக் கவர்ந்துகொண்டாள். இனிமேல் நான் உங்களைக் காணமாட்டேன். ஆச்சியையும் காணமாட்டேன், அப்புவையும் காணமாட்டேன், அண்ணன்மாரையும் காணமாட்டேன், ஒருவரையுமே காணமாட்டேன். தன்னந்தனியே சாவை எதிர்பார்ப்பேன்.

நீ அதைப்பற்றி ஓயாமல் நினையாதே. அதைப்பற்றி நினைக்கும்படி என்னை விட்டுவிடு, எவ்வளவு அடிக்கடி அதைப்பற்றி நினைக்கிறேனோ அவ்வளவு அதிகம் வேதனைப் படுகிறேன். ஆதலால் நான் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கும் பரித்தியாகங்களும் அதிக தொகைப்பட்டனவாகும்.

நீ மோட்சத்தில் என்ன செய்வாயென்று லூசியா இயாசிந்தாவைக் கேட்டாள். நான் யேசுநாதரையும் மாசில்லாதமாதாவையும் அதிகம் அதிகம் நேசிப்பேன். நான் உனக்காக மன்றாடுவேன். பாவிகளுக்காகவும், எனது பெற்றார், சகோதரர் சகோதரிகளுக்காகவும், தங்களுக்காக மன்றாடும்படி என்னைக் கேட்டுக்கொண்ட சகலருக்காகவும் மன்றாடுவேன். அதன் பிற்பாடு இவள் மகா ஆர்வத்துடன் எங்களாண்டவரைப்பற்றியும் தேவமாதாவைப்பற்றியும் பேசத் தொடங்கினாள். ஆண்டவருடைய அன்பின் நிமித்தமும் தேவமாதாவின் அன்பின் நிமித்தமும் பாடுபட முழு இருதய அன்புடனும் ஆசிக்கிறேன். நான் பாவிகளுக்காகப் பரித்தியாகக் கிரிகைகள் புரிவதைப்பற்றி அவர்கள் மகிழ்ச்சி கொள்வர் என நம்புகிறேன். எல்லாரையும் விட்டுப்பிரிய வேண்டிய நேரம் கிட்டியதும் தான் கடைசியாகத் தனது நம்பிக்கைக்குரிய அருமைச் சிநேகிதருக்குச் சொல்லவேண்டிய நன்மதிகளை, சிபாரிசுகளை நெடுநேரத்துக்குச் சொல்லிக்கொண்டிருந்தாள். இவளுடைய இருதயம் பிளந்து போகப்போகின்றது என்று சொல்லக்கூடிய விசனத்துடன் இவள் லூசியாவுக்குச் சொன்னதாவது:

இனிமேல் நான் இவ்வுலகில் உன்னைக் காணவேமாட்டேன். நான் மோட்சம்போகுமட்டும் எனக்காக மன்றாடு. நான் அங்கு போனதும் உனக்காக மன்றாடுவேன்.

நாங்கள் அறிந்த இரகசியத்தை ஒருவருக்கும் சொல்லாதே, உன்னைக் கொன்றாலும் சொல்லாதே. யேசுநாதரையும் மாசில்லாத மாதாவையும் அதிகமாக நேசி. பாவிகள் மனந்திரும்பும்படி அதிகமதிகம் பரித்தியாகங்களைப் புரிந்துகொண்டுவா என்று இயாசிந்தா லூசியாவுக்குப் புத்தி புகட்டினாள்.

தான் நேசிப்பவர்கள் சகலரையும் விட்டுப்பிரிதல், ஒரு சின்ன இருதயத்துக்கு எவ்வளவு கஷ்டம் என்பதை ஊகித்துக்கொள்ளலாம். ஒருவைத்தியசாலையில் தனிமையாக ஒதுக்கப்பட்டுத் தனது தாய், சகோதரர், சகோதரிகள், மைத்துனி முதலியவர்களின் உதவி ஒன்றுமேயில்லாது தனியவிடப்படுவது என்றால் அது இருதயத்தை எவ்வளவு வாறா

கத் தாக்கும் மகா உபத்திரவமாகும். இதிலும் பார்க்கக் கூடிய குரூரம் நிறைந்த வேதனையைச் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுக்க வேறு தருணம் கிடைக்குமா?

"என் யேசுவே, நீர் அநேகம் பாவிகளை மனந்திருப்புவீர் என்று எண்ணுகிறேன். எல்லாரையும் முற்றாக விட்டுப் பிரிவது மகா பரித்தியாகம். தாங்கற்கரிய பரித்தியாகம்."

கடைசி நாட்கள்

லிஸ்பொன் நகரிலே, இயாசிந்தாவை ஏற்றுக்கொள்வதற்கு ஏலவே பொருத்தனை செய்த குடும்பத்தினர் இந்த நோயாளியின் கேவலமான மிகவும் பரிதாபத்துக்குரிய நிலையைக்கண்டதும் தங்கள் முந்திய வாக்கைமீறி இயாசிந்தாவை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். தனது பிள்ளையைக் கூட்டிக்கொண்டுவந்த ஒலிம்பியா என்ன செய்வது என அறியாது திகைத்து, சிஸ். மேரி "**பியூறிவிக்கேஷன்**" (S. Mary Purification) என்ற கன்னியாஸ்திரியின் தலைமையின்கீழ் நடைபெற்றுக்கொண்டுவந்த "**புதுமை மாதாவின் அனாத சாலை**" வாசலிற் தட்டினாள். அங்கிருந்த கன்னியாஸ்திரிமார் மகா சந்தோஷத்துடன், இயாசிந்தாவை இரண்டு கையாலும் ஏந்தி எடுத்துக்கொண்டுபோய் விட்டார்கள். மடத்திலே இயாசிந்தா ஏற்றுக்கொள்ளப்பட்டதும், ஒரு அம்மா மடத்துட் பிரவேசித்து நோயாளியைக் காணும்படி உத்தரவு பெற்றாள். பெற்றதும் தனது கருத்து நிறைவேற மன்றாடும்படி இயாசிந்தாவைக் கேட்டுக்கொண்டதுமன்றி, அப்பிள்ளையை அங்கு வைத்துப் பராமரிப்பதற்காக முற்பணமாகவே ஐம்பது நாணயங்களைச் சிரேஷ்டரிடம் கொடுத்தாள்.

சிஸ். பியூறிவிக்கேஷனின் ஆதரவின்கீழ் அக்காலத்தில் இருபது அனாத பிள்ளைகள் இருந்தார்கள். இவர்கள் எல்லாரும் முற்றாய் அல்லது ஏறக்குறைய, முற்றாய்த் தருமத்தி

னாலேதான் வளர்க்கப்பட்டார்கள். இந்தக் கன்னியாஸ்திரியை அனாத பிள்ளைகள் எல்லாரும் **தொட்டம்மா** என்றே அழைப்பார்கள். இயாசிந்தாவும் அந்தப்பேர் சொல்லித்தான் சிஸ்ரர் பியூறிவிக்கேஷனை அழைத்து வருவாள். அது மட்டுமா? அந்த அனாத மடத்தை இயாசிந்தா "**பத்திமா நாயகி நிவாசம்**" என்றும் அழைக்கத் தொடங்கிவிட்டாள். அந்த மடத்தில் இயாசிந்தா தனது பதமையான குணத்தினாலும், பயபத்தியினாலும், பொறுமையினாலும், அடக்க ஒடுக்க வணக்க மரியாதையினாலும் தனது உபகாரிகளுக்குக் காண்பித்த அணைகடந்த நன்றியினாலும் சகலரும் இவளையும் இவளுடைய புண்ணிய சீவியத்தின் ஞாபகங்களையும் என்றென்றும் நினைவுகூரும்படி செய்துவிட்டாள். இவள் அங்கு செலவிட்டது ஆகப் பதினைந்து நாட்கள் மாத்திரம்.

அனாதசாலையிற் சேர்க்கப்பட்ட இப்புதிய பிள்ளையின் புண்ணிய நடபடிகள் மற்றவர்களுடைய ஞான நன்மைகளுக்குப் பெரிதும் துணைபுரிவனவாயின. அல்லாமலும் இயாசிந்தா நன்முன்மாதிரிகை காட்டுவதுடன், அமையாத அனாத பிள்ளைகளுக்கு நற்புத்திமதி சொல்லி மோட்சம் போவதற்குக் கீழ்ப்படிதலும், மனவலிமையும், பிரமாணிக்கமும் உள்ளவர்களாயிருத்தல்வேண்டும் என்பதை அவர்களுக்கு வற்புறுத்தி வருவாள்.

அதிகார முறையாகத் திருச்சபை நடாத்திய ஒரு விசாரணையில் இயாசிந்தா "தொட்டம்மா" என்று அழைத்துவந்த கன்னியாஸ்திரி சொல்லியிருப்பதாவது:

"அந்தப் பிள்ளை ஒருபோதும் விளையாடவில்லை. சாப்பாட்டில் மிகவும் ஒறுப்பனவாக இருந்தாள். தனது சுகவீனத்தைப்பற்றி ஒருபோதும் முறுமுறுக்கவேயில்லை. ஒவ்வொருநாளும் செபமாலை சொல்லுவாள். எவராவது பொய் சொல்வதைக்கேட்டால், அதை இவள் தாங்கமாட்டாள். தனக்கு முன்பாக உண்மையை மறுப்பவர்களை இவள் வெட்டவெளியாகக் கண்டித்தாள். கோயிலுக்குப் போவது இவளுக்கு மகா விருப்பம். யாரும் கோவிலுக்குட் கதைத்துக்கொண்டிருப்பதைக் கண்டால், அப்படிச் செய்யப்படாது

என்று இவள் மரியாதையுடன் நன்மதி புகட்டுவாள். இவளுடைய இவ்வித நன்மதிகளைக் கேட்ட சிலர், கோபித்து இவளுக்குக் கடுமொழி, சுடுமொழிகளுங் கூறினார்கள். ஆனால் இவள் அவ்வித அவமானங்களை யேசுநாதரின் நேசத்துக்காக ஏற்றுக்கொள்ளுவாள். இவளிருந்த அறையிலிருந்து கோவிலின் மேல் வீட்டுவிறாந்தை ஒன்றுக்குப் போகக்கூடிய வசதியிருந்தது. இவள் அங்கிருந்து நற்கருணைப் பேழையை நல்லாய்க் காணலாம். ஆதலால் அங்குபோய் மற்றவர்கள் காணாதபடியிருந்து செபம் செய்வாள். இவள் உள்ளொடுக்கமாயும், வேகமான பத்தியுடனும் செபம் செய்வதையும், விசேஷமாக உருக்கமான அன்புடன் நற்கருணைப் பேழையின்மீது கண்ணோக்கியபடி இருப்பதையுங் கண்டவர்கள் உள்ளத்திற் பத்தியருட்சிக்குரிய நற்பதிவுகள் உண்டாயின.


அங்கிருந்து அவள் நற்கருணைப் பேழையைக் காணக் கூடியதாயிருந்தது.

அனாதசாலையில் இவள் சுகநிலை இடங்கொடுத்த அளவுக்கும் குருவானவர் அங்கு வரக்கூடிய வசதிக்கும் இணங்க இவள் அடிக்கடி சற்பிரசாதம் பெறுவாள். சித்திரவதை செய்யப்பட்டபான்மையாக, உபத்திரவத்துக்குள்ளான இவள் சரீரம் நாளுக்குநாள் இவளுக்கு நாவினால் எடுத்துச் சொல்லமுடியாத வேதனை உண்டுபண்ணியது. ஆனால் அங்கும் தேவதாயார் இவளை அடிக்கடி சந்தித்து இவளுக்கு ஆறுதல் புரிந்துவந்தார்.''

ஒருநாள் இவள் கட்டிலைவிட்டு எழும்பமுடியாது படுத்திருந்தபோது அனாதசாலைச் சிரேஷ்ட தாயார் இவளைக்

காணவந்தார். அப்போது இயாசிந்தா "**தோட்டம்மா**" நீங்கள் சற்றுப் பொறுத்துவாருங்கள். நான் இப்போது தேவமாதாவின் தரிசனையைக் காத்திருக்கிறேன் என்று சொல்லிப் பரலோக பிரகாசத்தினால் மாற்றம் அடைந்த தன் முகத்தைத் தேவமாதா வரும்வழியை நோக்கித் திருப்பி ஒரேபார்வையாகப் பார்த்தபடி இருந்தாள்.

தேவமாதா தரிசனை கொடுத்துவிட்டுப் போனபிற்பாடு, இந்தப் பரிசுத்த சிறுமி தனது வயசுக்கும், கல்வி அறிவுக்கும் இயல்பிற் கிட்டாத உன்னத விஷயங்களைத் தனது தொட்டம்மாவுக்குச் சொல்லிக்கொண்டிருந்தாள். பாவத்தைப்பற்றியும், வரப்போகிற யுத்தத்தைப்பற்றியும், (இரண்டாம் உலக யுத்தம்) குருமாரைப்பற்றியும் இவள் வெளியிட்ட எண்ணங்களை சிஸ்ரர் பியூறிவிக்கேஷன் எழுதிவைத்திருக்கிறார்.

இவைகள் எல்லாம் உனக்கு எப்படித் தெரியும் என்று தொட்டம்மா கேட்டார்.

தேவமாதாதான் எனக்குப் படிப்பித்தார். சிலவற்றை நானாகவே கண்டுபிடித்தேன். ஏனென்றால் எப்போதும் **நினைக்கும் வழக்கம்** என்னிடம் உண்டு.

சில விஷயங்களைப்பற்றி இயாசிந்தா தீர்க்கதரிசனங்களும் சொல்லி இருக்கிறாள். அந்த அனாதசாலையிலிருந்த புளோறிடா, தெரேசா என்ற இரண்டு கன்னியாஸ்திரிமாருடைய மரணத்தைப்பற்றியும், "தொட்டம்மா" கன்னியாஸ்திரிக்கும், தன்னைப் பாமரித்த வைத்தியர்களுக்கும் பிற்காலத்தில் நிகழவிருந்தவைகளைப்பற்றியும், இன்னும வேறு சிலருடைய வருங்கால சம்பவங்களைப்பற்றியும் இயாசிந்தா தீர்க்கதரிசனங்கள் சொல்லியிருக்கிறாள். அவைகள் எல்லாம் அந்தப்படியே சம்பவித்தபடியால் இயாசிந்தா பரலோகத்திலிருந்து பெற்றுக்கொண்ட விசேஷ வெளிப்படுத்தலினால் அல்லாது வேறுவகையாக அச்சம்பவங்களை அறியவே அறியமுடியாது.

எனக்குச் சத்திரவைத்தியம் செய்ய எண்ணுகிறார்கள். நான் கட்டாயம் சாவேனென்று தேவமாதா சொல்லியிருக்

கிறா. ஆனபடியாற் சத்திரவைத்தியம் வீணென்று இவள் மடத்துச் சிரேஷ்டருக்கு அறிவித்திருக்கிறாள்.

பத்திமாவிலிருந்து தன்னைக் காணவந்த சிலரிடம் இவள் பின்வரும் செய்திகளை லூசியாவுக்குச் சொல்லியனுப்பினாள்.

தேவமாதா என்னை மீண்டும் காணவந்திருக்கிறார். இன்ன நாள் இன்னமணித்தியாலம் நான் சாவேனென்றும் அறிவித்திருக்கிறார். அதுமட்டும் நான் மெத்த நல்ல பிள்ளையாக இருக்கவேண்டும் என்றும் எனக்குப் புத்தி சொல்லியிருக்கிறார்.

சத்திரவைத்தியத்தினால் ஒரு பிரயோசனமும் இல்லையென்று இயாசிந்தா மீண்டும் மீண்டும் சொல்லியிருந்தாலும் அதை ஒருவரும் பாராவாய்பண்ணாது இவளை **"டோனா இஸ்ரேவானியா"** என்ற வைத்தியசாலைக்குக் கொண்டுபோனார்கள். அங்குபோன எட்டாம்நாள் சத்திரவைத்தியமும் நடைபெற்றது. நோயாளிக்கு இருந்த மகா பெலவீனத்தின் நிமித்தம் இவளுக்கு "குளோறபோம்" என்ற மயக்கு மருந்து கொடுக்கவில்லை. ஆனால் வெட்டவேண்டிய இடம் விறைத்து மரத்துப்போகும்படி செய்யும் மருந்துமாத்திரம் ஊசியினால் ஏற்றினார்கள். ஆரம்பத்திலே சத்திரவைத்தியம் திறமான அனுகூலமாய் முடிந்ததென்று வெளித்தோற்றத்திற் காணப்பட்டது. ஆனால் விரைவில் இவளுடைய வேதனையால் உண்டான உத்தரிப்புகள் முன்னிலும் பன்மடங்கு வீறுகொண்டன. நோயாளியும் வரவரப் பெரிதும் பெலன் குன்றியவளானாள். உள்ளங்கையளவு பரிமாணமுள்ள காயம் இவள் பழுவிற் காணப்பட்டது. அந்த இடத்தில் இரண்டு விலா எலும்புகளும் வெட்டி எடுக்கப்பட்டன. காயம் கட்டும்வேளைகளில் இந்தச் சின்ன வேதசாட்சி நாவினாற் சொல்லமுடியாத வேதனைகளை அநுபவித்துத் துடிதுடித்துப் பதைபதைத்தாள். ஆனால் சகலத்தையும் அற்புதமான பொறுமையுடன் இவள் சகித்தனள். கடைசி மூச்சு விடுமட்டும் இயாசிந்தா ஒரு அப்போஸ்தொலிக்க சிறுமியாகவே இருக்க விரும்பினாள்.

வைத்தியசாலையில் நோயாளரைப் பராமரிப்பவர்கள், அல்லது தரிசகர் இயாசிந்தாவைப் பார்த்துவிட்டு இவள்

படும் வேதனை எவ்வளவு பெரிது என்று தங்களுக்கு விளங்கும் என்று அனுதாபக்குறி காட்டினால்:

"ஏன் இந்த அனுதாபம் எல்லாம்; நித்தியம் என்றால் என்னவென்று அவர்கள் அறிந்தாலோ" என்பாள் இயாசிந்தா.

சில வைத்தியர்கள் வேத விஷயங்களைப்பற்றித் தங்களுக்குள்ள சந்தேகத்தை அல்லது அவவிசுவாசத்தை வெளியிடுவதை இயாசிந்தா கேட்டால்:

"ஆ! இவர்கள் எல்லோரும் நிர்ப்பாக்கியர். தங்களுக்கு வரவிருப்பது என்னவென்பதைப்பற்றி இவர்கள் அறிந்தாலோ" என்பாள். மகா பிரகாசத்தின் நாயகியான தேவதாயாருடைய அலங்காரம் இயாசிந்தாவின் இருதயத்தையும் மனோகற்பனையையும் முற்றாய் நிரப்பியது. இந்த நாயகி கடைசி விசையாக நோயாளியைத் தரிசிக்கவந்தார். இந்தக் காட்சியின் பிற்பாடு நோயாளி எவ்வித வேதனை அடையாளமும் காண்பிக்கவேயில்லை. தன்னை ஒவ்வொருநாளும் காணவந்த தொட்டம்மாவுக்கும் அவளுடன் வந்த வேறு சிலருக்கும்: "இங்கே பாரும் சிஸ்ரர்! நான் இப்போது முறைப்படுவதில்லை. தேவமாதா என்னை இன்னும் ஒருவிசை வந்து கண்டுகொண்டு போயிருக்கிறார். சீக்கிரம் வந்து என்னைக் கூட்டிக்கொண்டு போவதாக அவர் சொல்லியிருக்கிறார். எனது வேதனைகளெல்லாவற்றையும் அறவே நீக்கிப் போட்டார். இப்படிச் சொல்லிவிட்டு இம்முறை தேவமாதா மிகவும் வியாகுலமுள்ள முகத்தோடு தோற்றினாளென்றும் இந்த வியாகுலத்துக்குக் காரணமென்னவென்றும் தனக்கு

இங்கே பாரும் சிஸ்ரர்; நான் இப்போ முறைப் படுவதில்லை.



அறிவித்திருக்கிறார்" என்றும் இயாசிந்தா சொல்லியிருக்கிறாள். தேவமாதா கூறிய காரணம் பின்வருவது: **நித்திய கேட்டுக்குள்ளாகிற ஆத்துமாக்களில் ஆகப் பெருந்தொகையினரை நரகபாதாளத்துக்கு இழுத்துச் செல்லும் பாவம் மாமிச இச்சையோடுகூடிய பாவமாம். காமாதுரத்தை அறவே ஒழித்துவிடவேண்டும். இவ்வளவு நாளும் மனுஷர் செய்துவந்ததுபோல், அவர்கள் அந்தப் பாவத்திற் பிடிவாதமாக நிலைக்கப்படாது. ஆதலால் மகா தபசு புரிதல் அவசியத்தில் அவசியம்.** இவைகள் தேவமாதா இவளுக்குச் சொன்ன வாக்கியங்கள். தன்னுடன் பேசும்பொழுது தேவமாதாகாண்பித்த துக்கத்தின் முகச்சாயலை இச்சிறுமி மற்றவர்களுக்கு நினைப்பூட்டும்பொழுது: "ஐயையோ! நான் தேவமாதாவுக்காக எவ்வளவாகத்தான் மனம் நொந்து வருந்துகிறேன்" என்று மீண்டும் மீண்டும் சொல்லிப் பெருமூச்சு விடுவாள். இவளுடைய தொட்டம்மா அல்லது வேறு எவராவது கட்டிலுக்கு அருகில் நின்றால் அல்லது இருந்தால் அவ்விடத்திலே நில்லாதே தொட்டம்மா, அவ்விடத்தில் நின்றுதான் தேவமாதா எனக்குக் காட்சி கொடுத்தார் என்று சொல்லுவாள்.

மரணநேரம் நெருங்கி வருவதை அறிந்த சிரேஷ்டர் இயாசிந்தா மரிக்கமுன் தன் தாயைக் காணவிரும்புகிறாளோ? என்று வினவினார். "எனது குடும்பம் இவ்வுலகில் நெடுங்காலம் நிலையாது. நாங்கள் விரைவில் ஒருவர் ஒருவரை மோட்சத்திற் சந்திப்போம்" என்பதுதான் அவள் கொடுத்த விடை.

தேவமாதா இன்னொரு விசை காட்சி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் அது எனக்கல்ல; அத்திருத்தாயார் சொன்னபடி அதற்கு முன் நான் இறந்துபோவேன். தேவதாயார் இயாசிந்தாவுக்குக் காட்சி கொடுத்து மூன்று நாளின் பின்பு தன் சகோதரன் பிரான்சீசைப்போலவே கடைசித் தேவதிரவிய அனுமானங்கள் தனக்குக் கிடைக்கவேண்டுமென்று தானாகவே கேட்டுக்கொண்டாள். இவள் கேட்டது ஒரு வெள்ளிக்கிழமை பின்னேரம் ஆறரை மணிக்கு. அன்று தானே இரவு எட்டு மணிக்கு அர்ச்சியசிஷ்ட அக்னேசம்

மாள் விசாரணைப் பங்கின் கட்டளைக் குருவான பிரேயிரு சுவாமியார் வந்து இவளுக்குப் பாவசங்கீர்த்தனம் கொடுத்தார். சீக்கிரம் சாகப்போகிறபடியால் சற்பிரசாதமும் தனக்குத் தரவேண்டுமென இயாசிந்தா குருவானவரை வலிந்து கேட்டாள். ஆனால் அந்தக் குருவானவர் நோயாளிக்கு அதிகம் அலுப்புக்கொடுக்கப்படாதென்று வீணாகப் பயந்து, அடுத்தநாள் சற்பிரசாதம் கொண்டுவரலாம் என்றுவிட்டார். ஆனால் **அந்த இரவே பத்தரை மணியளவில் இவள் மரணம் அடைந்தாள். அது சம்பவித்தது 1920-ம் வருஷம் மாசி மாதம் 20-ந் தேதி.**

பிரேத சேமச் சின்ன நிலவறை

இயாசிந்தாவின் தொட்டம்மா இவளுடைய முதற்சற்பிரசாத அங்கியினால் இவளுடைய பிரேதத்தை உடுப்பாட்டி அரையில் நீலநிறப் பீத்தையும் கட்டி வளர்த்திவிட்டாள். இப்படிச் செய்யும்படி இயாசிந்தாதானே கேட்டிருந்தாள்.

இந்தச் சின்னச் சம்மனசு பரலோகத்தை நோக்கிப் பறந்துவிட்டது என்ற சங்கதி லிஸ்பொன் நகரிற் பரந்தது. அந்நகரின் பெரியார், தருமசீலர் எல்லாரும் ஒரே மனசாய் பொது நிதி சேர்த்து இயாசிந்தாவின் பிரேதத்தை இவளுடைய சொந்த நாட்டுக்குக் கொண்டுபோகும்படி ஒழுங்கு பண்ணினார்கள். புகையிரத ஸ்தானத்திலிருந்து பத்திமாவுக்குப் பிரேதத்தைக் கொண்டுசெல்லும் பொறுப்பை "தல்வா இயாசா" (D'alvayasar) பிரபு ஏற்றுக்கொள்ளும்படி அவரைக் கேட்டவிடத்து அதற்கு அவர் பூரணசந்தோஷத்துடன் சம்மதித்தார். ஆனாற் பத்திமாவிற் பிரேதம் நியதியாக அடக்கம்பண்ணும்வரைக்கும் **ஊறேம்** நகரின் சேமக்காலையில் தங்கள் குடும்பத்தினருக்குப் பிரத்தியேகமாயுள்ள பிரேத சேம நிலவறையில் அம்மேனி வைத்துப் பாதுகாக்கப்பட்டுவரவேண்டுமென அப்பிரபு கேட்டு உத்தரவு பெற்றுக் கொண்டார். பிரேத அடக்கத் திருச்சடங்குகள் அர்ச். அக்னேசம்மாள் ஆலயத்தில் நடைபெற்றன. சமுத்திரம் போலும் சனக்குழாம் ஆலயம் நிறைய இருந்தது. அதன் பின்பு பிரேதத்தைச் சக்கிறிஸ்தி அறையில் வைத்தார்கள்.

ஏனென்றால் பிரேதத்தை வெளி ஊர்களுக்குக் கொண்டு போகமுன் அரசினர் பிரமாணங்கள் சில நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன. ஆனால் பிரேதத்தைப் பார்ப்பதற்கும், அதிற் சில பத்திக்குரிய பொருட்களைத் தொடுவதற்கும் அத்தனை பெருந் தொகையான சனங்கள் வந்திருந்தபடியினால், பிரேதப்பெட்டியைத் திறந்தபடியே விடவேண்டியிருந்தது. கட்டளைக் குருவானவர் திவ்விய நற்கருணைச் சபையாரின் சாலைக்குப் பிரேதத்தைக் கொண்டுபோய் அடக்கச் சடங்குகள் விமரிசையாக நிறைவேற்றும் பொறுப்புடையவர்கள் வசத்தில் அதனை ஒப்புவித்தார். சனத்திரள் பெருந் திருயாத்திரைக்குச் சரிந்தவாறு, இயாசிந்தாவின் மேனியைத் தரிசிக்க வந்து மகா பத்தி ஆசாரத்துடன் நடந்துகொண்டார்கள்.

கண்கண்ட காட்சி ஒருவர் சொல்லியிருக்கிறபடி, இயாசிந்தா இன்னும் உயிரோடு இருப்பவள்போல உதடுகளும், வதனம் முழுவதும் ரோசாப் புஷ்பம்போன்ற நிறமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்க, ஒரு சின்னப் பிரேதப் பெட்டியில் வளர்த்தப்பட்டிருந்தாள். இவளுடைய தோற்றம் முழுவதும் மகா அலங்காரமாகத் துலங்கியது.

சனங்கள் பிரேதப் பெட்டி வைக்கப்பட்டிருந்த மேடைக்கு முன் வந்தபொழுது அவர்களுக்கிருந்த ஆனந்தமும் பிரமிப்பும் ஆர்வமும் சொல்லுந்தரமல்ல. இந்தப் பரிசுத்த சிறுமியின் பிரேதத்தின் அழகான காட்சியினால் அவர்கள் எல்லாரும் ஆனந்த வெறிமயக்குக்குள்ளானவர்கள்போல மெய்மறந்து இன்பக் கடலுள் மூழ்கினவர்களாயினர். இவளுடைய பிரேதத்திலிருந்து வாசனை வீசுவதில் அதிகம் திறமையான புஷ்பங்கள் என்று சொல்லும் புஷ்பங்களிலும் பார்க்க எத்தனையோ விசை கூடுதலான மதுரித வாசனை வீசிக்கொண்டிருந்தது. அவ்வேளை அங்குநின்ற அவவிசுவாசிகளும், நிரீச்சுரவாதிகள்தானும் அதை மறுக்கமுடியாதுபோயிற்று. ஆனாலும் அச்சிறுமிக்கு உண்டான தொற்றுநோயும் நெடுநாட்பட்ட இரணமும் தாங்கமுடியாத அசுத்த நாற்றமும் உண்டுபண்ணவேண்டியதே இயல்பு. இயற்கை விதிகளைக் கடந்த இந்த அற்புத நறுவாசனை சகல

ருக்கும் இனிமேல் இல்லையென்ற வியப்பைத் தருவதாயிற்று. டக்ரர் லிஸ்போவா என்பவர் இந்த அற்புதத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். பிரேதமும் மூன்றரை நாட்களாக அடக்கம்பணணப்படாது திறந்த பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது. மாசி மாசம் 24-ந் திகதி மத்தியானம்போல் இயாசிந்தாவின் சின்னப் பிரேதம் ஒரு ஈயப்பெட்டியில் வைத்து மூடப்பட்டது. மகா உருக்கத்துடனும் உள்ளக் கிளர்ச்சியுடனும் பெருந்தொகையினர் புகையிரத ஸ்தானம் மட்டும் பிரேதத்தைப் பின்தொடர்ந்தார்கள். புகையிரதமானது "ஊறெம்" நகரத்துக்குப் பிரயாணம் செய்பவர்கள் இறங்கவேண்டிய "சாம்டி மக்கறஸ்" தானத்தில் பிரேதப் பெட்டியை இறக்கிவிட்டது. முன்குறித்த பிரபு, அதனைத் தமது குடும்பத்தினரின் அடக்க நிலஅறையிற் சேமித்து வைத்தார்.

பதினைந்து வருடங்களின் பின்பு இலெயிறு மேற்றிராசனத்து விசுப்பாண்டவர் இயாசிந்தாவின் பிரேதத்தைக் கொண்டுவந்து பத்திமாவின் சேமக்காலையில் தாம் அமைத்த சின்ன வெள்ளை நிலவறையில் அடக்கம்பண்ணினார். அல்வாயாசேர் பிரபுவுக்கு மேற்றிராணியார் இப்படிப் பிரேதத்தை எடுப்பித்துக்கொணடுபோனது சொல்லரிய மன வியாகுலத்துக்கு இடமானது. தமது வியாகுலத்தைப் பின்வருமாறு மேற்றிராணியாருக்கு அறிவித்திருக்கிறார்.

"எனது கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தபடியே இந்தப் பரிசுத்த பண்டம் எங்கள் நிலவறையைவிட்டு நீக்கப்பட்டதை நான் பார்த்துக்கொண்டு நின்றேன். இந்தத் திருமேனி மூலமாய் எனக்கும் என்னைச் சேர்ந்தவர்களுக்கும் சருவேசுரன் எண்ணிறந்த வரப்பிரசாதங்களை அருளியிருக்கிறார். இந்தத் திருமேனி கோவாடி இறியாவுக்கல்ல, வேறு ஒரு சேமக்காலைக்குத்தான் கொண்டுபோகப்படுகின்றது என்பதுதான் எனது துக்கத்தைப் பன்மடங்காகப் பெருக்குகின்றது. கோவாடி இறியாவில் மகா ஆலயம் கட்டிய பிற்பாடு இங்கிருந்து நேரே அவ்வாலயத்துக்குக் கொண்டுபோவதல்லவோ தகுதி என்று ஆண்டவர் அவர்களை விநயத்துடன் மன்றாடிக் கேட்கிறேன்." ஆனால் மேற்றிராணியார் தமது

எண்ணப்படி பத்திமா சேமக்காலையிற்தான் பிரேதத்தை எடுப்பித்து அடக்கம் செய்வித்தார்.

பிரேதத்தை வெளியேற்றமுன் பெட்டியைத் திறந்து பார்த்தார்கள். இயாசிந்தாவின் முகம் எவ்வித மாற்றமும் இல்லாது உயிருள்ளவர்களுடைய முகம்போல இருந்தது. இச்சம்பவம் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கதொன்று. ஏனென்றால் இயாசிந்தா கொள்ளை நோயினால் இறந்தவளென்று சொல்லப்பட்டபடியினால் அரசினர் சட்டப்படி இவளுடைய பிரேதம் முழுவதும் சுண்ணாம்பினால் மூடப்பட்டிருந்தது. பிரேதப் பெட்டியை அவசரப்பட்டுத் திறந்தபடியினாலும் தொற்றுவியாதி என்றதினால் அளவுக்குமிஞ்சிய கவனம் செலுத்தியபடியினாலும், இயாசிந்தாவின் சடலத்தின் மறு பாகங்களின் நிலை எப்படியிருந்ததென்று சொல்ல முடியாதுபோயிற்று. சிலர் தங்கள் பத்திக்குரிய பொருட்களைச் சடலத்திற் தொட்டார்கள். அதன்பின்பு பெட்டியை மூடி, அதைப் பத்திமாநகரச் சேமக்காலைக்குக் கொண்டு போனார்கள். எல்லாமாக நாலு இரதங்கள் மாத்திரம் புறப்பட்டன. ஒன்றில் பிரேதப்பெட்டியுடன் முற்கூறிய பிரபுவும் அவர் மகனும் இருந்தார்கள். மற்றதில் இரண்டு குருமார் சேப்பிளீஸ் ஸ்றோல் அணிந்தபடி இருந்தார்கள். மற்ற இரண்டு இரதங்களிலும் இயாசிந்தாவின் குடும்பத்தாரும் வேறு சில பெண்களும் இருந்தார்கள். பதினெட்டு வருஷங்களின்முன் வேதவிரோதியான தகரவேலைக்காரனாகிய அதிகாரியாற் சிறையிலிடப்பட்டு, ஈன இரக்கமில்லாது உபத்திரவம் செய்யப்பட்ட சிறைச்சாலைக்கு அருகால் இயாசிந்தாவின் பிரேதம் ஊர்வலமாகப் பத்திமா சேமக்காலையை நோக்கிச் சென்றது. பிரேதம் பத்திமாவுக்கு இரகசியமாகக் கொண்டுபோகப்பட்டபடியினால், நாலு இரதங்களையும்கண்டவர்கள் :-

"கோவாடி இறியாவுக்கு இன்னும்தானே யாத்திரிகள் செல்கின்றார்கள்" என்றார்கள்.

கடைசியாகப் பிரேதம் பத்திமாவையடைந்தது. மத்தியானம்போலத் தேவதாயார் காட்சிகொடுத்த பரிசுத்த பூமிக்கு இரதங்கள் வந்து சேர்ந்தன. ஆவணி மாசம் 13-ந்

திகதி யாத்திரைக்காக ஏலவே பெருந்தொகையினர் அங்கு வந்து கூடியிருந்தார்கள். குருமாரும் கிறீஸ்தவர்களும் ஒன்றுகூடி நடத்திய சம்பாஷணையினால் இயாசிந்தாவின் மேனி கொண்டுவரப்பட்ட சம்பவம் எங்கும் பரந்தது.

எவோறாவின் அதிமேற்றிராணியார் ஆன்ம இளைப்பாற்றிப்பூசை சொல்லி, அடக்கச் சடங்குகள் எல்லாவற்றிற்கும் தலைமை வகித்தார். இயாசிந்தாவின் மேனியிற் பலவித பொருட்களையும் தொட்டுப்போடவேண்டுமென ஆத்திரப்பட்டவர்கள் தொகை எண்ணிறந்தது. கடைசியாக அவர்களை வலோற்காரமாகத் தடைசெய்யவேண்டியிருந்தது. பெருந்தொகையினர் செபவேண்டுதல் செய்துகொண்டும் வழிநீளம் நறுமலர் தூவிக்கொண்டும் சுற்றுப்பிரகாரமாய் எமது சின்ன அர்ச்சியசிஷ்ட பாலிகையின் மேனியைச் சவக்காலைக்குக்கொண்டுசென்றார்கள். இயாசிந்தாவின் சகோதரனும் இவளுடைய இரகசியங்கள் எல்லாவற்றிலும் நம்பிக்கைக்குரிய பங்காளியுமான பிரான்சீசின் மேனி பூமதானம் செய்யப்பட்ட நில அறையில் இவளுடைய மேனியும் சேமிக்கப்பட்டது.

சின்னப்பிரேதச் சேமக்காலை.



இன்றைக்கும் பத்திமாவின் சவக்காலையைத் தரிசிப்பவர்கள், அதில் வெள்ளைக் கல்லினால் அமைக்கப்பட்டுப் பிரான்சீசையும் இயாசிந்தாவையும் அடக்கம்பண்ணப்பட்ட எடுபாடில்லாத

கல்லறையை ஒரு தனிமையான சிப்புரு மரத்தண்டை காண்பார்கள். அவர்கள் அந்தக் கல்லறையைக் கிட்டிச் சேருமிடத்து.

தேவமாதா காட்சியளிக்கக் கருணைகூர்ந்த பிரான்சீஸ், இயாசிந்தா என்னும் இருவருடையவும் சடலங்கள் இங்கு இளைப்பாறுகின்றன என்னும் வாக்கியங்களை வாசிப்பார்கள். வாசித்து, முழந்தாளிட்டுச் செபிப்பார்கள்.

6-ம் அதிகாரம்

தேவனுக்கே சொந்தம்

கடைசியாய்ப் புதிய மேற்றிராணியாரும் நியமிக்கப்பட்டார்

பச்சை "ஷேண்" மரநிழலில் 1917-ம் ஆண்டிற் செபமாலை சொல்லிவந்தவர்கள் மூவர். இயாசிந்தாவாகிய பூலோகசம்மனசும் பரலோகத்துக்குப் பறந்துபோனபின்பு, அந்த மூவருக்கும் தலைவியாக இருந்த லூசியாவே இவ்வுலகிற் தனிமையாக விடப்பட்டாள்.

1920-ம் ஆண்டு வைகாசி மாசம் 13-ந் திகதி தேவதாயார் பத்திமாவில் முதல் விசையாகக் காட்சிகொடுத்த மூன்றும் வருட நிறைவு விழாவின்போது எண்ணிறந்த யாத்திரிகள் கோவாடி இறியாவில் வந்துகூடினார்கள். அப்படிக் கூடப்படாதென்று அரசினர் தடைசெய்து, அங்கு ஒரு சின்னப்பட்டாளத்தைத்தானும் அனுப்பியிருந்தாலும் பறுவாய்பண்ணாது சனங்கள் அவ்விடத்துக்கு வந்துகூடினார்கள். காட்சிக்காரருள் அன்றைக்குச் சமுகமாயிருந்தது, தன்னந்தனியனான லூசியா ஒருத்தி மாத்திரமாகும். சருவேசுரன் இவளை இன்னும் இவ்வுலகில் விட்டிருப்பது, தான்கண்டவைகளையும் கேட்டவைகளையும்பற்றிச் சகல மனுஷருக்கும் விசேஷமாகத் திருச்சபை அதிகாரிகள் முன்பும் சாட்சி பகரும்படியாகவே.

இலேயிறு மேற்றிராசனம் அழிக்கப்பட்டு, அதில் ஒரு பாகம் இன்னொரு மேற்றிராசனத்துக்கும், மற்றொரு பாகம்

வேறொரு மேற்றிராசனத்துக்கும் சேர்ந்திருந்தது. ஆனால் 1918-ம் ஆண்டு அது பழையபடி ஒரு மேற்றிராசனமாக வகுக்கப்பட்டது. 1920-ம் ஆண்டு யோசே அல்வெஸ் கொறெயா டா சில்வா ஆண்டவர் அவர்கள் புதிய மேற்றிராசனத்தின் விசுப்புஆக நியமிக்கப்பட்டார். இவர் குருமடம் ஒன்றில் ஆசிரியராக இருந்தவர். இவருடைய ஆதீனத்திலுள்ள இலேயிறு மேற்றிராசனத்துக்குத்தான் பத்திமாவும் கோவாடி இறியாவின் நிலபுலங்களும் சேர்ந்தவைகள்.

1872-ம் ஆண்டு பிறந்த இவர் மேற்றிராணியாராக நியமனம் செய்யப்பட்டபொழுது, நாற்பத்தெட்டு வயசுடையவர். இவர் கத்தோலிக்க சேவைகளுடன் சம்பந்தப்பட்ட விஷயங்களில் வெகு சிரத்தையுடன் பிரயாசப்பட்டுவந்தவர். கத்தோலிக்க பத்திரிகைகளை முன்னணியிற் கொண்டுவரும்படியாக அவற்றிற்குச் சிறந்த விஷயதானங்கள் செய்துவந்தார். இவருடன் புழங்கத்தொடங்கிய கிறீஸ்தவர்களும் குருமாரும் தங்களுக்கு இவர் சேமமான வழிகாட்டியாக இருப்பாரென்று நிச்சயம் அடைந்தார்கள். இப்போது இவர் இருபத்திரண்டு வருஷங்களுக்கு மேற்படத் தமது மேற்றிராசனத்தைப் பரிபாலித்து வருகின்றார். சகலரும் பெரிதும் மனமகிழ்வுடன் இவரை நேசித்துச் சங்கித்து வந்தித்து வருகின்றார்கள்.

தமது நோக்கங்கள் முழுவதையும் நிறைவேற்றுவதற்கும், தமது அப்போஸ்தலனாக விளங்குவதற்கும் பத்திமா நாயகி இவரினும் திறமான வேறு ஒருவரைத் தெரிந்துகொள்ளுதல் முடியாது என்னலாம். யோசே டா சில்வா ஆண்டவர் அவர்கள் ஏலவே தேவமாதாவின் அன்பு நிறைந்த தொண்டனாக விளங்கியவர். இவர் மேற்றிராணியாராகத் தெரிவு செய்யப்படுமுன் பத்துவிசை லூர்துபதிக்குத் திருயாத்திரையாகப் போயிருக்கிறார். பத்து விசையில் இவர் ஒருவிசை திருயாத்திரிகளின் தலைவராகவும் வந்திருக்கிறார். அதன்பின்பும் அதாவது மேற்றிராணியாராக வந்தபின்பும் ஐந்து விசை வந்திருக்கிறார். 1920-ம் வருஷம் ஆவணி மாசம் இவர் தமது மேற்றிராசனத்தை ஒப்புக்கொண்டு சிம்

மாசனம் வகித்தார். ஒப்புக்கொண்ட சில நாட்களுள் அதாவது ஆவணி மாசம் 15-ந் திகதி தேவமாதாவின் ஆரோகணத் திருநாளன்று, தமது மேற்றிராசனம் முழுவதையும் பரலோக இராக்கினியின் அடைக்கலத்தில் வைத்து மகா ஆடம்பர வைபவங்களுடன் அதை அப்பரம இராக்கினிக்கு ஒப்படைத்தார். புதிய மேற்றிராணியாருக்குச் சுமத்தப்பட்ட சில உத்தரவாதம் நிறைந்த விஷயங்களில் இவர் வெகு புனிதமான விமரிசையுடன் கையிடவேண்டியிருந்தது. இந்தப் புதிய மேற்றிராசனத்தின் பிரதானமான ஸ்தாபனங்கள் எல்லாம் புதிதாக அணிவகுக்கப்படவேண்டியிருந்தன. இவைகளிற் சில அழிந்துபோயிருந்தன. வேறு சில இவருக்குப் பெரும் சங்கடங்களும், சஞ்சலங்களும், கவலைகளும் உண்டுபண்ணின. ஒரு இடம் மாத்திரம் இவருக்கு ஆறுதலும் மன அமரிக்கையும் உண்டுபண்ணலாயிற்று. அது கோவாடி இறியாவேயாம். இந்த மேற்றிராணியாரைப் பாப்பாண்டவர் நியமனம் செய்த நாட்தொட்டு கோவாடி இறியாவில் காண்பிக்கப்பட்டுவந்த மன அருட்சிக்குரிய விசுவாச சிந்தையும், பயபத்தியும் சகலருக்கும் நன்கு விளங்கும். இவருடைய சகோதர மேற்றிராணியார்ஒருவர் இவர் தமது மேற்றிராசனத்தில் **ஒரு போர்த்துக்கேய** ஹார்துபதியைக் கொண்டிருப்பதாக இவரை வாயார வாழ்த்தினார். இந்த வந்தனங்களெல்லாம் இவருக்கு அவ்வளவு மனமகிழ்வை உண்டுபண்ணவில்லை. ஏனென்றால் பத்திமா சம்பந்தமாய் மகா சிக்கலான கேள்விகளுக்கு இவர் விடை காணவேண்டும். இது இவருடைய கவலைகளுக்கெல்லாம் ஒரு புதிய ஊற்றுப் போலானது. கோவாடி இறியாவில் திருச்சபை அதிகாரிகளின் அங்கீகாரமில்லாது நடைபெற்றுவந்த சமய இயக்கத்தின் உற்பத்தி என்ன? அவ்வியக்கம் எவ்வளவிற் திருச்சபைப் பிரமாணத்திற்கு இசைவுடையது. எவ்வளவில் அப்பிரமாணங்களுடன் பொருத்தமற்றது என்பதைப்பற்றி ஒன்றுமே அல்லது ஏறக்குறைய ஒன்றுமே இம்முறையாக விசாரணை செய்யப்படவில்லை. இதுவரைக்கும் பத்திமாவைப் பற்றிப் பொறுமையுடையவராய் இருந்த விஸ்பொன் நகரத்து பத்திரியாக் ஆண்டவர் காட்சிசம்பந்தமாய்த் தாம்செய்வித்த

ஆராய்ச்சிகள் அடங்கிய பத்திரத்தை யோசே ட சில்வா ஆண்டவர் அவர்களிடம் அனுப்பி அவற்றின் பொறுப்பு இனிமேல் அவருடையதென்பதை அறிவித்தார். இப்பத்திரத்தை ஆண்டவர் அவர்கள் மரியாதையுடனும் அன்புடனும் பெற்றுக்கொண்டாலும் இதுவரையும் சரியான கரிசனையுடன் விசாரணை நடத்தப்படாமை தமக்கு முற்றாய்ப் பிடியாது என்பதை வெட்டவெளியாகக் காண்பித்தார்.

யோசே டாசில்வா ஆண்டவர்அவர்களுக்குக் காட்சி விஷயமாகக் கடிதங்கள் வந்துகொண்டிருந்தன. சிலர் நேரிலும் தங்கள் மனப்பதிவுகளை ஆண்டவர் அவர்களுக்கு அறிக்கை இட்டிருக்கிறார்கள். இப்படித் தமது மனப்பதிவுகளை அறிக்கையிட்டவர்களில் ஒருவர் ஊறெம் வட்டாரத்தின் தலைமைக் குருவான இயாசிந்தோ பெறேயிறா சுவாமி அவர்கள் ஆவர். அவர் சொல்வது :-

கோவாடி இறியாவில் நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் நான் நன்கு அறியக்கூடிய எல்லா வசதிகளும் உடையவனாயிருந்தேன். **அங்கு நடந்த அதிசயங்களிற் தேவ கரத்தின் அடையாளங்கள் விளங்குகின்றன** என்பது எனது சொந்த நிச்சயமான முடிபு. பத்திமாவில் நடக்கும் சமய சம்பந்தமான முயற்சிகளை நான் எதிர்த்துத் தடைசெய்யவேயில்லை. அதற்கு மாறாக முழுச்சம்மதத்துடன் அவற்றிற்கு ஆதரவாயிருக்கிறேன். ஆனால் திருச்சபை தனது போதக அதிகாரத்தின் மூலமாய் முடிவு செய்தபின்பு மாத்திரம் அங்கு நிகழ்ந்த அதிசயங்கள் சுபாவத்துக்கு மேலானவைகளோ அல்லவோ என்று நாம் நிச்சயமாக மதித்துக்கொள்ளலாம். இந்த உண்மையை எப்போதும் வற்புறுத்திவந்திருக்கிறேன்.

புதிய மேற்றிராணியார் பத்திமாவுக்குச் சார்பாகவோ எதிராகவோ, அல்லது எப்பக்கத்திற்கும் சார்பில்லாமலோ, அவருக்கு அனுப்பப்பட்ட சகல பத்திரங்களையும் வெகு ஆராய்வுடன் படித்துப்பார்த்தார். ஆனால் அவர் ஒரு தீர்மானமும் செய்யவில்லை. ஏனென்றால் தீர்மானம் செய்யமுன் தமது முடிவுக்குத் தாபரமான சகல நியாயங்களையும் அவர் திட்ப

நுட்பமாய்ச் சீர்தூக்கிப்பார்க்க விரும்பினார். ஆனாலும் அவர் பத்திமாவில் நிகழ்வனவற்றை அவதானித்ததும் ஒரு முடிவு சொல்லவேண்டிய அவசியத்தை நன்குரைத்தார். பத்திமாவின் காட்சிகளைப்பற்றிய விஷயங்கள் அற்பமான விளையாட்டுக் காரியமல்ல. இலட்சக் கணக்கான கிறீஸ்தவர்கள் அக்காட்சிகளை உண்மை என்று விசுவசிக்கிறார்கள். திருச்சபை அதிகாரிகள் அந்த உண்மையை அங்கீகரிக்கவேண்டுமென்று வெகுகாலம் ஆசித்திருக்கிறார்கள். தேவமாதாவுக்குக் கோவாடி இறியாவில் நிகழும் வணக்கங்கள் அங்கீகரிக்கப்படவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்.

ஒவ்வொரு மாசமும் 13-ந் தேதி ஆயிரம் ஆயிரம் பேர் கோவாடி இறியாவுக்குத் திருயாத்திரை செய்து அங்கு சொல்லரிய ஆசாரமான பத்தியுடன் தேவதாயாரின் இரக்கத்தை வேண்டிநிற்கிறார்கள். இவ்வளவு தொகையான யாத்திரிகள் வந்தும் அங்கு எதுவித ஒழுங்கீனங்களும் நடைபெறவில்லை. ஒருமுறை மாத்திரம் ஒருபோதும் சுகம்வராது என்று அவநம்பிக்கைப்பட்டுக்கொண்டிருந்த, ஒரு நோயாளிக்குத் தேவமாதா சடுதியிற் சுகம்கொடுத்தபடியால் அதற்கு நன்றியாகத்தான் சில வாணவிளையாட்டுக்காரர் எவ்வித எச்சரிப்புங்கொடாது இருபத்தொரு பீரங்கிகளை ஒன்றின்பின் ஒன்றாகத் தீர்ந்தார்கள். (1919 ஐப்பசி 13)

பத்திமாநாயகியை மன்றாடி அடைந்துகொண்ட அற்புத ஆரோக்கியங்களின் சம்பவங்கள் எல்லாம் நாளுபக்கத்தாலும் வந்துகொண்டேயிருக்கின்றன. ஆதலாற் திருச்சபை அதிகாரிகள் அதிகாரமுறையில் பத்திமாவைப்பற்றிய முடிவுகளை வெளியிடும்படியாகச் சகல கத்தோலிக்கரும் ஏறக்குறைய ஒரேமனசாய்க் கேட்டார்கள்.

குருமாருள் இதைப்பற்றி ஒற்றுமை அக்காலத்தில் இருக்கவில்லை. அவர்களுட் போதிய தொகையினர் காட்சிகள் மெய்யென ஒப்புக்கொண்டது மாத்திரமல்ல, கோவாடி இறியாவில் நடைபெறும் செபவேண்டுதல்களில் சாதாரண கிறீஸ்தவர்கள் என்றமட்டிலே பங்குபற்றியுமிருக்கிறார்கள்.

ஆனாற் குருமாருள் ஆகப்பெரும் பகுதியினர் இவ்விஷயத்தில் ஒரு கட்சிக்கும் சேராது மகா விமரிசையுடன் நடந்து

கொண்டார்கள். ஏனென்றால் இப்படிப்பட்ட விஷயங்களில் வீண் பரபரப்பில்லாது சாவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டுமெனக் குருமாருக்கு லிஸ்பொன் நகரத்துக் கருதினால் ஆண்டவர் அவர்கள் கட்டளைபண்ணியிருந்தார்.

குருமாருள் ஒருசிறு தொகையினர் எமது திருவேதத்தின் மகிமையைப் பாதுகாக்கும்பொருட்டும் இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாவற்றிற்கும் விரோதிகளாகவேயிருந்தார்கள். இவர்கள் தங்களுடைய எதிரித்தனமான எண்ணங்களிற் பிடிவாதமாக இருந்தார்கள். அல்லது காட்சியுடன் சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சீர்தூக்கிப்பார்த்து ஆராய்ச்சி செய்து உண்மையைக் கண்டுகொள்ள எவ்வித வழியும் அற்றவர்களாகவேயிருந்தார்கள். எது உண்மையென்பதைத் தெளிவாய்க் காட்டிக் குருமாருக்கும் சனங்களுக்கும் உண்டான சகலவித கிலேசங்களையும் மாறுபாடான எண்ணங்களையும் நிவிர்த்தி செய்யவேண்டிய கடமை உடையவர் மேற்றிராணியார்தாமே. சமய சம்பந்தமாயும் சாகிய சம்பந்தமாயும் சன்மார்க்க சம்பந்தமாயும் எவ்வளவோ புதிய கிளர்ச்சிகளும் அதிர்ச்சிகளும் உள்ள இந்தக்காலத்தில் மனுஷரை இரட்சணிய பாதைக்கு இழுப்பதற்குத் தமது இந்தச் சின்ன மேற்றிராசனத்தின் ஒரு கோணத்தைப் பரிசுத்த கன்னிகை தெரிந்துகொண்டதன் நியாயம்தானென்ன? என்று மேற்றிராணியாண்டவர் யோசித்தார். முன் சில சமயங்களிற் செய்ததுபோலும், பரலோக இராக்கினி மாசற்றவர்களும் பயபத்தி நிறைந்தவர்களுமான மூன்று இடையப் பிள்ளைகளை ஏன் தெரிந்துகொண்டார்?

இந்தக் கேள்விகளுக்கு விடைகாணும்படியாகப் புதிய சமயாசாரங்களுக்கு அத்திவாரமான காட்சிகளைப்பற்றி மகா கவனத்துடன் ஆராய்ச்சி செய்யவும் பொதுச்சனர் சொல்லிக்கொண்டுதிரியும் அற்புதங்களைப்பற்றி விசாரணை செய்விக்கவும், யோசே டா சில்வா ஆண்டவர் தமது மேற்றிராசனப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாட் தொடக்கம் பிரயாசப்பட்டுக்கொண்டுவந்தார்.

முற்றும் தனிமையாகச் சீவித்தல்

பத்திமா விஷயங்களை ஆராய்ச்சி விதிகளுக்கு இணங்கத் திட்பநுட்பமாய்ப் பரிசோதிக்குமுன் மேற்றிராணி ஆண்டவர் ஆத்துமாக்களின் நன்மைக்குத் தாமசமில்லாது செய்ய வேண்டியது என்னவென்பதைப்பற்றித்தான் இப்போது ஆயத்தங்கள் செய்யவிரும்பினர். கோவாடி இறியாவுக்கு வரும் யாத்திரிகளின் தொகை வரவர அதிகரித்தது. அத்துடன் அவர்களுடைய பயபத்தியும் ஆர்வமும் அவ்வாறே அதிகரித்தது. பிறரின் தூண்டுகோல் அல்லது வழிநடத்துதல் இல்லாது நிகழ்ந்துவரும் சம்பவங்கள் எல்லாம் காலகதியிற் குருட்டுப்பத்தியுடனும், அரைவாசிப் பிரிவினையான மனப்பான்மையுடனும் சம்பந்தப்பட்டுவிடும்.

இன்னும் அநேகர் காட்சிகளைப்பற்றிச் சந்தேகம் உடையவர்களாக இருந்தார்கள். பலவகையான சந்தேகத்தினால் அவர்களுடைய மனக்கவலைகளும் நீங்கவில்லை. மேற்றிராணி ஆண்டவர் அவர்களுக்கு மகா வியாகுலமும், மனஈறலும் உண்டுபண்ணியது, பிரான்சீஸ், இயாசிந்தா, லூசியாவுடைய தகப்பன் அந்தோனிசாங்துஸ், லூசியாவின் சகோதரி புளோறிடா ஆகிய இவர்கள் இறந்துவிட்டமையாகும். ஒலிம்பியாவும் அவளுடைய இன்னொரு மகளும் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். அவளுடைய மகள் தெரேசாவும் அடுத்த வருஷம் இறந்துபோனாள். ஆகவே கோவாடி இறியாவில் தேவமாதாவுக்கு நடக்கும் பத்தி ஆசாரங்களைப்பற்றிக் காட்சி கண்டமூவரில் மேற்றிராணியார் இருவரை விசாரணை செய்ய முடியாதேபோயிற்று.

இந்த மரணங்களைச் சாட்டாக வைத்துக்கொண்டு தேவமாதாவின் பத்திசம்பந்தமாய்த் தொடங்கியிருக்கும் இயக்கத்தில் வேதவிரோதிகள் சமுசயங்கொள்ளத் தொடங்கினார்கள். இந்தச் சிறுவர்கள் மூவரையும் இல்லாது ஒழித்துவிடவேண்டும். அதன்பின்பு இவர்களைக்கொண்டு நாடகம் ஆடுவித்தவர்களின் பொட்டுக்கேடெல்லாம் வெட்டவெளியாகுமென்றும் இந்த வேதவிரோதிகள் நளினம்பண்ணினார்கள்.

தனது குடும்பத்தில் நடந்த மரணங்களினால் நொறுங்குண்டுபோயிருந்த மனுவல் பேதுரு தேவசித்தத்துக்குப் பணிந்த மனசுடன், அருளப்பர் காட்சி ஆகமத்தின் தீர்க்கதரிசனங்களுக்கு இணையான வாக்குகளை அமைத்து, அவற்றைப் பிறருக்கு அறிக்கையிட்டு ஆறுதலடையப் பிரயாசப்படுவான். அந்தோனிசாங்துஸின் மரணத்தின்பின் அவனுடைய விதவை மரியறோசாவின்முன் சிலர் :-

“இவர்கள் எல்லாரும் ஒரு போக்காய்ப்போய்த் தொலையவேண்டும். இவர்களில் ஒருவராவது உயிருடன் இருந்தால், இருக்குமட்டும் எங்கள் எண்ணங்கள் பலியாது” என்று ஈனஇரக்கமில்லாது சொல்வார்கள். இந்தப் பொல்லாத கிறீஸ்தவர்களுடைய தீர்க்கதரிசனப் பேச்சுகள் பழுக்கக் காய்ச்சின நாராசம்போலும் மரியறோசாவின் இருதயத்தை ஊடுருவின.

தனது பிள்ளைகளைப் பறித்தெடுத்துக்கொண்டுபோன பரம இரகசியம் நிறைந்த வல்லமைகள், தனது மகள் லூசியாவையும் பறித்து எடுக்குமோ என்று அவள் வானத்தை நோக்கிப் பிரலாபித்தாள்.

சிறுமி லூசியா இப்போது வளர்ந்துவிட்டாள். அவளுக்கு வயசும் பதின்மூன்றாகிவிட்டது. தனது தாயும் மாமனும் அனுபவிக்கும் வேதனைகளைக் கண்டு இவளும் தாங்கரிய வேதனைப்பட்டாள். ஆனால் இவள் அமரிக்கையுடன் வேதனைப்படுகிறாள். ஏனென்றால் தேவசித்தத்தின் திரை மறைவில் பரலோக இராக்கினியின் வல்லமையுள்ள கரங்கள் அந்தரங்கமாக இருக்கின்றனவென்று இவள் நன்றாயறிந்திருந்தாள். நித்திய கதியை நோக்கித் தேவதாயாரே இவர்களைப் பாதுகாத்து வழிநடத்துகிறார் என்பதை நன்கு அறிவாள். தேவமாதாவின் இரக்கத்தினால் அல்லவா நெடுங்காலம் தேவதிரவிய அநுமானங்களைப் புறக்கணித்துவந்த இவளுடைய தகப்பன் நல்ல மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பிச் சருவேசுரனுடன் சமாதானமாய் மரித்தான். லூசியா, பிரான்சீசையும் இயாசிந்தாவையும் இழந்துவிட்டபடியால், தனது அருமை நண்பர்களை இழந்தாள். தனது விசேஷித்த அன்

2980

புக்கு இலக்கான இரு நண்பர்களை மாத்திரமல்ல, பரலோக இரகசியங்களைப் பாதுகாப்பதற்குத் தன் நம்பிக்கையாக இருந்தவர்களையும், அந்தரங்க ஞானச்சீவியத்துக்கும் தபக்கிரிகைகளுக்கும் தனது கூட்டாளிகளாக இருந்தவர்களையும் இழந்துவிட்டாள். அவர்கள் அர்ச்சியசிஷ்டர்களுடனும், தங்கள் பரலோக இராக்கினியுடனும் இருக்கிறார்கள். இவளோ இந்தக் கண்ணீர்க் கணவாயிலே தன்னந்தனியளாகவே இருக்கிறாள்.

இயாசிந்தா தனிமையாகச் சாகப்போவதைப்பற்றி எவ்வளவோ மனம்நொந்து வருந்தினாள். அப்படியிருக்கையில் அவளுடைய மைத்துனி லூசியா தனிமையாகச் சீவிப்பது இன்னும் இவளுக்கு எவ்வளவோ கூடுதலான வியாகுலத்துக்குக் காரணமாயிருக்குமே.

கபேக்கோவின் குகைக்குள் இவள் தனிமையாக ஒதுங்கியிருக்கக்கூடிய வேளைகளில், இவள் அங்கிருந்து பழைய ஞாபகங்களை நினைவுகூர்ந்து கண்ணீர் சொரிந்து செபம் செய்வாள். இவளுடைய மைத்துனியும் மைத்துனனும் கொய்த பூக்களும், அவர்கள் குந்தியிருந்த கற்குவியலும் அங்கிருந்த சகலமுமே அவர்களுடைய ஞாபகத்தை லூசியாவுக்கு வலிமையாக நினைப்பூட்டின.

லூசியாதானே சொல்லியிருக்கிறபடி, ஒருநாள் பாதிக்குப் பக்கம் யோசனை இல்லாமலும், பாதிக்குப் பக்கம் பராக்கினாலும், இயாசிந்தா இன்னும் தன்னுடைய அறைக்குட்தான் இருக்கிறாள் என்று எண்ணிக்கொண்டு லூசியா, இயாசிந்தா! இயாசிந்தா!! என்று கூப்பிட்டுக்கொண்டு பரபரவென்று அவளுடைய அறைக்குள் ஓடிப்போனாள். அப்போது அந்தச் சிறுமி லிஸ்பொன் நகரில் இருந்தாள். அந்தப் பரிசுத்தமான பிள்ளை மோட்சத்துக்குப் பறந்துவிட்டாள் என்ற செய்தி லூசியாவுக்கு விரைவில் எட்டியது.

“வில்லாநோவாடி ஊறெம் நகரின் சவக்காலையில் அவளுடைய பிரேதம் அடக்கம்பண்ணப்பட்டிருந்தபடியால் ஒருநாள் ஒலிம்பியா லூசியாவையுங் கூட்டிக்கொண்டு இயாசிந்தாவின் கல்லறையைச் சந்திக்கப்போனாள். இயாசிந்

தாவை விட்டுப் பிரிந்த மனஈறல் அந்தக் கல்லறைக்குமுன் லூசியாவுக்குப் பன்மடங்கு அதிகரிக்கலாயிற்று. இவளுடைய மனோபீடை அவ்வளவாக இருந்தபடியினால் சில சமயங்களில் லூசியா :

“என் தேவனே, என்னையும் உம்மிடம் அவர்கள் பக்கத்தில் அழைத்துக்கொள்ளும்” என்று சொல்லிப் பெருமூச்சு விடுவாள்.

இந்த ஆத்துமத்தைப்பற்றித்தான், அதாவது லூசியாவைப்பற்றி இலேயிரு மேற்றிராசனத்துப் பரிசுத்த மேற்றிராணியார் மிகவும் விசேஷித்த கவலையுடன் தமது கவனம் எல்லாம் செலுத்தப்போகிறார். பலவகையான சந்தர்ப்பங்களின் நிமித்தமும், விசேஷமாகக் குருமார் கோவாடிஇறியாவில் சமயசம்பந்தமான அனுட்டானங்களிற் கலந்துகொள்ளப்படாதென்ற பிரமாணத்தின் நிமித்தமும், அங்கு பெருந்திரளாக வந்துகொண்டிருந்த திருயாத்திரிகளுக்கு இந்தப் பதின்மூன்று வயசு நங்கை வழிகாட்டியாக இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. இப்படிப்பட்ட ஒரு உத்தரவாதத்தை இனிமேல் நெடுங்காலத்துக்கு ஒருசிறுமியின் பொறுப்பில் விடுதல் திருச்சபை அதிகாரிகளுக்குப் பொருத்தமான செயலாகுமா ?

மேற்றிராணியார் தமது ஞான மந்தைக்கு 1922-ம் ஆண்டு வைகாசி மாசம் விடுத்த நிருபத்தில் சொல்லியிருக்கிறபடி லூசியாவைப் பலவிசை அழைத்து இவளை விசாரணை செய்திருக்கிறார். இவள் சொல்லிய சம்பவங்களினாலும் இவள் பல கேள்விகளுக்குக் கொடுத்த விடைகளினாலும், தான் நிஷ்கபடமும் உண்மையும் உள்ள பிள்ளை என்பதை மேற்றிராணியார் நன்றாக அவதானிக்கும்படி செய்தாள். இவள் சொன்னவை எல்லாம் வேத விசுவாசத்துக்கும் நல்லொழுக்க விதிகளுக்கும் பூரண இணக்கம் உடையன என்பதையும் அவர் கண்டுபிடித்துக்கொண்டார்.

சகலத்தையும் நன்றாகச் சீர்தூக்கிப்பார்த்த இந்த மகா விவேகியும் பெரும்அன்பும் உடையவரான மேற்றிராணியார் லூசியாவைக் கோவாடி இறியாவுக்கு வரும் யாத்திரிகளில் இருந்து முற்றாகப் பிரித்துவிடல் நலம் எனக் கண்டார். இப்படிச் செய்வது விசாரணை நடத்துவதற்கும் எளிது. லூசியாவுக்கும் நன்மையாகும். ஏனென்றால் இந்த யாத்திரிகள் சில சமயங்களில் இவள்மட்டிற் பெரும் குருட்டு அபிமானம் உள்ளவர்களாயிருந்தார்கள். இவளை அரிகண்டம் பண்ணித் தங்களுக்காகச் சில சகாயங்களை மாதாவிடம் இரந்து கேட்கும்படி அலட்டுவார்கள். வேறு சிலர் விநோதப்பிரியத்தினால் இவளுக்கு அலுப்பும் இளைப்பும் கொடுப்பார்கள். வேறு சிலர் இவளுக்கு அளவுபிரமாணமில்லாது முகஸ்துதி கூறுவார்கள். இதனால் இவளுக்கு ஆங்காரத்துக்குரிய சோதனைகளும் வரக்கூடுமே. ஆதலால் இவளை யாத்திரிகளிடமிருந்து முற்றாய்ப் பிரித்துவிடவேண்டுமென மேற்றிராணியார் தீர்மானித்தார்.

அல்லாமலும், இவள் கல்வியறிவிலும் தேர்ச்சிபெற வேண்டும். இவள் சொல்வது உண்மையென்றால் தேவமாதாதானே கல்வி கற்கும்படி கேட்டிருந்தாரே. ஒருநாளைக்குச் சகல விஷயங்களையும் அதிகார முறையில் விசாரணைசெய்யும் ஒரு சங்கத்தின்முன் கல்வியறிவு முற்றுமில்லாத அல்லது ஏறக்குறைய முற்றுமில்லாத ஒரு சிறுநங்கை சாட்சியங் கூறுதல் பொருந்தாதே.

இவளைக் கல்விகற்கும்படி பிரித்துவைத்தால் இந்தக் காட்சிக்காரியின் உள்ளுணர்ச்சிகள் எப்படிப்பட்டவையென்றும், யாத்திரிகளின் மனப்பான்மை எப்படிப்பட்டதென்றும் பரீட்சித்துப் பார்க்கலாம். பத்திமாவுக்கெதிராகவும், எமது திருவேதத்துக்கெதிராகவும் ஆட்சேபனை கூறிவரும் வேதவிரோதிகளின் வாயடங்கச் செய்வதற்கும் இப்படிப் பிரித்துவைத்தல் துணைபுரியும். இவள் இல்லாத காலத்திலும் திருயாத்திரை நடைபெற்றுவந்தால், காட்சிகண்ட இந்தப் பிள்ளையைச் சில அவதந்திரிகள் திரைமறைவில் இருந்துகொண்டு தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றத் தங்க-

ளுக்குத் துணைக்கருவியாக உபயோகித்தனர் என்று எப்படிச் சொல்லலாகும். மற்றவர்கள் அந்தரங்கமான சில சக்திகளினால் லூசியர் மகாகெட்டித்தனமாயும் மனப்பாக்கியத்துடனும் கருமம்பார்த்து வந்தவள் என்று தானும் சொல்ல முடியாதே. பிறரை வசியஞ் செய்து கவர்ந்திழுப்பதற்கு இயல்பாய் ஏற்றதும் பிரத்தியேகமானதுமான கவர்ச்சிச் சக்தியினால் யாத்திரிகளை இப்படி வசியம் செய்தாள் என்றும் இவள் இல்லாதபொழுது சொல்ல முடியாதே.

லூசியாவின் குடும்பத்தாரை மேற்றிராணியார் உசாவி, அவர்களுடன் இவ்விஷயத்தைப்பற்றிக் கலந்து ஆலோசித்தவிடத்து, இவளைப் பிரித்துவைத்தல் நன்மையாகும் என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். மரியறோசாவும், தனது மகளைப் பிறர் அனுப்புகிறார்களென்று எண்ண இடமிராது. உண்மையை இனிமேல், தானே கண்டுபிடிக்கக்கூடியதாகுமே.

லூசியாவைக் கேட்டவிடத்து இவளுக்குப் பேரானந்தமாயிற்று. தனது தற்போதைய தனிச்சீவியமும், யாத்திரிகளுடைய வேகரமான பயபத்தியுமாகிய இரண்டும் இவளுக்குப் பாரச்சுமைபோலாயின. மேற்றிராணியாருடைய எண்ணமும் தன்னுடைய ஆத்துமத்தின் அதி அந்தரங்கமானதும், வேகரம் ஆனதும் ஆகியஆசையும் முற்றும் ஒத்துப் போவதைக் கண்டு அகமகிழ்ந்தாள்.

தகனப் பலி

யோசே கொறெயா டா சில்வா ஆண்டவர் அவர்கள் பிறருக்கு மனப்பிரீதி உண்டுபண்ணுபவர். எவ்விதமான எடுபாடுமில்லாதவர். இந்த இரண்டு இலட்சணங்களும், அவர் எவ்வளவு அன்புநிறைந்த இருதயமுள்ளவர்என்பதைக் காண்பிக்கும் அடையாளங்கள். மேற்றிராணியாரின் மாளிகைக்கு அழைக்கப்பட்ட போதெல்லாம் லூசியா எவ்வித பதகளிப்புமில்லாது அமரிக்கையுடனும் இயல்பான போக்குடனும் அவருடன் சம்பாஷித்துவருவாள்.

மேற்றிராணி ஆண்டவர் அவர்கள் லூசியாவுடன் புதிதாக நடத்திய ஒரு சம்பாஷணையினால், சமய அனுசார

சம்பந்தமாய், இவளுடைய ஆன்ம பக்குவம் எப்படிப்பட்டதென்றும், இவளுடைய மாசற்றதனம், தாழ்மை, பூரண அமைச்சலாகிய புண்ணியங்கள் எப்படிப்பட்டவை என்பதையும் அவர் கணித்தறிந்து, அவற்றை நன்கு மதிக்கக்கூடியவரானார். லூசியா மனஅமரிக்கையிலும், சமாதானத்திலும் விருப்புடையவள். தேவமாதா கேட்டுக்கொண்டபடி கல்வி அறிவிற் தேர்ச்சி அடையவும் ஆசித்தாள். தேவமாதாவின் மகிமைக்காக என்ன செய்யவேண்டுமென்று மேற்றிராணியார் கேட்கிறாரோ அவற்றையெல்லாம் செய்ய இவள் ஆயத்தமாயிருந்தாள். தனது இந்த மனநிலையை மேற்றிராணியாருக்கும் இவள் வெளிப்படுத்தியிருக்கிறாள். கட்டளைக் குருவானவருக்கும், தன் தாய்க்கும் மீண்டும் மீண்டும் அதேவித அறிக்கையிட்டிருக்கிறாள்.

பத்திமாவிலிருந்து போதியளவு தூரத்திலுள்ள உட்பாடசாலை ஒன்றில் இவளைச் சேரச்செய்வதற்கு வேண்டிய ஆயத்தங்கள் எல்லாவற்றையும் இனிமேற் செய்யத்தடையே இல்லை; இவளை இப்படித் தூரமான இடத்திற் பிரித்து வைப்பதினால், இவளுக்கு உள்ளபடி நன்மை விளைவதற்கு இவள் ஆர் என்பதை ஒருவரும் அறியப்படாது என்ற தீர்மானம் செய்யப்பட்டது. சிலகாலத்துக்காயினும் இந்த இரகசியம் காப்பாற்றப்பட வேண்டுமென்பது மேற்றிராணியாருடைய முடிபு.

இவள் தனது வீட்டாரையும், இனசனரையும், சகலத்தையும், நீத்துத் தூரஇடத்துக்குப் புறப்பட வேண்டிய நாளுக்கு முந்தியநாட் பின்னேரம் அந்தப் பயபத்தி நிறைந்த நல்ல விசுப்பாண்டவர், லூசியாவை அழைத்துக் கடைசியாக இவளுக்குச் செய்யவேண்டிய சிபாரிசுகளைச் செய்து நன்மதிகள் கூறியபின்பு, பின்வரும் சம்பாஷணையை நடத்தினார்.

பிள்ளை, நீ எங்கே போகிறாய் என்று ஒருவருக்கும் சொல்லமாட்டாய் அல்லவா ?

“ ஆம் ஆண்டவரே. ”

அந்த உட்பாடசாலையில் நீ ஆர் என்று ஒருவருக்கும் சொல்லமாட்டாயல்லவா ?

“ ஆம் ஆண்டவரே. ”

பத்திமாவில் நடந்த காட்சிகளைப்பற்றி நீ ஒருவருக்கும் ஒன்றும் சொல்லமாட்டாய் அல்லவா ?

“ ஆம் ஆண்டவரே. ”

மகா பிரமாணிக்கத்துடன் மேற்றிராணி ஆண்டவர் அவர்கள்முன்பு இவள் வெளியிட்ட ‘‘ஆம்’’ என்ற மும்மடியான அறிக்கைகளினால் உள்ளபடி தேவதாயார் இவளைத் தமது நம்பிக்கைக்கு உரியவள் என்றும், தமது தூதுவளாயிருக்கத் தக்கவள் என்றும், தெரிந்து கொண்டார் என மேற்றிராணியார் நிச்சயமானார்.

லூசியா இயல்பிலே மௌனத்தையும், தனிவாசத்தையும் விரும்புகின்றவள். ஆதலால் விநோதப் பிரியத்திலிருந்தும், சனக்கூட்டத்திலிருந்தும் பிரிக்கப்பட்டு, தேவதாயாரைப்பற்றி நினைக்கவும், அவருடன் சம்பாஷிக்கவும், தனக்குக் கிடைத்த நல்ல வசதியைப்பற்றி ஆனந்தம் கொண்டாள். அல்லாமலும் தனக்குமுன் பரலோகம் சென்ற தனது சிநேகிதர்களைப்பற்றி அடிக்கடி சிந்தித்து, அவர்கள் மட்டாய்த் தனது எண்ணங்கள் செல்லும்படி செய்வதற்கும், இந்தப் பிரியாவிடை இவளுக்கு வாய்ப்பாயிற்று.

புறப்படும் நாள் 1921-ம் வருஷம் ஆனிமாதம் 17-ந் திகதி என்று முடிவுசெய்யப்பட்டது. லூசியா புறப்படுமுன் பத்திமாவையும், அதைச் சேர்ந்தவர்களையும் விட்டுப் பிரிவதால் இவளுடைய உள்ளக்கிளர்ச்சிகளையும், மன அருட்சிகளையும், பிரியாவிடையையும் ஒரு கீர்த்திவாய்ந்த போர்த்துக்கேய புலவர் மகா அலங்காரமான செய்யுட்களில் இயற்றியிருக்கிறார். எடுத்தாப்போல உடனே பாட்டு இயற்றுபவர்கள், பலவிசை போதிய விவேகம் தங்கள் பாக்களில் விளங்க வைக்க அறியார். ஆனால் இந்த மகாகவியின் செய்யுட்கள் அப்படிப்பட்டவையல்ல.

ஆனால் அந்தரங்கமான குரலொலி ஒன்று லூசியாவின் உள்ளத்திற் தொனித்தது. அது கோவாடி இறியாவின் காட்சிநாயகியின் குரல் ஒலியல்ல. லூசியா தான்பிறந்த நாட்டைவிட்டுப் போகவேண்டுமே. இனி ஒருபோதும் அதைப் பார்க்கமாட்டாளே. தான் வளர்ந்த நாட்டை, தேவதாயாரின் காட்சிகளைப்பெற்ற மலைச்சாரல்களை, உலகத்தில் ஒருபோதும் கேட்டிராத இன்பநாதம் தொனிக்கும் குரல் ஒலியைக் கேட்ட இடங்களை எல்லாம் விட்டுப்பிரிய வேண்டுமே. இப்போதும் தனது செவிகளில் தொனித்துக் கொண்டிருக்கும் மதுரித ஓசை கேட்ட இடங்களை எல்லாம் விட்டுப்பிரியவேண்டுமே. லூசியாவின் உள்ளத்திற்தொனித்த குரலொலி இதுதான். ஆனால் அவ்வொலி தேவதாயாருடையதல்ல என்பதை இவள் அறிந்துகொண்டாள்.

புறப்படுவதற்கு முந்தியநாள் கற்குவியலுக்கு அருகிலே ஷேன் மரங்களுக்கும் கருவாலி மரங்களுக்கும் இடையே தானியம் வளர்ந்திருந்த வயலுக்கூடாக, இவள் தனிமையாகப் போனாள். குன்றின் உச்சி ஒன்றில் நின்றுகொண்டு அடிவானத்திற் பிரகாசம் நிறைந்துபோயிருந்ததைக் கண்டாள். இவைகளை இனிமேற் தான்காண்பதில்லை என அவதானித்துக்கொண்டாள்.

“நான் எனது அருமைத் தந்தைக்குச் சேர்ந்த நில, புலங்களுக்கு ஊடாகச் சென்றேன். அங்கொருவிசை, இங்கொருவிசையாக நான் அந்தப்பூமியில் உட்கார்ந்தேன். நான் இருந்த நிலத்தை எனது கையாற் தொட்டு இனிமேல் இந்தப் பூமியைக் காணமாட்டேன் என்று எனக்குள்ளே சொன்னேன்” என்று லூசியாதானே தனது “**ஞாபகங்களில்**” வரைந்திருக்கிறாள்.

சமீபத்தில் மேய்ந்துகொண்டிருந்த ஒரு கூட்டம் ஆடுகளின் மணிஓசை இவள் காதிற் தொனித்தது. அத்தொனி இவள் ஒருகாலம் மேய்த்துவந்த மந்தைகளை, தான் இப்போது முற்றாய் விட்டுப்பிரியவேண்டிய மந்தைகளை இவளுக்கு நினைப்பூட்டியது. கடைசியாக இவள் கோவாடி இறியாவுக்கு வந்தாள். அங்கு இவளுக்குக் கிடைத்த ஆறு

காட்சிகளும் மீண்டும் இவள்மனக்காட்சியின்முன் தோன்றின. பிரகாசத்தின் மத்தியில் தோன்றிய காட்சிநாயகியின் சாயல் இவள் நினைவில் வருகின்றது. காட்சி கொடுத்தவரின் பிரபைக்கதிர் வீசிய சாயல் படிப்படியாகமறைந்த வானத்தை இவள் உற்றுநோக்கினாள். அந்தப் பிரகாசக் கதிர் வீசிய தோற்றம் நீலவானத்தில் மறைந்துபோன இடத்தையும், இவள் மன அருட்சியுடன் உற்றுநோக்கினாள்.

கோவாடி இறியாவிலிருந்த சிற்றாலயத்தின்முன் எவ்வளவு வேகரமான பயபத்தியுடன் இவள் செபித்திருப்பாள் என்பதை ஊகித்துக்கொள்ளலாம். பொழுதுபடமுன் இவள் வீடுவந்து சேர்ந்துவிட்டாள். வழியில் இவள்தனக்கு அறிமுகமான சிலரைக் கண்டாள்.

“வந்தனம் லூசியா”

“உங்களுக்கும் வந்தனம். நான் போய்வருகிறேன்” என்று லூசியா புன்னகை அரும்பும் முகத்துடன் விடையிறுத்தாள்.

போய்வருகிறேன் என்று சொன்னபொழுது “**என்றென்றைக்கும்**” என்று இவள் தன் உள்ளத்திற் சொல்லிக்கொண்டாள்.

தான் ஞானஸ்நானம் பெற்ற கோவிலைத் தரிசித்து, நற்கருணைநாதருக்குப் பிரியாவிடை கூறுகின்றாள். இனிமேல் இவள் யேசுநாதரை, இந்த ஆலயத்திற் பெற்றுக் கொள்வதுமில்லை, இந்த நற்கருணைப் பேழையில் அவரைச் சந்திப்பதுமில்லை.

அதன்பின்பு இவள் தங்கள் சின்னச் சவக்காலையைச் சந்தித்துப் பிரான்சீசை அடக்கம்பண்ணிய பிரேதக்குழிமுன் செபித்தாள். இந்தப் பிரேதக்குழி இவள் அதைத் தரிசித்த காலத்தில், இப்போதுபோல நன்றாய் அமைக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ஒரு வரியாவது, அறிகுறியாவது யாருடையது என்று காட்டும்படி வரையப்பட்டிருக்கவுமில்லை.

சவக்குழி முழுவதும் புல்பூண்டுகளால் மறைக்கப்பட்டிருந்தது. “பரலோகத்திலிருந்து எனது சின்னப் பிரான்சீஸ்

என்னைப் பாதுகாக்கிறான். நானே இங்கு தனிமையாக இருக்கிறேனே." சற்றுத்தூரத்தில் இவளுடைய தகப்பனுடைய சவக்குழி இருந்தது. அங்கு இவள் நெடுநேரம் செபித்துத் திரிகாலச்செபத்துக்கு மணிஅடிக்கும்பொழுதும் இன்னும் அவ்விடத்திற்தானே செபம் செய்துகொண்டிருந்தாள். இவள் தனது விசாரணைப்பங்கின் மணியோசையைக் கேட்டதும், அந்த மணியின் வெள்ளி நாதத்தைக் கேட்டுத் தேவமாதாவின் மங்களவார்த்தைகளை உச்சரித்ததும் இவளுக்கு இதுவே கடைசி முறையாகும்.

அதன்பின் இவள் தனது மாமனையும், மாமியாரையும் காணப்போனாள். இவளுக்கிருந்த மன அருட்சியினால், இவள் அவர்களுக்கு ஒரு வார்த்தையாவது சொல்லமுடியாதிருந்தது. பிரான்சீஸ் இறந்த அறைக்குள் இவள் முழந்தாள் மடித்துச் செபம் செய்தாள். அதன்பின்பு இவள் "வலின் ஹோஸ்" என்ற இடத்துக்குப் போய் அங்கு தேவதாயார் தங்களுக்குக் காட்சி கொடுத்த மரத்தினடியை முத்தமிட்டாள். கடைசியாக வீடு திரும்பித் தனது உடுப்புப் பெட்டியை ஆயத்தம் செய்தாள். புறப்படவேண்டிய நேரம் வருமட்டும், இவள் கிணற்று அடைப்புக்குள் போய்க் கிணற்றுக்கட்டிலிருந்துகொண்டு, ஏராளமாய்க் கண்ணீர் சொரிந்தாள். அங்கேயிருந்த ஒவ்வொரு வேலிக்கும் மரங்களுக்கும் தன்னை எத்தனையோ அவிவேகிகளுடைய வினோதப் பிரியத்திலிருந்து பாதுகாத்ததுக்காகப் பிரியாவிடை கூறினாள்.

"லூசியா நாங்கள் இராப்போசனம் அருந்தப்போகிறோம்" என்று இவளுடைய தாய் இவளை அழைத்தாள். இவள் அசன அறைக்குட் புகுந்து, அற்பனுக மாத்திரம் சாப்பிட்டுவிட்டு, வெளியே காற்றோட்டமுள்ள இடத்திற் போய், நீலவானத்துக்கும் அங்குபிரகாசித்துக்கொண்டிருந்த நட்சத்திரங்களுக்குத் தானும் பிரியாவிடை கூறினாள்.

இன்றைக்கு வானம் எவ்வளவு அழகாயிருக்கின்றது. எவ்வளவு அமரிக்கையான காட்சி. எண்ணிறந்த நட்சத்திரங்கள் என்று தன் நெஞ்சோடு கிளத்தினாள். ஆட்டுக் கொட்டிலில் இன்னும் சில ஆடுகள் நிற்கின்றன. இவைகளை

மற்றவைகளோடு விற்கவில்லை. லூசியா அவற்றைக் கட்டியணைத்து அவற்றின் கம்பளி மயிரினுள் தன் விரல்களைப் புகுத்தி, அவற்றிற்கு அன்பு காட்டினாள். காட்டி எனது சின்னச் சிநேகிதர்களே! உங்கள் எல்லாருக்கும் நான் பிரியாவிடை சொல்லுகிறேன் என்று உள்ளம் உருகினாள். இராச் செபத்தின்பின், இவள் தனது படுக்கைக்குப் போய் உடனே தானே நித்திரையாய்விட்டாள். மரியரோசா காலமே இரண்டுமணிக்கே இவளைக் கூப்பிட்டபொழுது, ஏலவே இவள் நித்திரையைவிட்டு எழுந்துவிட்டாள்.

"லூசியா நேரமாகிவிட்டது."

"ஆம் ஆச்சி, நான் போகிறேன்."

இவள் முகங்கழுவி உடுப்புகள் அணிந்து முடிந்ததும், லூசியாவுடைய மாமன் ஒருவர் மனுவல் கொறெயா என்பவர், தாயுடனும் மகளுடனும் இலெயிறியாமட்டும் செல்வதற்கு வீட்டுவாசலிற் காத்துநின்றார்.

வெளியில் இன்னும் இருளாகத்தானிருந்தது. வானத்தில் நட்சத்திரங்கள் பரவியிருந்தன. கோவாடி இறியாவைப் போகும் வழியிற் சந்தித்தார்கள். அங்கு எல்லாரும் ஒருமிக்கச் செபமாலை சொன்னார்கள். அந்தப் பரிசுத்த பூமியிற் கட்டப்பட்ட, சிற்றாலயத்தில் அப்போது, சொன்ன செபமாலை லூசியாவுக்கு அவ்விடத்திற் கடைசிச் செபம் ஆயிற்று. உள்ளுக்கிருந்த தேவமாதாவின் சின்னச் சுரூபம் அங்கு இருந்த மங்குளமான வெளிச்சத்தில் அவ்வளவாகக் கண்ணுக்குத் தென்படவில்லை. லூசியா தனக்கு எவ்வளவோ ஞான நன்மைகள் எல்லாம் கிடைத்த இந்த ஆசீர்வதிக்கப்பட்ட, தலங்களை விட்டுப்பிரிந்தபொழுது, இயாசிந்தா தனிமையாகச் சாகிறதுக்கு லிஸ்பொன் நகரத்துக்குச் செல்லுகையில், அனுபவித்த மன ஈறல்களிலும், ஒரு சிறிதாவது குறைந்த வேதனைகளை அனுபவிக்கவில்லை. தாயையும், மாமன் மனுவல் கொறெயாவையும் முன்னுக்குப் போகவிட்டுத் தான்பின்னே மெல்ல நடந்து, கோவாடி இறியாவுக்குத் தான்செய்யவேண்டிய பிரியாவிடையை நீடிக்கச்செய்தாள்.

சிற்றாலயத்தைப் பார்த்துப் பார்த்துத் தனது பிரியாவிடையை பெருகச் செய்தாள்.

இனிமேல் அந்தச் சிற்றாலயத்தைக் காண முடியாது என்றமட்டில், இவள் அதனை நோக்கித் தன் கண்களைத் திருப்பினாள். அதன் பின்பு இவள் இருதயத்தை வான இராக்கினிமட்டும் உயர்த்தித் தான் சகலத்தையும் விட்டுப்பிரியவும், முற்றாய்த் தன்னை அந்த இராக்கினிக்குக் கையளித்துவிடவும் வரம் இரந்தாள். மூன்றுபிரயாணிகளும், கால்நடைப் பிரயாணிகளின் பாதையாற்தான் இலெயிறியாவுக்குப்போனார்கள். அந்த வழி மிகவும் தூரமானவழி. இவர்கள் அந்த நகரத்தைக் கிட்டியபொழுது ஒன்பது மணி. ஏறக்குறைய இரவு இரண்டு மணிதொடக்கம் கால் நடையாகப் பிரயாணம்பண்ணினார்கள்.

மரியறேசா, அங்கு தனக்குச் சிநேகிதியான ஒரு பெண்மணியைச் சந்தித்து, அவள் தன்மகளுடன் குறித்த இடத்துக்குப் போகும்படி ஒழுங்கு செய்துகொண்டாள். புகையிரதம் பின்னேரம் இரண்டுமணிக்குத்தான் புறப்படும். புகையிரதஸ்தானத்தில் லூசியா வெகுவாய்க் கண்ணீர் சொரிந்து தனது தாயை அரவணைத்து முத்தமிட்டாள். தனது புதிய கூட்டாளியுடன் இவள் வடபாகம் நோக்கிச் செல்லும் புகையிரதத்திற் பிரயாணமானாள். புகையிரதஸ்தானத்தில் மரியறேசா துக்கத்தால் நசுங்குண்டவள்

போலானாள். ஆனாற் தேவசித்தத்துக்குப் பணிந்தமனசுடன் திடாரிக்கமாயிருந்தாள்.

வியாகுலமேரி

அடுத்தநாள், போர்டோ நகரத்துக்குச் சேர்ந்த "விலார்" என்னும் ஊரில் அனாதைகளை வைத்து வளர்த்து வரும், மடமொன்றின் சிரேஷ்டருக்கு, லூசியா அறிமுகப் படுத்தப்பட்டாள். இந்த அனாதைகள் மடம், அர்ச். டொரேத்தே அம்மாளின் சபைக்கன்னியாஸ்திரிமாரின் ஆதீனத்தில் நடைபெற்று வருகின்றது. இக்கன்னியாஸ்திரிமாரைப் போர்த்துக்கால் தேசத்தில் **டோரேத்தே கன்னியர்** அல்லது **"டோரேத்தேயர்"** என்றும் அழைப்பார்கள். இந்தச்சபை முத்திப்பேறுபெற்ற போல் பிருசினாற்றி என்ற புண்ணியவதியால் 1834-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. போல் பிருசினாற்றிக்கு 1930-ம் ஆண்டு முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளப்பட்டது.

இந்தக் கன்னியாஸ்திரிமார் நடத்திவரும் தரும ஸ்தாபனங்களைப் போர்த்துக்கால் தேசத்தில் "விலாரின் அடைக்கல நிவாசம்" என்பர். இது ஒரு பழங்காலத்துக் கட்டிடம். ஒருபக்கத்தில் ஒரு குருமடத்தையும், மறு பக்கத்திற் தொழிற் சாலைகளையும், தோட்டங்களையும் உடையது. லூசியாவுடன் கூடிச்சென்ற பெண்மணி, வாசல்மணியை அடிக்க, உடனுக்குடனே "**துவாரபாலகி**"யான கன்னியாஸ்திரி ஓடிவந்தார். வந்து, "பெண்மணிகளே! இப்போது மடத்து விசாரணைக் குருவானவர் பூசை தொடங்குகிறார். மடத்தார்எல்லாரும் பூசைகாணப் போகிறார்கள்" என்று சொல்லிவிட்டு, வெளிச்சம் மிகக் குறைவான ஒரு ஒடுக்கமான சாலைக்கூடாக, இருவரையும் அந்தக் கன்னியாஸ்திரிமடத்துக் கோவிலுக்குக் கூட்டிச்சென்றாள்.

பூசையில் லூசியா சற்பிரசாதம் பெற்றாள். பூசையின் பின் குருவானவரும், சிரேஷ்டரும் சக்கிறிஸ்தை அறைக்குள் நின்றுகொண்டு, லூசியாவை அங்கு அழைப்பித்தார்

கள். குருவானவரும் சிரேஷ்ட கன்னியாஸ்திரியும் சிறிது வேளை விடாப்பிடியாகக் கூறுகுறிப்பாக லூசியாவை நன்றாகப் பார்த்துவிட்டு, ஏதோ விசேஷ குறிப்பைக்காட்டும் சிமிட்டாய் ஒருவர் ஒருவரிற் கண்எறிந்தார்கள். அவர்கள் தங்கள் கண்ணோட்டத்தின் தன்மையினால்,

"எங்களுக்கு அவர்கள் குழைக்காட்டிலிருக்கும் ஒரு காட்டுமிராண்டியை அனுப்பியிருக்கிறார்களே" என்று சொல்லாமற் சொல்லிவிட்டது போலிருந்தது.

மடத்துச் சிரேஷ்ட தாயார் ஏலவே லூசியாவைப்பற்றி ஏதோ கேள்விப்பட்டபடியால், இவளை மடத்திற்சேர்க்கச் சம்மதிக்கவில்லை. இலெயிறாவின் மேற்றிராணியார் இவளைச் சேர்க்கத்தான்வேண்டும் என்று அழுங்குப்பிடியாகப் பிடித்தபடியால், மேற்றிராணியாருக்குக் காண்பிக்க வேண்டிய உபசார மரியாதையின் நிமித்தம், மனவருத்தத்துடனேயே ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தார். லூசியா ஒரு மதியீனி, புத்தியில்லாதவள் என்று ஆரோ தாயாருக்குச் சொல்லிப் போட்டார்கள். ஆனால் இப்போது ஆளை நேர்முகமாகக் கண்டபிற்பாடு, கடைசிமட்டுந் தன் மறுப்பில் நிலைகொண்டிருந்தேனில்லையே என்று விசனப்பட்டாள். எப்படியோ மேற்றிராணியாருக்குத் தான்கொடுத்த வாக்கை மீறப்படாதென்று தீர்மானித்து லூசியாவை ஏற்று, இவளுடைய புதிய சீவியத்துக்குரிய சில விஷயங்களை இவளுக்கு அறிவித்தபிற்பாடு

"உனக்குப் பேர் என்னவென்று யாராவது கேட்டால்", "என்பேர் **வியாகுலமரி** என்று நீ சொல்லவேண்டும்."

"ஆம் தாயார், அப்படித்தான் சொல்லுவேன்."

"பத்திமாவில் நடந்த சம்பவங்களைப்பற்றி நீ ஒருவருக்கும் ஒன்றும் சொல்லப்படாது. அவைகளைப்பற்றி ஒரு கேள்விதானும் வேண்டாம். ஒரு மறுமொழிதானும் வேண்டாம்."

"ஆம் தாயாரே, அப்படியே செய்வேன்."

உனது ஊர் என்னவென்று கேட்டால், நான் லிஸ்பொன் நகரத்துக்குக் கிட்ட இருப்பவள் என்று சொல்லவேண்டும்.

"ஆம் தாயாரே, அப்படியே சொல்வேன்."

மற்றப்பிள்ளைகள் உலாத்தப் போகும்போது நீ உலாத்தப்போகக்கூடாது. ஏன் அப்படிப் போகவில்லை என்று கேட்டால், நீ ஒன்றும் பேசப்படாது.

"ஆம் தாயார், அப்படியே செய்வேன்."

மேற்றிராணி ஆண்டவருக்கு லூசியா கொடுத்த ஆம் என்ற மும்மடியான உறுதிமொழிகளைப்போலவே, மடத்துச் சிரேஷ்ட தாயாருக்குக் கொடுத்த உறுதி மொழியையும் அவள் மகா பிரமாணிக்கத்துடன் நிறைவேற்றிவந்தாள். மேலதிகாரி ஒருவரின் உத்தரவுப் பத்திரம் இவள் கைக்கு எட்டுமட்டும் இந்த வாக்கில், இவள் ஒரு அரவாவது, புள்ளியாவது தவறவேயில்லை. லூசியா தான் கொடுத்த வாக்கில் மிகவும் பிரமாணிக்கமாக இருந்தபடியாற்தான், கண்காட்சிகளைப்பற்றியோ, கோவாடி இறியாவில் நடைபெறும் யாத்திரைகளைப்பற்றியோ ஒருவருடனும் ஒரு சொல்லுத்தானும் சொல்லமாட்டாள். போர்டோ நகரில் ஒரு விசையும், பிறுகா நகரில் ஒரு விசையுமாக இரண்டுவிசை மரியரோசா தனது மகளைச் சந்திக்கவந்தாள். தாய்க்கு முன்புதானும், காட்சிகளைப்பற்றியோ, யாத்திரைகளைப் பற்றியோ இவள் ஒன்றுமே பேசவில்லை. இப்படிச்செய்வது இவளுக்கு மகா வீரத்துவமான பரித்தியாகமல்லவா? பதினாறு வயசுச் சிறுமி "ஷேன்" மரத்தின் பிரகாசம் நிறைந்த காட்சிநாயகி மட்டில் தனது இருதய உணர்ச்சிகளையெல்லாம் இடைவிடாது திருப்பிக்கொண்டிருந்த இந்த இளம் நங்கை, அந்த இராக்கினியைப்பற்றி ஒன்றுமே பேசாதிருப்பது உள்ளபடி வீரத்துவமான பரித்தியாகமல்லவா?

வியாகுல மேரி என்ற பெயரைத் தரிப்பதும் இவளுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. எனது சொந்தப்பெயர் யேசுவின் லூசியா. ஆனபடியால் இப்போது என்னை

யேசுவின் மேரி என்று அழைக்கலாமே என்று லூசியா சில வேளைகளிற் சொல்லுவாள்.

லூசியாவுக்குச் சொல்லவேண்டிய புத்திமதிகளை எல்லாம் சொன்னபிற்பாடு உட்பாடசாலை மாணவிகள் அணிந்திருக்கும் உடைகளைச் சிரேஷ்ட தாயார் இவளுக்கு அளித்தார். இம்மாணவிகளைப் பிரத்தியேகமாகக் குறித்துக் காட்டுவது, அவர்களுடைய கழுத்தில் அணிந்த கழுத்துக் குட்டையும், அதிலிருந்து கீழே தொங்கிவிழும் சிவப்பும் வெள்ளையும் கலந்த தடித்த சதுரப் பீத்தையுமாகும். அதன் பின்பு லூசியாவை இவளுடைய புதிய ஆசிரியைக்கு அறிமுகப்படுத்தினார்கள்.

கோவாடி இறியாவின் காட்சிக்காரருள் ஒருத்தி எனப் பிரசித்திபெற்ற லூசியா இப்போ தொகையான மாணவிகள் கூட்டத்தினுள் மறைந்துவிட்டாள். இவள் ஆரென்பது அங்கிருந்த மாணவிகள் ஒருவருக்கும் தெரியாது என்பதுக்கு ஒரு நல்ல அத்தாட்சி உண்டு. சில சமயங்களிற் சில யாத்திரிகள் ஏதோ ஒரு வகையாகச் சமுசயப்பட்டு லூசியா வசித்துவந்த மடத்தை அணுகி அங்கிருந்த மாணவிகளை லூசியா என்ற பெயருடைய ஒரு பிள்ளை உங்களுடன் கல்வி கற்றுவருகிறாள் அல்லவா? என்று கேட்டால், அவர்கள் திகைத்துப்போய்; லூசியாவா? இல்லை. லூசியா என்றொரு மாணவி இங்கில்லை என்றுவிடுவார்கள்.

வியாகுலமேரி நெடுநாட்களாக, ஒரு மலைநாட்டுச்சிறுமி என்ற தன்மையை எவரும் கண்டுகொள்ளும்படிதான் நடந்தாள். தனது ஆசிரியைகளுடன் நிஷ்கபடமாய்ப் புழங்குவாள். ஆனாற் குழந்தைப்பிள்ளைக்கு இருப்பது போன்ற மதியீனம் காண்பியாள். தனது உடன்மாணவிகளுக்குத் தனது விசேஷித்த குணம் எப்படிப்பட்டதென்பதைச் சுட்டிப்பாய் விளங்கவைப்பாள். அவர்களுக்கு இவள் சிலவேளை கொடுக்கும் விடைகள் ஒரு சிறிது சுடுமொழியுடையனவாகும். தனது அபிப்பிராயத்தை எளிதில் மாற்றமாட்டாள். போக்குவாக்கில் ஒருவித கடூர முரட்டுத்தன்மை காண்பிப்பாள். புது மோடிகளிற் சற்றாவது

நாட்டமில்லாதிருப்பாள். ஆனால், தனது வார்த்தைகளினால் எவருக்காவது மனநோவு உண்டுபண்ணிப்போட்டதாக இவள் அவதானித்தால், உடனுக்குடனே மனமுருகி, மனநோவுக்குள்ளானவரிடம் பொறுதி கேட்பாள்.

விலார் என்ற இடத்திலே இவள் நாலு வருஷம் செலவிட்டாள். இவ்விடத்தில் இவளுக்கிருந்த ஒரு பெருங் குறை மலைநாடுகளில் வீசும் சுத்தமான காற்று இல்லாமற் போனமைதான். இவள் இருந்த மடத்துச் சுற்றுடல்கள் முழுவதும் நெருக்கமும் ஒடுக்கமுமானவை. தாராளமாய் மூச்சுவிடமுடியாது என்றமனப்பதிவை உண்டுபண்ணுபவை. எனது அருமையான மலைகளெங்கே? குன்றுகளெங்கே? என்று லூசியா பெருமூச்சுவிடவேண்டியிருந்தது. சில காலத்துக்குப்பிற்பாடு உட்பாடசாலைப் பிள்ளைகளில் ஆகச் சின்ன வயதுள்ளவர்களைச் சயனமண்டபத்தில் மேற்பார்வையிடும் பொறுப்பு இவளுக்குக் கொடுக்கப்பட்டது. அந்தச் சயன அறையிலிருந்த ஒரு யன்னல்வழியாக, டூரோ நதியின் முகத்துவாரத்தையும், ஆற்றோரத்தில் வளர்ந்துகொண்டிருந்த பயின் மரங்களையும் தூரத்திற் காணலாம். அங்கே போய்ச் சுத்தமான கடற்காற்றைச் சுவாசிக்கவும், அங்குள்ள காட்சியினாற் சருவேசுரனுடைய வல்லமையையும், மகிமைப்பிரதாபத்தையும் தியானித்துக்கொண்டிருக்கவும் இவள் ஆசைப்படுவாள். லூசியா ஆரம்பத்திற் சிரேஷ்டருக்கு நன்மனப்பதிவு உண்டாக்கவில்லை. ஆனால் வியாகுலமேரி என்ற மாணாக்கி காலகதியிற் போதியளவு கல்வி அறிவிற் தேர்ச்சி பெற்றாள். அதுமட்டுமா? மூலாதார வகுப்புகளைப் படிப்பதற்குவேண்டிய தாராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியடையக்கூடியவளானாள். ஆனால் அந்தப் பரீட்சை எடுப்பவர்கள் தங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரமும், அணைக்க வேண்டும். அப்படிச் செய்யப்புகின் இவளுடைய உண்மையான பெயர் வெளிவந்துவிடும் என்றபடியினால், இவள் பரீட்சை எடுக்கவில்லை. ஆனால் வியாகுலமேரி தனது நேரத்தைச் சிறிதும் வீணாக்காமல், விரலாற் பேசும் வித்தை அச்சுக்கு எழுத்துக் கோத்தல், சித்திரத் தையல் முதலிய கல்விகளும், வீட்டுக்கருமங்களை நேர்சீராய் நடத்துவதற்கு

வேண்டிய அறிவும், தகைமையும், ஊட்டப்பெற்று அவற்றிலும் புகழ்ச்சிக்குரிய தேர்ச்சி பெற்றாள்.

லூசியாவை ஏற்றுக்கொண்ட மடத்துச் சிரேஷ்டர் பத்திமா விஷயங்களைப்பற்றிச் சார்புடையவர் அல்ல. ஆதலால் அவர் அவ்விஷயங்களைப்பற்றி ஒருபோதும் லூசியாவுடன் ஒன்றுமே பேசவில்லை.

லூசியாமட்டிற் தான் ஏன் இப்படி நடந்துகொண்டார் என்பதற்கு அவர் பின்வரும் நியாயம் சொல்லியிருக்கிறார்.

“மனச்சாட்சியைப் பொறுத்த கடமையின் நிமித்தம் தான் நான் லூசியாவுடன் பத்திமா விஷயமாய் வேண்டா வெறுப்பு உள்ளவளாக நடந்துகொண்டேன். காட்சிகள் உள்ளபடி இவளுடைய மனசில் எழுந்த மாய்கைகளினால் உண்டானவை என்றால் அவற்றை இவளுடைய மனசிலிருந்தும் முற்றாக நீக்கிவிடுதல், கல்வி அறிவில் இவளைப் பயிற்றும் என்னுடைய கடமை. இவள் அவற்றை முற்றாக மறக்கும்படி செய்வதற்கு அவைகளைப்பற்றி மௌனம் காப்பாற்றுவதுதான் சிறந்த உபாயம். காட்சிகள் உள்ளபடி உண்மையானவைகள் என்றால் அவற்றைப்பற்றி மௌனம் காப்பாற்றுவதுதான் சிறந்த உபாயம். காட்சிகள் உள்ளபடி உண்மையானவைகள் என்றால், அவற்றைப்பற்றி அவளுடன் அளகுழப்பாய்ப் பேசுவதனால் இவளுடைய மனசில் வீண் புகழ்ச்சிக்குரிய எண்ணங்களையும், ஆங்காரமான உணர்ச்சிகளையும் வளர்ப்பதற்கு அவ்வித சம்பாஷணை வழியாகும். ஆகவே லூசியா உண்மையான காட்சிகளைக் கண்டவள் என்றால், உலகத்தில் நின்றும் பிரிக்கப்பட்டுச் சீவித்தல் இவளுக்கு எவ்வித கெடுதியும் உண்டாக்காது. அதனால் இவளுக்கு ஆதாயமே உண்டாகும்.

லூசியா உட்பாடசாலையிற் சேர்க்கப்பட்ட நாட் தொடக்கம் பத்திமாவைப்பற்றிய எவ்வித சங்கதியும், மடத்துட் பிரவேசியாதபடி சிரேஷ்டர் வெகு விழிப்பாய் இருந்தார். பத்திமாவில் அபிமானமுள்ள ஆட்களோ புதினப் பத்திரங்களோ, கடிதங்களோ ஒன்றும்மடத்துள் இடம்பெற அந்தச் சிரேஷ்டர் உத்தரவு கொடுக்கவில்லை.

உட்பாடசாலை மாணவிகள் எல்லார்மட்டிலும், அன்புடன் நடந்துகொண்ட இந்தச் சிரேஷ்டர், லூசியாமட்டிற் சிறிது கடுமை உள்ளவரென எண்ணும்படி இவளுக்கு முகக் குறியால் விளங்கவைப்பார் என்று எண்ணலாம். இவள் காட்சிகளினால் விசேஷம் பெற்றபடியால், இவள் மட்டில் விசேஷித்த மனச்சார்பு, தனக்கு உண்டென்பதை அவர் அணுப்பிரமாணமேனும் காட்டவில்லை. அர்ச். பெர்நதேத், நோவேர்ஸ் மடத்தில் இருந்த நாட்களிலும், அர்ச். மாகிறேற்மேரி, பரெலேமோனியல் மடத்தில் வசித்தகாலையும், அவர்களுடைய சிரேஷ்டர்மார் இவ்விதமே அவர்கள்மட்டில் நடந்துகொண்டார்கள்.

இருமடியான திரைமறைவு

லூசியா போடடோ பட்டணத்தில், செலவிட்ட நாலு வருஷங்களில், இவளுடன் கல்விகற்ற மாணவிகளோ, ஆசிரியைகளோ வேறு எவருமோ ஒருவருமே ஒருவிசையாயினும் இவளுடன் பத்திமாச் சம்பவங்களைப்பற்றிப் பேசவே இல்லை.

இந்தப்பெயரை லூசியாதானும் உச்சரிக்கவேயில்லை. ஒருமுறை என்றாலும் உச்சரிக்கவேயில்லை. ஆனாலும் ஒவ்வொரு நாளும், நாள் முழுவதும் கோவிலிலேயும் பாடசாலையிலேயும் விளையாட்டு வேளைகளிலேயும் சயன அறையிலேயும், பத்திமாவைப்பற்றியும், கோவாடி இறியாவிற் காட்சிகொடுத்த பரலோக இராக்கினியைப் பற்றியும், லூசியா சிந்தித்தவண்ணமே இருந்தாள். தான் மௌனம் காப்பாற்றுவதாகக் கொடுத்த வாக்கும், அந்தவாக்கைப் பிரமாணிக்கமாய் அனுசரிப்பதும், இவளை இருமடியான திரைமறைவில் ஒளித்துவைத்தாற்போலாயிற்று. ஒரு திரை: தன்னைச் சூழ்ந்திருக்கும் எவராவது தான் ஆர் என்பதை அறியாத இரகசியமாகிய திரை. மற்றது இவளுடைய எண்ணங்கள் இடைவிடாது சென்றுகொண்டிருக்கும் இடத்தில் நடப்பன என்ன என்பதை இவள் அறியவிடாது மறைத்துக்கொண்டிருக்கும் திரையாகும்.

பரலோகத்திலிருந்து தனது மூலமாக உலகத்துக்கு வெளிப்படுத்தப்பட்ட அறிக்கையை மனுஷர் எவ்விதமாக

மதிக்கிறார்கள் என்பதை அறியாமலிருப்பது ஒரு பெரிய மனவேதனை. ஒரு பெரிய பரித்தியாகம் என்று சொல்லவும் வேண்டுமா?

திருயாத்திரை இன்னும் தொடர்ந்து நடைபெறுகின்றதா? இன்னும் அவ்விடம் பெருந்தொகையான யாத்திரிகள் வருகின்றார்களா? பத்திமாவின் கட்டளைக்குருவானவர் அங்கு நடக்கும் பத்திமுயற்சிகளிற் பங்குபற்றி, அவற்றை இப்போதாவது நடப்பிக்கிறாரா?

லூசியா விடுதிப் பாடசாலையிற் சேர்ந்த மூன்றாம் வருடம் பத்திமா விஷயங்களைப்பற்றி, அதிகார முறையில் விசாரணை நடத்த ஒரு சமாசம், திருச்சபை அதிகாரிகளினால் நியமிக்கப்பட்டிருப்பதை இவள் அறிந்தாள். இவள் அப்படி அறியவந்ததுக்கு ஒரு நியாயம் என்னவென்றால், சமாசத்தினர் மிகவும் அந்தரங்கமாய் மடத்துக்கு வந்து இவளை விசாரணை செய்தமையாகும். (1924-ம் ஆ ஆடி மீ 8-ந் உ)

ஆனாற் காட்சிகொடுத்த கன்னிகைக்கு அவ்விடத்தில், வணக்கம் செலுத்துவதை மேற்றிராணியார் அங்கீகரித்துவிட்டாரா? வேதவிரோதிகள் கோவாடி இறியாவுக்கு யாத்திரிகள் போகாது தடை செய்வதற்குப் பட்ட பிரயாசை அநுகூலமானதா? இவைபோன்ற பல கேள்விகள் லூசியாவின் மனதில் உதித்தன. ஆனால் அவற்றிற்கு விடை சொல்லுபவர் ஒருவருமேயில்லை. தனது ஜெனன நாட்டைவிட்டுப்புறப்படுமுன் அவ்விடத்துக்கு யாத்திரிகள் நாள்தோறும் அதிகம், அதிகமாய் வந்துகொண்டிருந்தார்கள். அரசாட்சியார் காட்சித்தலத்திற் சனத்திரள் கூடப்படாதெனத் தடை செய்திருந்தாலும் அவர்கள் அத்தடையைப் பறுவாய் பண்ணாது, அங்குவந்து செபமாலை நாயகியை மன்றாடி, அவவுடைய புகழைப்பாடிக் கொண்டாடினார்கள்.

1920-ம் வருஷம் வைகாசிமாதம் 13-ந் திகதி கோவாடி இறியாவின் சிற்றாலயத்திலே, பத்திமா நாயகியின் முதற் சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டபொழுது, பெருந்திரளான யாத்திரிகள்வந்து, பத்திமா நாயகிக்குத் தங்கள் வணக்கங்கள் வந்தனங்களைச் சமர்ப்பித்தார்கள். அவர்களைத் தடைசெய்வ

தற்கு ஏறக்குறைய ஒரு பட்டாளம் முழுவதையும் அரசினர் அனுப்பியிருந்தாலும், யாத்திரிகள் தங்களை மேற்கொள்ளும்படி பட்டாளம் இடங்கொடுத்துவிட்டது. இவைகளை லூசியா கண்ணாற் கண்டிருந்தாள். ஆனால் இதற்குப்பின் பத்திமாவில் நடந்தவைகள் எவை?

ரோமாபுரியிலே சம்பேதுருவானவரின் மகா ஆலயம் கட்டப்பட்டிருக்கும் விஸ்தாரமான நிலப்பரப்பிலும், இரு மடங்குகூடின விஸ்தாரமான நிலப்பரப்பைக் கோவாடி இறியாவில், யோசே கொறெயா டா சில்வா ஆண்டவர் அவர்கள் விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். போர்த்துக்கால் தேசத்திலிருக்கும் ஆலயங்கள் எல்லாவற்றிலும்பார்க்க அதிகம் சிறந்த மகா க்ஷேத்திரம் ஒன்றைக் கோவாடி இறியாவில் ஸ்தாபிப்பதற்குப் பிரமாண்டமான வேலைகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றன. இவைகளை வியாகுலமேரிக்கு அறிவிப்பார் எவருமேயில்லை.

1921-ம் வருஷம் ஐப்பசி மாதம் 13-ந் திகதி மேற்றிராணி ஆண்டவர் அவர்களுடைய அங்கீகாரத்துடன் முதன்முதல் கோவாடி இறியாவிற் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. வெளி நிலத்திலே அதற்கென்று ஆயத்தப்படுத்தப்பட்ட ஒரு பீடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது அப்பூசைப்பலி. இவைகளைக் கேள்விப்பட்டால் வியாகுலமேரி சொல்லில் அடங்காத ஆனந்தங்கொண்டிருப்பாள். ஆயின் அதை இவளுக்கு அறிவிப்பாரில்லை.

இலெயிறா மேற்றிராணியார் தமதுபேரிற் கொண்டிருக்கும் பிள்ளைக்குரிய போன்புக்குச் சம்பாவனையாகத் தேவதாயார் இன்னுமொரு அருள்மாரியைக் கோவாடி இறியாவிற் பொழிந்தருளச் சித்தமானார். கோவாடி இறியாவின் காணியிலே ஒரு மையமான இடத்திலே, ஏராளமான நீர் ஊற்று அற்புதமாய்ச் சுரந்து அங்குவரும் யாத்திரிகளுக்கும் நடைபெறும் வேலைகளுக்கும் வேண்டிய தண்ணீர் போதும் போதுமென்று சொல்லக்கூடிய தன்மையாய் அந்த ஊற்றிலிருந்து பாய்ந்துகொண்டிருந்தது. இந்த ஊற்றுச் சுரந்துகொண்டிருந்த இடத்திற்றான் 1917-ம் வருஷம் வைகாசி

மாதம் 13-ந் திகதி நடந்த காட்சிக்கு முன்னோடியாக இருந்த இரண்டாம் மின்னல் மின்னியது. இந்த இடம் சிறிதும் நீர்க்கசிவு இல்லாத கட்டாந்தரையான காய்ந்து வரண்ட நிலம். இவ்விடத்தில் நீரூற்று ஒன்று சுரந்து ஏராளமான நன்னீர் பெருக்கெடுத்து இருப்பது தேவதாயாரின் அற்புதமல்லவா? இவைகளை எல்லாம் வியாகுலமேரிக்கு அறிவிப்பார் எவருமேயில்லை.

இந்த அற்புதமான நீரூற்றினால் இனிமேல் யாத்திரிகள் பெருந்தொகையாக வருவதற்கு வசதி ஏற்படலாயிற்று. ஏலவே திட்டம் செய்யப்பட்ட வேலைகளை நடப்பித்தலும் எளிதாயிற்று. 1927-ம் ஆண்டு, முந்திய ஊற்றுப்போலவே இன்னும் ஒரு அற்புதமான ஊற்று; முதலாம் ஊற்றுக்குச் சிலயார்களுக்கப்பாற் சுரக்கலாயிற்று. இதையும் வியாகுல மேரிக்கறிவிப்பார் எவருமேயில்லை.

1922-ம் வருஷம் பங்குனிமாதம் 6-ந் திகதி கள்வர் கூட்டம் ஒன்று இரகசியமாய் வெடிமருந்திட்டுக் கோவாடி இறியாவின் சிற்றாலயத்தைத் தகர்த்துவிட்டார்கள். எட்டு நாளுக்குப்பிற்பாடு பதினாயிரம்பேருக்கு மேற்பட்ட யாத்திரிகள், துஷ்டர் செய்த அவமானத்துக்குப் பரிகாரம்செய்யும் நோக்கத்துடன் வந்துகூடிப் பத்திமாவின் ஆலயத்திலிருந்து கோவாடி இறியாவின் சிற்றாலயம் அழிந்துபோய் இருந்த இடம்மட்டும் சுற்றுப்பிரகாரமாகச் சென்று, தேவமாதாவுக்கு வந்தனைநமஸ்காரம் செய்து, தங்கள் இருதயஅன்பை வெளிப்படுத்தினார்கள். இவைகளை வியாகுலமேரிக்கு அறிவிப்பார் எவருமேயில்லை.

1922-ம் வருஷம் பங்குனிமாதம் 6-ந் திகதி நடந்த தேவதுரோகமான அனாசாரங்களுக்கும், அவபத்திக்கும் பரிகாரமாகப் போர்த்துக்கால்தேசம் முழுவதுமே ஒன்று சேர்ந்து, சாதீய நிந்தைப்பரிகார முயற்சி செய்து, தங்கள் பத்திபற்றுதலை வெளிப்படுத்தி, வெற்றிவிழாக்கொண்டாடினார்கள். அந்த வெற்றிவிழாக்கொண்டாட்டங்களும் முன் ஒருபோதுமில்லாத அனுகூலம் அடைந்தன. அரசினர் அந்த வெற்றிவிழாக்கொண்டாட்டத்தைத் தடைசெய்

வதற்கு, விசேஷவித கட்டுப்பாடுகள் செய்தும், அவர்களுடைய எடுப்புகள் ஒன்றும் பலிக்கவில்லை. இந்த வெற்றி விழாவின்போது, சமூகமாயிருந்த மகா வேகமான, பயபத்தியுள்ள தொண்டர்களுள் துக்க உடை அணிந்து கொண்டு அங்கிருந்த இரண்டு மாதர்களைப்பற்றி, விலார் நகரத்து உட்பாடசாலையிலிருந்த அந்த மாணாக்கி அறிந்திருந்தால் எவ்வளவு பேரானந்தங்கொண்டிருப்பாள். அவர்கள் வியாகுலமேரியின் தாய் மரியரோசாவும், மாமியான ஒலிம்பியாவும் ஆவர். அன்றியும், அழிந்துகிடந்த சிற்றாலயத்துக்கருகிலே, அமைக்கப்பட்ட பீடத்திலே, அந்தக் கொண்டாட்டத்தின்போது திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுத்தவர் பத்திமாவின் புதிய கட்டளைக்குருவானவரே என்பதை வியாகுலமேரி அறிந்திருந்தால் ஆனந்தக்கடலில் மூழ்கியிருப்பாள் அல்லவா? ஆனால், இவைகளையெல்லாம் வியாகுலமேரியாகிய எங்கள் லூசியாவுக்கு அறிவிப்பார் எவருமேயில்லை.

அழிந்துபோன சிற்றாலயத்தின் கற்களை எடுத்து, வெடிமருந்தினாற் கருமையாயிருந்த அவற்றைக்கழுவி அவ்விடத்திலிருந்த மலையிற் கிடைத்த சுண்ணாம்புடன் கலந்து அந்தச்சிற்றாலயத்தை மீண்டும் கட்டியெழுப்பிவிட்டார்கள். இதையும் எவராவது வியாகுலமேரிக்கு அறிவிக்கவேயில்லை. கோவாடி இறியாவில் வந்துகூடும் சனத்திரளின் பிரதாப மகிமையையும் அங்கு நடைபெறும் மாதாபத்தியினால், தேசம்முழுவதுமே பெரும் திருத்தத்துக்குரிய மாற்றம் அடைந்துகொண்டு வருவதையும், ஏனைய நல்லியக்கங்களையும் வியாகுலமேரி எப்படி அறிவாள்.

படிப்படியாக யோசே கொறெயா டா சில்வா ஆண்டவர் அவர்களின் தலைமையின்கீழ் யாத்திரைகள் நன்றாக அணிவகுக்கப்பட்டுத் திருச்சபைச் சடங்காசார விதிகளுக்கு இணங்க நடைபெறத்தொடங்கின.

"பத்திமாவின் குரலொலி" என்ற நாமந்தாங்கிய மாதாந்த வெளியீடு ஒன்று பத்திமாபதியில் தேவமாதா அருளும் அற்புத சகாயங்களை வெளியிட்டு, அங்கு நடை

பெறும் பிரசித்தமான கொண்டாட்டங்களைப்பற்றிய விபரங்களையும் அறிவிக்கின்றது. இப்போது அப்பத்திரிகையில் ஒவ்வொரு மாதமும் நூறாயிரம்பிரதிகள் செலவாகின்றன. பெருந்தொகையான நோயாளிகள் பத்திமா நாயகியின் அற்புதசகாயங்களைத் தேடி ஓடுகின்றார்கள். நோயாளிகள் கோவாடி இறியாவில், தங்கியிருக்கும் வரைக்கும் அவர்களைப் பாடைகளில் வைத்துக் காவிச்செல்வதற்கும், அவர்களைப் பராமரித்துப் பாதுகாவல் செய்வதற்கும், சபைகள்ஏற்பட்டு **மரியாயின் தொண்டர்சபை** என்றநாமத்துடன் திருத்தொண்டு புரிந்துவருகிறார்கள். நோயாளிகளை வைத்துப் பராமரிக்கும் வைத்தியசாலை ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு 1924-ம் வருஷம் ஐப்பசி மாதம் 13-ந் திகதி அத்திவாரமும் இடப்பட்டது.

பத்திமாநாயகியின் இரக்கத்தினால் சுகமடைந்துவரும் நோயாளிகளின் தொகை இப்போது பெருந்தொகையாகிவிட்டதால், அது எத்தனையென்று கணக்கெடுப்பதை விட்டுவிட்டார்கள். அந்தக்கட்டாந்தரையான பூமியில் அற்புதமாய்ச் சுரந்தோடும் ஊற்றுநீரால் அநேகர் சுகம்பெற்றுவருகிறார்கள். அவர்களுடைய தொகையும் இப்போது கணக்கெடுக்கப்படுவதில்லை. இவைகள் எல்லாம் லூசியாவுக்குச் சிறிதேனும் தெரியாத சம்பவங்கள்.

பத்திமாவிலே சனத்திரள் இவளைத்தான் ஒருகாலம் ஆவலாய்த் தேடியது. இவள் சகலருக்கும் இன்றியமையாதவள் என்று பத்திமாவில் எண்ணப்பட்டிருந்தாள். இவளிடமிருந்து பத்திமா நாயகியைப்பற்றி இரண்டொரு சொல்லாவது கேட்டுவிடவேண்டுமென ஆத்திரப்பட்டு எத்தனையோபேர் இவளைத் தேடிச் சூழ்ந்துநின்று, தங்கள் ஆசையைத் திருப்தியாக்க எவ்வளவுதான் பிரயாசப்பட்டார்கள். விலார் மடத்தில், பத்திமா சங்கதிகளைப்பற்றி இவளுடன் பேசுவார் எவருமேயில்லை. இவள் அங்கிருப்பதுதானும் ஒருவருமறியார்கள்.

இவைகளையறிய லூசியா எவ்வளவோ ஆசித்திருப்பாள். ஆனால், இவள் எவரிடமும் இவ்விஷயங்களைப்

பற்றிக் கேட்கவேயில்லை. இவள் முற்றும் மௌனமாயிருக்கிறாள். மேற்றிராணி ஆண்டவருக்கு இவள் "ஆம்" என்று வாக்குக்கொடுத்துவிட்டாள் அல்லவா?

மௌனம் காப்பாற்றவேண்டும் என்ற கட்டுப்பாடு நீக்கப்பட்டபிற்பாடு இவள் பத்திமா விஷயங்களைப்பற்றி அறியாதிருக்கவேண்டிய அவசியத்தினால் அதிகம் வேதனை அனுபவித்தாளோ? என்று இவளைக் கேட்டவர்களுக்கு:

"நான் வாய்விடாது தனிமையாக வேதனைப்பட்டேன். எனது சிலுவையைச் சுமந்தேன். இரண்டுவிசை உள்ளபடி மகா மனமகிழ்ச்சியும் அடைந்தேன். நான் இருக்கிறேன் என்பதைத்தானும் மறந்துவிட ஆசித்தேன். **தேவனுக்காக மாத்திரம் சீவித்தல்;** இது ஒன்று போதாதா."

உள்ளரங்க சீவியம்

வியாகுலமேரியின் பூரண அமைச்சலும், பூரண தாழ்மையும், அவளுக்கு இடப்பட்ட வேலைகளை, அதுவும் ஆகத் தாழ்ந்த வேலைகளைத்தானும் நிறைவேற்றுவதில் இவள் காட்டிவந்த பிரமாணிக்கமும் எடுத்துக்கொண்ட பிரயாசையும், இவளுடைய ஆசிரியைகளும், உடன் மாணவிகளும் இவளை விசேஷமாய்மதிப்பதற்குக் காரணமாயின. பாடசாலைச்சிரேஷ்டர்களும், ஏனைய ஆசிரியைகளும் இவளில் அவ்வளவு நம்பிக்கை வைத்தபடியினால் விளையாட்டு வேளைகளில் உட்பாடசாலை மாணவிகளுள் சின்னஞ்சிறியவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு இவளிடம் ஒப்புவிக்கப்பட்டது. முன்னொருகாலம், இவள் கிணற்றுக்குப் பின்னாலே ஞானஉபதேச ஆசிரியையாக இருந்தாள் அல்லவா? இப்போது அந்த இலட்சணம், மீண்டும் இவளில் வெளிக்கொள்ளலாயிற்று. சிறுமிகளுக்கு மனப்பிரீதி உண்டுபண்ணும் பல சரித்திரங்களை இவள் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருப்பாள். விசேஷமாக யேசுநாதருடைய திருப்பாடுகளையும் தேவமாதாவின் சீவிய சரிதையையும் அவர்களுக்கு மனக்கவர்ச்சி கொடுக்கப்பண்ணும் தன்மையாக எடுத்துச்சொல்வாள். தேவமாதாவில் இவளுக்கிருந்த மகாஉச்சிதமான பத்தி ஒன்றுமாத்திரமே

இவள்தான் கோவாடி இறியாவில் காட்சி கண்டவர்களுள் ஒருத்தியெனக் கண்டுபிடித்தற்குச் சிலருக்குத் துணையாய் இருந்தது.

"நான் தேவமாதாவில் விசேஷவிதமான பத்தியுள்ளவளாக இருக்கவில்லை. ஆனால் நான் வியாகுலமேரியுடன் ஊடாடிப் புழங்கினபடியால் தேவமாதாவில் மகா உருக்கமான பயபத்தி உடையவளானேன்" என்று லூசியாவுடைய ஆசிரியை ஒருத்தி சொல்லியிருக்கிறாள். இதொன்றைவிட, விடுதிப்பாடசாலையின் மற்றப்பிள்ளைகளுக்கும் இவளுக்குமிடையில் வேறுபிரத்தியேகமான வித்தியாசம் ஒன்றும் காணப்படவில்லை. லூசியாவுடைய நடபடிகளை நன்றாய் அவதானித்தவர்கள், ஒருவேளை இவளிடம் இன்னும் ஒரு காரியத்தை அவதானித்திருத்தல் கூடும். அது பிறருடைய கவனத்துக்கும், அவதானத்துக்கும் உட்படாது தப்பிக்கொள்ள இவள் இடையறாது பட்டுவந்த பிரயாசையாகும். தன்னாற்கூடிய சிரத்தையெடுத்து லூசியா அனுசரித்துவந்த புண்ணியம் தாழ்மையே. இது எல்லாத்துக்கும் மேலாக இவளுக்கு அவசியமான புண்ணியம் அன்றோ! இவளுடைய உள்ளரங்க சீவியமானது, எவ்வளவு ஆழமுடையது என்பதைப்பற்றி எவராவது சமுசயந்தானும் கொள்ளவில்லை.

"**எவராலும் அறியப்படாமலும், ஒரு பொருட்டாய் எண்ணப்படாமலும் இருக்க ஆசி**" என்று கிறீஸ்துநாதர் அனுசாரம் கூறுவதை இவள் வாசித்து, அதன் உட்கருத்தை நன்றாக உணர்ந்திருக்கிறாள். எவராலும் சிறிதேனும் அவதானிக்கப்படாது சீவிப்பதுதான் இவளுடைய பேராசை. ஒருவரும் கண்டுபிடிக்கமுடியாத ஒரு மறைவான இடத்திற் சஞ்சரிக்கவேண்டுமென்பதுதான் இவளுடைய ஆழ்ந்த மனவிருப்பம். தமக்கு ஒரு சாட்சியாகத் தேவதாயாராற் தெரியப்பட்டதினால், தனக்குள்ள விசேஷ பெறுபேறுதானென்ன? ஒன்றுமில்லையே என்பதுவே வியாகுலமேரியின் உண்மையான சிந்தனை.

பிறுகா நகருக்கு அணித்தாய் இலெயிறுவில் மேற்றிராணியாரின் சுகஸ்தானம் ஒன்று உண்டு. அவ்விடத்தில் மகா வந்தனைக்குரிய யோசே டா சில்வா ஆண்டவரவர்கள் வந்திருந்தார். லூசியாவின் பாடசாலையில் அந்நாட்கள் விடுதலை நாட்களாயிருந்தபடியால், இவளை ஒருநாள் ஆண்டவரவர்கள் அழைத்துத் தமது அசனமேசையிற்றானே இவளும் போசனம் அருந்தும்படிசெய்தார். அவ்வேளை அந்த மேசையிற் போசனம் அருந்திக்கொண்டிருந்த ஒரு வாலிப குருவானவர் மேற்றிராணியாரின் இந்த விருந்தாளி உள்ளபடி பத்திமாவிற் காட்சிபெற்ற நங்கையாக இருத்தல் வேண்டுமெனச் சமுசயங்கொண்டார். கொண்டு எடுத்தாற்போல ஒரு கேள்விகேட்டால், லூசியா திகைத்துப்போய் உள்ளதை வெளிவிடுவாளென எண்ணிச் சம்பாஷணை விஷயத்தொடர்பைச் சடுதியில் நிறுத்திவிட்டு:

"நங்காய், பத்திமாவிற் காட்சிபெற்ற அந்தப்பெண்மணியைக் காண்பதற்கு நீ மிகவும் பிரியப்படுவாய் அல்லவா?" என்று கேட்டார்.

"இல்லை சுவாமி, தேவமாதா காட்சிகொடுத்த எத்தனையோ பெண்பிள்ளைகள் இருக்கிறார்களே" என்று சொல்லிவிட்டு வேறு ஒன்றும் பேசாது தலையைக் கவிழ்த்துக்கொண்டாள். இவளுடைய முகம் நாணத்தினால் சிவந்திருப்பதைக்கண்ட மேற்றிராணியார் அந்த முகமாற்றத்திலே "**தேவதாயார் எனக்குக் காட்சி கொடுத்தபடியினால் எனக்குள்ள விசேஷ பெறுபேறு என்னதான்**" என்ற இவளுடைய உள்ளுணர்ச்சியை நன்றாக அவதானித்துக்கொண்டார். அவதானித்துச் சிறிது புன்னகையோடு சூட்சமாய்ச் சம்பாஷணையை வேறு விஷயங்களிற் திருப்பிவிட்டார்.

எமது மாணுக்கி மகா தாழ்ச்சி உள்ளவளாய் இருந்தது மாத்திரமல்ல அத்துடன் மனமகிழ்வும் செந்தளிப்பான முகவசீகரமும் உடையவளாக இருந்தாள். பளிங்கு போலும் தெள்ளத்தெளிவானது இவளுடைய மனச்சாட்சி. நிறைவான உள்ளரங்க சமாதானம். தேவதாயார்

தனக்குக் கட்டாயம் மோட்சம் கிடைக்குமென்று கொடுத்த வாக்கினால் இவளுக்கிருந்த ஐயந்திரிபு அணுப்பிரமாணமேனும் இல்லாத நிச்சயம் ஆகிய இவைகளெல்லாம் இயல்பிலே அக்களிப்பான இவளுடைய உள்ளமானது, மேலும் ஆனந்த அக்களிப்பினால் விசாலிப்பு அடையலாயிற்று. நகைமுகங்காட்டிப் பிறரை இன்புறச்செய்தல் இவளுக்குப் பெருவிருப்பு. சிலவேளைகளிற் கேலிசெய்யவும் இவள் ஆசிப்பாள். தனது இயல்பான பிரத்தியேகக் குணம் எப்படிப்பட்டதென்பதையும் சில வேளைகளிற் காட்டிவிடுவாள். பாவிகள் மனந்திரும்பும்படியாகத் தியாகம்செய்வதாக இவள் கொடுத்தவாக்கை இவள் மறக்கவேயில்லை. அந்த வாக்கினால் தூண்டப்பட்டு இவள் நிறைவேற்றின ஒறுத்தல்முயற்சிகளையும், தபக்கிரிகைகளையும் யார்தான் அறிவார்.

“என் யேசுவே உமது நேசத்திற்காகவும், பாவிகள் மனந்திரும்பும்படியாகவும், பாப்பாண்டவருக்காகவும், மரியாயின் மாசற்ற இருதயத்திற்குச்செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாகவும், எனது பரித்தியாகங்கள் பாடுகள் எல்லாவற்றையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். என்று இவள் இயாசிந்தாவுடனும் பிரான்சீசுடனும் எத்தனையோவிசை காணிக்கை ஒப்புக்கொடுத்தாளல்லவா! அந்தக்காணிக்கையை இப்போது இந்தவிடுதிப்பாடசாலையில் எத்தனைமுறை மீண்டும் மீண்டும் ஒப்புக்கொடுத்திருப்பாள். விடுதிப்பாடசாலைக்கு அணித்தாய் “**பளிங்கு மாளிகை**” என்ற ஒரு மாளிகை இருந்தது. அதில் அர்ச். ஸ்நாபக அருளப்பர் திருநாளுக்கு வாணவேடிக்கை முதலிய பல கொண்டாட்டங்கள் ஒருநாள் இரவு நடந்தன. விடுதிப்பாடசாலை மாணாக்கிகளுக்கு மேல்வீட்டுக்கு ஏறிப்போய் அங்கு ஒரு விருந்தையில் இருந்து வாணவிளையாட்டு முதலியவற்றைப் பார்க்கலாம் என்று உத்தரவு அளிக்கப்பட்டது. ஆனால் தங்கள் பாடசாலைக்கு அணித்தாயுள்ள வேறு ஒரு வீட்டிலே, ஒரு மருந்து வியாபாரி — அவன் மகா அவவிசுவாசி — தேவதிரவிய அனு

மானங்கள் ஒன்றும் வேண்டாமென்று மறுத்துவிட்டு மரண அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறான். இதை லூசியா கேள்விப்பட்டாள். அவனை மனந்திருப்பும்படியாகத் தான் அந்த வேடிக்கைகளைப்பாராதுவிடும் அப்பரித்தியாகத்தைத் தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதாக லூசியா தீர்மானித்துக்கொண்டாள். தீர்மானித்து அதைப்பற்றித் தனது மாணவிகளுக்குச் சொல்லி அவர்கள் எல்லாரும் அதேவித பரித்தியாகம் செய்யச் சம்மதிக்கும்படி செய்துவிட்டாள்.

விலார் பாடசாலையில் இவள் படித்த கடைசி வருஷம் ஒரு புதிய சிரேஷ்டர் நியமிக்கப்பட்டு அவ்விடம் வந்தார். வியாகுலமேரிமட்டில் அந்தச் சிரேஷ்டர், எப்படிப் புழங்க வேண்டுமெனப் பெரிதும் இரகசியமாய் அவருக்குப் பிரமாணங்கள் கொடுக்கப்பட்டன. அவரும் அந்தப் பிரமாணங்களை அனுசரித்தார். ஆனால், அப்பப்பா! எவ்வளவு கடுமையான சொல்லரிய நுணுக்கத்துடன், இந்தப் புதிய சிரேஷ்டர் தமது சிரேஷ்டத்துவத்தை விளங்கச்செய்தார்.

வியாகுலமேரியின் போக்குவாக்கில் ஒருவரும் ஒரு விசேஷத்தையும் காணவில்லையே. தானும் இவளில் எவ்வித விசேஷத்தையும் கண்டுபிடிக்கவில்லையே. அப்படியிருக்கவும் இவள்மட்டில் விசேஷித்தவிதமாய்ப் புழங்கவேண்டியநியாயம் என்னவோஎன்று அந்தப் புதிய சிரேஷ்டர் மிகவும் திகைப்புற்றார்.

இந்த நாகரீகமற்ற சிறுபெண் காட்சி பெற்றவள் என்று சொல்வதற்கு மற்றவர்களிலும்பார்க்க இவளில் இருக்கும் விசேஷம்தான் என்னவோ என்று புதியதாயார் வெயர்க்கவெயர்க்க யோசிக்கலானார். இந்த நொடியை அவிழ்ப்பதற்காக, பத்திமாவிஷயங்களைப்பற்றி லூசியாவை விசாரணைசெய்யத் தனக்கு உத்தரவு தரும்படி தாயார் மேற்றிராணியாரிடம் உத்தரவு கேட்டார். நன்றாக வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுடனும், நன்றாக எல்லையிடப்பட்ட சில விஷயங்களைப்பற்றி மாத்திரமும், விசாரணை செய்யலாம் என உத்தரவளிக்கப்பட்டது. மௌனவிரதம்

பூண்ட இந்தப்பரிசுத்த ஆத்துமாவாகிய வியாகுலமேரியை அந்த விநோதப் பிரியையான நவீன சிரேஷ்டர் ஆயிரம் வகையான அவசியமற்ற கேள்விகளினாற் சருவினார். இடையிடையே, வியாகுலமேரி நினையாத நேரத்தில் சூட்சமாய் மிகவும் நுட்பமான கேள்விகளைக் கேட்பார். ஆனால் நூறாயிரம் நுட்பமான உபாய தந்திரங்கள் ஒன்றுசேர்ந்தாலும் மனுஷஞானம் திவ்விய இஸ்பிரீத்துவினால் அருளப்பட்ட தெய்வீகஞானத்தை வெல்லமுடியுமா? மானிடஞானமானது தலையைக்குத்திப் புரவியாடினாலும் கலக்கம் கொண்டு வெக்கம் அடைவதே அநுபவ சித்தாந்தம். புதிய சிரேஷ்டர் கேட்ட கேள்விகளுக்கு "ஆம்" அல்லது "இல்லை" என்று நறுக்குவிடையிறுத்து அவ்விடையின் அரைவாசியைத் தொண்டைக்குள் நசுக்கி அமுக்கிவிடுவாளேயல்லாது, புதிய சிரேஷ்டர் எவ்வித புதியவெளிச்சமும் அடைவதற்கு இஸ்பிரீத்துசாந்துவின் ஞானம் நிறைந்த இந்தத் தேவதாயின் குமாரத்தி எப்பிரமாணமேனும் இடங்கொடுக்கவேயில்லை. இவ்விதம் தோல்வி அடைந்த சிரேஷ்டர் தமது ஆற்றாமையை ஒப்புக்கொள்வதை விட்டுவிட்டு வியாகுலமேரி பத்திமாவின் காட்சி சம்பந்தமானவற்றையெல்லாம் முற்றாக மறந்துவிட்டாளென்று, தமது ஞானத்தின்படி முடிவுகட்டிப்போட்டார். தாம் எடுத்துக்கொண்ட முடிபுதான்சரி என்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்ற உரோசத்துடன் வியாகுலமேரியை நோக்கி:

பத்திமாவில் தேவமாதாவுக்கும் உனக்குமிடையில் நடந்தவிஷயங்கள் உனக்குஇன்னும் நினைப்பாயிருக்கிறதா? நீ அவைகளை முற்றாய் மறந்துவிட்டாய், இது நிச்சயம் என்றார். இதைக்கேட்டதும் லூசியா தலைகவிழ்ந்து, கூச்சத்தினால் முகம் கடுமையாகச் சிவந்து:

என்ன மறந்துவிட்டேனா? நான் அவைகளைப்பற்றிச் சிந்தியாத நொடிப்பொழுதுதானும் உண்டா? என்றாள். சிரேஷ்டரும் வெட்கித் தலைகுனிந்தார்.

லூசியாவுக்குப் பதினெட்டு வயதாகப்போகிறது. இவள் இப்போது போதியளவு கல்வித்தேர்ச்சியடைந்துவிட்டாள். விசேஷமாக இவள் வேதவிஷயத்திற்தான் மேலான தேர்ச்சியடைந்தாள். பல்வேறுவகையான தையல்வேலைகளிலும், உடுப்புகள் தயார்செய்யும் விஷயத்திலும் இவள் பெரும் புனிதமான தேர்ச்சியடைந்திருக்கிறாள். வலிமையும், கெட்டித்தனமும், தகமையும் உள்ள இவள் தனதுசிரேஷ்டர்கள் என்னென்ன விருப்பம் உடையவர்களாக இருக்கிறார்களோ அவ்விருப்புகளுக்கு எப்போதும் இணங்கி நடக்கவும் அவர்கள் இட்ட கடமைகளைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றவும் ஆயத்தமாக இருந்தாள். இவளுடைய சிலசில இயல்பான குறைபாடுகள் துடுக்குத் தன்மையான குணங்கள் எல்லாம் இவளைவிட்டு முற்றாய் விலகிவிட்டன. தன்னை எல்லாவகையாலும் திருத்திப் போடவேண்டுமென இவள் எடுத்துக்கொண்ட பிரயாசையும், புதிய இந்தச் சீவியமும், விசேஷமாகத் தேவ இஷ்டப்பிரசாதம் இவள் ஆத்துமத்திற் செய்துவந்த வேலைகளும் இவ்வித மாற்றங்களுக்குக் காரணமாயின.

லூசியாவில் விசேஷித்து விளங்கிய இலட்சணங்கள்: இவளுடைய மகா அமரிக்கையான போக்கும், சமன்செய்து சீர்தூக்கும் தன்மையுள்ள மனப்பான்மையும், காற்றாடி போலும் வேளைக்குவேளை மாறாத நிலையான மனச்சார்பும் ஆகும். இவள் விறுவிறுப்புக்கொண்ட குணமுடையவளுமல்ல. நரம்புத்தளர்ச்சியினால் தாக்குண்டவள் என்று சொல்வதற்கு இடம் வைத்தவளுமல்ல. உணர்ச்சியின்வழியேமாத்திரம் செல்லும் தன்மையுடையவளுமல்ல.

இவள்தனது ஜெனன நாட்டை நினைத்து ஒருமுறை மாத்திரம் அழுததைக்கண்டேன் என்று இவளுடைய ஆசிரியைகளுள் ஒருவர் சொல்லியிருக்கிறார். யோசனையும், உள்ளதை உள்ளபடி பேசுந்தன்மையும், புனிதமும், நிஷ்கபடமும் எப்போதும் ஒன்றோடொன்று இவளில் இணைந்து அமைந்திருந்தன.

"இந்த மலைநாட்டு வனிதையை" குளிர்ந்துபோன இருதயத்துடன், அன்பின் அசுகைதானும் இல்லாது ஏற்

றுக்கொண்ட தாயார், இப்போது எவ்வளவோ மனமாற்றம் அடைந்துவிட்டார். ஒருபோதும் வெளித்தோற்றத்தினால் மதித்து எவரையும் முடிவுகட்டப்படாது என்ற நல்லபாடத்தை அந்தத் தாயார் இப்போது நல்லாகப் படித்துவிட்டார். இவள் அருகிலிருந்து இவளை நன்றாக அவதானித்து இவள் போக்குவாக்குகளை நன்கு கற்றறிந்த பின், இவள் மகா பெறுபேறுகள் நிறைந்தவள் என்றும், தேடற்கரிய குணவிசேடங்கள் அமைந்தவள் என்றும் கண்டுபிடிக்கலாயினர். பத்திக்குரிய புத்தகங்களை லூசியா மிகவும் விரும்பி வாசிப்பாள். விசேஷமாகப் **பாலகயேசுவின் சின்னத்தெரேசம்மாளின் சரித்திரம் அவளுக்கு மகா பிரீதி உண்டுபண்ணும்.**

கார்மேல் மடத்துச் சந்நியாச சீவியத்தின் உசிதங்களை இவள் தன் நல்வாசனைகளினால் உருசிகரித்தபடியால், தானும் அச்சபையில் சேரவேண்டும் என விரும்பித் தன் கருத்தை மடத்துச் சிரேஷ்டருக்கு வெளியிட்டாள். கார்மேல் மடத்துக் கடுந்தபசு நிறைந்த சீவியத்தை உன்னால் தாங்கமுடியாது. அதிகம் இலேசான வேறொரு கன்னியாஸ்திரீமார் சபையைத் தெரிந்துகொள்ளப்பார் என்று சிரேஷ்டர் இவளுக்கு அறிவித்தார்.

சாங்கோபாங்க சீவியத்திற் தனக்கிருந்த வாஞ்சையினால் உண்டான முதலாம் ஆசையைக் கைவிடுவது லூசியாவுக்குப் பெரிதும் கஷ்டமாயிற்று. ஆயினும் சிலநாட் பொறுத்து நன்றாக யோசனை செய்துவிட்டு: “தாயாரே! நான் அர்ச். டொறோத்தே அம்மாளின் கன்னியாஸ்திரிமார் சபையிற்சேர விரும்புகிறேன்” என்றாள். மகளே! உனக்கு இன்னும் வயசு போதாதே. ஏன் கன்னியாஸ்திரியாகவர விரும்புகிறாய்? ஏனென்றால் அப்போது தாராளமான சுயாதீனத்துடன் கோவிலுக்குப்போக எனக்கு வசதி கிடைக்கும் என்றாள் லூசியா. ஆ! லூசியாவின் உருக்கம் நிறைந்த பேராசையே! பிரான்சிஸ் இயாசிந்தா எனும் இருவரும் பரலோகத்தில் யேசுநாதர் அருகிலே இருப்பதுபோலப் பூலோகத்திலும் தான் யேசுநாத

ருடைய பக்கத்தில் இருக்க விரும்புகின்றாள். ஆனால் இன்னும் இளம்வயசுள்ளவள்தானே. சிலகாலம் தாமதிக்கவேண்டும் மகளே! என்றார் சிரேஷ்ட தாயார்.

லூசியா ஒன்றும் பேசாது ஒரு வருடம் பொறுமையுடன் காத்திருக்கிறாள். இவளுக்குப் பதினெட்டு வயதான பிற்பாடு ஒருநாள் தாயார் இவளை நோக்கி: நீ ஒரு கன்னியாஸ்திரியாவதற்கு இப்போது நினைப்பதில்லையோ என்றார்.

“நான் எப்போதும் நினைக்கிறேன் தாயார். அதை ஆசிக்கிறேன். ஆவலுடன் விரும்புகிறேன்.”

“அப்போ இப்பொழுது என்ன முடிவு?”

நான் காத்திருக்கவேண்டும் என்று நீங்கள் சொன்னீர்கள். நானும் நம்பிக்கையுடன் காத்திருக்கிறேன்.

இவ்வித பரிபூரண அமைச்சல் லூசியாவின் சீவியத்தின் விசேஷ இலட்சணமாக எப்போதுமே விளங்குவதாயிற்று.

தேவனுக்குத் தன்னைத் தானம் செய்ய ஆரம்பம்

அரசாட்சியார் சந்நியாச சபைகளுக்குச் செய்து வந்த அநியாயமான உபத்திரவங்களின் நிமித்தம் அர்ச். டொறோத்தே அம்மாளின் சபைக் கன்னியாஸ்திரிமாரின் நவ **கன்னியரின்** மடம் “**தூயி**” என்ற இடத்துக்கு மாற்றப்படவேண்டியதாயிற்று. இந்தத் தூயி என்னுமிடம் ஒரு பழைய ஸ்பானிய பட்டினம். இது மின்கோர் நதியின் வலதுகரையில் உள்ளது. இந்த மின்கோர் நதி ஸ்பானிய கலிசிய மாகாணத்தைப் போர்த்துக்கேய கலிசியமாகாணத்திலிருந்து பிரிக்கிறது.

வியாகுலமேரி அர்ச். டொறோத்தே அம்மாள் சபையாரின் நவ கன்னியருள் ஒருத்தியாக ஏற்றுக்கொள்ளப்பட்டாள் என்பதை அறிந்தபொழுது இவளுக்கிருந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. 1925-ம் வருஷக் கோடைகாலத்தில் சிரேஷ்டதாயாரும் லூசியாவும் வடபாகத்தை

நோக்கிச் செல்லும் புகையிரதத்தில் பிரயாணமானார்கள். புகையிரதம் சென்ற பாதையின் இருமருங்கிலும் லூசியா பார்த்து ஆச்சரியப்படக்கூடிய பல காட்சிகள் இருந்தன. ஆனால் இவளுடைய மனம் வேறு விஷயங்களில் முற்றாய் மூழ்கிப்போயிருந்தது.

சிரேஷ்டதாயார் தமது கடமைச் செபங்களைத் தமது "ஒப்பீஸ்" புஸ்தகத்தில் வாசித்துக்கொண்டிருக்கையில் "அபேட்சகர்" என்ற நிலையில் ஒரு வருடம் செலவிடும் கடமையைத் தவிர்க்க முடியாதோ என்று லூசியா யோசித்துக்கொண்டிருந்தாள். ஏனென்றால் ஒரு **விண்ணப்பக்காரியாக** அல்லது **நவகன்னியாஸ்திரியாகத்** தானும் தொடங்குவதற்குத் தான்ஆயத்தமாயிருக்கிறபடியாற்றான் இவள் அப்படி நினைத்தாள்.

டொரேத்தேய கன்னியாஸ்திரிமாரின் மாகாண அதிகாரிகளின் மடம் தற்காலப்போக்குக்கு ஏற்றபடி அமைக்கப்பட்ட விசாலமான ஒரு கட்டிடம். "விலார்" மடத்திலும் பார்க்க அதிகம் மனோகரம் உண்டுபண்ண வல்லது. ஏறக்குறையப் பிலுக்கான கோலம் உடையது. ஒரு அழகான வாயில்மண்டபத்தில், மேல்வீட்டிற்கு ஏறிச் செல்லும் படிகள் இருந்தன. படிகளின் இருமருங்கும் பச்சனவுள்ள பூண்டுகள் போச்சிகளில் வளர்ந்துகொண்டிருந்தன. அதன் பின்பு மெழுகினால் சுத்தம்செய்யப்பட்டு, மினுமினுங்கிக்கொண்டிருந்த ஒரு நடைவாசல் உண்டு. அவ்வழியாக மடத்துச் சிரேஷ்டரும், லூசியாவும் மாகாணச் சிரேஷ்டரின் அறைக்குச்சென்றார்கள்.

விலார் மடத்துச் சிரேஷ்டரும், மாகாணச்சிரேஷ்டரும் தனிமையாகச் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், லூசியா மடத்துச் சிற்றாலயத்துட் பிரவேசித்துச் செபம் செய்துகொண்டிருந்தாள். சில நிமிஷத்துக்குப் பிற்பாடு மாகாணத்தாயார் லூசியாவை அழைத்து, இவளுடைய தோளிற் கைவைத்து, மகா அன்புததும்பும் நகை முகத்துடன்: "மகளே, நீ எங்கள் மடத்தில் அபேட்சகியாகவல்ல (Asperant) **விண்ணப்பக்காரியாக** (Pastulant)

ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறாய். லூசியா, பெரியதாயாரின் கரங்களை முத்தமிடும்பொழுது, சருவேசுரன் தனது மன்றாட்டை இரக்கமுடன் கேட்டருளியதற்காக, அவருக்குத் தோத்திரம் செலுத்தினாள். ஏனென்றாற் தன்னை ஒரு விண்ணப்பக்காரியாக ஏற்றுக்கொள்ளும்படி பெரிய தாயாரின் மனசை ஏவிவிடும்படியாகத்தான் இவள் சற்பிரசாதநாதரை மன்றாடிக்கொண்டிருந்தாள். அப்படி ஏற்றுக்கொள்வதனால், தனது நித்திய வாக்குத்தத்தகாலம், ஒருவருஷத்தாற் குறையும் என்பதை இவள் நன்கறிந்திருந்தாள்.

அர்ச். டொரேத்தே அம்மாள் சபையாரின், கூட்ட ஒழுங்குச்சட்டங்கள் யேசுசபையாரின் ஒழுங்குச்சட்டங்களை மாதிரிச்சட்டங்களாகக் கொண்டன. யேசுசபையாரின் ஒழுங்குச்சட்டங்களின் உட்கருத்து, பரித்தியாகங்களை மிகவும் வேண்டிநிற்பவை. ஆனால் சட்டங்களின் வெளியரங்க அமைப்பு அப்படியான போக்குள்ளதல்ல. இன்னும் இந்தக் கன்னியாஸ்திரிமாரின் பிரீதிதரும் தன்மையும், வெகு துப்பரவு மலிந்ததுமான ஸ்தாபனமும், ஒழுங்குச்சட்டங்களை எளிதில் அனுசரிப்பதற்குப் பெரிதும் துணைபுரிவனவாகும். விண்ணப்பக்காரியாகவும், நவகன்னியாஸ்திரியாகவும் லூசியா மாகாண ஸ்தாபனத்தில் மூன்றுவருடம் செலவிட்டாள். இந்த மூன்றுவருடமும் டொரேத்தே அம்மாள் சபையாரின், ஒழுங்குச்சட்டங்களின் உட்கருத்து என்னவென்பதை நன்றாகக் கற்றறிந்துகொண்டாள்.

டொரேத்தே அம்மாள் சபைக் கன்னியாஸ்திரிமார் இருபிரிவாக வகுக்கப்பட்டிருக்கின்றனர். ஆசிரியைகளும், பணிவிடைக் கன்னியாஸ்திரிமார்களும் என்ற இருபிரிவினரில், லூசியா இரண்டாம் பிரிவிற்தான் சேரவிரும்பினாள். அதிலும் கீழான ஒருபிரிவு இருந்தால் அந்தப் பிரிவுதான் இவளுக்கு அதிகம் பிரியமாகும். இந்தப்பிரிவிலே சந்நியாசசீவியத்தின் வார்த்தைப்பாடுகளை அனுசரிப்பதனால், கூடுதலானபெறுபேறுகள் அடையலாமென்றும், விசேஷமாக அமைச்சலின் வழியாக, ஏராளமான பெறு

பேறுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் இவள் நன்கு அறிந்திருந்தாள்.

ஒருவருஷம் விண்ணப்பக்காரியாக இருந்தபிற்பாடு, 1926-ம் வருஷம் ஐப்பசிமாதம் ஒரு நவகன்னியாஸ்திரியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சபையாருக்குரிய விசேஷ அங்கியும் வெண்ணிறமுக்காடும் பெற்றுக்கொள்ளலாயினள்.

சந்நியாச வார்த்தைப்பாடுகள் கொடுக்கவேண்டிய காலம்கிட்டிவர ஒழுங்குச்சட்ட அனுசாரமும்கூடிய கடுமையுள்ளதாகின்றது. இவளுடைய நேரம் முழுவதும் ஞான அப்பியாசங்களிலும், வேலை செய்வதிலும் செலவாகிக்கொண்டு வந்தபடியால், ஒருநிமிஷமாகிலும் இவளுக்குச் சொந்தமாயிருக்கவேயில்லை. அதாவது சுயாதீனமாய் இவள் செலவிடுவதற்கு ஒரு நிமிஷந்தானும் கிடைக்கவேயில்லை.

இவைப்பற்றி நேரத்திற்றானும் நவகன்னியாஸ்திரிமார் ஞான விஷயங்களைப்பற்றித்தான், சம்பாஷிக்கவேண்டுமென்பது பிரமாணம். ஒவ்வொருநாளும் லூசியா இரவில் நித்திரைக்குப்போகுமுன் :

“ இன்றுமுழுவதும் எனக்குத் தேவதொண்டுகளால் நன்றாய் நிறைவான நாள் ஆயிற்று ” என்று சொல்லக்கூடியவளானாள்.

திரை திறபடுகின்றது

விலார் மடத்திலும் பத்திமா காட்சிகளைப்பற்றிச் சந்தேகம் உண்டுபண்ணும் **சோதனைகள்** லூசியாவுக்கு இன்னும் இடையிடையே வந்துகொண்டிருந்தன. தேவதாயார் தன்னையும் ஒருபொருட்டாக மதித்துத் தம்மைத் தனக்குக் காண்பிக்கக் கருணைகொண்டாரோ? தமது அறிவித்தல்களைப் பிறருக்கு அறிவிக்கும்படி தன்னையுமோ தெரிந்துகொள்ளத் திருவுளம் கொண்டார் என்று நினைப்பதுதானும் இவளுக்கு வெக்காளிப்பை உண்டுபண்ணியது. சருவேசுரன் தான்விசேஷவிதமாக நேசிக்கும் ஆத்துமாக்கள் தங்கள் தேவநேசத்தை மேன்மேலும்

தூய்மை உள்ளதாக்கும்படியாக, அவர்களுக்கு இவ்வித சோதனைகளை அனுப்பி, அவர்களைப்பரீட்சிக்கச் சிலசமயங்களில் விரும்புகிறார். ஆனாற் சந்தேகங்களை உண்டுபண்ணும் சோதனைகள் துரும்பததனைதானும், லூசியாவுடைய இருதயத்தின் உறுதியான நிச்சயத்தை அடிபாறச்செய்யவேயில்லை. உள்ளபடி 1924-ம் வருஷம் திருச்சபை விசாரணைச்சங்கத்தார் :

“ தேவதாயார் உண்மையாகவே உனக்குக்காட்சியளித்தார் என்று நீ நிச்சயமாயிருக்கிறாயோ ? ” எனக் கேட்டபொழுது:

“ ஆம் நிச்சயமாயிருக்கிறேன். நான் அவ்வளவு நிச்சயமாயிருக்கிறபடியால், என்னை யாராவது கொன்றுபோடுவதாகத்தான் பயமுறுத்தினாலும், நான் இதுவரைக்கும் சொல்லியவற்றிற்குமாறாக, ஒரு சொல்லுத்தானும் என்னைக்கொண்டு சொல்லுவிக்கமாட்டார்கள். ” என்று லூசியா விடை அளித்தாள்.

ஆனாலும் **தூயி** மடத்தின் சந்தேகங்கள் மீண்டும் இவளைச் சருவலாயின. பத்திமா விஷயங்களைப்பற்றி ஒருவருடனும ஒன்றும் பேசுவதில்லை என்று வாக்குக்கொடுத்தாளே. இந்த வாக்கினால் இவள் வாய்க்கு ஒரு பூட்டுப் போட்டதுபோலாயிற்று. ஆதலால், இவள் சந்தேகங்களை எவருக்காவது எடுத்துக் கூறி, ஆறுதலடைய இவளால் முடியாதுபோயிற்று. தனது சிரேஷ்டரின் கட்டளைப்படி, ஆத்தும குருவானவருக்குத் தன் கிலேசங்களை வெளியிட்டபொழுது, அவர் தன்னைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை என்ற மனப்பதிவு இவளுக்குண்டானது.

“ எல்லாத்திலும் மற்றவர்களைப்போலவே தானும் ” என்ற மனப்பதிவைப் பிறரில் உண்டுபண்ணவேண்டும் என லூசியா மிகவும் பிரயாசப்பட்டாள். விலார் மடத்திற்போலவே, தூயி மடத்திலும் இவள் அவ்விஷயத்தில் அனுகூலம் அடைந்தாள். வியாகுலமேரிதான், போர்த்துக்கால் தேசம் முழுவதும் பேசிக்கொண்டதும, இன்னும் பேசிக்கொள்வதுமான காட்சிக்காரி என்பதைப்பற்றி **தூயி**

மடத்தின் சிரேஷ்டரைவிட வேறுஎவரும் சமுசயந்தானும் கொள்ளவேயில்லை இவளும் ஏனைய விண்ணப்பக்காரர், ஏனைய நவகன்னியாஸ்திரிமார்போலவே யிருந்தாள். லூசியா தியானம் செய்யும்பொழுது, அல்லது திவ்விய பூசை காணும்பொழுது யாராவது உபாயமாக இவளுடைய இரண்டு கருமையான கண்களின் கோலத்தை உற்று நோக்கியிருப்பார்களானால் அவற்றில் அபூர்வமான ஆழ்ந்த குறிப்புகளைக் காணாதுபோகமாட்டார்கள். ஆனால் இவளை அவதானிப்பாருமில்லை, இவளுடைய போக்குவாக்குகளை ஆராய்ச்சி செய்வாருமில்லை. இவளுடைய உடன் சகோதரிகளும், ஆசிரியைகளும் ஏறக்குறைய எல்லா முதலாளிமார்தானும் இவளுடைய உண்மையான பெயர் என்னவென்பதை யறியமாட்டார்கள்.

போர்த்துக்கால் தேசத்திலே, பத்திமாவின் லூசியா தங்கள் நாட்டில் இல்லையென்றும், ஸ்பானிய தேசத்திலே கலிசியாவிலோ, அவுஸ்திறியாஸ் பிரிவிலோ உள்ள ஒரு மடத்திலே வசிக்கிறாள் என்றும் மங்குளமாய் அறிந்திருந்தார்கள். இவள் வேலைசெய்துவந்த, வஸ்திரம்சுத்தி செய்யும் சாலையிலுள்ள ஒரு ஜன்னல் ஊடாகப் பாதி ஸ்பானியாவுக்கும் பாதி தன் ஜென்ம நாடாகிய போர்த்துக்காலுக்கும் சேர்ந்த ஆற்றை இடைக்கிடை உற்று நோக்குவாள். இவளுடைய இருதயமானது தூரத்தை அலட்சியம் செய்துவிட்டு, இவளுடைய சொந்த வீடுவாசல்

வஸ்திர சுத்தி சாலை யன்னலுக்கு ஊடாக அவள் ஆற்றைப் பார்த்தாள்.

மட்டும் கோவாடி இறியாமட்டும்தானும் சென்றுகொண்டேயிருக்கும். மனோகற்பனையின் வழியாகஇவள் தான் முந்தி நடமாடிய மலைகளின் மூலை முடுக்குகள் எல்லாவற்றையும் பரிசோதிப்பாள். கருவாலி மரங்களையும் பச்சைஷேன் மரங்களையும் தன் மனக்கண்களால் தரிசிப்பாள். தான் ஒரு சப்பின்மரவாங்கில் உட்கார்ந்துகொண்டிருக்கத் தனது தாய் சில பயபத்திக்குரிய புத்தகங்களை வாசித்துக் காட்டின தன்மையையும இவள் நினைவின் வழியாகத் தரிசிப்பாள். இன்னும் தங்கள் ஊரிலுள்ள சிறிய சவக்காலையையும் அதில் அடக்கம் பண்ணப்பட்டிருக்கும் பிரான்சீசின் சவக்குழியையும் அவன் மோட்சத்திற் தனது சகோதரி இயாசிந்தாவுடன் யேசுநாதருக்கருகில் இருப்பதையும் இவள் சிந்திப்பாள். தன் தகப்பனுடைய கல்லறையண்டை தான் செபிப்பதையும், கடைசியாகக் கோவாடி இறியாவுக்குச் சென்று அங்கு தேவதாயார் காட்சிகொடுத்த இடத்திற் கட்டப்பட்ட சிற்றாலயத்திற் தான் செபித்துக்கொண்டிருப்பதையும், தன் மனக்கண்களினால் மீண்டும் நோக்குவாள். ஆனால், அங்கு படிப்படியாகக் கட்டியெழுப்பப்படும் அதி அலங்காரமான பிரமாண்டமான மகா ஆலயத்தைப்பற்றி மாத்திரம் இவள் ஒன்றும் அறியாள். பச்சைஷேன் மரங்கள் இடையிடை அங்கொன்று இங்கொன்றாக நிற்பதையும், தனது குடும்பத்துக்குச் சேர்ந்த நிலபுலங்கள் இன்னும் இருந்தபடியே இருக்கிறதோ அல்லவோ என்பதையும் இவள் அறியாள்.

இவ்விதம் இவைகளைப்பற்றி ஒன்றும் அறியாதிருப்பதுதானே இவளுடைய சந்தேகங்களை வளர்ப்பது போலாயிற்று. “இப்போ எல்லாம் முடிந்துவிட்டது. எனது காட்சிகளை ஒருவரும் நம்பவில்லை. நான் பொய்சொல்பவள் என்று எல்லாரும் முடிவுகட்டிப்போட்டார்கள். தேவமாதா கேட்டுக்கொண்டபடி. கோவாடி இறியாவில் ஒரு கோவில் கட்டப்படவும் இல்லையே” என்ற எண்ணங்கள் எனது மனசுக்குள் இடைக்கிடை வந்துகொண்டிருந்தன. இந்த எண்ணங்களால் நான் சொல்லிலடங்காத வேதனைப் பட்டேன் என்று லூசியா எழுதியிருக்கிறாள்.

இவ்வித எண்ணங்கள் இவளை விடாப்பிடியாகச் சருவிக்கொண்டிருக்கையில், எல்லாம் நான் எண்ணியதுக்கு மாறாக முடிந்துவிட்டதென்றால் அது ஆண்டவருடைய சித்தம். ஆனால், நானோ தேவதாய் என்னிடம் கேட்டவைகளைப் பிரமாணிக்கத்துடன் நிறைவேற்றினேன். எல்லாவற்றையுமே நிறைவேற்றினேன்.

இப்படித் தேவசித்தத்துக்கு இவள் தன்னை முற்றாகப் பணித்துக்கொண்டிருக்கையில் இவளுடைய இருதய அந்தரங்கத்தில் ஒரு அபூர்வமான, அதிமதுரமான குரல் ஒலி ஒன்று ஒலித்தது. இந்தக் குரல் ஒலி இவளுடைய மனஇருள் முழுவதையும், சந்தேகங்களையும் அகற்றி இவளுடைய கவலைகள் எல்லாவற்றையும் கலைத்துவிட்டது.

லூசியாவுடைய நவசந்நியாச காலம் முடிகிற பக்குவத்தில் மகா கல்விமானான யேசுசபைக் குருவானவர் ஒருவர் இவளைச் சந்தித்து இவள் தன் ஜெனன நாட்டைவிட்டுப் பிறதேசம் சென்ற நாட்தொடக்கம் இதுகாலவரையில் பத்திமாவில் நடந்த சகல சம்பவங்களையும் இவளுக்குப் பூரணமாக விபரித்துக் காட்டினார். குருவானவர் பத்திமா விஷயங்களை ஒன்றின்பின் ஒன்றாக விபரிக்கும் வேளையில் லூசியா மிகவும் ஆச்சரியமான காரியம் ஒன்றை அவதானித்தாள். அவர் தனக்குச் சொல்வது ஒன்றும் புதிய சங்கதிகள் அல்ல, ஏலவே தனக்கு அவை எல்லாம் தெரிந்தவைகள் என்ற மனப்பதிவு இவளுக்கு உண்டாயினது. உள்ளபடி எத்தனையோ சமயங்களில் இவளுடைய மனம் இருட்படலங்களால் மூடப்பட்டிருக்க வெகு தூரத்திலிருந்து ஒரு மங்குளமான குரல் ஒலியானது, இவளுடைய மலைநாட்டில் நடப்பவை யாவையும் இவளுக்கு அறிவிக்கலாயிற்று. இது எப்படி நடந்ததென்று இவளாற் சொல்ல முடியவில்லை. ஆனால் உள்ளபடி மலைநாட்டுச் சம்பவங்கள் எல்லாம் ஒன்றின்பின் ஒன்றாக இவளுக்கு அறிவிக்கப்பட்டன.

சிலநாட்களுக்குப் பிற்பாடு மடத்து நடைவாயிலிற் பத்திமா நாயகியின் திருச்சுரூபம் ஒன்றை இவள் முதல்

முறை கண்டபொழுதும், முன் சொன்னதுபோன்ற ஒரு குரல் ஒலி உள்ளத்திற் தொனிக்கலானது. அந்தச் சுரூபத்தைக் கண்டுவிட்டு, அது பத்திமாவில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டது தனக்குத் தெரியும் என விளங்கவைத்து, அங்கே பார் நான் அப்படித்தான் நினைத்தேன் என்று தலைகுனிந்து, முகஞ்சிவந்து வெகு துக்கத்துடன் சொன்னாள்.

சிலநாட்களின் பின்பு ஒரு வாங்கின்மேல் பத்திமா நாயகியின் வரவணிக்கம் ஒன்று இருப்பதைக் கண்டாள். அதிற் காட்சிகண்ட மூன்று இடையப்பிள்ளைகளுடைய சாயல் பதிக்கப்பட்டிருப்பதைக் கண்டு, லூசியா அனுபவித்த மனோபீடை சொல்லுந்தரமன்று. இவள் அதைக் கண்டு கண்ணீர் சொரிந்து, அறிவு சோரும் பக்குவத்தையடையுமட்டும் அழுதுகொண்டிருந்தாள்.

அதன்பின்பு இவள் வரவணிக்கத்தை இருந்தவிடத்தில் வைத்துவிட்டுப் போனாள். எவராலும் மறக்கப்பட்டவளாய் மறைந்திருக்க ஆசித்துவந்த நான் இப்போது பிரசித்தி பெற்ற ஆளாய்விட்டேனே என்பதுதான் லூசியாவுடைய வியாகுலத்துக்குக் காரணம். உலகத்தவர்கள் தன்னைப்பற்றியும் தான் மறைத்துவைத்த விஷயங்களைப் பற்றியும் பேசுகிறார்களே. தனது பரலோக நன்மைகளெல்லாம் பூலோகத்தவர்களுடைய யோசனையற்ற பேச்சுகளுக்கு இலக்காகிவிட்டனவே என்று எண்ணி எண்ணி வியாகுலமேரி சிந்தாகுலப்பட்டாள்.

தேவசமுகத்திலே இவள் தனிமையாக இருந்த பொழுது இவள் எவ்வளவு கூச்சமும் மனக்கலக்கமும் அடைந்தாள். என் தேவனே, நீர் என்னை ஏன் தெரிந்துகொண்டீர். உமது இரக்கத்தின் பேரினாலோ “வேறு எத்தனையோ பேருக்கு உமது இரக்கத்தைக் காண்பியாது எனக்குக் காண்பிக்கவேண்டியது ஏனோ! இனிமேல் நான் இந்த இரக்கத்தைப்பற்றிச் சிந்தை செய்யேன். தேவ இரக்கத்தின் பரம இரகசியத்தைச் சிந்திக்கும் அலுவலை விட்டுவிட்டு அந்த இரக்கத்தினால் எனக்கு அருளப்பட்ட

வரப்பிரசாதத்துக்கு மனோவாக்குக்கெட்டாத வரப்பிரசாதத்துக்கு நான் இணங்கி நடப்பதைப்பற்றியே சிந்தை செய்வேனாக" என்று லூசியா தீர்மானித்துக்கொண்டாள்.

சகலமும் சருவேசுரனுக்கே

21 வயசில் அதாவது 1928-ம் வருஷம் ஐப்பசி மாதம் 3-ந் தேதி லூசியா தனது முதலாம் வார்த்தைப்பாட்டைக் கொடுத்தாள். மகா வந்தனைக்குரிய யோசே கொறெயா டா சில்வா ஆண்டவர் அவர்கள் அத்திருச் சடங்குக்குத் தலைமை வகிக்கச் சம்மதித்திருந்தார். ஆனாற் கடைசி நேரத்திலேற்பட்ட விலக்கமுடியாத தடையின் நிமித்தம் அவர் சமுகங்கொடுக்க முடியாதுபோயிற்று. அவருக்குப் பதிலாக மிகவும் பிரபலியம் பெற்ற ஒரு குருவானவரை நியமித்திருந்தார். இந்தக் குருவானவர் திருச்சபைச் சட்டப்படி இவ்வித சடங்காசாரங்களின்முன் கேட்கப்படவேண்டிய கேள்விகளை வியாகுலமேரியிடம் கேட்டார்.

"மகளே! நீ என்ன கேட்கிறாய்?"

"தேவதொண்டுக்கும் பிறர் ஆத்தும இரட்சணியத்துக்கும் என்னைக் கையளிக்க விரும்பித் தேவநேசத்துக்காகவும், கன்னிமரியாயின் நேசத்துக்காகவும் என்னை இந்தப் பரிசுத்த சபையிற் சேர்த்துக்கொள்ளும்படியாக நான் தாழ்மையுடன் கேட்கிறேன்" என்றாள். இந்தப் போர்த்துக்கேய குருவானவரின் வழியாகச் சிஸ்ரர் வியாகுலமேரி பத்திமாவைப்பற்றிய சங்கதிகளை அறிந்துகொண்டாள். ஆனால், தான் இவ்வளவுகாலமும் அவ்விஷயங்களைப்பற்றிக் காப்பாற்றிவந்த மௌனத்தை மீறவேயில்லை. மடத்தார் எவருக்கும் அதைப்பற்றிச் சொல்லவுமேயில்லை. இவளுடைய உடன்சகோதரிகள் அல்லது சிரேஷ்டர்கள் எவராவது இவள் ஆர் என்பதைப்பற்றிச் சமுசயப்பட்டாலும் தங்கள் சமுசயத்தை நிவிர்த்தியாக்கும் எவ்வித அடையாளத்தையும் அவர்கள் சிஸ்ரர் வியாகுலமேரியில் கண்டுபிடிக்கவேயில்லை.

அடுத்த வருஷம் நத்தார்ப் பெருநாளுக்கு இவள் சில பாக்களும இயற்றி ஒரு காட்சியும் ஒழுங்குசெய்து மடத்திலிருந்த நவகன்னியாஸ்திரிமாருக்கும், தாயார்மாருக்கும் பெரும்மனமகிழ்வு உண்டுபண்ணினாள். புதுவருஷத்துக்கும் தனது ஜெனனநாட்டிற் பாடப்படும் சில கீதங்களைப் பாடினாள். இவள் பாடிய அந்தக் கீர்த்தனங்கள் இவளுடைய உள்ளத்திற் புதுப்பித்த ஞாபகங்கள் என்ன? உண்டுபண்ணிய அருட்சிகளும், கிளர்ச்சிகளும் என்னவென்று ஒருவராவது சமுசயந்தானும் கொள்ளவில்லை.

கோவாடி இறியாவுக்கு வரும் யாத்திரிகள் அங்கு லூசியாவைக் காணாதபடியால், இவளை நன்கு அறிந்தவர்கள் இவளுக்கு என்னதான் சம்பவித்ததோவென்று மிகவும் அங்கலாய்ப்புக் கொண்டார்கள். லூசியாவுடைய தாயைக்கேட்டால் அவள் அவர்களுக்குக் கொடுத்த விடையினால், அவர்கள் சந்தேகங்கள் தீர்ந்தபாடில்லை. விநோதப்பிரியர் லூசியாவைப்பற்றி அறிய விரும்பியபொழுது, 1921-ம் வருஷம் லூசியா சத்தம் சந்தடி ஒன்றுமில்லாது தன் ஜெனனநாட்டை விட்டுப் புறப்பட்ட பிற்பாடு ஊறெம் அரசினர் சங்கத்தார் பெற்றுக்கொண்ட மறுமொழியையே அவர்களும் இப்போது பெற்றுக்கொண்டார்கள்.

லூசியா காணாமற்போன விஷயம் சத்துருக்களுக்கும் மித்துருக்களுக்குமிடையில் பல வாக்குவாதங்களுக்குக் காரணமாயிருந்தபடியால் அரசினர் குறுக்கிட்டு இவ்விஷயத்தில் அடங்கிய இப்பரம இரகசியத்தின் மர்மங்களை வெளியிடப் பிரயாசப்பட்டார்கள். மரியரோசாவை அதிகாரிகள் அழைத்து உசாவினபொழுது அவள் தனக்கு இயல்பாயுள்ள திடாரிக்கத்துடனும் நிஷ்கபடத்துடனும்: "எனது மகள் எங்கேயிருக்க விரும்புகிறாளோ அங்கேயிருக்கிறாள். அவள் இருக்கும் இடத்தில் இருப்பதே எனது விருப்பமும் ஆகும். இதற்கு மிஞ்சி உங்களுக்கு நான் ஒரு மறுமொழியும சொல்லமாட்டேன்" என்றுவிட்டாள். அரசியல் அதிகாரிகள் அறிந்ததிலும்பார்க்க விநோதப்பிரியர் கூடுதலாக அறியவில்லை. ஆனாலும் லூசியா

ஸ்பானியா தேசத்திலே அர்ச். டொரூத்தேயம்மாள் கனனியர் சபை ஒன்றிலே இருக்கிருள் என்ற சத்தம் ஒரு வகையாக நாடெங்கும் பரவியது.

சிலர் இந்தச் சபைக் கன்னியாஸ்திரிமாரையண்டி, எதுவிதமும் பத்திமாவிற் காட்சிகண்ட லூசியா எங்கிருக்கிருளெனத் தங்களுக்கு அறிவிக்கவேண்டுமென அலட்டினார்கள். இந்தக் கன்னியாஸ்திரிமார் லூசியா என்பது யார்? அவள் எங்கு இருக்கிருள் என்பதைப்பற்றி அறவே அறியாதபடியினல் என்ன மறுமொழி சொல்வது என்று அறியாது திகைத்தார்கள்.

இயாசிந்தா, முன்னே சில சமயங்களில் மற்றவர்களுடைய வினேதப்பிரியத்துக்குத் தப்பும்படியாகக் கைக்கொண்ட உபாயத்தை இப்போது சிஸ்ரர் வியாகுலமேரியும் கைக்கொண்டாள். இயாசிந்தா உண்மைக்கு மாறில்லாமலும், பிடிகொடாமலும் கருமம்பார்க்க அறிந்திருந்தாள். சிஸ்ரர் வியாகுலமேரியும் அப்படியே செய்தாள்.

ஒருநாள் ஒரு போர்த்துக்கேய இளங்குருவானவர் டொரூத்தேய கன்னியாஸ்திரிமாரின் தூயவெண்ணிறமும், பூச்சித்திரங்கள் பொலிந்து விளங்குவதுமான அவர்கள் சிற்ருலயத்திற் பூசைசொல்ல உத்தரவு பெற்றுக்கொண்டார். அப்போது சிஸ்ரர் வியாகுலமேரிதான் சக்கிறிஸ்திவேலை பார்த்துக்கொண்டு நின்றவள். பூசைமுடிந்து நன்றியறிந்த, தோத்திரகீதச் செபங்கள் எல்லாம் சொல்லிமுடித்துப் பின் பூசை உடுப்புகளை மடித்து இலாச்சிக்குள் வைத்துக்கொண்டு நின்ற சிஸ்ரர் வியாகுலமேரியை அக்குருவானவர் பார்த்து:

சகோதரி! வியாகுலமேரி என்ற அந்தப் பிரபலியம் பெற்ற கன்னியாஸ்திரியை நான் கண்டு சிறிதுநேரம் சம்பாஷிக்கக்கூடுமோ? என்ருர்.

"பிரபலியம் பெற்றவரா" என்று சிஸ்ரர் வியாகுலமேரி சிறிது நகைப்புடனும் வெறுப்புடனும் கேட்டாள்; பின்னர், அவர் கேட்டகேள்விக்கு: சுவாமி, நீர் மகிமைப் பட்டங்களை வாயில் வந்தபடி சொல்லுகிறீரே! அற்பனில்

அற்பனகிய அந்த நங்கை, எவ்வித பெறுபேறுமற்ற அந்த நங்கை, எப்படித்தான் பிரபலியம் பெற்றுவிட்டாளோ என்று குறிப்பாய் விளங்கவைத்தாள்.

ஆம், ஆம். அப்பெண் பிரபலியம் பெற்றவள்தான் என்று குருவானவர் வற்புறுத்தினர். வற்புறுத்தி அந்தக் கன்னியாஸ்திரி எப்படிப்பட்டவள் என்று கேட்டார்.

"எங்கள் எல்லாரையும் போலத்தான்; இங்கேபாரும் **என்னைப்போல**த்தான் அவளும் ஒரு கன்னியாஸ்திரி; நாங்கள் எல்லாரும் ஒவ்வொருவருக்கும் சமன்" என்ருள் வியாகுலமேரி.

அந்த நல்ல குருவானவர், தாம் கண்டுபேசியது பத்திமாவின் லூசியா என்பதிற் சந்தேகமில்லை என்ற மனப்பதிவுடன் தூயிபட்டணத்தை விட்டகன்ருர்.

வேருெருவிசை ஒரு போர்த்துக்கேய கன்னியாஸ்திரியுடன், மின்ஹோ நதியின் அக்கரையிலுள்ள வலேன்சியா பட்டணத்துக்குப் போசனபதார்த்தங்கள் வாங்குவதற்கு லூசியா போனுள். இரண்டுபேரினதும் வதனங்கள் ஆனந்தத்தினுற் பிரகாசித்துக்கொண்டிருந்தன. ஏனென்ருற் தங்கள் சொந்தத் தாய்நாடாகிய போர்த்துக்காற்பூமியில் கால் வைக்கப்போகிறேமே என்பதுதான் அவர்களுக்கு மகா மனமகிழ்ச்சி.

இருசாதியாருக்கும் பொதுவான பாலத்தைக்கடந்து சென்ருர்கள். அவர்களைப் பொலிசுமார் தடைசெய்யவுமில்லை, ஆயக்காரன் வழிமறிக்கவுமில்லை. அவர்களுடைய கறுத்த உடையும் மேலங்கியும் மெல்லிய முட்டாக்கின் கீழே இருந்த உப்பல்செய்த கழுத்துக்குட்டையும், அவர்களுடைய செந்தளிப்பு நிறைந்ததும் புன்னகை பூத்தபடி இருந்ததுமான வதனங்களை மறைத்துக்கொண்டிருந்தன.

இவர்களுடைய உடையினுல் இவர்களை மட்டுக்கட்டின அம்மாமார் மூன்றுபேர் இவர்கள்முன் குறுக்கிட்டு, நீங்கள் டொரூத்தேய கன்னியாஸ்திரிமார் அல்லவா? என்ருர்கள்.

ஆம்.

போர்த்துக்கேயரா? தூயிபட்டணத்தில் வசிப்பவர்களா?

ஆம் அம்மாமாரே!

நாங்கள் தூயிபட்டணத்துக்குத்தான் போகிறோம். பத்திமாவில் காட்சிபெற்ற லூசியாவை அங்கு காணப்போகிறோம். இப்போது லூசியா வசிப்பது ஸ்பானியாவில் அல்லவா?

இல்லை, இல்லை. இப்போது லூசியா போர்த்துக்காலிற்தான் இருக்கிறாள்.

என்ன சொல்லுகிறீர்? ஆ! என்ன நிர்ப்பந்தம்.

ஆம், ஆம். அம்மாமாரே! லூசியா இப்போது போர்த்துக்காலிற்தான் நிற்கிறாள். அது நிச்சயம்.

லூசியா தூயிபட்டணத்தில் இருந்தால் நாங்கள் அவளைச் சந்திக்கமுடியுமா? அவளைச் சந்தித்துச் சம்பாஷிப்பதென்றால் கஷ்டத்திற் கஷ்டம் என்று சொல்லுகிறார்களே!

கட்டாயம் நீங்கள் அவளைச் சந்திக்கலாம்.

அது எப்படி?

எப்படியா? இப்போது நீங்கள் என்னைக் காணுமாப்போல அவளையும் காணலாம்?

இதன்பின்பு இருபகுதியாரும் ஒருவரை ஒருவர் விட்டுப்பிரிந்து தங்கள் வழிவழியே போயினர். இரண்டு கன்னியாஸ்திரிமாரும் சிறு பிள்ளைகளைப்போலப் பூரண வெண்மனசுடனும், நிஷ்கபடத்துடனும் தன்னாரவாரம் சிரித்துக்கொண்டு போய்விட்டார்கள். உண்மையாகவே இவர்கள் சிறுபிள்ளைகளின் சிந்தையுள்ளவர்கள் என்பதில் மயக்கமில்லை.

சிலகாலத்துக்கு இளைப்பாறும்படியாகச் சிஸ்ரர் வியாகுலமேரியை **பொன்ரேவேதிரு** என்ற இடத்துக்கு அணித்தாயுள்ள தோஜா என்ற சுகஸ்தானத்துக்கு அனுப்பியிருந்தார்கள். அங்கு சுகம்நோக்கி வந்திருந்த ஒரு துரைமகன் ஒருநாள் சிஸ்ரர் வியாகுலமேரியை நோக்கிப் பத்திமாவிற் காட்சி

கண்ட மாது இப்போது தூயிபட்டணத்தில் இருப்பதை நான் அறிவேன் என்றார்.

இல்லை ஐயா; நீங்கள் சொல்வது முற்றும் நிதார்த்தமல்ல.

வீண் கட்டுக்கதைகளை ஒருபோதும் வரையாத ஒரு பத்திரிகையில் நேற்றுத்தானே நான் அதை வாசித்தேன் என்றார் துரைமகன்.

தனக்கு அறியாமை இருத்தல் கூடுமென நடித்து, நல்லது அந்த மாது தூயிபட்டணத்தில் இருப்பதை இப்பொழுது எனது அறிவுக்கெட்டியபடி நான் சொல்லமுடியாது என்றாள் சிஸ்ரர் வியாகுலமேரி.

சிஸ்ரர் வியாகுலமேரியின் ஆழ்ந்த பூரணவெண்மனசும், தனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகள் இல்லாது ஒழியுமட்டும் சகலத்தைப்பற்றியும் மௌனம்சாதித்துச் சிரேஷ்டருக்கு **அமையவேண்டிய திடசித்தமும்** ஆகிய இவ்விரண்டு இலட்சணங்களும் மிகவும் நுணுக்கமான தன்மையாக இவளிற் பொருந்தியிருந்தன.

என்றென்றைக்கும்

தூயி என்ற பட்டணத்தில், மாகாண மடத்தில் ஆறு வருஷம் சந்நியாசசீவியம் நடத்தியபின்பு, சிஸ்ரர் வியாகுலமேரி 1934-ம் வருஷம் ஐப்பசி மாசம் 3-ந் திகதி நித்திய வாக்குத்தத்தம்கொடுக்க ஏற்றுக்கொள்ளப்பட்டாள். எத்துணை மகாபாக்கியம்! ஆண்டவருக்கும் அவர் திருத்தாயாருக்கும் என்றென்றைக்கும் மீளாதவிதம் சொந்தமாகிவிடுவதான பாக்கியத்தை எவர்தான் சரிவர விபரித்தல் கூடும்?

யேசுநாதசுவாமியின் ஞானப்பத்தினியாகும் திருச்சடங்கு சம்பந்தமாய்ச் சிஸ்ரர் வியாகுலமேரியைச் சூழவர எங்கும் அன்புதேங்கி வழிந்துகொண்டிருந்தது.

சிஸ்ரர் வியாகுலமேரியின் தாயும் இரு சகோதரிகளும், மைத்துனி ஒருவரும், மரியறோசாவின் குடும்பத்தினருடன் சிநேகபாந்தவமுள்ள இன்னும் ஒரு பெண்மணியும் லூசியா

வின் மகாசந்தோஷத்திற் பங்குபற்றும்படி வெகுதூரத்தி லுள்ள பத்திமாவிலிருந்து தாயிமடத்துக்கு வந்திருந்தார்கள்.

மகாவந்தனைக்குரிய யோசே கொறெயா டா சில்வா ஆண்டவர் அவர்கள் தாமே திருச்சடங்குகளுக்குத் தலைமை வகித்து அவற்றை நிறைவேற்றினார்.

காட்சி அளிக்கப்பெற்ற இந்தப்புண்ணியவதியைச் சூழ இருந்த மௌனம் என்ற கருங்கல்மதிலை இடித்துத் தகர்த்து விடவேண்டுமென்பதுதான் மேற்றிராணி ஆண்டவர் அவர் களின் தீர்மானம். வியாகுலமேரி எந்தவகையான வலிமை யுள்ள சோதனைகளையும வெல்லக்கூடிய தாழ்மை உள்ளவள் என்பதைப்பற்றி இப்போது எவருக்காவது ஐயமில்லை.

வியாகுலமேரி தனது தாயை நித்தியவாக்குத்தத்தச் சடங்குக்குச் சமுகமளிக்கும்படி அழைத்தபொழுது இவ ளுக்கு என்ன சந்திப்புக் கொண்டுவரவேண்டுமென மரிய றோசா கேட்டிருந்தாள். அதற்குச் சிஸ். வியாகுலமேரி ஒன் றும் வேண்டாமென்றுவிட்டாள். ஆனால் மரியறோசா தான் ஏதோ ஒரு சந்திப்புக் கட்டாயம் கொண்டுவரவேண்டும் என்றும், தன் மகளுக்கு வேண்டியதென்னவென்றும் அழுங் குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டாள்.

எனக்கு இங்கே ஒரு குறையுமில்லை. ஆச்சி, நீங்கள் வெறுங்கையோடு வாருங்கள் என்று சிஸ்ரர் வியாகுலமேரி மீண்டும் சொல்லியிருந்தாலும் தாயுடைய பிடிவாதமான விருப்பத்தைச் சாந்திபண்ணவிரும்பித் தனக்குச் சில புஷ் பங்களும் தேனீக்களும் கொண்டுவரும்படி கேட்டாள்.

மரியறோசாவீட்டில் அவர்கள் மிகவும் கவனத்துடன் தேனீக்கள்வளர்த்து வந்தார்கள். ஆனபடியால் மகளுடைய கேள்விக்கு இசைந்து பொன்னிறமான தேனீக்களும், நன்கு தேனால் நிரம்பியிருந்த தேன்வதைகளும் கொண்டுவந்தார்கள். மரியறோசா தனதுமகள் லூசியா இப்போது பிறரை அணைப்புகிறவள் அல்ல என்பதை ஒப்புக்கொண்டாள். ஒப் புக்கொண்டு இவள் கேட்டுக்கொண்டபடி மேற்சொன்ன சந்திப்பை மகளுக்குச் சமர்ப்பித்தாள். போர்த்துக்கேய மலைநாட்டாரின் வழமைப்படி வாசனைத்திரவியங்களினாற்

தன்னை நன்றாகப் பூசிக்கொண்டு மரியறோசா ஸ்பானிய தேச மடம் ஒன்றில் பிரவேசித்தாள்.

நித்திய வாக்குத்தத்தம் கொடுத்த சிலநாட்களின் பின்பு வியாகுலமேரி **பொன்ரேவேதிரு** என்ற இடத்திலிருக் கும் வியாகுலமாதாவின் கல்லூரியில் பணிவிடைக் கன்னி யாஸ்திரியாக அனுப்பப்பட்டாள். விலார்மடத்து அடைக் கலச்சாலையில் தன்னை எவ்வித ஆர்வமுமின்றி ஏற்றுக் கொண்ட சிரேஷ்டதாயார்தாமே இங்கும் சிரேஷ்டதாயா ராக இருந்தார்.

இந்த நல்ல கன்னியாஸ்திரி இப்போது பத்திமாவின் காட்சிகளைப்பற்றிச் சந்தேகப்படுவதில்லை. ஏனென்றால், **திருச்சபை அவைகளை அதிகாரத்துடன் அங்கீகரித்துவிட் டது.** ஆனால் தனக்கிருந்த சந்தேகங்களை நிவிர்த்திசெய்வ தற்கு இந்தச் சிரேஷ்டதாயார் உள்ளபடி தனக்கு வலு வந்தம் செய்யவேண்டியே இருந்தது. சிஸ்ரர் வியாகுல மேரிக்குப் பெருமை உண்டாகும் என்று அஞ்சி, எவருட னும் இந்தச் சிரேஷ்டர் ஒருபோதுமே பத்திமாவைப்பற்றிப் பேசுவதில்லை. காலத்துக்குக்காலம் கடுகடுத்துக் கசப்பான விதம் லூசியாவுடன் பேசுவார். அதிகம் கஷ்டமான வேலை களையும், கரடுமுரடான அவமானத்துக்குரிய வேலைகளையும் லூசியா செய்யும்படி கட்டளையிடுவார். எப்போதும் மன மகிழ்வுடன் சிஸ்ரர் வியாகுலமேரி உருளைக்கிழங்குகளை உரிப் பாள். கண்ணாடிச் சட்டங்களைக் கழுவுவாள். கட்டிலையும் வேறு தளபாடங்களையும் மெழுகிட்டு மினுக்குவாள்.

ஒருநாள் இத்தாயார் வழமையிலும்பார்க்கக் கூடுதலான கடுமையைச் சிஸ்ரர் வியாகுலமேரிக்குக் காண்பிக்கலானார். பலவிதமான அசுத்தங்களும், அருவருப்புக்குரிய ஊத்தைப் பொருட்களும் நிறைந்த ஒரு குழியைச் சிஸ்ரர் வியாகுல மேரிக்குக் காண்பித்து அதை வடிவாகத் துப்பரவுசெய்யும் படி கேட்டார். சிஸ்ரர் வியாகுலமேரி மகா நிதார்த்தமாக அமைந்து தனது கடமையை மகாகவனத்துடன் செய்து முடித்தாள். இயல்பில் இந்தவேலை லூசியாவுக்கு ஒருசிறிது சுபாவத்துக்கு விரோதமாகலாம். ஆனாலும், அல்புஸ்திறேல்

பிரிவில் இவள் வசித்தபொழுது ஆட்டுக்கொட்டில்களைச் சுத்தமாக்கினவள்தானே. அதிலிருந்த அசுத்தங்கள் எல்லாவற்றையும் இவள் எவ்வித முறுமுறுப்புமில்லாது செய்து வந்தவள் அன்றோ.

தான்செய்த வேலையைப்பற்றித் தாயாருக்குக் கணக்கு ஒப்புவிக்கவந்தபொழுது இவள் ஏதோ மனக்கலக்கம் கொண்டவள்போலக் காணப்பட்டாள். முகஞ்சிவந்துபோயிருந்தது. ஆனால் நன்றியறிதலின் அடையாளங்கள் அம்முகத்திற் காணப்பட்டன. உனக்கென்ன? உனக்கு என்ன சம்பவித்தது என்று தாயார் கேட்டார். வியாகுலமேரி தன்னாற் கூடிய கீழ்க்குரலில், **தேவமாதா சற்றுமுன் எனக்குக் காட்சியருளினார்** என்றாள்.

இந்த மறுமொழி அந்தத்தாயாருக்குப் பெரும் விறுவிறுப்பை உண்டுபண்ணியது. ஆதலால்,

அந்தக் காட்சிகள் எல்லாவற்றையும் தன்பாட்டில் விடு. புத்தியோசனையுள்ள ஒரு கன்னியாஸ்திரியாக இரு. போய் வேலைசெய் என்றார். லூசியா அதைக்கேட்டதும் ஒன்றும் பேசாது சிறு புன்னகையுடன் வேலைசெய்யுமிடத்துக்கு ஓடிப்போய்விட்டாள். ஆனால் இப்படிக் கடும்மொழி சொல்லுவது அந்தத் தாயாருக்கு எவ்வளவு தாங்கமுடியாத மனவேதனை என்று லூசியா அறியாள். ஏனென்றால், தமது பிரமாணிக்கமுள்ள வியாகுலமேரியைத் தேவ தாயார் விசேஷ அன்புடன் பாதுகாத்து வழிநடத்திவருகின்றார் என்பதை இப்பொழுது அந்தத்தாயார் கண்டுபிடித்துவிட்டார்.

பலவருடங்களாகச் சிஸ்ரர் வியாகுலமேரியுடன் சீவித்த பிற்பாடு விலார்மடத்துச் சிரேஷ்ட தாயார் பின்வருமாறு இந்தக் கன்னியாஸ்திரியைப்பற்றித் தமக்குள்ள மனப்பதிவு என்ன என்பதைப் பெரும் மதியூகம்விளங்க வரைந்திருக்கிறார்.

"**வழக்கமான காரியங்களில் லூசியா வழக்கத்துக்கு மீஞ்சியவள்.** அதாவது, இவள் செய்தவைகள் எல்லாம் வழக்கமானவை. ஆனால், வழமைக்குமிஞ்சிய அமைச்சல்,

பிரமாணிக்கம், விசுவாசசிந்தையுடன் இவள் அவற்றைச்செய்வாள் என்பதுதான் சிரேஷ்ட தாயாரின் கருத்து. வெளித்தோற்றத்தில் லூசியா மற்றவர்களைப் போன்றவள்தான். ஆனால் வழமைக்குமேலான சுத்த கருத்துடனும் பயபத்தியுடனும் இவள் தனது கடமைகளை நிறைவேற்றிவருகிறாள். இவளுடைய உள்ளரங்கசீவியம் மகா ஆழமானது. பிறரால் அளந்தறிய முடியாதது."

டொறேத்தேய கன்னியாஸ்திரிமார் எல்லாரையும்போலவே காட்சிகண்ட வியாகுலமேரியும், தனது ஆத்துமத்தைப் பரிசுத்தப்படுத்துவதிலேயே, எப்போதும் கண்ணும் கருத்துமாயிருக்கிறாள். மடத்து விசாரணைக்குருவானவரின் நற்போதகங்கள், ஞான ஒடுக்கங்கள் போதிக்கவரும் குருமாரின் பிரசங்கங்கள், சிரேஷ்டரின் நற்புத்திமதிகள், பரிசுத்த சுவிசேஷவாசிப்பு, அத்துடன் கிறீஸ்துநாதர் அநுசாரம், அர்ச்சியசிஷ்டர்களின் சரித்திரம் ஆகிய இவைகள் எல்லாவற்றையும் சிஸ்ரர் வியாகுலமேரி தனது ஆன்ம இலாபத்துக்காக மகா கவலையுடன் உபயோகித்துக் கொண்டு வந்தாள்.

அர்ச். சின்னத் தெரேசம்மாளைப்போலவே சிஸ்ரர் வியாகுலமேரியும், அர்ச். பேர்க்மான்ஸ் அருளப்பரில் விசேஷித்த பத்தியுள்ளவள். ஏனென்றால், இந்த வாலிப அர்ச்சியசிஷ்டர் எடுபாடான நவீனமுறைகளை விட்டுவிட்டுச் சந்நியாச ஒழுங்குச் சட்டங்களைப் பிரமாணிக்கமாக அநுசரித்ததினாற்தான் தம்மை ஒரு அர்ச்சியசிஷ்டராக்கினார். இருபத்துநாலாம்வயசில் மரித்த இந்தப் பெல்ஜிய வாலிப யேசுசபைச் சந்நியாசியாரின் அர்ச்சியசிஷ்டதனம் வியாகுலமேரிக்கு எவ்வித சிக்கலற்றதும், எடுபாடில்லாததும், கண்டுபாவித்தற்கு இலகுவானதுமெனக் காணப்பட்டது. அர்ச். பேர்க்மான்ஸ் அருளப்பர் எப்போதும் மனமகிழ்வுடன்கூடிய புண்ணியங்களையே அதிகமாக விரும்பியவர். **மனமகிழ்ச்சியில்லாது துக்கமாயிருப்பது எட்டாம் தலையானபாவம்** என்று இந்த அர்ச்சியசிஷ்டர் கேலியாகச் சொல்லும் வழக்கமுடையவர்.

ஞாசியாவுக்கு எங்கள் ஆண்டவருடன், ஐக்கியப்பட்டுச் சீவித்தகாலமெல்லாம் மகா ஆனந்த காலமே. உலகத்தவருடைய துக்கம் எல்லாம் அவர்களுடைய துஷ்டத்தனத்தினாலும், தாறுமாறுகளினாலும் வருவது ஆகும்.

“உமது பரிசுத்ததனத்தின் பாதையெல்லாம், ஆனந்தம் ஆகிய புஷ்பங்களால் நிறைந்துபோயிருப்பதாக” என்று யாரோ ஒருவர் சிஸ். வியாகுலமேரிக்குச் சோபனம் சொன்னார். அவர் அதைத் தொடர்ந்து, அதுமாத்திரமல்ல ஆண்டவருடைய சித்தப்படி பாடுகள் துன்பதுரிதங்களினாலும் நிறைந்திருப்பதாக. நான் எனது ஒழுங்குச்சட்டங்களை அனுசரிப்பதினால் மாத்திரம் பரிசுத்தமாகவேண்டுமென ஆண்டவர் சித்தமானால் அது எனக்கு மகா சந்தோஷம். ஆனாற் துன்பதுரிதங்கள் கஷ்டங்கள் கவலைகள் முதலியவற்றை நான் அனுபவிக்கவேண்டுமென அவர்சித்தமாயிருப்பின் அவர் திருச்சித்தத்தை நிறைவேற்ற நான் தயாராக இருக்கிறேன். பாடுபடுவதில் நான் அவருடைய திருச்சாயலை என்னில் அதிகமாகப் பதியச் செய்யவேண்டும் என்பது அவர் திருச்சித்தமானால் அவருக்கு நன்றிகூறுவேன்.

நல்ல புத்தகங்கள் உமக்கு எவ்வளவு சிறந்த போதகங்களைப் படிப்பித்து விட்டிருக்கின்றன?

புத்தகங்களா? நானாகவே இவ்விஷயங்களை இவ்விதம் சிந்தித்திருக்கிறேன்.

தங்கள் வீட்டுக் கிணற்றுக்குப் பிறகாலே இருந்து தனது சிநேகிதருடன் யேசுநாதருடைய பாடுகளை, ஞாசியா தியானித்த நாட்கள் தொடக்கம் மேலே கூறப்பட்ட எண்ணங்கள்தான் இவள் மனசில் குடிகொண்டிருந்தன.

பாவிகள் மனந்திரும்பும்படியாகப் பாடுபடும்படி சருவேசுரன் எவ்வித் துன்பதுரிதங்களை அனுப்பச் சித்தமாகிறாரோ

அவற்றை எல்லாம் ஏற்றுக்கொள்வதாகக் கோவாடி இறியாவில் காட்சிகொடுத்த பரமநாயகிக்கு, ஞாசியா வாக்களித்தாள் அல்லவா? அந்தநாட் துவக்கம் மேற்போந்த எண்ணங்களே இந்தப் புண்ணியசீலியின் மனசை நிரப்பிக்கொண்டிருந்தன. அந்தநாட்தொடக்கம் பரலோக இராக்கினி தானே சிஸ்ரர் வியாகுலமேரிக்கு ஞானச்சீவியத்துக்கு வழிகாட்டியாக இருந்துவந்தார்.

கோவிலும் சந்நியாசக் குச்சறையும்

சிஸ்ரர் வியாகுலமேரியைச் சூழ இருப்பவர்களுக்கு, இப்போது இவர் ஆரென்பது நன்குவிளங்கும். ஆனால் மடத்துச் சிரேஷ்டரின் விருப்பத்துக்கு மரியாதை காண்பிக்கும்படியாகவும், விசேஷமாகக் காட்சிபெற்றவரின்மட்டில் புனிதமாகப் புழங்கவேண்டும் என்ற நோக்கத்துடனும், பத்திமா விஷயங்களைப்பற்றிச் சகலரும் சிஸ்ரர் வியாகுலமேரி முன் பெரிதும் விவேகத்துடன்தான் நடந்துகொள்ளுகிறார்கள். அருமையில் அருமையாகத் திருச்சபை அதிகாரிகளுடைய உத்தரவுடன் சிஸ்ரர் வியாகுலமேரியைக்கண்டு பழைய சம்பவங்களைப்பற்றி இவளுடன் சிலர் கலந்து பேசிக்கொள்வார்கள். அத்துடன் பத்திமாபதியிற் தேவதாயாருக்குத் தோத்திரமாகச் செய்யப்படுபவைகளைப்பற்றியும், அவளுக்கு அறிவிப்பார்கள. ஆனால் அவர்கள் சொல்பவைகள் எல்லாவற்றையும், சருவேசுரன் இந்தக் கன்னியாஸ்திரிக்கு அருளிய தூர திருஷ்டியினால் ஏலவே அறிந்திருந்தாள்.

உமக்கு இவைகள் எப்படித் தெரியுமென்று ஒருநாட் சிலர் அவளைக் கேட்டதற்கு:

“அப்படித்தான் அனுமானிக்கிறேன்” என்று வியாகுலமேரி கூச்சத்தினால் முகம் சிவந்து விடையளித்தாள். இந்த அனுமானிப்புகள் எல்லாம் பரலோகத்திலிருக்கும் இயசிந்தா பிரான்சிஸ் என்பவர்கள் மூலமாக இவள் அறிந்துகொண்டார் என்றாற் தவறாகுமா? அல்லது நேரே தூரதிருஷ்டிவரத்தால், இவள் காட்சி பெற்றிருந்தார் என்று சொல்லுதல் பொருந்தாதா?

எப்படியிருப்பினும் நாம் முற்குறித்த தரிசகருக்கு அதாவது உமக்கு இவையெல்லாம் எப்படித் தெரியுமென்று கேட்டவருக்கு அவள் பின்வருமாறு அறிக்கையிட்டிருக்கிறாள் :

“காட்சி அளிக்கப்பட்ட பதின்மூன்றாந் திகதிகள் ஒவ்வொன்றையும் நான் பத்திமாவிற் கழிக்கிறேன்.” பதின்மூன்றாந் திகதிக்கு முந்தின நாட் பின்னேரம் **இரா ஆராதனை** பத்திமாவில் நடைபெறுகிறது. இங்கு மடத்தில் நான் அந்த இரவை எங்கள் கோவிலிற் செலவிட எனக்கு உத்தரவில்லை. எனது ஆத்துமம் பத்திமாவுக்குப் பறந்து போகின்றது. அங்கு தேவநற்கருணைமுன் முழந்தாளிட்டு ஆராதனை செய்துகொண்டிருக்கும், ஆயிரக்கணக்கான கிறீஸ்தவர்கள் மத்தியில் நானும் தெண்டனிட்டு எழுந்தேற்றம்பண்ணிவைத்திருக்கும் சற்பிரசாத நாதரை ஆராதிக்கிறேன். அங்கு நான் சகலருக்காகவும், எனக்காகவும் மன்றாடுகிறேன். நித்திரை என்னை மேற்கொள்ளும்பொழுதுமாத்திரம் நான் செபத்தை நிறுத்துகிறேன். சரீரத்துக்குவேண்டிய இளைப்பாற்றியைக் கொடுக்கவேண்டும் என்பது எங்கள் ஒழுங்குச் சட்டம்.

விடியற்காலமே கண்களை மூடியபடி பத்திமாவிற்தான் வெளியிற் சொல்லப்படும் திவ்விய பூசை காண்கிறேன். பத்திமாவிற்தான் தேவநற்கருணை உட்கொள்ளுகிறேன். இங்கு நான் மடத்தாருடன் செபமாலை சொல்லவேண்டிய நேரத்தில் கோவாடி இறியாவில் வந்துகூடியிருக்கும், இன்னொரு கூட்டத்தாருடன்தான் செபமாலை சொல்லுகிறேன். அதன் பின்பு, நான் யாத்திரிகளின் மத்தியிலே எனது முதலாம் காட்சியை நினைவுகூருகின்றேன். நான் மீண்டும் ஒரு பாலகியைப்போல, இயாசிந்தாவுடனும் பிரான்சீசுடனும் அவ்விடத்தில் நடமாடுகிறேன். பழையபடி எனது மலைநாட்டின் பூமியில் கால்மிதித்து நடக்கிறேன். நான் பிறதேசம் போனநாட் தொடக்கம் இன்னும் வளராது இளங்கன்றுகளாக இருக்கும் பசும் “ஷேன்” மரங்களையும் காணுகிறேன். **இதோ ஒரு மின்னல், என்ன பிரகாசம், என்ன மதுரித ஓசை.**

இவை எல்லாம் நொடிப்பொழுதுக்கு மாத்திரம் நிலைத்தன. சடுதியில் மறைந்துவிட்டன.



சனக்குழாத்தின் சங்கீதங்களைக் கேட்கிறேன். சுற்றுப்பிரகாரத்திற் பங்குபற்றுகிறேன்.

சனக்குழாம் பாடும் கீர்த்தனையைக் கேட்கிறேன். சகலரும் வெள்ளைக் கைலேஞ்சிகள் ஏந்தி அஞ்சலி செய்துகொண்டு செல்லும் சுற்றுப்பிரகாரத்திலும நான் சேர்ந்துகொள்ளுகிறேன். அதன்பின்பு நோயாளருக்காகச் சொல்லப்படும் பூசையைக் காண்கிறேன். நோயாளிகளில் ஆண்டவர் இரங்கும்படியாக அவரை மன்றாடினேன். சரீரநோய் உள்ளவர்கள் மாத்திரமல்ல, ஆன்மநோய் பிடித்தவர்களிலும் சகலவித நோயாளர்களிலும் இரங்கும்படியாக ஆண்டவரை வேண்டிக்கொள்ளுகிறேன்.

நோயாளர் பக்கமாகச் சற்பிரசாதநாதரைக் கொண்டு செல்லுகிறார்கள். நானும் அந்த நோயாளர் மத்தியிலிருந்துகொண்டு ஆண்டவருடைய இரக்கத்தை இரந்து மன்றாடுகிறேன். எல்லாம் முடிவாகிறது. இராவாகுமுன் நான் மடத்துக்கு வந்துவிடுகிறேன்.

ஆகவே, கோவாடி இறியாவிலே திருச்சபைப் பிரமாணங்களின்படி திருயாத்திரை நடைபெறுகிறதென்று சொல்லக்கூடியநாட் தொடக்கம் அவ்விடத்தில் ஒருவரும ஒருபோதும் காணாத ஒரு கன்னியாஸ்திரி, யாத்திரிகளுள் மகா வேகமான பத்தியுள்ள யாத்திரியாகப் பத்திமாவில் விளங்கலாயினர்.

கத்தோலிக்க உலகில் இப்போது நடக்கும் யாத்திரைகள் எல்லாவற்றிலும்பார்க்க எவ்வளவோ கூடுதலான கிறீஸ்

தவர்கள் பங்குபற்றிவரும் யாத்திரை கோவாடி இறியாவில் நடக்கும் திருயாத்திரையாகும். இதிற் சிஸ்ரர் வியாகுலமேரியும் அற்புதமான யாத்திரியாக விளங்கியிருக்கிறார்.

கோவாடி இறியாவின் திருக்ஷேத்திரத்துக்குச் செல்லும் பாதையில் எட்டு நாழி தூர நிலத்துக்கு, அயற்பங்கு விசாரணைக் கிறீஸ்தவர்களால் அலங்காரமான சிலுவைப் பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. இது ஆரம்பமான திருநாளன்று, இலேயிரா மேற்றிராணி ஆண்டவர் அவர்கள் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுத்தார். அச்சமயம் சிஸ்ரர் வியாகுலமேரி அங்கு நடந்தவைகளைக் காட்சியிற் கண்டாள் என்று சொல்லுதல் தவறாகுமா ?

இவைகள் சம்பவித்து இரண்டு வருடங்களின் பின்பு, அதாவது 1939-ம் வருஷம் வைகாசி மாசம் 12-ந் திகதி போர்த்துக்கால் தேசத்துப் பிரசாதிபதியாகிய கார்மோனா சேனாபதியும், அரசாங்க சங்கத் தலைவரான ஒலிவேயிரா சலாசார் என்பவரும் இன்னும் பெருந்தொகையான அரசாங்க உத்தியோகஸ்தர்களும் பத்திமாவுக்குத் திருயாத்திரையாகவந்து, போர்த்துக்கேய சாதிமுழுவதையும் செபமாலை நாயகிக்குப் பாதகாணிக்கையாக்கினது சிஸ்ரர் வியாகுலமேரிக்கு எத்துணை ஆனந்தம் விளைத்திருக்கும்.

1930-ம் வருஷம் வைகாசி மாசம் 13-ந் திகதி முதலாம் காட்சியின் பதின்மூன்றாம் வருஷத் தினத்தில் மூன்று இலட்சம் யாத்திரிகள் பத்திமாவில் வந்துகூடிய காட்சியினால் எங்கள் வியாகுலமேரி எவ்வளவு அகமகிழ்ச்சி அடைந்திருப்பாள்.

அடுத்த ஐப்பசி மாசம் 13-ந் திகதி கடைசிக் காட்சியின் பதின்மூன்றாம் வருஷத்தினத்தில் அதாவது வானத்திற் **தேவனின் அடையாளம்** தோற்றிய பதின்மூன்றாம் வருஷத் தினத்தில் இலட்சக்கணக்கான யாத்திரிகள்முன் பத்திமாவில் மூன்று இடையப்பிள்ளைகளுக்குத் தேவதாயார் காட்சி கொடுத்தது உண்மைச் சம்பவம்என்று வற்புறுத்திய மேற்றிராணி ஆண்டவர் அவர்களுடைய ஆயர் நிருபம் பிரசித்தமாக வாசிக்கப்படலாயிற்று.

அடுத்த வருஷம் வைகாசி மாசம் 13-ந் திகதி தேவனுக்கும் தேவதாயாருக்கும் நன்றியறிந்த தோத்திரம் செலுத்தும்படியாகப் போர்த்துக்கால் தேசம் முழுவதிலுமிருந்து பெருந்திரளான சனங்கள் யாத்திரிகளாக வந்து கூடினார்கள். அத்தருணத்தில் லிஸ்போன் நகரத்துப் பத்திறியாக்குவான கருதினால் செறெஜெயிரா ஆண்டவர் அவர்களும் போர்த்துக்கால் இராச்சியத்துச் சகல மேற்றிராணிமாரும் வந்து கூடியிருந்தார்கள்.

ஒவ்வொருநாளும் கோவாடி இறியாவிலிருந்து தேவாசீர்வாத பிரபைக் கதிர்கள் போர்த்துக்கால் தேசம் முழுவதும் பரந்து செறிந்துகொண்டிருந்தன. பத்திமாவிற் பொழிந்தருளப்பட்ட வரப்பிரசாதங்களினால் போர்த்துக்கேயர் தங்கள் பண்டைக்கால விசுவாசத்தை, ஒரு வகையில் அழிந்துபோயிருந்த விசுவாசத்தை மீண்டும் அடையலாயினர். அவர்களுடைய சீவிய நடபடிகள் எல்லாம் சன்மார்க்க விஷயமாய், மகா நன்மையும் விருத்தியும் பெறலாயின. சாகிய சம்பந்தமாயும் பூரணசமாதானம் நிலவுவதாயிற்று.

ஒரு சில வருஷங்களுக்கிடையிலே பரிசுத்த தேவதாயே! உமது இரக்கப் பெருக்கத்தால் போர்த்துக்காலில் எவ்வளவு நல்லமாற்றங்கள். மூன்று சிறுவர்கள் தங்கள் செபங்களினாலும் பரித்தியாகங்களினாலும் பாவிகளை மனந்திருப்பும்படியாகத் தங்களைப் பலியாக்கினபடியாற்றான் திருத்தாயார் மூலமாகச் சருவேசுரன் இவ்வரப்பிரசாதங்களைப் பொழிந்தருளினார்.

1917-ம் வருஷத்துக்கு முந்திய போர்த்துக்கால் தேசத்தில் விசுவாசம் அழிந்தொழிந்துபோகும் பக்குவத்தில் இருந்தது. சன்மார்க்க நெறிமுறைகள் எல்லாம் பாழான நிலையிலிருந்தன. தேசத்துப் பணநிலையும் மகா கேவலமாயிருந்தது. பஞ்சம் தாங்கமுடியாது எத்தனையோ போர்த்துக்கேயர் வரவரக்கூடுதலான தொகையாகப் பிறதேசம் சென்றனர். உள்ளபடி போர்த்துக்கால் தேசத்தின் நிலைமை மகா பிரலாபத்துக்கு உரியதாயிற்று. அப்போது லூசியாவுக்குப் பத்து வயசு. இந்தப் புத்தகம் எழுதும் இப்போது இவளுக்கு ஆண்டவருடைய வயசு (1940) போர்த்துக்காலில் வேதகலா

பனை நீங்கிவிட்டது என்பதை இப்போது அறிவாள். தன் சுயதேசத்தினரின் விசுவாசம் வலிமை பெற்றுவிட்டதையும் போர்த்துக்காலின் பல பாகங்களிலுமிருந்து திருயாத்திரிகள் கொடிவிட்டபான்மையாகப் பத்திமாவுக்குப் போய்க்கொண்டிருப்பதையும் எவ்வித முகத்தாட்சணியமும் இல்லாது சகலரும் செபமாலை ஓதி, பத்திக்குரிய கீர்த்தனைகள் பாடிக்கொண்டுபோவதையும் லூசியா இப்போது அறிவாள். வேத விஷயமாய் முகத்தாட்சணியம் எல்லாரிடத்தும் அற்றழிந்துபோனதும் இவளுக்கு இப்போது நன்கு விளங்கும். ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒன்றுசேர்ந்து ஒவ்வொரு நாளும் செபமாலை சொல்லும் பழைய வழக்கம் இப்போது அநேக குடும்பங்களில் மீண்டும் அனுசரிக்கப்பட்டுவருகின்றது. ஒரு சின்னஞ் சிறிய தொகையினர் மாத்திரம் இந்த நல்ல பத்தி முயற்சியை இன்னும் கைக்கொள்ளவில்லை. பத்திமா நாயகியின் திருச் சுரூபம் அல்லது படம் எங்கும் வந்தித்து வணங்கப்பட்டு வருகின்றது. கத்தோலிக்கப் பிரசுரங்கள் வரவர விருத்தி பெற்றுவருகின்றன. குருத்துவப் பதவிக்கும் சந்நியாசப் பதவிக்கும் அழைத்தல்கள் பெருகிக்கொண்டு வருகின்றன சந்நியாச சபைகளும் கத்தோலிக்க சேவா சங்கங்களின் இயக்கங்களும் மகா சித்திகரமான அப்போஸ்தொலிக்கத் தொண்டு ஆற்றுகின்றன. பிரான்சீஸ் இயாசிந்தா என்னும் இருவரையும் கண்டுபாவிக்க விரும்பிச் சிறுவர் சிறுமிகள் நற்கருணைச் சிலுவைப்படையில் பெரும் தொகையாகச் சேருகின்றார்கள்.

போர்த்துக்கேய சாதியினரின் பூரணசுயாதீனச் சம்மதத்துடன் செபமாலைநாயகி போர்த்துக்கால் தேசம் முழுவதுக்கும் இராக்கினியாக மெய்யாகவே அரசு செலுத்தி வருகிறார். அந்தப் பரலோக இராக்கினியின் அனுக்கிரகத்தினால், அத்தேசம் முழுவதும் ஓரந்தம்முதல் மற்றந்தம் வரைக்கும் புத்துயிர்போன்று, புதுச் சீவியம் நடாத்துகின்றது.

ஸ்பானியாவில் 1936 க்கும் 1938 க்கு மிடையில் மகா தேசப்புரட்டற் கலகம் நடந்தபொழுது, போர்த்துக்கால் அயல்நாடாக இருந்தபோதும் அங்கு ஒருநாட்தானும் உள்நாட்டுச் சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படவில்லை. இந்

த் தேவகடாட்சத்துக்கு நன்றியறிதலாகப் போர்த்துக்கால் தேசத்தின் மேற்றிராணிமார் எல்லாரும் ஒருங்கு சேர்ந்து ஒரு பொது நிருபம் விடுத்துச் சாதீய திருயாத்திரையொன்று பத்திமாவுக்குச் செல்லவேண்டுமெனத் தீர்மானித்தார்கள். தங்கள் பொது நிருபத்தில் மேற்றிராணிமார் குறிப்பிட்டிருக்கும், பின்வரும் வாக்கியங்கள் நன்கு அவதானிக்கப்படவேண்டியவை: “பத்திமாநாயகி பத்திமாவின் வானத்திலே தோன்றிய நாட்தொட்டு, விசேஷ தேவாசீர்வாதம் போர்த்துக்கால் தேசத்தின்மீது இறங்கியிருக்கின்றது. வலோற்காரத்துடன்கூடிய வேதகலாபனை செய்தகாலம் கழிந்துவிட்டது. மனச்சாட்சிகளுக்கு மீண்டும் சமாதானம் உண்டாகிவிட்டது. சகலமும் சத்தியவேதப் பிரமாணங்களுக்கிசையத் திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன.” மேற்றிராணிமாருடைய வேண்டுகோளுக்கிணங்கின ஐந்து இலட்சம் பேர் யாத்திரையிற் பங்குபற்றினார்கள்.

உள்நாட்டில் நிலவிய பூரண கிறீஸ்தவ சமாதானத்தின் நிமித்தம் 1940-ல் வத்திக்கானுக்கும் போர்த்துக்கால் அரசினருக்குமிடையில் ஒரு சிறந்த பொருத்தனையும் ஏற்பட்டது. இந்தப் பொருத்தனைபோன்ற பூரண நீதி விளங்கும் பொருத்தனையை ரோமாபுரி முன்னொருபோதும் வேறு எந்த அரசினரிடமிருந்தாவது பெற்றுக்கொள்ளவில்லை எனச் சொல்லப்படுகின்றது. நெடுங்காலமாகச் சமய சம்பந்தமாய், சாகிய சம்பந்தமாய், அரசியல் சம்பந்தமாய்ப் போர்த்துக்கால் தேசத்தில் சமாதானம் நிலவும் என்பதற்கு இவைகள் எல்லாம் முற்குறிகள் அன்றோ!

1942-ம் வருஷத்தில், அதாவது பத்திமாநாயகி காட்சி கொடுத்த இருபத்தைந்தாம் வருடத்தில் போர்த்துக்கால் தேசம் முழுவதும் அதாவது மேற்றிராணிமார், குருமார், அரசினர், கிறீஸ்தவர்கள் ஆகிய சகலரும் முன்னொருபோதுமில்லாத ஆடம்பர வைபவங்களுடனும், வேகரமான பத்தியருட்சியுடனும் பத்திமாபதியின் வெள்ளி யூபிலி கொண்டாடினார்கள்.

சிஸ்ரர் வியாகுலமேரி ஒரு டொரோத்தேய கன்னியாஸ்திரியின் எளிய குச்சறையிலிருந்துகொண்டு, தனது செபங்

களினாலும், பரித்தியாகங்களினாலும், தனது கவலையையுங் கரிசனையையுங் காண்பித்து வர்தாள். இவள் அதற்காகவே சீவித்து வருகிறாள். இவளைச் சூழவிருக்கிற அநேகம் பேருக்கு அது விளங்குவதில்லை. வெளித்தோற்றத்தளவிலும், உண்மையின்படியும் இவள் தனக்குப் பணிக்கப்பட்ட கடமைகளைப் பெரிதும் பற்றுதலுடன் நிறைவேற்றி வருகிறாள். இவளுடைய கடமைகளை நிறைவேற்றுவதினால் இவளுடைய சீவியநாட்கள், தொண்டுகள் நிரம்பிய நாட்களே ஆயின. ஆயினும் தேவமாதா தன்னை நம்பி ஒப்படைத்த விஷயங்களை இவள் நொடிப்பொழுதாயினும் மறப்பதேயில்லை. பாவிகளுக்காகப் பரித்தியாகக் கிரிகைகள் புரிந்து, அவர்களுக்காக மன்றாடுவதாகத் தான் தேவமாதாவுக்குக் கொடுத்த வாக்கையாவது, தனக்கு ஒப்படைக்கப்பட்ட இரகசியத்தை மனுஷருக்கு வெளிவிடாது முத்திரையிட்டபான்மையாகப் பாதுகாக்கவேண்டிய கடமையையாவது இவள் மறக்கவில்லை. பிரான்சிஸ் இயாசிந்தா ஆகியவர்கள் அந்த இரகசியத்தைப் பரலோகத்திலிருக்கும் மற்ற அர்ச்சிய சிஷ்டர்களுக்கு வெளியிடக்கூடியவர்கள் ஆதலால் எவ்வளவு பாக்கியசாலிகள்.

ஆ! தமது இரண்டு பரலோக நண்பர்களைப்பற்றியும் சிஸ்ரர் வியாகுலமேரி எவ்வளவு மனஉருக்கத்துடன் அடிக்கடி சிந்தித்துவருவாள்.

காட்சிகண்ட மூவருடையவும் பாலியப்பருவத்து ஞாபகங்கள் எல்லாவற்றையும் வரைந்து கொடுக்கும்படி சிஸ்ரர் வியாகுலமேரியை இலேயிரா மேற்றிராணியாரான மகாவந்தனைக்குரிய யோசே கொறெயா டா சில்வா ஆண்டவர் அவர்கள் கேட்டிருந்தார்கள். அந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றையும் மீண்டும் நினைவுகூர்ந்து அவைகளை எழுதுவதில் நெடுநேரம் செலவிடல் வியாகுலமேரிக்கு எவ்வளவோ சொல்லரிய ஆனந்தமாயிற்று. வில்லா நோவாடி ஊறெம் சவக்காலையிலிருந்து பத்திமா சவக்காலைக்கு 1935-ம் வருஷம் இயாசிந்தாவின் பிரேதம் மாற்றப்பட்டது. அத்தருணம் பிரேதப்பெட்டி திறக்கப்பட்டபொழுது இயாசிந்தாவின் முகம் எவ்வித மாற்றமும் இல்லாது உயிர் உள்ளவர்களுடைய

முகம்போலவேயிருந்தது. யோசே டா சில்வா ஆண்டவர் அவர்கள் இயாசிந்தாவின் பிரதிமைப்படம் எடுப்பித்து அதில் ஒரு பிரதியை சிஸ்ரர் வியாகுலமேரிக்கும் அனுப்பியிருந்தார். வியாகுலமேரி மேற்றிராணி ஆண்டவர் அவர்களுக்கு நீண்ட ஒரு கடிதம் எழுதி நன்றித்துதி கூறினாள். அக்கடிதத்தில் மேற்றிராணி ஆண்டவர் அவர்கள் முற்றாகவே அறியாத, அந்தப் பரிசுத்தமான பிரான்சீஸ் பிள்ளையானது, புண்ணிய அனுசாரத்திலும், யேசுநாதசுவாமியை நேசிப்பதிலும், பரித்தியாகக் கிரிகைகள் புரிவதிலும் மிகவும் அபூர்வமான தன்மையாக விசேஷித்து விளங்கினான் என்று சிஸ்ரர் வியாகுலமேரி எழுதியிருக்கிறாள். இக்கடிதத்தை வாசித்த பிற்பாடு வியாகுலமேரி தனது மைத்துனி இயாசிந்தாவைப் பற்றிய ஞாபகங்களையும் எழுத்தில் தமக்குக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார் மேற்றிராணி ஆண்டவர்.

சிஸ்ரர் வியாகுலமேரி எழுதிக்கொடுத்த குறிப்புக்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு இலேயிரா மேற்றிராசனக் குருமடத்தில் ஆசிரிய தொண்டு ஆற்றிவரும் ஒரு குருவானவர் "**இயாசிந்தா**" என்ற நாமத்துடன் சிறந்த ஒரு நூல் எழுதியிருக்கிறார். எமது இந்த நூலில் நாம் சொல்லியிருக்கும் அநேக சம்பவங்களை இந்த "இயாசிந்தா" என்ற நூலிலிருந்துதானே நாமும் பெயர்த்து எழுதியிருக்கிறோம்.

பத்திமாவிற் காட்சிகண்ட லூசியா ஒரு மதியீனி அல்ல என்றும், இவளுடைய **ஞாபகம்** மகா ஆச்சரியமானதென்றும் இவளுடைய புத்தி மகா தெளிவும், விஷயங்களை அடித்தளமட்டாய் ஊடறுத்துச் செல்லும் வலிமைவாய்ந்ததென்றும் சிஸ்ரர் வியாகுலமேரி வரைந்த குறிப்புக்களே ஐயந்திரிபில்லாது நிரூபிக்கின்றன.

சிஸ்ரர் வியாகுலமேரியுடன் சம்பாஷிப்பவர்கள் இவள் வேதசாஸ்திர சம்பந்தமாயும், சாங்கோபாங்க சாஸ்திர சம்பந்தமாயும் மிகவும் விசாலித்த மிகவும் ஆழமுடைத்தான அறிவுள்ளவள் என்பதை இப்போது நன்றாக அறிவார்கள். இவ்வித அறிவை இவள் தனது வாசினைகளினாலும் சம்பாதித்துக்கொண்டாள் என்பது மெய். ஆனால் யேசுநாதருடனும் தனக்குக் காட்சி கொடுத்துக் கல்வி கற்கும்படி தூண்டி

விட்ட பரலோகநாயகியுடனும் இந்தக் கன்னியாஸ்திரி பூண்டிருந்த நெருங்கிய ஐக்கியத்தினாலும், இவ்வித அபூர்வமான அறிவைச் சம்பாதித்தாள் என்பதற்கு ஐயமில்லை.

உலகத்துடன் தொடர்பில்லாது நான் சீவித்துவரும் நிறைவான தனிமையே எனக்கு ஆகக் குறைவான தனிமையாகும்.

இத்தனிமை எனக்கு முன் ஒருபோதுங் கிட்டாத பெரிய கூட்டாளி. மௌனமாயிருப்பதுதான் சுபாவத்துக்கு மேலான ஞான வெளிச்சத்தை நான் அடைவதற்கு ஊற்றாயிருக்கிறது.

நான் சிருஷ்டிகளுடன் எவ்வளவு அதிகமாக மௌனசாதனை அனுசரிக்கிறேனோ அவ்வளவு அதிகமாக நான் விசுவாச சத்தியங்களின் பரம இரகசியங்களை விளங்கிக் கொள்ளுகிறேன்" என்று சிஸ்டர் வியாகுலமேரி தானே சொல்லியிருக்கிறாள்.

தேவமாதா வந்து மோட்சத்துக்கு அழைத்துச் சென்ற தனது இரு சிநேகிதர்கள் மோட்சபாக்கியத்துக்குத் தங்களைப் பாத்திரவாளிகள் ஆக்கினதுபோலவே தானும் தன்னைப் பாத்திரவாளி ஆக்கிப்போடவேண்டும் என்பதே சிஸ்டர் வியாகுலமேரியின் பேராசையாகும்.

இனிமேல் ஒன்றுக்கும் உதவாது என்ற ஒரு கருவியை ஒரு மூலையில் ஒதுக்கிவைப்பதுபோல தானும் எவராலும்

அறியப்படாமல் முற்றும் மறைந்தவளாய்ச் சீவிக்கவேண்டும் என்பதே சிஸ்டர் வியாகுலமேரியின் ஏக விருப்பம்.

மானிடரைத் தேவதாயார்பக்கம் திருப்பிவிடவேண்டும் என்பதே இவளுக்குப் பரலோகத்தினால் பணிக்கப்பட்ட கடமை. இந்தக்கடமையை இவள் நிறைவேற்றியிருக்கிறாள்.

இனித் தனக்கு மீதியாக இருப்பது, தேவசித்தம் தன் மட்டில் நிறைவேறும்மட்டும் மனுஷருடைய பார்வைக்குத் தப்பிக்கொள்வதேயாகும்.

கோவாடி இறியா, தேவநேசத்தையும் கன்னிமரியாயின் மகிமையையும் உலகத்தின் எட்டுத்திசையிலும் பதினாறு கோணத்திலும் ஒரு பிரமாண்டமான சூளை போன்ற தனது பிரபைக் கதிர்களின் மூலம் பரப்புவதாக. சின்ன ஆசியா கன்னியர் மடத்துச் சபை ஒன்றிலே மவுனத்தின் மத்தியிலே முற்றும் மறைந்தவளாய்ப் பூமதானம் செய்யப்பட்ட ஒருவருக்கு ஒப்பானவளாய் இருப்பாளாக. இவைகளே சிஸ்டர் வியாகுலமேரியின் இடையறாச் சிந்தனை.

"பத்திமா எவ்வளவு அதிகமதிகமாக அறியப்படுகிறதோ அவ்வளவாக நானும் அறியப்படாதவளாய் இருப்பதே எனது பேராசை" என்று சிஸ்டர் வியாகுலமேரி சொல்லிவருவாள். இந்த வாக்கியம் சிஸ்டர் வியாகுலமேரி தானே மகா அன்புடன் நேசிக்கும் பாலகயேசுவின் தெரேசம்மாளின் பின்வரும் வாக்கியத்துக்கு இணையானதன்றோ! **நான் ஒன்றுமற்றவளாக இருக்கிறேன், ஒன்றும் செய்யாதவள், நான் நேசிக்கிறேன், நேசத்தின் சம்பாவனையை எதிர்பார்த்திருக்கிறேன்"** என்பதுவே சின்னத்தெரேசம்மாளின் பொன்மொழிகளாகும்.

சரித்திரபாகம் முற்றிற்று.

அனுபந்தம் I.

பத்திமாவின் காட்சிபெற்றவர்கள் சொல்லிவந்த செபங்கள்

I

செபமாலையின் ஒவ்வொரு தசபாக முடிவிலும், திரித்துவத்தின் பின்னும் சொல்லுவது.

யேசுவே! என் பாவங்களைப் பொறுத்தருளும், நரக நெருப்பில் நின்று எங்களை இரட்சித்தருளும். சகல ஆத்துமாக்களையும் விசேஷமாய் உமது இரக்கம் அதிகம் அவசியமான ஆத்துமாக்களையும் மோட்சத்துக்கு வழிநடத்தியருளும்.

II

மனவல்லயச் செபங்கள்

(1) "என் தேவனே, நீர் எனக்குக் கொடுத்த வரப்பிரசாதங்களுக்கு நன்றியறிதலாக நான் உம்மை நேசிக்கிறேன்."

(2) யேசுவே, நான் உம்மை நேசிக்கிறேன். மரியாயின் மதுரமான இருதயமே என் இரட்சணியமாயிரும்.

III

காணிக்கைச் செபம்

(ஒவ்வொருநாளும் விசேஷமாகக் காலமே நித்திரையால் எழுந்தவுடன் இதைச் சொல்லலாம்.)

யேசுவே! உமது நேசத்துக்காகவும் பாவிகள் மனந்திரும்பும்படியாகவும் பாப்பாண்டவருக்காகவும் மரியாயின் மாசற்ற இருதயத்துக்குத் துரோகமான பாவங்களுக்குப் பரிகாரமாகவும் எனது பரித்தியாகங்களை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

சம்மனசுகள் படிப்பித்த செபம்

என் தேவனே! நான் உம்மை விசுவசிக்கிறேன். உம்மை ஆராதிக்கிறேன். உம்மிலே என் நம்பிக்கை வைக்கிறேன். உம்மை நேசிக்கிறேன். உம்மை விசுவசியாமலும் உம்மை ஆராதியாமலும், உம்மில் நம்பிக்கைவையாமலும், உம்மை நேசியாமலும் இருக்கிறவர்களுக்காகவும் நான் உம்மிடம் மன்னிப்பை இரந்து கேட்கிறேன். (3 முறை)

பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்துவாகிய பரிசுத்த திரித்துவமே, நான் உம்மை அத்தியந்த தாழ்ச்சியுடன் ஆராதிக்கிறேன். உலகத்திலுள்ள சகல நற்கருணைப் பேழைகளிலும் எழுந்தருளியிருக்கிற எங்கள் ஆண்டவரின் திரு இரத்தத்தையும் ஆத்துமத்தையும் தேவசுபாவத்தையும், அவருக்குத்தானே செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாகத் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். ஆண்டவருடைய திரு இருதயத்தின் அளவில்லாத பெறுபேறுகளை முன்னிட்டும், மரியாயின் மாசற்ற இருதயத்தின் மன்றாட்டத்தின் மூலமாகவும் ஏழைப் பாவிகள் மனந்திரும்பும்படியாகவும் என் தேவனே, தேவரீரை இரந்துமன்றாடுகிறேன்.

கவனிப்பு :—பிள்ளைகள் மூவரும் மேற்கூறிய செபத்தைச் சம்மனசின் ஏவுதற்படி முழந்தாள் மடித்து, நெற்றி நிலத்திற்படத் தெண்டனிட்டுக்கொண்டுதான் சொல்லி வந்தார்கள்.

அனுபந்தம் II.

இயாசிந்தா மரிக்கச் சில நாட்களின் முன் கூறியவைகள்

(இவைகளை இயாசிந்தாவைப் பராமரித்த சிஸ்ரர் மேரி பியூறிவிக்கேஷன் என்பவர் எழுதிவைத்திருக்கிறர்.)

பாவத்தைப்பற்றி

1. பெருந்தொகையான ஆத்துமாக்கள் நரகத்தில் விழும்படி செய்யும் பாவங்கள் மோக பாவங்களே.
2. உடை நடை பாவனைகளில் சில புது மோடிகள் வரப்போகின்றன. அவைகள் எங்கள் ஆண்டவருக்குப் பெரும் துரோகம் புரிவனவாகும்.

3. தேவனுக்குத் தொண்டு செய்பவர்கள் இந்தப் புது மோடிகளைக் கைக்கொள்ளப்படாது. திருச்சபைக்கு ஒரு புது மோடியுமில்லை. எங்கள் ஆண்டவர் எப்போதும் ஒரேமாதிரியானவர்.

4. உலகத்திலே இக்காலத்திலே பெருந்தொகையான மகா பாவங்கள் கட்டிக்கொள்ளப்படுகின்றன.

5. நித்தியம் என்றால் என்னவென்பதை மனுஷர் அறிந்தால் தங்கள் சீவியத்தை மாற்றுவதற்குச் செய்யவேண்டியதெல்லாம் செய்வார்கள்.

யுத்தத்தைப்பற்றி

உலகத்திலே அநேகம் யுத்தங்களும், கட்சிப்பிரிவுகளும் உண்டாகுமென்று தேவமாதா எனக்குச் சொல்லியிருக்கிறார். உலகத்தவருடைய பாவங்களுக்கு ஆக்கினையாகத்தான் யுத்தங்கள் நடைபெறுகின்றன.

" உலகத்தைத் தண்டிக்கும்படி உயர்த்தப்பட்டிருக்கும் தமது திருக் குமாரனின் கரத்தைத் தேவமாதா இனிமேல் தடைசெய்ய முடியாது. தபம் செய்யவேண்டும், மனுஷர் மனஸ்தாபப்பட்டுத் தபஞ் செய்வதால் ஆண்டவர் இன்னும் பொறுதி கொடுப்பார். ஆனால் அவர்கள் தங்களுடைய சீவிய நடபடிகளை மாற்றாவிட்டால் ஆக்கினை வரவேவரும்."

(இந்த வாக்கியங்களைத் தேவமாதா இயாசிந்தாவுக்குச் சொன்னபொழுது அவர் முகத்தில் துக்கக்குறிகள் காணப்பட்டன.)

இவ்வாக்கியங்களை இயாசிந்தா சொன்னபிற்பாடு :-

பரிதாபத்துக்குரிய கன்னிமரியாயே! அவர் எவ்வளவோ இரக்கத்துக்குரியவராகக் காணப்பட்டாரே!! என்று இயாசிந்தா சொன்னாள்.

இயாசிந்தாவின் இந்த வார்த்தைகளைப்பற்றி, சிஸ்டர் பியூறிவிக்கேஷன் பின்வருமாறு எழுதியிருக்கிறார். " ஏதோ ஒரு தேவதண்டனை வரப்போகிறதென்று இயாசிந்தா என்

னுடன் இரகசியமாகப் பேசியிருக்கிறாள். ஆண்டவர் எங்கள்மீது இரக்கமாயிருப்பாராக.

சிலகாலத்துக்குள் உலகத்தில் எத்தனையோ புதுப்புதுக் க்ரியங்களைக் காண்பார்கள். மனுஷர் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினால் பொறுதியடைவார்கள் என்று ஆண்டவர் சொல்லியிருப்பது மெய்.

லூசியாவுக்குக் கடைசியாக அறிவிக்கப்பட்ட வெளிப்படுத்தலின்படி, இயாசிந்தா குறித்த மகா ஆக்கினை இரண்டாம் உலக யுத்தமாகும். இரண்டாம் யுத்தம் வருமுன் இயாசிந்தா இறந்துபோனாள்.

குருமாரைப்பற்றி

என் அருமையான தொட்டம்மா, பாவிகளுக்காக அதிகம் அதிகம் மன்றாடும். குருமாருக்காகவும் அதிகம் மன்றாடும், சந்நியாச கன்னியாஸ்திரிமாருக்காகவும் அதிகம் மன்றாடும். குருமார் பரிசுத்தமுள்ளவர்களாய்த் தூய்மை உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

குருமார் திருச்சபைத் தொண்டுகளைப்பற்றியும், ஆத்துமாக்களைப்பற்றியும் மாத்திரம் அலுவலாக இருத்தல் வேண்டும். குருமார் தங்கள் சிரேஷ்டருக்கும், விசேஷமாகப் பாப்பாண்டவருக்கும் அமைச்சலீனம் காண்பிப்பது எங்கள் ஆண்டவருக்கு மகா வெறுப்பை உண்டுபண்ணுகிறது.

கிறீஸ்தவ புண்ணியங்களைப்பற்றி

அருமையான தொட்டம்மா, இன்பசுகங்களை அறவே விட்டுவிட்டு ஓடிவிடும், செல்வங்களைத் தேடவேண்டாம். பரிசுத்த தரித்திரத்தையும் மௌனத்தையும் நேசியும். நிறைவான பிறர்நேசம் உள்ளவராயிரும். பொல்லாதவர்களைத் தானும் நேசியும்.

பிறரைப்பற்றி ஒருபோதும் தின்மை பேசாதேயும். பிறரைப்பற்றி அபாண்டம் சொல்பவர்கள் சமுகத்தை விட்டு

விட்டு ஓடிவிடும். ஒறுத்தலும் பரித்தியாகமும் யேசுக் கிறீஸ்துநாதருக்கு மனமகிழ்வு உண்டுபண்ணுகின்றன.

நான் இந்த மடத்திற் சேர்ந்து ஒரு கன்னியாஸ்திரியாக, பூரண மனச்சம்மதத்துடன் விரும்புகிறேன். ஆனாற் கூடிய சீக்கிரத்தில் மோட்சத்துக்குப் போகத்தான் இன்னும் அதிகமாக விரும்புகிறேன்.

ஒரு நல்ல கன்னியாஸ்திரியாக இருப்பதற்கு ஆன்ம தூய்மைவும், சரீரதூய்மையும் அவசியம். தூய்மையாய் இருப்பது என்றால் என்ன என்று உனக்குத் தெரியுமா? என்று கேட்டார் தொட்டம்மா.

"எனக்குத் தெரியும்! எனக்குத் தெரியும்!! சரீரத் தூய்மையென்றால் கற்புள்ளவர்களாயிருப்பது. ஆன்மதூய்மையென்றால் பாவம் செய்யாமல் இருப்பது. பார்க்கத்தகாததைப் பாராது இருத்தல், களவு செய்யாதிருத்தல், பொய் சொல்லாதிருத்தல், எப்போதும் உண்மை பேசுதல், அப்படி உண்மை பேசுவதினால் கஷ்டப்படவேண்டிவந்தாலும் உண்மையே பேசுதல் ஆகிய இவைகள்தான்.

இவைகள் எல்லாவற்றையும் உனக்குப் படிப்பித்தது ஆர்?

தேவமாதாதான் சொல்லித் தந்தார். ஆனாற் சிலவற்றை நானே கண்டுபிடித்தேன். நான் எப்போதும் நினைக்க ஆசிக்கிறேன்.

அரசாங்கத்தாரைப்பற்றி

என் அருமைத் தொட்டம்மா! அரசாங்கத்தாருக்காக மன்றாடுங்கள். அதிகம் மன்றாடுங்கள். அரசாங்கத்தார் திருச்சபையைச் சமாதானமாக இருக்கவிட்டுவிட்டால் எங்கள் பரிசுத்த வேதத்துக்குச் சுயாதீனம் கொடுத்தால் அப்போது அவ்வரசாங்கம் தேவனால் ஆசீர்வதிக்கப்படும்.

பத்திமா செபமாலைநாயகிக்கு நித்திய நித்திய மங்களம் !

இலங்கையிலுள்ள பண்டத்தரிப்பின் 'பத்திமா கிரி'யில் மாசற்ற இருதயநாயகிக்கென ஒப்புக் கொடுக்கப்பட்ட சிற்ருலயத்தில் பத்திமாமாதாவின் அழகிய சுரூபமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது மாதா காட்சியளித்த ஸ்தலமாகிய பத்திமாவிலே கப்பிளின என்னும் ஆலயத்திலேயுள்ள சுரூபத்தின் சாயலாகச் செய்யப்பட்டமுதலாவது சுரூபமாகும். இது இலெயிறியாவின் மகாவந். சில்வா மேற்றிராணியாண்டவரால் 1949-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 13-ந்திகதி ஆசீர்வதிக்கப்பட்டது. லங்கா மக்கள் இச்சுரூபத்துக்குச் சாதாரணமும் நம்பிக்கையுமுள்ள பத்தியுடன் வணக்கம் காண்பித்து வருகிருர்கள். இச்சுரூபத்தின் சாயலேயே படம்பிடித்து இங்கே தந்திருக்கிருேம்.

பத்திமாமாதாவின் கீர்த்தனம்



Salve Regina








நாங்கள் இந்தப் பரதேசம் கடந்தபிற்பாடு
உம்முடைய திருவயிற்றின் கனியாகிய
யேசுநாதருடைய பிரத்தியட்சமான
தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும்.
கிருபாகரியே! தயா........பரியே
பேரின்பரசமுள்ள கன்னி மாமரியே
சருவேசுரனுடைய அர்ச்சியசிஷ்ட மாதாவே!

பத்திமா மாதா பேரில்


த்தி மா மா தா வே பா வி கள்
மாசில் இந்த ய மே ம து ர
தஞ்ச மே நித்தி ய கன் னி ம ரி யே
அன்னை யே தா சர் எம் மை ஆ ள
1st Time
2nd Time
End
வாழ்க வாழ்க
வா ரும் வா ரும்.
1. உங்க த இந் த ய மே உம் மைத் து தித்தே நாம்
2. இ லங்கை மக் கள் இ ருள் ம றைகள் ஒ ழி ய
3. யே சு இராட் சி யம் ஓங்க வே க மோ ெ ழைக் க
4. சகீ தப் பாப் பு த ளை யே என் றுங் காத் துக் கொள் ளும்
5. நாஸ் தி க ற ஷி யா வின் நா சங் கள் நீங் கி ட
6. பா ரு சோர் பு க ளும் ஏ க இரட் ச கி யே
D.C.
1. வந் த ணை செய் தி ட வ ர ங்க ளை அ ரு ளும்
2. து லங் கும் மெ ய் ஞா னம் மி ளி ர வே செய் வீர்
3. நீ ச ரெ மக் குத் தே வ நே சத் தை யே தா ரும்
4. சத் தி ய ச மா தா னம் தேங் கி ட வே செய் யும்
5. வீ சும் ச த்ய ஒ ளி யை விஸ் வா சம் பெ ற வே
6. தீ ரும் பா வ நோ யை சே ரும் யே சு பா தம்

அர்ச். சூசையப்பர் வாழ்த்து.

கன்னிகள்



மரியாயின் மாசற்ற இருதயத்தின் பேரில்.



புத்திமா நாயகி அடைக்கலம்.

பல்லவி



வந்தோம் தாயே.

சரணம்



பல்லவி.



பத்திமா நாயகி கிருபை இரத்தல்.

சரணம்.



பத்திமா கிரிவாழ்த்து.

பல்லவி.



2980.

பத்திமாமாதா அருள் வேண்டல்.

கண்ணிகள்.



பத்திமாநாயகியின் பேரில் வேண்டுதல்கள்

கண்ணிகள்

ஹரிகாம போஜிராகம்—ஏகதாளம் (திஸ்ரஜாதி) { ஸ ரி க ம ப த நி ஸ் / ஸ் நி த ப ம க ரி ஸ }

1.

∣3	∣3	∣3	∣3
ஸ ரி ஸ	தா த	ப ம க	ரீ ,
வேண் டு வம்	நா மிப்	போ . து	தான்
நி நி ப	த த ம	ம ப மக	மா ,
வேண் டி ய	யா வு மே	ய . ளி.	ப்பாய்
த த நி	ஸ் ஸ் நி	ஸ் ரிஸ் நித	பா ,
பூ மி யி	லெங் க ள	டைக் க. ல.	மே
நி நி ப	த த ம	ம ப மக	மா ,
பொ ஷ மே	என் றெல் லாம்	போ . ற்றி .	னம்
ஸ ரி க	ஸா ,	ஸ ரி க	ஸா ,
நீ வாழ் க	வே	நீ வாழ் க	வே
ஸ்ா த	ஸ் த ப	ம ம ம	தா ப
நீ .	வாழ் க. வே	நிர் ம ல	தா யே
கா ப	மா , ∥		
வாழ் க	வே ∥		

(மற்றக் கண்ணிகளையும் இதேமாதிரிப் பாடவும்)

2. பார்த்திபன் யேசு பாதையே
பாரிலெல் லாரும் சேரவும்
நீதி நிலைக்கவும் செய்வாயே
நேர்மையே எங்கெங்கும் ஓங்கிட
நீர் தாருமே நீர் தாருமே
நீர் தாருமே, நிர்மலதாயே காருமே.

3. மூர்க்கரும் மோசக் காரரும்
மூர்த்தி யெம்யேசு நாதனுக்கே
ஊழியம் புரியச் செய் நீயே
உன்னையே என்றென்றும் நோக்கிடும்
ஓ பாவிநான் ஓ பாவிநான்
ஓ கூவினேன் உன்னருளே தந்தாளுவீர்.

4. தாயினும் நேசத் தாயிதோ
சாவினும் நோவினும் எங்களுக்கே
தாவிவருந் துணையும் நீயே
சஞ்சலம் எம் கஷ்டம் போக்குவாய்
ஞானோதயமே ஞானோதயமே
ஞானோதய உம்பரியே நீர் தாருமே.

5. தேசமும் நாமும் யாவுமே
தேவியுன் காவல் சேர்த்தமே
வீடு நிலம் புலமுங்காராய்
விண்ணிலே எம்இல்லம் ஆக்கிவை
நீதானே நீதானே
நீதானே எம்துணையே எம்காவலே.